Sl.
3m 41, N17KP
N17.1
1616.3

உ

ஸ்ரீராமஜயம்.

# கல்ப தரு.

# KALPA THARU.

அறிவு வளர்ச்சிக்கான வாராந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புஸ்தகம் 1. | பிங்கள௵ வைகாசி௴ 13உ சனிக்கிழமை | ஸஞ்சிகை 1.

Vol. 1. | SATURDAY, 26th MAY—1917. | No. 1.

### காப்பு.

பாரா ருலக ஞானமெனப் பகருநிதியைப் படைத்துய்யக்
காரார் கற்பதரு வெனும்பேர் கவினும்வார பத்திரிகை
ஆராவமுத மாயுலவி யவனி விளங்க மாறருளச்
சீரார் ஞான குருவான சேனைமுதலி தாள்பணிவாம்.

(இ-ள்.) தமிழ் நாட்டார் லௌகிக ஞானமென்கிற நிதியைப் பெற்றுவாழும்படி, 'கல்ப தரு' என்னும் பெயருடன் தோன்றி விளக்கும் இந்த வாரப்பத்திரிகையானது, தேவாமிர்தம்போல் எல்லாருக்கும் இன்பமூட்டிப் பிரகாசிக்கக் கிருபை செய்யும்படி ஞானகுருவும் சேனை முதலியார் என்னுந் திருநாமமுடையவருமான ஸ்ரீ விஷ்வக்ஸேனரது திருவடிகளைத் தியானம் செய்வோம். எ-று.

### கடவுள் வணக்கம்.

போற்புறு பாரிசாதமாந் தருவைப் பூமியிற் பாமைதன் பொருட்டால்
முற்படக் கொணர்ந்து நாட்டிய பெருமான் முகில்வண னருண்மழை ஞான
விற்பன மறையோன் கிருஷ்ணமா சிரியன் மேதினி விளங்கவே நட்ட
கற்பக தருவை வளர்த்ததன் பலத்தைக் காசினிக்குதவுக மன்னோ.

(இ-ள்.) தேவலோகத்துள்ள பாரிஜாத விருக்ஷத்தை சத்தியபாமை என்ற ஒரு பெண்ணின் விருப்பத்திற்காக பூமியிற் கொண்டுவந்து நட்டு அவளை மகிழச்செய்த நீலமேகசியாமளனுன கண்ணனுடைய கருணை வருஷமானது, ஞானவானுன கிருஷ்ணமாசாரியர் என்ற வேதியர் பூமியிலுள்ளவர்க்கெல்லாம் பயன்படும்படி இப்போது ஸ்தாபித்திருக்கிற 'கல்பக தரு' என்ற இந்தப் பத்திரிகையாகிய விருக்ஷத்தைச் செழிக்கச் செய்து அதன் பலனை எல்லார்க்கும் உதவும்படி செய்வதாக. எ-று.

இராஜ வாழ்த்து.

நட்டமோடு முலகழித்து நாகரிகச் சீர்குலைக்குந்
துட்டர்களைத் தொலைத்துயிர்கள் சுகமுற்று வாழ்வதற்கா
இட்டமுடன் போர்புரியும் இங்கிலந்தின் அரசான
சிட்டமிகு ஜார்ஜரசன் சீர்வெற்றி யோங்குகவே.

(இ-ள்.) உலகத்தை நஷ்டமடையும்படி அழித்து, இதுவரை உலகமடைந்த நாகரிகத்தையெல்லாம் சிதறச்செய்துவரும் துஷ்டர்களாகிய சத்துருக்களை அடியோடுந் தொலைத்து ஆத்மகோடிகள் சுகமடையவேண்டும் என்ற உத்தமநோக்கத்துடன் மனமார மகாயுத்தம் புரிந்து வரும் இங்கிலாந்து தேசத்தவரின் மகாராஜாதிராஜரான மாட்சிமை தங்கிய ஜார்ஜ் சக்கரவர்த்திக்கு சிறந்த விஜயம் உண்டாவதாக. எ-று.

161403

---

## OURSELVES.

## ஸ்வகீயம்.

பகுத்தறிவுகொண்ட மானிட ஜன்மமெடுத்த இப்பிறவியில் எந்த வகையிற் பொது ஜனங்களுக்கு உழைக்கலாமென்னும் சிந்தை மிகுந்து பற்பல துறைகளை ஆராய்ந்துவருநாளில் 'கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை' யென்னும் ஆன்றோர் மொழி ஞாபகத்திற்குவர அதனையே கடைப்பிடித்து பலவகையினர்க்கும் உதவும்படியான பத்திரிகாவ்ருத்தியே பயன்தருமென்று மதித்தனம். கௌரவமும் மதிப்பும் மரியாதையும் வாய்ந்த வாழ்க்கையில் கல்வி கற்பதும், கல்வி கற்பிப்பதும் உயர்ந்த ஸ்தானத்தில் வைக்கப்படவேண்டிய அம்சங்களானதுபற்றி கடந்த பத்து வருஷகாலமாக நம்முலகத்தவர் முன்பாக இவ்வபிப்பிராயத்தை எவ்விதம் முன்னிடுவதென்று முயற்சித்துவந்தோம். முயற்சியுடையார் இகழ்ச்சியடையாரன்றோ? தெய்வத்தாலாகாதெனினும் முயற்சி தன் மெய்வருந்தக் கூலிதரும் என்பதும் நம்மவர் அறியாததல்ல; அம்முயற்சியை அஸ்திவாரமாகக்கொண்ட நாம் 'கல்வி கரையில கற்பவர் நாட்சில' என்றிருந்தபோதிலும் நமது ஜீவியமிருக்கும் சின்னாட்களுக்குள்ளாக உலகத்தவர்க்கு உத்தம கைங்கர்யமாகிற வார்த்தா பத்திரிகையிலேயே நம்புத்தி நாட்டமுறலாயிற்று; எம் நண்பர் பலரும் அதை ஆமோதித்துப் போதுமான உதவிபுரியவும் திருவுளம்புரிந்தனர்; தெய்வ சங்கற்பமும் அவ்விதமே யிருக்குமெனவும் மதித்து அத்தெய்வாம்சம் பொருந்திய திருநாமமாகிற 'கல்ப தரு' வென்ற பெயரையே சூட்டி வாரப்பத்திரிகையாக வெளியிட்டு முன்வரத் துணிந்தனம். நந்தமிழுலகில் எத்தனையோ தினஸரி, வார, பக்ஷ, மாதாந்தப் பத்திரிகைகளிருக்க நூதனமாக இப்பத்திரிகையை முன்னிட அவசியமேனோவென்று நமது நண்பர்கள் நினைக்கக்கூடும். வெளியிடப்படும் பத்திரிகைகள் எல்லாவற்றையும் எல்லோ



ரும் படிக்கிறார்கள் என்று சொல்லுவதற்கில்லை. இகத்தில் ஜனங்கள் தன் முயற்சியாலடையக்கூடிய நன்மைகளுக்கு வித்தையே நுண்மை பொருந்திய வித்தாதலின் அவ்வித்தினை நட்டு அதன் மூலமாக உற்பவிக்கும் பலன்களை உலகத்தவர்க்கு அர்ப்பிதம் செய்வது மிகையாகமாட்டாது. காலதேச வர்த்தமானங்களையறிந்து சொல்லும் தூதுவனுடைய முயற்சியை யொப்ப இப்பத்திரிகையையும் செந்தமிழ்ச் செல்வந்தங்கிய இவ்வுலகத்து ஜனங்கள் படித்துப் பயன்பெறவேண்டுமென்பதே எமது மனமார்ந்த ஆர்வமாகும். எத்தனை பத்திரிகைகள் நூதனமா யேற்பட்டாலும் அவைகளுக்கெல்லாம் இடந்தந்துகொண்டேயிருக்கும் இப்பரதக் கண்டத்தில் இதன் பிரஜைகள் பத்திரிகையைப் படித்து அதன் மூலமாக சீரும் சிறப்பும் பேரும் பெருமையும் கீர்த்தியும் பிரதாபமும் அடைய மார்க்கமுண்டு. நாகரிகம் மிகுந்ததெனச் சொல்லப்படும் மேனாடுகளில் பத்திரிகைகளின் பலத்தால் செல்வம் பெற்றவர் பலருளர்; மற்றெக்கௌரவத்தினும் பத்திரிகா வ்ருத்தியைக் கைக்கொண்டிருப்போர்க்குக் கௌரவமதிகம்; இனம் இனத்தைச் சேருமல்லவா? அதையொப்ப கௌரவமான வ்ருத்தியைக் கைக்கொண்டிருப்பவரது முயற்சியினால் ஏற்படும் பலன்களை அவர்கள் காலக்கிரமத்தில் அடைவது நிதர்சனம். ஜனங்களுக்கும் ராஜாங்கத்தாருக்கும் பரஸ்பரம் அன்பும் விசுவாஸமும் இருக்கும்படி செய்வன பத்திரிகைகளேயாம்; குடிகளின் இஷ்டகஷ்ட நிஷ்டூரங்களை நன்றாயுணர்வதற்கு வர்த்தமானப் பத்திரிகைகளே வழிகாட்டிகளாயிருக்கின்றன. தம்மினும் மேலோர்க்குத் தாம் நேரில் முறைசொல்லிக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் வர்த்தமானப் பத்திரிகைகளே நமக்குத் துணையாக வந்து நிற்கின்றன. இன்னும் பத்திரிகைகளால் உண்டாகும் பயன்கள் இன்னின்னவை யென்று சொல்லப்புகின் விசேஷமாகப் பெருகிவிடும்; ஆதலின் பத்திரிகையின் அபிவிர்த்திக்கு அதனை ஆதரிப்பாரது ஊக்கமே பிராதான்யமென்பதையும், அவ்வாதரிப்பை நந்தமிழபிமானிகளான நண்பர்கள் நமக்களிக்கப் பின்வாங்கமாட்டார்களென்னும் நம்பிக்கையையும் கைவிடாது மனதில் தாங்கி வாராந்தப் பத்திரிகையான இக் 'கல்ப தரு'வை ஆரம்பிக்க முன்வந்துள்ளோம். எல்லோர்க்கும் எளிதில் கிட்டும்படியான குறைந்த சந்தாவில் நடைபெறும் இப்பத்திரிகையின் க்ஷேமத்தையும் நீடூழி வாழ்வையும் இதன் நேயர் கவனித்துத் தம் ஆதரணையை யளிப்பார்களென்றே பூர்த்தியாகவேண்டுகின்றோம்.

'தனவானுக்குத் தன்னூரிற் சிறப்பு, கல்விமானுக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்னும் முதுமொழியைக் கைப்பிடித்து இக் 'கல்ப தரு'வை வெளியிட முன்வந்தோம். ஆசங்கையுற்ற ஹிருதயத்தை நிஷ்களங்கமாக்கி இகத்திற்கும் பரத்திற்கும் ஸாதனங்களாக்குமென்று நமது புராணேதிக்கிரந்தங்கள் மூலமாகவும், சுருதி, யுக்தி, அனுபவம் ஆகிய இம்மூன்றின மூலமாகவும் வெளிப்படையாயிருக்கும் பஞ்சதருக்களில் 'கல்பதரு'வும் ஒன்றாதலின்,

அப்பெயரையே இவ்வாராந்தப் பத்திரிகைக்கும் இட முன்வந்தோம். லோகோபின்னருசி: (உலகத்தினுடைய ருசி பலவகைத்து); எனினும் ஸ்மரித்ததைச் சடுதியில் கொடுக்கக்கூடிய சக்தி 'கல்பதரு'வினிடம் இருப்பதுபற்றி அப்பெயரையே, ஜனங்களுடைய க்ஷேமலாபங்களுக்கு இன்றியமையாததாயிருக்கும் ஸாதனமென்று கருதி, இப்பத்திரிகைக்குக் கொடுக்கலானோம். மேலே சொன்ன ஸாதனத்திற்கு ஆதாரங்களாக ஏற்படக்கூடியன எவையெவை யென்று நம் நேயர்கள் சிறிது சிந்திக்கலாம். நன்றாய் முத்தின செங்கரும்பைக் கணுவெடுத்தெறிந்து மற்றக் கரணைகளைச் செக்கிலிட்டு ஆட்டிச் சாறுபிழிந்து பாகாக்கிப் பின்னர்க் கற்கண்டுகட்டியாகத் திரட்டியெடுத்து நந்தமிழுலகத்தவர்க்கு அர்ப்பிதஞ்செய்யும் அமிர்ததாரையையொப்ப இக்'கல்பதரு'வை நம்நண்பர் கருதி போதிய ஆதரிப்பளிப்பார்களென்று பிரார்த்திக்கின்றோம். புத்தியும் யுக்தியும் வாய்ந்த புண்ணியர்களைக் கொண்டும், கருத்தும் சிரத்தையும் நிரம்பிய கல்விமான்களைக் கொண்டும், படிப்பும் புரோத்ஸாகமும் மிகுந்த புருஷோத்தமர்களைக்கொண்டும் நம் பிராதாக்களான ஜனஸமூகத்தவர்க்குப் பலன்தரவேண்டுமென்னும் அபிலாஷையுடன் இக் 'கல்பதரு'வினிடம் அஷ்டவசுக்களையொப்ப எட்டு அங்கங்களை அமைக்கப்பட்டது. முதலாவது ராஜாங்கத்தையும், அதன் பரிபாலனமுறையையும், மற்றும் நமது காருண்ய மிகுந்த பிரிடிஷ் அரசாக்ஷியின் செங்கோற் சிறப்பையும், அவ்வரசாக்ஷியின் மூலமாக நமக்குக் கிடைத்துவரும் விசேஷ பலன்களையும் குறித்து விவரிக்கப்படும்; இரண்டாவது, நகர, தேகச் சுகாதாரத்திற்குரிய விஷயங்கள்; மூன்றாவது 'உழுதுண்டுவாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர், பழுதுண்டுவேறோர் பணிக்கு' என்றபடி விவசாயம், வர்த்தகம் இவைகளைப்பற்றிய அம்சங்கள்; நான்காவது, 'ஸத்தியாந்நாஸ்தி பரோதர்ம:, ஸத்தியமேவஜெயதி நாந்ருதம்' என்றவாறு, சட்டவிதிகளைப்பற்றிய குறிப்புகள்; ஐந்தாவது, கூட்டுறவையும் கைத்தொழில்களையும்பற்றிய அம்சங்கள்; ஆறாவது மாணவர்களும் போதகர்களும் கவனித்தற்குரிய விசேஷ விஷயங்கள்; ஏழாவது வாரத்திற் சம்பவமாயிருக்கும் நானாதேசக்குறிப்புகள்; எட்டாவது, நற்சகவாஸமும் நன்னடத்தையும் வேரூன்றியிருக்கக்கூடிய கருத்துகளை அவலம்பித்தனவும், கிருஹஸ்தாசிரமத்திற்கு வேண்டிய நற்போதனைகளைத் தழுவினவுமான நிரூபணங்கள்;—ஆகிய இவையனைத்தையும் மேற்குறித்தவிதமாக பாஷையின் இனிமையைச் சோரவிடாமல் தெள்ளிய தமிழில் தகுந்த விற்பன்னர்களால் எழுதிவர ஏற்பாடுசெய்திருக்கிறோம். இதில் மற்றோர் விசேஷமுமுண்டு; ஆன்றோர் என்று நாம் மதிக்கும் பிரமுகர்களின் ஜீவியசரிதைகளும் பின்னும் பொதுஜன நன்மையைக் கோரிய இதர விஷயங்களும் சந்தர்ப்பானுகூலங்களையொட்டி, அறிவிலும் அனுபவத்திலும் சிறந்த தன்யர்களது பேருதவியினால் இக் 'கல்பதரு'வின் அங்கங்களில் வெளிவருமென்ற நம்பிக்கையைக் கற்றோரும் மற்றோரும் கைக்கொண்டிருக்க வேண்டுமென்பதே எமது மன



மார்க்க பிரார்த்தனை. அவ்வுத்தமர்களிடம் அவ்வுதவியை நாடும் யாம் அடியிற்குறித்த வாக்கியத்தைத் தவிர வேறொன்றுஞ் சொல்லுவதற்கில்லை.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று."

ஸர்வேஜனா: சுகினோபவந்து
ஸமஸ்தமங்களானிபவந்து!

---

## THE BRITISH RULE IN INDIA.

## இந்தியாவில் பிரிடிஷ் அரசாக்ஷி.

நமது காருண்யமுள்ள பிரிட்டிஷ் அரசாக்ஷியால் இந்தியாவிற்கு ஏற்பட்டிருக்கின்ற அளவிறந்த நன்மைகளைப்பற்றி நமது ராஜதானியின் தமிழ் ஜில்லாக்களிலுள்ள கிராமாந்தர ஜனங்களுக்குத் தெரியும்படி நமது 'கல்பதரு'வில் அவ்வப்போது விவரமாக எழுதப்படும். என்றாலும், இம்முதற் சஞ்சிகையில் ஸூசகமாகப்பிரிடிஷாரால் நாமடைந்திருக்கும் பலன்களைக் கூறி இக்'கல்பதரு', இதனை ஆச்ரயிப்போர்க்கு அளிக்கக்கூடிய வித்தாகிற ராஜபக்தி யென்னும் பொலிவுடன் இரண்டொருவார்த்தை சொல்ல நேர்துகின்றது. புத்தியிருந்தும் பக்தியில்லாவிடில் பிரயோசனமில்லை; புத்தி பக்தி ஆகிய இவ்விரண்டும் பூரணித்திருக்கும் 'கல்பதருவே' நமக்குதவ முன் வந்திருப்பதனாலே நன்மார்க்கத்தில் தெய்வபக்தி மிகுந்து ஸ்வகீயமாகச் சிறிது கூறவேண்டியிருக்கிறது. 'எல்லாம் எமையாளு மீசன்செயல்! அவனன்றி ஓரணுவும் அசையாது.'

நம் மாக்ஷிமைபொருந்திய பிரிடிஷ் ராஜாங்கத்தில் நம் தேசவாசிகளுக்கு எத்தனையோ நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றையும் ஒன்றுக்குப்பின் ஒன்றாகக் கூறுவதெனின் பெருகும். பண்டைக்காலத்தில் இந்திய மகமதிய அரசர்கள் ராஜரீகஞ் செய்தபோது இத்தேசம் இருந்த நிலைமையையும் இப்போது நம் காருண்ய பிரிடிஷ் அரசாங்கத்தார் இத்தேசத்தின் ஆளுகையை மேற்போட்டுக்கொண்டபிறகு இது அடைந்திருக்கும் சீர்திருத்தம் நிரம்பிய நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்ப்போமானால், நமக்குண்டாயிருக்கும் அனுகூலங்கள் தெற்றெனப் புலப்படும். முற்காலத்தில் ராஜ்யம் பலவகையான பிரிவுகளாகி, அவ்வவற்றிற்குத் தலைவராயிருந்த சிற்றரசர் ஒருவரோடொருவர் மனஸ்தாப மிகுந்து ஸதா ஸர்வகாலமும் சல்லியஞ் செய்தவாறே யிருந்தார்கள். கொடுங்கோல் மிகுந்திருந்தது; ஒருவரது உயிரும் பொருளும் தத்தமக்கு நிலைக்கும் என்று சொல்லமுடியாதவாறிருந்தன. உள்நாட்டுச் சல்லியங்களால் நாசமாய்ப் போன நாடுகள் பல; கொலை, கொள்ளை, நரசோரம் முதலான அகிர்த்தியங்

தள் அக்காலத்தில் பலத்திருந்தன; திருடர் கைவிடாது ஊர்ப்பிரயாணம் செய்ய முடியாது; நன்றாய்ச் செப்பனிட்டுத் துரஸ்துசெய்யப்பட்ட வீதிகளைக் காண்பதரிது. தபால், தந்தி, ரெயில்வே முதலியனவுமில்லை; மனஸ்தாபங்களைத் தீர்க்கவும் பிறரது தொல்லைகளிலிருந்துகாக்கவுங்கூடிய கோர்ட்டுகள், போலீசு பந்தோபஸ்துக்கள் முதலியவை இல்லாமலிருந்தன; தேக அஸௌக்கியமாகுமிடத்துச் சிகிச்சைசெய்து கொள்வதற்கான ஆஸ்பத்திரிகளும் ஔஷதாலயங்களும் கிடையா. பணத்தை பிரயோஜனமான கைங்கர்யங்களிற் செலவிடாது புதைத்துவைக்கும் வழக்கமும் பூர்வத்திற் பிரதிபலித்திருந்தது. இவ்விதமிருந்த பிராசீனநிலைமையில் ஜனங்கள் தமக்கு உயிரும் பொருளும் சுதந்தரமிலவென்றே கருதி வந்தார்கள். ஆனால் ஆங்கில வரசாட்சி இந்தியாவில் வேரூன்றவே நமக்கு எவ்வளவோ நன்மைகள் உண்டாயிருக்கின்றன. ஒவ்வொன்றையும் ஆராய்வதெனின் விரியும். ஆதலின் சுருக்கமாக இரண்டொன்றைமட்டும் சொல்லி நிறுத்துவோம்.

சத்துருக்களால் நமக்கு எவ்வித அபாயமும் நேரிடாமல் பாதுகாக்க நம்மையாளும் ஆங்கிலேயர் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். தரைப்படையிலும் கடற்படையிலும் நம்மாங்கிலேய சேனையைப்போல் மற்றெவர்க்குமில்லை. தைமர் தாமர்லேன், நாதர்ஷா முதலான கொடுங்கோலர்களால் நேர்ந்த துன்பங்கள் இனியும் நேரவொட்டாது தடுப்பதற்குரிய பந்தோபஸ்துக்களை நம் பிரிடிஷார் செய்திருக்கிறார்கள். நியாயத்தையே கடைப்பிடித்து நடக்கும் வண்ணம் பிரிடிஷ் பிரஜையென்ற எல்லோர்க்கும் ஒரேவிதமான சட்டமிருக்கும்படி செய்திருக்கிறார்கள். தீவர்த்திக் கொள்ளைக்காரரது கொட்டமனைத்தையும் அடக்கி பிரஜாலக்ஷணம் பொருந்திய தன்மையர்களாக அவர்கள் ஆகும்படி வழிகளைக் காட்டி யிருக்கிறார்கள். பூர்வ மிருந்துவந்த நரபலி, ஸககமனம் அல்லது உடன்கட்டையேறுவது, அடிமை வியாபாரம், ஒரு குடும்பத்திலே பெண்பிள்ளை பிறந்தால் அதை ஆலயங்களில் தேவதாசியாக ஒப்புவிக்கும் துர்வழக்கம்முதலியவைகளை நிறுத்திவிட்டார்கள். ஜாதி யாசாரங்களுக்குத் தக்கவாறு சட்டங்களும் மனத்தாங்கல்களை நீக்க நீதிஸ்தலங்களும் ஏற்படுத்தப்பட்டன. எவ்வகைப்பட்ட வியாதிகளையும் தீர்க்கக்கூடிய வைத்தியசாலைகளும் ஔஷதாலயங்களும் இலவசமாகவே ஸ்தாபிதஞ் செய்திருக்கிறார்கள். மாடவீதிகளும் ஜனங்கள் திருடர் பயமில்லாமல் இரவிலாகட்டும் பகலிலாகட்டும் செல்லக்கூடிய சாலைகளும், மழை வெயில் என்ற பயமில்லாது ஏறிச்செல்லுதற்குரிய இருப்புப்பாதைகளும் விசேஷமாய்ப் போடப்பட்டிருக்கின்றன. ஜனங்கள் தமது அன்பிற்கும் பிரியத்திற்கும் உகந்தாரது யோகக்ஷேமாதிகளை யவ்வப்போது அறிவதற்கு அனுகூலமாயிருக்கும்படி தபாற்சாலைகளையும் தந்தியாபீசுகளையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். பயமில்லாமல் தபால் மூலமாகவும் தந்தி மூலமாகவும் பணம் அனுப்புவதற்கு சௌகர்யமும் உண்டு. மின்சார விசையினால் வண்டிகளும் விளக்குகளும் மற்றும் செப்பு



தற்கருமையான வேலைகளையும் செய்திருக்கிறார்கள். கரையிலாகட்டும் கடலிலாகட்டும் வியாபாரம் பெருகுவதற்கான முயற்சிகளும் விசேஷமாய்ச் செய்யப்பட்டிருக்கின்றன. நீர்ப்பாசனவசதிகளும், கைத்தொழிற்சாலைகளும், வர்த்தகாபி விருத்திக்கான விவரணங்களும் முன்னிலு மிகுந்தவகையாக ஸ்தாபிதமாயிருக்கின்றன. தரிசாகக்கிடந்த நிலங்கள் எருவிட்டுழுது பண்படுத்தப்பட்டு சாகுபடிக்குரிய தன்மையோடு துரஸ்து செய்யப்பட்டு வருகின்றன. தன் வயிற்றைத் தான் பசியாது பாதுகாத்துக் கொள்ள, ஒவ்வொருவனும் தத்தம் மனோவ்ருத்திக்குத் தகுந்தவாறு, நற்பழக்கமும் நற்சகவாஸமும் மிகுந்திருக்கக்கூடிய ஸன்மார்க்கத்தை யவலம்பிக்கும் தன்மையர்களாகும்படி கல்விநிலையங்கள் ஸ்தாபிதமாயிருக்கின்றன; இவ்விதமாக ஒவ்வோரம்சமும் பரிபூரணமாய் நிரம்பியிருக்கும் நமது மாக்ஷிமைபொருந்திய பிரிடிஷ் ராஜாங்கம் என்னும் ஏகாதிபத்தியமானது எங்கணும் பிரகாசம் பூண்டிருக்கின்றது. அதனிடம் அருணனது கடாக்ஷவீக்ஷண்யமான அருளுக்குக் குறைவொன்றுமில்லை; அதுபற்றியே “The Sun never sets in the British Empire.” என்ற மொழியும் ஆங்கிலத்தில் ஏற்பட்டிருப்பதையும் காண்க. அகண்டாகாரமான இப்பூமண்டலத்தின்கண் எங்கு சுற்றினும் ஆங்காங்கு நம் பிரிடிஷாருக்குச் சொந்தமான பூஸ்திதி யிருப்பதே மேற்சொன்ன மொழிக்குச் சாக்ஷியாகும். “பரோபகாரார்த்தம் இதம் சரீரம்” என்று நம்முதியோர் விதித்திருப்பதற்கிணங்க பிரஜைகளின் க்ஷேமத்தையே பெரிதும் மனதில் தாங்கியிருக்கும் நம் மேன்மைபொருந்திய ராஜதம்பதிகளுக்கு மகுடாபிஷேகமானபோது இந்தியர்பால் அவர் காட்டிய கருணை நாம் என்றென்றும் மறக்கற்பாலதன்று. தேசஸேவை, ராஜஸேவை ஆகிய இரண்டையும் ஹிருதய பூர்வமாகக் கொண்டிருக்கும் ஒருவனுக்கு ஆத்ம ஸேவை தானேவந்து சேரும்; ஆக இம்மூன்றும் சேர்ந்திருக்குமிடத்திலே அதாவது உடல், பொருள், ஆவி ஆகிய இம்மூன்றையும் மேற்குறித்த ஸேவையினிமித்தம் அர்ப்பிதஞ்செய்ய இந்தியர் எவ்விதத்தும் கடமைப்பட்டவர் என்பதை நன்குணர்ந்திருப்பதோடு, சமயம் வாய்க்கும்போதெல்லாம் அதற்குத் தகுந்தவாறு கிரியைகளையும் காட்டித் திரிகரண சுத்தியாகத் தம் ராஜவிசுவாஸத்தைப் பிரதிபலிக்கும்படி செய்துவருகிறார்கள். இந்தியர்பால் இவ்வளவு விசுவாஸமும் பேரன்பும் படைத்த பிரிட்டிஷ் ராஜாங்கம் வளர்பிறைச் சந்திரனையொப்பச் செழிக்குமாக! நமக்கு அபயமளித்துப் பகைவரினின்றும் பாதுகாக்கக் கங்கணதாரணம் பூண்டிருக்கும் நம்மிராஜதம்பதிகள் ஆயுராரோக்கிய ஸம்பன்னராக நீடூழிவாழ எல்லாம் வல்ல இறைவனும் சித்த முத்த சுத்தனுமான ஸர்வாந்தர்யாமியினது பொன்னடி மலர்களைப் போற்றுகின்றனம். சுபம்.

“வானோக்கி வாழுமுல கெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங்குடி.”

(இ-ள்.) உலகத்திலுள்ள ஸர்வஜீவராசிகளும் உஜ்ஜீவிப்பது ஆகாயத்திலிருந்து பொழியும் மழையினால்; பகுத்தறிவுகொண்ட மானிடர் தம்மைக்காத்து ரக்ஷிக்கும் அரசனது செங்கோலை நோக்கியென்பது.

"குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்குமுலகு."

(இ-ள்.) தன் குடிகளை அணைத்துக்கொண்டு செங்கோல் புரியும் பூபதியின் பாதங்களையே உலகத்துள்ளார் விட்டிடாமல் பற்றியிருப்பார்கள். (எ-று.)

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்."—(குறள்.)

(இ-ள்.) தன்குடிகளை தானும் நீதி முறையில் காவல் செய்து, பிறரும் வருத்தாமல் ரக்ஷிக்கும் அரசன், பிறவியில் மனுஷ்யனே யாயினும், செய்கையால் தேவனாகவே வைத்து மதிக்கப்படுவான்.

"குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயும்—அறவோர்க்கு
அடிகளே தெய்வ மனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூ ணிறை."—(குமரகுருபரர் or நீதிநெறிவிளக்கம்.)

(இ-ள்.) குலஸ்திரீக்குப் புருஷன் ஒருவனே தெய்வம், புத்திரர்களுக்கு பெற்றோர்களே தெய்வம், தர்மிஷ்டர்களுக்குத் துறவிகள் தெய்வம், ஆனால், எல்லாருக்கும் தெய்வம் யாரெனில், அரசனே. (எ-று.)

"திருவுடை மன்னரைக் காணிற்
திருமாலைக்கண்டேனே யென்னும்":—(நம்மாழ்வார் திருவாய்மொழி.)

(இ-ள்.) "ஸ்ரீமான்களாகிய ராஜாக்களை பார்க்கும்போது, ஸாக்ஷாத் ஸ்ரீய:பதியைக் கண்டதாகவேயே நினைப்பாள்" என்று நம்மாழ்வார் அருளிச்செய்தனர். (எ-று)

"உறங்குமாயினும் மன்னவன் றன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்"—(சீவகசிந்தாமணி.)

(இ-ள்.) அரசன் ஒரு மூலையிற்படுத்து நித்திரை கொண்டாலும் அவனுடைய கீர்த்தியானது ஸமுத்திரஞ் சூழ்ந்த இவ்வுலகத்தை ரக்ஷிக்க வல்லது. (எ-று.)

"நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்."—(புறநானூறு.)

(இ-ள்.) இவ்வுலகத்துக்கு உயிர் நெல், அன்று; நீரும் அன்று; பின்னை ராஜாவையே உயிராகக்கொண்டுள்ளது இந்தப்பூமி. (எ-று.)

---

# PART II.

## SANITATION.

## ஆரோக்கிய விமர்சனம்.

### சுகாதாரம்.

'ஆரோக்கியமே பாக்கியம்', 'நோயற்றவாழ்வே குறைவற்றசெல்வம்'. தமிழ்நாடெங்கும் வழக்கச் சொற்களாக வழங்கப்படும் மேலே சொன்ன இரண்டு வாக்கியங்களையும் நழுவவிடாமல் கருத்துடன் கவனிப்பவர்களுக்கு, அவர்களது வாழ்நாளில் எவ்விதமான குறைவும் ஏற்படமாட்டாது. செல்வம் நிரம்பிய பாக்கியவந்தர்களாக அவர்கள் தம் ஜீவியகாலத்தைக் கடத்தவும் இயலும். எத்தேசத்திலாகட்டும், எச்சமயத்திலாகட்டும், ஒரு குடும்பத்தவரோ, பந்துக்களோ, மித்திரர்களோ ஒன்றுகூடி யிருக்கக்கூடிய விசேஷ சமயங்களில் ஆயுள், ஆரோக்கியம் ஆகிய இவ்விரண்டையுமே பிரதானமாய் எடுத்துக்கொண்டு 'ஆயுராரோக்கிய ஸம்பன்னனாய் வாழ்க' வென்று ஆசீர்வதிப்பதையும், ஆசீர்வாதம் பெற்றுக்கொள்வதையும் நமது நண்பர்கள் கவனித்திருப்பார்கள். அதனாலேயே அரோகத்ருடகாத்திரத்துடனிருப்பவனே பாக்கியவானென்று ஆரம்பத்திற் சொன்னோம். இதன்றி உலகத்திலுதிக்கும் மனுஷ்யகோடிகள் தம்முடைய வாழ்நாட்களைச் செலுத்துங்கால் சீரும் சிறப்புமாக விருக்க விரும்புவதையும், நல்ல யோக்கியதையும் அந்தஸ்தும் வாய்ந்த உன்னத ஸ்தானங்களைப் பெறுவதையும், மற்றும் ஸ்தூலாகாரமாயிருக்குந் தன்மை மிகுந்த சகலவிதமான போகபாக்கியங்களை யனுபவிப்பதையும் பெரும்பாலும் ஆச்ரயிப்பவர்களா யிருக்கிறார்கள். அவ்வபிலாஷை பூர்த்தியாவதற்கு ஆரோக்கியம் அனுகூலமா யிருந்தாலன்றி முடியாது. உதாரணமாக ஒருவன் சித்திரமெழுதும் வித்தையில் விசேஷ பயிற்சி யடைந்திருப்பதாக வைத்துக்கொள்வோம்; அதை அவன் பரிமளிக்கச் செய்யவேண்டுமென்று விரும்பினால் அதற்குரித்தான கருவிகளையும் இதர ஸாதனங்களையும் அவன் முதன்முதல் தயார் செய்துகொள்ள வேண்டியது அவசியம்; தயார் செய்துகொண்ட பிறகு அங்க ஹீனமாகியோ மனநிலை தடுமாறியோ அவன் போய்விடும்பட்சத்தில், அவன் சேமித்து வைத்திருக்கக்கூடிய நாட்டங்கள் எவ்வாறு பயன்படும்? ஆனதுபற்றி சரீர ஸௌக்கியமே ஜன்மத்தில் ஒருவன் செய்யும்படியான காரியங்களுக்குப் பிரதானமாகும். அச் சௌக்கியத்தைப் பாதுகாப்பதற்காக அனுபவ ரீதியாகவும் இதர முறைகளைத் தழுவியும் நாம் வேலைசெய்வது அவசியம்; பிரஜைகள் க்ஷேமமா யிருப்பதே நல்ல ராஜநீதத்திற்கு அழகாதலால், ராஜாங்கத்தாரும் ஆரோக்கியத்தை யனுசரிப்பமார்க்கங்களில் ஜனங்கள்

செல்லும்படி அவர்களுக்குப் போதுமான வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். அதாவது சுகாதார விஷயத்தில் எப்பேர்ப்பட்ட வித்தியாசத்தையும் பாராட்டாமல் பிரஜைகளும் ராஜாங்கத்தாரும் கலந்து ஆலோசனைசெய்து சுகாதாரத்திற்கு இன்றியமையாததா யிருக்கும் காரியங்களில் கவனஞ்செலுத்துவதே முறையாகும். ஆனால் இப்போதிருக்கும் மாதிரியில் இவ்விஷயம் கவனிக்கப்படுகிறதோவெனின், அதைக்குறித்து நிஷ்கர்ஷையாக யாதொன்றும் சொல்லமுடியாத ஸ்திதியிலிருக்கிறது. சுகாதாரத்தைக் கவைக்குதவாக் கம்பென மதித்து ஜனங்கள் பலர் தேகாரோக்கியத்தைக் கெடுத்துக்கொள்ளுகிறார்கள். ஆரோக்கியத்திற்கு ஆஸ்தானமாயிருக்கும் நன்னெறிகளினின்றும் பலர் பிசகிவிடுகிறார்கள்; உலகத்தில் உயிருடன் உஜ்ஜீவிப்பது சுக போகபாக்கியாதிகளுக்காக வென்பதை அனேகர் உணர்ந்துமட்டு மிருக்கிறார்களேயொழிய அந்தப் பாக்கியங்களை நீடூழி நிலைக்கச்செய்யும் ஸன்மார்க்கத்தைப் பின்பற்றி நடப்பவர்களாகக் காணோம். பிஞ்சிலே பழுப்பதுபோல காலமில்லாக் காலத்தில் பலர் இம்மண்ணுலகைவிட்டு நீங்கிவிடுகின்றனர். பற்பல வியாதிகளினால் பீடிக்கப்பட்டு மாள்கின்றனர் பலர்; அவ்வியாதிகளை வரவொட்டாமல் தடுத்து நிறுத்தக்கூடிய முறைகளை அவர்கள் செம்மையா யறிந்திருந்தும், அவைகளை யணுவளவேனும் கவனியாது காலத்தை வீணான பிரயத்தனங்களில் செலவழித்து அதுகாரணமாகப் பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் அடைகின்றார்கள். பூவுலக வாழ்க்கை நசுவரமானது; நசுவரமான காரியங்களில் கவனமதிகமாகச் செலுத்துவது பிரயோசனப்பட மாட்டாது; நீடித்து நிலைத்திருக்கும்படியானவும், ஸர்வஜன ஸம்மதமானவும், உலக க்ஷேமத்தைத் தாங்குவனவும் ஆன பாக்கியத்தைத் தரும் ஆரோக்கியத்தையும் அதற்குரிய சுகாதார வழிகளையும் குறித்துக் கொஞ்சங் கொஞ்சமாக ஆராய்வோம்.

### வந்தபின் காப்பதினும் வருமுன் காப்பது நலம்.

நோயின்வாய்ச் சிக்காமல் ஜீவகாலத்தை இனிமையாய்க் கடத்த விரும்புவோர் மேற்சொன்ன முதுமொழியை ஞாபகத்தில் வைத்து நடக்க வேண்டும்; அவ்விதம் வைத்து நடப்பார்களாயின் சுகஜீவிகளாக அவர்கள் உலகத்தில் வாழவியலும்; ‘அவனுக்கு அற்ப ஆயிசு, அகால மரணமடைந்தான்’ என்ற சொல்லுக்கும் இடமிராது. தற்செயலாய் ஏற்படக்கூடிய விபத்துகளினாலோ பிரமன் சிரசிலிட்ட வயதுக் கிரமந்தீர்ந்துவிட்டதனாலோ மரிப்போர் சிலர்; தம் சொந்தக் கிரியைகளினாலே ஆரோக்கியம் கெட்டுச் சீரழிந்து உயிர் நீப்போர் பலர்; மற்றும் சுகாதார முறைகளைச் சிறிதும் பின்பற்றாது கேவலம் ஐம்புலன்களுக்குத் திருப்தியுண்டாக்கும் பிரவர்த்திகளில் கண்ணோட்டம் வைத்துக் காலனுக்குக் காலமில்லாக் காலத்தில் தம்முயிரை அர்ப்பணஞ் செய்வோருமிருக்கிறார்கள்; தம் புத்தியினாலும் சூக்ஷ்மத்தினாலும் ஜீவாதாரத்திற்கு ஆணிவேர் போன்ற சுக



வழியில் கவனஞ்செலுத்துவோர் நூற்றிலொருவரைக் காண்பதரிதாயிருக்கிறது; என்றாலும் தொன்றுதொட்டு நம்மனுபவத்தில் கண்டும் கேட்டும் வரும் சுகவழி சம்மந்தமான முறைகளையும், பிரஜைகளின் க்ஷேமார்த்தமாகக் கருணைமிகுந்து அப்பியாசத்திற்குக் கொண்டுவருவதற்கு அனுகுணமாக நமது கவர்ன்மெண்டார் பிறப்பித்திருக்கும் சுகாதார விதிகளையும் சிறிது சிறிதாகக் குறித்துவர நாம் உத்தேசித்திருக்கிறோம். அவ்வம்சங்களை நமது ‘கல்பதரு’வின் அபிமானிகளும் அதைப் படிப்பவர்களும் தீர்க்கமாய்ப் படித்துத் தமது தினஸரி அனுபவத்திற் கொண்டுவரும்பக்ஷத்தில் ஜீவவாழ்க்கையிற் சுகாதார லோபமின்றிச் சந்தோஷகரமாகக் காலங் கடத்துவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

### சுகவாழ்வே பெருஞ்செல்வம்.

ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா? உதவாது; எனினும் உண்மையிலேயே பூமியில் எருவிட்டு உழுது பண்படுத்தி விதை தெளித்து நீர்ப்பாய்ச்சிப் பாதுகாத்தால் மகசூல் திருப்தியாயிருப்பதற்கு ஆக்ஷேபனையிராதன்றோ? அத்தன்மைபோல பெருஞ் செல்வம்பெற இசையுமொருவன் தன்னுடைய ஜீவியகாலத்தை சுகாதாரம் நிரம்பிய அமிர்த வர்ஷத்தில் கடத்திச்செல்லக் கடமைப்பட்டவனா யிருக்கிறான். அக்கடமையைக் கவனியாது நடப்பவர் சுகவாழ்விகளுமல்ல; அவர்களுக்கிருக்கும் மற்ற செல்வங்கள் சுகவாழ்வுக்குரிய செல்வமாகவுமாட்டா. இந்தியாவில்மட்டும் இருபதுலட்சம் ஜனங்களுக்கு மேலாகவே வருஷா வருஷம் வராமல் தடுக்கப்படக்கூடிய வியாதிகளுக்கு இரையாய்விடுகிறார்கள். இதுமட்டுமா? பத்துலக்ஷம் பேர்களுக்குக் குறைவில்லாமல் வியாதிவாய்ச் சிக்குண்டு உழலுவதையும் பார்க்கிறோம். வெட்டவெளிச்சமா யிருக்கும் இந்நிலைமைக்குக் காரணம் என்னை? சுகாதார முறைகளை அறியாததொன்று; அறிந்தும் சிரத்தையுடன் அனுஸரணையிற் கொண்டுவராது அலட்சியமாயிருப்பது மற்றொன்று—அதாவது, வியாதிகளின் கூறுபாடுகளையும் மூலத்தையும் ஆராய்ச்சி செய்து அவைகளை வேருடன் களையும் மார்க்கத்தைத் தெரிந்துகொள்ளாதிருப்பதே அறியாமையாகும். மற்றோர் காரணம் பின்னர்க் குறிப்பிட்ட அலட்சியமே. தரித்திரத்தினாலாவது, சரீரச் சோர்வினாலாவது, பின்னும் சோம்பலினாலாவது முறைகேடாய் நடக்கும் வழக்கத்தைத் தொடர்ந்தேர்த்தியாகக் கொண்டுவரும் பழக்கத்தினாலாவது சுகாதாரத்தைக் கவனியாமலிருப்பது அலக்ஷியமாகும். எவ்வளவு தான் கல்விமானாகவும் தனவானாகவும் இருந்தபோதிலும் தான் பெற்ற கல்வி நலத்தினாலும் தனப்பெருக்கினாலும் தனக்கும் தன்னை அண்டினோர்க்கும் சுகவாழ்வுக் குரிய ஆரோக்கிய வசதிகளைச் செய்துகொள்ளும் திறமையும் பெருமையுமிருக்க, அவைகளை நழுவவிட்டு நோய்கொடிகளால் பெருந்துன்பங்களுக்குப்பாத்திரமாகிறார்கள்; மதியூகத்தால் தடுக்கப்படக்கூடிய வியாதி

களைத் தருவித்துக்கொள்ளுகிறோமேயென்ற ஞானத்தை அவர்கள் சிறிதேனும் ஊன்றிக் கவனிப்பது கிடையாது. அறியாமை, அஜாக்கிரதை, அலட்சியம்' ஆகிய இவைகளால் சுகாதாரத்திற்கு லோபமுண்டாகிச் சீர்குலைந்து காலக்கிரமத்தில் ஜனஸமூகத்திற்குப் பெருந் தீங்கு நேருகின்றது.

### பிராசீன சுகாதார முறை.

மேற்றிசை நாகரிகம் வேரூன்றி யிருக்கும் இக்காலத்தில் நம் பிராசீனச் சுகாதாரம் எவ்வித மிருந்ததென்பதையும் நம் பெரியோர்கள் எங்ஙனம் அதை யப்பியசித்து வந்தார்களென்பதையும் சுருங்கச் சொல்லுவது அதிகமாகமாட்டாது. அவர் பற்பல துறைகளில் சுகாதார முறைகளை யவலம்பித்து வந்திருக்கிறார்கள். புராதனக் கிரந்தங்களும் வழக்கப் பழக்கங்களுமே இதற்குச் சாக்ஷி. இப்போதைய சுகாதாரமுறைக்கு அக்காலத்திருந்தவைகளை வித்தென்று சொல்லுவதும் பொருந்தும். க்ரீஸ்தேச ஜனங்கள் புஜபலபராக்கிரமம் பொருந்தியிருந்ததும் கிரேக்க சித்திரவேலைகள் விசேஷிக்கத் தக்கவையென்று கொண்டாடப்பட்டதும் எதனாலெனின், கிரேக்கர்கள் சரீரப்பயிற்சியின்கண் செலுத்திய தீவிரமான சிரத்தையினாலன்றோ? பிறகு கிரேக்க ராஜாங்கம் சிறுமை யடைந்துவிட்டதற்குக் குளிர் சுரத்தினால் கிரேக்க ஜனங்கத்திற்கு நேர்ந்த தேகத்தளர்ச்சியே காரணமென்று சொல்லப்பட்டது. தேகப்பயிற்சியிலும் சித்திர வேலைகளிலும் ரொமாபுரியர்கள் கிரேக்கருக்குச் சமானமானவர்களா யிருந்ததுடன் நில்லாமல் ஜலாதார விஷயங்களில், அதாவது கிணறு, கால்வாய், ஏரி, குளம், ஓடை, ஊற்று முதலான பலவகைப்பட்ட நீர்நிலையங்களில் கண்ணும் கருத்தும் வைத்ததான குறிகளை யின்றுங் காணலாகும். சுத்தமான ஜலத்தையடைவதற்கும், ஜலாதாரவசதிக்கும் ரொமாபுரியர் செய்து வைத்திருந்த திறமைமிகுந்த தூரஸ்து வேலைகளை இன்றும் ரோமாபுரியிற் காணலாம். அனுபவமூலமாகச் சுகாதாரத்திற்குப் போதிய விவரங்கள் ஒவ்வொரு ஜாதியாசார விதிகளிலும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ரோம ராஜாங்கம் நிலைகுலைந்ததற்கு ராஜீய நிர்வாகத்திறமையின்மை காரணமாக, அதன்பேரில் ஆரோக்கியானுஸாரமான விதிகள் கவனிப்பாரின்றிச் சீர்கேடடைந்துவிட்டன; அசுசியான வழக்கங்கள் பழக்கத்திற்கு வரலாயின; அதன்மேல் ஜனங்களுடைய தேகஸௌக்கியம் நிலையற்றுப் பிரசண்ட மாருதத்திலடிபட்ட இளம் வாழைகளையொப்ப வேருடன் பெயர்ந்து சரியலாயிற்று. பலவகைப்பட்ட வியாதிகள் எங்கும் பரவி மானிட உயிர்களைச் சூறையிட்டன. இவையனைத்தையும் கவனிக்கையில், சுகாதார முறைகளையும் வழிகளையும் அனுபவத்திற் கொணர்ந்து இக்காலத்திற்குரிய வகையாகச் சீர்திருத்திக்கொள்வதே பிரதானமாகுமென்பது 'உள்ளங்கை நெல்லிக்கனி'போல் எவர்க்கும் நன்குவிளங்கும். (இன்னும் வரும்.)

---

# PART III.

## KNOWLEDGE ON AGRICULTURE, etc.

BY Mr. G. RAJAGOPAL,

*Late Editor "South Indian Agriculture."*

### விவசாய ஞானம்.

நமது ராஜ்ஜியத்துக் குடித்தனக்காரர், கவர்ன்மெண்டார் தயாளத்துடன் செய்திருக்கிற ஏற்பாடுகளைத் தகுந்தபடி அனுஸரிக்காமல் இருப்பதற்கு முதல்காரணம் ஷை விஷயங்களைத் தெரியாமையினாலேயென்று இப்புது சஞ்சிகை வெளிப்படுத்துகிறது. இதில் அவர்களுக்கு இன்றியமையாத விவசாயம், தேகாரோக்கியம், கூட்டுறவு, கவர்ன்மெண்டு, போர்டு உத்திரவுகள் மற்றுமுள்ள விஷயங்களின் படிப்பு, சாஸ்திர ஆதரவுடன் வெளிப்படும். நமது தேசக் குடிகள் "அன்றுபிறந்த மேனிக்கு அழிவில்லை" என்னுமாப்போல் தொன்றுதொட்டு ஒரேமாதிரியான நடவடிக்கைகளையே அனுசரித்து தற்காலத்து ஐரோப்பிய ஆளுகையில் நடந்தேறுகிற மாறுதல்களுக்கு ஒத்து இல்லாமையினாலே பலவிதமாக நஷ்டமடைந்து முன்னுக்கு வராமல் இருக்கிறார்கள். நமது நாட்டு ஏற்றுமதி இறக்குமதி ஜாபிதாவைப் பரிக்ஷித்தால் விஷய ஞானசூனியத்தால் எவ்விதமாய் நஷ்டமடைந்துவருகிறார்களென்பது விவரமாய்த்தெரியும்.

நமது ராஜதானியில் ஏராளமாய் விளைவிக்கப்படுகிற நிலக்கடலையைப் பற்றி யோசிப்போம். நிலக்கடலையைத்தின்பதனால் பித்தம் அதிகரிப்பது காரணமாக அது உணவுக்கல்லாமல் வியாபாரத்துக்கே விளைவிக்கப்படுகிறது. அதன்விவசாயம், நமது நாட்டில் பழைய மாமூலை அனுசரித்து கையால் விதைத்தும், ஆள்கொண்டு களையெடுத்தும், மண்ணை வெட்டிக்காய்களைப்பொறுக்கியும் செய்யப்பட்டுவருகிறது. பூர்வத்தில் நம்மிடத்தில் ஆறு ஏழு மாதத்தில் முற்றக்கூடிய வகையிருந்தது. ஐரோப்பியர், சாஸ்திர விதியை அனுசரித்து சீக்கிரம் முற்றும்படியான வித்துக்களையே வருஷா வருஷம் தெரிந்தெடுத்து அதன் ஆயுளை நாலுமாதமாக்கி இருக்கிறார்கள்.

நமது நாட்டுபூர்வ வித்துகளில் தைலம் குறைந்திருந்தபடியால் அவை உணவுக்கு உபயோகப்பட்டது. இவ்வுணவு தேகபோஷிப்புக்கு மிகவும் யுக்தமானதென்று ஆயுசு குறைந்தவகைகளில் தைலம் குறைந்த வித்துக்களையே நாளாவட்டத்தில் தெரிந்தெடுத்து உணவுக்கென்றே சில வகைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆக ஐரோப்பியர் அமேரிக்கர் விளைவிக்கும் வகைகளில் உணவுக்கென்று சில வகைகளும் தைலத்துக்கென்று வேறு சில வகைகளும் வைத்திருக்கிறார்கள்.

பழைய வகையை நாம் சுட்டும் அவித்தும், சில சமயங்களில் வெல்லப்பாகில் உருண்டை செய்தும் பலகாரமாகச் சாப்பிடுவதுண்டு. சீனதேசத்தவரோவெனில் ஒவ்வொரு கறிக்கும், காய்கறியானாலும் மாமிசமானாலும் மீனானாலும் கடலையை வெந்நீரில் ஊறவைத்து மேல்தோலைப் பிதுக்கி மூளையைக்களைந்து பருப்பைப் பாதங்கொட்டைபோல் அரைத்து கறிச்சமயலில் சேர்ப்பதனால் அதற்கு ருசியும் மணமும் ஏறுவதுடன் சாப்பிடும் மனிதருக்குத் தேகவலிமையையும் உண்டாக்குகிறது. அமெரிக்கா கண்டத்துப் பட்டணங்களிலும், இங்கிலாந்து பட்டணங்களிலும் வெள்ளைச்சர்க்கரைப் பாகில் வேர்க்கடலை பருப்பு பலவித ரூபமாகச் சேர்க்கப்பட்டுப் பள்ளிக்கூடங்களில் சிறுவர்களுக்கு தின்பண்டமாய் உதவுகிறது. இதல்லாமல் வேர்க்கடலைபருப்பும் கோகோ பருப்பும் ரசாயனபரீக்ஷை மூலமாய் ஒன்றுபோல் இருக்கக் கண்டு சுலப விலைக்குக் கிடைக்கும் வேர்க்கடலைபருப்பை பொன் வறுவலாக வறுத்து மாவுசெய்து அதனுடன் வறுத்ததானியமாவைக்கலந்து கோகோ வாசனையைச் சேர்த்து கோக்கோ தூளாக 4 அவுன்ஸ் டப்பிகளில் அடைத்து எட்டு அணாவுக்குக் குறையாமல் விற்பனைசெய்கிறார்கள். அதை நாம் வாங்கி அமிர்தம்போல் பாவித்து உண்டு பலனடைகிறோம்.

இதன் விவசாய விஷயத்தில் உள்ள தாரதம்மிய மென்னவென்றால், நாம் கையால் விதைப்பதை அவர்கள் ஒழுங்காய் விதைத்து மாடு குதிரை பூட்டிய கருவிகளால் களையெடுத்து, கொட்டையைக்கொத்திப் பொறுக்குவதற்கு பதிலாக இரும்புக் கலப்பைபோன்ற கருவியை செடிகளின் காய்க்கு அடியில் செலுத்தி மண்ணைக் கிளப்பி தளர்த்திவிடுகிறபடியால் செடிகள் காய்களோடு சேகரிக்கப்படுகின்றன. செடிகளை எடுக்கும்போது மண் உதிர்ந்துபோக உதருவதுண்டு. இவ்வாறு பொறுக்கிய செடிகளைக்காயுடன் பதமாக நெல் அறிக்காய்ச்சல் போல் காயவைத்து போர் போடுவதுண்டு. சில மாதங்களானபிறகு காய்கள் போரில் நன்றாய்த்தேர்ந்து முற்றி இருக்கும். வேண்டும்போது ஆள்கள் கிடைக்கும் தருணத்தில் நிழலிலே போரைப்பிரித்து காய்களைப் பறிப்பதுண்டு. நமது நாட்டில் இவ்வழக்கம் அனுசரிக்கப்பட்டால் என்னலாபம் உண்டாகும்! எவ்வளவு கஷ்டம் தொலையும்!!

நமது நாட்டில் கடலை எண்ணெய் பித்தமென்று எள் எண்ணெயில் கலப்பதுண்டு. ஐரோப்பியரோவெனில் இவ்வெண்ணெயை சுத்தப்படுத்தி பசு நெய்க்குப்பதிலாக முதல்தரம் எண்ணெயை சமையலுக்கு உபயோகித்துக்கொள்ளுகிறார்கள். இரண்டாம்தரம் எண்ணெய் மெழுகுவர்த்திகள் சோப்புகள் செய்யவும், மூன்றாம்தரம் எண்ணெய் விளக்கு எரிக்கவும் உதவுகிறது. சுத்தப்படுத்தும் முறைமைகள் சுலபமானவைகளே. இதுவிஷயமாகத் தெரியவிருப்பமுள்ளவர்கள் கனம்பொருந்திய ஸர் பிரடரிக் நிக்கல்ஸன் துரையவர்களின்மூலமாய் அறிந்துகொள்ளலாம். வீட்டுச்செலவுக்கு வேண்டியவர்கள் தேர்ந்த வித்துக்களை உலர்த்தி செவப்புத் தோலைக்கழற்றி மூளையை நீக்கிப்பருப்பைமாத்திரம் நாட்டுச்செக்கிலாகிலும் ஆட்டி முதலில் கசியும்



எண்ணெயை வேறாக எடுத்து உபயோகித்தால் நெய்யின்மணம் ஒன்றுதான் குறைவு, வேறு எந்தவிதத்திலும் இது வேர்க்கடலை எண்ணெயென்று தெரியாமல் போகிறது. இம்மாதிரி பிரத்தியக்ஷத்தில் செய்து அனுபவித்ததுண்டு. இரண்டாவது மூன்றாவது பிழிவதில் கசியும் எண்ணெய் மட்டமானது. நமது நாட்டில் வித்து சுத்தமில்லாமையாலும் கசியும் எல்லா எண்ணெயையும் ஒன்றாகச் சேர்ப்பதினாலும் கடலை எண்ணெய் நமக்கு உணவுக்கு உதவுவதில்லை.

நிலக்கடலை விஷயமாக நம்முடைய ஞானம் சூனியப்பட்டு இருப்பதுபோல புகையிலையைப்பதம் செய்வதிலும் சர்க்கரையை வெளுக்கச்செய்வதிலும் மற்றும் நாம் செய்யும் எந்த வேலையிலும் சாஸ்திர ஞானமில்லாமல் தாழ்ந்த சரக்குகளை உற்பத்தி செய்து குறைந்த விலைக்கு விற்றுவருகிறோம்.

தொழில் விஷயமாய் இவ்வளவு ஞானத்துடன் நஷ்டப்படுகிறோமென்றாலோ நாம் புசிக்கும் சாப்பாட்டு விஷயங்களைப்பற்றியும் நாம் உடுக்கும் வஸ்திரங்களைப்பற்றியும் நம்முடைய ஞானம் என்ன? குழந்தைப் பருவத்தில் இன்னவித சாப்பாடு கொடுக்கவேண்டுமென்றும் யௌவனப் பருவத்திலும் மூப்புப்பருவத்திலும் இன்னின்ன சாப்பாடு கொடுக்கவேண்டுமென்றும் சமையல் செய்யும் ஒவ்வொரு வீட்டிலும் தெரியுமா? நாம் சாப்பிடும் காய்கறிகள், மாமிசாதிகள் மீன் முட்டைமுதலியவைகளில் என்ன என்ன சத்துக்கள் எவ்வெவ்வளவு இருக்கின்றனவென்றும் அச்சத்துக்களை வீண்போக்காதபடி எம்மாதிரி சமையல்செய்துசாப்பிடவேண்டுமென்றவுமான ஞானமுமாவது நமது தேசத்தவர்க்கு உண்டா?

(பாக்கி அடுத்த ஸஞ்சிகையில் வரும்.)

## COMMERCE AND INDUSTRY.

## வர்த்தகமும் கைத்தொழிலும்.

### வர்த்தகமாவது யாது?

'திரைகடலோடியுந் திரவியந்தேடு' என்னும் முதுமொழி நம்மவர் அறியாததல்ல. நல்ல பணம் சம்பாதிப்பதற்கு ஒருவன் உட்கார்ந்த இடத்திலிருந்துகொண்டே என்னென்னவோ காரியங்களைக் கவனித்துவரக்கூடுமென்றாலும், பொதுவாகச் சம்பாத்தியத்தைக் குறித்து நமது மூதாதைகள் பேசுகையில் உட்கார்ந்த இடத்தில் மட்டுமல்ல, வெளி இடங்களிலும் வெளியூர்களிலும் வெளி தேசங்களிலும் கால் நடையாகவோ, வாகனாதிகளில் ஏறியோ, ரெயில், கப்பல் ஆகிய தூரபிரயாணங்களுக்கு உரிய ஸாதனங்களைக் கைக்கொண்டோ, புறப்பட்டுப் போய்ப்பணம் சம்பாதிக்கலாமென்று தொகுத்துக் கூறியிருக்கிறார்கள். துராகிருதவழிகளினால், அதாவது கொலை, கொள்ளை, நரசோரம், பொய்ச்சாட்சி, ஏமாற்றம் மற்றும் இவை

போன்ற பலவகைப்பட்ட தூர்த்தமான வழிகளைப் பின்பற்றிக் கிடைக்கும் பணம் சம்பாத்தியமாகாது. நல்வழியில் பிறர்மனம் நோகாதபடி, தான் செய்யக்கூடிய வேலையின் அளவுக்குத் தகுந்த பிரதிப்பிரயோசனம் கிட்டுமாறு எந்த கௌரவமும் மதிப்பும் நிரம்பியகாரியம் உண்டோ அவ்வகைப்பட்டகாரியம் நிறைவேறுவதலால் கிடைக்கும் ஊதியத்தையே 'ஸம்பாத்தியம்' என்று சொல்லவேண்டும். ஓராபீசுக்குச் சென்று காலைமுதல் மாலை வரையில் உட்கார்ந்து வேலைசெய்வதாகட்டும், வீதிவீதியாகச் சென்று நிருவாகத்தையொட்டிய காரியாதிகளில் அதிகாரம் பண்ணுவதாகட்டும், நியாயஸ்தலங்களில் கட்சிப்பிரதி கக்ஷிகளின் தொல்லைகளை முன்னெடுத்து விவாதிப்பதாகட்டும், மற்றும் கடையில் உட்கார்ந்து பண்டமாற்றி வியாபாரஞ் செய்வதாகட்டும், இன்னும் இவைபோன்ற எத்தனையோ துறைகளில் பணம்சேகரிக்க வகையுண்டு; ஆனால் அவ்வகைகளுக்குள் தன்மதிப்பைத் தரும் வ்ருத்தி ஒன்றுதான்; அது ஆரம்பத்தில் சிரமத்தைத் தருவதாயினும் அதனிடம் சிரத்தையும் கவனமும் ஏற்படுமேயானால் முதலில் உண்டாகும் சிரமம் சூரியனைக் கண்டபனிபோல் விலகி தனதான்ய ஸம்பத்தைக் கொடுக்கும். அப்பேர்ப்பட்ட ஸம்பத்துடையோனை உலகத்தவர் போற்றுவார்கள். லோகோபகாரமான நன் முயற்சிகளில் அவன் விசேஷசிரத்தை யெடுத்துத் தான் இனிது காலஞ் செலுத்துவதுடன் தன்பிராதாக்களான மற்றவர்களையும் கௌரவமான துறைகளில் கவனஞ் செலுத்தும்படியான வழிகாட்டியாயுமிருக்க முடியும். அவனது பெயரும் பெருமையும் அப்போதுதான் சீருடன் பிரகாசிக்கும். சீர் ஏற்படுகையில் சிறப்புக்குக் கேட்கவேண்டுமா? உடனே புவியெங்கும் புகழ் உண்டாகும். இத்தன்மையான நிலைமைக்கு ஒருவனைக் கொண்டுவரும் வ்ருத்தி ஸர்வ ஸாதாரணமாகச் சகலரும் அனுஷ்டானத்திற் கொணர்ந்து பயன் பெறக்கூடியதேயாகும். அதற்கு ஜாதிபேதம் மதபேதம் என்பதில்லை; சிறியோர் பெரியோர் என்ற பேதமில்லை; எளியோன் தனவான் என்ற வித்தியாசமில்லை. சகல வர்ணத்தவரும் தாம் தாம் வஸிக்கும் மண்டலத்தில் 'தன்யர்' என்று மற்றவர் புகழ்ந்து கூற மகிழ்போடுகாலங் கடத்துவதற்கு ஏற்ற வ்ருத்தி ஒன்றுதான். அதுவே வர்த்தகம் எனப்படுவது. பின்னும் வர்த்தகத்தைக் குறித்துப் பேசுவதென்றால் பல அத்தியாயங்களாக வளரும். என்றாலும் வர்த்தகாபி விருத்தியைக் கைப்பிடித்த ஒருவன் எக்காலத்திலும் வறிஞனென்று வெளிவந்ததில்லை; அதை முறைப்படி நடத்திவந்தால் எவ்வளவோ பலன்கள் ஸித்திக்கும் என்பதற்குத் தடையில்லை. எங்ஙனம் கேட்டதை யளிக்கும் தன்மைவாய்ந்த குணவிசேஷம் 'கல்பதரு' வினிடம் அமைந்துள்ளதோ அங்ஙனமே இஷ்ட ஸித்தியைப் பூர்த்தியாக்குவிக்கும் பூமணம் பெற்றது வர்த்தகமும். அதைத் திறமையுடன் நடத்தும் முறைகளையும் அதனாலனுபவிக்கக்கூடிய பெரும் பேறுகளையும், அதற்கும் கைத்தொழிலுக்குமுள்ள நெருங்கிய பாந்தவ்யத்தையும் ஒன்றன்பின் ஒன்றாக ஆராய்ந்தாலன்றி வர்த்தகவிசேஷம் நன்றாகப்புலப்பட மாட்டாது. கொஞ்சங் கொஞ்சமாக விவரிப்போம்.

# PART IV.

## HINDU LAW.

### முகவுரை.

எந்தத் தேசத்திலும், இராஜாங்கத்திலும் புழங்கிவரும் பற்பல சட்டதிட்டங்களுக்குள்ளும், பற்பல மதஸ்தர்கள் ஸம்மந்தப்பட்டமட்டில் ஷெயார்களின் குடும்பவிருத்திக்காகச் செய்யப்படும் விவாஹத்தைப்பற்றியும், அப்பால் ஷை விவாஹத்தின் மூலமாய் உண்டாகக்கூடிய குழந்தைகள், குழந்தை பிறவாதகேசுகளிலும் குழந்தைகள் பிறந்திருந்தாலுமே மற்றும் சில கேசுகளிலும் செய்துகொள்ளக்கூடிய ஸ்வீகாரம், (தத்து) அப்பால் குடும்பஸ்தர்களுக்குள் குடும்பத்திலிருக்கும் சொத்துக்கள் விஷயமாய் செய்துகொள்ளும் பாகம், புருஷன் இறந்துபோன கேசுகளிலும் மற்றக்கேசுகளிலும் பெண்பிள்ளைகளுக்கும், இதர கேசுகளில் மற்றவர்களுக்கும் கிடைக்கக்கூடிய ஜீவனாம்சம், குடும்பத்தில் ஏற்பட்ட கடன்களை தீர்ப்பது சம்மந்தமான விதிகள், ஸொத்துக்களில் ஸ்திரீகளுக்கு உள்ள பாத்தியதை, சொத்துக்களை விநியோகம், பராதீனம் முதலியது செய்வதில் அவரவருக்குள்ள பாத்தியதை, யார்யார் சொத்துக்கு யார்யார் வார்சு பாத்தியதையை அடைகிறார்கள் என்ற விஷயங்களைக் குறித்து நிர்ணயம் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டு அனுஷ்டானத்திலிருந்துவரும் சட்டமே மிகவும் பிரதானமானதாகவும் எல்லோருக்கும் கட்டாயம் தெரிந்திருக்கவேண்டிய சட்டமாகவும் இருக்கிறது. ஹிந்து குடும்பங்கள் விஷயமாக ஷை ஸங்கதிகளைப் பற்றிச் சொல்லும் சட்டத்துக்கு ஹிந்து லாவென்று பெயர். மேற்கண்ட ஹிந்துலாவின் ஸாராம்சமானது தக்க ஐவேஜுள்ளவர்களுக்கும், யாதொரு ஐவேஜும் இல்லாதவர்களுக்கும், ஆணுக்கும், பெண்ணுக்கும், யாவருக்கும் நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டியதாகயிருக்கிறது. தக்க ஐவேஜுள்ளவர்கள், ஸ்தாவரம் என்னும் அசையாப்பொருள்களை கிரையத்துக்கு மற்றொருவனிடமிருந்து வாங்கும்போது கிரையத்துக்கு விற்பவனுக்கு ஷை சொத்து எவ்விதம் கிடைத்தது, ஷை சொத்தை அவனுக்கு சட்டப்படி அடையவும் பராதீனம் செய்யவும் பாத்தியதை யுண்டாவென்ற விஷயமும், ஒருவனுக்குக் கடன் கொடுக்கும்போது அவன் கடன் வாங்கினால் ஷை கடன் குடும்ப சொத்தைக் கட்டுப்படுத்துமா, கடன் வசூலாகுமாவென்ற பற்பல சங்கதிகளையும் தெரிந்துகொள்ள வேண்டியதிருக்கிறது. ஏதும் ஐவேஜுமில்லாதவர்கள், ஸமீபமான வார்சுகளில்லாமல் இறந்துபோனவும் தங்களுக்கு அனேக தலைமுறைவிட்ட தாயாதிகாரனாகவும் இருக்கும் ஒருவனுடைய சொத்துக்களை தான் அடையவேண்டியதாகவும் நேரிடும்பொழுது அது

விஷயமாகவும் ஹிந்துலாவின் ஸாராம்சம் தெரிந்திருக்கவேண்டியதிருக்கிறது. விதவைகளாகப்போன பெண்பிள்ளைகளுக்கு ஸ்திரீ தனம் விஷயமாகவும், ஸ்வீகாரம் விஷயமாகவும், ஜீவனும்சம் விஷயமாயும், கடன்கள் விஷயமாகவும், சொத்தை பராதீனம்செய்வது விஷயமாகவும் அநேகம் சங்கதிகள் தெரிந்துகொள்ளவேண்டியதாக யிருக்கிறது.

இது சங்கதிகள் எல்லாவற்றையும் நன்றாய் ஆலோசித்து கிராமாந்தர ஜனங்களுடைய நன்மையைக்கருதி இது எழுதப்படுகிறது. ஆகையால் யாவரும் இதை ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கை.

---

# HINDU LAW.

## ஹிந்துலா.

இவ்வுலகத்திலுள்ள ஜனங்கள் பற்பல ஜாதியையும் மதத்தையும் சேர்ந்தவர்களாக யிருக்கிறார்கள். இந்துமதம் என்றும் மகம்மதியமதம் என்றும், கிருஸ்தவமதமென்றும், ஜெயின்னியமதமென்றும், பௌத்தமதமென்றும் அநேக மதங்களிருக்கின்றன. இதில் ஒவ்வொரு மதத்தையும் பின்பற்றினவர்கள் ஸம்மந்தப்பட்டமட்டில் அந்தந்த மதஸ்தர்களின் பற்பல குடும்ப முறை சொத்து, சுதந்திரம் முதலியவைகளைப்பற்றி விதாயகம் செய்து "ஹிந்து லா" வென்றும், "மஹம்மதிய லா"வென்றும், "கிருஸ்டியன் லா" (Indian Succession Act) என்றும் பற்பல சட்டங்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன.

இந்தியாவில் அதிலும் முக்கியமாய் நமது ராஜதானியில் வசிக்கும் ஜனங்களில் பெரும்பான்மையோர் ஹிந்துமதஸ்தர்களாக விருப்பதையிட்டு, நாம் இந்த பத்திரிகையில் முதலில் "ஹிந்து லா"வைப்பற்றியே எடுத்துரைப்போம்.

### ஹிந்து லாவின் வரலாறு.

பரதகண்டமெனப் பெயர்வழங்கிவரும் நமது இந்தியா, உலகத்திலுள்ள எல்லா தேசங்களுக்கும் உச்சஸ்தானத்திலிருந்து வருகிற ஓர் பூர்வீக நாடு. இதில் வசித்துவந்தவர்கள் நம்முன்னோர்களான ஆரியர்கள்தான். அவர்கள் அநேகம் ஆயிரம் வருஷங்களுக்குமுன் முதற்கொண்டே கல்வி, நாகரீகம் இவைகளில் சிறப்புற்றோங்கி யிருந்துவந்திருக்கிறார்கள். அந்தக் காலங்களில் இந்துதேசமானது மேன்மைபொருந்திய இந்து ராஜாக்களாலேயே ஆளப்பட்டு வந்தது. ஹிந்துக்களுடைய மதத்திற்கு ஹிந்துமதமென்று பெயர் வந்தது. இது அனாதியாக உள்ளது. இந்துமதத்தின் கொள்கைகள் ஸர்வாந்தரியாமியாயுள்ள பகவானிடமிருந்து ஆரியர்களுக்கு அளிக்கப்



பட்ட வேதங்களுக்கிணங்க அமைக்கப்பட்டிருக்கின்றன. அது காரணம் பற்றியே "இந்துக்கள் தொன்றுதொட்டு கல்வித்திறமையிலும் நாகரீகத்திலும் சிறப்புற்றோங்கி யிருக்கிறார்கள்.

இந்துதேசம் பிரிட்டிஷ் ராஜாங்கத்தாருடைய ஆட்சிக்கு வந்தபிறகு, நமது நாட்டின் நீதிபரிபாலனத்தை உத்தேசித்து ரிவினியூ, ஸீவில், கிரிமினல் நடவடிக்கைகள் ஸம்மந்தமாயுள்ள சட்டதிட்டங்களை சட்டநிரூபண சபையாரைக்கொண்டு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் நமது "ஹிந்துலா" வானது அவ்விதம் நமது ராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டதல்ல. அது தெய்வீகமாய் ஏற்பட்ட ச்ருதி, ஸ்மிருதி முதலானவைகளின் மூலமாய் ஆதரிக்கப்பட்டு தொன்றுதொட்டும் வம்சபரம்பரையாகவும் அநுஷ்டானத்திலிருந்து வருகிற சட்டத்தொகுதியாயிருக்கிறது. ச்ருதியென்பது தெய்வத்தினிடமிருந்து கேழ்க்கப்பட்டது. அதாவது தெய்வத்தால் உபதேசிக்கப்பட்டது. ரிக், யஜுர், ஸாமம், அதர்வணம் என்று சொல்லப்பட்ட நான்கு வேதங்களும் ச்ருதியென்று சொல்லப்படும். ஸ்மிருதி யென்பது, தெய்வத்தன்மை பொருந்திய மகான்களான மனு சக்கிரவர்த்தி, நாரதர், கௌதமர், வஸிஷ்டர், காத்தியாயனர், போதாயனர், பராசரர், ஆபஸ்தம்பர், யாக்ஞவல்கியர் முதலான அநேக மகா ரிஷீச்வரர்களால் இஹபரஸாதனங்கள் அனைத்தைப்பற்றியும் குறித்த நீதிகள் அடங்கிய வேதங்களாகிய ச்ருதிக்கிணங்க இவ்வுலக வாழ்க்கைக்குரிய சொத்து சுதந்திரம் முதலியவைகளின் அனுபோக விஷயங்களைப்பற்றி யெழுதப்பட்டிருக்கிற தர்ம சாஸ்திரங்கள் தான். இந்த தர்மசாஸ்திரங்கள் ச்ருதிகளுக்குப் பொருத்தமாகவும் பற்பல தேசங்களில் அங்கங்கே ஜனங்களுக்குள் தொன்றுதொட்டு நடந்தேறி வந்துகொண்டிருக்கிற ஆசார அனுஷ்டான வியவஹாரங்களுக்கு அனுஸரணையாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. மேற்சொல்லிய ச்ருதி, ஸ்மிருதிகளைத் தவிர பூர்வகால சரித்திரங்களாகிய பதினெண்புராணங்களும் இந்துலாவின் மூல ஆதாரங்களாக யிருக்கின்றன. இவைகளில் மனுஸ்மிருதிதான் முதல் முதல் எழுதப்பட்டதாகவும் மிகவும் முக்கியமானதாகவும் எண்ணப்பட்டு வருகிறது. யாக்ஞவல்கியரால் எழுதப்பட்ட ஸ்மிருதியை மனுஸ்மிருதிக்கு 2-வதாகச் சொல்லவேண்டும். மற்றவர்களால் எழுதப்பட்ட தர்ம சாஸ்திரங்கள் இதற்கும் பின்னால் எழுதப்பட்டவைகளாக யிருக்கின்றன.

மனுசக்கிரவர்த்தி முதலிய மகா புருஷர்களால் உண்டாக்கப்பட்ட மேற்குறித்த ஸ்மிருதி முதலிய கிருந்தங்களுக்கு, அடியில்கண்ட பற்பல வித்துவான்களால் அநேக வியாக்கியானங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

அடியிற்கண்டவர்களால் எழுதப்பட்ட மேல்கண்ட வியாக்கியான கிருந்தங்களைத்தவிர இன்னும் அநேக வித்வத்சிரோன்மணிகள் பின்னும் பற்பலபெயருள்ள அநேக வியாக்கியானங்களையும் எழுதியிருக்கிறார்கள். ஆனால் நமது இராஜதானியிலுள்ளவர்களுக்கு அவைகளால் யாதொரு பிரயோசனமுமில்லையாகையால் அவைகளை இங்கே எழுதப்படவில்லை.

| தர்ம சாஸ்திரங்களின் பெயர். | வியாக்கியானம் எழுதினவர்களின் பெயர். | இந்த கிரந்தங்கள் எங்கெந்த தேசங்களில் வழங்கி வருகின்றன. |
|---|---|---|
| 1. மிதாக்ஷரம் அல்லது விக்ஞானேச்வரீயம்* | விக்ஞானேச்வரர் | காசிராஜ்ஜியம். பம்பாய் இராஜதானி. தென் இந்தியா. |
| 2. ஸ்மிருதி சந்திரிகை | தேவானந்தபட்டர் | |
| 3. ஸரஸ்வதீ விலாஸம் | ப்ரதாப ருத்திரர் | |
| 4. தாயவிபாகம் அல்லது மாதவீயம் † | மாதவய்யர் | தென் இந்தியாவில் தமிழ் தேசம் முதலியதுகளில். |
| 5. வ்யவஹார நிர்ணயம் அல்லது வரதராஜீயம் | வரதராஜர் | |
| 6. தத்தக சந்திரிகை | தேவானந்தபட்டர் | |
| 7. தாயபாகம் | ஜீமூதவாஹனர் | பங்காளத்தில் |
| 8. வ்யவஹாரமயூகம் | நீலகண்டர் | பம்பாய் இராஜதானியில் மகாராஷ்டிரதேசங்களில் மேல் இந்தியாவில் வடகன்னடம் குஜராத்து வடகொங்கணம் முதலிய இடங்களிலும். |
| 9. வீரமித்திரோதயம் | மித்திரமிச்ரர் | காசிராஜ்யத்தில். |
| 10. தத்தக மிமாம்ஸை ‡ | நந்தபண்டிதர் | மிதிலைதேசத்தில். |

குறிப்பு (1) வ்யவஹார மயூகமும் வீரமித்திரோதயமும் சற்றேறக்குறைய மிதாக்ஷரத்தைப்போலவேயே யிருக்கின்றன.

குறிப்பு (2) 2-3-4-5 லக்கமிட்ட கிரந்தங்களை தென் இந்தியாவிலும் 8-9 லக்கமிட்ட கிரந்தங்களை மேல்இந்தியாவிலும் மிதாக்ஷரத்தோடு ஆதாரங்களாகப் புழங்கி வருகிறார்கள்.

* இது அநேகமாய் யாக்ஞவல்கிய ஸ்மிருதியின் வியாக்கியானமாகத் தானிருக்கிறது.

† இது பராசரஸ்மிருதிக்கு வியாக்கியானம்.

‡ இது ஸ்வீகாரத்தைப்பற்றிச் சொல்லுகிறது.

# PART V.

## THE THREE ESSENTIAL POINTS ON CO-OPERATION.

BY Mr. O. M. VENKATANATHA AIYENGAR
*of Uttaramallur.*

### "கூட்டுறவின் மூன்று ஸாரங்கள்."

கூட்டுறவு சங்கங்களாகிய ஐக்கிய சங்கங்கள் ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒவ்வொரு சங்கமாகவும், ஒவ்வொரு சங்கத்திலும் பல விஷயங்களையும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். சாதாரணமாய் கூட்டுறவு விஷயத்தை முக்கியமாய் மூன்று வகுப்புகளாகப் பிரித்துக் கொள்ளவேண்டும். அவைகள்தான் முக்கிய ஸாராம்சமான விஷயங்களாகும்.

அவைகளாவன:—

1. நாணயச் சங்கம் (Credit Society).
2. உற்பத்திச் சங்கம் (Productive Society).
3. விபஜன சங்கம் (Distributive Society).

ஐக்கியபத்தியமாக முடிக்கவேண்டிய விஷயங்களை மேற்சொன்ன விஷயங்களாகத்தான் பிரித்து அலுவல்களை நடத்தவேண்டும். ஆனால் ஒவ்வொரு வகையையும் பல பிரிவுகளாகச் செய்யலாம். அவைகளைச் சற்று வரிசையாகச் சொல்லத்தக்கது. இந்த விஷயங்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயமானாலும் இவைகளை ஞாபகப்படுத்தவேண்டுவது அவசியம்.

முதலாவது நாணயச் சங்கம் என்பது ரொக்க லேவாதேவி செய்யும் விஷயமாகும். இந்தச் சங்கங்கள் இந்த இராஜதானியிலும் மற்ற இராஜதானிகளிலும் பண லேவாதேவிகள் நடத்தும் சங்கங்களேயாகும். இந்தப் பணத்தினால் அநேக கூட்டுமுறைகள் செய்து கொள்ளலாமென்று எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். இதைக்குறித்து அதிகம் எழுதவேண்டியது அனாவசியமாகும். "பணம் இருந்தால் பத்துவகையும் செய்யலாம்" என்பது பழமொழியால் ஏற்படுகிறது.

இரண்டாவது விஷயமாகிய உற்பத்தி சங்கம் என்பது ஒருபொருளை உண்டுபண்ணும் சங்கமாகும். நமக்கு உடுப்பு வேண்டுமானால் பட்டு அல்லது பஞ்சு முதலியதுகளை வரவழைத்து நூலாக்கி நெய்யவேண்டும். அப்படி நெசவு செய்து உபயோகப்படுத்திக் கொள்வதுதான் உற்பத்தி சங்கமாகும். இம்மாதிரியாகவே ஆகாரப்பொருள்களும் மற்ற செயப்படுபொருள்களும் உற்பத்திசெய்து கொள்ளவேண்டும். ஒரு மனிதன் ஜீவிக்கவேண்

டியதற்கு என்னென்னவஸ்துக்கள் வேண்டுமோ அவைகளையெல்லாம் உண்டு பண்ணுவதற்கு ஒரு ஐக்கிய சங்கமாக ஏற்படுத்தி அதன் மூலமாய் செய்து கொண்டால்தான் நயமாகவும் ஏராளமாகவும் செய்துகொள்ளலாம். உதாரணமாக இக்காலத்தில் எல்லோரும் சப்பு (Soap) உபயோகிக்கிறார்கள். இவைகளை நாம் இவ்விடத்திலேயே உற்பத்தி செய்யலாம். அதற்கு வேண்டிய ஸாதகமான வஸ்துக்கள் இவ்விடத்திலேயே அகப்படும். அந்த சப்பு செய்வதற்கு நாம் ஒரு ஐக்கிய சங்கமாகச் சேர்ந்து நாணயச் சங்கம்போல் பங்குத்தொகையாக ஏற்படுத்தி பங்கு ஒன்றுக்கு ரூபாய் 10-விகிதம் 1,000 பங்குகளாக ஏற்படுத்தி அவைகளை மூலதனமாக வைத்துக்கொண்டு சப்பு செய்யும் கைத்தொழில்சாலை அமைத்து அந்த சாலையில் உற்பத்தியாகும் சப்புகளை நயமாகவும் வேண்டியவரையிலும் விற்பனைக்கிக் கொண்டுவந்தால் அதனால் லாபமும் உபயோகமும் உண்டாகும். இதே மாதிரியாக அநேக பொருள்களையும் வஸ்துக்களையும் உற்பத்திசெய்து கொள்வோமேயானால் அநேக கைத்தொழில்களையும், ஆகாரப்பொருள்களையும் ஏராளமாயும், நயமாயும் செய்து கொள்ளலாம். இம்மாதிரி செய்வது தான் உற்பத்தி சங்கமாகும்.

மூன்றாவது விஷயமாகிய விபஜன சங்கம் அல்லது பங்கிடும் சங்கம். அதாவது நமக்கொரு வஸ்து வேண்டுமானால் பத்துபேர் ஒன்று சேர்ந்து மொத்தமாய் வரவழைத்து நமக்குள் பங்கிட்டுக் கொள்வதாகும். உதாரணமாக நமக்கு பயிரிடுவதற்கு எரு வேண்டுமென்று வைத்துக்கொள்வோம். 10-நபர்கள் சேர்ந்து ரூ. 100-க்கு மொத்தமாய் எருவாங்கி இந்த பத்து நபருக்கும் வேண்டிய அளவு பங்கிட்டுக்கொள்ளலாம். அப்படி பங்கிட்டுக் கொள்வதால் லாபம் உண்டாகும். ஒருவன் ஒருபாரம் எரு வாங்கவேண்டுமானால் அவனுக்கு ரூ. 5. பிடிக்கும் என்பதாக வைத்துக் கொள்வோம். பத்து நபர்சேர்ந்து 10-பாரம் வரவழைத்தால் குறைந்த தொகைக்கு அதாவது சுமார் ரூ. 40-க்கு வரவழைக்கலாம். இதனால் ஒவ்வொரு நபரும் தனித்தனியாக வாங்கினால் ரூ. 5-க்கு வாங்கவேண்டிய எரு ரூ. 4-க்குக் கிடைக்கிறது. 10-பாரம், மொத்தமாகவாங்குவதனால் நபர் 1-க்கு ரூ. 1 லாபம்கிடைக்கிறது. அதேமாதிரியாக ஆகாரப் பொருள்களும் மற்றும் மனிதவாழ்க்கைக்கு வேண்டிய சாமான்களனைத்தும் வரவழைத்து ஒரு பண்டகசாலையாக ஏற்படுத்திக் கொண்டால் நமக்குள் அதன்லாபத்தையும் பிரயோஜனத்தையும் அடையலாம்.

மேல் சொன்ன பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் சம்மந்தமுண்டு. அதாவது நாணய வழியில்லாமல் உற்பத்தி சங்கமும் விபஜனசங்கமும் உண்டாகாது. அதுபோலவே உற்பத்தி சங்கத்தில் பொருளை உற்பத்தி செய்து அதை விபஜனை செய்யலாம். விபஜனை செய்யும்போதும் உற்பத்தியும் பரஸ்பரம்செய்து கொள்ளலாம். இவைகள் ஒன்றுக்கொன்று சம்மந்தமான



தத்துவமாகும். இம்மாதிரியான சங்கங்கள் ஐரோப்பாவில் அதிகமுண்டு. நாம் முதலில் நாணயவகையை நன்றாய் செய்யத் தெரிந்துகொண்டு ஐக்கிய பத்திய தாத்பரியத்துடன் நடந்தோமானால் மற்ற விஷயங்களும் சுலபமாயும் திறமையாயும் செய்ய சக்தி உண்டாகும். இம்மாதிரி விஷயங்களில் ஐரோப்பாவில் டென்மார்க்கு தேசத்தில் வெகு திறமையான ஐக்கியபத்திய முயற்சி செய்கிறார்கள். அவர்களைப்பார்த்து நாமும் பின்பற்றவேண்டும்.

ஆகையால் இந்த இராஜதானியிலும் மேல்சொன்ன நாணயவழியல்லாமல் மற்ற விஷயங்களும் விருத்திக்கு வரும்படியான முயற்சிகளை செய்தாலொழிய ஐக்கிய சம்மந்தமான தத்துவத்தை நாமுணர்ந்தவர்களாகமாட்டோம். பிரதி கிராமத்திலும் நாணய சங்கத்தைப்போல் உற்பத்தி சங்கமும் விபஜன சங்கமும் உண்டாகவேண்டும்.

---

## CO-OPERATION IN AGRICULTURE.

BY THE HON'BLE DIWAN BAHADUR L. D. SWAMIKANNU PILLAI, M.A., B.L., L.B.,
*Registrar of Co-operative Societies.*

## விவஸாயத்திற் கூட்டுறவு.

[சென்னை ராஜதானியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு தலைவரான (Registrar) கனம். திவான்பகதூர் L. D. ஸ்வாமிகண்ணு பிள்ளையவர்கள் ஆங்கிலேய பாஷையில் எழுதியதிலிருந்து மொழிபெயர்ப்பு.]

இராஜதானியிலுள்ள தொழில்முறைகள் ஒவ்வொன்றுக்கும் நெருங்கிய சம்மந்தமுண்டு; ஒன்றைப்பற்றிப் பேசுகையில் மற்றொன்றையும் அதனுடன் ஒட்டியே பேசவேண்டும். சப்தம் உண்டாகவேண்டுமாயின் ஒரு கையையும் இன்னொரு கையையும் சம்மந்தப்படுத்திவைப்பது எவ்வளவு அவசியமோ அதுபோல ஒரு விஷயத்தைக் குறித்துப் பேசப்புகின், அவ்விஷயத்திற்கு அனுகுணமான இதர விஷயங்களை அதோடு இணைத்துப் பேசுவது நெறியாகும், முறையும் அதுவே. ஆனதுபற்றி தலையங்கத்தில் கூட்டுறவு என்று குறித்திருக்கும் அம்சத்தை விவசாயத்தைப் பொறுத்த மட்டில் சொல்லி முடிப்போமென்றால் மனசுக்குச் சரியாகத் தோன்றவில்லை. விவசாயம் என்னும் வேளாண்மையோடுகூடின பொறுப்பேறப் பெற்ற முக்கியமான விஷயத்தைக் கருதுங்கால், அதை யணுகிய இதர விஷயங்கள் அதனுடன் எவ்விதம் இணைப்பட்டிருக்கின்றன வென்பதைச் சொல்லாமலிருக்கமுடியாது. அவ்விதர விஷயங்களில் கூட்டுறவு என்னும் அம்சமும் ஒன்று. ஒவ்வொரு தொழிலுக்கும் கூட்டுறவு இன்றியமையாததாகும் என்பது யாவருமறிந்ததேயானாலும் விவசாயத்திற் கூட்டுறவு அவசியமிருத்தல்வேண்டுமென்று உறுத்திச் சொன்னதுபோலவே, பகுத்தறிவுகொண்ட

மானிடர்க்குள்ளும் கூட்டுறவாடுவது மிகவும் பிரதான மென்பதையும், அக்கூட்டுறவினால் இகத்திலாகக்கூடிய சகல போக பாக்கியாதிகளையும் சேகரஞ்செய்துகொள்ளலாமென்பதையும் ஸவிஸ்தாரமாய்க் குறிப்பதே எமது உத்தேசமாகும்.

### மூவகைப் பலன்கள்.

பூமியை நன்றாகக் கொத்தி எருவிட்டுழுது பண்படுத்தும் வேளாண்மைக்காரனான கிருஷிகனுக்கு தன் பந்துக்கள், கிராமத்தார் அல்லது பண்ணையாட்கள் முதலினோரது கூட்டுறவு அவசியமாகும். ஜனக்கட்டில்லாததாயின் ஜலக்கட்டிராது ; ஜலகட்டிராதாயின் ஜன்மபூமியின் தேஜஸ்குன்றும் ; தேஜஸ்குன்றினால் இருள் என்னும் அந்தகாரமானது கவ்வும். அதாவது பூஸாரமற்ற நிலமானது தரிசாகப் பிரயோசனமில்லாது போய்விடுமென்க. ஆகவே ஒவ்வொருவிதத்திலும் கூட்டுறவு என்னும் அம்சத்தை நாம் கைக்கொள்ளவேண்டும். கிருஷிகனுக்கு அதை அவலம்பிப்பதனால் உற்பவிக்கக்கூடிய பலன்கள் மூன்றாகும். முதலாவது, வேண்டும்போது விவசாயிக்குப் பணம் புரளவும் நாணயம் ஏற்படவும் காரண பூதமாயிருப்பது கூட்டுறவுதான்; இரண்டாவது, லேவாதேவிக்கிடமேற்படும் சந்தர்ப்பங்களில் 'தரகிரி' யென்னும் இடையாளனுடைய பணப்பறியலுக்கு மார்க்கமில்லாது நேருக்குநேராய்ப் பணத் தகவல்களைச்செய்து விவசாயியின் லாபத்தைப் பெருக்குவிப்பதும் அக்கூட்டுறவேயாகும். மூன்றாவது, விவசாயி தனக் கிருக்கக்கூடிய சொற்ப ஐவேஜை வைத்துக்கொண்டு லாபந் தரத்தக்க பிரவர்த்திகளில் பிரவேசிக்கமுடியாமலிருக்கும் அச்சமயத்திலே, கூட்டுறவு முயற்சியின் பயனாக அவனைப் பரஸ்பரோபகாரத் தன்மைவாய்ந்த சேர்க்கைத் தொழில்களில் நாட்டமிடச் செய்து லாபத்தைப் பெருக்கித் தொழிலை விருத்திசெய்வது பெரிதும் ஸாத்தியமாகும். இம்மூன்றுவித பலன்களையும் இந்திய விவசாயியானவன் எம்மட்டில் அடைகிறானென்பதைச் சுருக்கமாகக் கூறுவோம். நிலச்சாகுபடியிற் கவனஞ்செலுத்திவரும் கிருஷிகர்களாயினர்க்கு அப்போதப்போது ரொக்கமாகப் பணம் வேண்டியிருப்பது ஸகஜம். நிலத்தை மராமத்துசெய்து செப்பனிடவோ, பருவமுணர்ந்து நிலத்தில் தானியம் விதைக்கவோ அல்லது ஸர்க்கார் கிஸ்திசெலுத்தவோ பணக் 'கசாலா' ஏற்படுவது எங்கும் ஸகஜமே. அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் விவசாயி என்ன செய்வான் பாவம்! கடன் வாங்கித் தீரவேண்டியிருக்கிறது. ஏழை விவசாயிக்குச் சரேலென்று எவர் கடனளிப்பார்கள்? அரிய வட்டிவாங்கும் துராத்மாக்களின் தயவை எதிர்பார்த்து விவசாயி நிற்பதைத் தவிர அவனுக்கு வேறுவழி கிடையாது. கடன் வாங்குவதாகவே வைத்துக்கொள்ளுவோம். அசல் தொகையையே கொடுக்க விவசாயி கஷ்டப்படுகிறான்.

(இன்னும் வரும்.)

# PART VI.

## EDUCATION.

BY THE HEADMASTER OF A HIGH SCHOOL.

### கல்வி.

"அறம்பொருள் இன்பம் வீடும்பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்
உறுங்கவ லொன்றுற்றுழியும் கைகொடுக்கும்
கல்வியி னூங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை."

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சகலமான ஜீவகோடிகளுக்குள்ளும் மனிதனே முதன்மையான பதவியிலிருப்பவன். மற்ற ஜந்துக்களுக்கும் மனிதனுக்கும் பொதுவான சில குணங்களும், செய்கைகளும் இருப்பினும், மற்ற ஜந்துக்களிடத்தில் காணப்படாத சில குணங்களும், செய்கைகளும் மனிதனிடத்தில் காணப்படுகின்றன. அவைகளுள் பகுத்தறிவு என்பது முக்கியமானது. அதாவது நன்மை இன்னது, தீமை இன்னது என்று அறியும் ஒரு சக்தி மனிதனுக்கே உரித்தானது. இந்த சக்தி எல்லா மனிதர்களுக்கும் பொதுவான ஒரு குணமாயினும் எல்லாரிடமும் ஒரே அளவாய்க் காணப்படவில்லை. 'தாய்க்கொலை சால்புடைத் தென்பாருமுளர்' இவ்வுலகில் அப்படியாகில் அந்த சக்தி மிகுதியும், குறைவும் எதனால் ஏற்படுகிறது என்று பார்ப்போம். சற்று யோஜித்துப் பார்த்தால் அதற்குக் காரணம் அவரவர்களின் அறிவின் அளவென்று புலப்படும். ஆகையால் மனிதனை மிருகங்களிடத்திலிருந்து வேறுபடுத்துவது அவனுடைய அறிவே. அவ்வறிவு குறையக்குறைய மனிதனிடம் மிருகத்தன்மை அதிகரிக்கிறது. அவ்வறிவு சூன்யமாகும்பொழுது அவன் மிருகமேயாய்விடுகிறான். அப்பேர்ப்பட்ட ஸ்திதியை யாராவது விரும்புவார்களா? இதற்கு ஒரே பதில்தான் உண்டு. ஒருவரும் விரும்பார். அப்படியாயின், அவ்வறிவு குறையாமல் மேன்மேலும் விருத்தியாகும்படி செய்யவேண்டுவது யாவருடைய கடமையாய் முடிகிறது. அவ்வறிவை விருத்திசெய்வது கல்வி என்பது எல்லாருமறிந்த விஷயம்.

மனிதர்களுக்குக் கல்வி முக்கியமென்பதை உணராத தேசமில்லை. சகலமான அபிவிர்த்திக்கும் மூலகாரணம் கல்வியே யென்று அதற்காக வேண்டிய முயற்சி எடுக்காத ஜாதியாரில் முன்னுக்கு வந்தவருமில்லை. கல்வியை அபிவிர்த்திசெய்ய முக்கிய ஸாதனங்களைக் கண்டுபிடிப்பதிலேயே தங்களுடைய வாழ்நாட்களைச் சிலவழித்தவர் பலர்.

இப்பொழுது நாகரிகமடைந்த பல தேசங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கில் கல்வியில் மிகவும் கீழான நிலைமையிலிருப்பது இவ்விந்துதேசமே. அதற்குக் காரணம் யாது? ஒருவேளை இவ்விந்தியாவின் நிலைமை எப்பொழுதும் இப்பொழுது இருப்பதுபோலவேதானோ வென்று நினைக்கலாம்.

இப்பொழுது கல்வியில் தேர்ச்சிபெற்ற அநேக தேசங்கள் உடை உடுத்தத்தெரியாமலும், நன்றாய்ப் பேசத்தெரியாமலும் எழுத்தென்பதே இன்னதென்று அறியாமலுமிருந்த காலத்தில் இராமாயணம், பாரதம் முதலான காவியங்களும், சாகுந்தலம் முதலான நாடகங்களும், பாணினிமுதலான இலக்கணங்களும் எழுதியவர் வசித்த இந்தியா இது. மற்ற தேசத்து மனிதர் மரத்தழைகளையும், மிருகத்தின் பதனிடாத தோல்களையும் உடுத்தித்திரிந்த நாட்களில் மஸ்லின்களும், சல்லாக்களும் அணிந்து வசித்தவர் இவ்விந்தியர். ஸ்ரீ இராமன், கிருஷ்ணன் முதலான அவதார புருஷர்களும், ஜனகன் முதலான முடிமன்னவர்களும் அநேக வருஷகாலங்கள் குருவையடைந்து அவருக்குப் பணிவிடைகள் செய்து கல்விகற்றது இவ்விந்தியாவில். சகல தருமத்திலும் வித்தியாதருமமே சிறந்ததென்று கைக்கொண்ட புண்ணிய பூமி இது. 'ஓதாம லொருநாளு மிருக்கவேண்டாம்' என்ற முதுமொழி வழங்குவது இவ்விந்தியாவில். சகல ஜனங்களுக்கும் இனாமாகக் கல்வி புகட்டவேண்டிய ஏற்பாடுகள் செய்தவர் அசோகர் என்று சரித்திரங்கள் சொல்லுகின்றன. சுருக்கிச்சொல்லுமிடத்து இவ்விந்துதேசம் மற்றெல்லா தேசங்களிலும் கல்வியில் முதன்மையடைந்திருந்தது. இது முற்கால ஸ்திதியாயின் தற்கால ஸ்திதியைச் சற்று பார்ப்போம். நூற்றுக்கு 80 மனிதர்களுக்குமேல் எழுதப்படிக்கத் தெரியாத தேசம் நமது இந்தியா. கல்வியின் அருமை அறியாத தேசமாய்விட்டது. திருவள்ளுவர், ஔவை முதலியவர்கள் வசித்த இப்பரதகண்டம் இந்த அபாயகரமான வியாதியால் வருந்தாமல் ஔஷதம் கொடுத்துத் தீர்ப்பது எல்லா இந்தியர்களுடைய முக்கிய கடமையென்று உணரவேண்டும்.

மற்ற தேசங்களில் குருடர், ஊமை, செவிடர் முதலான அங்கஹீனர்களுக்குக்கூட கல்விகற்பிக்க செய்யும் முயற்சிகள் நாளுக்குநாள் அபிவிர்த்தியாகின்றன. நாம் எல்லா அங்கங்களும் நிறைந்த நமது குழந்தைகளுக்குக் கூட கல்விபுகட்ட யாதொருமுயற்சியுமில்லாமலிருப்பது நியாயமன்று. மேல்நாட்டில் ஒருவர் ஒரு நாய்க்கு சிலவார்த்தைகளை எழுதவும், சில வஸ்துக்களைப் பேர்சொன்னவுடனே கொண்டுவரவும் கற்பித்தார் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆகவே இன்னும் சிறிதுகாலத்தில் ஒருவேளை மேல்நாட்டு சிலநாய்களும், குதிரைகளும் நம்முடைய அருமைப்புதல்வர்களை விடப் படித்தவைகளாக ஆய்விடும்போலிருக்கிறது.

ஒரு காலத்தில் ஓங்கிவளர்ந்து எங்கும் நிறைந்திருந்த கல்வி இப்படி க்ஷீணமடைந்ததற்கு சிலகாரணங்கள் வெளிப்படையாகப் புலப்படுகின்றன,



அதாவது (1) இத்தேசத்தின்வறுமை (2) ஜனங்கள் கல்வியின்மகிமையை அறியாமை (3) நாம் வெகுகாலத்திற்கு முன்னமே கைவிட்டிருக்கவேண்டிய சில பழைய வழக்கங்கள்; இன்னும் சிலகாரணங்களும் உண்டு.

முதலில் இந்தியாவின் வறுமை. இங்கிலாந்து முதலிய தேசங்களில் இனாமாகப் படிப்பிக்கும்படி பள்ளிக்கூடங்களை ஏற்பாடு செய்து, பிறகு எல்லாக்குழந்தைகளும் கட்டாயமாய் பள்ளிக்கூடம்போகவேண்டுமென்ற நிபந்தனைகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். சர்க்காரிலிருந்து ஏராளமான பணம் செலவழிக்கின்றனர். மேலும் அநேகம் பிரபுக்கள் ஏராளமான பணவுதவிசெய்து அநேகம் பாடசாலைகள் ஏற்படுத்தி கல்விகற்க சகலவிதமான சகாயங்களும் செய்கிறார்கள். இந்தியாவிலோ நமது காருண்ய கவர்ன்மெண்டார்வேண்டுமளவு உதவிசெய்ய மனமுடையவர்களாயிருந்தாலும், கல்விவிஷயத்தில் அவர்களிஷ்டப்படி சிலவுசெய்ய பணமில்லையே யென்ற கவலை மிகவும் உடைத்தா யிருக்கிறார்கள். ஒரு குடும்பத்தைப் பாதுகாக்கிற ஒருவன் தன் இரண்டு மூன்று குழந்தைகளுக்கு சரியானபடி கல்விபுகட்டமுடியாமல் அக்குழந்தைகளை, ஒரு பெரியவர் சொன்னபடி, இரண்டு எருமைமாடுகளோடு மூன்றுவதுமாடாக ஆக்கிவிடுகிறானே. அப்படியிருக்க, ஒரு தேசத்தை ஸம்ரக்ஷணைசெய்வது இலேசா? எத்தனைவித சிலவுகள் நேரிடுகின்றன? அவைகளுக்குப் போதுமான பணம்வேண்டும். ஆகையால் கவர்ன்மெண்டாரை குற்றஞ் சொல்லுவது பெருங்குற்றம். மற்ற தேசங்களிலிருப்பதுபோல பெரியபிரபுக்கள் உதவிசெய்து கல்வியை விருத்திசெய்யலாம். அத்தேசங்களி லிருப்பதுபோல அதிகமான பிரபுக்களுமிங்கில்லை. இருப்பவர்களுக்கும் வேறு அநேக சிலவுகள் உண்டு. பிரபுக்கள் வீட்டுக் கலியாணங்களில் நடக்கும் தமாஷாக்களுக்கே ஆயிரக்கணக்காய்ப் பணம் வேண்டுமே! அவர்கள் எப்படி கல்வி அபிவிர்த்திக்கு பணஉதவிசெய்ய முடியும்?.

ஒரு கிராமத்தில் முக்கால்பங்கு ஜனங்களில் குழந்தைகள், சந்தோஷமாய் ஆடிப்பாடித்திரியும் பாலபருவத்திலேயே, 5-வயது முடியுமுன்னமே பசியென்ற பேயால் பீடிக்கப்பட்டு அந்தவியாதியை நிவர்த்திபண்ண உழைக்கவேண்டியிருக்கிறதே! இந்த ஸ்திதியில் பள்ளிக்கூடமேது, புஸ்தகமேது, படிப்பேது, பசிவந்தால் எல்லாம் பறந்துபோகாதா? இவ்விதமாக லக்ஷக்கணக்கான குழந்தைகள் வளருகின்றன. கல்வி இப்படி அலங்கோலமான ஸ்திதியிலிருப்பதைப் பார்க்க யாருக்குத்தான் மனம் சகிக்கும். கருணையே உருவெடுத்ததென்று சொல்லும்படியான நமது சக்கரவர்த்தி இந்த கங்கை, காவேரிமுதலிய புண்ணியநதிகளால் பரிசுத்தமாக்கப்பட்ட இப்பரதகண்டத்தை விடாமல் பீடிக்கின்ற கல்வியின்மை யென்னுமிருள் நீங்கும்படியாய் தமது திருவாக்கால் வருஷம் 50 லக்ஷம் ரூபாய் கவர்ன்மெண்டார் சிலவழிக்கவேண்டுமென்று உத்திரவுசெய்த நாள் நமக்கு ஒரு பெரிய திருநா

ளல்லவா? நாகரீகமடைந்த தேசங்களோடு ஸமநிலைமைக்கு வருவதற்கு கல்வியே முக்கியமென்று அப்பிரபு வற்புறுத்திக் கூறினர். 50 லக்ஷமென்பது இந்தியாபோன்ற ஒரு தேசத்தை கல்வியில் தேற்சிபெறச் செய்வதற்கு போதாத ஒரு தொகைதான், என்ன செய்யலாம். பணமிருந்தாலல்லவோ பத்தும் செய்யலாம்.

பிறகு இரண்டாவதான காரணம், கல்வியின் அருமை அறியாமை. இது சொல்லாமலே புலப்படும். ஒவ்வொரு குடும்பத்திலும் செலவாகிற பணத்தில் கல்வி விஷயமாய் செலவாகிறது எவ்வளவு குறைந்த பாகமாயிருக்கிறதென்று நமக்கெல்லாம் நன்றாய்த்தெரியும். பிள்ளைகள் பள்ளிக்கூடம் விட்டு வந்தவுடன், என்ன படித்தாய் பள்ளிக்கூடத்தில் என்ன நடந்தது என்று தினம் கேட்கின்ற பெற்றோர்கள் எத்தனைபேர்? நூற்றுக்கு ஒருவராவது உண்டா! ஆனால் நாம் சிற்சில வேளைகளில் சில மகான்கள் வித்தியா அபிவிர்த்திக்காக ஏராளமாக நன்கொடை அளிப்பதைக் கேட்க. மிகவும் ஆனந்தமுண்டாகிறது.

அப்பேர்ப்பட்ட மகான்களில் சிலரை எடுத்துக் கூறுவோம். தாய்ப்பாஷையாம் ஸம்ஸ்கிருதத்தை வேரூன்றச் செய்யப் பிரயத்தனித்து அருந்தொகையை யர்ப்பிதஞ்செய்த காலஞ்சென்ற ஸ்ரீமான் வி. கிருஷ்ணசாமி ஐயர், என்றுமழியாப் புகழெடுத்து உஜ்ஜீவித்திருக்கும் பச்சையப்ப முதலியார், கரூர் முனிசிபல் சேர்மன் ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியார், திருக்காட்டுப்பள்ளி ஹைஸ்கூல் ஸ்தாபகரான ஸர். P. S. சிவஸ்வாமி ஐயர், தர்மிஷ்டர்களான ராவ் ஸாஹிப் கலவலா கண்ணன் செட்டியார், ராவ் ஸாஹிப் ராமானுஜம் செட்டியார், ராவ்பகதூர் அண்ணாமலை செட்டியார் இவர்களைப் போன்ற மற்றும் தர்மிஷ்டர்கள் இருக்கிறார்கள்.

இது நிற்க, இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள முக்கியமான வியாபார ஸ்தலங்களில் ஒன்றாகிய விருதுபட்டியென்னுமிடத்தில் நாடார் வியாபாரிகளால் ஏற்படுத்தப்பட்டு நடந்துவரும் "க்ஷத்திரிய வித்தியாசாலா" என்னும் ஹைஸ்கூலைப்பற்றியும் சிலவார்த்தைகள் கூறவேண்டியது அவசியம். மேற்படி நாடார்கள் எல்லோரும் வியாபாரத்தில் தேர்ந்தவர்களேயல்லது அவர்களில் ஒருவராவது ஆங்கிலேயபாஷை படித்தவர்களல்ல. அப்படியிருந்தும் மேற்படி பாஷையைத்தங்கள் குழந்தைகளாவது கற்கவேண்டுமென்ற நோக்கத்துடன் 1890-ம் ஹூவாக்கில் ஒரு ஆங்கிலேய (Elementary) பாடசாலையை ஏற்படுத்தினார்கள். அப்பால் அவர்களுடையவும், அவர்களுடைய வித்தியாசாலையில் உழைத்து அதை முன்னுக்குக்கொண்டுவருவதற்கென்றே உருவெடுத்து வந்ததுபோல் அமைந்துள்ள மிஸ்டர் என். எஸ். மாணிக்கவாசக நாடாருடையவும் ஊக்கத்தினாலும், விடாமுயற்சியினாலும் மேற்படி வித்தியாசாலை நாளுக்கு நாள் பிரபலப்பட்டுவந்தது. (இன்னும் வரும்.)

# PART VII.

## NEWS AND NOTES.

## வர்த்தமாசாரக் குறிப்புகள்.

### THE HON'BLE DEWAN BAHADUR P. RAJAGOPALA ACHARIAR, C I.E.)

### ஆனரபிள் திவான் பகதூர் பெ. ராஜகோபாலாச்சாரியார், C.I.E.

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே,
நலமிக்க நல்லார்சொற் கேட்பதுவும்நன்றே,
நல்லார் குணங்களுரைப்பதுவும் நன்றே,
நல்லாரோ டிணங்கியிருப்பதுவும் நன்று.

இம் மெய்யுரையைக் கைப்பற்றிய நாம் இப்பத்திரிகையின் முதல் ஸஞ்சிகையில் அந்நல்லார் ஒருவரைக்குறித்து உரைப்பதையே ஒரு விஷயமாக எடுத்துக்கொண்டோம். கண்ணாடியை யெதிரில் நிறுத்தி ஒருவன் தனது பிரதி பிம்பத்தைப்பார்க்கவிரும்பினால், நிஷ்களங்கமாக அக்கண்ணாடியிருக்குமேயாகில், பார்க்கவிரும்புவோனது பிரதிபிம்பம் எவ்வளவு ஸ்பஷ்டமாகத் தெரியுமோ அதுபோல நல்லவர் ஒருவரது நடத்தையையும் ஜீவியகால விசேஷத்தையும் அன்னார்வகிக்கும் பொறுப்பினையும், மற்றும் அவரது குணாதிசயங்களையும் எடுத்துரைப்பது காரணமாக சுற்றுப்புறத்துள்ளோரது குணப்பான்மையும் படியுமென்ற நிச்சயத்துடன் தகுந்த யோக்கியதையும் அந்தஸ்தும் புத்தியும் யுக்தியும் வாய்ந்த நல்லார் ஒருவரையே உதாரணமாயெடுத்துக் காட்டவிரும்புகிறோம். அந்நல்லார் வகுப்பினைச் சேர்ந்தவராவர் ஸ்ரீமான் கனம் திவான்பகதூர் பெருங்காவூர் - இராஜகோபாலாசாரியரவர்களும். கடந்த பிப்ரவரி மாதம் 26-தேதி மதிராஸ் எக்ஸிகியூடிவ் கௌன்ஸிலில் காலியாக்கப்பட்ட மெம்பர் ஸ்த்தானத்தில் கனம் பெ. ராஜகோபாலாச்சாரியார் அமரும்படி நம்மாக்ஷிமை பொருந்திய சக்ரவர்த்தியாரவர்கள் திருவுளம் புரிந்தாரென்ற செய்தியைக்கேட்டு நாம் மட்டிற்கடங்கா மகிழ்ச்சியடைந்தோம்.

'நல்லார் ஒருவர்உளரேல்
அவர்பொருட் டெல்லார்க்கும்
பெய்யும் மழை.'

1862-ம் வருஷத்தில் ஸ்ரீமான் ராஜகோபாலா சாரியரவர்கள் சென்னை ராஜதானியைச்சேர்ந்த செங்கற்பட்டுஜில்லாவிலுள்ள பெருங்காவூர் என்னுங்கிராமத்தில் ஜனனமானார். அக்காலத்தில் அவரது அருமைத் தந்தை டிபுடிகலெக்டர் உத்தியோகம் வகித்திருந்தார். ஆரம்பக் கல்வியை உள்ளூரிலேயே பயின்று பின்னர்ச் சூடிகையாகச் சரசரவென்று உயர்தரக்கல்வியை யெட்டும் பாக்கியம்பெற்றார். 'விளையும் பயிர் முளையிலே தெரியுமல்லவா?' சிறுவயசிலிருந்தே அவருக்குக் கல்விபுகட்டிய உபாத்தியாயர்களும் மற்றோரும் 'இச்சிறுவருடைய முகவிலாஸத்தில் ஸரஸ்வதியின் கடாக்ஷமிருப்பதுபோல் விளங்குகிறது. 'ஓராளொருகாலத்தில் அக்கடாக்ஷம் பிரகாசம் பூண்டு அண்டினோரை யாதரிக்கும் பான்மைக் கொண்டிருக்கும்' என்று அடிக்கடி சொல்லுவதுண்டாம. அவ்வுத்தமகுலப்ரஸூதர்களாயினர் மொழுந்த தற்கென்ன, இப்போது நம் ஆசசாரியாரவர்கள் வகித்திருக்கும் மகோன்னத பதவிக்கென்ன பாருங்கள்! பெரியோர்களின வார்த்தை ஒருபோதும் பொய்க்கமாட்டாதென்பதற்கு இதுவே போதிய நிதர்சனம். உயர்தரக் கல்வியினிமித்தம் சென்னையிலுள்ள பிரஸிடென்ஸி காலேஜில்படித்து தகுந்த கல்வி நலம் வாய்ந்த விற்பன்னர்களின ஆசீர்வாதத்தையும் மாதிரிகளையும் ஆதாரமாகவைத்து ஆச்சாரியர் M.A., B.L., பரீக்ஷைகளில் தேறினார்.

#### உத்தியோகம்.

அக்காலத்தில் ஐரோப்பியர்களையொப்ப ஸிவில் ஸர்வீஸ் உத்தியோகங்களை இந்தியர்களும் ஏன் வகிக்கலாகாதென்ற பிரஸ்தாபம் அடிக்கடி விவாதிக்கப்பட்டு வந்தது. அதையொட்டி 'ஸ்டாடேரி ஸிவில்ஸர்வீஸ்'

'Statutory Civil Service' என்னும் ஒருத்தியோக லாயக்காக்கும் பகுதியொன்று ஏற்படுத்தப்படவும், அதைமுன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீக்ஷையில் நமது ஆச்சாரியரவர்கள் முதன்மையாகத் தேறினர். 1886-ம் வருஷத்தில், அதாவது அவரது 24-ம் வயதில், அவருக்கு நாமக்கல் டிபுடி கலெக்டர் வேலை கொடுக்கப்பட்டது. அச்சமயம் அங்கு கலகாஸ்பதமான கொள்கையோடு கூடின தூர்த்தர்கள் சிலர் ஒன்றுசேர்ந்து புறட்சி யெழுப்ப, ஆச்சாரியாரவர்கள் வயதிற் சிறியரேயாயினும் மனோதைரியத்தில் மிகுந்திருந்தமைபற்றி வெகு சமத்காரமாகத் தாம் கற்றகல்வியின் பிரயோஜனத்தை யங்குபரிமளிக்கச் செய்தார். எப்படியெனின், எவர்க்குந் துன்பமில்லாமலும், தோஷாரோபணஞ் சுமத்தாமலும் கலகத்தைப்போக்கித் தூர்த்தர்களின் கொட்டத்தையடக்கிவிடவும், அதைக்கண்ட அந்த ஜில்லா கலெக்டர் விசேஷதிருப்தியடைந்து அதிகாரிகளுக்கு ஆச்சாரியரின் திறமையை யெடுத்துக்காட்டிப் புகழ்ந்தார். அதன் பலனாக 1888-ம் வருஷத்தில் ஆச்சாரியருக்கு அஸிஸ்டெண்டு கலெக்டர் உத்தியோகம் கொடுக்கப்பட்டது. அதன்மேல் படிப்படியாகக் கலெக்டர் உத்தியோகமும் வகிக்கலானார். ஒவ்வோர் ஜில்லாவிற்கும் சென்று கூடியவரையில் ஆங்காங்குள்ள ஜனங்களின் வழக்கப்பழக்கங்களை நன்றாக நேரிலும் அனுபவத்திலும் தெரிந்துகொண்ட அவரைக் கவர்ன்மெண்டார் தகுந்த நிருவாககர்த்தரென்றுமதித்து கொச்சி ராஜாவின் வேண்டுகோளுக்கிணங்கி அச்சமஸ்தான திவானாக வேலைபார்க்கும்படி பொறுப்புக் கட்டினார்கள். அவ்வுத்தியோகத்தில் இரண்டுவருஷகாலம் தளராவூக்கத்துடனும் விசேஷதிறமைக்கொண்டும் நிருவாகத்தை நடத்திப் பலவிதமான சீர்திருத்தங்களைச் சமஸ்தானக் குடிகள் வாழ்த்தும்வண்ணம் செய்துமுடித்து, ஸமஸ்தானத்தின் பொருளாதாரத்திற்கு வேண்டிய மார்க்கங்களைச் செய்து கூடியவரையில் அச்சமஸ்தானவாசிகள் தம்

## கலிதீர்க்கவந்த மகானுபாவர்

எனக் கொண்டாடும்படி ஆச்சாரியார் ஆறு வருஷகாலமிருந்து பின்னர்த்திரும்பினர். சிறிதுகாலம் சேலம்ஜில்லா ஜட்ஜாக அமர்த்தப்பட்டுப் பிறகு கர்நூல் ஜில்லா கலெக்டராக வேலைபார்த்தார். அதற்குப் பிறகு புதிதாக நிருமாணிக்கப்பட்ட (Co-operative Credit Society) பரஸ்பரோபகாரக் கூட்டுநிதிச் சங்கங்களென்னும் ஒரு துறையில் தகுந்த சமர்த்தர் ஒருவரை யமர்த்தி வேலை செய்யவேண்டுமென்னும் ஆவக்தி கவர்ன்மெண்டார் மனதில் குடிகொள்ள, நமது ஆச்சாரியாரவர்களையே அவ்வேலைக்குரிய சமர்த்தர் என்று கருதி பரஸ்பரோபகாரக் கூட்டுநிதிச் சங்கங்களின் ரெஜிஸ்டிராராக வேலைபார்க்கும் பொறுப்பைக் கவர்ன்மெண்டார் ஆச்சாரியரிடம் ஒப்புவித்தார்கள். அதன் விஷயமாக ஓய்ச்சலொழிவின்றி தேசஸேவை, ராஜஸேவை ஆகிய இரண்டுக்கும் ஆஸ்தானமான கைங்கர்யமிதுவேயென மனமகிழ்ச்சியும் குதூஹலமும் அடைந்தவராய் ஊரூராகச் சுற்றுப்பிரயாணஞ் செல்லுவதும், மூலைமுடுக்குகளில் பசியால் வருந்திக்கிடக்கும் ஏழைகளை யழைத்து ஸமூகத்துடன் அவர்களுடைய க்ஷேமலாபங்களை விசாரிப்பதும், ஒருவருக்கொருவர் உபகாரம் செய்துகொள்வதனால் உண்டாகும் கூட்டுறவைக்குறித்துப பிரசங்கிப்பதும், ஏழைகளை யழைத்து இன்னின்னவிதமாக இன்னின்ன காரியங்களைச் செய்யுங்களென்று புத்திமதி சொல்லுவதுமாக 3 வருஷகாலங் கடத்தியபோது குக்கிராமங்களிலுள்ள ஜனங்கள் (பாமரர் உள்பட பலரும்) 'எம் கலிதீர்க்கவந்த மகானுபாவர்' என்று ஆச்சாரியரைக் குறிப்பிட்டு வாய்க்கு வாய் சொல்லிக்கொண்டதை நாம் நேரிற் கேட்டிருக்கிறோம். ஜனங்கள் முன்னேற்றமடையும மார்க்கத்தை வெருன்றியஆச்சாரியாரது முயற்சிகள் இப்போது பெரிதும் பலிதமாயிருக்கின்றன வென்பதை மறுப்பாருமுளரோ?



## திருவாங்கூர் திவான்.

1907-ம் வருஷத்தில், ஆச்சாரியாருக்கு நிருவாகத்திலுள்ள சமர்த்தை நன்குணர்ந்த கவர்ன்மெண்டார், திருவாங்கூர் ஸமஸ்தான திவானாகப் போகும்படி கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவரும் அவ்வுத்தியோகத்தை வகித்துச் சீரும் சிறப்புமாக நடத்திவந்தார்; ஸமஸ்தானத்தின் பொருளாதார நிலையை விருத்திபண்ணினர்: கல்வி பெருகும் மார்க்கத்தை முன்னிட்டார். நாகரிகம் செவ்வனே பரவவும் தர்மத்திற்கு லோபமின்றிக் காரியங்கள் நடைபெறவும் விசேஷ பிரயத்தனங்கள் செய்துவந்த மகனீய வேலையை மதித்த கவர்ன்மெண்டார், நம் ஆச்சாரியாருக்குத் 'திவான்பகதூர்' பட்டமளித்துக் கௌரவப்படுத்தினார்கள். அதற்கடுத்த வருஷத்தில் C. I. E. பட்டமும் அவருக்கு அளிக்கப்பட்டது. பிறகு 1913-ம் வருஷத்தில் கவர்ன்மெண்ட் செக்ரிடேரியேட்டில் பொறுப்பேறப்பெற்ற ஒரிலாகாக் காரியதரிசியாக அமர்த்தப்படவும், அப்போது ஒவ்வொரு விஷயத்திலும் இவருடைய ஆழ்ந்த யோசனையும் தீர்ந்த கருத்தும் புலமைமிகுந்த வேலையும் நம் மேன்மை தங்கிய கவர்னர் பெருமானுக்குப் புலப்பட, அச்சமயம் மதராஸ் கௌன்ஸிலிலும் மெம்பர் ஸ்தானம் காலியாக, அதற்கு ஆச்சாரியாரே தகுதியும் சிரேஷ்டமுமானவர் என்று மதித்துச் சிபார்சுசெய்ய, சக்ரவர்த்தியாரும் அச்சிபார்சை ஆதரித்து ஆச்சாரியாரை நிருவாகப் பொறுப்பேறிய அந்த ஸ்தானத்திலிருக்கத் திருவுளமிரங்கியது ஆச்சாரியாரது பாக்கியமென்று கருதினாலுங்கூட, நம்மவரது நல்லதிர்ஷ்டமென்றும் யாம் சொல்லத் தவறமாட்டோம். அவ்வுயர்பதவி பீடமானது ஆச்சாரியர் தம் ஜன்மதேசத்திற்கும் தம் அரசருக்கும், க்ஷேமலாபங்களைத் தரக்கூடிய மெய்யன்புமிகுந்த காரியங்களைச்செய்ய இடந்தரும் தர்மஸ்தானமானதுபற்றி, அதில் ஏறிய ஆச்சாரியாருக்குத் தருமதேவதை பக்கத் துணையாய் நின்று சிறப்பிக்கச் செய்ய வேண்டுமென்று யாம் மனப்பூர்வமாக வேண்டுகின்றனம். சுபம்.

---

## TWO CHARITABLE CITIZENS.

MESSRS. RAO SAHIB CALAVALA CUNNAN CHETTIAR,

AND

RAO SAHIB C. RAMANUJAM CHETTIAR.

### தர்மிஷ்டர்களான பிரஜைகளிருவர்.

'தேஹி' என்றோர்க்கு 'நாஸ்தி' யென்று சொல்ல மனந்துணியாத மகனீயர்களை ஸ்மரிப்பதும், அவர்களது குணவிசேஷங்களை யுரைப்பதும், உரைக்கக்கேட்பதும், அவர்களது காரியங்களைக் கண்ணுறுவதும், எழுதுவதும் பிரசங்கிப்பதும் ஆஹா இவைகள் என்ன சந்தோஷத்தைத் தருகின்றன பாருங்கள். இம்மகனீயர்களுள் உலகிற் பலர் இருக்கின்றார்கள்; நம் சென்னையைப் பொறுத்தமட்டில் இப்போது பேசுவோம். 'தருமம் தலைகார்க்கும்' 'அஹிம்ஸா பரமோ தர்ம:' என்னும் மூதுரைகளை மனதில்தாங்கித் தமக்குக்கிட்டும் ஒவ்வோர் சமயத்திலும் இகத்திலுள்ள பொதுப் பிரீதியையும் கேவலம் தற்பெருமையையும் கருதாமல் என்று மழியாப் புகழிருக்கவேண்டுமென்னும் ஆத்மதிருப்தியையே நாடும் உத்தமர்களைச் சேர்ந்தவராவர் ராவ்ஸாஹிப் கலவலாகண்ணன் செட்டியாரும், ராவ்ஸாஹிப் கலவலா ராமானுஜம் செட்டியாரும். இவ்

விரு பிரதாக்களும் நகமும் சதையும்போல் கலந்து பொதுவானமுயற்சிகள் எல்லாவற்றிற்கும் கூடியவரையிற் பேருதவிசெய்து வருகிறார்கள். ஒருபுறம்ஸம்ஸ்கிருத காலேஜ், ஒருபுறம்தர்ம ஆயுர்வேத ஔஷதசாலை, மற்றோர்புறம்தர்மசத்திரம், இன்னோர்புறம் தரும ஆசுபத்திரி, பின்னோர்புறம் யதேஷ்டமான நன்கொடைகள், மற்றுமெத்தனையோ கல்விக்கூடங்கள், சிசுக்களுக்குப் பால் அளிக்கும் நிலயங்கள், ஆகிய இவையனைத்தும் இவ்விருபிராதாக்களால் நடத்தப்படுகின்றனவென்றால் இவர்களது புகழ் புவியெங்கும் பிரகாசித்தற்குத் தடையுமுண்டோ? நரநாராயணர்களாக அவதரித்த கிருஷ்ணார்ச்சுனன் என்ன, இணைபிரியாப் பிராதாக்களான தசரத சக்ரவர்த்தியின் திருக்குமாரர்களான ராமலக்ஷ்மணனென்ன,—அவர்களைக்கண்டு அக்காலத்திருந்தோர் அகமகிழ்ந்திருந்ததையொப்ப இக்காலத்தில் நமது நன்னகர் மத்தியில் தெய்வீகப் பெயர்களை வகித்த இவ்விரு சகோதரர்களது புகழ் கல்மேலெழுத்தைப்போல் சிறந்தோங்குவதைப் பார்க்க அப்பகவானின் அருள் அப்பிராதாக்கள் மீது ஸம்பூர்ணமாயிருக்கிறது என்பதற்குத் தடையில்லை. இத்தகைய புதல்வசிகாமணிகளைப் பெற்றெடுத்த ஜன்மபூமியாம் பாரதமாதாவின் பெருமையே பெருமை! 'கொடையில் கர்ணன்' என்று பாண்டவர் காலத்தில் வழங்கியது பொய்யோ மெய்யோவென்று யாம் கருதிவந்தோமெனினும் இக்கலியுகத்தில் லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு தேகபலாட்டியத்தை நிதர்சிக்கும் ப்ரொபெஸர் ராமமூர்த்தி நாயுடுவுக்கு 'கலியுக வீமன்,' 'அபிநவ பீமஸேனன்' என்று புனைப்பெயரிட்டழைப்பதையொப்ப ஸ்ரீமான்களான கலவலா கண்ணன் செட்டியார், கலவலா ராமானுஜம் செட்டியார் ஆகிய இச்சகோதரர் இருவரையும் 'கலியுகக் கர்ணர்' என்று செல்வப்பெயர் சூட்டி அழைப்பதும் பொருந்துமென்று நுங்கம் பாக்கத்தில் டாக்டர் ஸர். S. சுப்பிரமணிய அய்யர் சென்ற பிப்ரவரிமீ 25உ மொழிந்த அபிப்பிராயம் அணுவளவேனும் பிசகல்ல; அவ்வபிப்பிராயம் அச்சகோதரர்களுக்கு எவ்விதத்தும் தகும்.

---

## ASLEEP FOR 29 MONTHS.
## 29 மாதமாக நித்திரை.

---

மஹா உக்கிரமாக நடந்துகொண்டிருக்கும் ஐரோப்பிய யுத்தத்தில்தான் என்னென்னவோ நவீனங்கள் வந்துகொண்டிருக்கின்றன. 29-மாதங்களாக ஒருவனுக்கு நித்திரை தெளியவில்லையென்றால் அதை உண்மையென்று மதிப்பதா அல்லது பொய்யென்று கருதுவதா? எனினும் அது உண்மையென்றே சொல்லப்படுகிறது. ஜாக்வெஸ் ரெய்மான் என்கிற போர்வீரன் யுத்தவாரம்பத்தில் நடந்தேறிய மார்ன் சண்டையில் குண்டடிபட்டுக் காயமுண்டான். அப்போது முதல் அவன் ஒரே நிலையில்தான் படுத்திருக்கிறான்; மூச்சைப் பொறுத்தமட்டில் உச்வாஸ நிச்வாஸங்கள் இருக்கின்றனவேயன்றிப் பிரஜ்ஞை கிடையாது. எவ்வெவ்விதமாகவோ கவனித்தும் ஒன்றும் பலன்படவில்லை. இம்மாதிரியாக 29 மாதங்களாயின. அவனைப் பெருகுவே ஆசுபத்திரிக்கு அதிகாரிகள் அனுப்பியிருக்கிறார்கள். உறக்கங்கொண்டிருந்த இவ்விருபத்தொன்பது மாதங்களில் அவன் ஆகாரமுண்டானு இல்லையா, இயற்கைக் கடன்களைச் செலுத்தினானு இல்லையா வென்பனவாகிய விஷயங்களைக் குறித்து யாதொரு தகவலுங் கிடைக்கவில்லையென்றாலும் ஆகாரமுண்ணாது உயிர் ஜீவித்திருக்க முடியாதல்லவா? ஆகாரம் உட்கொண்டு தானிருக்கவேண்டும்; இயற்கைக் கடன்களைச் செலுத்தித்தானிருக்கவேண்டும். சமீபத்தில் ஆசுபத்திரியிலே அவனுக்கு ஏதோ நீராகாரம் கொடுத்தபிறகு படுக்கையில் இப்புறம் அப்புறம் திரும்பும் உணர்ச்சி பிரஜ்ஞை ஏற்பட்டிருக்கிறதாகப் பாரிஸ் பத்திரிகையொன்று கூறுகிறது. ஈதென்ன விந்தை!

# PART VIII.

## MORAL STORIES.

## நீதிக் கதைகள்.

---

### த்ருவன்.

ஸ்வாயம்புவ மநுவின் புதல்வர்களில் ஒருவரான உத்தாணபாதன் என்னும் அரசனுக்கு ஸுநீதி, ஸுருசி என்னும் இரண்டு மனைவிகளிருந்தார்கள். மூத்தவளான ஸுநீதிக்கு மண்டலத்தவர் மகனீயமாய்க் கொண்டாடும் த்ருவன் புத்திரனாக உதிக்க, இளையவளான ஸுருசிக்கு உத்தமன் என்னும் பெயருள்ள ஒரு புத்திரன் பிறந்தான். இளையவள் மீதிருந்த மோகத்தால் அரசன் மூத்தவளான ஸுநீதியை அலட்சியம்செய்து அரண்மனையில் கூட வைக்காமல் வெளிப்புறத்தில் தனியே விடுதியமர்த்தி வைத்திருந்தான். ஸுநீதி பட்டமகிஷியாகச் சகல சுகபோக பாக்கியாதிகளுடன் அரண்மனையில் வசிக்கும் நற்பாக்கியம் பெறாமற்போனாலும், தனதன்பின் மிகுதியில் பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்த புத்திரசிகாமணியான த்ருவனையே தனது பஞ்சபூதமெனப் பாவித்துக் காலங்கடத்தி வந்தாள். த்ருவனுக்கு 5-வயது; பால்மணம் மாறாத பாலபருவம். இங்ஙனமிருக்கையில் ஒருநாள் த்ருவன் தனது பிதாவைப் பார்த்துவரவேண்டுமென்று அன்னையிடந் தெரிவிக்கவும், மதியாதவிடத்திற் செல்லுவது தகுதியல்லவென்று அவள் தடுத்துச்சொல்ல, த்ருவன் தந்தையிடம் போவதில் என்ன மரியாதைப் பிசகேற்படப்போகிறது, போய்த்தான் வருவேன் என்று பிடிவாதமாகச் சொல்லிப் புறப்பட்டுவிட்டான். அச்சமயம் அரசனோ தந்தை தனதிளைய குமாரனை உத்தமனை ஒரு துடையின்மீது உட்காரவைத்துக்கொண்டும் இளையவளான ஸுருசி சமீபத்தில் நிற்கவும் நவரத்னகசிதமான ஸிம்மாஸனத்தில் அமர்ந்திருந்தான். சரசரவென்று தந்தையைக்காணும் பேரவாவுடன் ஓடோடியும் வந்த த்ருவன் தன் தம்பி உத்தமனைப்போல தானும் ராஜகுமாரன் தானே யென்று மதித்து சிம்மாஸனப் படிக்கட்டுகளிலேறித் தன் தந்தையென்ற பாத்தியத்தைக்கொண்டவனாய் அரசனது மற்றோர் துடையில் உட்கார்ந்தான். அப்போது சமீபத்தில் நின்றிருந்த மாற்றாந் தாயான ஸுருசி கண்கள் சிவக்க, உதடுகள் துடிக்க, ஆத்திரம் பொங்க தன்னுடைய சக்களத்தி மகன் தன் மகனைப்போல் உரிமை பாராட்டுவதைப் பொறுக்கமுடியாதவளாய்ப் பொறாமை யென்னும் வெறியினால் கட்டுண்டு அவ்வரசிளங்குமாரனை நோக்கி 'அட கெடுவாய், என் காதலரின் துடைமீதேறி யுட்கார உனக்கென்னடா பாத்தியம்; பெருந்தவம் புரிந்து என்வயிற்றில் நீ ஜனித்திருந்தாலன்றோ உனக்கு அப்பாக்கியம் கிட்டும்' என்று கடுமையாய்க் கூறினாள். செவியில் நாராசம் பாய்ந்ததைப்போன்ற மாற்றாந்தாயின் மொழிகளைக்கேட்டதும் த்ருவன் கண்களினின்றும் கண்ணீர் தாரை தாரையாகப்பெருகி இருகன்னங்களிலும் வழிந்தது; ஹ்ருதயம் படபடவென்றடித்தது; செவ்விய உதடுகள் துடித்தன; இன்னது செய்வ

தென்று தோன்றாது சரேலென்று தந்தையின் துடையிலிருந்து எழுந்து கீழேகுதித்து ஒருவிசை அரசனது முகத்தை யேறிட்டுப்பார்த்தான் த்ருவன்; அச்சமயம் அரசன் தலைகுனிந்து மௌனம் சாதித்திருந்தானேயல்லாமல், அவனுடைய முகத்தோற்றத்தில் அருள் என்னும் அம்சம் அணுவளவுங் காணோம். உடனே த்ருவன் தன் மாதா, மதியாதார் தலைவாசல் மிதிப்பது தப்பென்று கூறியபுத்தியை அதிலங்கனம் செய்ததால் நேர்ந்த முடிவு ஈதென்று மனம் நொந்து, மறுமுறை ராஜதம்பதிகளை நோக்காது நேராக தனதன்பிற்கும் பிரியத்திற்கு முகந்த அன்னையான ஸுநீதியிடம் போய், மனம் வெதும்பி, முகம்வாடி, மெய்சோர்ந்து, முத்து முத்தாகக் கண்ணீர் விட்டுக்கொண்டே நடந்த வரலாற்றைத் தெரிவித்தான். ஸுநீதிக்கு அப்போது உண்டான துக்கம் செப்பத்தரமன்று. ஐயோ பாவம், இளங்குழந்தையின் மனம் நோகச்செய்தோரது மனம் கல்லாவென்று மனதுள் நினைத்துப் பிறகு த்ருவனைப்பார்த்து 'என் கண்மணி, அழாதே, வருவனவெல்லாம் நம் நன்மைக்கே யென்று நினை, பக்தியும் விசுவாஸமும் நிரம்பித்ததும்பும் உன்னுடைய ஹிருதய கமலத்தினின்றும் வெளியுறுவது பகவத்தியானமாக விருக்கட்டும். நடந்துபோனதைக் குறித்துச் சிந்தியாதே. என்னப்பா! பக்தகோடிகளைக் காப்பதற்காகக் கங்கணதாரணம் பூண்டு திருப்பாற்கடலிற் பள்ளிகொண்டிருக்கும் க்ஷீராப்தி சயனன் எனப்பெயர் வகித்த எல்லாம் வல்ல இறைவனை பரந்தாமனது பொன்னடி மலர்களைப் போற்றக் கடவாய்' என்று தேறுதல் சொன்னாள். மைந்தன் மனமகிழ்ந்து அன்னையின் மதியை சிரஸில் வகித்துத் துறவிகளின் கார்யாதிகளுக்கு உறைவிட மென்று கருதப்படும் மரஞ் செடி கொடிகள் அடர்ந்து புதர்கள் நிரம்பி துஷ்டமிருகங்கள் தாண்டவமாடும் அடவி நோக்கிச் செல்வானாயினன். மார்க்கத்தில் பிரமபுத்திரரான நாரதர் தோன்றினார்.

த்ருவனுடைய மனநிலையையுணர்ந்த நாரதமுனிவர் ஆரம்பத்தில் இளைஞனின் அபிப்பிராயத்தைச் சோதிக்க நினைத்து 'குழந்தாய்! 5-வயது பூர்ணமாய் நிரம்பாத இந்தப் பருவத்தில் நீ தவம்புரிவதென்றால் முடியுமா? மகா மகா பெரியோர்களும் தபோதனர்களும் காணக்கொடுத்துவைக்காத பரம்பொருளான ஸ்ரீயஃபதியை நீ காண்பதெங்ஙனம்? மற்றும் நரமாமிச பக்ஷணம் பண்ணும் துஷ்டமிருகங்கள் கர்ச்சனையிட்டுச் சஞ்சரிக்கும் இவ்வடவியில் இளைஞனை நீ, செல்லுவது உசிதமல்ல. பிறரது ஸ்திதி கதிகளைக் கண்டு ஏக்கமுறுவது அழகாகமாட்டாது' என்று புகல, சிறுவன் முனிவரது வார்த்தைகளைக் கேட்டுத் தன்னிரு செவிகளையும் பொத்தினவனாகி 'தவசிரேஷ்டரே, சாதாரணகாலத்தில் நீங்கள் அருளிய திருவாக்குப் பிரகாரம் நடக்க நான் சித்தமாயிருப்பேனாயினும் இச்சந்தர்ப்பத்தில் என் மனநிலையை முற்றுமுணர்ந்த முனிவர்பெருமானே, தம் திருவாக்கை யனுஸரித்து நடக்க என்மனம் இடந்தரவில்லை; ஆகவே பரம்பொருளைக் காணும்வழி புகல என்மீது தயவுடன் கிருபைபுரியவும்' என்று இரங்கிய முகத்துடன் வணங்கி நிற்க, முனிவர் அச்சிறுவனை மெய்யன்புடன் தழுவி 'மதுரையம்பதியில் மதுவனம் என்னும் அடவிக்குச்சென்று அங்கு அரித்தோடும் யமுனாநதியில் தெள்ளிய ஜலத்தில் ஸ்நானஞ்செய்து அக்ஷப மென்று பாச்சிகையை யுருட்டிய ஆபத்பாந்தவனை முகுந்தனை மனனஞ்



செய்து தவம்புரிவாயாக' வென்று சொல்லித் துருவனுக்கு உபதேசம் செய்தார். த்ருவனும் அவ்வுபதேச மந்திரத்தை ஜபித்துக்கொண்டே பரமாத்மாவைக் குறித்துத் தவம் புரியலானான்.

இது இங்ஙனமிருக்க, தந்தையான உத்தான பாதன் தன் புதல்வனை இளைஞன் தன்னந்தனியாக அடவி செல்லத்தான் பார்த்திருந்ததைச் சிந்தித்தவாறே வருந்திக்கொண்டிருந்த தறுவாயில் நாரதமுனிவர் அங்கு தோன்றி தாம் த்ருவனைக் கண்டதையும், உபதேசஞ் செய்ததையும் த்ருவன் பகவானுடைய அருளுக்குப் பாத்திரவானாகித் திரும்பி சேரப்போவதையும் சொல்லி தைரியப்படுத்தினார். என்னதான் சொல்லியும் மன்னனுக்கு மனச்சந்துஷ்டி யேற்படவில்லை; மைந்தனைப்பற்றிய மனக்கவலையே மிகுந்திருந்தது. இதற்குள் த்ருவன் முனிவர் சொன்ன வனத்தையடைந்து, யமுனையில் நீராடி பகவானைத் தவிரப் பாரினில் ஏதுமில்லை யென்று நிச்சயித்து ஏகாக்ர சித்தத்துடன் தவம் புரியவும், தபாக்கினியானது பொங்கிப் பூவுலகம் முழுவதிலும் கனலாக, அத்தகிப்பைக்கண்டு தேவர் தத்தளிக்கலாயினர்; தக்ஷணமே அவர்கள் பகவானிடம் சென்று தம்மைக் காக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். திருமாலும் அதற்கிசைந்து தேவர்களுக்கு அபயம் சொல்லி த்ருவன் முன்னிலையில் வந்து தோன்றினார். த்ருவன் அகத்துள்ளேயே, அதாவது ஹ்ருதய கமலத்தினுள்ளேயே, பகவானை ஆவாகனம்செய்து அந்த உருவெளித் தோற்றத்தைப் பார்த்தவாறே ஆனந்த பரவசனாயிருந்தானேயல்லாமல் அவன் முன்பாக வந்து நின்ற திருமாலைக் கவனிக்கவில்லை. அதன்பேரில் பகவான் உட்புறத் தோற்றத்தை மறைத்துவிடவும், த்ருவன் திடுக்கடைந்தவனாகக் கண் விழித்துப் பார்க்க எம்பிரான் திருமாலே காட்சி கொடுத்ததைக் கண்டு, கைகூப்பித் தொழுது சந்தோஷத்தினால் ஆனந்தக் கண்ணீர்பெருகப் பகவானை ஸ்தோத்தரிக்க வாரம்பித்தான். அச்சமயத்தில் திருமால் தம் கரத்துப் பாஞ்சஜந்யம் என்ற சங்கைக்கொண்டு பாலனின் முகத்தில் அருளுடன் தடவ, மழலைச்சொல்மாறாத த்ருவன் ஸரஸ்வதிகடாக்ஷம் பெற்று அபாரமாகப்பகவானை ஸ்தோத்தரஞ்செய்ய வாரம்பித்துவிட்டான். பகவான் திருப்தி மிகவுமடைந்து புன்சிரிப்புக் கொண்ட சுந்தரவதனத்தோடு த்ருவனை நோக்கி 'இளம்பிள்ளாய், உனது தவத்திற்கு மெச்சி யுனக்குக்காட்சியளித்ததுடன் என்றும் சாசுவதமும் ஒப்புயர்வற்ற மெய்ந்நிலைமை வாய்ந்த ஓர் உத்தமபதம் அடைவாய். ஆனால் அதற்கு முன்னதாக இருபத்தாறாயிரம் வருஷம் ஒற்றை வெண்குடைநிழலில் ராஜ்யபாரம்வகித்துப் பின்னர் துருவபதம் போய்ச்சேர்வாய். இன்னும் நீ எந்த மாற்றாந்தாயின் கடுஞ்சொல் கேட்கமனந்தாளாமல் தவம்புரிய வந்தனையோ அம்மாற்றாந்தாயுள்பட சகலரும் உன்னைப்போற்றிப் புகழும் திவ்யபதம் உனக்குக் கிடைக்கும்' என்றும் அருளி அந்தர்த்தியானமானார். அதன்பிறகு துருவன் அடவியிலிருந்து தன் தந்தையிருக்குமிடம் நோக்கித் திரும்பினான்; புதல்வன் வருவதைக்கேட்டு மகனீய சந்தோஷத்துடன் உத்தான பாதன் நகரலங்காரம்செய்து தன் தேவிமார் ஸகிதம் அவனை எதிர் கொண்டழைக்கச் சென்றதும் கால்நடையாய் வந்துகொண்டிருக்கும் த்ருவன் அஞ்சலிபந்தஞ் செய்து மந்தஹாஸத்துடன் தலைவணங்கி நிற்க அப்புதல்வனை வாரித்தழுவி ஆனந்தக் கண்ணீர் பெருக்கி யானையின்மீதுவைத்த அம்பாரியில் த்ருவனை

விற்றிருக்கச்செய்து நகரஜனங்கள் களிப்புற ஊர்வலமாக அரண்மனை சேர்ந்தான். பிறகு உத்தானபாதன், தன் மைந்தனை துருவன் காளைப்பருவம் அடைந்ததும் ராஜ்யபாரத்தை அவனிடம் ஒப்புவித்துத் தான் தவம்புரிய வெண்ணி அடவிக்கேகினன். த்ருவன் பின்பு இரண்டு பெண்களை மணஞ்செய்துகொண்டு வாழ்கையில் அவர்களிடம் மூன்று மக்கள் ஜனித்தார்கள். இங்ஙன மிருக்குநாளில் த்ருவனின் தம்பியான உத்தமன் வேட்டையாட வேண்டிக் கானகத்திற்குச் சென்றபோது அங்கு ஓரியக்கன் அவனைக்கொன்று விட்டான். தன் புத்திரனைத்தேடி வந்த ஸுருசி காட்டுத்தீயிலகப்பட்டுமாண்டாள்; இவ் விபத்துக்களைக் கேள் வியுற்றத்ருவன் ரதகஜதுரகபதாதிகளுடன் புறப்பட்டு இயக்கர் கோனை குபேரனது அளகை நகரின் சமீபமாய்ச் சென்று சங்கநாதஞ் செய்யவும், உடனே இயக்கர்கள் கும்பல்கும்பலாகவந்து தாக்கத் தொடங்கித் தமது பலவகை மாய்கைகளால் த்ருவனை அடிபணிய முயற்சித்தனர், அம்முயற்சி கள் யாதொருபலனும் தரவில்லை. த்ருவனோ தெய்வீகப் பெருமையும் தேவபலமும் பெற்ற தன்யனைதபற்றி நாராயணாஸ்திரத்தைப் பிரயோகி த்து இயக்கரது மாய்கைகளை வேருடன் களைந்து நின்றனன். அச்சமயம் த்ருவனின் பாட்டனரான ஸ்வாயம்புவமநு அவன் முன்தோன்றி 'ஊழ் வினையால் நடக்கும் சம்பவங்களுக்கு நீ சிரமப்படக் காரணமில்லையே' யென்று சொல்லி வாழ்த்திவிட்டு மறையப் பிறகு இயக்கர் கோனை குபேரன் முன்வந்து ஸர்வேசுவரனது கிருபை பரிபூரணமாயிருக்கும்படி த்ருவனுக்கு வரங்கொடுத்து மறைந்தான். த்ருவன் தன் நகர் திரும்பி ஸதா ஸர்வகாலமும் பகவத்தியானத்தையே ஹ்ருதய கமலத்தில் வகித்த வனாய் யாகாதி ஹோமங்களை விதிப்பிரகாரம் நடத்தி திருமால் கூறிய வண்ணம் இருபத்தாறுயிரம் வருஷம் செங்கோல் செலுத்திப் பின்னர் தன் புதல்வனை உற்கலனுக்கு மகுடாபிஷேகம் செய்வித்துத் தான் விசாலை யென்னுமிடமேகித் தவம்புரிந்து பரந்தாமனது பொற்பதம் போய்ச்சேர்ந் தனர்.

என்னே த்ருவனின் மாட்சி! 'தந்தை தாய்ப் பேண்' என்றபடி பெற் றோரிடத்தன்பும் பக்தியும்பூண்டு 'தெய்வ மிகழேல்' என்ற மூதுரையைக் கைப்பிடித்து பகவத்தியானத்திலேயே புத்தியைச் செலுத்தி 'பரோப காரார்த்தம் இதம் சரீரம்' என்பதை முன்னிட்டு செங்கோல் செலுத்திப் பின்னர்ப் பரமபதம் போய்ச்சேர்ந்த உத்தமப் புதல்வனை த்ருவனின் சரித்திரம் 'கல்பதரு'வை யோதும் எவர்க்கும் நற்புத்தி புகட்டி ஞானவான் களாக்கி ஸர்வமங்களத்தையு மளிக்கட்டும். நம் பத்திரிகையின் நற்பெய ருக்கேற்ப, இம்மகானது பெயராகட்டும், இம்மகானை ஸ்மரிப்பதாகட்டும், தொழுவதாகட்டும், இகபர ஸாதனத்திற்குரிய பெரும்பேறுகளை யளிக்கு மென்று பெரியோர்கள் தொகுத்திருப்பதை யனுஸரித்து யாமும் திரிகரண சுத்தியாக அன்னவனைப் போற்றிப் புகழ்வோமாக!

'உரமொரு வற்குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்களாதலே வேறு.'

'ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று
சூழினுந்தான் முந்துறும்'.



கதசாலீவாகன சகாப்தம் கஅ௩௯ } வைசாசம் { பிங்கள ௵ வைகாசி௴ } கொல்லம் { இங்கிலீஷ்-க௯க௭, பஸலி-க௩உ௬ } ஹேஜரா-க௩௩௫.
கதகல்யப்தம்-௫௦௧அ } ஜ்யேஷ்டம் { உத்தராயணம் வஸந்தருது } ௬௦௯உ { மேமீ-ஜூன்மீ } ரஜப்மீ-ஷாபான்மீ.

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | 14 | க | திங் | அஷ் ௩௧-௩௪, அவி ௩௧-௩௯, ப்ரா க௯-௦, பா ௪-௩௪, ரா க௭-௪௫, விஷ்ணுபதபுண்யகாலம, சூன்யார்க்கம, அஹ ௩௧-௧௪, வாக் |
| 22 | 15 | உ | செ | நவ உ௫-௩௧, சத உ௭-௪உ, மா அ-உஅ, கர உ௫-௩௭, ரா க௧-உ௧, வைத்ருதிசிரா, சூன்ய திதி, ம, [கியம், துருவம், சூன்யதிதி, சி, |
| 23 | 16 | ௩ | புத | தச உ௦-௪, பூட் உ௪-௩, வை க-௫, உபரி ௫உ-௫௧, பத் உ௦-௪, ரா க௪-௩உ, திதித்வயம், அ, சி, |
| 24 | 17 | ௪ | வியா | ஏகா க௪-௫௧, உட் உ௦-௫௪, ப்ரீ ௪௭-௩௪, பா ௪௯-௫௧, ரா கஅ-உ௩, ஸர்வைகாதசி, சி, |
| 25 | 18 | ௫ | வெ | துவா க௦-க௧, ரே கஅ-உ௪, ஆயு ௪௧-௪௩, தை க௦-௪௧, தி ௦-௦, அஹ ௩௧-௪௭, பிரதோஷம், அ, |
| 26 | 19 | ௬ | சனி | திர ௬-௪௧, அசு, க௬-௪௧, ஸௌ ௩௬-௩௦, வணி ௬-௪௧, தி எ-௫, ரா ௬-க௬, சிவராத்ரீவிருதம், சி, |
| 27 | 20 | எ | ஞா | சதுர் ௪-௩, பர ௪௬-க௬, சோ ௩உ-௩௫, சகு ௪-௩, ரா க௫-க௪, கிருத்திகோடவாஸம், தர்ச்சிரா, சி, |
| 28 | 21 | அ | திங் | ● அமா உ-௩௩, * கார் க௬-௫௦, அதி உக-௬, நாக உ-௩௩, ரா உ௬-௪௩, இஷ்டி, புன்ணகௌரீவிருதம், ஸோமவாரமாவாஸ்யா, |
| 29 | 22 | ௯ | செ | ஜ்யேஷ்டசுக்ல பிர உ-உ௦, ரோகி கஅ-௪௧, ஸுக உ௬-௫௪, பவ உ-உ௦, சே உ-௩, ரா உ-௩, மிதுனாயனம், ௩-கஅ, அஹ [ம, அ, |
| | | | | [௩௧-உ௦, சந்திரதர்சனம், ஸ்ரீ௳லிகஜயந்தி, அ, சி, |
| 1 | 23 | ௪௦ | புத | துவி ௩-உஅ, மிரு உக-௪௬, திரு உ௫-௩௭, கௌ ௩-உஅ, ரா கஉ-௫௩, சதலீவிருதம், சி, |
| 2 | 24 | க௪ | வியா | திரு ௫-௪௬, திரு உ௬-௪, சூல உ௫-க௧, கர ௫-௪௬, ரா உ௭-உ௫, சதுர்தீவிருதம், ம, அ, |
| 3 | 25 | ௪உ | வெ | சது ௬-௪௦, புன ௩௧-௪௫, கண் உ௫-௪அ, பத் ௬-௪௦, ௪ உ-௪அ, ரா உ௧-௫௧, சி, ம, |
| 4 | 26 | க௩ | சனி | பஞ் ௪௩-உ௧, பூச ௩௭-க௧, விரு உ௬-௫உ, பா க௩-உ௧, தி ௦-௦, அஹ ௩௧-உ௪, ஷஷ்டி உபவாஸம், ம, அ, |
| 5 | 27 | க௪ | ஞா | ஷ கஅ-௬, ஆயி ௪௩-௩௬, துரு உஅ-உ௦, தை கஅ-௬, தி கஉ-௩௬, அச்னிநக்ஷத்திர நிவர்த்தி, ௪௫-௪௭, ஆரண்யகௌரீவிருதம், |
| 6 | 28 | ௪௫ | திங் | ஸ உ௩-உ௧, மக ௫௦-௪, வியா உ௧-௫௫, வணி, உ௩-உ௧, தி க௬-௫௪, அதிதி, ம, சி, |
| 7 | 29 | க௬ | செ | அஷ் உ௭-௪அ, பூர ௫௬-உ, ஹர் ௩௧-௧௪, பவ உ௭-௪அ, தி கஉ-௧, சி, அ, [சி, ம, |
| 8 | 30 | க௭ | புத | நவ ௩௧-௫௭, உத்தி ௬௦-௦, வஜ் ௩உ-௭, கௌ ௩௧-௫௭, தி க௫-௪௦, அஹ ௩௧-உ௭, அ, |
| 9 | 31 | கஅ | வியா | தச ௩௫-க௦, உத்தி க-உ௭, வித்தி ௩உ-கஅ, தை ௩-௩௩, தி உ௩-௫௬, பாபஹரதசமி, ம, சி, |
| 10 | 1 | க௯ | வெ | ஏகா ௩௭-கஅ, ஹஸ் ௫-௪௩, விய ௩௧-௪அ, வணி ௬-க௪, தி உ௬-௪அ, வியதீபாதசிரா, ஸர்வைகாதசி, அ, சி |
| 11 | 2 | உ௦ | சனி | துவா ௩௭-௩உ, சித் அ-௫௭, வரி ௩௦-௦, பவ எ-உ௫, தி உ௩-உ௪, கூர்மஜயந்தி, ம, அ, |
| 12 | 3 | உ௧ | ஞா | திர ௩௭-௪௪, சுவா க௦-௫௦, பரி உ௭-க௧, கௌ உ-அ, தி உ௫-௦, அஹ ௩௧-௩௦, பிரதோஷம், வைசாக தீர்த்தம், சி, ம, |
| 13 | 4 | உஉ | திங் | சதுர் ௩௬-௭, விசா க௧-௩உ, சிவ உ௩-௪உ, கர ௬-௫௫, தி உ௧-உஅ, ம, சி, |
| 14 | 5 | உ௩ | செ | ○ பௌ ௩௩-உ௦, அனு க௧-௫, வித் க௬-௬, பத் ௪-௪௩, தி உ௪-௪௪, பௌச்யமன்வாதி, சி, |
| 15 | 6 | உ௪ | புத | ஜ்யேஷ்டகிருஷ்ண பிர உ௬-௩௪, சேட் உ-௩௪, ஸா க௩-௪௪, கௌ உ௬-௩௪, தி உஅ-௪௭, இஷ்டி சி, ம, |
| 16 | 7 | உ௫ | வியா | துவி உ௪-௫௬, மூல எ-௪௩, சுபம் எ-௪௧, கர உ௪-௫௬, தி ௩-௪௩, புன தி உ௧-உ௭, அஹ ௩௧-௩௩, சி, |
| 17 | 8 | உ௬ | வெ | திரு க௬-௪அ, பூரா ௪-௪, சுப் ௦-௫௦, உபரி ௫உ-௫உ, பத் க௬-௪அ, தி உஉ-௫௪, திதித்வயம், சி, |
| 18 | 9 | உ௭ | சனி | சது க௪-௩, உரா ௦-௩௩, உபரி ௫௬-க, மா ௪௬-உ௧, பா க௪-௩, தி ௬-௫௩, சிரவணோபவாஸம், சி, |
| 19 | 10 | உஅ | ஞா | பஞ் அ-௪, அவி ௫உ-உ௩, வவ ௩அ-௪௭, தை அ-௪, தி ௫-௫உ, வைதிருதீசிரா, ம, சி, |
| 20 | 11 | உ௯ | திங் | ஷ க-௫௭, உபரி ௫௩-௫௬, சதய ௪அ-உ௦, விஷ் ௩௧-க௩, வணி க-௫௭, பத் உ௬-௫அ, தி ௬-க௦, அஹ ௩௧-௩௬, அவமா, சி, ம, |
| 21 | 12 | ௩௦ | செ | அஷ் ௫௦-க௬, பூட் ௪௪-௩௬, ப்ரீ க௬-௫௩, பா உ௩-௩, தி ௩-உ௦, விருஷபகிருஷ்ண அஷ்டமிதிதி, ம, அ, |
| 22 | 13 | ௩க | புத | நவ ௪௪-௪அ, உட் ௪௧-உ௦, ஆயு க௭-௧, தை க௭-௩௦, தி எ-க௬, விருஷபகிருஷ்ணநவமிதிதி, சி, ம, |

ஷாபான்மீ ஜூன்மீ

## இராகு காலம்.

| காலம். | ஞாயிறு. | திங்கள். | செவ். | புதன். | வியா. | வெள். | சனி. |
|---|---|---|---|---|---|---|---|
| இராகு காலம் | உகுவ | ௱ரு | உஉஇ | கடு | கஅரு | ககவ | எஇ |
| குளிகை காலம் | உக | உஉ | கஅ | கச | கO | சு | உ |
| இராக்குளிகை காலம் | கO | சு | உ | உசு | உஉ | கஅ | கச |

### சுபமுகூர்த்தங்கள்.

உகவ ஆதிவாரம் பகல் நாழிகை எ-வக்குமேல் ககஇ-க்குள் விருஷப லக்கினத்தில் சுபமுகூர்த்தம். சந்திரப்பிரீதி.

| | குரு. செ-பு. | ரவி. சு. | கேது. |
|---|---|---|---|
| | சஎவ விரு-குரு<br>உOவ விரு-செ<br>உஉவ விரு-புதன்<br>உ௱வ மிது-புதன் | | சனி. |
| ரா. | | | |

### குருபூஜை திருநக்ஷத்திரங்கள்.

எவ பரணி கழற்சிங்கநாயனார்
க௱வ பூசம் நமிநந்தியடிகள் நாயனார்
ஷை ஷை செய்கிழார் நாயனார்
கசவ ஆயில்யம் சோமாசிமார நாயனார்
உசவ மூலம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
ஷை ஷை முருகநாயனார்
ஷை ஷை திருநீலக்கநாயனார்
ஷை ஷை திருநீலகண்ட யாழ்பாண நாயனார்.

### ஆழ்வாராதியர் திருநக்ஷத்திரங்கள்.

கவ ரோகிணி திருக்கோட்டியூர் நம்பி
உஉவ விசாகம் நம்மாழ்வார்
ஷை ஷை திருவாய்மொழிப்பிள்ளை
உ௱வ அனுஷம் துவாதபட்டர்

| நக்ஷத்திரங்கள். | ஞாயிறு. | திங்கள். | செவ்வாய். | புதன். | வியாழன். | வெள்ளி. | சனி. |
|---|---|---|---|---|---|---|---|
| அசுபதி | சித் | சித் | சித் | மர | அமி | அமி | சித் |
| பரணி | சித் | சித் | சித் | சித் | சித் | சித் | சித் |
| கார்த்திகை | சித் | மர | சித் | அமி | மர | சித் | அமி |
| உரோகணி | சித் | அமி | அமி | சித் | மர | மர | அமி |
| மிருகசீரிடம் | சித் | அமி | சித் | சித் | மர | சித் | சித் |
| திருவாதிரை | சித் | சித் | மர | சித் | மர | சித் | சித் |
| புனர்பூசம் | சித் | அமி | சித் | சித் | அமி | சித் | சித் |
| பூசம் | சித் | சித் | சித் | சித் | அமி | மர | சித் |
| ஆயில்யம் | சித் | சித் | சித் | சித் | சித் | மர | மர |
| மகம் | மர | மர | சித் | சித் | அமி | மர | அமி |
| பூரம் | சித் | சித் | சித் | அமி | சித் | சித் | சித் |
| உத்திரம் | அமி | சித் | அமி | அமி | மர | சித் | மர |
| ஹஸ்தம் | அமி | சித் | சித் | மர | சித் | அமி | மர |
| சித்திரை | சித் | சித் | சித் | சித் | சித் | சித் | மர |
| ஸ்வாதி | சித் | அமி | சித் | சித் | அமி | சித் | அமி |
| விசாகம் | மர | மர | மர | சித் | சித் | சித் | சித் |
| அனுஷம் | மர | சித் | சித் | சித் | சித் | சித் | சித் |
| கேட்டை | மர | சித் | சித் | சித் | சித் | மர | சித் |
| மூலம் | அமி | சித் | அமி | மர | சித் | அமி | சித் |
| பூராடம் | சித் | சித் | சித் | அமி | சித் | சித் | சித் |
| உத்திராடம | அமி | மர | சித் | அமி | சித் | சித் | சித் |
| திருவோணம் | அமி | அமி | சித் | சித் | சித் | மர | சித் |
| அவிட்டம் | மர | சித் | சித் | மர | சித் | சித் | சித் |
| சதயம் | சித் | சித் | மர | சித் | மர | சித் | அமி |
| பூரட்டாதி | சித் | மர | மர | அமி | சித் | சித் | மர |
| உத்திரட்டாதி | அமி | சித் | அமி | சித் | சித் | சித் | சித் |
| ரேவதி | அமி | சித் | சித் | மர | சித் | அமி | மர |

... AUG 1917 ... MADRAS

ஸ்ரீராமஜயம்.

# கல்பதரு.

KALPA THARU.

அறிவு வளர்ச்சிக்கான வாராந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புஸ்தகம் 1. Vol. I. } பிங்களஹு வைகாசிமீ 27வ. சனிக்கிழமை. SATURDAY, 9th JUNE—1917. { ஸஞ்சிகை 2. No. 2.

# PART I.

## EMPIRE DAY.

### ஸார்வபௌம ஸ்தாபக ஜயந்தி.

பிரிடிஷ் செங்கோற் சிறப்பு.

பிரதி வருஷத்திலும் மேமாதம் 24-ந்தேதி ஒரு ஸுதினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அத்தினத்திலேயே பிரிடிஷ் ஏகாதிபத்தியம் ஸர்வ ஜன ஸம்மதமாக ஸ்தாபகமாயிற்றென்று பலர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். தேசபக்தி, ராஜபக்தி, ராஜவிசுவாஸம், ராஜாபிமானம், அரசஸேவை முதலிய சகலவிதமான உத்தம கைங்கர்யங்களுக்கும் ஊன்றுகோலாக ஏற்பட்ட தினம் மே மாதம் 24-ந்தேதியானது பற்றிப் பிரிடிஷ் ராஜாங்கம் அந்நாளை நன்னாளாகக் கருதிக் கொண்டாடுவது சகஜமாயிருக்கிறது. சென்றமாதத்தில் மேற்படி தினம் நம் நாடெங்கும் கொண்டாடப்பட்டதை நமது நண்பர்கள் அறிந்திருப்பார்கள். அத்தினத்தைக்குறித்து அதிகமாய்க் கூறுவது அனாவசியம். அத்தினத்தில் உற்சாகப் பொலிவையும் ஊக்கப்பொலிவையும் உண்டுபண்ணும் நமது பிரிடிஷ் செங்கோற் சிறப்பினை மட்டும் இங்கு சுருக்கமாக எடுத்துரைப்போம்.

'கல்பதரு'வின் முதற் சஞ்சிகையில் 'இந்தியாவில் பிரிடிஷ் அரசாட்சி' என்ற தலைப்பெயருடன் எழுதிய நமது வியாசத்தில் நம்மாக்ஷிமைபொருந்திய பிரிடிஷ் ராஜாங்கத்தின்கண் நம் தேசவாசிகளுக்கு ஏற்பட்டிருக்கும் எத்தனையோ நன்மைகளை ஒருவாறாய்த் தொகுத்துக் கூறினோம். வளர்பிறைச் சந்திரனையொப்ப செழித்து வருகின்ற இவ்விராஜாங்கத்தை நடத்திவரும் நமது காருண்ய மிகுந்த சக்ரவர்த்தியார் ஆட்சிச்சிறப்பினையும் பிரஜைகளின் கடமையையும், முக்கியமாய் இந்தியப்பிரஜைகளுக்குத் தம்மீதும் தம்மிராஜாங்கத்தின்மீதும் இருக்கும் ஐகபத்தியமிகுந்த மெய்யன்மையும் சுட்டிக்காட்ட வேண்டுமென்பதே இப்போது இவ்வியாஸமெழுதுவதன் கருத்தாகும். இந்த ஸார்வ பௌம ஸ்தாபக ஜயந்தியைக் கொண்டாடுவதற்காக பிரிடிஷ் ராஜாங்கம் முழுவதிலும் விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டன; பள்ளிக்கூடச் சிறுவர் மனதில் பிரிடிஷ் மன்னரையும் அவரது ஆக்ஷிச்சிறப்பையும், அதன் மூலமாக பிரஜைகள் அடைந்திருக்கும் விசேஷ பலன்களையும் பதியும்படி செய்வதற்காக தீவிரமான காரியங்களும் முயற்சிகளும் நடை பெற்றன; மாதாகோயில்களிலும் மற்றுமுள்ள தேவாலயங்களிலும் மசூதிகளிலும் பிரிடிஷ் ராஜாங்கம் செழித்தோங்கவேண்டுமென்னும் பிரார்த்தனைகள் செய்யப்பட்டன; விக்ரஹாராதனை செய்வோர் தெய்வபக்தி மிகுந்த தெள்ளிய மனதுடன் அபிஷேக அர்ச்சனைகள்செய்து தொழுதனர். துருப்புகள் மைதானங்களில் அணிவகுத்து நின்று தம்மகுடாதிபதியிடம் தமக்குள்ள அபிமான விசுவாஸங்களை உள்ளம் பூரித்துக் காட்டிக் குதூஹலித்தார்கள். இப்போது நடைபெறும் ஐரோப்பிய யுத்தத்திலே பிரிடிஷார் வெற்றிக்கொடியை நாட்டும்படி ஸர்வ ஜீவ தயாபரனான எம்பிரான் கருணை புரியவேண்டுமென்று பிரஜைகள் மானஸீகமாக ஸ்தோத்தரித்துக் கொண்டிருந்தார்கள். அநேக கல்வி நிலையங்களில் பிரிடிஷ் ராஜரீக மேன்மை விமர்சித்துக் காட்டப்பட்டது. விக்டோரியா மகாராணியாரது மகா சாஸனம் 1858-ம் ஆண்டில் பஹிரங்கப்படுத்தப்பட்டதல்லவா? அச்சாஸனமென்ன, எட்வர்டரசர் இந்தியத்தேசமன்னர்களுக்கும் இந்தியப் பிரஜைகளுக்கும் அனுப்பிய நன்றிமொழிப்பத்திரமென்ன, சந்திர வம்சோத்பன்னர்கள் செங்கோல் செலுத்தியதும், பாண்டவர் ராஜசூயயாகம் நடத்திப் புகழ்பெற்றதும், மொகலாய சக்ரவர்த்திகளான ஆக்பர் முதலியோர் மகுடஞ்சூடிப் பலகாலம் ஆக்ஷிநடத்தியதும், அஸ்திகாபுரம் எனப் பெயர் வகித்துள்ளதுமான டெல்லிமாநகரில் இராஜப்பிரதிநிதியாயிருந்த லார்ட் கர்ஸன் எட்வர்ட் சக்ரவர்த்தியின் முடிசூட்டு வைபவத்தை மகோற்சவமாகக் கொண்டாடியதென்ன, அச்சமயம் நமது சக்ரவர்த்தியார் தம்மிந்தியப் பிரஜைகளின்பால் கருணையும் அனுதாபமுங்கொண்டு கூறிய க்ஷேமபத்திரிகையென்ன, பின்னும் அரசர்திருவாய்மலர்ந்தருளிய திருவாக்கென்ன, ராஜவிளம்பரமென்ன, இவையனைத்தையும் கூடுமான சந்தர்ப்பங்களில் செவ்வையாக அத்தினத்தில் பலர்



பிரகடித்தார்கள். நம்மாக்ஷிமை தங்கிய அரசர் தம் திருவாக்கினாலேயே "இந்தியர்கள் சாந்தகுணமுள்ளவர்களென்றும், டம்பமில்லாது ஜீவிக்கிறவர்களென்றும், ராஜபக்தி தெய்வபக்தியுள்ளவர்களென்றும் கூறியது நம்மவர் மனதில் கன்மேலெழுத்துப்போற் பதிந்திருக்கிறது. நாம் எவ்வளவிற்கு நமது மகா ஜனங்களின் சுகதுக்காதிகளுக்குப் பாத்தியப்படுகிறோமோ அவ்வளவிற்கு அவர்களும் ஒன்று பத்து நூறாக நம்முடைய சுகதுக்காதிகளுக்குப் பாத்தியப்படுவார்கள். துரைத்தனத்தை நடத்துவதில் அவர்களை இன்னும் ஸமீபத்தில் வைத்து, நம்பிக்கை கொண்டு, தேசக்ஷேமத்திற்குரியகாரியங்களில் அவர்களுக்குப் பொறுப்பு ஏற்படும்படி செய்யுமிடத்து எல்லோர்க்கும் அது க்ஷேமந்தருவது நிச்சயம்" என்ற அபிப்பிராயத்தை அரசர் திருவாய்மலர்ந்தருளியது என்றென்றும் மறக்கற்பாலதன்று. நம்முடைய க்ஷேமம், அமைதி, திருப்தி ஆகிய இவைகளைப்பற்றி அரசர் தர்பாரிலுரைத்து இந்தியப் பிரஜைகளுக்கு மனமுவந்து ஆசிமொழிபகர்ந்ததையொப்ப நாமும் திரிகரண சுத்தியாக நம் அரசரது ஆட்சியானது இந்திய சரிதங்களில் கல்ப கல்பங்களாக எழுதப்படவேண்டு மென்றும், ஸர்வேசுவரன் அருளால் அவரது ஆக்ஞையும் ஆக்ஷியும் பல்லாண்டு பல்லாண்டாக ஓங்கவேண்டுமென்றும் தியானிப்போமாக. ஆகவே இத்தினத்தை ஒரு ஸு தினமெனவே மதித்து அவ்வப்போது ஞாபகத்திற் கொணர்ந்து அதன்படி நடக்கவேண்டுவது நமது கடமை. இச்சமயம் கவி சக்கிரவர்த்தியாம் கம்பர் ராமாயணத்திற் கூறிய வாக்கியமொன்று எமது ஞாபகத்திற்கு வருகிறது.

இனியசொல்லினன் ஈகையன் எண்ணினன்
வினையன் தூயன் விழுமியன் வென்றியன்
நினையு நீதிநெறி கடவானெனின்
அனையமன்னர்க் கழிவுமுண்டாங் கொலோ?

---

## PROWESS OF THE INDIAN CAVALRY.

## முகப்பில் இந்தியக் குதிரைப்படையாளரது தீரம்.

ஆஸ்திரேலியாவிலிருந்து வருங்குதிரைகள் பெரும்பாலும் பலமும் அழகும் பொருந்தியவை யென்பது யாவரும் அறிந்த விஷயம்; அநேகமாய் ஆஸ்திரேலியர்கள் குதிரைப்பழக்கத்தில், அதாவது குதிரைகளை சவாரி செய்வதிலும் பழக்குவதிலும் மற்றும் குதிரைகளுக்கு நோய் நொடிவந்தால் அதற்குத் தகுந்தவாறு சிகிச்சை செய்வதிலும் சமர்த்தர்களாவர்; ஆஸ்திரேலியா தேசம் குதிரைக்குப் பேர்போன தாதலினாலும், குதிரைகள் சம்பந்தப்பட்டமட்டில் ஆஸ்திரேலியர் சரியான அபிப்பிராயம் கொடுக்கக்கூடிய புத்திக் கூர்மையுள்ளவரானபடியாலும், அவர்தம் வாக்கிலிருந்து குதிரையைப்பற்றி வருஞ்செய்தி கவனிக்கத்தகுந்ததாகத் தானிருக்கு மென்பதற்கு

ஆக்ஷேபமில்லை. சமீபத்தில் பிரான்சு தேசத்திலுள்ள மேற்கரங்கத்தில் வேலைசெய்யும் பீரங்கிப்படையைச் சேர்ந்த ஆஸ்திரேலியரொருவர் நம்மிந்தியக் குதிரைப் படையாளர் மேற் கரங்கத்தில் காட்டுந் தீரத்தையும், மற்றுங் காவல் புரியும் திறமையையும் சுட்டிக்காட்டிச் சவிஸ்தாரமாகத் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். ரூடர் தந்திமூலமாகச் சென்ற வாரத்திலே அச்செய்திகிடைத்தது. இதை வாசிக்கும் நம்மவரது உள்ளம் பூரிப்படையுமென்பது திண்ணம். அசுவ ஆரோஹணத்தில் பயிற்சியும் பரிசீலனையும் வாய்ந்த ஓராஸ்திரேலியர் வாயிலிருந்து இப்பேர்ப்பட்ட சிலாகிப்பு வரவேண்டுமானால் அது எளிதல்ல. உள்ளபடியே மேற்கரங்கப் போர் முனையில் ஓயாதொழியாது வேலை செய்யும் இந்தியக் குதிரைப்படையாளரது கங்கு கரையற்ற மனோதிடத்தையும், அவர்கள் கோல் முனையில் தாங்கியிருக்கும் ஈட்டிகளையுபயோகிக்கும் உறுதியான குறியும், காவற்படையாளராக வேலை செய்கையில் அக்குதிரைப் படையாளருக்கு ஈட்டியைஉபயோகிக்கும் சமயம் வாய்த்திருப்பதையும் அவ்வாஸ்திரேலியர் நேருக்கு நேராய்ப் பார்த்ததனாலே அவர் இந்தியக் குதிரைப் படையாளரை விசேஷமாய்ப் புகழ்ந்திருக்கிறார் போலும், சமர்த்திருக்கும் போது சிலாகிப்பு ஏற்படக் கேட்பானேன்? நம் ஜன்மதேசத்திலுதித்த பிராதாக்களான அக்குதிரைப் படையாளர் முன்பின் சென்றிராததும், பாஷை தெரியாததும், வழக்கப் பழக்கங்கள் உணராததுமான புதியதோர் பூமியில் பார்புகழப் பிரதாபம் பெறுவதென்றால், அதனிலும் அவர்களடையும் ஸாபல்யம் வேறு என்ன இருக்கிறது? இந்தியக் குதிரைப் படையாளர் மேற்கரங்கத்தில் காட்டுந் தீர வீர பராக்கிரமங்களைக் கேட்கும் இந்தியர் மனம் புளகாங்கிதமாகிக் குதூஹலிக்குமென்பதற்குத் தடையில்லை. மக்கள் செய்யும் நற்காரியமாகட்டும், துர்க்காரியமாகட்டும், அதனாலுண்டாகக் கூடிய இசையோ அல்லது வசையோ அம்மக்களைப் பெற்றெடுத்த தாய் தந்தையரைச் சேருமென்பது உலகமறிந்த சித்தாந்தம். அதையொப்ப, இப்போது நம்மிந்தியக் குதிரைப் படையாளர் மேற்கரங்கத்தில் நற்பெயர் வாங்கிவருவது அவர்களை யீன்றெடுத்த அன்னையாம் பாரதமாதாவுக்குப் பெரிதும் பெருமையைத் தருவதாகிறது.

இனிய நீர்ப்பெருக்கினள்
இன்கனி வளத்தினள்
தனிநறுமலயத் தண்காற்சிறப்பினள்
பைங்கிறபழனம் பரவியவடிவினள்

ஆகிய ஜன்மபூமியாம் பாரதமாதாவுக்கே அவர்தம் மைந்தரது பெருமையனைத்தும் அர்ப்பிதம்!

---



# THE GERMAN CHARACTER.—

## ஜர்மனியரின் ஸ்வபாவம்.

(ஸர் அலெக்சாண்டர் கார்டியு K. C. S. I., துரையவர்கள் "இந்தியன் ரிவ்வியூ"வுக்கு எழுதின வியாசத்தின் மொழிபெயர்ப்பு.)

இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் சண்டையினால் ஜர்மனியரின் வாஸ்தவமான குணங்கள், இங்கிலீஷ்காரர்களுக்கும் இன்னும் பூலோகத்திலுள்ள யாவருக்கும் நன்றாய் வெளிக்கு வருகிறதென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. நமக்கு சமீபமாயுள்ள ஜர்மனியர்களுடைய தேசாபிமான குணத்தையும், அவர்களுடைய களையில்லாத முகவாட்டத்தையும் அவர்களுடைய சுறுசுறுப்பான சுபாவத்தையும்பற்றி நாம் இதுவரையில் சற்று அலட்சியத்தோடுகூடிய ஹாஸ்யத்துடன் எண்ணிக்கொண்டுவந்தோம். ஜர்மானியனைச் சற்று மந்த புத்தியுள்ளவனாயும், சாமானிய மனிதனாயும், முற்றிலும் மதிப்பாய் நடந்துகொள்ளத் தெரியாதவனாயும், மிகுந்த உழைப்பாளியாயும் நினைத்துக்கொண்டு வந்தோம். ஆனால் அவன் நல்ல கணவனாக மாட்டானென்றும், நேசமுள்ள தகப்பனாகமாட்டானென்றும், யோக்கியமுள்ளவனா யிருக்கமாட்டானென்றும் இதுவரையில் நமக்குத் தெரியாமல் போயிற்று. தீவில் வசிப்பதினால் நமக்கு சுபாவமாயுள்ள அஜாக்கிரதையினால் நாம் அவனுடைய மானவதர்மத்தை நன்றாய்க் கவனிக்கவில்லை. அவன் தன்னைப்பற்றி சொல்லிக்கொண்டதையெல்லாம் நம்பிக்கொண்டேவந்தோம். ஆனால் சண்டையினால் அவனுடைய குணாதிசயங்களும் கோரமான ஸ்வபாவமும் வெளியாகிவிட்டன. பெண்மணிகளின் கற்பை அழிப்பதும், குழந்தைகளைக் கொலைசெய்வதும், காயம்பட்ட ராணுவ வீரர்களைத் துப்பாக்கியினால் சுடுவதும், சண்டையில் சிறைப்பட்ட கைதிகளுக்கு ஆகாரம் கொடுக்காமல் பட்டினி போடுவதும் அல்லது வியாதியினால் உயிரை இழக்க விடுவதும், ஜர்மானியர்கள் யுத்தத்திற் செய்துவரும் அட்டூழியங்களாகும். அவையனைத்தும் பிரஸிடெண்டு வில்ஸன் மொழிந்தபடிக்கான துக்க ஸம்பவங்களும் அவர்களுடைய துர்நடத்தையை உலகில் வெளியாக்கி அவர்களுக்கு ஒரு அபக்கியாதியை விளைவித்துவிட்டன. மேற்பார்வைக்கு மிகவும் மரியாதையும் உள்ளன்புமுடையவன்போல் தோன்றுகிறதேயொழிய அந்தரங்கத்தில் ஆழ்ந்த மூர்க்கத்தனமும் மிருகத்தின் சுபாவமுமுடையவனாயிருக்கிறான். சென்ற 1900-ம் வருஷம் ஜூலை மாதம் 27-ந்தேதியில் ஜர்மன் சக்கரவர்த்தி, தன்னுடைய சைன்யங்கள் சீனதேசத்திற்கு சென்றபொழுது, சொன்னதாவது :—"தயைகாட்டாதீர்கள். ஒருவரையும் கைதியாகச் செய்யாமலிருங்கள், முன் அட்டிலா என்பவரின் கீழ் ஹன்ஸ் எப்படி பெயரெடுத்தார்களோ அதேமாதிரி பெயரெடுங்கள்" என்றார். அவர் அப்படி சொன்னபோது அது அவருடைய கோணபுத்தியின் சுபாவமென்று

எண்ணினோம். ஆனால் அப்படியல்ல; அது ஜர்மனியரின் வாஸ்தவமான குணத்தை வெளியாக்கினதென்று சொல்லவேண்டியதாயிருக்கிறது. இப்பொழுது பெல்ஜியத்தில் நடக்கும் அக்கிரமங்களைப் படித்த ஜர்மானியர்கூட அவைகளை எப்படி சரியென்று நினைக்கிறார்களோ அப்படியே இப்போது ஜர்மனியரிடத்தில் நூதனமாக காணப்படும் கோரமான நடத்தையும், மிருகத்தன்மையும் சண்டையில்லாத சமயங்களில் கூடயிருந்திருக்கக் கூடுமோவென்று யோஜிக்கவேண்டியதாயிருக்கிறது. மேற்சொன்னபடி ஜர்மன் சக்ரவர்த்தியின் புத்திமதியையும் ஆமோதித்திருப்பார்களென்பதில் தடையில்லை. எவரும் எடுத்த எடுப்பில் முற்றிலும் கெட்டவராவதில்லை. இந்த இரண்டுவருஷ யுத்தத்தில் அவர்கள் இவ்வளவுகெட்ட நடத்தையுள்ளவர்களென்று காட்டிக்கொண்டிருப்பதால் ஸ்வபாவத்திலேயே ஜர்மானிய ஜாதியாருக்கே இவ்வித துர்நடத்தைகள் ஆழ்ந்திப்போயிருக்கவேண்டும். இவ்விஷயத்தை நன்றாய்த்தெரிந்துகொள்ளும் பொருட்டு சண்டைக்கு முன் ஜர்மனி தேசத்தில் நாகரீகம் எவ்விதமாயிருந்ததென்று சற்று பரிசோதித்துப் பார்ப்பது நலம். ஜர்மனியில் பெண்களுக்கு அதிக ஸ்வாதீனமில்லையென்பதும் புருஷர்களைவிட குறைந்த அந்தஸ்தில் அவர்கள் வைக்கப்பட்டவர்களென்பதும் எல்லாருக்கும் நன்றாய்த் தெரிந்தவிஷயம். இங்கிலாந்து, பிரான்ஸ், இடாலி, அமெரிக்கா முதலிய தேசங்களைப்போல் ஜர்மனியில் புருஷர்களுக்கு சமானமான அந்தஸ்தும் கௌரவமும் பெண்களுக்குக் கிடையா. ஜர்மனி தேசத்து குலஸ்த்ரீ கிருக கிருத்தியங்களைச் செய்ய வேண்டிய ஒரு வேலைக்காரியாகவும், புருஷர்களைவிட தாழ்ந்த அந்தஸ்தை வகித்தவளாகவும் தான் பாவிக்கப்படுகிறாள். அதனால் அத்தேச மானவ தர்மம் குறைந்து ஸ்திரீ புருஷர்களுக்குள்ள பரஸ்பர உணர்ச்சி மலினப்பட்டு ஜர்மானியர்கள் மற்றுமுள்ள ஐரோபிய ஜாதியர்களைவிடத் தாழ்ந்த பதவியில் இருந்து வருகிறார்களென்பது இதுகாறும் உலகத்தாருக்குப் பொதுவாய்த் தெரியாமலே இருந்து வந்தது. இதற்கு ஏராளமான சாக்ஷியங்கள் உண்டு. ஜர்மனி தேசத்தில் நியாய வழுவானவும் சாஸ்திரவிரோதமானவுமுள்ள பிறப்புக்களின் கணக்கை சற்று கவனித்துப்பார்த்தால் நன்றாய் விளங்கும். இது அத்தேச மானவதர்மமில்லையை எடுத்துக்காட்டக் கூடியதாகும். எல்லாத் தேசங்களின் கணக்கும் கிடைத்திருக்கிறது. அதுவே போதுமானது. அப்பிறப்புக்களின் தாமாஷா:—

| | | |
|---|---|---|
| இங்கிலாந்தும் வேல்ஸும் | ... | 100-க்கு 4·2 |
| இடாலி | ... | „ 5·0 |
| பெல்ஜியம் | ... | „ 6·2 |
| பிரான்ஸ் | ... | „ 8·7 |
| ஜெர்மனி | ... | „ 9·2 |

ஆகையால் அசாஸ்திரீகமான பிறப்பின் தொகை ஜர்மனி தேசத்தில் இங்கிலாந்து, வேல்ஸ் தேசத்தைவிட இரண்டு மடங்கு அதிகமென்று ஏற்படு



கிறது. மேலும் ஜர்மனியில் இந்த தாமாஷா வருஷாவருஷம் அதிகரித்துக் கொண்டும் வருகிறது. 1905-ம௵ அப்பிறப்புக்களின் சங்கியை 100-க்கு 8·9 ஆயிருக்க, 1912-ம் வருஷத்தில் அது 100-க்கு 9·5 ஆக யிருந்தது. 1912-ம௵ ஜர்மானிய மொத்தப் பிறப்புகளில் ஏறக்குறைய 10-ல் 1 அசாஸ்திரீகப் பிறப்பாகவே யிருந்தது. மேலும் ஜர்மனியின் சில பாகங்களில் அசாஸ்திரீகமான பிறப்பு இன்னும் அதிகமாயிருக்கிறது. பவேரியாவில் 100-க்கு 14·3-ம் பர்லினில் 100-க்கு 14·9 என்றும் தெரிகிறது. இதையெல்லாம் கவனித்துப் பார்க்குமிடத்து, ஜர்மனியரின் நன்னடத்தைக் குறைவு நமக்கு தெளிவாகத் தெரிகிறது.

ஜர்மானியரின் முறைதப்பிய நடத்தைக்கு இன்னும் மற்ற சாக்ஷியங்களுமுண்டு. இந்த பூலோகத்தில் நடந்துகொண்டு வரும் வெள்ளை அடிமை வியாபாரம் (ஒயிட் ஸ்லேவ் டிரேட்) வெகுவாய் ஜர்மானியர்களால் நடத்தப்படுவதை ஜர்மானியர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஸைபீரியா முதற்கொண்டு தென் அமெரிக்கா வரையில் ஜர்மானியப் பெண்களைக் காணலாம். இவவித அபகீர்த்தியான விஷயங்களை ஜர்மனிய ஏஜண்டுகள் நடத்தி வருகிறார்கள் என்பது யாவருக்கும் தெரியும். இவ்வித வியாபாரத்தில் சம்பந்தப்பட்டதற்காக சிக்காகோ நகரில் மாத்திரம் 28 ஜர்மானியர்கள் 18 மாதத்திற்குள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் ஓர் அமெரிக்கராவது இங்கிலீஷ்காரராவது காணப்படவில்லை. இந்த வியாபாரத்திற்கு பிரதானமான இடம் பர்லின். ஹாம்பர்க் அதன் துறைமுகம். ஜர்மானியர் தங்களுக்கு இயற்கையாயுள்ள விடாமுயற்சியுடன் இவ்வியாபாரத்தை நடத்தி வருகிறார்கள். ஆகஸ்பெபல் இதைபற்றி எழுதுவதாவது:—'இப்பெருத்த வியாபாரத்தை ஒருவிதமான குறைவுமில்லாமல் நடத்தும் பொருட்டு ஜர்மனிய ஏஜண்டுகளும் இவ்வியாபாரத்திற்கு அனுகுணமான பிரயாணிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஏராளமான லாபத்தையும் அடைகிறார்கள். அனேக மரியாதையுள்ள ஜர்மனியர்கள்கூட இந்த அடிமை வியாபாரத்தில் சம்பந்தப்பட்டிருப்பதாகவுந் தெரிகிறது. 1904-ம் வருஷம் முதல் பர்லின் நகரில் இவ்விதமான வியாபாரத்தை நிறுத்தும் பொருட்டு தகுந்த போலீஸ் ஏற்பாடுகள் இருந்தபோதிலும் அவர்களுக்கு இஷ்டமிருந்தால் ஜர்மனிய போலீசாரும் வெகு சாமர்த்தியத்துடன் நடக்கக்கூடும் என்று நமக்கு தெரிந்திருந்தபோதிலும் இவ்வித அபகீர்த்தியுடைய வியாபாரத்தை நிறுத்த அவர்கள் கிஞ்சித்தேனும் முயலவில்லை. இவ்விதமான துர்நடத்தைகளை நடக்கும்படி பார்த்துக்கொண்டிருப்பதானது ஜர்மானியர்களின் ஹீனமான நடத்தையைக் காட்டுகிறது.'

வெளிதேசங்களில் ஜர்மனியர்களுடைய சேஷ்டைகள் இப்படியிருக்க ஜர்மனியைச் சற்று கவனிப்போமானால் அத்தேசத்தில் விபசாரம் நிரம்ப அதிகரித்துவிட்டதென்றே கூறலாகும். ஜர்மனியில் மாத்திரம் 1½ மிலியன்

விபசாரிகள் இருக்கிறார்களாம். அக்கவர்ன்மெண்டார் இதைக்கண்டிக்க ஒரு விதமான நிபந்தனைகளைச் செய்யாவிட்டாலும், இவ்விஷயம் பர்லின்விட்டன்போலீஸார் மேம்பார்வையிலிருக்கிறது. இருந்தபோதிலும் சில இடங்களில் முழுத்தெருவுகள் விபசாரிகள் வசிக்குமிடமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. சார்ல்ஸ் பூத் என்பவரால் எழுதப்பட்ட "லண்டனில் வாசமும், தொழிலும்" என்ற புஸ்தகத்தைப் படித்து பார்க்குமிடத்து பர்லின் நகரில் நடைபெற்றுவரும் விஷயங்களைப்பற்றி ஜர்மானியர் எழுதியிருக்கும் கிரந்தங்களுடன் ஒத்துப்பார்த்தால் லண்டனுக்கும் பர்லினுக்குமுள்ள தாரதம்மியம் தெளிவாக ஏற்படும். சென்ற 50 வருஷங்களுக்குள் பர்லின் நகரானது துர் நடத்தை மிகுந்த ஐரோப்பாவிலுள்ள பட்டணங்களில் முதலாக வந்துவிட்டது. அதில் நடக்கும் அக்கிரமங்கள் நம்பக்கூடாமையாயிருக்கின்றன. "இங்கிலீஷ் ரிவ்யூ" என்ற பத்திரிகையில் சிலமாதங்களுக்கு முன் பிரசித்தி பெற்ற பிரடரிக் ஹாரிசன் என்பவருடைய குமாரரான Mr. ஆஸ்டின் ஹாரிசன் என்பவரால் ஒரு நாட்டியக் கச்சேரியைப் பற்றி எழுதப்பட்டது. அக்கச்சேரிக்கு வந்திருந்தவர்கள் அனேகமாய் நிர்வாணிகளாயிருந்தார்களாம்! பிரின்ஸ் பிலிப்பூலன்பர்க் என்பவரின் கேஸினால் வெளியான விஷயங்களிலிருந்து ஜர்மனியரின் பெரிய வம்சங்களிலும் கூட என்ன அநீதியான சேஷ்டைகள் நடக்கின்றனவென்பது வெளியாகிறது. சம்போகத்தினாலுண்டாகும் வியாதிகளைக் கண்டிக்கத்தக்க ஔஷதங்களை ஜர்மனிய சமர்த்தர்கள் விருதாவாகக் கண்டுபிடிக்கவில்லை. சென்ற 1903, 1905-ம் வருஷங்களில் ஹாம்பர்கிலிருந்த ரிக்ரூட்டுகளில் 100-க்கு 30 பேர்களும் பர்லினிலிருந்துவந்த ரிக்ரூட்டுகளில் 100-க்கு 41·3 பேர்களும் சம்போகத்தினால் உண்டான வியாதிகளால் பீடிக்கப்பட்டவர்களாயிருந்தார்கள். அஸந்துஷ்டிகரமுள்ள இவ்விஷயமாக இன்னும் விஸ்தாரமான விபரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் Hyde Halselle என்பவரெழுதிய "சீரழிந்த ஜர்மனி" என்ற புஸ்தகத்தை படிக்கவும். அப்புஸ்தகத்திலிருந்து இந்த வியாசத்திலுள்ள அனேக விஷயங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஜர்மனியில் நடக்கும் அக்கிரமங்களைப்பற்றி அதில் படித்தால் மயிர்க் கூச்செடுக்கும்படியாகத் தானிருக்கும். பர்க் என்பவர் ப்ரெஞ்சு கலகத்திற்கு முந்தி அத்தேச அரசர்களைப்பற்றி யெழுதுங்கால் சொல்லியதாவது:—"துர்நடத்தையானது மானவமானத்திற்குச் சற்று அஞ்சி நடைபெற்றால் அதற்குள்ள கொடுமையிற் பாதி சமனமாய்விடும்." ஆனால் ஜர்மனியிலோ மானவமானத்திற்கு அஞ்சாமல் அத்தன்மை மேலிட்டிருப்பதால் அது ஒன்றுக்குப் பத்தாகப்பெருகி அதனுபாஸம் வெளியாகிறது. இவ்விதம் துர்நடைத்தையிற் பெருகிய ஜர்மனியைப்போன்ற தேசத்தில் மற்றவிதமான குற்றங்களும் அதிகமாகவே காணப்படுவது ஓராச்சர்யமல்ல. ஒரு தேசக்கணக்குகளுடன் மற்றொரு தேசக்கணக்குகளை ஒத்துப் பார்க்கும் விஷயத்தில் தேச பாஷைகளின் வித்தியாசத்தாலும் பிரிவுகளின்



வித்தியாசத்தாலும் நேரக்கூடிய சிரமம் வெகுவாயுண்டு. அதற்காக ஏறத்தாழக்கொஞ்சம் விட்டுப்பார்த்த போதிலுங்கூட ஜர்மன் தேசக்குற்றப்பதிவு புஸ்தகங்களில் பகுக்கப்பட்டிருக்கும் குற்றங்களின் சங்கியையை அபரிமிதமானதென்றே சொல்லவேண்டும். 1910-ம் வருஷத்து ஜன சங்கியைப்படி ஜர்மனி தேசத்தின் ஜனக்கணக்கு 650 லட்சத்துக்கு சற்று குறைவாகயிருந்தது. இங்கிலாந்து வேல்ஸிலோ 1911-ம் வருஷத்தில் 360 லட்சம் இருந்தது. ஆகையால் இங்கிலாந்து வேல்ஸில் ஜர்மனியின் கணக்குகளில் பாதிக்கு சற்று குறைவுதான். கீழ்க்குறிக்கப்பட்ட விபரத்தினால் ஜர்மனியிலும், இங்கிலாந்திலும் சம்பவித்த குற்றங்களின் கணக்கைத் தெரிந்து கொள்ளலாம்.

| — | | ஜர்மனியில் தண்டனை | இங்கிலாந்து வேல்ஸில் தண்டனை |
|---|---|---|---|
| | | 1909 | 1909 |
| கொள்ளை திருட்டு கன்ன திருட்டு இன்னும் இதரவிதமான குற்றங்கள். | ... | 161433 | 56528 |
| பிறர் பணத்தை ஸ்வப்பிரயோஜனப் படுத்தியது. | ... | 46922 | 1369 |
| மோசம் | ... | 64345 | 4434 |
| கள்ளக்கையெழுத்து | ... | 12446 | 228 |
| சொத்துக்கு வேண்டுமென்று சேதமுண்டாக்குதல். | ... | 30337 | 16631 |

மேற்சொன்ன விபரங்களைக் கவனித்தால் ஜர்மனியில் நடக்கும் மோசம், பணத்தை துர்விநியோகப்படுத்தல், சிருஷ்டனை முதலான குற்றங்கள் அதிகமாக நடந்தனவென்றே வெளியாகிறது. வெளிப்பார்வைக்கு வெகு யோக்கியர்களைப்போல நடிக்கும் ஜர்மனியர்கள் இவ்வளவு அக்கிரமங்களை ஒரு வருஷத்தில் செய்யத் தகுந்தவர்களென்று நம்பத்தக்கதாயில்லை. ஆயினும் கணக்குகள் அத்தன்மையை வெளியாக்குகின்றன. மேற்குறித்தவாறு குற்றங்களை அவையவைகளுக்குரிய தலையீடுகளின் கீழ்ப்பிரித்துப் போடுவதில் சற்று பிசகுகள் நேருவது ஸாத்தியமே. ஆயினும் இவ்விதக் குற்றங்கள் மொத்தத்தில் வெகுவாய் ஜர்மனியில் அதிகரித்துவிட்டன என்ற அவமானத்தை விளைவிக்கக்கூடிய தன்மையை அவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டியவர்களாகவே யிருக்கிறார்கள்.

இங்கிலாந்திலும் வேல்ஸிலும் சொத்துக்களைக் குறித்த குற்றங்களின் உத்தியோக முறைச்சங்கியையைப்பற்றிச் சந்தேகமேயில்லை. அவை பின் வருமாறு:—

| | 5 வருஷங்களின் சராசரி 1909-1913. |
|---|---|
| 2-வது வகுப்பு கன்னக்களவுகள், வீட்டடைப்புகள், கொள்ளைகள், பலாத்காரமான பறிப்பு. | 4,068. |
| 3-வது திருட்டு, திருட்டு சொத்தை வாங்குதல், பிறட்டுகள் ... | 56,510. |
| 4-வது தீயிட்டுச்சொத்துக்குத் தீங்குண்டாக்குவது. | 487. |
| 5-வது தப்புக்கையெழுத்து, நாணயமடித்தல் ... | 388. |
| சொத்துக்களைக் குறித்த தண்டனைக்குள்ளாகக்கூடிய குற்றங்களின் மொத்த சங்கியை ... | 61,463. |

புஷ்பங்கள், பழங்கள் முதலானவைகளுக்குண்டான சில்லரைதொகைகளுள்பட சொத்துக்களுக்கு நேர்ந்த சிறு சேதங்களான 14,921 தொகைகளையும் சேர்த்துக்கொண்டால், இங்கிலாந்து வேல்ஸ் இவைகளின் மொத்தம் 76,384, தான். ஆனால் ஜெர்மன் ஜனத்தொகையோ இங்கிலாந்து வேல்ஸ் இவற்றின் ஜனத்தொகைக்கு இரட்டிப்புக்குச் சற்று குறைவாயிருந்தபோதிலும் ஜெர்மனியிலோ 315,483 அதாவது முன் எண்ணிக்கைகள் ஐந்து மடங்காக இருக்கிறது.

ஜெர்மன் உத்தியோக அதிகாரிகள் மானமின்றிப் பொய் கூறுவதை நாம் இப்போது வெகுவாய் அறியலாம்.

கொஞ்ச நாட்களுக்கு முன் நடந்த கடற்சண்டையிலுண்டான சேதங்கள் உத்தியோக முறையில் வெளிப்படையாக ஜர்மனியர்களால் மறுக்கப்பட்டிருப்பது (நடந்ததாக பிறகு ஒப்புக்கொள்ளப்பட்டது) ராணுவத்தின் அவசரத்தினலென்று ஒரு சமயம் நினைக்கலாம். 1914-ம்ஹு ஆகஸ்டுமீ 19 தேதி காலை ஜெர்மன் துருப்புகள் பெல்ஜிய தேசத்தின்மீது படையெடுத்து வருவதற்கு 36 மணிக்கு முந்தியே ஜெர்மன் தூதரான ஹெர் வான் பீல்ஸ்ஸலெஸ்கே யென்பவர் ஜெர்மனியிடம் பெல்ஜியம் பயப்படவேண்டிய தொன்றுமில்லை யென்று பெல்ஜியன் மந்திரிக்கு நேரிற் கொடுத்த உறுதிமொழி ராஜதந்திரத்தின் ஆதிக்கம் என்றே ஒருவாறு சொல்லலாம். ஆனால், பிரெஞ்சுக்காரர் மொரொக்கோவிலிருந்து ஒருவர்கூட இல்லாமல் துரத்திவிடப்பட்டனரென்றும், பஞ்சாபிலும் இந்தியாவிலும் மத விஷயமொன்று கிளம்பியிருக்கிறதென்றும் ஒரு சுதேசமன்னருக்கு நியாஸாலாண்ட் எல்லையில் ஜர்மன் தளகர்த்தரான கௌண்ட் பால்கொர்ஸ்டெயின் எழுதியிருக்கும் கடிதத்தின்மாதிரி யுத்தகாலமுழுவதும் ஜெர்மனியர் பிரசுரித்துக்கொண்டிருந்த பெரும் புளுகுகளை நாம் என்னவென்று கூறுவது



ஒருவருஷத்தில் ஜெர்மனியில் பொய்க் கையெழுத்து கேஸ்கள் 12446 என்று நமக்குத்தெரியவருகிற நிலைமையில் இம்மாதிரி சமாசாரங்களை கற்பனைசெய்வதான சம்பவம் நூதனரீதியை அடைகிறது.

மனிதர்கள்மீது முக்கியமாய் ஸ்திரீகளின்மீது ஏற்படும் குற்றங்களைக் கவனிக்க ஆரம்பிக்கும்போதுதான் சமாதான காலத்தில் ஜெர்மனியிலுள்ள குற்ற சங்கியை யுத்தத்தின்போது அக்குற்றச்சங்கியையை தெளிவிக்க விளக்கிக் காட்டுகிறது. ஒருவன் குடித்திருக்கும்போது ஒரு கொடுமையான அல்லது மிருகத்தன்மையான காரியத்தைச் செய்தால் அவனே தெளிவான புத்தியுடனிருக்கும் காலத்திலும் அவன் துணிந்தால் அதைச் செய்துவிடுவானென்று நீங்கள் நிச்சயமாய் நம்பலாமென இது விஷயத்தில் நிபுணரான ஒருவர் குறிப்பிட்டெழுதியிருக்கிறார். யுத்தமாகிய குடியால் வெறியடைந்த ஒரு சோல்ஜரைப்பற்றி இதே மாதிரியான தீர்மானம்கொள்வது உண்மையென்பது ஜெர்மனியின் குற்றக் கணக்குகளையெடுத்துப்பார்த்தால் தெரியவரும். பெல்ஜியத்திலும் ஜெர்மன் சோல்ஜர்கள் கொள்ளையடித்தாலும், ஸ்திரீகளுக்கு மானபங்கமுண்டாக்கினலும், கொலை செய்தாலும் அவைகள் சடுதியாக வுண்டான மிதமீறின வெறியாலுண்டானவையல்ல. சட்டங்களால் ஏற்படுத்தப்பட்ட தடைகள் நீக்கப்பட்ட தன்மையில் ஜெர்மன் சுபாவத்திற்குரிய கொடுமைகள் வெளியாயிருக்கின்றனவென்றே எண்ணப்படவேண்டும். சமாதான காலத்தில் தற்கால ஜெர்மனியிலுண்டாகும் குற்றங்களின் சுபாவத்தால் இது ரூபிக்கப்படுகிறதென்பது ஜெர்மனியிலும் இங்கிலாந்திலும் பத்து வருஷகாலத்தில் வருஷத்தின் சராசரி குற்றங்கள் இன்னின்னவை இவ்வளவிவ்வளவென்பது அடியிற்கண்ட சங்கியையான தெளிவாகும்.

| | ஜெர்மனி 1899-1907 | இங்கிலாந்து 1899-1900 |
|---|---|---|
| கொலை......... ... | 350 | 145 * |
| கொலைசெய்ய முயற்சி, மனிதஹத்தி, கொடிய அல்லது துவேஷமான காயங்களுண்டாக்கல் ... | 1,81,153 | 1,489 |
| தாக்கல்கள்......... ... | 131220 (1909) | 58,00,3† |
| ஸ்திரீகள்மீது அவமரியாதையான தாக்கல்களும் மானபங்க துராகிருத புணர்ச்சியும் ... | 9,381 | 947 |
| முறைகெட்ட புணர்ச்சி ... | 573 | 56(1910-13) |

வழக்கமற்ற குற்றங்கள் 841, 228, இவ்வெண்ணிக்கைகளைப்பற்றி வியாக்கியானம் செய்வது அனாவசியம். அவற்றிலிருந்தே ஒருவர் எளிதில் அறிந்துகொள்ளலாம். இவைகளைக் குறித்து இரண்டு விஷயங்கள் முக்கியமாய்க் கவனிக்கப்படவேண்டியன :—முதலாவது, கிரேட் பிரிட்டனில் குற்றங்கள் நாளுக்குநாள் குறைந்துகொண்டே வருகையில், ஜெர்மனி

*ஒரு வருஷத்திற்கும் அதற்குட்பட்டுமுள்ள குழந்தைகளும் அடங்கியிருக்கின்றது.

† இவற்றில் 57,832 கேஸ்கள் சம்மெரி அதிகாரம்பெற்ற கோர்ட்டுகளால் தீர்க்கப்பட்டதால் சிறு குற்றங்களாகும்.

யிலோ பயமுண்டாக்கக்கூடிய அளவுக்கு அவை அதிகரித்து வருகின்றன. இரண்டாவது, கிரேட்பிரட்டனில் சிறுவர்கள் செய்யும் அடிதடிக்குற்றங்கள் மிக அற்பம். ஜெர்மனியிலோ அது மிக்க அபாய நிலைமையிலிருக்கிறது. 1912-ல் அடியிற் கூறப்பட்ட குற்றங்கள் 12-வயது முதல் 18-வயதுக்குட்பட்ட சிறுவர்களால் செய்யப்பட்டன :—

| | | |
|---|---|---|
| கொலைகளும், மனித ஹத்திகளும் | ... | 107 |
| தேக காயங்களுண்டாக்கல் | ... | 8,987 |
| துராகிருதப் புணர்ச்சியும், அவமரியாதையான தாக்கல்களும் | ... | 952 |
| சொத்துக்களுக்குச் சேதம் | ... | 2,938 |
| தீ வைத்தல் | ... | 148 |

இவைகள் ஜெர்மனியிலுள்ள சிறுவர்களது செய்கைகளென்றால் இச்சிறுவர்களை வளர்க்கும் வீடுகளைப்பற்றி நாம் எளிதாக ஊகிக்கலாமன்றோ?

உலகத்தின் மற்ற பாகங்களில் ஜெர்மனியர் தங்கள் கல்விப்பயிற்சியை சுமந்த பாத்தியஸ்தர்களென்று சொல்வதை நாமெல்லோரும் வாசித்திருக்கின்றோம். சிரேஷ்டமான நற்குணம் தங்களிடம்தானிருக்கிறதென்று ஜெர்மனியர் சொல்லுவதை நம்மில் நேரே கேட்டிருக்கின்றோம். ஜெர்மன் ஆதிபத்தியத்தில் பிரசுரிக்கப்பட்ட குற்றவாசிகையிலிருந்து அந்தக்குணம் எம்மாத்திரம் அவர்களிடம் நிலைபெற்றிருக்கிறதென்பதும் அக்கல்விப்பயிற்சி எப்பேர்ப்பட்டதென்பதும் தெரியவரும். அத்தேசம் மிக்க துன்மார்க்கத்தாலும் நாடெங்கும் பரவிய விபசாரத்தாலும் ஸ்திரீகள்மீதும் குழந்தைகள் மீதும் அடிக்கடி தாக்கல்களாலும் மோசத்தாலும், தப்புக் கையெழுத்தாலும், கொடுஞ் செயல்களாலும் சிறப்பிக்கப்பட்டிருக்கிறது! இவை சமாதானகாலத்திற்குரிய ஜெர்மன் நாகரீகத்தின் அறிகுறிகளாம்! யுத்த காலத்தில் அவர்கள் என்ன செய்திருக்கிறார்களென்பது நமக்குத் தெரியும். லீஜ்நகரில் பிளேஸ்டிலா யூனிவெர்ஸிடியில் பட்டப்பகலில் தம்மேலுத்தியோகஸ்தர் பார்த்துக்கொண்டிருக்க 15 அல்லது 20 ஸதிரீகளின்மீது துராகிருதப் புணர்ச்சி செய்தவர்களும், மலீன்ஸ் ஹாம்ஸ்டேட், இன்னும் இதர பெல்ஜிய நகரங்களில் ஸ்திரீகளையும், குழந்தைகளையும் ஈட்டியால் குத்தியவரும, துப்பாக்கியைக்கொண்டு சுட்டவர்களும், தென் ஆப்பிரிக்காவில் கிணறுகளில் விஷங்கலந்தவரும், தற்கால யுத்தத்தில் விஷக்காற்று, எரிதிராவகம் முதலியவைகளை உபயோகப்படுத்தினவர்களும், 'லூஸிடேனியா' என்னும் கப்பலையும், ஸ்திரீகளும் குழந்தைகளும் சண்டையிற் சேராதவர்களும ஏறிக்கொண்டிருந்த இன்னுமநேக கப்பல்களையும் எச்சரிக்கை செய்யாமல் மூழ்கடித்துவிட்டவர்களும், பாதுகாப்பற்ற நகரங்களைக் குண்டுகளால் தகர்த்து ராணுவரல்லாத ஜனங்களைக் கொன்றவரும் காயம்பட்டவர்களைக் கொலைசெய்து சிறைப்பட்டவர்களைப் பட்டினி போட்டவர்களும் அடங்கிய ஜர்மனியரின் ஜாதியையே மேற்சொல்லப்பட்ட குற்றவாளிகளும் சேர்ந்தவர்கள். இந்த ஜனங்களை கொடுமையும், துரோகமுமான கொள்ளையடிக்கும் குணமுள்ளவரென்று ரோஸ்பரி பிரபு சொல்லியிருப்பது பொருத்தமானதே. இந்த யுத்ததில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை அழித்து அதன் ஸ்தானததில ஜெர்மன அரசாட்சியை ஏற்படுத்த முயலும் ஜாதியாரின் குணத்தைப்பற்றி இந்தியா ஜனங்கள் எவ்வித பிரமையுங் கொள்ளலாகாது.

# PART II.

## ஆரோக்கிய விமர்சனம்.

### ஆரோக்கியமின்றிச் சுகமில்லை.

பிராசீன சுகாதார முறையைக்குறித்துச் சென்ற சஞ்சிகையில் யாம் எழுதியபோது, அது இப்போதைய சுகாதாரமுறைக்கு வித்தென்று சொல்லுவது ஒருவாறு பொருந்துமென்றோமே. நம் பெரியோர்களும் பூத பௌஷ்ய ரசாயன சாஸ்திரங்களில் வித்பத்தியடைந்த நிபுணர்களும் தம்மதியூகத்தினால் அந்த பிராசீனமுறைகளை நாகரீகமிகுந்த இக்காலத்திற்கேற்ப நவீனமான வகையாக முன்கொண்டு வந்திருக்கிறார்கள். சுகத்தினால் அநேக நன்மைகள் ஏற்படுமென்ற நம்பிக்கையினாலேயே பலரும் சுகத்தைத் தேடுவோராயிருக்கிறார்கள். சுகமாயிருந்தால்தான் சொந்தக்காரியத்தைக் கவனிக்க முடியும்; பிறர்க்கு உதவிசெய்யவுங்கூடும்; மற்றும் நம்மைப்பார்த்துப் பிறர் வெறுக்காமலிருக்கவும், நமக்கு நாமே வெறுப்புக்கொள்ளாதிருக்கவும் வேண்டுமாயின் சுகமாய்க் காலங்கடத்துவதையே ஒருவன் கோரவேண்டும். சுகம் சீர்கேடடைந்து வியாதியினால் ஒருவன் பீடிக்கப்படுவதாக வைத்துக்கொள்வோம். அவ்விதம் பீடிக்கப்படும் வியாதியஸ்தன் பிறருடைய உதவியைக் கோரவேண்டியவனாயிருக்கிறான். நண்பர்களும் பந்துக்களும் அவனுக்கு வேளா வேளைகளில் மருந்துகொடுத்து ஆகாரங்கொடுத்துக் கங்கணங்கட்டிக் கார்க்கவேண்டியிருக்கிறது. சுற்றத்தார் நன்னோக்கமுடையோராயிருந்தால் பாதகமில்லை; சிறிது ஏறுமாறாயிருப்பார்களேயாயின் வியாதியஸ்தனின் பாடு அம்பலந்தான்; போலிச் சுற்றத்தார்க்குத் தான் பெரும் பாரமாயிருப்பதை நினைத்து நினைத்து உருகுவான். சுகங்கெட்டுப்புவியில் வாழ்வதைக் காட்டிலும் மறலி (கூற்றுவன்) யால் கட்டுண்டு கண் மூடுவதே நலமென்றும் அவனுக்குத் தோன்றுவது ஸகஜம். காலை முதல் மாலை வரையில் பலவிதமானவேலைகள் செய்து சொற்ப ஊதியம் பெற்றுக் காலங்கழிக்கும் கூலிவேலைக்காரன் அந்த ஊதியத்தைவைத்துக் கொண்டு சௌக்கிய ஹீனமில்லாது இருக்க, பொன் வெள்ளியினாலாய தட்டுகளில் உண்பதும், மரஞ்செடி கொடிகளாற் சூழப்பெற்ற பூங்காவனத்திற்கு மத்தியிற்கட்டியிருக்கும் அரண்மனையினுப்பரிகையின்கண் பட்டு வேய்ந்த பஞ்சணைமெத்தையிற் பலவிதமான இயற்கைச் சுகமனுபவிக்கக் கூடிய வியாதி வாய்ச்சிக்குண்ட கோடீசுவரன் நித்திரைகெட்டுத் தவிக்கவுங் கூடும். என்ன தாரதம்மியம் பார்த்தீர்களா! சுருக்கிச்சொல்லின் வியாதியினாற் பீடிக்கப்படுவது ஒரு தொல்லை; அவ்வியாதி வந்தவிடத்துப் பராமரிப்ருமில்லாமற் போனால் அதினினுந்தொல்லை வேறு வேண்டுவதில்லை.

அப்போதே சுகத்தினருமை நன்றாய்த்தெரியும். வெயிலிற் சென்றால் தானே நிழலருமை நன்கு தெரியும். அதுபோல வியாதிவராது காத்துக்கொள்ள வேண்டுமாயின், சுகமாயும் சௌக்கியமாயும் இருப்பதையே நாம் கவனிக்க வேண்டும்.

### சுகக்கேடு உண்டாவதேன்?

ஒரு குடும்பத்தில் பெரியோருஞ் சிறியோருமாக ஐந்தாறுபேர்களிருக்கிறார்கள். அவர்களில் ஒருவருக்குக் கால்வலித்தோ, தலைவலித்தோ அல்லது ஜுரங்கண்டோ விடும்பக்ஷத்தில் அக்குடும்பத்தவர் எல்லோருக்கும் பெருஞ்சங்கடம் உண்டாய்விடுகிறது. வியாதி எப்படி முடியுமோவென்று விசாரமுங் கவலையுங் கொண்டவர்களாகிறார்கள். வீட்டுக்குப் பெரியவர்களாயிருப்பவர்களுக்கு இம்மாதிரி உண்டாகுமேயானால் அவர்களுடைய வேலையை மற்றவர்கள் பார்க்கும்படி நேரிடுகிறது. அப்படிப் பார்த்தபோதிலும் அவ்வேலை எஜமானன் பார்ப்பதுபோல் திருப்திகரமாயிருக்குமென்பதற்கு நிச்சயமென்ன? வியாதியஸ்தருடைய மருந்துச் செலவுக்கும் மற்றவிதமான சௌக்கியங்களுக்கும் ஆதாரபூதமாயிருப்பது பணமாதலினாலே, அப்பணத்தை குடும்பத்திலுள்ள மற்றவர் சம்பாதித்துக் கொடுக்க முடியுமென்பதற்கு நிச்சயமென்ன? மருந்துகொடுக்கும் டாக்டருக்கும் மருந்துகளுக்குப் வேண்டிய பணம் அக்குடும்பத்திலுள்ளதென்பதற்கும் ஆதாரமென்ன? இவை யெல்லாவற்றையும் ஆழ்ந்து யோசிக்கையில் ஆரோக்கியமே பாக்கியமாகுமென்றும், ஆரோக்கியவானே பாக்கியவான் என்றும் ஏன் மதிக்கலாகாது? ஒருவன் எவ்வகைப்பட்ட வியாதியினால் பீடிக்கப்பட்டிருந்தபோதிலும் சரி, சிற்சில மந்தமதிகள் 'அவனது கர்மம், அவனை வியாதி பீடிக்கிறது' என்று வாய்க்கு வாய் சொல்லுவார்கள். கர்மம் என்னும் அம்சம் பெரிய விஷயம். அதைத் தர்க்கித்து வியாக்கியானத்திற்குக் கொண்டுவர எமக்கு இஷ்டமில்லை. மொத்தத்தில் கர்மம் என்று அம்மந்தமதிகள் சொல்லுவது விதியைப் பின்பற்றியதாதலின் 'அவன் தலையில் பிரமன் அம்மாதிரி யெழுதிவிட்டான், அவனை வியாதி பீடித்திருக்கிறது' என்று சொல்லியும் சிலர் தாளம் போட்டுக்கொண்டிருப்பார்கள். இவ்விடத்தில் விதிப்பயன் என்பது ஒருபுறமிருக்க, அவ்விதிப்பயனை மாற்ற ஏன் மதியையுபயோகிக்கலாகாதென்று யாம் ஒரு கேள்வி கேட்போம். விதியை மதியால் வெல்லலாமென்பதற்கு பற்பல நிரூபணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதையொப்ப அவனுக்குச் சுகக்கேடு வந்தது, அவன் தலைவிதி, அவன் தலையெழுத்து என்று வாய்க்கு வாய் சொல்லுவதை விட்டு, அவ்விதம் ஏன் வந்தது, பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் பஞ்சபூதங்களால் சூழப்பெற்ற இப்பூவுலகின் கண்ணுள்ள பலவகைப்பட்ட பதார்த்தங்களைக்கொண்டே ஏன் வியாதியைப் போக்கலாகாது, அப்பதார்த்தங்களில் எவையெவை வியாதியை உற்பவிக்கும் மூலங்களாயிருக்கின்றனவென்னும் விஷயங்களை மற்றோர் முறை விரிவாய் எழுதுவோம்.

# PART III.

## KNOWLEDGE ON AGRICULTURE, etc.

BY Mr. G. RAJAGOPAL,

*Late Editor "South Indian Agriculture."*

## விவசாய ஞானம்.

(15-ம் பக்கத் தொடர்ச்சி.)

அரிசிச்சாதம் சாப்பிடுகிறவர்கள் பருப்பையும் நெய்யையும் கலந்து சாப்பிடவேண்டும். பருப்புவகைகள் அதிகமாய் விளையாத மங்களூர், பங்காள ராஜாங்கம் முதலிய இடங்களில் ஏன் சாதத்துடன் மீனைச்சேர்த்து உணவுசெய்கிறார்கள், "தக்ராந்தானி போஜனம்" என்று ஏன் தயிரை உபயோகிக்கவேண்டும். காப்பி, தேத்தண்ணீர் முதலிய பானங்களினால் என்ன கெடுதி? நீர்மோர், பானகம் இவைகளினால் என்ன பயன்?

பின்னும் நம்முடைய தேசத்தில் அங்கங்கேயுள்ள ஜனங்களின் உடுப்புகளைப் பார்த்தால் அங்கங்குள்ள சீத உஷ்ண நிலைமையை அனுசரித்து ஆடைகள் வேறுபட்டிருப்பதாகத் தெரிகிறது. குளிர் குறைந்து வெப்பம் அதிகமுள்ள திருநெல்வேலி ஜில்லாவில் துணிகள் உடுத்துவதே மிகக் குறைவல்லவா? சீதகாலத்தில் குளிர் அதிகமும் வெயில் காலத்தில் உஷ்ணம் அதிகமும் உள்ள பல்லாரி கர்னூல் கடப்பை ஜில்லாக்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் துணிகள் உடுத்துவது அதிகமே. இவ்விடங்களிற் தலைப்பாகை மிகப்பெரியது. குளிர் அதிகமுள்ள மைசூர் ராஜ்யத்தில் புடவைகள் அநேகமாய்க் கருப்பு. இவ்வாறு சீத உஷ்ண பேதத்துக்குத் தகுந்தமாதிரி அங்கங்கே உடைகள் நிறத்திலும் ஏற்றத்தாழ்விலும் வேறுபட்டிருப்பதால் குளிர்தேசமாகிய ஐரோப்பியகண்டத்திய ஆடைகளை உஷ்ண தேசத்திலுள்ளவர்கள் தகுந்த காரணமின்றி 'ஷோக்குக்'கென்றே ஏன் மாற்றிக்கொள்ளவேண்டும்? கைகால் பிடிப்புள்ளவர்களும் குதிரைச் சவாரி செய்கிறவர்களும் காட்டில் திரியவேண்டியவர்களும் குளிர்நாட்டில் இருப்பவர்களும் ஐரோப்பிய உடையை அனுசரிப்பது நியாயம்.

விஷய ஞானம் பூர்ணமாக நமது ஜனங்களுக்கு இருக்கும் பக்ஷத்தில் தேசகால வர்த்தமானம் இவைகளை அனுசரித்துப் புதிய கொள்கைகளை அவலம்பிப்பதும் பழையமுறைமைகளைக் கைவிடுவதும், தேச க்ஷேமத்துக்கும் தேக ஆரோக்கியத்துக்கும் பொருந்திய விஷயங்கள்.

இவ்வாறு ஞானம் தேசத்தில் பரவவேண்டுமென்னும் எண்ணத்தால் இந்தப் புதிய சஞ்சிகை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது விஷயமாயும் தேசத்தின் க்ஷேமம் விஷயமாயும் பாடுபடும் ஒவ்வொருவரும் கைகலந்து

பாடுபட்டு மௌடிகம் என்பதைத் தூக்கி வேதங்கள் உபநிஷத்துகளுக்கு ஜன்ம பூமியாகிய இப்பரதக்கண்டம் பிரபஞ்சவிருத்தி விஷயத்திலும் ஞானமடைந்து இப்புண்யபூமியில் வறுமை என்பதே இல்லாமல் செய்யவேண்டுமாய் எல்லா விஷயங்களுக்கும் ஆதிகாரணராக இருக்கும் ஸ்ரீமந் நாராயணனுக்கு பல்லாண்டுபாடக் கடமைபட்டிருக்கிறார்கள்.

## செடிகள் எப்படி வாழ்கின்றன?

செடிகள் மண்ணிலிருந்தும் ஆகாயத்திலிருந்தும் ஆகாரத்தை அடைந்து உயிரோடு வாழ்கின்றன.

மண்ணிலிருந்து வேர் மூலமாக ஆகாரம் செடிக்குள் போகிறது.

வேர் எப்படி இருக்கிறது?

ஓர் அவரைச் செடியை வேர் அறாதபடி வேண்டிய மண்ணோடு அடியிலிருந்து நிதானமாய்க் கிளப்பி அம்மண்ணைச் ஜலத்தில் நனைத்துக் கழுவ மண் கரைந்துபோம். அப்போது ஆணிவேரும் ஜல்லிவேர்களும் இருக்கும். ஜல்லிவேர்கள் நுனியில் மெல்லிய மயிர்கள் உண்டு.

இம்மயிர் வேராகுமா?

ஜல்லிவேர் மறுவருஷத்தில் வலுத்தால் அதில் கட்டை உண்டாகும். அப்போது மயிர் இற்று விழுந்துபோம். ஆகவே இம்மயிர் வேராகாது.

நுண்ணிய மண்ணில் விதைத்த நெல், சோளம், கடுகு, வெந்தயம் முதலியவைகளை முளைப்பித்து இரண்டு முதல் இலை வெடித்த பின்பு பிடுங்கினால் அவைகள் மண்ணை கூண்டுகட்டினாற்போல ஏன் வெளியே கொண்டுவருகின்றன?

வேரில் நிறைந்து அமைந்த மயிர்கள் மண்ணைப்பிடித்து வெளிவருகின்றன. மணல் நிலத்தில் இவ்வாறு பிடிப்பு குறைவு, வண்டல் நிலத்தில் இப்பிடிப்பாகிய மண் கூண்டு பெரியது விதைகள் ஈரத்துணியில் முளைக்கவிட்டால் மண் இல்லாமல் என்ன விதமாய் முளை கிளம்பி வேரும் இலையும் உண்டாகின்றன? வித்து முளைப்பதற்கு ஈரமும் இருட்டும் வேண்டியிருக்கின்றன. வித்தை ஜலத்தில் கலந்து வைத்தால் அது ஜலத்தைக்குடித்து உப்பசம் அடையும். இவ்வாறு உப்பசம் அடைந்த விதைகளை சிறு மூட்டையில் கட்டிவைத்தால் சூடு கிளம்பும். இருட்டும் அதில் இருப்பதால் முளை கிளம்பும். துவரை முளைகட்டுவதைக் கவனித்தால் இது நன்றாய் விளங்கும்.

அப்போதைக்கப்போது ஈரமாக்கி வைத்தால் வேர் உண்டாகும். பின்னும் கலியாணப்பந்தலில் நவதானியங்கள் முளைத்துச் செடிகள் ஆகின்றன அல்லவா? வித்தை உலர்ந்த ஸ்திதியில் மென்றால் மாவு இருக்கும். முளை கிளம்பிய பின்பு மென்றுபார்த்தால் மாவும் இனிப்பும் கலந்து இருக்கும். பூராவும் முளை வந்துவிட்டால் மாவு இல்லாமல் இனிப்பு மாத்திரம் இருக்கும்.



இலைகள் வந்துவிட்டால் வித்து ருசியற்றுப்போம். இவ்வளவு வளர்ச்சியும் மண் சம்பந்தமில்லாமலே வித்து மாறுதலடைகிறது.

அரிசி மெல்ல மெல்ல இனிப்பாக இருக்கும். வாயில் இருக்கும் உமிழ் நீர் அரிசியின் மாவுடன் கலக்க அது சர்க்கரை ஆகிறது. ஆகவே இனிப்பாகிறது. அதுபோல வித்தில் முளை கிளம்ப அதன் மாவு சர்க்கரையாகிறது. இது ஜலத்தில் கரைந்து ஆகாரமாக இலைகள் உண்டாகின்றன. செடிக்கு ஆகாரமாகிய மாவு மாறிய சர்க்கரை ஏன் ஜலத்தில் கரையவேண்டும்?

மிருக பிராணிகள் ஆகாரத்தை மென்று தின்பதுபோல செடிகள் தங்கள் உணவை மெல்லமுடியாது. ஏனெனில் மிருகங்களுக்கு இருப்பதுபோல பற்கள் செடிகளுக்கில்லை. ஆகவே செடிகள் உணவை உரியவேண்டும். இதன் ஆகாரம் ஜலத்தில் கரைந்திருந்தாலொழிய பயன்படாது.

செடிகளின் ஆகாரம் மண்ணிலும் மண் கலந்த எருவிலும் கிடைக்கிறது. இவைகளில் செடிகளின் ஆகாரம் எந்த ஸ்திதியில் இருக்கிறது?

மண்ணும் எருவும் அனேக தாதுவர்க்கங்களால் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவைகள் கரையும் ஸ்திதியிலும் கரையாத ஸ்திதியிலும் இருக்கின்றன.

எல்லாத் தாதுவர்க்கங்களாலும் கரையும் ஸ்திதியிலிருந்தால் விளைவு அதிகமாகி பலிதம் ஏற்றமாகுமல்லவா?

அவ்வாறு இருந்தால் மழை ஜலம் எல்லாக்கரையும் தாதுவர்க்கங்களையும் அடித்துப்போய் சமுத்திரத்தில் சேர்த்துவிட்டு செடிகளுக்கு ஆகாரமே இல்லாமல் இருக்கும். அப்போது பெரும்பஞ்சமுண்டாகும்.

கரையாத தன்மையுள்ள ஆகாரம் எப்படி செடிகளுக்கு உதவுகிறது?

மண்ணைச் சிலுக்க புரட்டி புரட்டி உழுவதினால் மண் காற்றிலுள்ள பிராணவாயுவோடும் கரியமிலவாயுவோடும் கலந்து சூடேறிக் கரையும் தன்மையடைகிறது. அப்போது அது ஆகாரமாக உதவுகிறது.

கரையும் பொருளுக்கும், கரையாத பொருளுக்கும் உதாரணம் உண்டா?

சர்க்கரை, உப்பு கரையும் பொருள்கள். மணல், அறத்தூள் கரையாத வஸ்துக்கள்.

ஜலம் சூடாயிருந்தால் தாதுப்பொருள்கள் அதிகமாய்க் கரையுமா?

ஆம்.

இவ்வாறு கரைந்த ஆகாரம் செடியின் வேருக்குள் என்னமாய்ச் செல்லுகிறது?

ஒரு பாத்திரத்தில் சுத்த ஜலமும் அதன்மேல் ஒரு ஜவ்வு தோலில் சர்க்கரையோ உப்பையோ வைத்தால் ஜலத்தில் சர்க்கரை அல்லது உப்பு கலக்கிறது. அதுபோல இரண்டு விதமான வெவ்வேறு தடிப்புள்ள ஜல

த்தை ஓர் தோல் ஜவ்வினால் பிரித்தால் அதிக தடிப்புள்ள ஜலத்துக்குள் குறைந்த தடிப்பு ஜலம் பாய்வது சகஜம். இதுபோலவே பிந்துக்களால் அமைக்கப்பட்ட வேர் மயிரில் செடியின் ரசம் அதிக தடிப்பாகவும் மண்ணின் ஈரம் குறைந்த மடிப்பாகவும் இவ்விரண்டுக்கு இடையில் வேர் முனையில் ஜவ்வுபோன்ற அங்கமும் இருப்பதால் மண் கரைந்த ஜலம் வேருக்குள் பாய்கிறது. ஆகவே வேருக்குள் இருக்கும் ரசம் கெடுவதில்லை.

வேருக்குள் ரசமும் மண்ணின் ஈரமும் ஒரே தடிப்பாயிருந்தால் என்ன உண்டாகும்?

செடிக்கு ஆகாரம் உதவாமல் செடி மாண்டுபோம்.

ஆகாரம் எல்லாம் கரைந்த தன்மையிலேயே இருக்கவேண்டுமா?

ஆம்.

மண் ஈரத்தில் கரையாத பொருளை செடி ஆகாரமாக்குமா?

ஆக்கும். வேர் முனையில் ஒருவித புளிப்பு திராவகம் உண்டாகி மண்ணில் படும். அது மண்ணைக் கரைத்து ஜலத்தில் சேர்ந்து ஆகாரம் உதவுகிறது.

(இன்னும் வரும்.)

---

## COMMERCE AND INDUSTRY.

## வர்த்தகமும் கைத்தொழிலும்.

### ரப்பர்.

வர்த்தகமின்றிக் கைத்தொழிலில்லை; கைத்தொழிலின்றி வர்த்தகமில்லை; எனவே இரண்டிற்கும் நெருங்கிய பாந்தவ்யமுண்டு. ஒன்றைப் பற்றி ஒன்றை விடுதல் சாத்தியமன்று; ஒன்றையெடுத்தால் மற்றொன்றும் தானேவந்து சேரும். ஆகவே யிரண்டிற்கும் உருவத்திற்கும் அதன் சாயைக்குமுள்ள இணைபிரியாத் தன்மையைப்போல சினேகத்துவமுண்டு. ஆனது பற்றி வர்த்தகாபி விருத்தியை நாடுவோர் கைத்தொழிலாளராகவாவது, கைத்தொழில்வேலைகளில் ஆர்வங்கொண்டவராகவாவது அவசிய மிருத்தல் வேண்டும். இஷ்டஸித்தியைப் பூர்த்தியாக்குவிக்கும் பூமணம்பெற்ற வர்த்தகத்துறையைப் பின்பற்றி நடப்போர்க்குக் கைத்தொழில் இன்றியமையாததலின், இப்போது ரப்பர்த் தொழிலைப்பற்றிச் சிறிது கூறுவோம்.

சிலகாலத்திற்கு முன் வரையில் அதிகமாயுபயோகப்படாதிருந்த ரப்பர் இப்போது எங்கும் வியாபகமாயிருக்கிறது. பெரும்பான்மையான வேலைகளுக்குப் பலபேர் ரப்பரையே உபயோகித்து வருகிறார்கள். சித்திர வேலைக்காரர் சித்திரமெழுதுகையில் ஏதாவது பிசகாகக் கோடுகள் பென்சிலால் போடும்படி நேர்ந்தால் அவைகளை அழிப்பதற்காக முதன் முதல் இந்தியா ரப்பரை உபயோகப்படுத்தினர். இது ஒரு மரத்தின் பிசினியேயல்லாது வேறொன்றுமல்ல. இதைப் பண்டைக்கால சாஸ்திரஜ்ஞர்கள் கௌசூக் என்று சொல்லி வந்ததுமுண்டு. கொஞ்சகாலத்திற்குப் பிறகு இளங்குழந்தைகள் விளையாடுவதற்கான சிறிய பந்துகள் ரப்பராலேயே செய்யப்பட்டன. கால் பந்தின் உட்புறத்திலுள்ள மிருதுவான பாகமும், குழந்தைகள் விளையாடுதற்கேற்ற பொம்மைகள் பலவும், நாவினால் நக்கினாலுங் கூட எவ்விதமான கெடுதியையுங் கொடாத விளையாட்டுப் பண்டங்கள் பலவும் ரப்பராலேயே செய்து வைக்கப்பட்டிருப்பதை நாம் கடைகளிற் காண்கிறோம். மற்றும் வெந்நீர் போட்டுக் கொள்ளுதற்குரிய புட்டிகளென்ன, வியாதியஸ்தர்களின் படுக்கைகளுக்கான விரிப்புகளென்ன, தொட்டிகளென்ன, தண்ணீர்ப்பட்டால் தெறித்துப்போகும்படியான சட்டைத்துணிகளென்ன (waterproof cloths) ஆகிய இவையனைத்தும் சிறிது சிறிதாக முன்னிடலாயின. லண்டன் நகரத்தில் முதன் முதலாக இங்குமங்கும் சிற்சில ஷாப்புக்கடைக்காரர்கள் ரப்பரையும் ரப்பர் பண்டங்களை வைத்து விற்பனை செய்து வந்தார்கள். பிறகு ரப்பரால் அதிக உபயோகம் ஏற்படுவதையும் அதன்மீது ஜனங்கள் அதிக அபிலாஷை காட்டுவதையும் நோக்கிய வியாபாரிகள் பலர் எந்த விதத்தில் ரப்பரை அபரிமிதமாகச் சேகரித்து வர்த்தகத்திற்கேற்ற பொருளாய் வைத்துக்கொள்ளலாமென்று சிந்தித்துக்கொண்டிருந்தார்கள். அத்தருவாயில் மின்சாரவிசை நவீனம் (electricity) தோன்ற ரப்பருக்கு விசேஷ கிராக்கி ஏற்படலாயிற்று. ரப்பர் உருளைகளுக்கும் ரப்பர் குழாய்களுக்கும் பின்னும், இயக்கும் யந்திரக்கருவிகளின் ஜாயிண்டு (சேர்க்கை)களுக்கும் ரப்பரைத்தவிர மற்றொன்றை யுபயோகிப்பது சுவாரஸ்யமாகத் தோன்றவில்லை. எங்கு பார்த்தாலும் ரப்பருக்குப் பெருங்கிராக்கியும் நல்லபெயரும் உண்டாயிருந்தது.

ஆபிரிகா கண்டத்தைச் சேர்ந்த காங்கோ பிராந்தியத்துக் காடுகளிலும் தென் அமெரிகாவைச் சேர்ந்த அமேஸான் பிரதேசங்களிலும் ‘கொப்புக் கட்டுக் கடங்காது ரப்பர்மரங்கள் வளர்ந்தோங்கி ஆகாயத்தை யளாவி நின்றன. அம்மரங்களிலிருந்து ஒழுகும் பிசினைக் கொண்டுவருவதென்றால் அடவிக்குள் போய்த்தான் தீரவேண்டும். அவ்வடவிகளைச் சார்ந்த ஜனங்களுக்கு ரப்பரின் அருமை பெருமைகள் தெரியவில்லை. என்றாலும் அதிக கூலி கிடைப்பதை அவர்கள் தம்மதிர்ஷ்டமென்று நினைத்து தைரியமாகக் காடுகளிற் கூட்டங் கூட்டமாகப் பிரவேசிப்பதும், ரப்பர் பிசினைக்கொண்டுவந்து கொடுப்பதுமாக வேலைசெய்து வந்தார்கள். இம்மட்டுமா? அக்காலத்தில் ரப்பர்கொண்டு வருவதன் நிமித்தம் மேற்சொன்ன பிராந்தியங்களிலுள்ள ஜனங்கள் அடிமைக்குங் கீழ்ப்பட்டு வேலைசெய்துமிருக்கிறார்களாம். அப்போதிருந்த எஜமானர்களாயினோர் தம் வேலையாட்களை ரப்பர் சேகரிக்குந் தொழிலுக்காக வேண்டி அல்லற்படுத்திய விவரங்களை யெழுத இப்போது எம் கையோடவில்லை. பிரம்மாண்டமான மரங்களும் புதர்களும் நீர்துவக்கங்களும் பள்ளத்தாக்குகளும் கொடியமிருகங்களும் நிரம்பித் துஷ்டர்களின்

களங்கமுற்ற கடூர ஹிருதயம்போலிருக்கும் கறுங் கானகத்தைப் போன்ற பீதியைத் தரத்தக்க வகையாக ரப்பர்கொண்டு வரும் வேலையில் அமர்ந்திருந்தோர் கதை சொல்லுவார்களென்றால், அத்தொழில் எவ்வளவு துன்பமாயிருந்திருக்கவேண்டும் பாருங்கள்.

இதர பயிர்களைப்போல ரப்பரையும் ஏன் பயிரிடலாகாதென்று சில தோட்டக்காரர்கள் கருதி பெரும் விஸ்தீரணமுள்ள நிலத்தைச் சொந்தமாகவோ குத்தகைக்கோ வாங்கி ரப்பரை பயிரிட்டுப் பெருத்தலாபம் பெற்றார்கள். சிறுகச் சிறுக அத்தொழில் தேசம் தேசமாகப் பரவலாயிற்று. ரப்பர் தோட்டம் வைத்தவர்கள் அத்தொழிலின் சூக்ஷமத்தை யறிந்து வேலை செய்ததன் பலனாகத் தனவந்தரானார்கள். மலாய் நாடுகளிலும், ஸிலோனிலும், பீனாங்கு, சிங்கப்பூர் முதலான பிரதேசங்களிலும் ரப்பர் தோட்டங்கள் ஏற்பட்டு, அவைகளில் கூலிவேலைசெய்ய ஆயிரக்கணக்காய் இந்தியர்கள் செல்லலாயினர். சிற்சில விடங்களில் காபித் தோட்டங்கள் கூட ரப்பர் தோட்டங்களாக்கப்பட்டன. இயற்கைக்கும் செயற்கைக்கும் எப்போதும் வித்தியாசமுண்டல்லவா? இயற்கை யழகே அழகாகுமன்றி செயற்கை யழகு அழகாகமாட்டாதென்பது உலகமறிந்த சித்தாந்தம். அப்படிக்கிருக்க, அடவிகளில் யதேச்சையாய் மரங்களிலிருந்து அபரிமிதமாக ஒழுகும் ரப்பர் பிசினுக்கும், புதியமரம் வைத்துப் பயிரிட்டு அதினின்று செயற்கைப்பயனாகக் கிடைக்கும் ரப்பருக்கும் பிசினுக்கும் வெகு தாரதம்மியமுண்டு. பாரா, ஸியாரா இவ்விடங்களில் ரப்பர் செய்யப்படுகின்றதாயினும், அது கானகத்திலகப்படும் இயற்கை ரப்பரைப் போல் அவ்வளவு உறுதியாயிருக்கக் காணோம். ஆயினுமென் செய்வது? உலகம் முழுவதிலும் ரப்பரின் தீர்மானமான உபயோகம் நன்றாய்த் தெரிய வரவே ஆங்காங்கு பலர் ஒன்றுசேர்ந்து பங்குகள் எடுத்துக்கொண்டு கூட்டு வியாபாரம் செய்யத் தலைப்பட்டார்கள். ஏராளமான லாபமும் புரளலாயிற்று. மலாய் நாட்டிலுள்ள லிங்கிதோட்டத்தைப் பொறுத்தமட்டில் பங்கு ஒன்றுக்கு இரண்டு ஷில்லிங் (அதாவது ஒன்றரை ரூபாய்) ஆகவிருந்தது இப்போது மூன்று ஸவரனை (45 ரூபாயாக) ஏறியிருக்கிறது. இந்தியக் கூட்டுவர்த்தகக் கம்பெனிகளில் முதலாவதான பெரியாறுகம்பெனியில் பங்கு ஒன்றுக்கு 10 ரூபாயாகவிருந்தது. இப்போது 150 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இந்த விதமாக இத்தொழிலில்ஏராளமான லாபம் வருவதைக்கண்ணுற்ற தனிகர் பலர் ரப்பர் தோட்ட வேலையில் கண்ணுங் கருத்துமாயிருந்து வருகிறார்கள். தற்போது அடவி ரப்பரைக்காட்டிலும் பயரிடப்படும் தோட்ட ரப்பரே உலகெலாம் பரவியுள்ளது. 1909-ம் வருஷத்திலே உலகம் முழுவதிலும் 70,000 டன் ரப்பர் எடுபட்டதென்றாலும் தோட்டப்பயிரிலிருந்து கிடைத்த ரப்பர் 3,000 டன்னுக்கு அதிகமில்லை. சென்ற வருஷத்திலே பிரிடிஷ் தோட்டங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட ரப்பர் 70,000 டன்னுக்கதிகமிருக்க, அமேஸான் காடுகளிலிருந்து ஏற்றுமதியாக்கப்பட்டது 34629 டன்னுக் கதிகமில்லை. கொஞ்சங் கொஞ்சமாக தோட்ட ரப்பரை வர்த்தகர்களின் மனோபீஷ்டத்தை யனுஸரித்து ரசாயன சாஸ்திர நிபுணர்கள் எத்தனையோ விதமாகப் பரிசீலனை செய்து உலகத்தவர் ஒப்பும்படி செய்திருப்பது ரப்பர் பரிசீலனைக்காக வைத்திருக்கும் இம்பீரியல் இன்ஸ்டிடியூட்டாரின் (Imperial Institute) தீவிரமான முன் யோசனையை நன்றாய் விளக்குகின்றது.

# PART IV.

## HINDU LAW.

## ஹிந்துலா.

ஹிந்துலாவின் வரலாறு முதலிய முக்கியமான விஷயங்களைப்பற்றிய போன சஞ்சிகையில் கூறப்பட்டது. ஹிந்துலா விஷயமாக சொல்லப்பட வேண்டிய சங்கதிகளில் முதல்முதல் எடுத்துக்கொள்ளவேண்டிய விஷயம் விவாகத்தைச் சேர்ந்ததாக இருக்கிறது. விவாகவிஷயங்களைப்பற்றிப் பேசுமுன் ஹிந்து மதஸ்தர்களாய் இருந்தவர்கள் அன்னியமதங்களில் சேர்ந்துவிட்டால் அவர்கள் ஹிந்து மதஸ்தர்களாயிருந்தபொழுது அவர்களுடைய குடும்பத்தில் இருந்த சொத்தில் இவர்களுக்கு இருக்கும் பாத்தியா பாத்தியதைகளைப்பற்றிக் கூறிவிட்டு விவாகத்தைப்பற்றி விவரமாய்ச் சொல்லப்படும்.

கேழ்வி:—ஹிந்து மதஸ்தன் ஒருவன் கிரிஸ்தவ மதத்தில் சேர்ந்து விடுகிறான். அவனுக்கு ஹிந்து லா சம்பந்தப்படுமா?

ஜவாப்:—சம்பந்தப்படமாட்டாது.

கேழ்வி:—அவனுக்கு எந்த ஆக்ட்டு சம்பந்தப்படும்?

ஜவாப்:—ஹிந்துக்களுக்கு ஹிந்து லா எப்படியோ அதுபோல் கிரிஸ்தவர்களுக்கு இண்டயன் ஸக்ஸெஷன் ஆக்ட்டு, (Indian Sucession Act) அதாவது இந்தியன் வார்ஸ் ஆக்ட்டு என்று ஒரு சட்டம் ஏற்பட்டு இருக்கிறது. அந்தச்சட்டந்தான் சம்பந்தப்படும். 2-ம 209 ; 6-கல், 794 ; 11. ம-209; 23-பம். 543 ; 10-பம். 183 ; 9-ம-169.

கேழ்வி:—அவன் கிரிஸ்தவன் ஆகிறதற்குமுன் அவன் குடும்பத்திலிருந்த சொத்தில் அவனுக்கு உள்ள பங்கு கிடைக்குமா?

ஜவாப்:—அவனுக்குப் அக்குடும்பசொத்தில் பங்கு கிடைக்கும் (1850-ம் ஹு த்திய 21-வது ஆக்ட்டைப்பார்க்க.)

கேழ்வி:—ஹிந்துவாகயிருந்த ஒருவன் மகம்மதிய மதத்திற்சேர்ந்துவிடுகிறான். அவனுக்கு எந்த லா சம்பந்தப்படும்.

ஜவாப்:—அவனுக்கு மகம்மதிய லாத்தான் சம்மந்தப்படும்.

கேழ்வி:—அவன் மகம்மதிய மதத்தில் சேருவதற்குமுன் அவன் குடும்பத்திலுள்ள சொத்துக்களில் அவனுக்கு ஹிந்து லாப்படி பங்கு கிடைக்குமா?

ஜவாப்:—அவன் மகம்மதிய மதத்தில் சேருவதற்குமுன் அவன் குடும்பத்திலிருந்த சொத்து விஷயமாய் ஹிந்து லாவும அவன் மகம்மதிய மதத்தில் சேர்ந்த பிறகு சம்பாதித்த சொத்துக்களுக்கு மகம்மதிய லாவும் சம்பந்தப்படும் (10-மூர்-இ-அ-537 ; 10-பம்-1.)

கேழ்வி:—ஹிந்துவாகயிருந்த ஒருவன் மகம்மதிய மதத்தில் சேர்ந்த பிறகும் ஹிந்துக்களுடைய அனுஷ்டானங்களையே அனுஷ்டித்துக்கொண்டு வருகிறான். அவனுடைய சொத்துகளுக்கு ஹிந்து லா சம்பந்தப்படுமா? மகம்மதிய லா சம்மந்தப்படுமா?

ஜவாப்:—மேற்கண்டபடியானால் அவனுக்கு ஹிந்து லாத்தான் சம்மந்தப்படும்.

கேழ்வி:—அப்படிச்சொல்வதற்கு ஆதாரங்களிருக்கிறதா?

ஜவாப்:—ப்பம்பாய், கல்கத்தா, ஹைக்கோர்ட்டுத்தீர்ப்புகளிருக்கின்றன.(6-பம் 452; 9-பம், 115; 10-பம் 1; 20-பம் 57; 3-கல் 694.)

கேழ்வி:—இதைப்போலொத்த வேறு திருஷ்டாந்தங்களேதேனும் இருக்கின்றதா?

ஜவாப்:—பம்பாய் இராஜதானியில் கோஜா ஜாதியார்களென்றும், கச்சிமேமன் ஜாதியார்களென்றும் இருக்கிறார்கள். இவர்கள் மகம்மதிய மதத்தைப் பின்பற்றினவர்கள். ஆனால் அவர்களுடைய அனுஷ்டானங்கள்மட்டும் ஹிந்து மதத்திற்குரிய தர்ம சாஸ்திரங்களின்படிக்குள்ளவைகளாக யிருந்து வருகின்றன. ஆகையால் அவர்களுக்கு ஹிந்து லாவே சம்மந்தப்படுகிறது (1-பம். ஐ-கோ-ரி-71, 72; 2-பம் ஐ-கோ-ரி; 292; 12-பம் ஐ-கோ-ரி-294; இ-லா-ரி. 3-பம் 34; இ-லா-ரி-6-பம் 452; இ-லா-ரி-9-பம்-115; இ-லா-ரி-10-பம்-1.)

இது நீங்கலாக பௌத்தர், ஜெயின்னியர், ஸீக் ஜாதியார், பிரம்ம ஸமாஜத்தைச்சேர்ந்தவர்கள்—இவர்களும் வெவ்வேறு மதத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் அவர்கள் ஹிந்து தர்ம சாஸ்திரப்படிக்குள்ள அனுஷ்டானங்களின்படி நடந்துவருவதால் அவர்களுக்கும் ஹிந்து லாவே சம்மந்தப்படுகிறது. (8 வீக்லி ரிப்போர்டர் 116; 10 பம். ஐ-கோ-ரி-258; இ-லா-ரி-1 அல-688.)

கேழ்வி:—ஹிந்து லா எதிலிருந்து உண்டாச்சுது? அதன் வறலாறென்ன?

ஜவாப்:—ஹிந்து லாவென்பது தெய்வீகமாய் ஏற்பட்ட சுருதி, ஸ்மிருதி, முதலானவைகளின் மூலமாய் ஆதரிக்கப்பட்டு தொன்று தொட்டும், வம்சபரம்பரையாகவும் அனுஷ்டானத்திலிருந்து வருகிற சட்டத்தொகுதியாயிருக்கிறது.

கேழ்வி:—சுருதி என்பதும் ஸ்மிருதி என்ன பாஷையிலிருக்கின்றன?

ஜவாப்:—தேவ பாஷையான ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்து வருகின்றன.

கேழ்வி:—அப்படியானால் ஐரோப்பிய நியாயாதிபதிகளும், ஸம்ஸ்கிருத பாஷை தெரியாத மற்ற நியாயாதிபதிகளும், ஹிந்து லாப்படி வருகிற கேசுகளை எப்படி பைஸல் செய்து வந்தார்கள்.

ஜவாப்:—ஹிந்துலாப்படி கேசுகள் விசாரணை செய்யப்படும்பொழுது ஒவ்வொரு நியாய ஸ்தலத்திலும் சுருதி ஸ்மிருதிகளில் நிபுணர்களான பண்டிதர்களை கூடவைத்துக்கொண்டு அவர்களுடைய அபிப்பிராயத்தையும் கலந்துக்கொண்டு பைசல்செய்துவரப்பட்டது. இப்படி 1859-ம் வருஷம்வரை நடந்தேறி வந்தது. அதற்குள் சுருதி ஸ்மிருதிகளை எல்லாம் இங்கிலீஷில் தர்ஜமாச்செய்து வைத்துக்கொண்டு நியாயாதிபதிகளே ஷை கேசுகளை பைசல் செய்துவருகிறார்கள். (இன்னும் வரும்)

# PART V.

## CO-OPERATION IN AGRICULTURE.

BY THE HON'BLE DIWAN BAHADUR L. D. SWAMIKANNU PILLAI, M.A., B.L., L.L.B.,
*Registrar of Co-operative Societies.*

## விவஸாயத்திற் கூட்டுறவு.

(24-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸாத்தியப்படும்போது விவசாயி தான் வாங்கியிருக்கக்கூடிய வட்டிக் கடன், ஒன்றரை வட்டிக்கடன் ஆகிய இவைகளை எப்படித் தீர்க்க வியலும்? வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த வகையறியாது ததும்பித் தத்தளித்துக் கடைசியில் தனக்கு இருக்கக்கூடிய பித்ரார்ஜ்ஜிதத்தையோ சுயார்ஜ்ஜிதத்தையோ கடன் கொடுத்தோர் கைவசம்விட்டுத் தலையில் துணி போட்டு நடுவீதியில் நின்று நாராயணா வென்று ஓலமிட்டுக் குஞ்சு குழந்தைகள் ஸகிதம் இரப்புமன்றூடு கதியடைகின்றனர். என்னே பாவம்! கடன் வாங்குவதனால் உண்டாகுந் தொல்லைகள் பலவுள்ளன. கடன் வாய்ப்பட்டுழலும் விவசாயி அதனின்று எவ்வகையில் மீண்டு உலகத்தில் நாணயமாக உஜ்ஜீவிக்கலாமென்பதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வளவுதூரம் உபகரிக்கின்றன வென்பதைச் சிறிது கவனியுங்கள். இவ்விராஜதானியில் சற்றேறக்குறைய 1700 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அவ்வச்சங்கத்தைச் சேர்ந்த விவசாய மெம்பர்கள் தம் கிருஷித் தொழிலின் நிமித்தம் ஷை சங்கங்களிலிருந்து சொற்ப வட்டிக்குக் கடன்பெற்றுத் தொழிலை மலினமாக்காது நடத்திவருகிறார்கள். வேண்டும்போது பணம் கிடைக்கவும், அவ்விதம் கிடைக்கும் பணம் அதிக வட்டியில்லாதிருக்கவும் இடந்தருகின்ற இப்பரஸ்பரோபகாரக் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனையிருப்பினும் நம் நாட்டிற்கு அதிகமாகாது; எனினும் வருஷமொன்றுக்கு 250 சங்கங்களுக்கு அதிகமாக பதிவு செய்யப்படக் காணோம். வேலைவாதேவிக்குரிய வசதிகளுங் கொடுத்து மேற்பார்வை திறமையாயிருக்கக்கூடிய நிலைமையில் ஸ்தாபகர்களையும் அமர்த்தும் பக்ஷத்தில் இன்னும் பல சங்கங்கள் அமுலுக்குவந்து ஏழைகளுக்குப் பெரிதும் பலன் கொடுக்குமென்பதற்கு ஆக்ஷேபமில்லை.

குறைந்த வட்டிக்குப்பணம் அகப்படும் படியான வழிகள் விவசாயிகளுக்குப் பரஸ்பரோபகாரக் கூட்டு நிதிச்சங்கங்கள் மூலமாய்க் காண்பிக்கப்பட்டிருக்கின்றனவென்பதை இதற்கு முந்திய சஞ்சிகையிற் சொல்லியிருக்கிறோம். அதோடுகூட விவசாயிகளுக்குப் பணமுடையேற்படுங் காலத்திலும் வேளாண்மையை பொட்டிப் பணம் அவசியமாயிருக்குங் காலத்

திலும் பணங்கொடுத்து உதவுவதற்கும் திருப்திகரமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதையும் விஸ்தரித்துச் சொல்லியிருக்கிறோம். அவ்வேற்பாடுகளினால் விவசாயிகளுக்கு உண்டாகும் பலன் எப்போதும் விருத்தியாய்க் கொண்டு வரவேண்டுமானால் ‘நாணயம்’ என்னும் அம்சத்தைக் காப்பாற்றிக் கொள்வதில் அவர்கள் விசேஷசிரத்தை பூண்டிருப்பது அவசியமாகும். இன்னதேதியிற் கடனைக் கொடுப்பதாகவோ, அல்லது இன்ன தவணையிற் பணத்தைப் பகுதியாகச் செலுத்துவதாகவோ, விவசாயி ஒப்புக்கொண்டிருப்பானாயின், அதன்படி நடந்துகொள்வதினின்றும் அவன் அணுவளவேனும் பிசகி நடக்கலாகாது. பரஸ்பரோபகாரக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுபட்டிருக்கும் மூலதனத்தில் பாதிக்குக் குறையாமல் ஷை சங்கங்களால் அவைகளின் மெம்பர்களுக்கு உதவப்பட்டிருப்பது யாருமறிந்ததே. அவ்விதம் உதவியிருப்பது எதற்காகவென்றால், விவசாயிகளான சங்க மெம்பர்கள் அதிக வட்டிபேசி வாங்கியிருக்கக்கூடிய கடன்களைத் தீர்ப்பதற்காகத்தான். நிற்க, மற்றொருபாதி எம்மாதிரி உதவப்படுகிறதென்று கவனிப்போம். அத்தொகையிற் பெரும்பாகம் விவசாயிகளுக்குவேண்டிய தேவைகளின் நிமித்தம், அதாவது விதைவாங்குவது, ஸர்க்கார் கிஸ்தி செலுத்துவது, சாகுபடிசெய்வது, இருக்குங் கால்நடைப் பிராணிகளை விருத்தி செய்வது, இறந்துபோன கால் நடைகளுக்குப் பர்த்திசெய்வது. ஆகிய இத்தியாதி செலவுகளுக்காக உபயோகிக்கப்படுகிறது—இவையனைத்தும் நியாயமானவையென்பதை எவரும் ஆக்ஷேபிக்கப்போவதில்லை; இவைகளிற் போடும்பணம் வீணாகி விடுமென்றும் எவரும் சொல்லப்போவதில்லை. ஆனால் கூட்டுறவின் மூலமாக விவசாயம் எவ்வளவுதூரம் முன்னேறியிருக்கிறதென்பது ஸ்பஷ்டமாக விளங்கக்காணோம். மொத்தமாய்ப் பார்க்குமிடத்து வட்டிக்குக் கடன் கொடுக்கும் கிராமசௌகாரின் கண்டிதமான ‘கொட்டம்’ சிறிது அடங்குவதற்கு வழியுண்டு. கூட்டுறவுச்சங்கங்கள் சுலபமான வட்டிக்குக் கடன் கொடுத்து உதவுவதைக்காணும் சௌகார்கள் $1\frac{1}{2}$ வட்டி 2-வட்டிக்குக் கடன் அளித்து வந்ததற்குப் பதிலாக ஒரு வட்டி அல்லது முக்கால் வட்டிக்குப் பணங்கொடுப்பதாக முன் வருகிறார்கள். இதுவே பிரதமத்தில் கூட்டுறவுச் சங்கங்களால் ஏற்படும் பலன். மற்றும் ஒரு முக்கியமான விஷயம் கவனிக்கப்படவேண்டும்—அது தரகர்களைப் பற்றியது. தரகர்களால் உண்டாகுந் தொல்லை சொப்பத்தரமின்று. பணம்வாங்கிக் கொடுப்பதிலோ அல்லது பண்டமாற்றிக்கொடுப்பதிலோ தரகர் தாம் ஏதோ பிரமாதவேலை செய்து விடுவதாகக்கருதி இங்குமங்கும் ஓடி ஏதேனும் இல்லாததும் பொல்லாததுமான வார்த்தைகளைப் பசப்பி நடுமத்தியில் நின்று கடன் வாங்கும் விவசாயி யிடமிருந்து தரகாகக் கொஞ்சம் பணம்பெற்றுப் போய்விடுவது சகஜமாயிருக்கிறது. இதில் ஏழை விவசாயிக்கு நஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல.

# PART VI.

## EDUCATION.

BY THE HEADMASTER OF A HIGH SCHOOL.

## கல்வி.

(28-ம் பக்கத்தொடர்ச்சி.)

### இது.

நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி
புல்லுக்கும் அங்கே புசியுமாம்—தொல்லுலகில்
நல்லோர் ஒருவர் உளரேல்அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை.

என்றவாறு அந்நியசாதிப் பிள்ளைகள் யார்வந்தாலும் ஷை கலாசாலையில் (விருதுபட்டியிலுள்ள க்ஷத்ரிய வித்யாசாலையில்) யாதொரு சம்பளமுமின்றி சேர்த்துக்கொண்டு கல்விகற்பிக்கப்பட்டது. அப்பால் அது (Secondary) ஸ்கூல் ஆயிற்று அநேகம் ஆயிரம் ரூபா செலவுசெய்து பள்ளிக்கூடத்துக்கென்றே ஒரு கட்டடம் கட்டப்பட்டது. அவசியத்துக்குத்தக்கவாறு ஸரியான உபாத்தியாயர்களும் நியமிக்கப்பட்டார்கள். அப்பால் அது ஹைஸ்கூலாக உயர்த்தப்பட்டது. இப்பொழுது ஷை வித்தியாசாலையில் சுமார் 1,000 மாணாக்கர்களுக்குமேல் படித்துவருகிறார்கள். பரிக்ஷைகளிலும் சரியானபடி தேறிவருகிறார்கள். ஒருகாசுக்கூடச்செலவில்லாமல் கல்விகற்பிக்கும் வித்தியாசாலை இதைப்போல வேறு நமது இராஜதானியில் எங்கேயுமில்லை யென்பது திண்ணம். இந்த கல்விச்சாலைக்கு பற்பல ஜில்லாக்களிலிருந்தும் எளியமாணாக்கர்கள் வருகிறாகள். இதுபோலவே மற்ற இடங்களிலும் உள்ள வியாபாரிகள் முதலானோர் நல் கல்விச்சாலைகளையேற்படுத்தி எளியபிள்ளைகளை முன்னுக்குக்கொண்டுவந்தால் நலமாயிருக்கும். ஷை க்ஷத்திரிய வித்தியாசாலையானது ஒரு காலேஜாக ஆகும்படி மாட்சிமைதங்கிய கவர்ன்மெண்டார் அவர்கள் கிருபைபுரியுமாறுகடவுளைப்பிரார்த்திக்கிறோம்.

மூன்றாவதான காரணம் சில பழையவழக்கங்கள். முக்கியமாக உயர்தரக் கல்விக்குக் குறுக்கே நிற்பது பாலியத்தில் விவாகம் செய்துகொள்வது. ஆதிகாலத்தில் பிராமணர் முதலானவர்கள் ப்ரம்மசாரிவிரதம் அனுஷ்டித்துக் கற்கவேண்டிய விஷயங்களை யெல்லாம் குருவினிடத்தில் கற்று, பிறகு 25, 30 வயதுக்குமேல் விவாஹம் செய்து கிருஹஸ்தராய் நல்ல பலமும் புத்திக்கூர்மையும், தேக வலுவுமுள்ள பிள்ளைகளைப் பெற்று வசித்தனர். இப்பொழுதோ முற்றிலுமாறாய் முடிந்திருக்கிறது. பிள்ளைக்கு வயது 10 நிறையுமுன்னம் கலியாணம் நடக்கவேண்டியிருக்கிறது. பெண்ணுக்கோ வயது 5 அல்லது 6 தான், என்ன விளையாட்டாயிருக்கிறது. ‘நரிக்கு விளையாட்டு நண்டுக்கு ஜீவன் போகிறது’ என்றபடி கலியாணம் செய்யும் பெற்றோர்கள் குதூகலமாய்க் கோலாகலமாய்க் கல்யாணம் முடிக்கிறார்கள். பிள்ளையின் கதியோ ஆகிறது கூடியசீக்கிரம் தகப்பனாய் விடுகிறான். கல்விகற்க நேரமில்லை தேகவலிமையும் குறைகிறது. (இன்னும் வரும்.)

# PART VII.

## NEWS AND NOTES.

## ஸமாசாரக் குறிப்புகள்.

### INDIAN WAR LOAN.

### இந்திய யுத்தக் கடன்.

மிகவும் உக்கிரமாக நடந்துவரும் இப்போதைய யுத்தத்தில் தேச பக்தியும் ராஜ பக்தியும் புனைந்த தீரர்கள் ரணகளத்தில் முன் வைத்த காலைப் பின் வாங்காது எதிரிகளைத் தாக்கி நம் பிரிடிஷ் கௌரவத்தைக் காத்து ஜயபேரிகையுடன் வெற்றிக் கொடியைநாட்டக் கங்கணம்பூண்டிருப்பது யாவருமறிந்த விஷயம்: ரணகளத்தில் ரத்தத்தைச் சிந்தியுழைக்கும் அப்பக்த சிகாமணிகளின் முயற்சி பலிதமாகும் வண்ணமும் அவர்களுக்கு எவ்வித குறைவுமில்லாது பாதுகாக்கும் வண்ணமும் செலவிட நம் மாக்ஷிமை பொருந்திய மகாராஜ சக்ரவர்த்தியார் திருவுளங் கொண்டிருக்கிறார்கள். ஜயம் நமக்குப் பிராப்தமாகும்படி யுத்தத்தை நடத்திகொண்டுபோகச் செய்யவேண்டுமானல் பணம் செலவாகிறதே யென்று கருதலாகாது. முதலிற் பணம் செலவு செய்தால் பிறகு அது தானே வந்து சேரும். அதற்காக வேண்டி இந்தியா தேசத்திலுள்ள மகா ஜனங்களும் தத்தம்மாலான வரையில் கடன் கொடுத்து உதவிப் பின்னர் வட்டி சகிதம் அசல் தொகையைப் பெற்றுக்கொள்வது உசிதமாகுமென்று கவர்ன்மெண்டார் நோடீசு மூலமாக விளம்பரஞ்செய்திருக்கிறார்கள். ஆம். வாஸ்தவமே. நமது பிராதாக்கள் தேச கைங்கர்யத்தையும் ராஜ கைங்கர்யத்தையும் மனதில் தாங்கி ரணகளத்திற்குச் சென்றிருக்கும்போது, அவர்களுடைய க்ஷேமத்தை நாம் பாதுகாத்தே தீரவேண்டும். சொற்ப தொகையானாலும் அதை, நாம் கடனாகக் கொடுத்து உதவலாமே. நமது பெட்டியில் பணத்தைப் பூட்டி வைப்பதில் யாது பயன்? ஏழரை ரூபாகொடுத்தால் 5-வருஷங்களுக்குப் பிறகு அது வட்டியுடன் குட்டி போட்டுப் பத்துரூபாயாக நம்மிடம்வந்து சேரும். பல துளி பெருவெள்ள மாகு மல்லவா? கோடிக் கணக்காய் வேண்டி யிருக்குந் தொகைக்கு நமது அற்ப தொகை எவ்விதம் போதும் என்று சிலர் நினைக்கலாம். அது சுத்த தவறு. காணி காணியாகத தானே கோடி? ஆகவே நம்மை ரக்ஷிப்பதன் பொருட்டும் ஸத்தியத்தை நிலை நாட்டுவதன் பொருட்டும். தருமத்தைப் பாதுகாக்கும் பொருட்டும் இறங்கி யிருக்கும் இவ்வைரோபிய யுத்தத்தில் நம் பிரிடிஷார் வெற்றி பெறுவதற்கு அனுகூலமாக நம்மவர் சக்தியானுஸாரம் பொருளுதவி செய்து புகழெய்துவராக!

---

### SILENT FOR 25 YEARS.

### 25 வருஷ மௌனி.

---

தூங்கும் நேரந்தவிர மற்ற காலங்களில் ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்துகொண்டோ, அல்லது ஏதேனும் ஒரு விஷயத்தைக் குறித்துப்பேசிக் கொண்டோ, இருப்பது மானிடர் இயல்பு. எந்தக் காரியத்தைச் செய்யாதிருந்தபோதிலும் வாய்திறந்து பேசாதிருக்க முடியாது. பேசாவிரதம் பூண்டிருந்தாலும், அதை ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்திற்கு அதிமாக அனுஷ்டானத்தில் வைப்பது மிகவும் சிரமம். உண்மையாகப் பிறவியிலேயே ஊமைத்தவர்கூட 'ஆ, ஊ' என்றும் 'கிர் புர்' என்றும் கத்தி அவர் தமக்குப் பேசும் அபிலாஷையிருப்பதையும் நம்மவர் பார்த்திருப்பார்கள். இப்படி யெல்லாமிருக்கையில் ஒருவன் ஒரு நாளல்ல, ஒரு மாதமல்ல, ஒருவருஷமல்ல, 25 வருஷகாலம் வாய்திறந்து பேசாது காலங்கடத்திவந்தானென்றால், அது ஒரு பெரும் அதிசயமேயல்லாமல் வேறென்ன? தாமஸ் வில்லியம்ஸ் என்ற வேல்ஸ் தேசத்தாரிலொருவர் சென்ற மாதக்கடைசி வாரத்தில் இங்கிலாண்டிலுள்ள டாபன் என்னுமிடத்தில் இறந்து போனார். அவருக்கு 71-வயது. 25-வருஷங்களுக்குமுன் அவர் தாம் வகித்து வந்த குமாஸ்தா வேலையை ராஜீநாமா செய்துவிட்டு அதுவரைசேர்த்துவைத்திருந்தஊதியத்தைக்கொண்டு காலங்கழிக்கலாமென்று டாபன் என்னுங் கிராமத்திற் சிறிய விடுதியொன்றை வாங்கி



அதில் வசிக்கலானார். ஒறு நாள் எக்காரணம்பற்றியோ தாம் இனி வாய்திறந்து பேசுவதில்லை யென்று சபதஞ்செய்து கொள்ள, அது முதல் அச்சபதத்தினின்றும் பிசகாது இறுதியில் அதை வேற்றியே தீர்த்தார். அவ்விரதம் பூண்டபின்னர் அவர் செய்த விவகாரம் அனைத்தும் காகிதத்தில் எழுதிக் குறிப்பதனாலேயே நடந்தேறினவாம. அவர் வெளியிற் செல்லும்போது துஷ்டச்சிறுவர்களும் மற்றவர்களும் அவர்மீது கல்லெறிந்தும் மற்றும் பலவிதமான வாதனைகளுக்கு அவரை உட்படுத்தியும் பார்த்தார்களாம். ஒன்றுக்கும் அவர் மசியவில்லை. ஒரு சமயம் கைகால்களின் உணர்ச்சியற்றுப் போகும் படி குளிர் மிகுந்திருந்தபோது சில பேர் அம்மௌனியின் சிறிய விடுதிக்குள் நுழைய, அப்போது அவர் நெருப்பற்ற ஓரடுப்புக்கு முன்னிலையில் தன்னிரு முழங்கால்களையும் கட்டிக்கொண்டு உட்காந்திருந்தார். வந்தவர் வெடவெடத்தனர்; மௌனியோ மனநிலை தடுமாறாது வெட்டவெளியைப்பார்த்த வாறிருந்தனர். உணர்ச்சியற்றுப் போயினரோ என்னவோ வென்று கருதிய ஜனங்கள் அவரை ஆசுபத்திரிக்கு அழைத்துச் செல்லப் பிரயத்தனித்தும் மௌனி அதற்கிடங்கொடுக்கவில்லை. எனினும் அவரை ஒரு சிறிய குடிசைக்குக் கொண்டுபோனபின்னர், அதிலேயே அவர் கண்மூடினார். கொண்ட விரதத்தை விக்னமில்லாது நிறைவேற்றிய அம்மௌனியின் மனோதிடத்தை என்னென்று சொல்லுவது! விரம, வைராக்கியம் ஆகிய இரண்டமசங்களும ஒருங்கே அமையப் பெற்ற உத்தமனென்று அம்மௌனியை ஏன் அழைக்கலாகாது?

---

### ஜன்மதின கௌரவப் பட்டங்கள்.

நமது மாக்ஷிமைபொருந்திய சக்ரவர்த்தியாரவாகளின ஜன்மதினம நாளது ஜூன் மாதம் 4உ யானது பற்றி அன்றையதினம, பிரதி வருஷத்திலும நடை பெறுவதைபொப்ப, இந்தியாவிலுள்ள பறபல கனவான்களுககு கௌரவபபட்டங்கள் அளிக்கபபட்டன. இதர மாகாணங்களிலிருக்கும் கனவான்களுக்கு இன்னின்ன பட்டங்கள் உண்டெனபதை இவவிடத்திற் கூறுவது அனாவசியம். இச்சென்னை ராஜதானியைப பொறுத்தமட்டில் எவரெவர்க்கு என்னென்ன பட்டங்கள் கிடைத்திருக்கின்றன வென்பதைப் பற்றி மட்டும் இப்போது பேசுவோம். மதிராஸ் எக்ஸிகியூடிவ் கௌன்ஸில் மெம்பரான மிஸ்டர் F. W. கில்மனுக்கு C. S. I. பட்டம். ஆற்காடு நவாபான ஸர்குலாம் மகம்மது ஆலி கான் பகதூருக்கு G. C. I. E. பட்டம். மதிராஸ் கவர்னருக்கு அந்தரங்கக் காரியதரிசியாரான மிஸ்டர் T. E. மாயருக்கும், திவான்பகதூர் புட்டண்ண செட்டியாருக்கும் C. I. E. பட்டம். சென்னை ராஜதானியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் ரெஜிஸ்டிராரான திவான்பகதூர் L. D. சுவாமிக் கண்ணுபிள்ளை யவர்களுக்கு I. S. O. என்னும் பட்டம். பொதுஜன கைங்கர்யத்தை யுத்தேசித்து மதிராஸ் பிஷப்பான ரெவரெண்ட் டாக்டர் வொயிட்ஹெட்டின் மனைவியாரான மிஸஸ் வொயிட் ஹெட்டுக்கும், செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள மிஸ்டர் J. H. மெக்ளினுக்கும் கெய்ஸாரி ஹிண்ட் பொற்பதக்கம்; மிஸஸ் எல்விஸ், மிஸஸ் மாடலி, ராவ் பகதூர் T. விஜயராகவாசாரி ஆகிய இம் மூவர்க்கும் கெய்ஸாரி ஹிண்ட் வெள்ளிப் பதக்கம், சென்னை பசசையப்பன் கலா சாலையில் சம்ஸ்கிருத பாஷா பண்டிதராயிருக்கும் ஸ்ரீமான் லக்ஷ்மண சூரி அவர்களுக்கு மஹா மஹோபாத்தியாய பட்டம்; மதிராஸ் பாங்க் தலைமைக் காஷியரான ராவ்பகதூர் பார்த்தசாரதி ஐயங்கார், வட மலையாள பப்ளிக் பிராஸிகியூடரான ராவ்பகதூர் K. நாராயணகுருப், பல்லாரி பப்ளிக் பிராஸிகியூடரான ராய்பகதூர் ராமராவ் ஆகிய இம் மூவர்க்கும் திவான்பகதூர் பட்டம். மதிராஸில் இரண்டாவது பிரெஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டாயிருக்கும் கான்ஸாஹிப் மகமமது பஸீலல்லா ஸாஹிபுக்குக் கான் பகதூர பட்டம். விசாகபட்டணம பப்ளிக் பிராஸிகியூடரான மிஸ்டர் P. சூரியநாராயண சாஸதிரி, எல்லூர் தாலூகா போர்ட் பிரெஸிடெணட் மிஸ்டர் வெங்கிடரெட்டி, ஆகிய இவர்களுக்கு ராய்பகதூர் பட்டம். 'ராவ்பகதூர்' பட்டம் அளிக்கப பெற்றவர்களின் தொகை பின் வருமாறு:—மதிராஸ் ரெவனியூ செக்ரேடரியேட் டிபுடி ரெஜிஸ்டிராரான மிஸ்டர் பொன்னையா, சென்னை பசசையப்பன் கலாசாலைப் போதகாசிரியரான மிஸ்டர் K. B. ராமநாதன். நாகப்பட்டணம் முனிசிபல் சேர்மன மிஸ்டர் K. R. குஞ்சிதபாதமய்யர். திருநெல்வேலி இந்துகாலேஜ் பிரின்ஸிபாலான மிஸ்டர் I. ஸ்ரீனிவாஸய்யர், சென்னை ஸிடி ஸிவில்

கோர்ட் ஜட்ஜு மிஸ்டர் C. R. திருவேங்கடாசாரியார், கோதாவரி ஜில்லாமெடிகலாபிஸர் ராவ்ஸாஹிப் சந்திரசேகரமுதலியார், சென்னை டிபுடிகலெக்டர் மிஸ்டர் P. நாராயண மேனன். சென்னை டிபுடி கலெக்டர் மகம்மது பஸுடல்லா ஸாஹிபுக்குக் கான் ஸாஹிப் பட்டம். அடியிற் குறித்தவர்களுக்கு ராய்ஸாஹிப் பட்டம் அளிக்கப்பட்டிருக்கிறது:— சென்னை டிஸ்டிரிக்ட் ரெஜிஸ்டிரார் மிஸ்டர் V. சுப்பராவ். சென்னை ஸிவில் அபாதிகரி மிஸ்டர் B. ராகவேந்திர ராவ். பார்ஹாம்பூர் ரிடைர்ட் டிபுடி கலெக்டர் மிஸ்டர் A. குருமூர்த்தி நாயுடு. பின்னர்க் குறிப்பிட்டவர்களுக்கு 'ராவ்ஸாஹிப்' பட்டம் அளிக்கப்பட்டிருக்கிறது:— வேலூர் தாலூகா போர்ட் பிரெஸிடெண்ட் மிஸ்டர் N. கிருஷ்ணமாசாரியார், கள்ளிக்கோட்டை ஊனடிக் அஸைலத்தில் ஸப் அஸிஸ்டெண்ட் ஸர்ஜனாகவிருக்கும் மிஸ்டர் A. கோபாலன், தலைச்சேரி போர்ட் டாபிஸரான மிஸ்டர் G. ராமசந்திரசேனாய், பாலக்காடு முனிசிபல் சேர்மன் மிஸ்டர் R. சேகரமேனன், புதுக்கோட்டை போலீசு டிப்டி சூபரிண்டெண்டான மிஸ்டர் A. G. கிருஷ்ணசாமி ஐயர், மதிராஸ் யூனிவர்ஸிடியில் இந்துதேச சரித்திரம் தொன்மையாராய்ச்சிப் போதகராகவிருக்கும் மிஸ்டர் S. கிருஷ்ணசாமி ஐயங்கார், செக்கந்தராபாதிலுள்ள லக்ஷ்மிநாராயணசாமி நாயுடு, கூர்க் பப்ளிக் பிராஸிகியூடரான மிஸ்டர் K. சுப்பய்யா, போலரத்திலிருக்கும் மிஸ்டர் G. ரங்கநாயகலு நாயுடு. முயற்சி தன் மெய் வருந்தக் கூலிதரும் என்பதைப் போல மேற்சொன்ன கனவான்கள் தத்தம் துறையில் ஊழியஞ் செய்ததை அரசாங்கத்தார் அங்கீகரித்துக்கொண்டதன் அறிகுறியாக அவர்களுக்குக் கௌரவப் பட்டங்களளித்துக் கண்ணியப்படுத்தியது அப்பட்டதாரிகளுக்கு விசேஷ ஆத்ம திருப்தியையும் அவர் தம் நண்பர்களுக்கு சந்துஷ்டியையுந் தருமென்பதற்கு ஐயமில்லை.

## WAR NOTES.

### யுத்தக் குறிப்பு.

### ஒரு மகிய நன்கொடை.

வடஇந்தியாவிலுள்ள தீவாஸ் மகாராஜா அவர்கள், தற்போதைய ஐரோப்பிய யுத்தச் செலவைமுன்னிட்டு லட்சத்து முப்பதினாயிரம் (ரூ 1,30,000) நன்கொடையாய் அளித்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம்.

## SRI SHANMUGANANDA SABHA.

### ஸ்ரீ ஷண்முகானந்த சபை.

1916-ம் ஞு ஜூலை மீ 8உ சென்னையில் ஏற்படுத்தப்பட்ட இச்சபையின் வருஷபூர்த்தி அடுத்தமாதம்வருகிறது. குழந்தை பிறப்பதற்கு எத்தனையோ பேர் அருந்தவமிருப்பார்கள்; பிறந்த பின்னர் அக்குழந்தையை நோய் நொடியினின்றும் பாதுகாப்பது அரிதாய்விடும்: அப்படிக் கில்லாது பிறந்த குழவிக்கு மாந்தம் கரப்பான் பாலாரிஷ்டம் போன்ற வியாதிகள் சமீபத்தில் அண்டவொட்டாமல் கண் மலர்களைக் காக்கும் இமைகளையொப்ப, அது அன்னத்திற்கோ மற்றும் என்னத்திற்கோ அழுந்தறுவாயில் கையிலெடுத்து மார்போடணைத்து உச்சி முகந்து தொட்டிலிற் போட்டுத் தாலாட்டி, பிறகு பல் முளைக்குங் கால் முகம்பார்த்துச் சிரித்துக் குப்புறக்கவிழ்ந்து நீஞ்சும் வேளைகளைக் கவனித்துத் தன்னுடலும் உயிரும் உருவெடுத்து தவழும் உத்தமப் புதல்வனை யொப்ப இச் ஸபையை ஸம்ரக்ஷிக்கும் பொறுப்பை யேற்றுக் கொண்டிருக்கும் புருஷோத்தமர் மிஸ்டர் P. S. வேலு நாயரவர். தம் பெயருக் கிணங்க ஸபைக்கும் பெயரிட்டு கார்த்திகேயராம் ஸ்ரீ ஷண்முகக் கடவுளின் கிருபையை முன்னிட்டு நாயரால் நடத்தப்படும் இச்சபை உள்ளது உள்ளபடி நற்குணங்களையும் நற்பயிற்சிக்குரிய காரியங்களையும் கண்ணாடியில் தெரியும் பிரதி பிம்பங்களையொப்ப அரங்க மேடையில் ஸ்ருஷ்டித்துக் காட்டும் வன்மை கொண்டது; இப்போது ஸாலட் கொடார்சுக்கு எதிரிலுள்ள ராயல் தியேடரில் மகா வைபவத்துடன் இச்சபை நடந்து வருகிறது. பொழுது போக்குக்காக நடத்தப்படும் சாமான்ய நாடகங்களைப்போலல்லாது நற்புத்தியும் நன்னடக்கையும் பிராபதமாகவேண்டு மென்றும், நகரத்துவாசிகள் குணவான்களாகக் காலங் கடத்த வேண்டுமென்றும் நாயரவர்கள் கருதி பல பிரமுகர்களின் ஆதரவைப் பெற்று தெய்வ பக்தி விஷய நாடகங்களை நடத்தி வருகிறார். இத்தகைய ஸபைக்குச் சென்ற வருடமெல்லாம் சிறப்பாகுமென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ?

# PART VIII.

## MORAL STORIES.

### நீதிக்கதைகள்.

### சீலவதி.

மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் ரதவீதிகளும் தண்ணீர் நிலையங்களும் நிரம்பப்பெற்ற லட்சுமிபுரம் என்னும் நகரில் துளசிராம் என்னும் பெயர்கொண்ட ஒரு வியாபாரி வசித்து வந்தான். அந்நகரில் தகுந்த யோக்கியதையும் அந்தஸ்தும் வாய்ந்த பிரமுகர்களென்ன, உத்தியோகஸ்தர்களென்ன, வைதிகர்களென்ன, மற்றும் சுகஜீவிகளாய்க் காலங்கழிக்கும் புருஷோத்தமர்களென்ன, எல்லோரும் ஆயுராரோக்கிய ஸம்பன்னர்களாய்க் காலந்தள்ளி வந்தார்கள். மேலே சொன்ன துளசிராம் அவ்வூரில் மிக்க பிராபல்யத்தோடு வியாபாரஞ்செய்து வந்த வணிகனாவன். எங்கு போயினும் துளசிராமைப் பற்றிய பேச்சே பெரும்பேச்சாக விருந்தது. அவ்வூராரும் வெளியூராரும் துளசிராமைக் கோடீசுவரப் பிரபு வென்றே கொண்டாடிவந்தார்கள்; எவ்வளவுதான் கர்ப்ப ஸ்ரீமானுக்குப் பிறந்த கோடீசுவரனாயிருந்தாலென்ன, தனத்தற்கேற்ற தர்மம் அவனிடத்திலில்லை. 'வாய் வாழைப்பழம் கை கருணைக்கிழங்கு' என்பார்களே. அப்பழமொழி துளசிராமின் விஷயத்திற் சரியாகிவிட்டது. காயமுண்ட சுண்டுவிரலுக்குச் சுண்ணாம்பு கொடாத கருமியாயிருந்தானவன்; நசுவரமான காரியங்களில் தான் அவனுக்குக் கண்ணோட்ட மதிகம்; பணப்பேய் பிடித்த அவனுக்குப் பேரின்பஞாபகமே கிடையாது; எல்லாம் சாசுவதமே யென்றமூட நம்பிக்கை அவன் மனதிற் குடிகொண்டிருந்தது. பகற்பொழுதெல்லாம் வியாபாரத்தில் கவனம் வைக்கும் அவன் இரவிலும் வெகுநேரம் பணத்தைக் குறித்தே சிந்தனை செய்துகொண்டிருப்பான். பணம் பணம் என்ற பித்தே அவனுக்கு உள்ளும் புறமும் பெரும் பித்தாக விருந்தது. மற்றெதிலும் அவன் புத்தி பிரவேசிக்கவில்லை; எவ்வளவுதான் ஒருவன் ஒருகாரியத்திற் கண்ணோட்டம் வைத்தபோதிலும் மனையாள் செய்யும் சைத்தியோபசாரத்திற்கு முன்பாக அக்கண்ணோட்டம் சிறிது தளர்வது எங்கும் சகஜமல்லவா? நமது துளசிராம் விஷயத்திலோ அக்கண்ணோட்டம் தளர்வதில்லை; என்வே எப்போதும் பணம் சேகரிப்பதிலேயே அவனுக்குக் கண்ணும் கருத்துமதிகமாயிருந்தது.

### பதிபக்தி.

நித்திரையிற்கூட பணம் சேகரிப்பதிலேயே புத்தியைச் செலுத்தும் துளசிராம் அவ்விதமிருக்க, அவனது மனைவியான சீலவதி எத்தன்மையள் என்பதைப் பார்ப்போம். மதிமுகங்கொண்ட அம்மாது பேதை பெதும்பை

மங்கைப் பருவங்கள் நீங்கி மடந்தைப் பருவமடைந்திருந்தாள்; வனப்பு வாய்ந்தவனிதை; புன்சிரிப்பு மிகுந்த சுந்தரவதனத்தவள்; அடியார்க்கு அடிபணியும் உத்தம ரத்தினமாவாள்; பர்த்தாவுக்கு மிஞ்சின தெய்வம் வேறொன்றுமில்லை யெனக்கருதி பதிபக்தி செய்வதிலே பூராவும் நம்பிக்கை வைத்தவள். எளியவர்க் கிரங்கும் தர்மிஷ்டையாவள். பணம் விஷயமாகக் கணவன் கொண்டகருத்து முழுவதற்கும் விரோதமாகஇவள் பணத்தை த்ருணமாகப் பாவித்து வந்தாள். கோடீசுவரனது பத்தினியாயிருந்தும், அந்தஸ்தானத்திற்குச் சாதாரணமாயிருக்கக் கூடிய அந்தஸ்தையும் அகங்கார மமகாரங்களையும் அறவே யொழித்து குருபக்தி, தெய்வபக்தி, பதிபக்தி ஆகிய இம் மூன்றினையும் பெரிதும் பாராட்டி வந்தாள். சுருக்கிச் சொல்லின், சீலவதி தன் கணவனது துர்க்குணங்களைக் குறித்துச் சிறிதும் லக்ஷியம் பண்ணாமல் அவனையே யெப்போதும் மனதில் தொழுதுகொண்டு கோவில் குளங்களுக்குப் போய்த் தெய்வங்களைத் தொழாவிடினும் இரவில் படுப்பதற்கு முன் கணவனைத் தொழுது அவனே ஞாபகமாயுறங்கி விடியற்காலையில் எழுந்திருக்கும் பொழுதும் அதே நினைவுடனெழுந்து இவ்விதமாக எல்லாக் காலத்திலும் பதிபக்தி செய்து வந்தாள்.

"தெய்வந்தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யுமழை."

என்று திருவள்ளுவநாயனார் கூறியுள்ளார். அப்பேர்ப்பட்ட பெண்ணே உத்தமியாவள். ஸததய ஸ்வரூபியுமாவள். அக்கம்பக்கத்தவர் எல்லோரும் சீலவதியை 'ஸாவித்ரி' யென்று மதிக்கும்படியாக அவள் காலங்கடத்தி வந்தாள். கணவன் மீதிருந்த பேரன்பினால அவன் செய்யும் துர்க்கிருத்தியங்கள் அனைத்தையும இவள் சிறிதும பாராட்டுவதில்லை, பணம் என்ன, சகடக்கால் போல் வருவதுதானே, இன்று இங்கிருப்பது நாளை மற்றோரிடமிருக்கும் என்று மதித்த அவ்வுத்தமி சமய சந்தர்ப்பானுகூலங்களுக்குத் தக்கபடி நடந்துவந்தாள.

அவளது குண விசேஷம்.

கணவனின் உரிமையையும கடமையையும கவனித்து நடப்பதே ஸ்திரீகளுக் கழகாகும். எங்கு எதற்கு பயப்பட வேண்டுமோ எதற்கு எச்சமயத்தில் நாணப்பட வேண்டுமோ, இவைகளைக் கவனியாமல் எப்போதும் எவ்விடத்திலும் ஒரேமாதிரியா யிருபபது அழகன்று. இது மானுட ஜன்மத்திற்குத் தகாது. எவருக்கும ஏஜமானனுண்டு, வேலையாளுமுண்டு; அதிகாரத்திற்கு உட்படுப இடமுமுண்டு; தாம அதிகாரஞ் செலுத்தும் இடமுமுண்டு. சந்தர்ப்பத்தறகுத தகுந்தபடி நடவாதவா புத்தியுள்ளவராகார. அதுபோல ஸ்திரீயும் காலம இடம சந்தாப்பம் ஆகிய இமமூன்றையும் அனுஸரித்து தனது நிலைமையையும கறபையும் உதேசித்துப் புத்தியை யுபயோகப் படுத்தி சாஸ்திரத்திலுலேனும வழககப பழக்கஙகளிலுலேனும் ஏற்பட்டிருக்கும் விதிகளின் கருதது நிறைவேறுமாறு நடக்கவேண்டும. எல்லோர்க்கும் மூளை யென்னும் அம்சம் இருக்கிறதல்லவா? ஸ்திரீக்கும் பகவான் மூளையைக் கொடுத்திருக்கிறார். அந்த மூளையை யுபயோகிக்க வேண்டும்; அதனால், புத்தியைக் கூர்மைப்படுத்திக் கொள்ளும் பொருட்டே யன்றி, அந்த மூளையின்மீது மயிரை வளர்த்து அதற்குத் தினந் தவறாது நிரம்ப எண்ணெயிட்டுச் சீவி, பகற்பொழுதில் அந்த எண்ணெய் ஊறி நெற்றியின் மீதும் கழுத்தின் மீதும் கசிந்தொழுக, அதனைக் கையினால் வழித்துச் சுவரிலோ இடையிலுற்ற புடவையிலோ, மற்றும் சமீபித்து நிற்கும் எவ்வஸ்துவிலோ தடவி அதனைக் கெடுத்து, இராக்காலத்தில் தலையணையில் அந்த எண்ணெய்க் கூந்தலைப் புரட்டி அழுக்கும் நாற்றமும் அதனால் வியாதியும் உண்டாக்குவதற்காக அன்று என்பதை ஸ்திரீகள் நன்றாக அறிந்துகொண்டு சமயம் வாய்த்தபோதெல்லாம் அதனை யப்பியசித்து உலகில் வெற்றிபெற்று அதனைக் கொண்டே மறுமைக்கும் வழிதேடும் பொருட்டு அருமையான ஆயுதமாகிய மூளையைத் துருப்பற்றுமாறு விட்டுக் கடையில் மண்ணுக்கு இரையாக்குவதனால் யாதுபயன்? அதனாலடையக்கூடிய பிரயோசனத்தைப் பெற்றபின்பு அது மண்ணிற்போய்ச் சேருவதனால் யாதொரு குற்றமுமில்லை. இதை நன்கு கவனித்த சீலவதி தன் புருஷனுடைய கருமித்தனத்தையும் இரக்கமின்மையையும் பற்றிச் சிறிதும் ஆயாசப்படாமல் தன் கடமையைச் செலுத்தி வந்தாள். பதிவிரதைகளுக் குரிய சகல லக்ஷணங்களும் அவளிடம் பூர்த்தியாயிருந்தன. மனைவிக்குத் தெய்வபக்தி மிகுந்திருக்க, கணவனுக்கு நசுவரமான பணபக்தி மிகுந்திருந்தது. ஹிரண்யகசிபுவுக்கு எங்ஙனமிருந்ததோ அங்ஙனமே துளசிராமின் தெய்பக்தி யிருந்ததெனச் சொல்லுவதும் ஒருவாறு பொருந்தும்! இப்பேர்ப்பட்ட முறண்பாடான குணங்களோடு கூடின தம்பதிகளுக்கு எவ்வாறு சுகமிருக்கும்?



பக்திப் பரீக்ஷை.

கணவன் லோபியா யிருப்பதைப் பற்றிச் சீலவதி அடிக்கடி நினைந்து தர்ம புத்தியைத் தரலாகாதா, தாக்ஷண்யத் தன்மையைப் புகுத்தலாகாதா வென்று கடவுளை ஸ்தோத்தவாறே தனிமையாயிருக்கையில் முக்கு முக்காகக் கண்ணீர் விடுவாள். 'தேஹி' என்று சொன்னவர்க்கு 'நாஸ்தி' என்று அவள் ஒருபோதுஞ் சொன்னதில்லை. தன் கணவனுடைய ஸம்பத்தில் ஒரு பகுதி தர்மத்திற் செலவழியட்டுமே யென்று பிச்சை கேட்டவர்க்குப் பிச்சை போடுவாள். கணவன் வந்து பார்த்துக் கோபங்கொள்வான்; உத்தமி பதிலொன்று முரையாள்; தலை குனிந்து நிற்பாள். சிறிது நேரங்கழித்துக் கணவனுகோபம் சமனமாகிவிடும். இவ்விதமே தினந்தோறும் நடந்து வந்தது. ஒருநாள் இத் தம்பதிகள் சாதாரணமாகப் பேசிக்கொண்டிருந்த போது தமக்குச் சம்பத்திருந்தும் ஸந்தானமில்லையே யென்றதைக் குறித்துப் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்தார்கள். 'எல்லாம் எமையாளு மீசன் செயல்' என்றே பகவான் மீது பாரத்தைப் போட்டுச் சீலவதி பதிபக்தியிற் சிறிதுந் தளராது காலங் கழித்து வந்தாள். புத்திரப் பேறில்லையே யென்ற ஞாபகம் அவளுடைய மனதில் ஆழமாகப் பதிந்திருந்தது. தெய்வபக்தியிற் குறைவுறாது நடந்து வந்த சீலவதி மடந்தைப் பருவந் தீர்ந்து அரிவைப்

பருவமடைந்தனள். முன்னிலும் அதிகமான திடசித்தத்தோடு அவள் தனது கடமையைச் செலுத்தி வருகையில், ஒரு நாள் துளசிராம் வியாபாரத்தினிமித்தம் வெளியே சென்றிருந்தான். சீலவதி மட்டும் கிருஹத்திலிருந்துகொண்டு வீட்டை நன்றாய்ச் சுத்தி செய்து கோலமிட்டு மங்களகரமாக வைத்திருந்ததோடு அவள் தானும் ஸ்நானஞ்செய்து நித்திய கர்மானுஷ்டங்களை முடித்துக் கிருஹ கிருத்தியங்களைக் கவனித்துக்கொண்டிருந்தாள். அப்போது உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் காஷாய வஸ்திர முடுத்துக் கையிற் கப்பரையேந்தி நரைத்த மயிரோடு கூடின ஒருவர் தாடியுந் தலைமயிரும் காற்றில்மெதுவாயாடத் தள்ளாடித் தள்ளாடி நடந்துத் துளசிராமின் வீட்டுப் படி கட்டுகளிலேறி வாயிற் கதவைத் தட்டினர். ஒருவிசையாயிற்று, பதில் ஒன்றுங் காணோம்; இரண்டாந் தடவையுந் தட்டினர்; அதற்கும் பதிலில்லை; மூன்றும் முறையும் தட்டினர். அதற்கும் எவ்விதமான பதிலுமில்லை. என்ன ஆச்சர்யமாயிருக்கிறது! சீலவதி துயில்நீத்தெழுந்திருக்க வில்லையோ என்னவோ? அது எப்படிச் சொல்லமுடியும்; பிக்ஷைக்காக வந்து வாயிற்கதவு தட்டப்பட்டபோது பொழுது விடிந்து மணி எட்டாயிற்று. சீலவதியோ, 'பஞ்சபஞ்ச உஷட்காலம்' என்று பெரியோர் கூறும் விடியற்காலை நான்குமணி சுமாருக்குத் தினந்தோறும் நித்திரையிலிருந்து எழுந்து விடுவாள். ஆனது பற்றி அவள் நித்திரையிலிருக்கிறாளென்று ஒருக்காலுஞ் சொல்ல முடியாது. அதுபோகட்டும். மூன்றுவிசை தட்டியும் பிரதியுத்தரமில்லாததனாலே ஒருவேளை வீட்டு வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்திருக்கலாமல்லவா? அதுவுமல்ல; காலை 7-மணிக்குள்ளாகவே கிருஹ கிருத்தியங்களை சம்பூர்ணமாக அவள் செய்து முடித்து விடுவது வழக்கம். பிறகு அவள் என்னதான் செய்துகொண்டிருந்தாள்? ஸ்தோத்திரஞ் செய்துகொண்டிருந்தாள். போலும், ஆம் அதுவே, எப்படிப்பட்ட ஸ்தோத்திரம்? காமக்குரோத, மோக, லோப, மத, மார்ச்சரமென்னும் அறுவகை விகாரங்களினால் சூழப்பெற்ற இம் மண்ணுலகின்கணுள்ள நசுவரமான வஸ்துக்களில் அபிலாஷை மிகுந்து அதுவேண்டும் இது வேண்டுமென்று அவள் ஸ்தோத்தரிக்கவில்லை. தன்னிடம் அன்புபாராட்டாது கேவலம் மிருகத் தன்மை பூண்டு தன் கணவன் தன்னை நடத்துகிறானே யென்றும் அவள் சிந்திக்கவில்லை. உலகப்பற்றையொழித்து தெய்வ பக்தி செய்யும்படி ஸர்வேசுவரன் கிருபை பாலிக்கலாகாதா வென்றே அவள் தனது முழுமனதையும் பகவானிடம் அர்ப்பிதஞ்செய்திருந்தாள். அவளிருந்த அறையோ தினசரி பூஜை செய்யப்படும் தேவக்கிருகம். இவள் ஸ்தோத்திரஞ் செய்துகொண்டிருந்த சமயமும் பிச்சைக்காரன் வெளியில் வந்து கதவைத் தட்டிய சமயமும் ஏககாலத்தில் நேரவே, தேவக்கிருஹத்திலிருந்து வெளிவர இரண்டொரு நிமிஷந் தாமதப்பட்டது; என்றாலும் பிச்சைக்காரன் நான்காம் முறைக் கதவைத் தட்டியதுதான் தாமதம், தக்ஷணமே சீலவதி கதவைத்திறந்து பார்த்தாள். தள்ளாடத் தள்ளாட வந்தவர் யாவர்? இறங்கிய பார்வையுடன் 'அம்மா, பிச்சை போடுங்கள், என் பசியைத் தீருங்கள்' என்று உரத்த குரலுடன் கூறிப் பின்னும் 'இச்சமயம் ரக்ஷித்தால் உங்களுக்கு கங்கா ஸ்நான பலன் சித்திக்கும்' என்றும் வீழ்த்தினான். சீலவதி பிச்சைகாரக் கிழவன் சொல்வதைச் செவ்வையாய்க் கிரகிக்காமல் 'பெரியவரே, தாதாவே, உங்களுக்கு இன்னது வேண்டுமென்று வியக்தமாகச் சொல்லுங்கள்' என்றாள்.

(இன்னும் வரும்)

ஸ்ரீராமஜயம்.

# கல்ப தரு.

# KALPA THARU.

அறிவு வளர்ச்சிக்கான வாராந்தத் தமிழ்ப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| புஸ்தகம் 1. Vol. I. | பிங்களஹு ஆனிமீ 3வ. சனிக்கிழமை. SATURDAY, 16th JUNE—1917. | ஸஞ்சிகை 3. No. 3. |

# PART I.

## 'THE SUN NEVER SETS IN THE BRITISH EMPIRE.'

## 'பிரிடிஷ் ராஜாங்கத்தில் சூரியன் அஸ்தமிப்பதில்லை.'

இது எங்கும் வழங்கும் பழக்கமான மொழி; எனவே பூமியானது சூரியனைச் சுற்றிவருங்கால், சூரிய வெளிச்சமானது ஓரிடத்தில் இல்லாது போனாலும் மற்றோரிடத்திலாவது பிரகாசித்துக்கொண்டிருப்பது உலகறிந்த விஷயம். அவ்விதம் பிரகாசிக்கையில் நமது பிரிட்டிஷ் ராஜாங்கத்திற்குட்பட்ட குடியேற்ற நாடுகளும் சார்பு நாடுகளும் குணகோளார்த்தம் குடகோளார்த்தம் ஆகிய இரண்டிலும் வியாபித்திருக்கின்றமையால், எங்கேனும் ஓரிடம் சூரியரஸ்மி (கிரணம்) படாதிருப்பது ஸாத்தியமல்ல. ஓரிடத்தில் அஸ்தமனமாயினும் மற்றோரிடத்தில் பகற்பொழுதாயிருப்பதனாலேயும், ஓரிடத்தில் இருள் கவ்வியிருந்தால் மற்றோரிடத்தில் வெளிச்சமாயிருப்பதனாலேயும், ஓரிடத்தில் வெண்ணிலாவிருந்தால் மற்றோரிடத்தில் அருணனின் தீக்ஷண்யம் இருப்பதனாலேயும் பிரிடிஷ் ராஜாங்கத்தில் சூரியாஸ்தமனம் ஆவதில்லையென்ற பெயர் வரலாயிற்று. பிரிடிஷாருக்குச் சொந்தமான ராஜ்யங்களில் இருள் என்னும் அந்தகாரம் ஒழிந்து ஒளிர்

என்னும் பிரகாசம் எப்போதும் வீசிக்கொண்டிருக்கும். பிரகாசம் பொருந்தியிருக்குமிடத்தில் காரியங்களைச் செய்யக் கஷ்டமிருக்குமோ? ஒருபோதுமிராது. எல்லாம் செவ்வையாகவே நிறைவேறும். இவ்வளவு தூரம் பிரிடிஷார் பெருமையடைவதற்கும் பூவுலகம் முழுவதிலும் அவர்களது ராஜ்யம் பரப்புண்டிருப்பதற்கும் காரணம் என்னவென்று ஒருவாறாய் ஆராய்ந்து பார்ப்போமானால் அவர்களது செங்கோற் சிறப்பேயென எமக்குப் புலப்படுகிறது. இதற்கு முந்திய இரண்டு சஞ்சிகைகளில் அச்சிறப்பினைக் குறித்துச் சுருக்கமாக இரண்டொரு வார்த்தை சொன்னோம். இன்று இந்தியாவில் அவ்வரசாக்ஷியின் காரணமாக ஏற்பட்டிருக்கும் பற்பல நன்மைகளைக் குறிப்பிடுவோம்.

இத்தேசத்திற்கு ஆங்கிலேயர்கள் வந்து அரசுபுரிய வாரம்பித்து சுமார் நூற்றைம்பது வருஷங்களுக் கதிகமாகிறது. அரசுரிமையை அவர்கள் கைக்கொள்வதற்கு முன்னதாக இவ்விந்தியா தேசம் பலபகுதிகளாகப் பிரிந்திருந்தது; அவ்வப்பகுதிகளுக்குத் தனித்தனியே அதிபர்கள் இருந்தார்கள். அவரவர் நியாயாப நியாயங்களைக் கவனியாது தம்மனம்போன போக்காய் விட்டு ஆளுகை நடத்தினர். அதனால் தேசத்தில் தர்மம் தழைக்க மார்க்கமில்லாமற் போயிற்று; தனித்தனியாக ஆளுகை நடத்தி வந்த அதிபர்கள் பரஸ்பரக் கூட்டுறவென்பதை அறவே யொழித்து ஒருவர்மீது ஒருவர் சந்தேகப்படுவதும் க்ஷாத்திரம் வைப்பதும் வைரிகளாக நின்று போர்புரிவதும்,—ஆக இந்தவிதமாய்க் காலங்கடத்திவந்தார்கள். ஐக்கியமே பலம் (Union is Strength) என்பது அவர்களுடைய மனதில் தட்டுப்படவில்லை. இங்ஙனம் மனத்தாங்கல் இருந்ததனாலே அந்நியர்கள் இத்தேசத்தின்மீது படையெடுத்து வந்தார்கள். இம்மாதிரியாகச் சீர்கேடடைந்திருந்த சமயத்தில்தான் ஈஸ்டிந்தியா கம்பெனியார் இங்கு புறப்பட்டு வந்து குடியேறி ஜனங்களுடைய க்ஷேமத்தையும் தேசத்தின் வளப்பத்தையும் நன்றாய் அறிந்து அவைகளுக்குத் தகுந்தவாறு ஏற்பாடுகள் செய்து அரசாக்ஷியை நடத்தலாயினர். அப்போது அக்கம்பெனியார் தெளித்த விதையே இப்போது மரமாக வளர்ந்து தேசத்தில் வேரூன்றி நமக்குப் போதிய நன்மைகளை யளித்து வருகின்றது. நம்மையும் நம்முடைய ஸ்திதிகளையும் பாதுகாக்கப் போர்வீரர்களும் போலீசுபடையாளர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நியாயநிலை தவறாதிருப்பதற்காக நியாயஸ்தலங்கள் ஏற்பட்டு நியாயாதிபதிகள் வேலை செய்து வருகிறார்கள். சுகாதாரத்தைக் கவனிக்க வைத்திய நிபுணர்களும், கல்வியைப் பரப்ப வித்தியாசாலைகளும், நிபுணர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நாகரிகம் மிகுந்து வரவர உயர்தரப்படிப்பும் மேலோங்கிக்கொண்டிருக்கிறது. அவ்வப்போது இராஜங்கத்தாருக்கு நமக்குள்ள இஷ்ட கஷ்ட நிஷ்டூரங்களைப் பயமின்றியெடுத்துச் சொல்லும்படியான ஸ்வாதந்தர்யத்தை அரசங்கத்தார் நமக்கு அளித்திருக்கிறார்கள். அந்தந்த தேசங்களுக்குத் தகுந்தவாறு ஆங்காங்



குள்ள பிரமுகர்களைத் தேசநிருவாகத்தைப் பொருத்தமட்டில் கலந்து கொள்ளாமலிருப்பதில்லை. ஸ்தலசுய ஆட்சி என்கிற முனிசிபல் பரிபாலனம் நம்மிடம் சுதந்தரத்தோடு விடப்பட்டிருப்பதனாலேயே இந்தியர்களை ராஜரீகத்தில் பயிற்சி செய்விக்கவேண்டுமென்னும் அபிலாஷை கவர்ன்மெண்டாருக்கு உள்ளது என்பது செவ்வையாக விளங்குகிறது. ஒவ்வொரு தேசத்திலும் நடைமுதற்பழக்கத்திலிருந்து வருகிற மத சம்பந்தமான காரியங்களில் கவர்ன்மெண்டார் பிரவேசிப்பதில்லை. அந்தந்த மதத்தலைவர்களே அவ்வேலைகளைக் கவனித்துக் கொள்ளுகிறார்கள். சட்ட நிரூபணஸபைகளில் நம்மவர் மெம்பர்களாயிருந்து ராஜாங்க வேலைகளை யொட்டிய விஷயங்களை ஆலோசிப்பதில் கவர்ன்மெண்டார் நம்மையுங் கலந்து கொள்கிறார்கள். வர்த்தமானப் பத்திரிகைகளுக்குரிய சுதந்தரங்களை அவர்கள் வரையறுத்துக் கூறியிருக்கிறார்கள். இவைகளின் மூலமாக ராஜாங்க விஷயங்கள் பல பொது ஜனங்களின் அபிப்பிராயத்திற்கு விடப்பட்டும் வருகின்றன. முக்கியெல்லாம் எலெக்ஷன் காலமென்று சொல்லப்படும் சமயம் வந்ததென்றால் ஜனங்களுக்குள் கட்சிப்பிரதிகட்சிகள் ஏற்பட்டுப் பிரமாதமான கல்லல்கள் உற்பவிப்பதுண்டு. இப்போது அம்மாதிரியான கல்லலுக்கு இடமில்லை; ஸர்வஜனசம்மதமான விருப்பத்திற் கிணங்கியே ஒவ்வொருகாரியமும செய்யப்பட்டு வருகிறது. பொதுஜன அமைதி மேலிட்டு, தேசத்தில் நாகரிகம் பரவி, ஜனக்ஷேமத்திற்கு இடமுண்டாகி, பிரஜைகள் சுகஜீவிகளாகக் காலந்தள்ள நமது பிரிடிஷ் ராஜாங்கம் ஊக்கமிகுந்து ஏற்பாடு செய்திருக்கின்றது. இதனால் நம் பிரிடிஷாருக்கு உண்டாயிருக்கும் கீர்த்திக்கும் பெருமைக்கும் குறைவில்லை.

தேசநிர்வாகத்திற் பயிற்சியுண்டாக வேண்டுமென்னும் நோக்கத்தைக் கைப்பிடித்து நமது அரசாங்கத்தவர் மற்றோர் வழியையும் நமக்குக் காட்டியிருக்கிறார்கள். லட்சக்கணக்கான மைல்தூரம் விஸ்தரித்திருக்கும் பூவுலகில் பொது ஜன வமைதி பொருந்தி யிருக்கும்படி நிர்வகித்து நடத்துவது எளிதான காரியமல்ல. பிரிடிஷ்கொடியானது பூவுலகிலுள்ள முக்கியமான பிரதேசங்களிலெல்லாம் பறந்து கொண்டிருக்கின்றதென்றாலும் இப்போது இந்தியாவைப் பொறுத்தமட்டில் மேற்சென்ன நிர்வகிப்புச் சாதனம் எம்மட்டிலிருக்கிறதென்று பார்ப்போம். நமது தேசத்திலுள்ள கிராமயூனியன் முதல் மேன்மை தங்கிய ராஜப்பிரதிநிதியாரது சட்டஸபை வரையிலுள்ள ஒவ்வோரமைப்பையும் அரசாங்கத்தார் பலப்படுத்தியிருக்கிறார்கள். சட்டஸபைகளில் மெம்பர்களாயிருப்போரது தொகையை யதிகரிக்கும் படிக்கும், ஜனப் பிரதிநிதிகளாயிருக்கவேண்டு மென்னும் பொதுஜன வபிப்பிராயத்திற்கு லோபம் வராதவாறு ஸர்க்கார் உத்தியோகஸ்தரல்லாத மெம்பர்களின் சங்கியையானது முந்தியிருந்ததைக் காட்டிலும் அதிகரித்திருக்க வேண்டுமென்றும் கருதி ராஜாங்கத்தவர் சிற்சில சீர் திருத்தங்களைச் செய்

திருப்பது விசேஷ திருப்தியைத் தருமென்பதற் கையமில்லை. மற்றோர் அம்சமும் இங்கு குறிக்கத் தகுந்தது. தேசக்ஷேமத்தை யணுகிய முக்கியமான விஷயங்களில் நிருவாகப் பொறுப்பை வகித்திருப்போர்க்கு ஊக்கமும் ஆர்வமும் உண்டாகும் வண்ணம் ஜனப்பிரதிநிதிகளாக விருப்போர் சட்டசபைகளில் பிரச்னைகள் போடலாமென்றும், அவ்விஷயங்களைக் குறித்துத் தீர்க்கமாக வியவகரிக்கலாமென்றும் குறிப்பிட்டுக் கவர்ன்மெண்டார் விசேஷ சௌகர்யங்களுண்டுபண்ணி யிருக்கிறார்கள். இதனால் ராஜ்ய நிர்வாகத்திற்குச் சாதனமாகவுள்ள பரிபாலனத்திறமை இந்தியர்களுக்கு அனுஷ்டான வகையில் கொஞ்சங் கொஞ்சமாக ஏற்படக் காரணமாயிருக்கிறது. அத்திறமை நமக்குப் பூர்த்தியாய் வரவேண்டுமாயின், நாம் நெல்லிக்காய் மூட்டைகளைப் போலல்லாது ஒற்றுமையையும், ராஜ விசுவாஸத்தையும், பரஸ்பரோபகார வுணர்ச்சியையும், என்றுமாறா வன்மையும் விஷய பூர்வகமாயுட் கொள்ளவேண்டும். பற்பல வழக்கப் பழக்கங்களையுடைய ஜாதிகள் நிரம்பப் பெற்றிருக்கும் இந்நாட்டின்கணுள்ள 33-கோடி மகா ஜனங்களின் க்ஷேமப்பாதுகாப்பான துஸர்வேசுவரனால் நம்பிரிடிஷாரிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிற தென்பதை அவர்கள் தீர்க்கமாயுணர்ந்து இத்தேசத்தில் ராஜ்யபரிபாலனம் செய்து வருகிறார்கள். விசேஷபெருமையையும் அடைந்திருக்கிறார்கள். ஜகம் முழுவதும் புகழ்நாட்டி நியாயநிலை தவறாது செங்கோலைத் தாங்கி தேசதேசாந்தரங்களிலிருக்கும் தமது பிரஜைகளுக்குள் ஐகமத்தியமும் அன்பும் உண்டாகும்படி கருணையோடு அரசுபுரியும் நம்பிரிடிஷ் ஆக்ஷி உலகத்திலுள்ள பற்பல பாகங்களில் நடைபெற்று வருகிறது; அவ்விடங்களி லெல்லாம் நமது பிரிடிஷ் கொடிபறக்கும் விமர்சையைக் கேட்க நமது மனம் பூரிப்பையடைகின்றது. பூமண்டலத்தைச் சேர்ந்த பற்பலவிடங்களில் பிரிடிஷ் ஆதிபத்தியம் இருப்பதனாலேயே அருணனின் அருள் அவ்வாதிபத்தியத்தில் பரிபூரணமா யிருக்கிறதாக ஆரம்பத்தில் கூறினோம். இவ்வளவு சீரும் சிறப்புமாகவிருக்கும் பிரிடிஷாருக்கு நாம் என்றென்றுங் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் செய்யும் நன்றியை யென்றும் மறவாதிருப்போமாக.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

---

## THE WAR SUMMARY.

## யுத்த ஸம்க்ஷேபம்.

மகா உக்ரமாக ஐரோப்பாகண்டத்தில் இப்போது கடும்போர் நடந்து கொண்டிருக்கிறது. பூவுலகத்துப் பிரதம வல்லரசுகள் அதில் தலையிட்டுக் கொண்டிருக்கின்றன. நடுநிலைமை வகிக்குந் தன்மைவாய்ந்த சார்பு தேசங்



கள் ஒன்றன்பின் ஒன்றாக யுத்தத்திற் கலந்துகொள்ளாமல் இருக்க முடியவில்லை. இந்த யுத்தம் ஆரம்பமாகி இரண்டாண்டு நிரம்பி மூன்றாம் ஆண்டு நடந்துகொண்டிருக்கிறது. லக்ஷக்கணக்காக மானிடவுயிர்கள் மா நிலத்திற் கர்ப்பணமாகின்றன; பொருட்சேதத்திற்குக் கங்கு கரையில்லை; உயிர்ச்சேதம் ஒருபுறமும் பொருட்சேதம் மற்றோர்புறமும் போட்டிபோட்டது போல் புவியில் தாண்டவமாடுங்கால், அப்போட்டியைத் தடுக்கவல்லார் யாவர்? அது முதன் முதற் கிளம்பியதற்குக் காரணபூதமாயிருந்தது எதுவோ அதைக்கொண்டுதான் சமனமும் ஏற்படவேண்டியதாகும். என்றாலும் அதைக்குறித்து யாம் உறுத்திச்சொல்ல ஸாத்தியமாகாது. விளையாட்டையொப்ப இரண்டுவருஷங்களாக ஐரோபிய ரணரங்கத்தில் பூதபௌஷ்ய சாஸ்திர ரீதியான அம்சங்களெத்தனையோ வகைகளாக நிதர்சிக்கப்பட்டுவருகின்றன. என்றுங்கண்டுங் கேட்டுமிரா நூதனங்கள் வெளிவருகின்றன. வேட்டுகள் கிளம்புவதும், பொதீர் என வீழ்ந்து வெடிப்பதும், வெடித்தபின் சிப்பல்கள் நாற்புறங்களிலும் பறந்து மானிடசரீரத்தினுள் தைப்பதும், மறைகுழியரண்களில் ஒதுங்கிப் பதுங்கியிருக்கவல்ல பாதுகாப்பாளனது உறைவிடத்தைக் கலைப்பதும், மற்றும் எவ்வெவ்விதமாகவோ அப்பப்பா! செப்பவொண்ணாச் சங்கடங்கள் இம்மஹாயுத்தத்தில் நமது செவிகளுக்கெட்டுகின்றன. பிரகிருத யுத்தமானது இப்பூவுலகையே அசைத்துப் பம்பரம்போலாட்டிக் கொண்டிருக்கும் விசேஷ தீக்ஷண்யம் பொருந்திய விஷயமாதலின், அன்பும் அருளும் கருணையும் கடாக்ஷமும் நிறைந்துததும்பும் 'கல்பதரு' வென்னும் செல்வப்பெயர் வைத்து அழைக்கப்படும் இப்பத்திரிகையின் திவ்யநாமத்திற்கிணங்க, இம் மஹாயுத்தத்திற்குக்காரணம் யாதென்பதைச் சங்க்ரஹமாக இதனடியில் விவரிக்கிறோம்.

### ஜர்மானிய அகங்காரம்.

அகம்பாவமே அகங்காரத்திற்கு உறைவிடம்; எனவே ஜர்மனி தேசத்தவர்க்கு அகம்பாவம் அதிகமுண்டு; ஜர்மனி தனக்கு அபாரமான ராணுவ வலிமையுண்டென்பதை ஐரோப்பா கண்டத்தில் மட்டுமல்ல, உலகம் முழுவதிலும் காட்டவேண்டுமென்னும் பேராசையினாற் கட்டுண்டு மனமருண்டு, அறிவிழந்து, நீக்குப்போக்கின்றி, தன்னிலை தானறியாது தடுமாறிக் கொக்கரித்துக் கொண்டிருக்கின்றது. ஜர்மனி ஒரு ராஜாங்கம் என்று ஒப்புக்கொள்ளப்படுவதற்கு முன்னிருந்தே அதனிடம் இவ்வகங்காரம் பதியலாயிற்று. எவ்விதமெனில், 1870-ம் வருஷத்தில் ஜர்மானிய சைந்யங்களுக்குத் தலைவராயிருந்து நடத்திய கௌண்ட் வான் மல்ட்க் என்னும் மகாபராக்கிரமமுள்ள ஜர்மன் தளகர்த்தர் இதனடியிற் குறித்தவண்ணம் ரிகார்டிற் பதிந்திருக்கிறார்:—

"1866-ம் வருஷத்திலே யுத்தத்திற் பிரவேசிக்கும்படி நேர்ந்ததற்குக் காரணம் ப்ரஷியா வென்னும் ஜர்மன் மாகாணம் பிடிபட்டு விடுமென்ற பீதி

யினாலல்ல; ஜனங்க அபிப்பிராயத்திற்குக் கட்டுப்பட்டுமல்ல; வெகுகாலமாகத் தீர்க்காலோசனைசெய்து மந்திராலோசனை சபையாரது அங்கீகாரத்தையும் பெற்று நடத்தவேண்டிய யுத்தமாயிற்று. ஸ்தல விஸ்தீரணம் வேண்டுமென்று யாம் கருத்துக்கொள்ளவுமில்லை. பிறகு என்னதான் கருத்து? பலத்தைப் பூவுலகில் ஸ்தாபிக்கவேண்டுமென்னும் ஒரு கொள்கையை முன்னிட்டுத்தான். அதுபற்றியே அவ்வருஷ யுத்தத்தை நடத்த நேர்ந்தது."

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மஹாயுத்தம் உலகத்தையே அசைத்தாட்டுவதாயிருக்கிறது. சற்றேறக்குறைய 44 வருஷங்களுக்குமுன் தனக்குப் பலமுண்டென்று காட்டும் நோக்கத்துடன் ஜர்மனி பிரான்ஸோடு கடும்போர் புரிந்து, அப்பலத்தை ஸ்தாபித்துக்கொண்டதல்லவா? அப்போது அதற்குக் கிடைத்த வெற்றிகாரணமாக ஸ்தலவிஸ்தீரணத்தையாகட்டும், பணத்தையாகட்டும், ஜர்மனி மதியாமலிருக்கவில்லை. யுத்தத்தினால் நேர்ந்த சேதங்களினிமித்தம் பரிகாரஞ்செய்து கொடுக்கவேண்டுமென்று ஜர்மனி நிச்சயித்து 20,00,00,000 பவுன் கசக்கிப்பிழிந்து வாங்கிக்கொண்டதுடன் ஆல்சேஸ், லோரேன் ஆகிய இவ்விரண்டு பிராந்தியங்களையும் பிரான்சிடமிருந்து பிடுங்கிக்கொண்டும் விட்டது. அன்று கௌண்ட் வான் மால்ட்க் என்ற ஜர்மன் தளகர்த்தர் சொன்னவார்த்தை இன்று நிஜமாயிற்று. ஜர்மனி தனது ராணுவ பலத்தைக்காட்டும் நோக்கத்தையே பிரதானமாகக் கருதி இந்த யுத்தத்தை நடத்திவருவதுதான் அதற்குப் போதியசாக்ஷி. தம் ஜன்மதேசக் கைத்தொழில்களை விருத்திபண்ணி வியாபாரத்தைச் செழிப்பிப்பதில் ஜர்மானிய ஜன ஸமூகத்தவர்க்குக் கண்ணிருக்க, ஜர்மன் அதிகாரிகளுக்கு அவ்வாறில்லை. தம் ராணுவச் சிறப்பிலேயே அவர்களுக்குப் பெரிதும் லட்சியம். இதை ஓரிடத்தில் ஒரு சமயம் ஜனரல் வான் பரன்ஹார்டி என்ற ராணுவ நிபுணர் உறுத்திச் சொல்லியதுமுண்டு. எனவே சண்டைபோடுவதுதான் ராஜாங்கத்தின் பொறுப்பும் கடமையுமாகுமென்பது அவரது அபிப்பிராயம். இப்பேர்ப்பட்ட செறுக்குற்ற எண்ணங்களோடு வேலை செய்துவந்த ஜர்மனிக்கு உள்ளூற இங்கிலாண்டிடம் பயமிருந்தது. ஒருவேளை யுத்தம் சம்பவித்தால் என்ன செய்வதென்று கருதிக் கடந்த பத்துவருஷங்களாக ஜர்மனி அவசரம் அவசரமாகத் தன் கடற்படையைப் போதிய முஸ்தீப்புகளுடன் அமைத்துக்கொள்ளலாயிற்று. அமைத்துமென்ன? அதை நமது மகத்தான பிரிடிஷ் கடற்படைக்கு இரண்டாவதாகத்தான் சொல்லவேண்டும்.

## இங்கிலாண்டோடு போர்புரியத் தீர்மானம்.

கெய்ஸர் சக்ரவர்த்தியின் பிரேரணையின்பேரில் வெளியிடப்பட்டதென்று சொல்லப்படும் வான் பரன் ஹார்டியின் புஸ்தகத்தில் "அடுத்த கடற்சண்டை" என்ற தலைப்பெயருடன் ஓர் அத்தியாயம் எழுதப்பட்



டிருக்கிறது. அதைப் படிக்கும்போதே, ஜர்மனியின் நோக்கம் இங்கிலாண்டைப் போருக்கிழுக்க வேண்டுமென்றும், அதற்குவேண்டிய காரியங்களை அது (ஜர்மனி) செய்துகொண்டே சமயம் பார்த்திருந்ததென்றும் ஒருவாறு ஊகிக்க இடமுண்டாகிறது. அந்த சமயமும் வாய்த்தது; இங்கிலாண்டு தனது உள்நாட்டுத்தொல்லைகளைக் குறித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதாக ஜர்மனி மனோராஜ்யம் செய்துகொண்டு, தனது ராணுவச் செறுக்கினால் மதிமயங்கி அதை ஊர்ஜிதப் படுத்தச் சமயமீதேயென நினைத்துக் கொண்டது.

பிரான்சை நசுக்கிவிட்டு ருஷியாவைச் சமீபத்தில் அண்டவொட்டாமல் செய்து இங்கிலாண்டை அருவருப்பான வகையாய்ச் சமாதானஞ்செய்து கொள்ளும்படி பலவந்தப்படுத்தலாமென்பது ஜர்மனியினது குருட்டு யோசனை. நாளடைவில் இவ்வஞ்சகயோஜனை வெளிவந்துவிட்டது. பின் நடந்த காரியங்களைக் கவனிக்கையில் அகங்காரமமதையே ஜர்மனி யுத்தத்திற் பிரவேசித்ததற்குக் காரணமாகப் புலப்படலாயிற்று. ஆர்க்டியூக் பிரான்ஸிஸ் பார்டினண்டும் அவரது மனைவியும் கொலையுண்டதையும், ஸெர்வியா தேசத்தைச் சேர்ந்தோர் எவரோ இதைச் செய்திருக்கவேண்டுமென்று ஆஸ்திரியா பசப்பி ஸெர்வியாவுக்கு இறுதிக்கடிதம் (Ultimatum) அனுப்பியதையும், அவ்விறுதிக்கடிதம் பொறுக்கமுடியாத ஆக்கிரத்தைக் கிளப்பிவிட, ஸெர்வியா அக்கடிதத்தை மதிக்கவில்லையாயினும் நியாயமான வழியில் மத்தியஸ்தத்திற்குத் தயாராயிருந்ததையும் உள்ளாராய்ந்து நோக்கின், இரண்டு விஷயங்கள் செம்மையாக விளங்கின. முதலாவது, ஸெர்விய ஜனங்களுக்கு எதிராகச் சண்டைபோடவேண்டுமென்று ஆஸ்திரியா கருதியது; இரண்டாவது, ஆஸ்திரியாவுக்குப் பக்கத்துணையாகக் கெய்ஸர் நின்றது.

## 'ரத்தஞ்சிந்துவதா பெரிது, ஸாவதானமே பெரிது.'

ஐரோப்பா கண்டத்தில் அமைதியே பிராப்தமாயிருக்கவேண்டுமென்று இங்கிலாண்டு கருதி மேலே சொன்ன நெருக்கடியான நிலையைத் தவிர்க்க விசேஷ முயற்சிகள் செய்தது. 'ரத்தஞ்சிந்துவது பெரிதல்ல, ஸாவதானமே பெரிது' என்பதைச் சுட்டிக்காட்டி நமது மாக்ஷிமை பொருந்திய ஜார்ஜ௵ சக்ரவர்த்தியார் கெய்ஸருக்கும் ஸாருக்கும் தம் கைப்படக் கடிதமெழுதினார். பால்கன் யுத்தம் நேர்ந்தகாலத்தில் எவ்விதமான ராஜதந்திரப் புலமையோடு ஸர் எட்வர்டு க்ரே வேலை செய்தாரோ அவ்விதமே இச்சமயத்திலும் வேலை செய்துபார்த்தார். எல்லாம் விருதாவாயின. கெய்ஸரும் அவரது ராணுவ ராஜாங்கமும் யுத்தத்திலேயே கண்ணாயிருந்தனர். பல வாரங்களுக்கு முன்னிருந்தே அவர்கள் போருக்கு வேண்டிய காரியங்களைச் செய்துவந்ததற்குப் போதுமான அத்தாட்சிகளுமிருந்தன. உலகத்திலுள்ள பற்பல விடங்களிலிருக்கும் 'ரிஸர்விஸ்ட்'களுக்கு எச்சரிப்பு லிகிதங்கள்

அனுப்பப்பட்டன. வியாபாரத்தைக் கெடுக்கும் உத்தேசத்துடன் கப்பல்கள் வெளிசமுத்திரங்களுக்கு அனுப்பப்படுவதற்கான ஏற்பாடுகளும் பூர்த்தியாயின.

பிரான்சு தேசத்தையும் ருஷியா தேசத்தையும் போருக்கிழுத்து அம்பலத்தில் நிறுத்தி ஆட்டிவைக்கவேண்டுமென்று ஜர்மனியும் ஆஸ்திரியாவும் விரும்பியது ஒருபுறமிருக்க, மற்றோர் புறத்தில் கெய்ஸரும் அவரது ஆலோசனைக்காரர்களும் இங்கிலாண்டை நடுவுநிலைமையிலிருக்கும்படி செய்துவிடலாமென்று நம்பிக்கொண்டிருந்தார்கள். பின்னும் பிரிடிஷ் கவர்ன்மெண்டார் ஏதாவது ஒரு வியாஜத்தை வைத்துக்கொண்டு போரில் தலையிடாமல் ஒதுங்கி நிற்கக்கூடுமென்றும் ஜர்மானிய ராஜதந்திரிகள் அபிப்பிராயப்பட்டார்கள். அவ்வபிப்பிராயத்தைத் தாங்கியே அவர்கள் நம் பிரிடிஷார் ஸாவதானமாக இருந்துவிடும் பக்ஷத்தில் பிரான்சிய அட்லாண்டிக் கடற்கரையை ஜர்மானியக் கடற்படை யெதிர்க்காதென்றும், வெற்றிக்கு ஈடாகப் பிரான்சிடமிருந்து எவ்வித ஸ்தலமும் பிடுங்கப்படமாட்டாதென்றும் தந்திரோபாயமாகப் பிரேரித்தும் பார்த்தார்கள்.

1914-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 3-ந்தேதி பார்லிமெண்டைச் சேர்ந்த ஜனப் பிரதிநிதியங்கத்தினர் சபையில் (House of Commons) ஸர் எட்வர்ட் க்ரே பேசியபோது, இங்கிலாண்டிற்குப் பிரான்சோடாவது மற்றெந்த வல்லரசோடாவது அந்தரங்கமான ஒப்பந்தம் ஒன்றுமில்லையென்றும், இங்கிலாண்டு செய்யவேண்டிய கடமை பெல்ஜியம் நடுநிலைமையிலிருப்பதைப் பங்கப்படுத்தாமற் பாதுகாக்கவேண்டுமென்பதே யென்றும் தெளிவாகக் குறிப்பிட்டார். பெல்ஜியத்தின் நடுநிலைமையை யொட்டி இங்கிலண்டு, பிரான்சு, ஜர்மனி மற்றுமுள்ள இதரதேசங்கள் ஆகிய இவைகளுக்குள் ஏற்கெனவே உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது. ஜர்மனி, ருஷியா, பிரான்சு ஆகிய இத்தேசங்களுக்கு மனஸ்தாபம் ஏற்படும்போலிருந்தபோதுகூட ஸர் எட்வர்ட் க்ரே பெல்ஜியத்தின் நடுநிலைமைப் பாதுகாப்பைக் குறித்து ஒவ்வொரு ராஜாங்கமும் கவனிப்பது நெறியாகுமென்று தந்திமூலமாய் அறிவித்ததுமுண்டு.

பெல்ஜியத்தின்மீது படையெழுச்சி.

மேற்சொன்ன அறிவிப்புக்கிணங்கப் பிரான்சிய ராஜாங்கம், தான் தக்ஷணமே பெல்ஜிய நடுநிலைமைக்கும் பாதுகாப்புக்கும் பங்கம் விளைவிப்பதில்லையென்று உறுதிமொழி கூறிவிட்டது. ஜர்மன் கவர்ன்மெண்டோ அப்படிச் சொல்லவில்லை. ஏதோ சாக்குப்போக்கான பதிலளித்தது. இதன் மத்தியில் ஜர்மனி சும்மாவிராமல் தன் துருப்புகள் பெல்ஜியத்தின் மூலமாகப் பிரான்சிய எல்லைபோய்ச் சேரும்படி பெல்ஜிய ராஜாங்கம் வழிவிடவேண்டுமென்றும், அவ்வாறு விடுமேயானல், சினேகத்துவம் நிலைப்பதோடு பரிகாரப்பகுதியாகப் பணம் கொடுப்பதாகவும் குறித்து ஜர்மனி பெல்ஜியத்



திற்குச் செய்தியறிவித்தது. இது தர்மசங்கடமாயிருப்பதை யுணர்ந்த பெல்ஜியம் அரசர் ஜார்ஜு சக்ரவர்த்தியாரை மத்தியஸ்தம் செய்யும்படி வேண்டினர். ஆனல் முதலிலிருந்தே ஜர்மானியர் பிளான்போட்டிருக்கிறார்களே. அப்படியிருக்க மத்தியஸ்தம் எவ்விதம் நிறைவேறும்? கட்டுக்கடங்காக் கோபத்துடன் ஜர்மானியர் லக்ஸம்பர்க் மூலமாகப் பெல்ஜியத்திற்குள் பிரவேசித்துவிட்டார்கள். இதை யொட்டி ஜர்மன் சான்ஸலர் ரீச்ஸ்டாக்கில் (ஜர்மன் மந்திராலோசனை ஸபையில்) பேசியபோது 'அவசர காரியத்திற்குச் சட்டமேது' (Necessity knows no law) என்று அவமானமின்றிச் சொன்னதும் நம் ஞாபகத்திலிருந்து அகலவில்லை. ஜர்மனி கையொப்பமிட்ட உடன்படிக்கை 'ஒரு துண்டுக் காகிதந்தானே' (A scrap of paper) யென்றும் அவமதித்துப் பேசியதை யாம் ஒருபோதும் மறவோம். எவ்விதமான சல்லியமும் இல்லாமல் தன்னந்தனியே ஸாவதானத்தோடிருந்த பெல்ஜியம் மூலமாகக் 'குறுக்கிட்டுப் பிளந்து செல்லுவது' (hack their way through) தான் ஜர்மன் ராணுவ தந்திரத்திற்கு அவசியமாயிருந்தது போலும்! சிறு தேசங்களிடம் ஜீவகாருண்யம், ஸ்வேச்சை, நியாயம் ஆகிய இவைகளைப் பாதுகாக்கவேண்டுமென்றும், ஜர்மன் ராணுவச் செறுக்கைக் குலைத்துத் தற்பெருமையையடக்கி அகங்காரத்தை அழிக்கவேண்டுமென்றுமுள்ள மேலான உத்தேசத்துடன் நேசவல்லரசுகள் (Allies) இப்போரில் தலையிடவேண்டியதாயின.

1914-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 4-ந்தேதி இங்கிலாண்டு ஜர்மனியோடு யுத்தம்தொடங்கிற்று. இப்போது சற்றேறக்குறை யுத்தம் ஆரம்பமாகி 3-ம் வருஷம் நிறையப்போகின்றது. இக்காலத்தில் எத்தனையோ ஸம்பவங்கள் நேர்ந்திருக்கின்றன; அவைகளைத் தனித்தனியே விவரிப்பது ஸாத்தியமல்ல.

ல. அனந்தய்யர்.

---

## ONE-MAN SUBMARINE.

## ஒரு மனுஷ்ய ஸப்மரீன்.

இப்போது அகோரமாக நடைபெற்றுவரும் ஐரோப்பிய யுத்தத்தில் எத்தனையோ புதுமைகள் முன்னிட்டவாறிருக்கின்றன. அவைகளில் ஜலக்கீழ்க் கப்பல்களென்னும் ஸப்மெரீன்களும் சேர்ந்தவை; இக்கப்பல்கள் சாதாரண கப்பல்களைப்போல அமைக்கப்பட்டிருப்பவைபல்ல; தண்ணீரின் மீது மிதக்கவும், க்ப்பலின் மேற்புறத்தை நன்றாக உட்புறத்திலிருந்து மூடிக்கொண்டு 8 அடி ஆழத்திலிருந்து 15 அடி ஆழம் வரையில் தண்ணீருக்குள் அமிழவும் செய்யும்படியான யந்திர விசைகளோடு அக்கப்பல்கள் பொருத்தப்பெற்றவை. தண்ணீரின்மீதிருக்கும்போது, நாலாப் பக்கங்

களிலும் பார்க்கவும் ஆகாயத்தில் உண்டாகும் பருவபேதங்களைக் கவனிக்கவும் ஸாத்தியமாகும். ஜலத்தின் அடிப்புறத்திலிருக்கையில் அவைகளைப் பார்த்துக் கப்பலை நடத்துவது எப்படிச் சாத்தியமாகுமென்று ஒருவகையான கேள்வி பிறக்கக்கூடும். அதற்காகக் கப்பலின் மத்தியில் இல்லாது ஓர் ஓரத்தில் நான்கு அங்குலகனமுள்ள கோபுரம்போன்ற உயரமானதோர் குழாய் (Conning tower) வைக்கப்பட்டிருக்கும். அது குறைந்தது 16 முதல் 25 அடி உயரமுள்ளது. அதன் மேற்புறமுனையில் 21 அங்குலக் குறுக்களவுள்ள 'பெரிஸ்கோப்' என்னும் பெயரிய தூர திருஷ்டிக் கண்ணாடி யொன்று நாலாதிக்குகளிலும் நடைபெறுவனவற்றைப் பிரதிபிம்பிக்கும்படியான சக்தியோடு அமைக்கப்பட்டிருக்கும். அது மூடவும் திறக்கவுமுரிய துவாரங்களோடு கூடியது. கோபுரம்போன்ற குழாயின் மேற்புற முனையில் காணப்படும் பிம்பமானது அதற்கு நேராக அடிப்புறத்தில் வைக்கப்பட்டிருக்கக்கூடிய கண்ணாடி யந்திரத்தில் பிரதி பலிக்கின்றது. அது காரணமாக இன்னதிசையிற் 'கப்பல் வருகிறது, அது இன்னதேசக் கப்பல், இன்ன இடத்தில் ஆகாய விமானம் வருகிறது என்பனவாதிய சகல விவரங்களையும் கப்பலுக்குள்ளிருப்பவர்கள் செவ்வையாய் அறிந்துகொள்ள முடியும். அப்படித் தெரிந்துகொள்வது ஸாத்தியமாகும்போது ஜலக்கீழ்க் கப்பலை நடத்துவோர்க்கு எவ்வித சிரமமுமில்லை; 'எண்சாண் உடம்பிற்குச் சிரஸே பிரதானம்; அச்சிரஸிற்கு நேத்திரமே பிரதானம்' என்பதைப் போல, ஜலக்கீழ்க் கப்பல்களுக்கு பெரிஸ்கோப் என்னும் அம்சமே பிரதானம். அதைக் கவனித்து அப்போதப்போது மற்றவர்களுக்குத் தகவல் கொடுக்கும் சிப்பந்தியே அதனிலும் பிரதானம். இப்போது ஜர்மனியர் அதிமேதாவித்தனமாகக் கடற்போராட்டத்தைக் கவனித்து வருவதில், இந்த ஜலக்கீழ்க் கப்பல்களின் உதவியிலேயே பெரிதும் நம்பிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஜலக்கீழ்க்கப்பல்களினாலே தம் காரிய மனைத்தையும் ஸாதித்துக்கொள்ளலாமென்பது அவர்களது நம்பிக்கை. ஒரு ஜர்மன் ஜலக்கீழ் கப்பலில் குறைந்தது 125 பேர்களிருப்பதுண்டு. ஆறு துளைவெடிகளுக்குக் குறையாமல் அக்கப்பலில் வைக்கப்பட்டிருக்கும். பகற்காலத்தில் பிறர் சடுதியிலறியாவண்ணம் எதிர்த்துத் தாக்குவதற்கு அனுகூலமாக ஜலக்கீழ்க்கப்பல் செய்து முன்விடப்படுகின்றது. ஜலத்திற்குக் கீழ் அது மூழ்குண்டிருக்கும்போது, அடிப்புறத்தில் கப்பல் இருப்பதாகக் கண்டுபிடிப்பது சிரமம். பெரும்பாலும் ஜலக்கீழ்க் கப்பல்கள் தாக்குவதெல்லாம் பகற்காலத்தில்தான். இரவு நேரத்தில் துறைமுகப் பாதுகாப்புக்காக ஜலக்கீழ்க் கப்பல்களை அமர்த்துவதும் ஸகஜம். ஜலக்கீழ்க் கப்பல்களில் ஜர்மனிதான் தலை துளிர்த்து ஆடுவதாகச் சிறிதும் நினைக்க வேண்டாம். இப்போது அமெரிக்காவும் யுத்தத்திற் பிரவேசித்திருப்பதனாலேயும், ஜர்மனியரைப்போல் அமெரிக்கர்களும் விசேஷ எஞ்சினீரிங் வேலையில் பாண்டித்தியம் பெற்றிருப்பதனாலேயும் நூதனமாக அவர்கள்



ஒரு ஜலக்கீழ்க் கப்பலைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அது நவீனமாயிருப்பதோடுகூட மிகவும் சுலபமாயியக்கப்படுந் தன்மையோடு கூடினதாயும் பெரிய ஜலக்கீழ்க் கப்பல்கள் செய்யுங் காரியத்தை யொப்பத் திறமையோடு வேலை செய்யக்கூடியதாயுமிருக்கிறதாம். அந்நவீனம் என்ன? ஒரே மனுஷ்யனால் நடத்தப்படக்கூடிய ஸப்மரீன் என்னும் ஜலக்கீழ்க் கப்பலேயாகும்.

அதன் பிராதான்யத்தையும் அமைப்பையும் மட்டும் இங்கு சுருக்கமாகச் சொல்லி நிறுத்துவோம். அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த காலிபோர்னியா வென்னும் தீபகற்பத்திலே வசிக்கும் எம். ஜே. டம்பிள் என்னும் கனவான் இந்த நூதன ஸப்மரீனைக் கண்டுபிடித்திருக்கிறார். இந்த ஸப்மரீனுக்குள் வைக்கப்பட்டிருக்கும் இயந்திர விசைக்கூடத்தில் ஒருவனைத்தவிர இருவர் இருக்க இடமில்லை. அவ்வொற்றைக்கப்பல் முழுமையும் இரண்டுடன்தான் நிறையுள்ளது, நீளம் 25-அடி; இருமுனைகளிலும் கூர்மையாகப் படகுகள்போல் சிறுத்திருக்கும். அந்த ஸப்மரீனின் உயரம் 7-அடி 6-அங்குலம். அது அகலமாயிருக்கும் மத்திய பாகமோ 28-அங்குலமுள்ளது. அதாவது, $2\frac{3}{8}$ அடி இருப்பதுகூடக் கஷ்டம். அதனுள் வைக்கப்பட்டிருக்கும் மோடார் இயந்திரமோ 110 குதிரை பலங்கொண்டது. அந்த மோடாரைக்கொண்டு மணி ஒன்றுக்கு 25 மைல் வேகத்தோடு அந்த ஸப்மரீனைத் தண்ணீருக்குள் ஓட்டிக்கொண்டுபோக முடியுமாம். இந்த ஸப்மரீனின் இருபாரிசங்களிலும் இரண்டு துளைவெடிகள் பொருத்தப்பெற்றிருக்கின்றன. மற்றும் இந்த ஸப்மரீனை நடத்துவதில் விசேஷ திறமையொன்றும் வேண்டுவதில்லை. சாதாரணமாகத் தரையில் ஓடும் மோட்டார் வண்டிகளை எவ்வளவு சுலபமாய் நடத்துகிறோமோ அம்மாதிரியாகவே இதை எளிதாக ஒரு மோடார் ஓட்டி, நடத்திக்கொண்டுபோக முடியும். என்னே விந்தை! ஜர்மானியர்களுக்கு அமெரிக்கர் ஒருபோதுந் தாழ்ந்துபோகமாட்டார்கள். 'தாய் எட்டடி வைத்தால் குட்டி 16 அடி வைக்கு'மென்று கேட்டதில்லையா? அதுபோல் பெரிய ஸப்மெரீனை ஏராளமான பணம் செலவுசெய்து அனேக மாலுமிகளை உட்புறம் வைத்து நடத்தக்கூடியவாறு ஜர்மனி தயாரித்துக்கொண்டிருப்பதைப் பார்த்து அமெரிக்கர் மிகுந்த மதியூகத்தோடு சொற்ப செலவில் அதிக சிப்பந்திகளின்றி ஒரே ஆளைவைத்துக் காரியத்தை முடித்துக்கொள்ளும் தீவிரமான மார்க்கத்தையும் காரியத்தையும் பின்பற்றியிருப்பது நேச வல்லரசுகளுக்குப் பெரும்பலமாகு மென்பதை மறுப்பாருமுளரோ? இப்போது ஜர்மனி என்ன செய்யப்போகிறதென்று கவனிப்போம்.

'இந்துநேசன்.'

---

# PART II.

## SANITATION.

## ஆரோக்கிய விமர்சனம்.

### மதியினால் ஆகாதது ஒன்றுமில்லை.

விதிப்பயனால் உண்டாகும் சுகக்கேட்டை மதிப்பயனால் ஏன் தடுக்கலாகாதென்று சென்ற சஞ்சிகையிற் சொன்னோமே. விதியென்பது மானிடர்களுக்கு நேரிற் புலப்படும் ஒரு பண்டமல்ல, பதார்த்தமல்ல, வஸ்துவுமல்ல, ஸ்தூலத்தில் அதற்கு எவ்வித உருவமுங் கிடையாது; அது மானஸீகமாகத் தோன்றும் ஓர் அனுகிருதமான ஆசுவாஸமே யல்லாது வேறொன்றுமல்ல; அது மிகவும் சூக்ஷ்மமானது. ஒரு பாத்திரத்தில் விட்டிருக்கக்கூடிய தண்ணீர் அப்பாத்திரத்தின் உருவமைப்பை யெவ்விதம் பெறுமோ அதுபோல நாம் மனஸினால் ஸ்மரிப்பதொவ்வொன்றும் அதனதன் உருவமைப்பையடைந்து விடுவதன் தன்மையாகவே நமக்குத் தோன்றுகிறது. அப்போதே 'விதி விதி' யென்று நாம் கூறுகிறோம். காரணமில்லாது காரியம் ஏற்படுவது கிடையாதாதலின், நமக்குத் தேக அசௌக்கியம் நேரும்போது அதற்கு ஏதாகிலும் ஒரு காரணம் இருந்திருக்கவேண்டுமென்பதே நமது கொள்கையாயிருக்கவேண்டும். சரீரத்தில் நரம்புத் தளர்ச்சி யேற்பட்டாலும், இரத்தமில்லாக் குறைவினால் சரீரம் வெளுத்துச் சோகை பிடித்திருந்தாலும், தசை நரம்புகள் சோர்ந்து மார்பெலும்பும் விலாப்புறவெலும்பும் தெரிய கண்கள் ஆழத்திற் பதிந்து கன்னங்கள் ஒட்டிப்போயிருந்தாலும், இயற்கையாய் அசக்தி யுண்டாவது ஸகஜம்; பெண்களாயினோர்க்கு இவ்விதங் காணுமேயாயின் அனேக சமயங்களில் தளர்ச்சியும் மயக்கமும் உண்டாவதை நம்மவர் பலர் பார்த்திருப்பார்கள். பலஹீனத்தினாலுண்டாகும் மயக்கம் நல்ல காற்றினாலும் சுத்த ஜலம் கஞ்சி போன்ற ஆகாராதிகளினாலும் ஆசுவாசமாகக் கால்மணி, அரைமணி அல்லது ஒரு மணி தேசகாலமாகக் கூடும். இதன் மத்தியில் நம் வீட்டுப் பாட்டிமார்கள் 'ஆஹா, குழந்தைக்குச் சங்காதோஷம் ஏற்பட்டுவிட்டது, பேய் பிடித்துவிட்டது, முனி அவள் மீது வந்திருக்கிறது, இது பிடாரியின் கோளாறு' என்றிம்மாதிரியாக மனப்பிராந்திமிகுந்து உளறிக் கொட்டி தங்களுக்கு இன்னது செய்வதென்று தெரியாமல் தடுமாறுவதோடு அண்டையிலிருப்போர்க்கும் ஒரு விதமான பீதியை யுண்டாக்கியும் விடுவார்கள். இதையின்றும் தென்னிந்தியக் கிராமங்களிற் காணலாம். வியாதி வருவதற்குக் காரணம் ஈசுவரசங்கற்பமென்று தத்துவ போதம் செய்வோருமிருக்கிறார்கள். ஆதியந்தமில்லாது சுயம்புவாயிருக்கும் பராபரவஸ்துவான ஸர்வேசுவரனுடைய ஆக்ஞாசக்ரம் சுழலாது



உலகத்தில் யாதொரு காரியமும் நேர்வது கிடையாதென்பதை நாம் ஒப்புக்கொள்ளாதிருக்கவில்லை. நம்மீதாகத் தோன்றும் எங்கணும் வியாபித்திருக்கும் நீலவானமென்ன, ஓய்வு ஒழிவில்லாது மலைபோன்ற அலைகளோடு கர்ஜ்ஜித்துக்கொண்டிருக்கும் சமுத்திரமென்ன, பூமியின் நடுநடுவே ஆகாயத்தை யளாவி நிற்கும் பிரமமாண்டமான பர்வதங்களென்ன—ஆகிய இவைகளெல்லாம் ஸர்வேசுவரனால் ஏற்பட்ட ஜகத் சிருஷ்டியைச் சார்ந்தவையென்பதை ஒருவராலும் மறுக்கமுடியாது. கடவுளின்மீதே ஒவ்வொன்றுக்கும் பாரத்தைப்போடுவதற்குப் பதிலாக அக்கடவுளால் நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் பூலோக ஸாதனங்களைத் தொகுத்து எடுத்து சௌக்கியத்தோடு கூடின பாக்கியவந்தர்களாக ஏன் காலங்கழிக்கலாகாது என்பதை நாம் நன்றாய் ஆலோசிக்கவேண்டும். அடாது செய்தால் படாதபாடு நேரும். விரும்பத்தகாத காரியம் செய்யின் அது காரணமாக உண்டாகக்கூடிய தொல்லைகளுக்கு நாம் உட்பட்டே தீரவேண்டியிருக்கும். நெருப்புக்குச் சுடுகிற தன்மை ஏற்பட்டிருப்பது போலும், கூரான முட்களுக்கு 'சுருக்' எனத் தைக்கும் தன்மையுண்டாயிருப்பது போலும் நமக்கு விரும்பத்தகாததோர் அம்சம் புலப்படுமாயின், அதைக் கண்டித்தெறிந்துவிட்டு விரும்பக்கூடிய வகையாய்க் காரியத்தைச் செய்துகொள்ளவேண்டும் என்னும் தன்மையும் கடவுளாலேயே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதுவே மானிட வாழ்க்கையிலுள்ள மர்மம். சரீரத்தைப் பீடிக்கும் வியாதிகள் சமீபத்தில் அணுகாமற் பாதுகாத்துக்கொள்ள முதன் முதல் நமது ஐம்புலன்களாகிற மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய இவைகளைக் கிரமமான பிரவர்த்திகளில் நடச் செய்யவேண்டும். அதுவே தேகாரோக்கியத்தைக் காக்கும் நேரான வழி; அதற்கு மாறாக நடப்பின், சரீர சுகங்கெட்டு அல்லற்பட்டுழலக் காரணமாகும். அத்தொந்தரவுகளிலிருந்து தப்பவேண்டுமானால் சுகாதார முறைகள் இன்னின்னவையென்று பெரியோர் தொகுத்திருக்கும் விதிகளைக் கவனிக்க வேண்டியதே நெறி.

### ஆரோக்கியமே பாக்கியம்.

திடசரீரியாயிருக்கும் ஒருவனுக்கும் ரோகத்துடன் உடல் மெலிந்து வளர்த்தியற்று எலும்புந் தோலுமாகக்கிடக்கும் மற்றொருவனுக்கும் நிரம்ப வித்தியாஸமுண்டு. இருவரும் உல்கவாழ்க்கையைப் பின்பற்றினவர்களாயினும் முதலவனுக்கிருக்கும் மனவமைதியையும் சந்துஷ்டியையும் ஒப்பப் பிந்தியவனுக்கு இருக்கமாட்டாதென்பது திண்ணம். ஆகவே ஆரோக்கியத்தை எப்போதும் எவரும் அசட்டை செய்யலாகாது. ஆரோக்கியத்தைப் பற்றிக் கூறும் எத்தகைய கிரந்தத்தையும் உலகில் மனிதராகப்பிறந்த ஒவ்வொருவரும் கற்றுணர்வது அத்தியாவசியமாகும். இது நாகரிகமிகுந்தோ மிகாமலோ இருக்கக்கூடிய ஒவ்வொரு தேசவாசியும், அனுஸரிக்கக் கடமைப்பட்டிருக்கிறான். ஒவ்வொரு தேசத்திலும் ஆங்காங்குள்ள வழக்கக்

கிரமத்தை முன்னிட்டு ஏதேதோ சிகிச்சைகளைக் கண்டு பிடித்திருப்பதாக அனுபவ ரீதியாகவும் வைத்திய நூல்களின் மூலமாகவும் தெரியவருவது காரணமாக, நாமும் அந்நூல்களிலிருந்து நமக்குவேண்டிய அளவு ரஸத்தைக்கிரஹித்து, அதை நம்போன்ற ஜீவராசிகள் விஷயத்தில் உபயோகப்படுத்தவேண்டும். அதுவே மானுஷீக தர்மம். இது நிற்க, வியாதிகளின் பாகுபாடு எத்தன்மைய தென்பதைக் கவனிப்போம். ஒவ்வொரு வியாதியின் குறியையும், அதனாலுண்டாகும் லோபத்தையும் விவரித்தெழுதுவது ஸாத்தியமல்ல; வைத்திய சாஸ்திரமறிந்த பெரியோர்கள் வால்யூம் வால்யூமாக அந்தந்த தேசபாஷைகளில் எழுதிவைத்திருக்கும் வைத்தியக்கிரந்தங்கள் அபரிமிதமாகக் கிடக்கின்றன. அக்கிரந்தங்களை ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துக் கோர்வையாகச் சொல்லவாரம்பித்தால் நம்மாயிசு முழுவதுந் தீர்ந்தாலும், அச்சாஸ்திரத்தின் ஒரு பகுதிகூட பூர்த்தியாகச் சொல்லப்பட்டு நிறைவேற்ற முடியாது. ஆனதுபற்றி பொதுப்படையாக ஆரோக்கிய சாஸ்திரத்தின் நுட்பங்களை அறிந்து கொள்வதன் அவசியத்தை மட்டும் ஈண்டெடுத்துக் கூறுவோம். 'வெடிய வெடியக்கதைகேட்டுவிட்டு சீதைக்கு ராமன் என்ன வேண்டு'மென்று கேட்ட கதையைப் போலல்லாமல் ஆரோக்கியத்தைப்பற்றிக் கூறும் சாஸ்திரத்தைப் படித்தறிவது மட்டும் போதாது; அச்சாஸ்திரத்திற் கண்ட விதிகளை யப்பியசித்து நடை முதற்பழக்கத்திற் கொண்டுவரவேண்டும். அப்போது தான் அதனிடமாக ஏதேனும் பலன் கிடைப்பதை நாம் எதிர்பார்க்கலாம். ஆதலால் எந்தவியாதி வந்தாலும் அதைத்தீர்க்கமாகப் பரிசீலனைசெய்து இன்ன காரணத்தினால் அது வந்திருக்கிறது, அதற்கு இன்ன மருந்தைக்கொடுத்தால் சௌக்கியமாகும் என்பனவாதிய விவரங்களை நம்மவர் நன்றாகக் கவனிக்கவேண்டும். ஓரோர் காலங்களில் ஓரோரிடத்திலே ஓரோர் வகையான வியாதி பீடிப்பதுண்டு. உதாரணமாக மலைப்பிராந்தியமாயுள்ள பிரதேசங்களில் குளிர் காற்று வீசும்; அதில் அதிகநேரமிருந்து சரீரத்தைப் பாதுகாத்துக் கொள்ளாத ஒருவன் குளிர் சுரத்தினால் வருந்தக்கூடும்; அசுத்தமான மடுவு, குட்டை, கிணறு முதலியவைகளில் நீராடும் ஒருவனுக்கு ஜலதோஷம் தலைவலி நேரக்கூடும்; தண்ணீரைக்காய்ச்சி வடிக்கட்டி யருந்தாத ஒருவனுக்கு நுண்ணிய அங்குரங்களினால் (நோய்க்கிருமிகளினால்) வயிற்றுக்கடுப்பு, வயிற்றுளைவு, விஷபேதி முதலான வியாதிகள் பீடிக்கும். மற்றும் ஸர்வ ஸாதாரணமாயுள்ள வைசூரியானது முறகாலங்களில் ஓரோரிடத்திற் பரவி ஒட்டுவாரொட்டியாக விருந்து கிராமம் கிராமமாகத் துடைத்தெறிந்ததுமுண்டு. அவ்வியாதியினால சரீர சுகங்கெட்டுப் பலர் தம் சரீரமாத்யந்தம் தழும்புகள் நிரம்பிக் கண்குருடாகவோ கைகால் இழுத்தோ அவதிப்பட்டு மிருக்கிறார்கள். அக்கொடிய வியாதியைத் தடுக்க நயமரசாங்கத்தார் எவ்வளவோ நூதன முறைகளைக் கண்டு பிடித்துமிருக்கிறார்கள். பசுவினுடைய கன்றின் மூலைக்காம்பில் வெடித்திருக்கும் ஒருவித கொப்புளத்திலிருந்து எடுக்கப்படுற நீரை மனுஷ்யனுடைய சரீரத்திற் புகுத்தி வைசூரியைச்



சமீபத்தில் அண்டவொட்டாமற் செய்யலாம். வெகு காலத்திற்கு முன் இங்கிலாந்திலிருந்த ஒருவர் மேற்சொன்ன சிகிச்சையைக் கண்டுபிடித்தார். இப்போது அது உலகம் முழுவதிலும் பரவிவிட்டது. இம்மாதிரியே ஒவ்வொரு தேசத்திலுமிருக்கும் வைத்திய சாஸ்திர நிபுணர்கள் தங்கள் தங்களுடைய மதிப்புலனை நன்றாய் உபயோகித்து லோகோபகாரமான அம்சங்கள் பலவற்றை நன்றாயறிந்து விளக்கியிருக்கிறார்கள். அவ்வம்சங்களை நாமும் பக்திசிரத்தை மிகுந்து கைப்பிடிப்போமாக. மனுஷ்யஜன்மம் நோய் நொடிகளிலிருந்து தப்புவது அஸாத்தியமெனச் சிலர் கருதலாம்; என்றாலும் நாகரிகமிகுந்த தேசங்களிலிருக்கும் நிபுணர்கள் அந்நோய் நொடிகளை யண்டவொட்டாமற் செய்திருக்கும் விசேஷமுயற்சிகளை நாம் நழுவவிடாமலும் அவைகள் மீது அசிரத்தை கொள்ளாமலும் அப்பியசித்து வருமிடத்து, நமது தேகாரோக்கியத்திற்கு எவ்விதமான குந்தகமும் ஏற்படக் காரணமிராது. ஆதலால் நோய்வாய்ச் சிக்குண்டவர்கள் ஆரம்பத்தில் அந்நோய் வந்ததற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்தறிந்து பிறகு பரிகாரந் தேட முயலவேண்டும். ஆரோக்கியத்திற் கண்வைத்திருப்பவன் அரோக திடகாத்திரனாயிருப்பானென்பதும் அப்போதுதான் நன்றாக அவனுக்குத் தெரியும். மதியீனத்தினாலும் பிறர்போதனையினாலும் சகவாஸதோஷத்தினாலும் செய்யப்படக்கூடிய அகிர்த்தியங்களினால் தனது தேகம் சீர்கேடடைவதைக் கவனியாதிருக்கும் ஒருவன் இறுதியில் நோயால் பீடிக்கப்பட்டு மண்ணோடு மண்ணாகப்போய்ச் சேருவது திண்ணம், அவ்விதம் நேராதிருக்க அவன் விரும்புமிடத்து, அரோக்கியத்தைக் குறித்துத் தினந்தோறும் அனுவளவாவது சிரத்தை யெடுப்பதை அவன் தனது கடமையாகப்பாவிக்கவேண்டும். அப்போது தான் அவனுடைய மனதில் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது நன்றாகப்புலப்படும்.

## A WAR LOAN ITEM.

### யுத்தக்கடனைப்பற்றியதோர் அம்சம்.

யுத்தச் செலவுக்காகப் பலர் பணம் கடனாகக் கொடுத்து யுத்த ரொக்க ஸர்டிபிகேட்டுகள் 5-வட்டியிலும் $5\frac{1}{4}$-வட்டியிலும் பெற்று வருகிறார்களல்லவா? தபாலாபீசு மூலமாகவும், பாங்குகள் மூலமாகவும் யுத்தகடனுக்குப் பணம் செலுத்தி ஸர்டிபிகேட்டுகள் பெற்றுக்கொள்ளலாமென்றும் அதிகாரிகள் ஏற்பாடுசெய்திருப்பதை ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். இதுவரையில் நாம் கடனாகக் கொடுத்த பணத்திற்குக் ரொக்க ஸர்டிபிகேட்டுகள் ஒருவர்பேரில்தான் கொடுக்கப்பட்டுவந்தன. இப்போது அந்த கடன் விஷயத்தில் அதிகாரிகள் ஒரு ஸௌகர்யமான உத்தரவுசெய்திருக்கிறார்கள். தபாலாபீசுகளில் பணம்செலுத்தி ரொக்க ஸர்டிபிகேட்டுகளையாவது, யுத்தக்கடன் பத்திரங்களையாவது வாங்கிக்கொள்ளுவோர் தாம் கொடுக்கும் கடன்தொகையை தங்கள்பேரில் மட்டிலும் போட்டுக்கொள்ளாது தங்களுடன் மற்றொருவர் பெயரையும் சேர்த்து ஜாயின்டாகப்போட்டுக்கொண்டு தம்மிருவருடைய பெயர்களின்மீது அக்கடன் சீட்டுகளையோ, பத்திரங்களையோ பொடச்சொல்லி வாங்கிக்கொள்ளலாமென்று அவ்வுத்தரவில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு குடும்பத்திற்பிறந்த சகோதரர்கள், சகோதரிகள், தம்பதிகள் ஆகிய இவர்கள் பெயரால் சேர்த்துப்போட்டுக் கடன்பத்திரம் பெறுவதில் விசேஷ சௌகர்யங்களுண்டு. ஏதோ காலவசத்தினால் ஒருவர் மாண்டுபோக நேர்ந்ததென்று வைத்துக்கொள்வோம்; அப்போது உயிருடனிருக்கும் மற்றொருவர் யாதோ விவாதத்திற்குமிடமில்லாது கடன் பத்திரத்திற் கண்ட பணத்தைக் குறித்த தேதியிற் பெற்றுக் கொள்ளலாம். சாமான்ய அந்தஸ்தோடுகூடின பலகுடும்பங்களுக்கு இவ்வேற்பாடு மிக்க பிரயோஜனத்தைக் கொடுக்குமென்பதற்குத் தடையில்லை.

# PART III.

## KNOWLEDGE ON AGRICULTURE, etc.

BY Mr. G. RAJAGOPAL,

*Late Editor "South Indian Agriculture."*

## விவசாய ஞானம்.

### செடிகள் எப்படி வாழ்கின்றன ?

(56-ம்பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறு ' நீரே பிராணாதாரம்" என்று சொல்லிய பிரகாரம் ஜலமில்லையானால் செடி பட்டுப்போமல்லவா ? அப்படியிருக்க உலர்ந்த புழுதியில் செடி எப்படி வளர்கிறது ?

மண்ணின் தாயீரம் ஆவியாவதற்கு மேல்நோக்கும். மேல்மண்ணைப் புழுதியாக்க மேல்நோக்கிய ஈரம் வேருக்கு உதவும்.

இவ்வீரம் விளக்குத்திரியில் எண்ணெய் ஏறுவது போலவே மண் புரைச்சல் அதிகப்பட்டால் இவ்வாறு ஈரம் ஏறுவது குறையும். மண் அழுத்தமாக இருந்தால் ஈரம் மேல்நோக்கும். அதில் பயிர் செழிக்கும்.

மண் புரைச்சலால் செடிகளுக்கு என்ன பயன் ?

மண் புரைச்சலானால் காற்று உள்ளே செல்லும் மணல் நிலத்தில் இவ்வாறு காற்று அதிகமுண்டு. களிமண் நிலத்தில் காற்று குறைச்சலாயிருப்பதால் அடிக்கடி மண்ணைக் கிறிக்கொடுக்கவேண்டும்.

காற்று மண்ணுக்குள் செடிக்கு எவ்வாறு உதவுகிறது ?

செடியின் இலைகளுக்குக் காற்று உதவுவதுபோல வேருக்கும் காற்று இருப்பது அவசியம். காற்றில்லையானால் வேர் நோய்ந்துபோம். ஒரு செடிக்கு அடிக்கடி ஜலமே விட்டுவந்தால் காற்று பிரவேசிக்க மார்க்கமில்லாமல் ஜலம் நிலையாக நிற்க மண் குழைந்து செடி பட்டுப்போம். ஆகவே செடிகளுக்கு நீர் பாய்ச்சினால் அடிக்கடி கொத்திக் கொடுத்துவரவேண்டும். அப்படி செய்தால் செழுமை அதிகமாகும்.

ஓர் செடிக்கு எந்தத்தருணத்தில் அதிக ஜலம் வேண்டும் ?

அது அதிகமாய் வளரும் சமயத்தில் ஜலம் போதுமானபடியிருக்க வேண்டும்.

புஞ்சைப் பயிர் அதிகமாக வளரும் சமயத்தில் மழை பெய்வதுண்டா?

மழை குடித்தன சவுகரியத்துக்கு ஏற்றபடி பெய்வதில்லை. வேண்டாத தருணத்தில் பெய்யும் மழையை ஆவியாகப் போகவிடாதபடி மண்ணைப்புழுதியாக்கிவைத்தால் ஈரம் நிலைக்கும்.



மண்ணிலுள்ள எல்லா ஆகாரமும் கரைந்துவிட்டால் என்ன சம்பவிக்கும் ?

செடி பட்டுப்போம். எருவின் காரம் அளவுக்குமிஞ்சிவிடும். மழை கரைத்துப்போகும்.

எருவிடும்போது செடியின் அடியில் எருவைப்பது சிரேஷ்டமா ?

செடி அல்லது மரத்தின் தண்டிற்கு அடியில் எருவைக்க முழுப்பயன் உண்டாவதில்லை. ஏனெனில் செடியில் ஜல்லிவேர் முழுவதும் தண்டிற்குத் தூரத்தில் இருப்பதால் அவ்விடத்தில் எருவிடுவது சிரேஷ்டம்.

அப்படியானால் ஜலம் பாய்ச்சுவதும் இம்முறையை அனுசரிக்கவில்லையா ?

ஆம் அனுசரித்திருக்கிறது. தண்டிற்கு அப்புறத்திலே நீர் பாய்ச்ச வேண்டும். செடிகள் ஆகாயத்திலிருந்தும் இலை மூலமாக ஆகாரம் அடைகிறது.

ஒரு செடியிற் எவ்வளவு பாகம் மண்ணில் கிடைக்கிறது ?

சராசரியில் 100-க்கு 3-பாகம் மண்ணில் கிடைத்த வஸ்துவாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. சிலவற்றில் அதிகமாகவும் சிலவற்றில் குறைந்துமிருக்கும்.

ஏராளமாய்ச் செடியில் உள்ளவஸ்து எது ? ஜலம்.

செடி ஜலத்தை எப்படி எடுக்கிறது ? வேரினாலா, இலையினாலா?

வேரினாலேயே.

இந்த ஜலம் எந்த அங்கத்தின் வழியாய்ச் செல்லுகிறது? இளம் கட்டை மூலமாகவா? அல்லது பட்டைக்கும் கட்டைக்கும் மத்தியிலா ?

இளங்கட்டை மூலமாக ஜலம் மேலே பரவுகிறது.

ஒரு செடியை எரித்தால் அதிகபாகம் புகையாகப் போகிறதே? அது என்ன ? எங்கிருந்து வந்தது ?

அது கரியணு, ஆகாயத்தில் உள்ள கரியமிலவாயுவைச் செடி பிரித்து கரியை சாப்பிட்டு பிராணவாயுவை வெளிவிடுவதுண்டு.

ஆகாயத்திலுள்ள சிகணவாயு எவ்விதமாய் ஆகாரமாகிறது.

இது பெடலுப்பு வகையாகவாவது நவகார வகையாகவாவது வேருக்கு உதவுகிறது.

மாவு எங்கே உற்பத்தியாகிறது? இலையிலும் மற்ற பசுமை பாகங்களிலும் மாவு உண்டாகிறது.

எந்த வஸ்துக்களிலிருந்து மாவு உண்டாகிறது?

கரியமிலவாயு ஜலம் இவைகளிலிருந்து மாவு உண்டாகிறது.

மாவில் உள்ள தாதுப் பொருள்கள் எவை?

கரியணு ஜலவாயு பிராணவாயு.

மாவை ரசாயனப் பரீக்ஷையால் கண்டுபிடிக்கும் மார்க்கம் என்ன?

ஐயோடீன் என்னும் மருந்தை மாவில் போட்டால் அது நீலமாகும். ஒரு செடியின் எதாவது அங்கத்தில் ஐயோடீன் போட்டு நீலநிறமாக மாறினால் மாவு இருப்பது நிச்சயம்.

மாவு செடியின் ஆகாரமாவதற்கு முன்னமே எப்படி மாறுகிறது?

சர்க்கரையாக.

சர்க்கரை எவ்வாறு உதவுகிறது?

செடியை வளர்க்க உதவுகிறது.

இலையில் உண்டான மாவு ரசம் செடியின் எந்தப் பாகத்திற் பரவுகிறது?

பட்டையின் உட்புறத்தில் பரவுகிறது.

வேர் மண்ணிலிருந்து ஜலத்தையும் ஆகாரத்தையும் எடுக்கிறது. இவ்வாதாரம் வேரை உண்டாக்க உதவுமா?

உதவாது. அது இலைக்குப்போய் அங்கே கரியணுவுடன் சேர்ந்து அதிகமான ஜலத்தை ஆவியாக்கி பிறகு செடியைப் போஷிக்கும்.

மாவு வித்திலும் கிழங்கிலும் இருப்பானேன்?

முளைக்கும் செடிகள் இவைகள் மூலமாக இருப்பதால் அவைகளில் மாவு ஏற்பட்டிருக்கிறது. இந்த மாவு பிறந்த குழந்தை உடனே தாயின் முலையைச் சப்பிப் பிழைப்பதுபோல மாவு இளம் முளைக்கு உதவுகிறது.

கிளைகளில் மாவு இருப்பதுண்டா?

உண்டு.

புஷ்பங்கள் ஆகாரத்தை வேரிலிருந்து அடைகிறதா?

இல்லை; புஷ்பம் முன் வருஷத்திய கொம்புகளிலிருந்தும் தன் ஆகாரத்தை அடைகிறது.

தழைக்கென்று வெட்டப்பட்ட வேம்பு, புங்கன் முதலியன துளிர்த்தாலும் பூத்துக் காய்ப்பதில்லை. ஏனெனில் முந்திய வருஷத்துக் கிளைகள் வெட்டப்பட்டிருக்கின்றன.

சாப்பிடும் கீரை புஷ்பிக்காததற்கு முன்னமே சத்தும் ருசியும் உள்ளதும் பூர்த்துவிட்டால் சத்து குறைகிறதையும் ருசியில் காணலாம். அவ்வாறே சோளத்தட்டும் பூப்பதற்கு முன்னமே சத்துள்ளதென்று வெட்டித் தீவனமாக்கப்படுகிறது.

மண் ஈரத்தில் ஆகார சத்து மிகக்கொஞ்சம்; வேர் அபரிமிதமாக நீரை எடுத்துக்கொள்ளுகிறது. அவ்வளவு ஜலம் என்னவாகிறது?

இலைகளின் மூலமாகப் போகிறது. (இன்னும் வரும்.)



# COMMERCE AND INDUSTRY.

# வர்த்தகமும் கைத்தொழிலும்.

## தொழிலுக்குரிய ஆர்வம்.

பெரும்பாலும் தத்துவ ஞானத்தில் புத்தியைச் செலுத்தும் இந்தியர்கள் வர்த்தகத்திலும் கைத்தொழில்களிலும் அதிக சிரத்தை காட்டக் காணோம். காரணத்தைக் கவனிக்குமிடத்து, அவைகளுக்கு இந்தியாவிற் போதுமான ஸாதனங்கள் கிடையாவென்றே பலர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். என்றாலும் நாம் அதை அங்கீகரிக்கவில்லை. இந்தியாவிற் கிடைக்காத ஸாதனங்களா வேறு தேயத்திலிருக்கப் போகின்றன? எல்லா விதமான வளங்களும் நிரம்பப்பெற்றிருக்கும் இந்தியாவிலா ஸாதனங்களுக்குக் குறைவுண்டாகும்? அம்மாதிரி சொல்லுவது சுத்த மதியீனம். கிடைக்கும் ஸாதனங்களை யுபயோகப்படுத்திக்கொள்ளத் தெரியவில்லை யென்று ஒரு சமயம் சொன்னால் சொல்லலாமே யல்லாது இந்தியாவில் வர்த்தகத்திற்கும் கைத்தொழிலபிவிருத்திக்கும் இடமில்லை யென்று சொல்லுவது ஒருக்காலும் பொருந்தாது. இந்தியாவிலோ விளைபொருள்களுக்குச் சிறிதுங் குறைவில்லை. எனவே இயற்கைப்பொருள்கள் அபரிமிதமாகக் கிடைக்கும் பெரிய தேசம். அவைகளைச் சேகரித்துச் செயற்கைப் பொருள்களாக்க எவ்வளவு வசதிகள் எதிர்பார்க்கப்படக்கூடுமோ அவ்வளவு வசதிகளுக்கு இடமில்லை. ஆனதுபற்றி இந்தியாவுக்கு வேண்டிய செயற்கைப் பொருள்களுக்கு வெளிதேசங்களையே யெதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. உதாரணமாக ஸோப் என்னும் சவர்க்காரம், காகிதம், நெருப்புக்குச்சி முதலிய வஸ்துக்களைப் பொறுத்தமட்டில் லட்சக்கணக்காக இத்தேசத்தில் இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. 1914-15-ம் வருஷ வியாபாரக்கணக்கை யெடுத்துத் திருப்பிப் பார்க்குமிடத்து மேலே சொன்ன மூன்று பண்டங்களும் முறையே 83½ லட்சமும் 184 லட்சமும் 113 லட்சமுமாக இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இந்த வஸ்துக்களும் இவைபோன்ற இதர வஸ்துக்களும் ஏற்றுமதி செய்யப்படாமல் இறக்குமதி செய்யப்படுவதற்குக் காரணம் என்னவென்று தீர்க்கமாய் ஆலோசித்துப் பார்க்குமிடத்து நாம் பயிலுங் கல்வி விசேஷ இலக்கிய சம்பந்தமாய் இருக்கிறதே யல்லாமல் தொழில் சம்பந்தமுடையதாக இருக்கவில்லை. உலகெங்கும் பூதபௌதிக ரசாயன சாஸ்திரஞானமும் அதன் மூலமாகத் தொழிற் கல்வியிற் பழக்கமும் வேண்டுமென்று இப்போது ஒருவகையான அபிலாஷை முன்னிட்டிருக்கிறது. நாகரிக மிகுந்த மேற்றிசை நாடுகளும் பஸபிக் மகாசமுத்திரத்திலிருக்கும் ஜப்பான் தேசமும் வியாபார விர்த்தியில் எவ்வளவு தூரம் முற்போக்கடைந்திருக்கின்றனவென்று கவனித்துப்பாருங்கள். இதற்குக் காரணம் என்ன? தொழிற்கல்வியில் விசேஷ ஞானமடைந்து அநுபவார்த்தமாகப் பலவகைத்தொழில்களைத் திருப்திகரமாகச் செய்யும் பழக்கம் பெற்றிருப்பதுதான். பயிற்சி பெற்றிருப்பதுமட்டும் ஒரு தொழிலுக்குப் போதாது; பயிற்சியோடுகூட பழக்கமும் சேர்ந்திருக்கவேண்டும். பயிற்சியும் பழக்கமும் ஒன்று சேரும்போது, அச் சேர்க்கைமுயற்சி வழக்கமாக வந்து சேருகிறது. வழக்கமாகச் செய்யும் வேலைகள் கடைசியில் வியாபார தோரணையிற் கொணர்ந்து

விடுகின்றன. ஆனதுபற்றியே வியாபாரத்திற்குக் கௌரவமும் மதிப்பும் ஏற்பட்டு, அவ்விர்த்தியினைப் பலர் கைக்கொண்டு நடத்த முன்வருகின்றனர். தேசோத்தாரணத்திற்குத் தொழிற்கல்வி பெரிதும் அவசியமாகுமென்பதை நமது காருண்ய கவர்ன்மெண்டார் உணர்ந்து ஸர் தாமஸ் ஹாலேண்ட் என்னும் பெயர்கொண்ட கனவானை, தேசத்தில் எந்தவிதமாகக் கைத்தொழிற் கல்வியைப் பரப்பலாமென்று விசாரித்தறியும்படி இந்தியக் கைத்தொழில் விசாரணைச் சங்கம் (Indian Industrial Commission) ஒன்றை யேற்படுத்தினார்கள். இதல்லாமல் அனேக நிபுணர்கள் தத்தம் புத்தி விசாலத்திற் கெட்டினமட்டில் தேசத்தொழில்கள் எம்மாதிரியாக விருத்தியாக்கப்படக் கூடுமென்று கவனஞ் செலுத்தியும் வந்தார்கள். அதன் பலனாக நம்மிந்தியாவைச் சேர்ந்த சிற்சில விடங்களில் தொழிற்சாலைகளும் ஒன்றன்பின் ஒன்றாக ஸ்தாபனமாய்க் கொண்டும் வருகின்றன. இப்போது ஐரோப்பாவில் நடைபெறும் ஐரோப்பிய யுத்தத்தினால் தெரியவருகின்ற சமாசாரங்களைக் கவனித்துப்பாருங்கள். சரீர சிரமமெடுத்துச் செய்யவேண்டிய காரியங்கள் பல விருக்கின்றன. தொழிற் கல்வியிலும் தொழிற் பயிற்சியிலும் விசேஷ ஞானமிருக்கவேண்டுமென்று அந்த யுத்தம் நமது கண்களைத் திறந்திருக்கிறது. யுத்தத்தில் உபயோகப்படுவதற்காக லக்ஷக்கணக்கான சாமான்கள் இப்போது வேண்டியிருக்கின்றன வல்லவா? தொழிற்சாலைகளிருந்தால் அச்சாமான்களைத் திவ்யமாகச் செய்யலாமே. அப்போதுகூட இன்னுமோர் விஷயத்தையும் குறித்துச் செம்மையாக ஆலோசிக்கவேண்டியிருக்கிறது. பெரிய பெரிய தொழிற்சாலைகள் மாத்திரம் இருந்தாற் போதுமா? அவைகளில் வேலை செய்யத்தகுந்த வித்தியார்த்திகள் வேண்டாமா? அவ்வித்தியார்த்திகளுக்கு தொழில்களைச் செய்ய வல்ல பயிற்சியும் வேண்டாமா? ஆகவே தொழிலில் ஆர்வங்கொண்ட வித்தியார்த்திகளும், அவ்வார்வத்தைக் கைசோரவிடாது பின்னும் பின்னும் அப்பியசிக்கக் கூடிய அபிமானிகளுந் தேவையென்பது நம் நண்பர்களுக்கு நாம் சொல்லாமலே விளங்கும். ஜர்மனி, ஆஸ்திரியா முதலிய தேசங்களிலிருந்து இந்நாட்டிற்கு வந்துகொண்டிருந்த எத்தனையோ சரக்குகள் இப்போது நின்று போய்விட்டன. இத்தியாதி சந்தர்ப்பத்தில் அமெரிகாவிலிருந்தும் ஜபானிலிருந்தும் எவ்வளவோ பண்டங்கள் வரத்தலைப்படலாயின. அந்நாடுகளில் தொழிற்சாலைகள் மிகுந்து கிடப்பதனாலன்றோ வியாபாரத்தில் அவை போட்டிபோட முன்வருகின்றன? சாலைகள் மிகுந்திருப்பதோடுகூட அவைகளில் வேலை செய்வோர் தொழிலில் ஆசக்தி கொண்டவர்களாகவு மிருக்கிறார்கள். இந்தியக் கைத்தொழில் கமிஷன் பிரெஸிடெண்டான ஸர் தாமஸ் ஹாலேண்ட் அவர்கள் இந்தியாவின் தொழிலபிவிருத்தியைக் குறித்து அபிப்பிராயப்படுகையில் "சட்டம், தத்துவம், இலக்கியம் ஆகிய இவ்விஷயங்களில் ஞானம் பெறுவதற்காக முயற்சிப்பதைக் காட்டிலும் மாணவர்களாயினார் தொழிற்கல்விக் குரித்தான விஷயங்களைக் கற்பதில் ஊக்கங்காட்ட வேண்டுமென்றும், கடன் வாங்கிக் கைத்தொழில் ஸ்தாபனங்களை யேற்படுவதைக் காட்டிலும் பணம் பெருத்த தனிகர்சள் தம் செல்வத்தின் ஒருபகுதியை மேற்படி ஸ்தாபனங்களுக்குத் தேவையாயிருக்கும் மூலதனமாகப் (Capital) போட்டுத் தமகுத் தொழிலபிவிர்த்தியிலுள்ள ஆர்வத்தைக் காட்டவேண்டு" மென்றும் தீர்க்கமா யெழுதியிருப்பதை இங்கு சொல்லாதிருக்க முடியவில்லை.

---

# PART IV.

## HINDU LAW.

## ஹிந்துலா.

(60-ம் பக்கத் தொடர்ச்சி.)

கேழ்வி:—ஹிந்துக்களுக்கு ஹிந்து லாவும், தர்ம சாஸ்திரங்களும் பிரதானமென்றும், கோர்ட்டில் ஹிந்துலாக்கேசுகளில் அவைகளையே ஆதாரங்களாக மதிப்பதாகச்சொன்னீர்களே. ஹிந்து லாவிலும் தர்ம சாஸ்திரங்களிலும சொல்லப்பட்ட விஷயங்களுக்கு எதிரிடையாக ஒரு சட்டமும் நடவடிக்கையும் நடக்கிறதே இல்லையா?

ஜவாப்:—சுருதி ஸ்மிருதி முதலிய புராதன கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கும் நியாயங்களையும், விதிகளையும் அநேகமாக ஒப்புக்கொண்டு அவைகளின்படிக்கே நடவடிக்கைகள் நடத்திவருகிறார்கள். ஆகிலும் சில விஷயங்களில் கால தேசவர்த்தமானங்களுக்கிணங்க அவைகளில் சில மாறுபாடுகளையும் புதிய விதிகளையும் சில ஆக்ட்டுகள் ஸ்வரூபமாக ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

கேழ்வி:—அப்பேர்ப்பட்ட சில மாறுபாடுகளும், புதியவிதிகளும் அடங்கிய ஆக்ட்டுகளைத் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

ஜவாப்:—I. ஹிந்து மதத்தைச்சேர்ந்த ஒருவன், ஜாதி பிரஷ்டனாகவாவது, மதப் பிரஷ்டனாகவாவது போய்விட்டால் அவன் தன் குடும்ப சொத்திலிருக்கும் எல்லாவித பாத்தியதைகளையும் இழந்து விடுகிறான் என்பது தர்ம சாஸ்திரங்களின் கொள்கை.

ஆயினும், ஹிந்து மதத்திலிருக்கும் ஒருவன் தன் மதத்தை விட்டு, மகம்மதிய அல்லது கிரிஸ்தவ, அல்லது வேறு எவ்வித மதத்தில் சேர்ந்து கொண்டதினிடமாய் ஜாதிப் பிரஷ்டனாகவும் மதப் பிரஷ்டனாகவும் போய் விடுவானேயாகில், அவன் தன் குடும்ப சொத்துக்களிலுள்ள பாத்தியதையை இழந்து விடாமலிருக்கும்பொருட்டு, கவர்ன்மெண்டார் அவர்கள் இந்தியா கவர்ன்மெண்டு 1850-ம் வருஷத்து 21-வது ஆக்ட்டு (Act XXI of 1850, Indian Succession Act) பிறப்புவித்திருக்கிறார்கள்.

II. சுருதி, ஸ்மிருதிகளின்படி பிராம்மண ஜாதியாருக்குள் மாங்கல்யத்தை இழந்து விட்ட பெண்டுகளுக்கு மறுபடி விவாஹம் செய்யக்கூடாது என்பது ஏற்பாடு.

என்றாலும் ஹிந்து விதவைகளில் யாரும் தனக்கு இஷ்டமுண்டானால் மறுபடி கலியாணம் செய்துகொள்ளலாமென்ற விபரமாக 1826-ம் வருஷத்திய 15-வது ஆக்ட்டு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

III. ஹிந்துக்களில் ஆண் பிள்ளைகள் 16 வயதுக்குள்பட்டிருந்தால் மைனர்களென்றும் 16 வயது ஆகிவிட்டால் மேஜர்களென்றும் ஹிந்து தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படிக்கிருந்தும், இதற்கு நேர் எதிரிடையாக அடியில் கண்டபடி ரூல்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆண் பிள்ளைகளுக்கு, சாதாரணமாய் 18 வயது முடிந்த பிறகுதான் மெஜாரிட்டி வருவதாயும், அதிலும் ஒருவன் நியாயஸ்தலத்தாரால் நியமிக்கப்பட்ட கார்டியனுடைய சம்ரக்ஷணையிலாவது கோர்ட் ஆப் வார்ட்ஸ் (Court of Wards) க்காரருடைய மேற் பார்வையிலாவது யிருந்தால் அப்பேர்ப்பட்டவனுக்கு 21-வயது ஆன பிறகுதான் மைனாரிட்டி நீங்குவதாகவும் 1875-ம் வருஷத்திய 9-வது ஆக்டாகிய இந்தியன் மெஜாரிட்டி ஆக்ட்டி (Indian Majority Act) னால் விதிக்கப்பட்டிருக்கிறது.

IV. ஹிந்து வாயுள்ள ஒருவன் வாங்கிய கடன்களைத்தீர்க்க வேண்டியதன் கடமையைப்பற்றி, ஹிந்து தர்ம சாஸ்திரங்களில் இதன் கீழே எழுதப்பட்டிருக்கிறபடி விதிக்கப்பட்டிருக்கிறது. "யாராயிருந்த போதிலும் தான் பட்ட கடன் பூராவையும் பாக்கியின்றித் தீர்க்க வேண்டியது அவனுடைய கடமை. தான் வாங்கிய கடனை மோசம் செய்வதற்கு மேல்பட்ட பாவம் ஏதும் இல்லை. அப்படி வாங்கின கடனைக்கொடுக்காமல் மோசம் செய்து விட்டு இறந்து போகிறவன் கடன் அப்படியே தீர்ந்து போகிறதில்லை. அப்படி மோசம் செய்து விட்டு இறந்து போகிறவன் மறுஜன்மத்தில் கடன் கொடுத்து மோசம் போனவனுடைய குடும்பத்தில் மனுஷரூபமாகவோ, நாற்கால் ஜந்து ரூபமாகவோ (அதாவது ஆடு மாடு குதிரை கழுதை வகையறா) பிறந்து உழைத்துக் கடன் தொகையைச் செலுத்துகிறான். ருண பாதையிலிருந்து எவராலும் எந்தவகையிலும் தப்பித்துக்கொள்வது அஸாத்தியம். அல்லாமலும் தான் பட்ட கடனைச்செலுத்தாமல் இறந்து போகிறவன் எவ்வகைப்பட்ட பெரிய புண்ணியம் செய்திருந்தாலும், ஷை புண்ணியங்களாலுண்டாகக்கூடிய பலன்கள் எல்லாம் கடன் கொடுத்து ஏமாந்து போனவனையே சேருகிறது. ஆகவே ஒவ்வொருவருக்கும், வாங்கின கடனைத்தீர்த்து விட்டு மறு ஜோலி பார்க்கவேண்டியதே முதல் கடமையாக யேற்பட்டிருக்கிறது."

இதல்லாமல் தான் வாங்கின கடனைத்தீர்த்து விடுவதோடு ஒருவனுடைய கடமை முடிந்து போகிறதில்லை. தன தகப்பன் பாட்டன் முதலிய முன்னோர் பட்ட கடன்களைத்தீர்ப்பதும், ஹிந்து தர்ம சாஸ்திரங்களின்படி ஒருவனுடைய கடமையாக யேற்பட்டிருக்கிறது. ஒருவனுடைய ஆண் குழந்தையை அவனுடைய புத்திரனென்று சொல்லுகிறார்கள், ஏனென்றால் ஒருவன் இறந்ததன் மேல் அவனுக்கு ஆண் ஸந்ததியிருந்து உத்தரக்கிரியைகளைச் செய்யாவிடில் அவன் 'புத்' என்னும் நரகத்துக்கு போய்விடுகிறபடியால் ஒருவனுடைய ஆண் ஸந்ததிக்கு 'புத்ரன்' என்னும் பெயர் வந்திருக்கிறது. ஆகையால் தன் முன்னோர்கள் அதாவது தகப்பன் பாட்டன் முதலியவர்கள் நரகத்துக்குப் போய் விடாமல் காப்பது புத்திரர், பௌத்திரர்களுடைய கடமையாக நமது ஹிந்து தர்ம சாஸ்திரங்களால் யேற்படுகிறது.

(இன்னும் வரும்.)

# PART V.

## CO-OPERATION IN AGRICULTURE.

BY THE HON'BLE DIWAN BAHADUR L. D. SWAMIKANNU PILLAI, M.A., B.L., LL.B.,
*Registrar of Co-operative Societies.*

## விவசாயத்திற் கூட்டுறவு.

(62-ம் பக்கத் தொடர்ச்சி.)

விவசாயிக்கு நேராகப் பணம் கொடுக்க வாங்கத் தெரிந்திருந்தால் இப்பேர்ப்பட்ட நஷ்டம் ஏற்படக் காரணமில்லை. தெரியாத்தோஷத்தினாலாவது பணம் வாங்குவது சிரமமாயிற்றே யென்ற மந்தமதியினாலாவது கிருஷிகன் தரகரின் உதவியை நாடுகிறான்போலும்! அவ்வுதவிக்குத் தகுந்த ஊதியம் என்னவோ தரகனுக்குக் கிடைத்துவிடுகிறது. கிருஷிகனின் பாடுதான் கஷ்டம்! ஆனதுபற்றி தரகுவேலை செய்பவனை இங்கு நாடவிடலாகாது. இதற்காக வேண்டி விவசாய இலாகாதார் (Agricultural Department) தகுந்த ஏற்பாடுகள் செய்திருப்பது மனதுக்கு மிகுந்த திருப்தியைத் தருவதாகிறது. திருநெல்வேலி ஜில்லாவிலும், வேறு சில ஜில்லாக்களிலும் சிற்சில ஸொஸைடிகளைத் தகுந்த காபந்திலிருந்து வேலை செய்யும்படி அமர்த்தியிருக்கிறார்கள். அந்த ஸொஸைடிகள் கருங்கண்ணி என்னும் ஒரு வகையான சுத்தமுள்ள பருத்தி ஜாதிவிதையை வாங்கிச்சேகரித்து வைக்கவேண்டும். அவ்விதையைத் தரகனின் லாபத்திற்கிடங்கொடாமல் நேராகவே ஏற்றுமதி செய்யும் வியாபார ஸ்தானங்களுக்கு அந்த ஸொஸைடிகள் விற்றுவிடும். அடுத்த சாகுபடிக்கு உதவக்கூடிய வேறுவித விதைகளையும் சமயம் வாய்க்கும்போது அதே ஸொஸைடிகள் நல்ல விலை கொடுத்து வாங்கி பத்திரப்படுத்தும். அப்படிக்கிருந்தும் அந்த ஸொஸைடிகளின் மெம்பர்கள் தரகர்களின் சூழ்ச்சியால் பணத்தட்டிற்கிடமில்லாது நின்றிருப்பதையொப்ப, கிட்டும் சந்தர்ப்பங்களில் தாராளமாகவும் சடுதியாகவும் பணம் பெயர்க்கும்படியான நிலைமையில் அந்த ஸொஸைடிகள் இருப்பதாகத் தெரியவில்லை. வளரும் பயிர் விஷயத்திற்காக அட்வான்சு கொடுக்கவேண்டித் தாராளமாக ஒரு ஸொஸைடியின் நாணயத்தை உபயோகப்படுத்த முடியாமலிருக்கிறதேயென்று விவசாய டிபார்ட்மெண்டார் விசனித்த சமயமுமுண்டு.

தற்போதைய நூதனமுறைகளைக் கைக்கொண்டும் யந்திர வசதிகளை முன்னிட்டும் விவசாயத்தை நடத்துவதனால் அதிக பலன் கிடைக்குமென்பதை யாம் சொல்லுவது அனாவசியம். இதற்காகக் கவர்ன்மெண்ட் விவசாய இலாகாதாரும் ஸர்க்கார் கைத்தொழில் இலாகாதாரும் ரயத்துகளுக்கு அவ்வப்போது தகுந்த ஆலோசனைகள் சொல்லவும், ஆங்காங்குள்ள கவர்ன்

மெண்டு விவசாயப் பண்ணைகளில் போதிய சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போது யந்திரங்களைக் கொண்டு நிதர்சித்துக்காட்டவும் அவர்கள் தயாராயிருக்கிறார்கள். இதுவுமல்லாமல் சிற்சிலவிடங்களில் மாதிரி யந்திரங்களை ஸ்தாபகஞ் செய்துமிருக்கிறார்கள். பொருட்காட்சிகள் வைத்து நடத்தப்படுகையில் ரயத்துகளுக்குத் தெரியும்படியாக கால விரயம், தேகசிரமம், பணச் செலவு ஆகிய இவைகளைப் பாராட்டாமல் யந்திரவிசைகளை நன்றாய் நிதர்சித்துக் காட்டியுமிருக்கிறார்கள். அதேவகையான மாதிரி நிதர்சன சாலைகளை (Demonstrative Installations) க்கட்டுவிக்க சொஸைட்டிகள் ஏற்பாடாகும் பக்ஷத்தில், அவைகளுக்குப் பணங்கொடுத்துதவ இலாகாதார் பின் வாங்கமாட்டார்கள். ஆனால் அப்பேர்க்கொத்த சொஸைட்டிகளில் சேர மனுதாரர்கள் வேண்டுமே, அவர்கள் தான் முந்துவது அரிதாயிருக்கிறது. தகுந்த தனமும் மரியாதையுமுள்ள ரயத்துகள் வசிக்கும் ஒரு கிராமத்தில் கரும்பாலை வைக்கவோ, அல்லது எண்ணெயிறக்கும் யந்திரம் நாட்டவோ, அல்லது தண்ணீர் இறைக்கும் ஏற்றச்சாலை ஏற்படுத்தவோ வேண்டி ரூபா பதினாயிரமாவது இருபதினாயிரமாவது மூலதனம் சேகரிப்பது சிரமமாகமாட்டாது. கூட்டுறவுச் சங்கங்களின் மெம்பர்கள் மேற்சொன்ன வகைகளினால் தங்களுக்கு லாபமுண்டென்பதை அறியமாட்டார்களா, என்ன? நன்றாயறிவார்கள். அவர் தம்கையில் பணமில்லாதுபோனாலும், அவர்கள் வாய்திறந்து கேட்டால் பணம் கிடைக்காதா என்ன? நன்றாய்க் கிடைக்கும். ஏதோ இங்குமங்குமாகப் பிரைவேட்டாய்ச் சிலர் இரண்டொரு ஆலைகளை வைத்திருக்கிறார்கள். சிலர் ஜாயிண்ட் ஸ்டாக்கம்பெனியாக நெல்லுக் குத்தும் யந்திரசாலைகளிற் கவனஞ் செலுத்தியுமிருக்கிறார்கள். இருந்தாலுமென்ன? இத்தியாதி பெரியவேலைகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பட்டு நடத்திவருகின்றனவென்று சொல்லமுடியாமலிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களினால் உற்பவிக்கும் பிரயோசனம் இத்தன்மையதென்பதை ஒருவாறாய்ச்சொல்லி வந்தோம். இனி கூட்டுறவுச் சங்கங்களுக்கும், விவசாய சங்கங்களுக்கும் உள்ள பாந்தவ்யத்தையும், அது காரணமாக விவசாயத்திற்கும் கைத்தொழிலுக்குமுள்ள சேர்க்கானுகூலங்களையும்பற்றிப் பேசுவோம்.

விவசாயத்திற்காயினும், கைத்தொழில்களுக்காயினும் கூட்டுறவின்றிப்பிரயோசனமில்லை. கூட்டுறவு என்னும் அம்சம் அவ்விரண்டு தொழில்களுக்கு அத்தியாவசியமானது. ஒன்றில்லாது மற்றொன்றிருப்பது மகா கடினம். ஆதலால் விவசாயத்தை யொட்டினாற்போல் கைத்தொழிலும் சேர்ந்தே எப்போதுமிருக்கும். அனேக இடங்களில் சாதாரணமாய் நாம் பார்த்தறிந்துக்கொண்ட விஷயங்களை ஒருவாறாகத் தொகுத்துக்கவனிப்போமானால், விவசாயத்துடன் கைத்தொழில் சம்பந்தப்பட்டிருப்பது நன்றாக விளங்கும். உதாரணமாக பால்விற்பது, வெண்ணெய்காய்ச்சி நெய்யெடுப்பது, தயிர்மோர் விற்பது—இத்தியாதி தொழில்களை எடுத்துக்கொள்வோம். இத்தொழில் விருத்திக்கு வருவதுபோல் இதில் இறங்கியிருப்போர் போட்டி போட்டுக்கொண்டு பலவகைச் சரக்குகளைக் கலப்படஞ் செய்து அத்தொழில்களுக்குக் கௌரவமில்லாமற் செய்துவிட்டார்கள். எல்லோரிடமும் 'அப்படபாக' நெய்யாவது, பாலாவது வாங்கமுடியாமலிருக்கிறது.

(தொடரும்.)

# PART VI.

## EDUCATION.

BY THE HEADMASTER OF A HIGH SCHOOL.

AUG 1917 MADRAS

## கல்வி.

(63-ம் பக்கத் தொடர்ச்சி.)

இந்த விதமாக நடக்க நடக்க புதிதாய் ஜனிக்கிற குழந்தைகளுக்கு தேக வலிவுகுன்றி புத்திநுட்பம் மழுங்கிப்போகிறது. இதைப்பற்றி அதிகம் சொல்லவேண்டுவதில்லை. எல்லாருமறிந்த விஷயம். ஒரு பெருந்தீங்கை விலக்க தற்காலத்தில் அனேகர் பால்ய விவாகத்தைத் தடுக்க இயன்றவளவு முயற்சை செய்கின்றார்கள். ஹரித்துவாரமென்னும் க்ஷேத்திரத்தில் ஒரு பாடசாலை ஏற்படுத்தி அதில் பிரம்மசாரிகளுக்குமாத்திரம் வித்தை கற்பிக்கிறார்கள். இப்பால்ய விவாகம் பெருந்தீங்கு; வித்தைக்கு ஒரு பெரியதடை.

இனிமேல் வித்தைகற்க சமயம் எது என்பதைப்பற்றிப் பார்ப்போம்.

'இளமையிற்கல்' என்று ஆன்றோர் வாக்கியம் பள்ளிக்கூடம் போகும் சகல பிள்ளைகளுக்கும் தெரிந்ததே ஐந்தில் வராதது ஐம்பதில்வருமா? வராது. இளமைப் பிராயத்தில் புதிதாய் விஷயங்களைக் கிரகிக்க அவா விருப்பதுஸகஜம். குழந்தைகள் சும்மாயிருக்க யாராவதுபார்த்திருக்கிறோமா? அவர்கள் செய்கிற ஒவ்வொருவேலையும் சில சமயங்களில் நஷ்டத்தையும் கஷ்டத்தையுமுண்டுபண்ணுகின்றது.

ஆகையால் குழந்தைகள் இளமைப்பருவத்தில் அப்பியசித்துக்கொள்ளும் விஷயங்களினால் பின் அவைகள் சுகபோக பாக்கியாதிகளை அடையக்கூடியதாக இருக்கும்படி நாம் தக்க முயற்சையை எடுத்துக்கொள்ளவேண்டும். "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்ற வசனம் நம்மவருள் பொதுவாக எத்தேசத்திலும் புழங்கிவரும் பழமொழியாக இருக்கிறது. அப்பழமொழியின் கருத்து என்னவெனில், தொட்டிலில் வசித்துவரும் காலமாகிய சிசுவாக இருக்கும் பருவத்தில் குழந்தைகள் துயர்ந்து அப்பியசித்து அனுஷ்டானத்தில் கொண்டுவரும் விஷயங்கள் அவர்கள் முதுமைப்பருவமடைந்து தன்'வாழ்நாளை துறக்கும் காலம் வரை விடாமல் அப்பியாசத்தில் வந்துவிடுகின்றன வென்பதேயாம். ("Youth and white paper take all impressions") அதாவது குழந்தைகளுடைய இருதயமும் வெள்ளைக்கடுதாசும் ஒன்றுபோல இருக்கின்றன. வெள்ளைக்கடுதாசில் சிகப்பு, கருப்பு, பச்சை, நீலம், ஊதா முதலிய எந்த வர்ணமுள்ள (இங்கி) மையினால் எழுதினாலும் முறையே அவ்வவ்விதமான வர்ணமுள்ள எழுத்துக்கள் அந்த வெள்ளைக்கடுதாசில் உண்டாகின்றது. அதுபோல வெள்ளைக்கடுதாசுபோன்ற குழந்தைகளின் இருதயத்தில் எவ்வெவ்விதமான போதனைகள் போதிக்கிறோமோ அவ்வவ்விதமான போதனையே அவர்களுடைய மனதில் நன்றாய் பதிந்துவிடுகின்றது.. இது காரணம்பற்றியே இளமைப் பருவத்தில் குழந்தைகளுக்கு நல்லவிதமான படிப்பினைகளைப் போதிக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது.

(இன்னும்வரும்)

# PART VII.

## NEWS AND NOTES.

## ஸமாசாரக் குறிப்புகள்.

### WINGED CYCLES.

### இறக்கைகொண்ட பைஸிகல் வண்டிகள்.

நவீனத் தோற்றமுள்ள இக்காலத்தில் புதுமையாய் நேராத ஸம்பவந்தானென்ன! ரெயில்வண்டி, மோடார் வண்டி, மோடார் ஸைகல், நீராவி மரக்கலம், ஆகாய விமானம் என்னும் ஏரோப்ளேன், ஜலக்கீழ்க் கப்பல் என்னும் ஸப்மரீன், விட்டதும் குறி நோக்கி நேராகச் செல்லும் டார்பீடோ வென்னுந் தூளை வெடி முதலியனவெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக மிகுந்துவரும் இக்காலத்தில் இன்னுமோர் புதுமையும் முன் வந்திருப்பதாகத் தெரியவருகிறது. மோடார் என்னுந் தன்விசையோடும் யந்திரங்களால் அமைக்கப்பட்டு ஆகாயத்தில் போகும் ரதங்கள் இப்போது அபரிமிதமாக முன்னிடப்பட்டிருக்கின்றன. இவ் விமானங்களில் சரக்குகளையும் ஆட்களையும் ஏற்றிப்போவதும் ஸகஜமாயிருக்கிறது. யந்திர விசையினால் இக்காரியம் நிறைவேறுவது ஓரதிசயமாகாதென்றாலும், போதுமான யந்திரங்களும், அவ்வியந்திரங்களை யியக்கக்கூடிய பெட்ரோல் முதலான ஸாதனங்களும் இல்லாமற்போகும் சந்தர்ப்பம் வாய்ப்பதாக வைத்துக்கொள்வோம். அச்சந்தர்ப்பத்தில் மனுஷ்யன் இக்கட்டில் அகப்பட்டுக்கொண்டுவிட்டால் என் செய்வது? அப்பேர்ப்பட்ட சமயங்களில் உதவுவதற்காக நவீன யந்திரமொன்று இப்போது மேனாடுகளில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதாம். அந்நவீன யந்திரம் சாதாரண பைஸிகல் வண்டியைத்தவிர வேறொன்றுமில்லை. அவ்வண்டியைக் காலால், அதாவது மனுஷ்யனுடைய சரீர பலத்தினாலே, விட்டுக்கொண்டு போவதே. அப்படி விட்டுக்கொண்டு போகையில், பூமியின்மீதாகப் பத்து கஜ தூரத்திற்குத் தரையிற் படாமலே போகவேண்டுமென பிரான்சுதேசத்திற் சமீபத்தில் ஒரு பந்தயம் கிளம்பியது. அம்மாதிரி நடத்த புஜபலமும் கால்பலமுந்தான் அவசியம். மோடார், நீராவி, பெட்ரோல் என்பதெதுவும் இருக்கலாகாது. இங்ஙனம் நடத்திக் காட்டுவோர்க்கு 400 பவுன் வெகுமதி யுண்டென்று விளம்பரிக்கப்பட்டிருந்தது. பிரான்ஸ் தேசத்தின் தலைநகரான பாரிஸ் நகரத்தில் மேற்சொன்ன பந்தயத்தை முன்னிட்டு 198 பேர் முன்வந்தார்களாம். அவர்களில் லாவரேலட் என்பவர் தமது வண்டியின் இருபுறங்களிலும் தத்தநாகத் தகடுகளை விரிந்த இறக்கைகளைப்போற் செய்து கீல் வைத்துப் பிணைத்து அத்தகடுகளுக்கும் தான் கால் வைத்தழுத்தும் சங்கிலிக்கும் பற்றுதலிருக்கும்படி கம்பியினாற் சேர்த்துப் பின்னர்த்தான் உட்காரவேண்டிய ஆசனத்தில் அமர்ந்து பைசிகல் வண்டியைவிடவே, அது 'கிர்' என்ற சப்தத்துடன் பெருங் கழுகு, ராஜாளிபோன்ற பறவைகளின் இறக்கைகளைப்போல் படபடவென்றடித்துக்கொண்டு கிளம்பிவிட்டது. எட்டடி உயரத்தில் அது சிரமமில்லாமற் செல்லுவது ஸாத்தியமாயிற்றாம். இதைக் கேட்கையில் இறக்கைகொண்ட பைஸிகள்களும் கூடிய சீக்கிரத்தில் உலகத்தில் வரலாகாதென்ற ஸந்தேகம் இருப்பானேன்?

### WAR NOTES. யுத்தக் குறிப்புகள்.

### A SOLDIER'S TACTICS.

### பிரஜ்ஞையற்றவன்போற் பசப்பிய போர்வீரன்.

பால்கன் யுத்தகளத்திலே சென்றமாதம் நடந்தேறிய ஒரு சண்டையில் ஸர்விய முற்காவல் படையைச்சேர்ந்த ஒரு போர் வீரன் அகஸ்மாத்தாகத் திரளான பகைவர் ஸைந்யத்துடன் ஊடாட நேர்ந்தது. அவன் இருந்தவிடமோ ஒரு மலையைச் சார்ந்த கற்பாறையின் இடைவெளி. சுமார் கால் மைல் தூரத்திலே பகைவரது சேனா ஸமுத்திரத்தைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியினாற் கவனித்த இந்த ஸர்விய



வீரன் சரேலென்று பின்புறந்திரும்ப, அங்கும் சிலர் சூழ்ந்து வருவதுந் தெரிந்தது. அதன்பேரில்தான் முரட்டுத்தனமாக வேலை செய்வது பயன்படாதென்று அவன் மதித்து தன் கைத்துப்பாக்கியையும் ராணுவஉடையையும் தூரத்தில் எறிந்துவிட்டு, அரைக் கச்சையுடன் கருங்கல்லின்மீது பிரஜ்ஞையற்றுக் கிடப்பவன்போல் படுத்துக்கொண்டான். இதற்குள் பகைவர் நெருங்கிவிட்டார்கள். உறங்குகையில் ஒரு மனுஷ்யனுடைய உச்சுவாஸ நிச்சுவாஸங்கள் எவ்விதமிருக்குமோ அவ்விதமே இந்த ஸர்வியப் போர்வீரனின் சுவாஸமிருந்தது. எவ்வித அபாயத்தையும் எதிர்பாராது உறங்கும் நிலையில் அந்த ஸர்வியன் படுத்துக் கிடந்தானாயினும் வந்த பல்கேரியர் இவனொரு காட்டுமிராண்டியென்று கருதிக் காலாலுதைத்து இப்புறமப்புறம் புரட்டி யெழுப்பினார்கள். மெதுவாகக் கண்விழித்தான் ஸர்வியன்; பகைவர் அவனொரு உளவாளியோவென்று சந்தேகித்து ராணுவ சம்பந்தமான பலவகைக் கேள்விகளைக் கேட்டார்கள். எதற்கும் ஸர்வியன் சரியான பிரதி யுத்தரஞ்சொல்லாமல் சித்த ஸ்வாதீனமில்லாத பைத்தியத்தின் நடத்தையையொப்பப் பல்லிளிப்பதும், பரிஹஸிப்பதும், முன்னும் பின்னுமாகக் கையை நீட்டித் தான் துப்பாக்கி கொண்டு சுடுபவன்போல் அபிநயிப்பதும், பிறகு தானே யிறந்தவன்போல் 'தொபீர்' என்று பாறையில் விழுவதுமாகப் பாசாங்கு செய்யவே, பகைவர், இவன் உண்மையான பைத்தியக்காரன் என்று மதித்து, தமது பாசறைக்கு இவனை யழைத்துச் சென்று தமாஷா செய்துகொண்டிருந்தார்கள்; இவ்விதமாக 3 தினங்கள் கழிந்தன; நான்காம்நாள் நள்ளிரவிலே ராணுவப் பிராதான்யமாயிருக்கும் ஓரிடத்தில் வெடிமருந்து வைத்து வெடிக்கச்செய்யவேண்டுமென்னும் நோக்கத்துடன் பகைவருள் நால்வர் புறப்பட்டுக்கொண்டிருந்தார்கள்; இந்த நான்குபேர்களுக்கும் பகைவர் படைதளகர்த்தர்தாக்கீது கொடுத்ததைக் கேட்டுக்கொண்டிருந்த ஸர்வியப் போலிப் பைத்தியம் தனக்கும் வெடிமருந்து வைக்கத் தெரியுமென்றும, ஜர்மானிய போர்வீரர்கள் பழகுகையில் தான பார்த்திருப்பதாகவும், தானுங் கூடச்சென்று காரியத்தை முடித்து வருவதாகவும் சொன்னான்; அந் நள்ளிரவில் பைத்தியத்திற்கு சித்தஸ்வாதீனம் சரியாக வந்துவிட்டதென்று மதித்த தளகர்த்தர் அவ்விதமே நீயும் வாவென்று சொல்லியழைத்துப்போனார். ஆனால் அப் போலிப் பைத்தியத்தினிடம் துப்பாக்கியாவது வேறு விதமான வெடிமருந்துச் சமானாவது கொடுக்கவேண்டாமென்று தளகர்த்தர் உத்தரவுகொடுத்து விட்டார். ஏனென்றால் ஒருவேளை இப்பைத்தியக்காரன் உளவாளியாக விருப்பானேயாமானால் துன்பம் நேரிடக்கூடுமே யெனக் கருதி அவர் அவனிடம் போராயுதம் ஒன்றுங் கொடுக்கச் சொல்லவில்லை. மேற்சொன்ன நால்வரும் இந்தப்பைத்தியம் ஸகிதம் மூன்று மைல் தூரம் கால்நடையாகச்சென்று நேசப்படையாளரது ஒரு வெடிமருந்துச் சாலைக்குச் சமீபமாய்ப் போய்ச் சேர்ந்தார்கள். இரவு பதினைந்து நாழிகைக்குமேலாகி விட்டது; இவ்வைந்துபேர்களும் அடிமேலடிவைத்து 3 மைல் தூரம் போயிருக்கிறார்கள்; மேலேசொன்ன அவ்வெடிமருந்துச் சாலைக்குக் காவலர்களாக இரண்டு பிரான்சியத் துருப்பாளர்கள் எதிரும் புதருமாகச் சுற்றிவந்து கொண்டிருந்தார்கள். அக்காவலர் காலில் அணிந்திருந்த பூட்ஸ்கள் 'டப், டப், டப், டப' என்று ஒலி யெழுப்பிக் கொண்டிருந்தன. ஒருவன் முன்புறத்திலும் மற்றொருவன் பின புறத்திலும் உலாவிக் காவல் புரிகையில், இருவரும் மருந்துச் சாலையின் பக்கவாட்ட மூலையில் ஐந்து நிமிஷங்களுக் கொருமுறை சந்தித்துக் கொள்ளுவார்கள். இதைக் கவனித்துக் கொண்டிருந்த பகைவர் நால்வருள் தலைவனைத்தவிர மற்ற மூவர்கள் கால் பூட்ஸையும உடையையும் கழற்றித் தரையில் வைத்துவிட்டு வெடிமருந்தும், தரையைப் பறிப்பதற்காக ஒரு சிறிய கைக்கோடாலியையும் தாங்கிப் புரண்டுகொண்டே போனார்கள். பகைவர் தலைவன் பைத்தியம் இருக்கும் ஞாபகத்தைக் கைக்கொண்டு நீயும போவெனவும் சரியென்று தலையாட்டிவிட்டுப் புரண்டவாறே காவலாளர் சந்திக்குமிடத்தை நாடிச்சென்றான்; இருளானதனாலே ஒரு கஜம் இரண்டு கஜங்களுக்கப்புறம் இன்னது நடக்குமென்று தெரிய முடியாமலிருந்தது. போலிப் பைத்தியம் ஸர்விய ஜாதியனானதினாலேயும் வெடிமருந்துச் சாலையின் காவல் நுட்பங்களையும முறைகளையும் செவ்வையாயறிந்தவனானதனாலேயும், புரண்டுபோகிற

வனைப்போல ஐந்தாறு கஜம் போய்ப்பிறகு சரேலென்றெழுந்து மிக்க மதியூகத்துடன் காவலர் அருகிலோடினான்; தான் நண்பனென்றும் நேசப்படையைச் சேர்ந்தவனென்றும், தான் வந்திருக்கும் காரியம் மிகுந்த அவசரமென்றும் சொல்லிக்கொண்டே நிற்க காவலர் அவனிடமிருந்து சகல விவரங்களையும் கேட்டுக்கொண்டு அரை மைல் தூரத்திலிருக்கும் தமது பட்டாளத்திற்குச் செய்தி யனுப்பலாமாவென்று யோசித்தார்கள். அதற்குப் போலி பைத்தியம் அப்படி யொன்றும் வேண்டாம் தனக்கு ஒரு காவலன் உதவிசெய்தால் அந்நான்கு பேர்களையும் உயிருடன் பிடித்துக்கொண்டுபோய் விடலாமென்று சொல்லி ஒரு கயிறுடன் திரும்பவும் ஓடோடித் தலைவனிருக்குமிடம் புரண்டு வருபவன் போல் வந்து தான் ஓரிடத்தில் மருந்து வைத்துவிட்டதாகவும் அதை அவனுக்குக் காண்பிப்பதாகவும் பசப்பித் தலைவனையும் அழைத்துச் சென்றான். சிறிது தூரஞ் சென்றதும் பைத்யம்போல் நடித்த சௌரியவீரன் குபீரென்று கிளம்பித் தலைவனின் கைத்துப்பாக்கியைப் பிடுங்கிக்கொள்ள, அதே நிமிஷத்தில் காவற்காரரில் ஒருவன் அத்தலைவனை ஒரு மரத்திற் சேர்த்துக் கட்டிவிட்டான். பிறகு தலைவனின் உடையைத் தானுடுத்துப் பைத்தியம் மெதுவாக முதலிலிருந்த விடத்திற்குச்சென்று தலைவனைப் போலவே நின்றுகொண்டிருந்தான்; புரண்டுசென்ற மூவர்கள் வெடிமருந்து வைத்துவிட்ட சேதியைத் தெரிவிப்பதற்காக அவர்களில் ஒருவன் திரும்பிவர, அவனையும் தலைவனைப் போலவே ஒரு மரத்திற் கட்டிவிட்டான்; போனவன் திரும்பிவராமையைக்கண்டு பகைவரைச்சேர்ந்த மற்றிருவருள் ஒருவன் மெதுவாகப் புரண்டுவரவும், தன் தலைவன் ஆடை தரித்திருந்த பைத்தியத்தைத் தலைவனென்றே நினைத்து அவன் காட்டிய வழியே தொடர்ந்து சென்றான்; அவனும் மரத்தில் கட்டுப்பட நேர்ந்தது; பாக்கியிருந்தவன் ஒருவன்தான். அவனையும் தந்தரோபாயத்தினால் அழைத்துவந்து கட்டிப்போட்டபிறகு, அரைமைல் தூரத்திற்கப்பாலுள்ள நேசப்படையாளருக்குச் செய்தியனுப்பித் தகுந்த பந்தோபஸ்துடன் விடியற்கால நேரத்திலே படையுடன் பகைவர் இடம் நோக்கிச்சென்று முற்றுகைபோட்டு அந்த ரெஜிமெண்டை அப்படியே கைதிகளாகப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். பைத்தியமென்று பசப்பிப் பார்புகழ் காரியஞ்செய்த போர்வீரன் இப்போது அவ்விராணுவத்தில் பெரியதும் பொறுப்புமிகுந்ததுமான ஒருத்தியோகம் வகித்து நிற்கிறான். பார்த்தீர்களா, போலிப்பைத்தியத்தின் சூழ்ச்சியை!

---

## WASTE MILK TINS.

## விரயமான பால் டப்பிகள்.

'கள்ளனுக்குள்ளே குள்ளன்' என்பதுபோல எவ்வளவோ பணம் செலவுசெய்து கடியாரவேலையையொப்ப ஒவ்வொரு காரியமும் கருத்துடன் கவனிக்கப்பட்டபோதிலும் சிற்சில விடங்களில் ராணுவ வேலைக்காகப் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருக்கும் சாமான்கள் களவுபோய்க்கொண்டிருக்கின்றனவென்று பற்பல செய்திகள் வெளியாய்க்கொண்டிருக்கின்றன. அலெக்ஸாண்டிரியா துறைமுகத்திற்கும் ஸோலம் என்னுந் துறைமுகத்திற்கும் மத்தியில் துருப்பார்களின் உபயோகத்திற்காகவென்று பால்டப்பிகள், பிஸ்கோத்துப் பெட்டிகள், சுருட்டுப்பெட்டிகள், தானியாதிகள் ஊறுகாய்கள் முதலியன சேகரஞ்செய்து கப்பலில் அடக்கம் பண்ணப்பட்டிருந்தன. அவைகளில் 181 பவுன் மதிப்புள்ள பால் டப்பிகள் (Condensed milk) திருட்டுப் போய்விட்டன. ரேவுத்துறையிலிருந்து கப்பலில் ஏற்றும்போதோ, கப்பலிலிருந்து ரேவுத்துறையிலிறக்கும்போதோ, அல்லது கப்பலில் தானோ அவை திருட்டுப்போயிருக்கவேண்டும். கப்பலில் உக்கிராணப் பகுதியைச்சேர்ந்த ஆபீஸரைத்தவிர மற்றவர் அப்பண்டங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடம் போகமுடியாது. அவ்வாபிஸர் திருட்டுத்தனமாகத் தமது சொந்த உபயோகத்தினிமித்தம் பால்பெட்டியை யெடுத்திருந்தாலும் 181 பவுன் பெறுமான ஆயிரக்கணக்கான பெட்டிகளை யுடைத்துப் பாலைக்குடித்திருப்பாரா, என்ன? அப்படியிராது. ஆகவே ரேவுத்துறையில் வேலை செய்வோர்தான் இத்திருட்டிற் கலந்திருக்கவேண்டுமென்று அனுமானிக்கப்படுகிறது.

# PART VIII.

## MORAL STORIES.

## நீதிக் கதைகள்.

### சீலவதி.

(70-ம் பக்கத் தொடர்ச்சி)

பிச்சைக்காரன்:—'கங்கா ஸ்நானம், கங்கா யாத்திரை.'

சீலவதி:—'அப்படி யென்றால் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. உங்களுடைய மனோபிஷ்டத்தைச் செவ்வையாகத் தெரிவியுங்கள், கங்கா ஸ்நானத்தினிமித்தம் கங்கை யாத்திரை போவதாகப் பலர் சொல்லுவதுண்டு. உமக்கு அதனாலாகவேண்டுவ தென்ன? வியக்தமாகச் சொல்லுங்கள்.'

பிச்சைக்காரன்:—நான் சொல்லுவது உனக்கு விளங்கவில்லை. கங்கா நதிக்கு வடகரையிலிருக்கும் ஸ்ரீ காசி யென்கிற வாரானசி க்ஷேத்திரம் போய் அங்கு ஆவிர்ப்பவித்திருக்கும் எனது ஹிருதய கமலவாசியாம் ஸ்ரீ விசுவநாதரைத் தரிசித்து அவரது பாதபத்மங்களில் வணங்கி இப்பூதவுடலைத் தவிர்த்து மெய்யன்பு பூண்டதும் சாந்தம் மிகுந்ததுமான மோக்ஷ சாம்ராஜ்யம் பெறவேண்டு மென்பதே எனது கோரிக்கை. அதற்காகப் பெண்ணே, உன் உதவியை நாடி இவ்விடம் வந்திருக்கிறேன்.

சீலவதி:—'ஆஹா! (ஒருபுறமாக) இப்பெரியவருக்கு என்னால் என்ன செய்யக்கூடும்? இன்றையதினம் என்வசம் ஒரு தம்பிடி கூடக் கிடையாதே. (வறிஞனைப்பார்த்து) பெரியவரே, நானொரு பெரிய அபாக்கியவதி. உங்களுக்கு உதவிபுரியும் மார்க்கமொன்றும் எனக்குத் தோன்றவில்லை; நான் உதவி செய்யக்கூடிய ஸ்திதியிலுமில்லை; அதற்காக மிகவும் வருந்துகிறேன்.'

பிச்சைக்காரன்:—'இல்லை, அப்படிச் சொல்லாதே அம்மணி, நான் உன்னை நம்பமாட்டேன். எனக்கு ஏதாவது கொடுத்து நீ உதவித்தான் தீரவேண்டும், இல்லாத பக்ஷத்தில் நான் எப்படிக் காசிமாநகர் போய்ச் சேர முடியும்? உன்னைப் பாாத்தால் விசேஷபக்தியோடு கூடினவளாகத் தோன்றுகிறதே.'

சீலவதி:—'எனது ஏழ்மைத் தனத்தை நான் தெரிவித்துக் கொள்வதிற் பலனொன்றுமில்லை. ஐயா, எனது பர்த்தா இப்போது வீட்டிலில்லாத சமயம், ஆகையால் சற்றுநேரம் காத்திருங்கள். அவர் கடையிலிருந்து கூடிய சீக்கிரம் வந்துவிடுவார். உங்களுக்காக நான் அவரிடம் பரிந்து பேசி ஏதேனும் வாங்கி உதவுகிறேன். சொற்ப நேரம் தயவுசெய்து தாமதிக்க வேண்டுகிறேன்.'

பிச்சைக்காரன்:—உன் கணவன் வரும்வரையில் நான் ஏன் காத்திருக்க வேண்டும்? வியாபாரத்தை யுத்தேசித்து அவன் வெளியிற் போயிருக்கிறான்;

அது உனக்குத் தெரியும். நீயோ நல்ல புத்திசாலி; உன் அகமுடையான் என்னவோ அறுந்த விரலுக்குச் சுண்ணாம்பு கொடாத கிருபணன். ஒருவேளை அவன் தருமம் செய்வதாகவே வைத்துக்கொண்டாலும் இவ்விஷயத்தில் ஒருதினிலேகூட அவனிடமிருந்து உதவி எதிர்பார்க்க முடியாது. எனக்காக அம்மணீ, நீ அவனிடம் பரிந்துபேசி ஏதேனும் வாங்கிக் கொடுக்க வேண்டாம். உனக்கென்ன பாத்திய மில்லையா? நீ சாந்த குணமும் தரும குணமும் பெற்ற தருணியாயிற்றே. அம்மா. ஓரெளிய பிச்சைக்காரனைக் காக்கவைத்துக் கடைசியில் ஒன்றுமில்லை யென்று கையை விரித்துக் காட்டி யனுப்புவது மகாபாபமாயிற்றே. தயை, தாக்ஷண்யம், கருணை ஆகிய இவ்வுத்தம குணங்களைக் காட்டுவோர்க்கு ஸர்வேசுவரன் சகல சம்பத்தையுங் கொடுப்பாரென்பதை நீ அறியாதவளல்ல. இரப்புமன்றும் ஏழைக்கு ஒன்றுமீயாது துரத்தினால் அவ்வேழை வயிறு எரிந்து வெளியிற் போகையில் அவனுடைய பாப கிருத்தியங்களின் ஒரு பகுதியை, அவ்விபத்தியைச் சார்ந்தோர்க்கு விட்டுவிடப் போகிறான். அதுமட்டுமோ? வீட்டு எஜமானனோ அல்லது எஜமானியோ செய்திருக்கக் கூடிய புண்ணியத்தின் ஒரு பகுதியைத் தான் அடைந்து விடுவதாகவும் பற்பல கிரந்தங்களிற் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவை யனைத்தும் உனக்குத் தெரிந்ததுதானே.

சீலவதி :—ஆமய்யா; நீர் சொல்வது சரிதான; என்றாலும் மனைவியானவள் தன் ஸ்வேச்சையாக (கணவன் அனுமதியில்லாமல்) ஒரு காரியத்தைச் செய்யலாமென்றீர்களே. அப்படிச் செய்வது தகாத காரியமென்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன். கணவனுடைய விருப்பத்தைக் குறிப்பாயறிந்து, அவனுடைய நோக்கத்தின் பிரகாரம் மனைவி கீழ்ப்படிந்து நடப்பதே குலமங்கையாக் குரிய தர்மமாகும். பதிவிரதா தர்மமும் அப்படியே. பாதிவ்ரத்ய லக்ஷணங்களிலும் மறைமேயார் அவ்விதமே தொகுத்திருக்கிறார்கள். ஆனதுபற்றி அம்முறையைப் பின்பற்றி நடப்பது தாமமா யிருப்பதுடன் மனைவி கவனிக்க வேண்டிய கடமைகளிலும் ஒன்றாகுமல்லவா?

பிச்சைக்காரன் ,—பெண்ணே, இந்த சாஸ்திரத்தை எங்கிருந்து கற்றுக்கொண்டாய்? உனக்கு இது கற்பித்தது யாவர்? மனைவி தன்னிஷ்டப் பிரகாரம் நடந்துகொள்ள முடியாது, தன் நன்மைக்குத்தானே யொன்றும் தேடிக்கொள்ள முடியாது, எப்போதும் அவள் பர்த்தாவுக்கு அடிமையாயிருந்தே தீரவேண்டு மென்று சிற்சில கிரந்த கர்த்தர்கள் கூறியிருப்பதை நீ பார்த்துவிட்டு இவ்விதம் பிதற்றுகிறாய் போலும்.

சீலவதி :—ஐயா, உம்முடைய காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் பொருட்டு நீர் அப்படிச் சொல்லுகிறீர். உமது அபிப்பிராயம் விசித்திரமாயிருக்கிறது. மனைவி கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டு மென்பதே எனது கொள்கை. விவாக மாவதற்கு முன் ஒரு பெண் பெற்றோர் ஆதீனத்தி லிருக்கவேண்டும்; விவாகமாகிப் புக்ககத்திற்கு அவள் போய்விட்டால் அவள் கணவனுடைய ஆதரணையில் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்; அந்தியகாலத்தில் அவளை ஆதரிப்பவன் அவளதுபுத்திரன் என்பது உமக்குத் தெரியாதா என்ன?

(இன்னும் வரும்)



| சாலிவாகன சகாப்தம் ௧௮௩௯ கலியப்தம்-௫௰௧௮ | ஜ்யேஷ்டம் ஆஷாடம் | பிங்கள ௵ ஆனி௴ உத்தராயணம் க்ரீஷ்மருது | கொல்லம் ௧௦௯௨ | இங்கிலீஷ்-௧௯௧௭, பஸலி-௧௩௨௬ ௧௯௧௭-ஜூன்௴-ஜூலை௴ | ஹேஜ்ரா-௧௩௩௫. ஷாபான்௴-ரம்ஜான் | | |
|---|---|---|---|---|---|---|---|
| 23 | 14 | க | வியா | தச ௬0-கரு, ரேவ ௩அ-௪க, ஸௌபா க0-உ௫, வணி ௧உ-௩0, தி க0-க, மிதுனரவி ௧௪-உ௫, ஷடசீதிபுண்யகாலம், சூன்யமாக்கம் | | | |
| 24 | 15 | உ | வெ | ஏகா ௩௬-உ௩, அசு-௩௩-௫உ, சோப ௪-உஉ, உபரி ௫௪-௪௪, பவ அ-௫௧, தி உஎ-௩, ஸர்வைகாதசி, தூர்க்காஸ்வாபஹு,சூன்யதிதி அ,சி | | | |
| 25 | 16 | ௩ | சனி | துவா ௩௩-௪௭, பர ௩௩-௫, ஸாத ௫௪-௪அ, கௌ ௫-௪௩, தி 0-௩௩, மிதுனகிருஷ்ண துவாதசி திதி, சி, அ, | | | |
| 26 | 17 | ௪ | ஞா | திர ௩உ-கக, கார் ௩௩-உ௪, திரு ௫க-உ௩, கர உ-௫க, தி ௩-க௪, பிரதோஷம், கிருத்திகோபவாஸம், சிவராத்ரிவிரதம், சி,அ, | | | |
| 27 | 18 | ரு | திங் | சதுர் ௩௧-௫க, ＊ரோ ௩எ-௩அ, சூல ௪அ-௫க, பத் உ-க, தி ௩எ-௧௩, ரா உ0-௪௩, அஹ ௩௧-௩௩, அ, | | | |
| 28 | 19 | ௬ | செ | ● அமா-௩உ-௪அ, மிரு ௪0-௪௬, கண் ௪எ-௩எ, சது உ-உ0, தி 0-0, கர்ச்சசிரா, சி, ம | | | |
| 29 | 20 | எ | புத | ஆஷாடசுக்லபிர ௩௪-௫க, திரு ௪௪-௪௩, விரு ௪எ-௩, கிம ௩-உ௩, தி ௩-௩ இஷ்டி, சி, | | | |
| 30 | 21 | அ | வியா | துவி ௩அ-க0, புன ௪௩-௪௩, திரு ௪எ-௩0, பா ௩-அ, தி கஎ-க௩, சந்திரதர்சனம், அ, | | | |
| 1 | 22 | கூ | வெ | திரு ௪உ-௩௪, பூச ௫௫-௩௩, வியா ௪அ-கக, தை க0-உஉ, தி கக-௪௩, அஹ ௩க-௪0, ம, [விருதம், ம, | | | |
| 2 | 23 | க0 | சனி | சது ௪எ-க௪, ஆயி ௩0-0, ஹர் ௪௩-௪௪, வணி க௪-௫௪, தி ௩0-௫௪, கடகாயனம் ௩உ-௩, சதுர்த்திவிரதம், அமிருதலக்ஷ்மீ | | | |
| 3 | 24 | கக | ஞா | பஞ் ௫உ-௩, ஆயி க-௫௧, வஜ் ௫௧-உ0, பவ கக-௪க, ரா ௩-௩௩, கந்தர்போபரிவிரதம், ம, சி, | | | |
| 4 | 25 | கஉ | திங் | ஷஷ்டி ௫௩-௫எ, மக அ-உ௪, வித்தி ௫உ-௫க, கௌ உ௪-௩௩, தி ௩0-உ௫, ஷஷ்டிவுபவாஸம், குமாரஷஷ்டி, ம, சி, | | | |
| 5 | 26 | க௩ | செ | ஸப் ௩0-0, பூர ௪௪-உ௩, விப ௫௩-௪௩, கர உ௩-0, ரா உ-௩0, அஹ ௩௧-௪0, விபதீபாதசிரா, திருநினஸ்பிருக், சி, அ, | | | |
| 6 | 27 | க௪ | புத | ஸப் க-௩, உத் க௩-௫௩, வரி ௫௪-௧உ, வணி க-௩, ரா க0-௫௩, அலப்பம், ஆனித்திருமஞ்சனம், அ, ம, | | | |
| 7 | 28 | கரு | வியா | அஷ்ட ௪-கக, ஹஸ் உ௪-உ௩, பரி ௫௩-௪உ, பவ ௪-கக- ரா க௪-௩, சி, | | | |
| 8 | 29 | க௬ | வெ | நவ ௬-உ௩, சித்தி உஎ-௫௫. சுப ௫உ-கக, கௌ ௬-உ௩, ரா க0 ௫உ, சாக்ஷுஷமன்வாதி, சி, | | | |
| 9 | 30 | கஎ | சனி | தச எ-உஉ, சுவா ௩0-௩, வித்தி ௪௩-௫0, கர எ-உஉ, ரா கஉ-௪௩, அஹ ௩௧-௩அ, அ, சி, | | | |
| 10 | 1 | கஅ | ஞா | ஏகா எ-உ, விசா ௩௧-அ, ஸா ௪௩-உஉ, பத் எ-உ, ரா ௩-௩உ, ஸர்வைகாதசி, சயனவிரத ஏகாதசி, கோபத்மவிரதம், ம, | | | |
| 11 | 2 | ககூ | திங் | துவா ௫-உஅ, அனு ௩0-௫௫, சுப ௪௧-௫அ, பா ௫-உஅ, ரா க௩-௪, பிரதோஷம், க்ஷீராப்திவிரதம், சி, | | | |
| 12 | 3 | உ0 | செ | திர உ-௪எ, உபரி ௫௩ ௧௫, கேட் உ௩-௩அ, சுப ௩௩-௪உ, தை உ-௪எ, கர உஅ-எ, ரா கஎ-உக, அவமா, பவித்ரசதுர்தசி, சி, அ, | | | |
| 13 | 4 | உக | புத | ○ பௌ ௫௪-உ௩, மூல உஎ-உ௫, ப்ராம ௩0-௪உ, பத் உ௩-௪௪. தி உ௩-உ௫, ரா கஅ-௪க, அஹ ௩௧-௩௩, அக்னிஸாவர்ணிமன்வாதி | | | |
| 14 | 5 | உஉ | வியா | ஆஷாடகிருஷ்ண பிர ௪௩-கக, பூரா உ௪-உ௩, மா உ௪-எ, பா உஉ-௪௪, ரா கக-௪௫, இஷ்டி, சி [வியாசபௌர்ணி, சாதுர்மாஸ்யாரம் | | | |
| 15 | 6 | உ௩ | வெ | துவி ௪௩-உ௩, உரா உ0-௫எ, வை கஎ-௪, தை க௩-கஅ, தி ௩0-கஎ, வைத்ருதீசிரார், சிரவணோபவாஸம், சி, சி, | | | |
| 16 | 7 | உ௪ | சனி | திரு ௩எ-உ௩, திரு-கஎ-க, விஷ் க-௪0, வணி க0-உ௫, தி உ௩-கக, சி, | | | |
| 17 | 8 | உரு | ஞா | சது ௩௫-கஅ, அவி கஉ-௫௫, ப்ரீ உ-௫, உபரி ௫உ-உஎ, பவ ௪-உ0, தி உ௩-௪௩, அஹ ௩௧-௩௪, ம, சி, | | | |
| 18 | 9 | உ௬ | திங் | பஞ் உ௫-உ0, சத அ-௫௪, ஸௌபா ௪எ-௩, தை உ௫-உ0, தி உ௩-௫0, சி, ம, | | | |
| 19 | 10 | உஎ | செ | ஷஷ கக-௩௩, பூட் ௫-௫, சோப ௪0-க, வணி கக-௩௩, தி உஎ-௪க, திதித்வயம், ம, அ, | | | |
| 20 | 11 | உஅ | புத | ஸ க௪-க௫, உட் க-௩எ, உபரி, ௫எ-௩, அதி ௩௩-கக, பவ க௪-க௫, தி ௩0-கக, சி, ம, | | | |
| 21 | 12 | உகூ | வியா | அஷ்ட க-௩அ, அசு ௫௩-௪௩, ஸாத உஎ-கக, கௌ க-௩அ, ரா க௫-௩எ, அஹ ௩௧-௩க, அ, சி, | | | |
| 22 | 13 | ௩0 | வெ | நவ ௫-௪௧, பர ௫௫-௪௫, திரு உ௧-௫௪, கர ௫-௪௩, தி உ0-உஉ, மிதுனகிருஷ்ணநவமிதிதி, சி, [ஸர்வைகாதசி | | | |
| 23 | 14 | ௩க | சனி | தச ௩-௩, ＊கார் ௫௫-௪௩, சூல கஎ-உக, பத் ௩-௩, தி உ௫-௪௩, கிருத்திகோபவாஸம், மிதுனகிருஷ்ண [திதி, | | | |
| 24 | 15 | ௩உ | ஞா | ஏகா க-கக, ரோ ௫எ-0, கண் க௩-௪உ, பா க-கக, ரா ௫-எ, கடகரவி ௫க-௩, தக்ஷிணாயனபுண்யகாலம், ஸர்வைகாதசி, | | | |

161403

## இராகு காலம்.

| காலம். | ஞாயிறு. | திங்கள். | செவ். | புதன். | வியா. | வெள். | சனி. |
|---|---|---|---|---|---|---|---|
| இராகு காலம் | உகவ | ௬௭ | உஉ௯ | கரு | க௮ரு | ககவ | எ௯ |
| குளிகை காலம் | உ௬ | உஉ | க௮ | க௯ | க0 | ௬ | உ |
| இராக்குளிகை காலம் | க0 | ௬ | உ | உ௬ | உஉ | க௮ | க௯ |

## சுபமுகூர்த்தங்கள்.

அவ வியாழன், உதிச்சு நாழிகை ௯க-அக்குமேல் ௬-௬௮-க்குள் கடக லக்கினத்தில் சுபமுகூர்த்தம். சந்திரப்பிரீதி.

உ௬வ வெள்ளி, உதிச்சு நாழிகை எ-உ-க்குமேல் கஉ-௯-க்குள் ஸிம்ஹத்தில் விவாஹாதி சுபமுகூர்த்தம்.

உ௮வ புதன், உதிச்சு நாழிகை ௬-க0-க்குமேல் கக-கஉ-க்குள் ஸிம்ஹத்தில் விவாஹாதி சுபமுகூர்த்தம்.

| | | | |
|---|---|---|---|
| | | செகு. புக. | ரவி. சு-கே. |
| | க0வ மிது-புதன்<br>க௯வ கட-சுக்ர<br>உ௬வ கட-புதன் | | சனி. |
| ரா. | | | |

### குருபூஜை திருநக்ஷத்திரங்கள்.

ககவ மகம், மாணிக்கவாசகஸ்வாமிகள்.
க௬வ பூரம், அமரநீதி நாயனர்.
உ௮வ ரேவதி, கலிக்காமநாயனர்.

### ஆழ்வாராதியர் திருநக்ஷத்திரங்கள்.

கஎவ ஸ்வாதி, பெரியாழ்வார்.
க௬வ அனுஷம், ஸ்ரீமன்னாதமுனி.
உகவ மூலம், திருப்புளியாழ்வார்.

| நக்ஷத்திரங்கள். | ஞாயிறு. | திங்கள். | செவ்வாய். | புதன். | வியாழன். | வெள்ளி. | சனி. |
|---|---|---|---|---|---|---|---|
| அசுபதி | சித் | சித் | சித் | மர | அமி | அமி | சித் |
| பரணி | சித் | சித் | சித் | சித் | சித் | சித் | சித் |
| கார்த்திகை | சித் | மர | சித் | அமி | மர | சித் | அமி |
| உரோகணி | சித் | அமி | அமி | சித் | மர | மர | அமி |
| மிருகசீரிடம் | சித் | அமி | சித் | சித் | மர | சித் | சித் |
| திருவாதிரை | சித் | சித் | மர | சித் | மர | சித் | சித் |
| புனர்பூசம் | சித் | அமி | சித் | சித் | அமி | சித் | சித் |
| பூசம் | சித் | சித் | சித் | சித் | அமி | மர | சித் |
| ஆயில்யம் | சித் | சித் | சித் | சித் | சித் | மர | மர |
| மகம் | மர | மர | சித் | சித் | அமி | மர | அமி |
| பூரம் | சித் | சித் | சித் | அமி | சித் | சித் | சித் |
| உத்திரம் | அமி | சித் | அமி | அமி | மர | சித் | மர |
| ஹஸ்தம் | அமி | சித் | சித் | மர | சித் | அமி | மர |
| சித்திரை | சித் | சித் | சித் | சித் | சித் | சித் | மர |
| ஸ்வாதி | சித் | அமி | சித் | சித் | அமி | சித் | அமி |
| விசாகம் | மர | மர | மர | சித் | சித் | சித் | சித் |
| அனுஷம் | மர | சித் | சித் | சித் | சித் | சித் | சித் |
| கேட்டை | மர | சித் | சித் | சித் | சித் | மர | சித் |
| மூலம் | அமி | சித் | அமி | மர | சித் | அமி | சித் |
| பூராடம் | சித் | சித் | சித் | அமி | சித் | சித் | சித் |
| உத்திராடம் | அமி | மர | சித் | அமி | சித் | சித் | சித் |
| திருவோணம் | அமி | அமி | சித் | சித் | சித் | மர | சித் |
| அவிட்டம் | மர | சித் | சித் | மர | சித் | சித் | சித் |
| சதயம் | சித் | சித் | மர | சித் | மர | சித் | அமி |
| பூரட்டாதி | சித் | மர | மர | அமி | சித் | சித் | மர |
| உத்திரட்டாதி | அமி | சித் | அமி | சித் | சித் | சித் | சித் |
| ரேவதி | அமி | சித் | சித் | மர | சித் | அமி | மர |

ஸ்ரீராமஜயம்.

# கல்பதரு.

KALPA THARU.

அறிவு வளர்ச்சிக்கான வாரந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புஸ்தகம் 1. Vol. I. | பிங்கள ஆனிமீ 10வ சனிக்கிழமை. SATURDAY, 23rd JUNE—1917. | ஸஞ்சிகை 4. No. 4.

# PART I.

## WEAPONS OF THE WAR.

### யுத்தக் கருவிகள்.

#### பிரிடிஷ் கடற்படை.

யுத்தமென்றிருந்தால் அதற்குரித்தான சகலவித கருவிகளும் தானே வந்து ஒவ்வொரு கக்ஷியாரிடமும் சேர்ந்துவிடும். அவரவர் தங்கள் தங்களுடைய கக்ஷி ஜயபேரிகை யடிக்கவேண்டுமென்றும் வெற்றிக்கொடி நாட்டவேண்டுமென்றும் உழைப்பது எங்கும் ஸகஜம். அதுபோல விசேஷ உக்ரத்தோடு நடைபெறும் ஐரோப்பிய யுத்தத்திலே உலகத்தார் அறிய வெளி வந்திருக்கும் யுத்தக்கருவிகள் பலவகை களாயிருக்கின்றன. அவைகளில் கடல் சம்பந்தமானதைமட்டும் இப்போது எடுத்து விவரிப்போம். முதலாவது போர்க்கப்பல். இது பீரங்கிகள் வைத்துப் பொருத்தும்படியாகவும், உள்ளிருந்தவாறே வெளிப்புறம் நோக்குவதற்கு உகந்த மூடிபோட்டுத் திறந்துகொள்ளக்கூடிய வகையாகவும் இருக்கும். பிரிடிஷ் கடற்படையைப் பொறுத்தமட்டில் 10 வகைப் பாகுபாடுகள் உண்டு; ஆனால் யுத்த

ஸம்க்ஷேபத்தை முன்னிட்டு ஒன்றுக்கும் மற்றொன்றுக்குமுள்ள வித்தியாசம் சிறிதளவாகவே யிருப்பதாதலின், அப்பாகுபாடுகளை ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன:—சண்டைக் கப்பல்கள் (battle-ships), சண்டை க்ரூஸர்கள் (battle-cruisers), போர்க்கவசமிட்ட க்ரூஸர்கள் (cruisers), நாசகாரிகள் (destroyers), ஜலக்கீழ்க் கப்பல்கள் (submarines).

### போர்க்கப்பல்கள்.

கடற்படையில் முக்கியமாயிருக்கும் தொகுதி போர்க்கப்பலேயாகும். சமீபத்திற் கட்டப்பெற்ற போர்க்கப்பல்கள் கடற்படையிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன; அவைகளுக்கு ட்ரேட்னொட் (Dreadnought) என்று சொல்லுவார்கள். அப்பெயர்கொண்ட கப்பல்களில் பெரிய பெரிய பீரங்கிகள் வைத்துப் பொருத்தப்பெற்றிருக்கும். சாதாரணமாக 'ட்ரெட்னொட்' கப்பல்களில் 12 அங்குலக் குறுக்களவுள்ள 10 பீரங்கிகளுக்குக் குறையாமலும் நான்கு அங்குலக் குறுக்களவுள்ள பீரங்கிகளுள் 16-க்குமேல் 20-க்குள்ளாகவும் வைக்கப்பட்டிருக்கும். இவ்வகைக் கப்பல்கள் மணி ஒன்றுக்கு 21 நாட் (knot) தூரம் செல்லக்கூடியவை. (ஒரு 'நாட்' என்பது ஒன்றே அரைக்கால் மைல்). இப்போர்க்கப்பல்கள் 17,000 டன்களுக்குமேலும் 25,000 டன்களுக்குள்ளுமாகப் பாரம் ஏற்றிக்கொள்ளக்கூடியவை. போர்க்கப்பல்களில் போருக்குரிய முக்கிய அம்சம் பீரங்கிகளேயாகும். 1910-ம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட 12 அங்குல பீரங்கிகள் இப்போது 14 அல்லது 15 அங்குல பீரங்கிகளாகக் கட்டப்பட்டு வருகின்றன. 16 அங்குல பீரங்கிகள் தயாராவதாகவும் எமக்குக் கேள்வியுண்டு. ஒவ்வொரு பீரங்கியின் நீளம் அதன் குறுக்களவைக் காட்டிலும் 45 மடங்கதிகமாயிருக்கும். 15 அங்குலக் குறுக்களவுள்ள பீரங்கியின் நிறை 96 டன். அதில் வைத்துச் சுடப்படும்படியான குண்டின் நிறையோ 1950 ராத்தல். அதன் பெயர்க்குந் தன்மையோ (muzzle energy) 84,000 'புட்-டன்ஸ்' அதாவது ஒருவெடியினுடைய பலமானது 7000 டன் நிறையுள்ள ஒரு கப்பலை அதன் ஸ்தானத்தினின்றும் 12 அடி உயரம் ஆகாயத்திற்கிளப்பக்கூடிய வன்மைகொண்டது.

### போர்க்கப்பற் கவசம்.

போர்க்கப்பல்களிலுள்ள பிரதானமான அங்கம் பீரங்கியென்று இப்போது தெரிந்தது. போர்க்கப்பல்களின் கவசமாயிருப்பது எதுவென்பதைச் சிறிது ஆராயவேண்டும். பீரங்கிகள் நாளுக்குநாள் விருத்தியாவது ஒருபுறமிருக்க, மற்றோர்புறத்தில் கப்பலின் இதர வகைப் பாதுகாப்புகளும் சீர்திருந்தப்பெற்று வருகின்றன. கப்பலின் வெளிப்புறம் மரத்தினாற் செய்யப்பட்டதல்ல; எஃகுத் தகடுகளாற் பரப்பப்பட்டிருக்கிறது. சாதாரண கப்பல்களுக்கென்றால் அத்தகடுகள் இரண்டு அல்லது நான்கு அங்குல கனமாயிருக்கும். மேற்சொன்ன 'ட்ரெட்னொட்' வகைகளைப் பொறுத்தமட்டிலோ அத்தகடுகளின் கனம் 10 அங்குலங்களுக்குமேல் 12 அங்குலங்களுக்கு உள்பட்டதாக விருக்கும். 'ஐரன் ட்யூக்' போன்ற 'ஸுபர் ட்ரெட்னொட்' சண்டைக் கப்பல்களுக்குப் போடப்பட்டிருக்கும் எஃகுத்தகடுகள் 14 அங்குலக் கனமுள்ளவை. இவ்விதமான தகடுகளில் குண்டுகள் பட்டாலும் துளைப்பது கடினம். தெறித்துப்போய்விடும். பீரங்கியிலும் எஃகுக் கவசத்திலும் போர்க்கப்பல்கள் பலம் பெற்றிருப்பதைப்போலவே போர்க்கப்பல்களிற் பதிப்பிக்கப்பட்டிருக்கும் 'டார்பீடோ' வென்னும் துளை வெடிகளின் சக்தியும் அதிகமாக்கப்பட்டிருக்கிறது.



### க்ரூஸர்கள்.

இதுவும் கடற்படையைச்சேர்ந்த அம்சங்களில் ஒன்று. சண்டைக்கப்பல்களில் வைக்கப்பட்டிருக்கும் கருவிகளின் தீக்ஷண்யம் எவ்வளவு அவசியமானதோ அவ்வளவு அவசியமாகும் கப்பலின் வேகமும். இதுவரையில் சண்டைக் கப்பல்கள் மணி ஒன்றுக்கு 15-முதல் 18 'நாட்' வேகத்துடன் போகும்படி விசை வைக்கப்பட்டிருந்தது. தற்போது 21 'நாட்' வேகத்துடன் செல்லும்படி அமர்த்தப்பட்டிருக்கிறது. உயர்ந்த வேகத்துடன் செல்லும்படியான சிற்சில நூதன அமைப்புக்களோடுகூடின கப்பல்களும் கட்டிவிடப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குத்தான் சண்டை க்ரூஸர்கள் (battle-cruisers) என்றுபெயர். அவை சண்டைக் கப்பல்களைப்போல பாரியான ஆகிருதியோடு கூடினவையல்ல; சாதாரணமான போர்க் கவசமிட்ட 'க்ரூஸர்'களைப் போன்ற சிறிய ஆகிருதியோடு கூடியனவுமல்ல. ஆனால் சண்டைக் கப்பல்களிடமாகவுள்ள பலமும் க்ரூஸர்களிடமாகவுள்ள வேகமும் பொருந்தியவை. சண்டைக் கப்பல்களுக்குப் பலமுண்டு, வேகமில்லை; க்ரூஸர்களுக்கு வேகமுண்டு, (சண்டைக் கப்பல்களைப்போல்) பலமில்லை. ஆகவே பலமும் வேகமுஞ் சேர்ந்திருக்கக்கூடியவை இந்த 'சண்டைக்குரூஸர்களே'யாம். ஒரு சண்டை க்ரூஸர் கப்பல் மணி ஒன்றுக்கு 25-முதல் 30-'நாட்' வேகத்துடன் கடலிற் செல்லக்கூடியது. இப்போது கட்டப்பட்டிருக்கும் புதிய க்ரூஸர்கள் பண்டைக்காலக் கவசமிட்ட (Armoured) க்ரூஸர்களையும் பாதுகாப்பமைப்புக்கொண்ட (Protected) க்ரூஸர்களையும் போலல்லாது நூதனவகையான மாதிரிகளாகக் கட்டிமுடிக்கப் பட்டிருக்கின்றன. பொதுவாக க்ரூஸர்களுக்குச் சண்டைபோடும் வேலைகிடையாது. சுற்றித்திரிந்து பாதுகாப்பதற்கும் பாராகொடுப்பதற்கும் அவை பெரும்பாலும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

### துளைவெடி படகுகளும் நாசகாரிகளும்.

இவ்விரண்டும் கடற்படையைச்சேர்ந்த அங்கங்கள். சரீரத்திற்கு ஒவ்வோர் உறுப்பும் எத்தன்மைகொண்ட வேலை செய்கிறதோ அப்படியே மேற்சொன்ன இரண்டு அங்கங்களும் கடற்படைக்கு வேலை செய்கின்றன. ஈ, கொசு, எறும்பு முதலியன நம்மீது உட்கார்ந்தால் நமக்கு எவ்வளவு அருவருப்பும் தொந்தரவும் உண்டாகின்றன பாருங்கள்; அம்மாதிரியாகவே

துளை வெடி படகுகளும் நாசகாரிகளும் பகைவர்க்குத் தொந்தரவு செய்து கொண்டிருக்கும் வேலையையே கவனித்து நிற்கும். பிரான்சியர் 'டார்பீடோ போட்டுகள்' என்னும் துளை வெடிபடகுகளை ஏகமாய்க் கட்டினார்கள்; அதே மாதிரி படகுகளை ஜர்மானியரும் கட்டவாரம்பித்தார்கள். இந்தத் துளை வெடிபடகுகள் செய்யும் வேலைகளோடு இதர வேலைகளையும் செய்யக்கூடிய பலமும் விசையும் பொருந்திய கப்பல்களைச் செய்யக்கருதிய பிரிடிஷார் 'நாசகாரிகள்' (Destroyers) என்னும் ஒரு புதுமையான கப்பலைச் செய்ய லாயினர். அவ்வகைக் கப்பல்கள் செய்யும் தீரமும் வீரமும் பொருந்திய வேலைகளுக்கு இவ்வைரோபிய யுத்தத்தில் தெரியவரும் ஸம்பவங்களே போதுமானவை. எதிரிகளுக்குச் சல்லியங்கொடுத்துக் கொண்டிருப்பதில் இந்நாசகாரிக் கப்பல்களுக்கு மிஞ்சித்தான் மற்றெதுவும். இவை துளை வெடிபடகுகளைக் காட்டிலும் பெரியவை. வேகமாகச் செல்லக்கூடியவை. சடுதியில், அடுத்தடுத்து 'பட் பட்' என்று வெடிதீர்க்கும் யந்திரவிசையடங்கிய சிறு பீரங்கிகளையொப்ப துளைவெடிகள் இந்நாசகாரிகளில் வைக்கப்பட்டிருக்கும். பாதுகாப்புக்காக அந்நாசகாரிகள் அமர்த்தப்படுகையில் ஏதேனும் தொல்லை நேரும் பக்ஷத்தில் அதிலிருந்து விடுவித்துக் கண்டிக்கும் பொருட்டே அக்கருவிகளும் வெடிகளும் நாசகாரிகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. அதிகாரிகள் 'நாசகாரி'க் கப்பல்களை இரண்டு வகைகளாகப் பிரித்து ஒன்றுக்குக் 'கடல் நாசகாரி' யென்றும் மற்றொன்றுக்கு 'நதி நாசகாரி' யென்றும் பெயரிட்டிருக்கிறார்கள். அப்பெயரை வாசிக்கும்போதே அவை செய்யும்வேலை இப்படிப்பட்டதென்பது தெரியக்கூடும். முதலிற் சொல்லப்பட்ட கடல் நாசகாரி யென்பது சமுத்திரத்திலே சண்டைக் கப்பல்களும் க்ரூஸர் கப்பல்களும் சேர்ந்த கடற்படை செல்லுங்கால் அதற்குரிய ஏவற்றொழில் புரிந்துகொண்டிருக்கும். பின்னர்க் குறிக்கப்பட்ட 'நதி நாசகாரி' யென்பது கரைப் பாதுகாப்பைக் கவனிப்பது. புதுமாதிரியாகச் செய்யப்பட்டிருக்கும் பிரிடிஷ் துளைவெடி படகுகள் இப்போது நாசகாரிக் கப்பல்களாக வேலை செய்வதும் கரைப் பாதுகாப்பையும் பாரா கொடுப்பதையும் கவனித்துக்கொண்டிருப்பதும் இங்கு கவனிக்கத் தகுந்தவை.

### ஜலக்கீழ்க் கப்பல்.

இதற்குத்தான் ஸப்மரீன் (Submarine) என்று ஆங்கிலத்திற் பெயர் வழங்குவது. இது கடலிற் பிறர் பாராதிருக்கும்படி ஜலமட்டத்திற்குப் பத்து அல்லது இருபது அடி ஆழத்திற்குக் கீழாகவே அமுங்கிச் செல்லுவது. இம்மாதிரியாகப் பதினான்கு மணிநேரம் இருக்கக்கூடியவாறு விசைகள் அமைக்கப்பெற்றது. துளைவெடிகளை விடுக்கும்படியான குழாய்களும் ஜலக்கீழ்க் கப்பல்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஜலக்கீழ்க் கப்பல்களின் வரலாற்றினைக் குறித்துச்சென்ற சஞ்சிகையில் ஏற்கெனவே சொல்லியிருக்கிறோமாதலால், இன்னுமதிகமாக இங்கு சொல்லாமல் நிறுத்துகிறோம்.



பாராகொடுத்துப் பகைவர் சமீபத்தில் அண்டாதபடி பாதுகாப்பதற்கும் பகைவர் சடுதியில் அறியாதவாறு ஜலத்திற்குக் கீழாகவே சென்று துளை வெடிகளைப் பிரயோகிப்பதற்கும் ஸப்மரீன என்னும் ஜலக்கீழ்க் கப்பல் உபயோகமாகிறது.

### ஆகாயக் கருவிகள்.

கடற்படையைச் சேர்ந்த ஆகாயக் கருவிகள் இப்போது பெரிதும் விருத்தியாக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு வருஷங்களுக்கு முன்னிருந்ததற்கும் இப்போதிருப்பதற்கும் நிரம்ப வித்தியாஸமுண்டு. அப்போது ஸாமானியமாக விருந்த அக்கருவிகள் இப்போது பலத்திலும் எண்ணிக்கையிலும் வேலையிலும் பதின்மடங் கதிகமாக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். 1915-ம் வருஷவாரம்பத்தில் பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த கடல் ஆகாய விமானங்கள் (Sea-planes) 75-ம், ஆகாயக் கப்பல்கள் (airships) பத்தும் இருந்தன. இப்போதோ மேற்குறித்தவாறு அதிகமாக்கப்பட்டிருப்பதை யாம் சொல்லாமலே நமது நேயர் தெரிந்துகொள்ளுவார்கள்.

### படைப்பாகுபாடு.

பிரிடிஷ் கடற்படை மூன்று பிரிவுகளாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தொகுதிக்கும் ப்ளீட் (Fleet) என்று சொல்லுவார்கள். அம்மூன்று தொகுதிகளும் எவை யெவை யெனில் 'ஹோம ப்ளீட்', (Home fleet) மத்தியதரைக் கடற்படை (Mediterranean fleet), கிழக்குத் தொகுதிக் கடற்படை (Eastern fleet). பொதுவாக ஒரு தொகுதியில் அடங்கியுள்ள அங்கங்கள் எவை யெவையெனில் எட்டுக்கப்பல்கள் கொண்ட போர்க் கப்பற்றொகுதி. 8 கப்பல்கள் அடங்கிய க்ரூஸர் கப்பற்றொகுதி. 22 கப்பல்களடங்கிய நாசகாரிப் படைத்தொகுதி. இவையன்றி கனி வெடியிடவும் கனி வெடிதுடைப்பவுமான கப்பல்கள், (Mine-layers and mine-sweepers) ஸப்மரீன்கள் முதலியன.

### நிருவாகம்.

கடற்படையின் நிருவாகப்பொறுப்பு அட்மிரல்டியின் முதற்றலைவர் (First Lord of the Admiralty) என்பவரிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. அவர் மந்திராலோசனைசபை மெம்பருமாவர். கடற்படை சம்பந்தமான சகல விவரங்களையும் குறித்து அவ்வாபிஸர் பார்லிமெண்டாருக்கும் சக்ரவர்த்தியாருக்கும் உத்தரவு சொல்லவேண்டியவராவர். அவருக்கு அவ்வப்போது யோசனை சொல்லிக் கடற்படை விவகாரங்களைக் கவனிப்பதன் நிமித்தம் கடற்படை யுத்தியோகஸ்தர்களும் சிவில் உத்தியோகஸ்தர்களும் சேர்ந்த ஒரு கமிடியுமுண்டு. அக்கமிடிக்கு 'அட்மிரல்டி' போர்டு என்று பெயர், இதுவே பிரிடிஷ் கடற்படையின் பொதுவான அமைப்பு.

# PART II.

## ஆரோக்கிய விமர்சனம்.

### நமது சுற்றுப்புறங்கள்.

ஒருவனுக்கு எவ்வளவுதான் குணவிசேஷங்கள் பொருந்தியிருந்தாலும், ஒருவன் உயர்வான குலம் படைத்தவனாயிருந்தாலும், மாநியம் படைத்தவர் வம்சத்தில் உதித்த மங்கையை மணங்கொண்டிருந்தாலும், மற்றும் மதியுந்தனமு மிகுந்த உத்தமசீலம் மிகுந்தவனாயிருந்தாலும், அவன் தேகாரோக்கியம் செம்மையா யில்லாதபக்ஷத்தில், அவனுக்குப் பூவுலகத்தில் சந்துஷ்டியென்பதே கிடையாமற்போய்விடும். தேசசுகம் கெட்டுப்போனவர் தன்னந்தனியே விசாலமான தோட்டத்தின் மத்தியில் விஸ்தாரமாகக் கட்டப்பட்டிருக்கும் பங்களாக்களிலும் பர்ணசாலைகளிலும் அடுக்குமாடிகள் வைத்து நிருமாணிக்கப்பட்ட உப்பரிகைகளிலும் வாஸஞ்செய்தாலுமென்ன, ஹம்ஸதூளிகா மஞ்சத்தில் பட்டுவேய்ந்த பஞ்சணைமெத்தையில் படுத்தயர்ந்து நித்திரைசெய்தாலுமென்ன, உதடசைய ஊரசையவும் நாவசைய நகரசையவும், தலையசையத் தரணியசையவுமான செல்வாக்கு மிகுந்தவனாயிருந்தாலுமென்ன, பொன் வெள்ளியினாலாய தட்டுகளில இதர மூஸ்தீப்புக்களோடுகூடின செல்வ வகைராக்களிலும் உண்பதும ஆடுவதும் பாடுவதுமா பிரவிர்த்திகளில் புத்தியைச் செலவழித்துக் காலங்கடத்தினாலுமென்ன, ஆரோக்கியம் சீர்கெட்டிருக்குமாயின், மேற்கூறிய செல்வமனைத்தும் சூரியனைக்கண்ட பனிபோல் இருக்குமிடந் தெரியாது மறைந்துபோகும். ஆனது பற்றியே பெரியோர்களாயினோர் பூவுலக வாழ்க்கையைப் பரிமளிப்பது நோயற்ற வாழ்வே யெனக் கூறி யிருக்கிறார்கள். இவ்விஷயத்தைப்பற்றிப் பல அத்தியாயங்கள் ஓய்ச்சலொழிவில்லாமல் எழுதக்கூடுமென்றாலும் விஷயத்தின் பிராதான்யத்தையும், அதை நம்மவர்கள் அநுஸரிக்கவேண்டிய கிரமத்தையும் யாமறிந்தமட்டில் கொஞ்சங்கொஞ்சமாகத் தெரிவித்து ஆரோக்கிய ஸம்பன்னர்களாக நம் தேயத்தவர் வாழவேண்டுமென்றே கோருகின்றோம். ஆரம்பத்தில் நமது சுகக்கேட்டிற்கு வெளிக்காரணமாகவுள்ள நமது சுற்றுப்புறங்களை யெடுத்துக்கொள்வோம்.

நாம் வசிக்குமிடம் நல்ல காற்று வீசக்கூடியதும், அவ்விடத்தைச் சுற்றியிருக்கும் பூஸாரம் துர்நாற்றத்தை வீசக்கூடிய அசுத்தாதிகள் சேர்ந்து குவிந்திருக்கக்கூடிய நிலமாயிராமலும் பசுமை பொருந்திய செடிகொடிகளாலும் மணற்பாங்கு நிரம்பிய மைதானத்தாலும் சூழப்பெற்றதாயிருக்கவேண்டும். மனுஷ்யருடைய சுகவாழ்வுக்குப் பிரதமத்தில் ஆதாரமாயிருப்பது நாம் சுவாஸிக்கும் ஆகாயம்; அதுதான் பிராணவாயு. ஆங்கிலத்



தில் அதற்கு ஆக்ஸிஜன் (Oxygen) என்று சொல்லுவார்கள். நாம் சுவாஸிக்கும் ஆகாயம் பிராணவாயுவாயிருக்க, நாம் வெளிவிடும் ஆகாயம் வேறு ஆகாயமாயிருக்கிறது. அது கரியமிலவாயு. உள்ளுக்கிழுக்கும் பிராணவாயுவானது நாசித்துவாரங்கள் மூலமாக நமது சரீரப் பிரதேசத்தினுட் சென்று இருதயம், குடல், மண்ணீரல், நுரையீரல், கொப்பூழ்ப் பிரதேசம் முதலான உட்புறங்களில் மிகவும் நுண்ணிய தன்மையோடு சிருஷ்டிகர்த்தராகிய அஜ்ஞாசக்ரத்தினால் வேலைசெய்யும் கருவிகளைச் சுத்திகரிக்க, அவைவினை அசுத்தத்தை வாங்கி வெளியேற்றுகிறது. ஒவ்வொரு கணக்கினும் ஜீவராசிகளுக்கு இன்றியமையாததாயிருக்கும் ஆகாயம் எப்படிப்பட்ட அமைப்புடன் பொருந்தியிருக்கிறதென்பதைக் கவனிப்போம். ஜகத்சிருஷ்டியில் செய்யப்படும் முதற்காரியமும் கடைசிக்காரியமும் பிறப்பதும் இறப்பதும் என எப்படித் தொகுக்கப்பட்டிருக்கிறதோ அப்படியே பிறந்தபின் மூச்சை உள்ளுக்கிழுப்பதும், இறக்குமுன் மூச்சை வெளியில் விட்டுவிடுவதும் தெய்வசங்கற்பங்களாக அமைந்திருக்கின்றன. அவ்விதம் சுவாஸம் வாங்கிச் சுவாஸம் விடுவதில் சம்பந்தப்பட்டிருப்பது ஆகாயமன்றி மற்றெதுவுமல்ல; எங்கும் வியாபித்திருக்கும் ஆகாயத்திற்கு ஜீவராசிகளைப் பாதுகாக்கும் தெய்வத்தன்மை பொருந்தியிருப்பதை இங்கு சொல்லவேண்டுவதில்லை. கொஞ்சநேரம் மூச்சுவிடாமல் அடக்கிக்கொண்டிருப்போமானால் வயிறு உப்பிக் கண்கள் சிவந்து திக்குமுக்கலிட்டுத் தவித்துத் தடுமாறுகின்றோமல்லவா? காரணம் என்ன? நாம் சுவாஸிக்கும் ஆகாயத்தில் ஜீவாதாரமான அணுக்கள் மிகுந்திருப்பதும், சுவாஸத்தை யடக்கிவிட்டால் அவ்வணுக்கள் வேலைசெய்ய இடமில்லாது ஜீவாதாரம் மலின மடைவதும் நிதர்சனமாகும். ஆகவே ஆரம்பத்தில் சுத்த ஆகாயத்தைப்பற்றியே நாம் பேசவேண்டியிருக்கிறது. ஆகாயம் என்று பொதுவாக இதுவரையிற் சொல்லிவந்தோமே யல்லாது அவ்வாகாயத்திற் கலந்திருக்கும் மற்றவை என்னென்ன வென்பதைச் சொல்லவில்லை. பஞ்சபூதங்களாகிற ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ஆகிய இவைகளை சகலவிதமான பரிசீலனைகளால் நன்றாயுணர்ந்து ஒவ்வொன்றுக்கும் இவ்விவ்விதமான குணமுண்டென்று சாஸ்திரீய விற்பன்னர்கள் பாகுபாடு செய்திருக்கிறார்கள். அப்பாகுபாடுகளை ஆராயுமிடத்து மொத்தமாக ஆகாயத்தின் சேர்மானங்கள் நாலுவகையும் சங்கமெனப் புலப்படுகிறது. அதாவது பிராணவாயு, உப்புவாயு, கரிவாயு, ஜலவாயு. இந்நான்கு அம்சங்களோடு பூர்ணித்து ஆகாயம் என்ற பொதுப் பெயரோடு வழங்கும் அம்சத்தை ஜீவராசிகள், மனுஷ்யனாலும் மிருகமானாலும் பக்ஷியானாலும் மற்றும் ஊர்வனவானாலும், ஸதாஸர்வகாலத்திலும் (வேலை செய்யும்போதும் தூங்கும்போதும், நடக்கும்போதும் பேசும்போதும்) உபயோகியாமல் இருக்கமுடியாது. ஆதலால் உயிருடன் வாழ்வதற்கு ஆகாயம் அவசியமாகும். ஆகாயம் என்பது சிவப்பா அல்லது கறு

ப்பா, அதை நாம் எவ்விதம் பார்ப்பது என்று சிலர் வினவக்கூடும். அதை நாம் கண்களால் பார்க்கமுடியாத ஓர் அநுகிருதமான வஸ்துவாகுமது. ஆனால் உணரக்கூடும். எப்படியென்றால் ஆகாயத்தில் சலனம் ஏற்படுமாயின் அது அசையும். அதைத்தான் நாம் 'காற்று' என்றழைக்கிறோம். விசிறியினால் நாம் விசிறிக்கொள்ளும்போது நமது சரீரத்திற் காற்றுப்படும் உணர்ச்சி உண்டாகிறது; கொடிகளில் உலர்த்தியிருக்கக்கூடிய வஸ்திரங்கள், மரக்கிளைகள் முதலியன அசைந்தாடும்போது, அவ்விதம் அவைகளை அசைக்காட்டுவது எதுவென்று தீர்க்காலோசித்துமிடத்து காற்றல்லாது வேறொன்றுமில்லையென்றே சொல்லும்படியாக விருக்கிறது. ஆகாயமென்று சாஸ்திரீயமாகவும் காற்றென்று ஸாதாரணமாகவும் வழங்கும் இவ்வம்சம் தேகாரோக்கியத்திற்குக் காரணமான முதலம்சம் என்பதை எவராலும் மறுக்கமுடியாது.

---

## SUBMARINE BAGGED.

### வாயடைக்கப்பட்ட ஜலக்கீழ்க்கப்பல்.

அகண்டாகாரமாக விருக்கும் நடுக் கானகத்தில் பூதபைசாசங்கள் நள்ளிரவிற் கூறையாடுவதாக நமது பெரியோர்கள் அப்போதைக் கப்போது சொல்லி வந்ததுண்டு; இதை நம் நண்பர் பலர் தமது தினசரியனுபவத்தில் பெரியோரிடம் கேட்க முடியும். அது போல் பல மைல்தூரம் கண்ணுக் கெட்டின வரையில் தண்ணீரைத் தவிர வேறெதுவும் காணக் கூடாத நிலைமையில் வியாபித்திருக்கும் சமுத்திர மத்தியிலே பூதபைசாசங்களையொப்ப தூர்க்காரியத்திலேயே கண்வைத்து அட்டூழியஞ் செய்யும் ஜர்மானிய ஜலக்கீழ்க் கப்பல்கள் ஊடாடுகின்றன. இவைகளுள் ஒன்றை அமெரிகர் முதன் முதலாக அழித்துப் போட்டார்கள். 'மங்கோலியா' வென்னும் அமெரிக்கா தேச நீராவி மரக்கலம், தற்பாதுகாப்பைக் கருதிப் போர்க்கவச மிடப்பட்டிருந்தது. அது மணியொன்றுக்கு 18-மைல்தூரம் போகும் வேகத்துடனிருப்பது. அக்கப்பல் அமெரிகாவிலிருந்து இங்கிலாண்டிற்குப் போய்க்கொண்டிருந்த தறுவாயில் அக்கப்பலிருந்த விடத்திற்குச் சுமார் 1000 கஜ தூரத்திற்கப்பால் ஒரு ஜலக் கீழ்க்கப்பலின் தூர திருஷ்டிக் கண்ணாடி பதித்த நிலை (periscope) நிமிர்ந்திருப்பது தெரியவர, தக்ஷணமே அமெரிகக் கப்பலின் தலைவர் தமது பீரங்கியிற் குண்டு போட்டு அந்நிலை யிருக்கு மிடத்தை மிக்க தீவிரமாகக் கணக்கிட்டுக் குறிவைத்துப் பிரயோகிக்க, அது விழுந்து அந்நிலையை யழித்து மலையுபரம் தண்ணீரை யெழுப்பியது. திரும்ப அந்நிலை காணவில்லை. ஜலக்கீழ்க் கப்பல் தண்ணீருக்குள் அமிழுங் குறியுந் தென்படவில்லை. ஜலக்கீழ்க் கப்பல் தண்ணீருக்குட்புறமாக வந்து துளை வெடியைப் பிரயோகப்பதற்கு முன் இவ்வமெரிகக் கப்பல் மதியூகமாகக் குண்டைப் பொழிந்து அந்த ஸப்மரீனைத் தொலைத்தது அக்கப்பலுக்குப் பெரும் புகழைத் தருவதாகின்றது. அல்லாமலும், அமெரிகா பிரகிருத யுத்தத்திற் பிரவேசித்த பிறகு பகைவரென்று ஜர்மனியரை மதித்து முதல் வெடி தீர்த்தது இச்சந்தர்ப்பம் தான் 'முதல் கோணல் முற்றுங்கோணல்' என்ற பழமொழியைப் பின்பற்றுது முதலெடுப்பிலேயே பகைவரது கொட்டத்தை யடக்குந் தன்மை வாய்ந்த தீரத்துடன் அமெரிகக் கப்பற்றலைவர் வேலை செய்தது நேச ராஜாங்கத்தவர்க்கு வெற்றியே பிராப்தமாகும் என்பதற்கோர் அறிகுறியாகும். குறி தப்பாது குண்டைப் பிரயோகித்த அந்த பீரங்கிக்கு "டெடி ரூஸ்வெல்ட்" என்று பெயராம். ஆகா பெயருக்குத் தகுந்தாற்போல் அப் பீரங்கி செய்த வேலை தான் என்னே! ரூஸ் வெல்டின் அம்சம் அப் பீரங்கியிலும் கலந்துள்ளது போலும்!

# PART III.

## KNOWLEDGE ON AGRICULTURE, etc.

BY Mr. G. RAJAGOPAL,

*Late Editor "South Indian Agriculture."*

## விவசாய ஞானம்.

### செடிகள் எப்படி வாழ்கின்றன?

(88-ம் பக்கத் தொடர்ச்சி.)

**மண்ணிலிருந்து ஆவியாகப்போகும் ஈரத்தால் ஏதாவது பலனுண்டா?**

இல்லை.

**செடிக்குச் ஜலம் வேண்டும். அது ஆவியாகக்கப்படுகிறது. அதை எவ்வாறு பாதுகாத்தால் செடியின் ஆயிசு முழுவதும் உதவும்?**

மழை மண்ணுக்குள் போகிறது, செடிக்கு எப்போது அதிகம் வேண்டுமோ அப்போதுதான் மழை குறைவாக இருக்கும். இக்குறைவை ஆழமாக வடிகால் புதைத்தாவது, மேல் மண்ணைப் புழுதி செய்தாவது, ஜலம் பாய்ச்சியாவது நிறைவேற்றவேண்டும் வடிகாலால் மண்ணில் அதிக ஜலம் நிற்கும் புழுதி மண்ணினால் தாயீர்ம்மேல் நோக்கி ஆவியாகாமல் உதவும்.

**செடிக்கு வேண்டிய தாதுப்பொருள்கள் எவை?**

சிகணவாயு, பிரகாசதம், சாம்பல்காரம், சுண்ணம், இரும்பு, கந்தகம் கரியணு, ஜலவாயு, பிராணவாயு.

**இவற்றில் இயற்கையில் ஏராளமாய் கிடைப்பது எது?**

கரியணு,

**மனிதப் பிரயத்தினத்தினால் சேர்க்கவேண்டியவை எவை?**

சிகணவாயு, சாமபல்காரம், பிரகாசதம், சுண்ணம், ஜலம். இவைகளிருந்தும் கொழுமைக்கு ஆதரவாகிய அம்சங்கள் எவை?

வேண்டிய அளவு உஷ்ணம்; வேண்டிய அளவு ஜலம், வேண்டிய அளவு இந்திரியவஸ்து, மண் குரைச்சல், போதுமான ஆகாரம்.

**இவைகளில் மனிதப் பிரயத்தினத்தினால் கிடைப்பது எவை?**

உஷ்ணம்மாத்திரம் கொடுக்க வாய்ப்பதில்லை. மற்றவைகளைச் சேர்க்கலாம்.

### மண்.

பூமி ஆதியில் ஒரு பெரிய நெருப்புபோன்ற உஷ்ணமுள்ளது. அது குளிர குளிர மேல்புரைகல்லாகக் கடினமாயிற்று.

மழை, பனி, காற்று, பிராணவாயு, கரியமிலவாயு, பாசம், முதலியவைகள் இயற்கையிலே ஷை கல்லுகளை இடைவிடாமல் பஸ்பமாக்கி வருகின்றன.

இமயத்கிரி, மேற்குத் தொடர்மலை இவைகள் சதா உடைந்து பஸ்பமாகி பெய்யும் மழை அப்பஸ்பத்தை வெள்ளத்தில் கொண்டுவந்து வங்காளத்திலும் கோதாவரி தஞ்சை முகலிய இடங்களிலும் வண்டலாக படியவைக்கிறது. மலை நாடுகளாகிய நீலகிரி ஜில்லா முதலிய இடங்களில் இரண்டு மலைகளுக்கு இடையில் பள்ளம் உண்டு. பூர்வத்தில் ஒரேமட்டமாக இருந்த மலைமட்டம் நடுவிலிருந்த கல்லுகளையும் கண்ணையும் மழைவாரிப் போய் விட்டபடியால் ஷை பள்ளம் உண்டாயிற்று.

காற்றில் தேய்ம்படியான எல்லாக் கல்லுகளும் தேய்ந்துகொண்டே இருக்கின்றன. கல்லுகள் பிறந்து அவை மறுபடியும் சிறு கல்லுகளாகி முறையே மண் ஆகின்றன.

ஒவ்வொரு ஆறும் மலைகளிலிருந்து மண்ணையும் கல்லையும் வெள்ளத்தில் வாரிவந்து கீழ்நாடுகளில் சேர்க்கின்றது. மலையடிவாரத்தில் கல்லுகள் அதிக மிருப்பது இதனால்தான்.

மழை வந்தபிறகு ஆறுகளும் ஓடைகளும் மண் குழம்பிய ஜலத்துடன் பாய்கின்றன. பள்ளங்களில் இம்மண் வண்டலாக படிகின்றது. ஒவ்வொரு ஆறும் சென்னை இராஜதானியில் முக்கியமாய் தமிழ்நாட்டிலுள்ள அநேக நிலங்கள் இவ்வாறு இந்திரியவஸ்து தகனப்பட்ட நிலங்கள்.

இந்திரிய வஸ்துவோ, தாள், பதிர் பசுந்தாள், எரு, மாட்டெரு முதலியவைகளால் நிலத்தில் சேர்கிறது. குடித்தனக்காரன் தானியப் பயிரையும் அவுரி, நிலக்கடலை, சணல், பயறு முதலியவைகளையும் மாற்றி மாற்றிப் பயிரிடும் பக்ஷத்தில் மண்ணில் இந்திரிய வஸ்து நிலைக்கும். அப்படியானால் கடுமையான உறத்த ஏழை நிலத்துக்கு மாத்திரமே பசுந்தாளெரு வேண்டும். பசுந்தாளெருவைப் பயிரிட்டால் அப்பயிரை மாடுமேயும் பக்ஷத்தில் நிலத்துக்கு உரம் கிடைப்பதுடன் மாடும் செழுமையடையும். ஒவ்வொரு பயிருக்கு அடுத்து பசுந்தாளெருவை உற்பத்தி செய்வது மேன்மை. ஒரே தரமாக அதிகமும் சேர்க்கப்படாது. பயிரறுத்ததும் உழுது உரபயிர் கிளப்பி மறுவருஷம் உழவில் எவ்வளவு கொஞ்சம் வளர்ந்திருந்தாலும் மண்ணில் கலந்துவிடுவது மேன்மை.

காடுகளில் இந்திரிய வஸ்து என்னமாய் உண்டாவதென்று சிறுது கவனிப்போம். வருஷாவருஷம் இலைகள் உதிர்ந்து மட்கின்றன. கடைசியாக மரம் விழுந்து இற்றுப்போய் மண்ணில் கலக்கின்றது. இவ்வாறு இயற்கையில் நிதானமாய் இந்திரிய வஸ்து சேர்கின்றது. அப்படிப்பட்ட மிகக் கொழுமையுள்ளது. மனிதன் அதைச் சாகுபடி செய்தால் வெகு சீக்கிரத்தில் கொழுமைமாறி நல்லபலன் தருவதில்லை. காரணம் என்னவெனில் இந்திரிய வஸ்து குறைந்துவிட்டதேயாம்.



பயிர் மாற்றல்:—இதனால் மண் இளைப்பதில்லை. அவுரி, கொள் முதலிய கோதுக்காய்ப் பயிரை விளைவித்தால் மண்ணுக்கு சிகணவாயுவை (Nitrogen) ச்சேர்க்கும். மண் இளகி இருக்கும். களை அதிகப்படாது ஆள் வேலை வருஷ முழுவதும் பரவியிருக்கும்.

மணல் நிலத்தில் தானியம் அதன்பின் வேர்கடலை, துவரை, கொள், அவரை முதலியவைகளில் ஒன்று பயிரிட்டால் நலம்.

களிமண் நிலத்தில் தானியம் அதன்பின் அவுரி, சணல் முதலியவைகள் ஒன்று அநுசரிக்கவேண்டும்.

பழத்தோட்டங்களில் மாடுகள் இல்லாததினால் பசுந்தாளெருவை இடைவெளியில் பயிர்செய்து உழுதுவைக்கவேண்டும்.

தளர்ச்சி:—மண் கொழுமை விளைவை உண்டாக்கும் சக்தியென்று சொல்லலாம். இக்கொழுமை யென்பது மண்ணின் தளர்ச்சி செடி உணவின் நிறைவு போதுமான ஈரம் இவைகளை அநுசரித்து இருக்கின்றது.

மண் தளர்ச்சி என்றால் மிந்து ,இளகல் புணர்ச்சல் கடிமை கல்பாந்தரம் முதலியவை ஒருசெடி ஒருகல் மேலாவது ஒரு பலகைமேலாவது முளைக்காது. அவைகளில் போதுமான ஆகாரம் இருக்கின்றது, செடிக்கு அவைகள் பிடிப்புதராது அதன்மேல் போடும் உரம் வீணாகப்போகும். கடினமான களிமண்ணில் சீமை எரு பயன்படாது. மண் இளகலாய் தளர்ந்து இருந்தால்தான் சீமை எரு தக்கவாறு பயன்படும். மண் ஆழமாகவும் உழப்படவேண்டும். ஏழைக் குடித்தனத்துக்கு சீமை எரு உதவாது நமக்கு வயிற்றுக்கடுப்பு ஒவ்வொரு வருஷத்தில் எத்தனை பாரம் மண்ணை வாரிப்போய் வண்டலாக ஒதுக்குகிறது. அநேக இடங்களில் வண்டல் மண் விவசாயத்துக்கு உபயோகப்பட்டிருப்பது வெள்ளத்தினால் உண்டானதென்றே நம்பவேண்டும். சில சந்தர்ப்பங்களில் மண் பலவிதமாகக் கல்ந்திருக்கும் வெவ்வேறு ஆறுகள் வெவ்வேறு மலைகளிலிருந்து வெவ்வேறு தினுசு மண்ணைக் கொணடுவந்து சேர்த்ததென்று நம்பவேண்டும். ஆற்றோர நிலங்கள் ஏரிப் பள்ளங்கள் முதலியவைகள் ஜலத்தால் உண்டானவை. சில சமயங்களில் இவ்வாறு மணமேடுகளிலுமிருப்பதுண்டு. இவ்வண்டலால் ஏரிகள் தூந்துபோகும். முகத்துவாரங்களில் தீவுகள் உண்டாகும். ஆற்றில் வெள்ளமும முறமாய் வந்தாலோ இத்தீவுகள் எடுபட்டுப்போம். ஆகவே கங்கை கோதாவரி முகத்துவார தீவுகளும் ஆற்றோரத்து படுகைகளும் செழுமையாயிருக்கின்றன.

இந்திரியவஸ்து—மண் முன் முற்சொன்னதுபோல கல்பஸ்பமாலும் அதில் செடிகளாலும் மிருக பிராணிகளாலும் சம்பந்தப்பட்ட இந்திரிய வஸ்து கலந்தால்தான் அம்மண் சத்துள்ளதாயிருக்கும். இவ்விந்திரிய வஸ்துதான் மண்ணின் நிறத்தை வெவ்வேறுநிற கருப்பாக்குகிறது. இது மண்ணை இளகச்செய்யும். மண்ணுக்குச் சூடுகொடுக்கும். மண்ணை மிருது

வாக்கும் ஜலத்தை அதிகமாக பிடித்துவைக்கும். இந்திரிய வஸ்து இல்லாத மண் கடினமாகவும் சத்து குறைந்துமிருக்கும். நிலம் கொழுமைபோன தென்றால் செடிக்கு வேண்டிய ஆகாரம் இல்லாமையினால் அதிலுள்ள இந்திரியவஸ்து தகமை ஆய்விட்டதென்று அர்த்தம். ஆகவே மண் தளர்ச்சி இல்லாமல் கடினப்பட்டுளது.

---

## COMMERCE AND INDUSTRY.

## வர்த்தகமும் கைத்தொழிலும்.

### ஸோப் செய்யுந்தொழில்.

ஸோப் என்பது இங்கிலீஷில் வழங்கும் ஒரு பதம்; அது பலவகைத் தினுசுகளாகப் பரவியிருக்கிறது. ஆங்கில ஸோப்புக்களென்றும், அமெரிக்கா ஸோப்புக்களென்றும் பிரான்சிய ஸோப்புக்களென்றும் பலதேசப்பெயர்களோடு ஸோப்புக்குப் பெயர் வழங்கிக்கொண்டு வருகிறது. தேசத்தில் நாகரிகம் வேரூன்றிவரு மிக்காலத்தில் சாமான்யமாயுள்ள ஜனங்கள்கூட ஸோப்பினை உபயோகிக்க ஆரம்பித்துவிட்டார்கள். தோட்டிமுதல் தனிகன் வரையில் ஸோப்பை உபயோகியாமலிருப்பதில்லை. 'அடப்பம்' எடுத்து 'கஷ்கத்'தில் வைத்துச் செல்லும் நாவிதனும் ஏதேனும ஒரு ஸோப்பை வாங்கித் தன் காரியத்திற்கு உபயோகிப்பது சாதாரணமாயிருக்கிறது. அவ்வன்றைக் கூலிவேலைசெய்து பிழைக்கும் சாமான்ய வேலைக்காரன்கூட மலிவாக விற்கும் கார்பாலிக் ஸோப், இந்த ஸோப், அந்த ஸோப் போன்றவைகளை வாங்கித் தான் நீராடும்போதும் தன் குடும்பத்தவர் நீராடும் போதும் உபயோகிக்கச் செய்வது பெரிதும் வழக்கத்திலிருக்கிறது. இளவயதுள்ள சிறுவர்களும் சிறுமியர்களும் ஸோப்பினைக் கண்டுவிட்டால், குதூகலித்துக் கொக்கரிக்கிறார்கள். அவர்களுக்குண்டாகும் சந்தோஷத்திற்கு அளவேயிராது. ஸோப்பைக் கையிலெடுப்பதும் தண்ணீரண்டை சென்று கையில் தேய்த்து முகங்கழுவிக் கொள்வதும், தேய்த்துக் கொள்ளுங்கால் நுரை நுரையாக வருவதைப்பார்த்து அவர்கள் விசேஷ கோலாகலத்துடன் விளையாடுவதுமாகக் காலந்தள்ளுவதுண்டு. கிராமாந்தரங்களிலுள்ள நதிக்கரைகளிலும் குளக்கரைகளிலும் ஏரிக்கரைகளிலும் இதை மிகவும் சாதாரணமாகக் காணமுடியும். இவ்வளவுதூரம் இளைஞர் மனதிற் பதிந்திருக்கும் ஸோப் எனுமவஸது எதனாலாகிறது, அத்தொழிலுக்கு அவசியமாக வேண்டியதென்ன, அத்தொழிலினால் தேசாபிவிருத்திக்கு ஏதாவது மார்க்கமுண்டா, வியாபாரமும் கைத்தொழிலும் செழிப்பதற்கு அத்தொழில் எவ்வாறு உதவும், ஸோப்பினை ஆசரிப்பது இந்தியர் மட்டுமா அல்லது வெளிதேயத்தவர் சுட்டவா, என்பனவாகிய கேள்விகளெல்லாம் ஒன்றுக்குப்பின் ஒன்றாகக் கிளம்பும். ஒவ்வோர் கேள்விக்கும் பதிலுத்தரம் சொலல நம்மால் இயலாது; என்றாலும் மொத்தமாக அத்தொழிலைத் திருப்திகரமாய் இந்தேசத்திற் செய்யுமுடியுமா வென்பதையும், செய்யும்படியான ஸாதனங்கள் இங்கு உள்ளனவா வென்பதையும், செய்யும்பக்ஷத்தில் வியாபார விருத்திக்கு இடமுண்டா வென்பதையும் பற்றி இப்போது சுருக்கமாகக் கூறுவோம்.



இந்தியாவானது இயற்கைப் பொருள்கள் அடங்கிய பெரியதேசம்; நீர்வளம் நிலவளம் பொருந்திய பெரியநாடு. விளைபொருள்களை வேண்டிய மட்டுந் தரும் விஸ்தாரமான பிரதேசம். இத்தேசத்திலே மற்றெவர் வந்து போட்டிபோட்டு வேலைசெய்தாலும், அப்போட்டிகளுக்கு அடியோடு ஈடுகொடுத்துத் தொழிலைப் பரிமளிக்கச்செய்யும் வன்மைகொண்டது. தொழிலபிவ்ருத்தியிலும் ராஜீய அபிவிருத்தியிலும் முன்னேற்ற மடைந்திருக்கும் ஜப்பான் தேசத்தைப்பாருங்கள். கடந்த ஐம்பது வருஷங்களுக்குள் அது எவ்வளவுதூரம் விருத்தியடைந்திருக்கிற தென்பதைக் கவனியுங்கள். ஜர்மனியும் ஆஸ்திரியாவும் செய்து கொண்டிருந்த சில்லறைச் சரக்குகள் அனைத்தையும் அமெரிகா ஐக்கியநாடுகளும் ஜப்பானும் செய்யத் தலைப்பட்டுவிட்டன. ஒரு பெரிய ஷாப்புக்குள் நுழைந்து அங்கு படிப்படியாக அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கும் சாமான்களை நோக்கும்போது, அவையனைத்தும் விதேசியமானவை யென்றே நன்குபுலப்படும். இதற்கு முந்திய சஞ்சிகைகளில இவ்விஷயத்தைவிஸ்தாரமாக நாம் பேசியிருந்தும இந்த ஸோப் கைத்தொழிலைக் குறிக்குங்கால் அவ்வம்சத்தைக் கூறாதிருக்க முடியவில்லை. அபரிமிதமான இயற்கைச் சாதனங்கள் நமக்குக் கிடைக்கும் போது அவைகளை 'நேருங்கூரு'மான வழிகளில் உபயோகியாதிருப்பது நமது தவறேயல்லாது மற்றெவரதுமல்ல. இயற்கைப் பொருள்களுக்கு வெந்து விடாய்ந்து கிடக்கும் வெளிதேசங்களுட் பல தமது தொழிலபி விருத்தினாலேயே பெயரும் புகழுமெடுத்துப் பிரகாசிக்கின்றன. மார்ஷேல்ஸ் நகரிலுள்ள எண்ணெயிறக்கும் யந்திரசாலை, மாஞ்செஸ்டர் நகரிலிருக்கும் பஞ்சுயந்திரசாலை, ஸ்வீடன் தேசத்திலுள்ள காகிதயந்திரசாலை மற்றும் இவைபோன்ற யந்திரசாலைகளுட்பல வெளிதேசங்களில் இருக்கின்றனவே யல்லாமல் இங்கிருக்கக்காணோம். இவைகளை இன்னும் வியக்தமாகக் காணவேண்டுமானால் இந்தியாவிலிருந்து ஏற்று மதியான சரக்குகளையும் இறக்குமதியான சரக்குகளையும் ஒருவாறு பார்க்குமிடத்து நன்றாகத் தெரியவரும். எதொன்றுக்கும் கவர்ன்மெண்டாரது உதவியையே நாடுகிறோம். அவ்வுதவி வேண்டாமென்று நாம் சொல்ல வரவில்லை. எந்தெந்த சமயத்தில் எவ்வெவ்விதமாகக் கேட்கவேண்டுமோ, அவ்வவ்விதமாகக் கேட்டால் அவ்வுதவி வரச்சிறிதும் தடையிருக்கமாட்டாது. தொழிற் பிரவிர்த்திகளான வண்டிகளைப்பூட்டி நாம் இழுக்கவாரம்பித்தால், அதை அதிகாரிகள் நடத்துவிக்க உதவுவது திண்ணம். எனவே ஒரு நற்காரியத்தை நாம் ஆரம்பித்துப் பிறகு அதிகாரிகளின் உதவியை நாடவேண்டுமென்பது எமது கருத்து. இந்த ஸோப்பு செய்யுந் தொழிலை முதன்முதல் எடுத்துக்கொள்வோம். ஜனங்களுக்கு

ஆரம்பத்தில் அத்தொழில் நன்றாகத் தெரியும்படியான ஞானமிருக்கவேண்டும். தொழிற் கல்வி இருந்தாலன்றி அந்த ஞானம் பெறுவது ஸாத்தியமல்ல. ஆனதுபற்றி தொழிற் கல்விக்கூடங்கள் தேசம் முழுவதிலும் பரப்பப்பட்டிருக்கவேண்டும். தொழிற்கூடங்களில் சேர்ந்து படிக்கும் ஜனங்கள் புரோத்ஸாகமடையும்படி அவர்களாற் செய்யப்படுந் தொழில் வேலைகளுக்குப் போதுமான ஆதரிப்பிருக்கவேண்டும். மூலை முடுக்குகளில் ஆதரிப்பாரற்று உறங்கிக் கிடக்கும் தொழிலாளிகளைத் தட்டியெழுப்பி, முன் கொணர்ந்து முன்பணங்கொடுத்து அவர்களுடைய தொழில்களை சிறக்கும்படியாக்கவேண்டும். அத்தகைய தொழில்களை ஒன்றுகூட்டிப் பொருட்காட்சிகள் வைத்துத் தொலைதூரத்திலிருந்து ஜனங்கள் வந்து பார்த்துப் பயனடைவதற்குரியமுயற்சிகளைச் செய்யவேண்டும். நல்ல வேலைப்பாடுடைய தொழில்களைச் செய்வோர்க்கு ஸன்மானங்கள் செய்யப்படவேண்டும். நற்சாக்ஷிப் பத்திரங்கள் கொடுக்கப்படவேண்டும். இவ்விதமாகச் செய்யும் பக்ஷத்தில் எத்தொழிலும் செழிக்குமென்பதை நாம் சொல்லவேண்டுவது அனாவசியம். இப்போது நடைபெறும் யுத்தம் காரணமாக உலக வியாபார நிலையும் தொழில் நிலையும் அசைக்கப்பட்டிருந்தபோதிலும், ஆங்காங்குள்ளவர்கள் அவரவர்களுடைய வேலைகளைக் கவனிப்பார்களாயின், அவ்வசையின் உணர்ச்சி புலப்படமாட்டாது. யாம் முதன்முதல் பேசவந்த தொழிலான ஸோப்பைக்குறித்து இங்கு இரண்டொரு வார்த்தை சொல்லுவோம். விதேசிய ஸோப்புகள் ஒன்றுக்கு ஒன்பதாக விற்கின்றன; ஏன் அதேவிதமான ஸோப்புகளைச் சுதேசத்திற் செய்யலாகாது? இதற்கு அவசியமாக வேண்டிய சரக்குகளாவன:—செந்நார்ப்புல், சிற்சில பச்சிலைகளின் எண்ணெய், தேங்காயெண்ணெய், கொட்டைமுத்து எண்ணெய், வேர்க்கடலை யெண்ணெய் (கடலைக் கொட்டை யெண்ணய்) கொப்பரை, வேர்க்கடலை முதலியன. இச்சரக்குகள் ஒவ்வொன்றும் இந்தியாவிற் கிடைக்கக்கூடியவை. தென்னாற்காடு ஜில்லாவில் வேர்க்கடலைக்குச் சிறிதும் குறைவில்லை; மலையாளத்திலே தேங்காய் அபரிமிதமாகக் கிடைக்கும். மலைப்பிராந்தியங்களில் பச்சிலைகளுக்குப் பஞ்சமில்லை. அடவிகளிலும் படுகைகளிலும் செந்நார்ப்புல் நிரம்பக் கிடைக்கும்."

(இன்னும் வரும்.)

### ஜப்பானியக் கப்பற் சேகரம்.

கடல் வியாபாரத்தில் ஜப்பான்தேசம் மிக்க ஊக்கங்காட்டிக் கொண்டிருக்கிறது. சென்ற வருஷத்திலே அது 14,0000 டன் நிறை கொண்ட கப்பல்களைப் புதிதாகக் கட்டிக்கொண்டது. ஜப்பானுக்கு வியாபாரத்தினிமித்தம் இப்போது 11,372 கப்பல்களிருக்கின்றன; அவைகளுள் 2185 ஸ்டீமர்கள் 23,33,000 டன் பாரமேற்றிக்கொள்ளக் கூடியவை. ஜப்பானியக் கப்பற் கூடங்களில் இப்போது விசேஷ ஜரூருடன் கப்பல் கட்டும் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. பஸிபிக் மகாஸமுத்திர வியாபாரம் பெரும்பாலும் ஜப்பானிடமே இருப்பதாகக் கூடச் சொல்லலாம்.

# PART IV.

## HINDU LAW.

## ஹிந்துலா.

(93-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆகையால் ஒருவனுடைய தகப்பனாராவது, பாட்டனாராவது தான் பட்ட கடனைத் தீர்க்காமல் இறந்து போயிருந்தால் ஷையார்கள் ஏதும் சொத்து வைக்காமல், ஷை ஒருவனை நிற்கதியாக விட்டு விட்டுப் போயிருந்தபோதிலும் ஹிந்து தர்ம சாஸ்திரங்களின்படி, ஷை ஒருவன் புத்திரன் அல்லது பௌத்திரன் ஷையார் தான் பட்ட கடனைத்தீர்க்கக் கடமைப்பட்டிருக்கிறான். ஏனென்றால் ஷையான் அந்தக்கடன்களைத் தீராத விஷயத்தில் அவனுடைய முன்னோர்கள் நரகமடைந்து விடுகிறார்கள். அவர்களை நரகம் சேரவொட்டாமல் காக்கவேண்டியது அவனுடைய கடமையாகயிருக்கிறது. தகப்பன் பட்ட கடனை பிள்ளை வட்டியுடனும் பாட்டன் பட்ட கடனை பேரன் வட்டியில்லாமலும் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்களென்றும் பிரஹஸ்பதி கூறியிருக்கிறார். வெகு காலத்துக்கு முன் நமது ஆங்கிலேய அரசாக்ஷியிலேயே அவ்விதம் தீர்ப்பும் செய்யப்பட்டிருக்கிறது. (2 பம். ஐ. கோ. ரி 64.)

ஆனால் இப்போதய ஏற்பாடு வேறுவிதமாகயிருக்கிறது. அதாவது தகப்பன், பாட்டன் இவர்களிடமிருந்து ஏதும் சொத்தை அடைந்திருந்தால் மட்டும், அப்படி அடைந்த சொத்து என்ன தொகை பெறுமோ அவ்வளவு தொகைக்குறிய கடன்களை மட்டும் பிள்ளை, பேரன் இவர்கள் தீர்க்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். (2. ம. ஐ. கோ. ரி. 336; 4. ம. ஐ. கோ. ரி. 1; இ. லா. ரி. 4. ம. 45; இ. லா. ரி. 6. பம். 300.)

V. ஒருவன்தன் சொத்துக்களை (Will) உயில் என்னும் மரணசாஸனத்தின் மூலமாக விநியோகம் செய்யும்படியான ஏற்பாடு ஹிந்து தர்ம சாஸ்திரங்களிலிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் ஹிந்து ஒருவன் தன் சொத்துக்களை தன் ஜீவ திசைக்குப் பிறகு இன்னின்னார் அடையவேண்டுமென்ற ஏற்பாட்டைச் செய்யும்படிக்காக 1870-ம் ௵த்திய 21-வது ஆக்ட்டு (Hindu Wills Act.) ஹிந்து உயில் ஆக்ட்டு என்னும் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

VI. எப்பேர்ப்பட்ட பெரிய விஷயமானாலுமே ஸரி அதற்கும் ஹிந்து தர்ம சாஸ்திரங்களின்படி எழுத்து மூலமான தஸ்தாவேஜிகள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டியது அவசியமில்லை. முன் காலங்களில் அப்படி எழுதி வாங்கும் தஸ்தாவேஜுகள் ஓலையில் எழுதப்பட்டும்,

வாங்கும் கடனுக்கு ஈடாக தன் புண்ணிய பாபங்களையே காட்டுவதும் வழக்கமாயிருந்தது. அதாவது வாங்கின கடனை ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் செலுத்தத் தவறினால். "பங்குனி மாதம் வழி நடந்த பாபத்தில்" போவேனாகவும் என்றும், "காராம் பசுவைக் கொன்ற பாபத்தில்" போவேனாகவும் என்றும் இப்படிப் பலவாறாக எழுதுவது வழக்கம்.

ஆனால் இப்பொழுதோவென்றால் எந்த சின்ன விஷயத்திற்கும் தஸ்தாவேஜு யெழுதுவதும் அதை ரிஜிஸ்டர் செய்வதும் வழக்கத்தில் ஏற்பட்டு விட்டது. நூறு ரூபாயும் அதற்கு மேல்பட்டும் கிரையம் பெறக்கூடிய ஸ்தாவர சொத்துக்களை ஒத்தியாவது, கிரயமாவது, தானமாவது செய்யும்போதும், அல்லது வேறு எவ்வித மாகவாவது பராதீனம் செய்யும்போதும், எழுத்துமூலமான தஸ்தா வேஜின் மூலமாகவேயே செய்யவேணுமென்று 1882-ம் ௵த்து இந்தியா கவர்ன்மெண்டு ஆக்ட்டாகிய ட்ரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்ட்டி ஆக்ட் (Transfer of Property Act)ல் சொல்லப்பட்டிருக்கிறது.

கேள்வி:—ஹிந்துலாவின் ஏற்பாடுகளின்படி இந்தியாவிலுள்ள எல்லா ஹிந்துக்களும் அனுஷ்டிக்கிறார்களா அல்லது ஹிந்துக்களாயிருந்தாலும் ஹிந்துலாவின் ஏற்பாடுகளின்படி அனுஷ்டிக்காதவர்களும் இருக்கிறார்களா?

ஜவாப்:—ஹிந்துக்களாக யிருந்தும், ஹிந்து லாவின் ஏற்பாடுகளை விட்டு வேறுவிதமான அனுஷ்டானங்களை உடையவர்களு மிருக்கிறார்கள்.

கேள்வி:—அவர்கள் எந்த ஜாதியார்?

ஜவாப்:—மலையாளத்தில் வசிக்கும் நாயர் ஜாதியார்கள்.

கேள்வி:—அவர்கள் எந்த விஷயத்தில் ஹிந்துலாவின் ஏற்பாடுகளின்படி நடக்கிறதில்லை?

ஜவாப்:—வார்சு பாத்தியம் வார்சு வரிசைக்கிரமம் இந்த விஷயங்களில்!

கேள்வி:—நாயர் ஜாதியார்களின் சட்டத்தைப்பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

ஜவாப்:—உலகத்தில் எந்த தேசத்திலும் தகப்பனுடைய சொத்து அவனுடைய குழந்தைகளுக்கு என்ற ஏற்பாடு வழக்கத்திலிருக்கிறது. ஆனால் மலையாளம் நாயர் ஜாதிகளுக்குள் அவ்விதமில்லை. அநேகமாக உலகத்தில் தகப்பனைப் பற்றிய மக்கள்தாயம் நடந்தேறி வருகிறது. ஆனால் மலையாளம் நாயர் ஜாதிகளுக்குள் தாயைப் பற்றியதாக யிருக்கிறது. பர்த்தாவுக்குப் பிறக்கும் குழந்தைகள் அவனுடைய பெண்சாதியின் வீட்டிலேயே வளர்ந்து அந்த பெண்சாதி பிறந்த குடும்பத்தோடு சேர்ந்தவர்களாய்விடுகிறார்கள். ஆகையால் ஆண் குழந்தையின் தாயுடன் பிறந்தவனான மாமன் சொத்துக்களுக்கு மருமகன் பாத்தியஸ்தன் என்ற மருமக்கள் தாயம் அங்கு வழங்கி வருகிறது.



நாயர்களுடைய குடும்ப சொத்துக்கு "தார்வாடு" என்றும், குடும்பத்தில் பிறக்கும் மூத்தமகனுக்கு 'காரணவன்' என்றும் பெயர். குடும்பத்தில் பிறக்கும் மூத்தவனான காரணவனே குடும்பசொத்தாகிய தார்வாடு யென்பதை அடைந்து பரிபாலனம் செய்வதற்கு யோக்கியனாக யிருக்கிறான். கூடப் பிறந்த மற்ற ஸகோதரர்களுக்கு தார்வாடைப் பிரித்துக் கொடுக்கும் வழக்கம் அங்கே இல்லை. தார்வாடு என்னும் குடும்பசொத்தை காரணவனென்னும் மூத்த குமாரன் அடைந்து அனுபவித்து மற்றவர்கள் ஷை சொத்திலிருந்து ஜீவனாம்சத்தை மட்டும் பெற்றுக்கொள்ள பாத்தியஸ்தர்களாக யிருக்கிறார்கள்.

கேள்வி:—ஹிந்துலா கேசுகள் சம்பந்தமாய் லா ரிப்போர்ட்டுகளைக் குறித்து ஆங்காங்கு சொல்லுகிறார்களே. லா ரிப்போர்ட்டுகளின் வரலாற்றைப் பற்றி கேட்க விரும்புகிறோம்.

ஜவாப்:—லா ரிப்போர்ட்டுகள் ஹிந்து லா கேசுகளிலும் மற்ற சட்டப்படிக்குள்ள கேசுகளிலும் விவஹரிக்கப்படுகின்றனவாகையால் அதன் வரலாறு தெரிந்திருக்கவேண்டியதவசியந்தான்; சொல்லுகிறேன் கேளுங்கள்.

கேள்வி:—இந்தியாவில் இப்பொழுது எத்தனை ஹைக்கோர்ட்டுகள் எந்தந்த விடங்களில் இருக்கின்றன.

ஜவாப்:—இந்தியாவில் முன் நாலு ஹைக்கோர்ட்டுகள் இருந்தன, ஆனால் இப்பொழுது கூட ஒரு ஹைக்கோர்ட்டு சேர்க்கப்பட்டிருக்கிறது. வங்காள ராஜதானிக்கு கல்கத்தாவில் ஒரு ஹைக்கோர்ட்டும் (இப்பொழுது புதிதாய்) பாட்னாவில் ஒரு ஹைக்கோர்ட்டும், வடமேற்கு மாகாணங்களுக்கு அலஹாபாத்தில் ஒரு ஹைக்கோர்ட்டும் பம்பாய் ராஜதானிக்கு பம்பாயில் ஒரு ஹைக்கோர்ட்டும் சென்னப்பட்டணம் ராஜதானிக்கு சென்னப்பட்டணத்தில் ஒரு ஹைக்கோர்ட்டும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

மேலேகண்ட ஒவ்வொரு ஹைக்கோர்ட்டிலும் பைசல்செய்யப்படும் முக்கியமான அப்பீல் கேசுகளில் செய்யப்படும் தீர்மானங்களை சஞ்சிகைகள் மூலமாக "இந்தியன் லா ரிப்போர்ட்ஸ்" என்னும் பெயருடன் வெளியேற்றுகிறார்கள்.

கே.—இந்த லா ரிப்போர்ட்ஸுகளால் என்ன பிரயோசனம்.

ஜ.—சட்டங்களில் சந்தேகாஸ்பதமாயும் ஒரு அர்த்தத்துக்கு மேல்பட்டு அர்த்தம் கொடுக்கக்கூடியதானவுமான வார்த்தைகளை உபயோகித்திருக்கும்பொழுது அவைகளுடையகருத்து இன்னவென்பது முதலிய விசேஷ ஸங்கதிகள் ஹைக்கோர்ட்டு தீர்ப்புகளில் வெளியிடப்படுகின்

றன. ஆகையால் அவைகள் முக்கியமான ஆதாரங்களாக கொண்டாடப்பட்டு வருகின்றன.

கே.—இந்தியா ஹைக்கோர்ட்டுத் தீர்மானங்களை ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டுகளென்றும் (High Court Reports) இந்தியன் லா ரிப்போர்ட்ஸ் (Indian Law Reports) யென்றும் சொல்லுகிறார்களே இவைகளுடைய வித்தியாசமென்ன? இவைகளுடைய சரித்திரம் என்ன? அவைகளை அறிய விரும்புகிறோம்.

ஜ.—பற்பல ஹைக்கோர்ட்டின் ரிப்போர்ட்டுகள் பற்பல பெயருடன் அடியில் கண்டவாறு வெளியாய் வந்தன. பெங்கால் லா ரிப்போர்ட்ஸ்களென்றும் (Bengal Law Reports) கல்கத்தா லா ரிப்போர்ட்டுகளென்றும் (Calcutta Law Reports) வடமேற்கு மாகாணங்கள் ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டுகளென்றும் (North-west Provinces High Court Reports) பம்பாய் ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டுகளென்றும் (Bombay High Court Reports) சென்னப்பட்டணம் ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டுகளென்றும் (Madrrs High Court Reports) பிரதிமாசமும் வெளியிடப்பட்டு வந்தன.

1875-ம் ௵ வரை ஷை ஸஞ்சிகைகள் ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டுகள் என்ற பெயருடன் நடந்தேறிவந்தன. அப்பால் 1876-ம் வருஷத்தில் நமது மாக்ஷிமை தங்கிய கவர்ன்மெண்டார் மேற்படி ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டுகளுக்கு இந்தியன் லா ரிப்போர்ட்டு என்ற ஒரு பொதுவான பெயரைக்கொடுத்து ஒவ்வொரு ஹைக்கோர்ட்டின் தீர்மானத்தையும் ஒவ்வொரு பாகமாக அதுமுதல் அச்சிடப்பட்டு வரும்படிக்கான ஏற்பாட்டை செய்துவிட்டார்கள். அவைகளுக்கு இந்தியன் லா ரிப்போர்ட்டு கல்கத்தா ஸீரீஸ் என்றும், இந்தியன் லா ரிப்போர்ட்டு அலஹபாத் ஸீரீஸ் என்றும், இந்தியன் லா ரிப்போர்ட்டு பம்பாய் ஸீரீஸ் என்றும், இந்தியன் லா ரிப்போர்ட்டு மதராஸ் ஸீரீஸ் என்றும் பெயர் வழங்கிவருகின்றன. ஷை இந்தியன் லா ரிப்போர்ட்டுகளிலும் முந்திய ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டுகளிலிருந்ததுபோலவேயே ஒவ்வொரு ஹைக்கோர்ட்டு தீர்மானங்களையும் பிரதிமாதமும் அச்சிட்டு வெளியேற்றி வருகிறார்கள். ஸீரீஸ் என்றால் தொகுதியென்றர்த்தம். இப்படி வெளியேறிவரும் ரிப்போர்ட்டுகள் சாதாரணமாக ஒவ்வொரு ஹைக்கோர்ட்டு சம்மந்தமாயும் வருஷம் 12-மாதங்களிலும் வெளியிடப்பட்டு ஷை 12-சஞ்சிகைகளையும் ஒன்றாக சேர்த்து தைத்து பயிண்டுசெய்து அவைகள் ஒவ்வொன்றுக்கும் வாலியம் என்று பெயர் வைத்து அதற்கு எண்ணிக்கை நம்பரும் கொடுக்கப்பட்டு வருகின்றது. ஒரு வருஷத்தில் ஒரு ஹைக்கோர்ட்டு சம்பந்தமான அதிகமான கேசுகள் ஷை லா ரிப்போர்ட்டில் வெளி



யிடப்பட்டால் அவைகளில் கைக்கு அடங்குமட்டும் அதாவது சௌகரியமான பைண்டு செய்யக்கூடிய அளவுக்கு எடுத்துக்கொண்டு அதற்கு வாலிய நம்பர் கொடுக்கிறதுமுண்டு.

கே.—கேசுகளுக்கு ஆதாரமாக மற்ற ஹைக்கோர்ட்டு தீர்ப்புகளைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறார்களே அது எப்படி? அதை அறிய விரும்புகிறோம்.

ஜ.—ஒரு கேசில் ஒருவகையான முடிவுக்கு வருவதற்கு ஆதாரமாக ஒரு ஹைக்கோர்ட்டு தீர்ப்பை குறிப்பிட்டுச் சொல்லும்போது ஷை தீர்ப்பை அடியில் கண்டபடி சொல்லப்படும். உதாரணம்:—

10 கல். ஹைகோ. ரி. 47 என்றால் கல்கத்தா ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டு, 10-வது வாலியம், 47 பக்கம் என்றும், 3 பம். ஹைகோ. ரி. 33 என்றால் பம்பாய் ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டு, 3-வது வாலியம், 33-வது பக்கம் என்றும், 5-ம ஹைகோ. ரி. 100 என்றால் மதராஸ் ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்டு '5-வது வாலியம், 100 வது பக்கம், என்றும் அர்த்தம். 9-ம 100 என்று (ஹைகோ. ரி.) என்பதைக் காணாமல் சொல்லப்பட்டிருந்தால் இந்தியன் லா ரிப்போர்ட்டு மதராஸ் ஸீரீஸ், 9-வது வாலியம், 100-வது பக்கம் என்றும், 8-அல. 150-என்றால் இந்தியன் லா ரிப்போர்ட்டு அலஹபாத் ஸீரீஸ் 8-வது வாலியம் 150-வது பக்கம் என்றும், 25-கல். 350 என்றால் இ. லா. ரி. கல்கத்தா ஸீரீஸ் 25-வது வாலியம் 350-வது பக்கம் என்றும் அர்த்தம்.

இது நீங்கலாக சர்க்காரிலிருந்து பிரசுரம் செய்யப்படும் மேல்கண்ட சட்ட சம்பந்தமான ரிப்போர்ட்டுகள் நீங்கலாக மற்றவர்களாலும் மதராஸ் லா ஜர்னல் என்றும், மதராஸ் லா டைம்ஸ் என்றும், லா வீக்லி என்றும், பற்பல பெயருள்ள சட்ட சஞ்சிகைகள் இந்த ராஜதானியிலும் மற்ற ராஜதானிகளிலும் வெளியேற்றப்படுகின்றன.

கே.—இது நீங்கலாக இங்கிலாந்திலும் சில லா ரிப்போர்ட்டுகள் வெளியேற்றப்படுகின்றனவே அவைகளின் சரித்திரமென்ன?

ஜ.—மேல்கண்ட விதமாகவே இந்தியாவிலிருந்து சீமையில் ப்ரிவிகௌன்ஸில் என்னும் நியாய ஸ்தலத்துக்கு கொண்டுபோகப்பட்ட அப்பீல் கேசுகளின் தீர்மானங்களை 1875-ம் ௵ வரை மூர் என்னும் துரை அச்சிட்டுப் பிரசுரம் செய்துவந்தார். அதற்கு மூர்ஸ் இந்தியன் அப்பீல்ஸ் என்று பெயர் வழங்கிவருகிறது. (அதாவது இந்தியாவிலிருந்து வந்த அப்பீல்களின் தீர்மானங்கள் மூர் என்பவரால் வெளியிடப்பட்டதென்று அர்த்தம்.).

1876-ம் ௵ முதல் ஷை ரிப்போர்ட்டுக்கு இந்தியன் அப்பீல் என்று மாத்திரம் பெயர்வழங்கி வருகிறது. அவைகளுக்கும் இந்தியன்

லா ரிப்போர்ட்டுகளுக்கு எவ்விதம் வால்யூம், நம்பர் போடப்பட்டு வருகிறதோ அவ்விதமே வாலியூம் நம்பர் கொடுக்கப்பட்டு வருகிறது.

உதாரணம்:—6 மூ. இ. அ. 375 என்றால், மூர்ஸ் இந்தியன் அப்பீல், 6-வது வாலியூம், 375-வது பக்கம் என்று அர்த்தம்.

5. இ. அ. 498 என்றால், இந்தியன் அப்பீல் 5-வது வாலியூம் 498-வது பக்கம் என்று அர்த்தம். முன் புரொபெஸர் அவர்கள் விவாஹ விஷயமாக ஏதோ கொஞ்சம் பிரஸங்கம் செய்திருப்பதாக, காலேஜ் ரிக்கார்டுகளினால் தெரியவருகிறது. அவர்கள் நிறுத்திய இடத்திலிருந்து சொல்வோமா?

கே.—ஸ்திரீ புருஷர்கள் விவாஹம் செய்துகொள்ளுவதற்கு சாஸ்திரோக்தமான நியாயம் ஏதாவதுண்டா?

ஜ.—ஸாதாரணமாக பிரஜாவிருத்தியின் பொருட்டும், குல விருத்தின் பொருட்டும் அவரவர்கள் ஜாதி மதங்களுக் கேற்பட்ட வைதீக கர்மங்களைச் செய்வதற்குரிய யோக்கியதையை யடையும்பொருட்டும், ஆண் பெண் ஒவ்வொருவரும் விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்று ஹிந்து தர்ம சாஸ்திரங்களால் ஏற்படுகிறது.

கே.—மேல் கண்ட சாஸ்திர சம்பந்தமான சங்கதிகளைத்தவிர ஸ்திரீ, புருஷர்கள் விவாகம் செய்துகொள்ளுவதற்குரிய நியாயங்களேதேனும் உண்டா?

ஜவாப்:—மானிடர்களுடைய பொது நன்மையை உத்தேசித்தும் ஐக்கிய பத்தியம், ஸ்நேகம, தொழில்களைச் செய்யும முயற்சி முதலிய செய்கைகள் செய்வதற்காகவும் ஸ்திரீ புருஷர் இருவரும் சாதாரணமான ஐக்கிய பத்தியத்துடன்மாத்திரம் இருப்பது போதாதென்று விவாகம் என்று சொலலப்பட்ட கிரியையை நடத்திக்கொண்டு புருஷன் ஸ்திரீ என்ற விசேஷ சம்பந்தத்துடன் உஜ்ஜீவிக்கவேண்டியது மிகவும் அவசியம். மேல் சொல்லியபடி விவாகம என்பதைச் செய்துகொண்டு ஒருவர்க்கொருவர் சாஸ்திரப்படிக்கும் ஜாதி யாசாரப்படிக்கும் ஏற்பட்டுள்ள கோட்பாடுகளுக்கு உட்படுத்திக் கொண்டிராவிட்டால் அதினால் அனேக கெடுதல்களும் விபரீதகளும் நேர்ந்து பொது ஜனங்களுடைய அமரிக்கையும் நன்னடக்கையும், க்ஷேமலாபங்களும் கெட்டு அராஜரீகமான தேசம்போல் உலகம் துயரில் அழுந்தியிருக்கும். இவ்வுலகத்திலுள்ள பலதர்ம ஆச்ரமங்களுக்குள் இக்கலியுகத்தில் கிருகஸ்த தர்ம ஆசரமமே மிக்க சிறந்ததென்று எல்லாப் பெரியோர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். கிருகஸ்த தர்ம ஆச்ரமமென்பது ஸ்திரீ புருஷர்கள் விவாகமென்றும் ஸம்ஸ்காரத்தினால ஒருவரை யொருவர் கட்டுப்படுத்திக்கொண்டு இல்லறங்களுக்குரிய ஸகல காரியாதிகளையும் நடத்திக்கொண்டும் குடும்ப விருத்தி செய்துகொண்டும் இருப்பதுதான். ஆனது பற்றியே கிரகஸ்தாசரமத்தை பின்பற்றியிருக்கும் ஸ்திரீ புருடர்களுக்கு லபிக்கும் நன்மைகளும் சுகங்களும் அளவிறந்ததாய் இருப்பதுடன் ஷை ஆசரமமே கௌரவ முள்ளதாகவும் யாவராலும் மதிக்கப்படுகிறது.

(இன்னும் வரும்.)

# PART V.

## CO-OPERATION IN AGRICULTURE.

BY THE HON'BLE DIWAN BAHADUR L. D. SWAMIKANNU PILLAI, M.A., B.L., LL.B.,
*Registrar of Co-operative Societies.*

## விவசாயத்திற் கூட்டுறவு.

(94-ம் பக்கத் தொடர்ச்சி.)

அனேக விடங்களில் கூட்டுறவுமிருந்திருக்குமாயின் மேற்சொன்ன பிரகாரம் கலப்படத்திற்கு இடமிராதல்லவா? அவரவர் சௌக்கியத்தையும், அவரவருடைய கௌரவத்தையும், அவரவர் லாபத்தையும் கோரி வேலை செய்வது மானிடர்க்கு இயற்கையாதலால் கலப்படத்திற்கு இடங்கொடாமல் கூட்டுறவுடன் உழைப்பதையே நாடக்கூடும். ஆனால் இவ்விஷயங்களுக்காகக்கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபகமானதாகத் தெரியவில்லை. இவையனைத்தையும் உள்ளாராய்ந்து பரிசீலனை செய்யும்போது நூதன துறையொன்று மனதில் தட்டுப்படுகின்றது. வெளிப்புறத்தாரும், ஸர்க்காரும் உதவிசெய்வதாகக்குறித்திருக்கும் இச்சமயத்தில் புதிதாயிருக்கும் ஒரு மார்க்கத்தைப் பின்பற்றி வேலை செய்வது விசேஷ பலனைத்தருமென்றே அறிவாளிகள் சொல்லுவார்கள். அம்மார்க்கந்தான் விவசாயத்திற் கூட்டுறவென்பது. அதற்காகப் பலபேர் முன்வந்தால் அது ஈடேறுமேயல்லாது, அதுவாகத் தலை துளிர்க்கட்டுமென்று காத்திருப்பது சுத்த மதியீனமாகும். அப்படியிருக்கும் நிலைமையில் விவசாயத்திற் கூட்டுறவென்பது எந்தவிதத்தில் ஜனங்களுக்கு அனுகூலத்தை விளைவிக்குமென்று கவனிப்போம். இக்கேள்வியை ஐம்பது வருஷகாலத்திற்குமுன் கேட்டிருந்திருப்போமாயின், நமக்கு என்னபதில் கிடைத்திருக்கக்கூடுமென்றால் 'ஓஹோ புதுத்தோற்றங்களோடு உற்பவித்த எண்ணங்களை அப்புறப்படுத்தித் தனியே விட்டொழியுங்கள்.' இக்கிழக்கு நாடுகளைத் தனியாக விடவேண்டியதுதான். நூற்றாண்டிற்கு நூற்றாண்டு செழிப்பு ஏற்படுவதாக எமக்குப் புலப்படக்காணோம். காலானுஸாரத்திலேயே செழிப்புக்குச் சாக்ஷியமேதும் ஏற்படாதிருக்கையில், அக்காலத்தில் முன்னேற்றம் எவ்வளவுதூரம் அடைந்திருக்கிறோமென்றும் சொல்லமுடியாது. சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்? அதுபோல காலத்தின் அருமையை நன்றாயறிந்தபிறகே அதினுண்டாகும் முன்னேற்றத்தைக் குறித்து நாம் யோசிக்கவேண்டும். காலம் கவனிக்கப்படாதிருக்கையில் முன்னேற்றத்தைக் குறித்துப் பேசுவதிற் பலனில்லை. கீழ்த்திசையாரும், மேற்றிசையாரும் முன்னேற்றமடையவேண்டுமென்பதே நமது மனமார்ந்த உவப்பாகும். இவ்விந்தியா சேந்தி முன்னைக்கிப்போது செழியாதிருக்கவில்லை, கூட்டுறவு முயற்சியினால் இந்தி

யாவில் போதுமான பலனுண்டென்பதற்குப் பற்பல சாக்ஷியங்களுண்டு. கூட்டுறவை 20-வருஷங்களுக்குமுன் பரிகாசஞ்செய்துகொண்டிருந்தவர்கள் இப்போது கூட்டுறவு விஷயத்தில் கண்ணுங்கருத்துமாயிருந்து வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு மிஞ்சின கூட்டுறவு நிபுணர்களில்லையென்ற பெயருமடைந்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களில் ஒருவரைக்குறித்து இம்பீரியல் கமிடியாரது ரிப்போர்ட்டிலும் சிலாக்கியமாகவே கூறப்பட்டிருப்பதையுங் காண்க.

விவசாயத்திற் கூட்டுறவோடிருந்து வேலை செய்வதனால் அத்தொழில் நல்ல பலனையும் பயனையும் அடைகின்றது. நாமெப்படி நாணயத்தைக் காப்பாற்றிக்கொள்ளுகிறோமோ அப்படியே கூட்டுறவின் நன்முயற்சியாலே தென்னிந்திய விவசாயத்தையும் பாதுகாத்துக்கொள்ளுவது ஒரு பிரமாதமல்ல. விவசாய விஷயத்தில் கூட்டுறவினை விருத்திசெய்வதற்கு மிகவும் உபயோகமான வழியொன்றுண்டு. தென்னிந்தியா முழுவதிலும் பரஸ்பரோபகாரக் கூட்டுறவுச் சங்கங்கள் பரவியிருக்கவேண்டுமென்று நாம்விரும்புவது நிறைவேறவேண்டுமாயின், கூட்டுறவுச் சங்கங்களைக் குறித்து ஜனங்கள் அடிக்கடி நினைத்துக்கொள்ளும்படியான மாதிரியாக நாம் செய்துதீரவேண்டும். கூட்டுறவினாலும் கூட்டுறவுச் சங்கங்களினாலும் ஏற்படுகின்ற பலன்களை ஜனங்கள் நன்றாயறிந்து கொள்ளும்படியான அம்சங்களை அப்போதைக்கப்போது நாம் போதித்துவரவேண்டும். கூட்டுறவுமுயற்சியின் பலனுக்கொருக்கத்தகுந்த மாதிரியாய், அதாவது குறைந்த வட்டிவிகிதத்திற்குக்கடன் கிடைத்து வருகிறது. கூட்டுறவு முயற்சியின் பலனைக் கடன் கொடுக்க இசைந்திருக்கும் மதிராஸ் ஸெண்ட்ரல் அர்பன் பாங்க் எவ்வளவு 'சலீஸாக'ப் பணம் கடன் கொடுத்து வாங்குகிறது பாருங்கள். கூட்டுறவுச் சங்கங்களின் முதல் ரெஜிஸ்டிராராயிருந்தவர் விசேஷ மதிப்புலமை வாய்ந்தவரென்றே சொல்லவேண்டும். மற்றும் கூட்டுறவுச் சங்கமெம்பர்களுக்குக் கடன் கொடுத்தால் அத்தொகைக்கு நூற்றுக்கு $9\frac{3}{8}$-க்குமேல் வட்டிசார்ஜு செய்வதில்லையென்று நிர்ணயித்திருப்பதும் பலகாரியங்களுக்கு அனுகூலமாயிருக்கிறது. 10 வருஷங்களுக்குமுன் அவ்விதி ஏற்படாதிருந்திருக்குமேயானால், இப்போது நாம் சாதாரணமாக நூற்றுக்கு 12-விதம் வட்டிவாங்கிக் கடன் கொடுத்தே வருவோம். மதிராஸ் ஸெண்ட்ரல் பாங்க் ஆரம்பமானதும் கூட்டுறவுச் சங்கமெம்பர்களாயினோர்க்குச் சொற்ப வட்டியிற் கடன் கிடைக்கலானதும் ஒன்றுக்கொன்று சொல்லிவைத்ததுபோல் அமைந்துவிட்டது. விவசாயத்திற்காகவேண்டிக் கடன் வாங்கும் விஷயத்தில் கூட்டுறவு முயற்சியினால் உதவியுண்டாவதோடுகூட கிருஷிகர்களும் வியவகாரதோரணையை யனுஸரித்துக் கடன் கொடுத்துக் கடன் வாங்குவதில் தம்மாலான ஒத்துழைப்பையுங் காட்டவேண்டும். எவ்விதமெனில் முதலாவது கிருஷிகர் தாம் வாங்கியிருக்கும் கடனைத் தாமதித்துச் செலுத்தாது தவணைப்பிரகாரம் திருப்பிச் செலுத்தவேண்டும். குறிப்பிட்ட தேதியிற் கடனைச் செலுத்துவதில் எத்தனையோ அனுகூலங்கள் உண்டு. கடன் வாங்குவோர்க்கும் தொல்லைதீர்ந்து கடன் பளுவு விடுபட்டதுபோலாகும். கடன் கொடுத்தவனும், தன்னிடம் வாங்கிய கடன்காரனை பணங்கொடுக்க வகையற்றிருக்கும் வறிஞனென்று மதியாதிருப்பன்.

(இன்னும் வரும்.)

# PART VI.

## EDUCATION.

BY THE HEADMASTER OF A HIGH SCHOOL.

## கல்வி.

(95-ம் பக்கத் தொடர்ச்சி.)

"கல்வி" யென்பது யெழுத்துகள் மூலமான எந்த பாஷையையும் கற்றுக்கொள்வதுதான் யென்பதல்ல. கல்வி யென்பது அறிவென்று அர்த்தமாகும். மேற்படி அறிவானது எந்தபாஷையின் அக்ஷராப்பியாசத்தையும் செய்துகொள்ளாமலேயே ஏற்படவுங்கூடும். இதற்கு உதாரணமாக அடியில்கண்ட விஷயங்களை எடுத்துக்கூறுவோம்: உலகத்தில் எந்த பாஷையினுடையவும் அக்ஷரஞானம் இல்லாமலேயே அத்புதமான தச்சு வேலைகள், கொல்வேலைகள், சிற்பிசாஸ்திர வேலைகள், தங்க, வெள்ளி முதலிய உலோக வேலைகளை செய்யும் தொழிலாளிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய சந்ததியார்களும் வம்சபரம்பரையாக அக்ஷரக்கியானம் இன்றியே மேற்படி கைத்தொழில்களைப் பின்பற்றியும் தங்களுடைய யுக்தி, புத்திசாதுரியங்களினால் மேற்படி தொழில்களை அபிவிருத்தி செய்துகொண்டு வருவதை நாம் தினசரி பார்த்துவருகிறோம். இதேவிதமாக சங்கீத, சாகித்திய, நடன, வீணை, நாதசுர முதலிய பற்பலவாத்திய சாஸ்திரபயிற்சிகளையும் அக்ஷரஞானம் இன்றியே பயின்று புழங்கிவருவதைப் பார்த்திருக்கிறோம். இவைகளுக்கெல்லாம் "பொன்மலர் நாற்றமுடைத்து" என்றவாறு சொர்ண புஷ்பத்துக்கு வாசனையும் ஏற்பட்டவாறு எந்த பாஷையிலும் அக்ஷரஞானம் ஏற்பட்டிருக்கும் விஷயத்தில் அந்தந்த விஷயத்துக்குரிய சாஸ்திர புஸ்தகங்களையே நேரில் படித்து அறிவை அபிவிருத்தி செய்துகொள்வதற்கு மிகவும் ஸாதகமாயிருக்கும். இது காரணம்பற்றியே "புததிவான் பலவான்" ஆவான் என்னும் "கற்றோர்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு" என்றும், சொல்லப்பட்டிருக்கிறது. கல்வியின் பெருமையை ஆயிரம் நாவு படைத்த ஆதி சேஷனாலும் சொல்லிமுடியாத விஷயமாயிருக்கிறது. ஆயினும், கல்வியின் பெருமையைப்பற்றிக் கொஞ்சம் சொல்லத் துணிந்தனம். செல்வமென்பது பூஸ்த்திதி ஸொரூபமாகவும், ஸ்வர்ணரஜித (தங்கம், வெள்ளி) முதலிய நாணயங்கள் சொரூபமாயும், தானிய, ஆபரண, முதலிய பற்பல சொரூபங்களாகவும், இருக்கக்கூடும். மேல்கண்ட பற்பல சொரூபமான செல்வங்கள் யாவற்றையும் பற்பல காரணங்களால் யிழந்துவிடக்கூடும். ஆனால் எந்தக் காரணத்தினாலும் இழந்துவிடக்கூடாதவும், அபகரித்துக்கொள்ளக்கூடாதவுமான ஒருவகைச் செல்வம் உளது. அதுதான் கல்விச் செல்வம். இதுகாரணம்பற்றியே அடியில்கண்ட கொள்கை சாஸ்திரங்களினால் அங்கீகரிக்கப்பட்டுளது. அது பின்வருமாறுளது :—

கல்வியென்பது யெவ்வளவு குரூபியான ஓர் மனிதனையும் அழகுள்ளவனாகச் செய்யும். கல்வியென்பது யெவ்வகைத் திருடராலும் அபகரித்துக்கொள்ளக்கூடாதவும், அவசியம் நேரிடும்பொழுது முன்னின்று வேண்டுவனவற்றையெல்லாம் அளித்து காப்பாற்றக்கூடிய மறைபொருளாகிறது. யாதொரு பந்துக்களாவது ஸிநேகிதர்களாவது இல்லாத பரஸ்தலங்களுக்குப் போகும்படி நேரிடுங்கால் அத்தியந்த ஆப்தபந்து ஸிநேகிதர்களாக கல்வி முன்னின்று உதவுகின்றது. ராஜஸதஸுகளில் மிக்க சிறப்பையும், மேன்மையையும் தந்து வேண்டியமட்டில் திரவியத்தையும் கொடுக்கின்றது.

இது சம்பந்தமாக அடியில்கண்ட சிறிய சம்பவத்தைச் சொல்லப்படுகிறது. விஷ்ணு, சர்மாவென்னும் வேதியனுக்கு சுசீலனென்றும், சந்திரகாந்தனென்றும் இரண்டு புதல்வர்கள். இவர்களில் சுசீலனென்னும் மூத்த புதல்வனிடம் விஷ்ணுசர்மாவுக்கு ஏற்பட்டிருந்த வாஞ்சைக்கு அளவில்லை. அவனுடைய இளையகுமாரனை சந்திரகாந்தனிடமும் அன்பில் குறைவின்றியிருந்ததாக உலகத்தவர் மதிக்கும்படி வெளிப்படையாகத் தெரிவிக்குமாறு, தன்னுடைய ஸ்தாவரஜங்கம சொத்துக்களையும், ஆபரணவாகனாதி யாவற்றையும் கொடுத்து ராஜகுமாரனென்று அவனை யாவரும் மதிக்கும்படி வளர்த்துவந்தான். மூத்தவனை சுசீலனிடத்தில் வைத்திருந்த அதிப்ரீதிக்கு இசையுமாறு சாசுவத நிதியாகிய கல்விச் செல்வத்தையளித்துவிட்டான். சுசீலனும் "வாழ்வுக்குத் தகுந்தமதி" யென்னும் முதுமொழிக்கும் மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்டுஞ்சார், யெவ்வவர் தீமையையும் மேற்கொள்ளார். செவ்விய அருமையும் பாரார், அவமதிப்பும் கொள்ளார், கருமமே கண்ணாயினார் என்பதற்கும் இணங்க தனது சகோதரன் சந்திரகாந்தன் இளமைப்பருவத்தில் அடையும் போகபோக்கியாதி சுகங்களைப்பார்த்துக் கொஞ்சமும் பிரமிக்காது தாம் கல்விகற்பதிலேயே நோக்கமாயிருந்து சகல கலாவல்லபனாய்விட்டான்.

சிலவருஷங்களுக்குப்பின் முதுமைப் பருவமடைந்த விஷ்ணுசர்மா மரணமடையவே "கேடுவரும் பின்னே, மதிகெட்டுவரும் முன்னே" என்பதற்கு இனங்க சந்திரகாந்தன் தனது சகல ஐவேஜுகளையும் இழப்பதற்கு எளிதில் வழிகாட்டக்கூடிய ஸிநேகிதர்களைத்தேடி அவர்களுடன் தன் மனம்போனபடிக்கெல்லாம் சொல்லி சில வருஷங்களுக்குள் வறுமையடைந்துவிட்டான். சுசீலனோவென்றால் ராஜஸதஸுகளையடைந்து தன் வித்வமகிமையால் சீரும், சிறப்புமடைந்து தனவந்தனாகிவிட்டான். இளையவனை சந்திரகாந்தனுடைய பரிதாப நிலைமையைக் கேழ்விபட்ட சுசீலனானவன் தனனுடைய தம்பியையழைத்து தன்னுடைய ஸம்ரக்ஷணையில் வைத்துக்கொண்டு யென்றும் ஆதரித்துவந்தான்.

மேல்கண்ட சரித்திரத்தால் செல்வப்பொருளைப் பார்க்கிலும் கல்விப்பொருளே எவ்வகையிலும் மேற்பட்டதென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றதல்லவா.

# PART VII.

## NEWS AND NOTES.

## ஸமாசாரக் குறிப்புகள்.

### WAR NOTES.

#### AN IMPOSTER.

#### ஆள் மாருட்டமாடிய அயோக்கியன்.

போர்ட்ஸெட் துறைமுகத்திலே துருப்புகளுக்காகவேண்டி பற்பல சரக்குகள் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன; சென்ற சில தினங்களுக்குள் இருள் கவ்வுண்டிருந்த ஒரிரவில் 179 பவுன் மதிப்புள்ள சரக்குகள் காணாமற் போய்விட்டன. கிபாலோஸ் என்னுமிடத்திலே 1605 பவுன் மதிப்புள்ள சரக்குகள் இருந்தவிடந் தெரியாது மறைந்துபோயின. இஸ்மெய்லியாவிலே 1103 பவுன் பெறுமான பண்டங்கள் தொலைந்துபோயின. வின்செஸ்டருக்கு ராணுவ ஆடைகள் அனுப்பப்பட்டபோது, அங்கு போர்வீரன் உடைதரித்து வந்திருந்த ஒருவன் "லான்ஸ் கார்ப்போரெல் பார்னெஸ்" என்று கையொப்பம் போட்டு 207 பவுன்கொண்ட அவ்வாடைகளைக்கொண்டேபோய் விட்டான். சரக்கும் போய்விட்டது, 'லான்ஸ்கார்ப்போரல் பார்னெஸு'ம் மறைந்து விட்டான்! காரணமென்ன? ஆள்மாருட்டமே.

---

#### ABOUT STEEL i LATES.

#### எஃகுத் தகடுகளைப்பற்றியதோர் அறிக்கை.

ஸிம்லாவிலுள்ள யுத்ததளவாட இலாகாதாருக்கு எஃகுத் தகடுகளைக் குறித்த எச்செய்தியும் அவிக்கப்படவேண்டுமென்று இப்போது ஓரறிக்கை விடப்பட்டிருக்கிறது. அதில் எஃகுத்தகடுகளைச் செய்கிறவர்கள், அவர்களிடமிருந்து வாங்குவோர், வாங்கிவிற்போர், வெளியிலனுப்புவோர், கிடங்குகளில் தகடுகளைச் சேகரஞ்செய்து வைப்போர், கப்பலிலேற்றுவோர் முதலினோர் நாளது ஜூன்மாதம் 10-ந்தேதிக்குள் தம் கையிருப்பிலுள்ள தகடுகளையும் வெளிதேசங்களிலிருந்து வரக்கூடிய தேதிகளையும் தெரிவித்தார்களாம்.



---

#### EFFECTIVE at 25 MILES.

#### 25 மைல் வரை தீக்ஷண்ய முண்டு.

சாதாரண பீரங்கிகளை யுபயோகித்தால் கால், அரை, ஒன்று, அல்லது 2 மைல் தூரந்தான் குண்டு செல்லும்; யுத்தத்திற்கர்க வேண்டி நான்கு, ஐந்து மைல் தூரம் செல்லும்படியான பெரிய பீரங்கிகளும் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன; ஜர்மானியர் யுத்தவாரம்பத்திலிருந்து 15 மைல் தூரம் குண்டுகளை வீசும்படியான ராக்ஷஸ பிரங்கிகளைக் குருப் தொழிற் சாலையில் ஸ்பெஷலாகச் செய்யச்சொன்னார்களென்றும் கேள்விப்பட்டோம். இப்படிக் கெல்லம் பகைவர் செய்வதற்கு மட்டும் சமய சந்தர்ப்பங்கள் சரியாயிருக்கின்றனவா, நமக்கில்லையாவென்றாலோ, அதற்கு நியூயார்க் நகரிலிருந்து வருந் தந்தியே போதிய சான்றாகும். 22 அங்குலக் குறுக்களவுள்ள பாரி பீரங்கிகளைப் பிரிடிஷார் உபயோகித்துக் கொண்டிருக்கிறார்களென்றும், அப் பீரங்கிகளிலிருந்து புறப்படுங் குண்டுகள் 25 மைல் தூரம் தீக்ஷண்யங் கொடுப்பதாயுமுள்ளனவென்று தெரிகிறது.

---

#### BELGIAN RELIEF SUPPLIES.

#### பெல்ஜிய யுத்தக் கஷ்ட நிவாரண ஸப்ளைகள்.

யுததம் காரணமாக வீட்டை விட்டும் வாசலைவிட்டும் மற்றும் தமக்கிருக்கக்கூடிய ஸ்தாவர ஜங்கம ஸொத்துக்களை விட்டும் குஞ்சு குழந்தைகள் ஸகிதமாக ஜன்ம தேச

த்தை விட்டுப் புறப்பட்டுப் போயிருக்கும் பெல்ஜியக் குடும்பங்கள் பல பிரான்சுதேசம் போய்ச் சேர்ந்திருக்கின்றன; குடும்பத்தலைவன் ரணரங்கத்திற்குப் போயிருக்க, அக்குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்கள் சம்ரக்ஷணைக்கு வகையில்லாது தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பட்ட துரதிர்ஷ்டசாலிகளைக் காக்கும் பொறுப்பு இதுபரியந்தம் நேச வல்லரசுகளை, பிரதமமாக இங்கிலாண்டையும் பிரான்சையும் சேர்ந்திருந்தது. இப்போதோ அமெரிகா யுத்தத்தில் தலையிட நேர்ந்திருக்கிறது. மேலும் அமெரிகா தனம் பெருத்த தேசம். நன்கொடை யளிக்கும் நாகரீக சிரோமணிகள் பலர் அங்கிருக்கிறார்கள். ஆகையால் பெல்ஜியக் கஷ்ட நிவாரணார்த்தம் அமெரிகா உதவி செய்வது பொருந்து மென்று நேசவல்லரசுகள் கருதியிருந்ததற் கிணங்க, அக்கஷ்ட நிவாரணார்த்தம் எத்தனை செலவாகுமோ அச்செலவுக் குரிய பணத்தைத் தான் (அமெரிகா) தருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறது. என்னே அமெரிகாவின் கருணை!

---

A BIG SUBMARINE ORDER.

## ஒரு பெரிய ஜலக்கீழ்க் கப்பலுத்தரவு.

அமெரிக ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த கன்னெக்டிகட் என்னும் பிராந்தியத்திலிருக்கும் ப்ரிட்ஜ் போர்ட் என்னும் பட்டணத்தில் லேக்டார்பீடோ போட் கம்பெனி என்னும் வியாபாரகம்பெனி யொன்றுண்டு. அக்கம்பெனியார் நாளது வருஷம் ஸெப்டம்பர் மாதத்திற்குள்ளாக அமெரிகா ஐக்கிய நாடுகளின் கவர்ன்மெண்டாருக்காக 47 ஜலக் கீழ்க் கப்பல்களை வேலை செய்வதற்குத் தயாரா யிருக்கும்படி செய்து கொடுப்பதாகத் தீர்மானித் திருக்கிறார்கள். எஞ்சினீரிங் விஷயத்தில் ஜர்மானியர் தான் தீவிரமான புத்தி யுடையவர்க ளென்று மதித்திருந்தோம். ஆனால் இப்பிர கிருத யுத்தத்தில் ஜர்மானியரைக் காட்டிலும் அமெரிகர் மகா தீக்ஷண்யமும் யூகமும் வாய்ந்த தொழிற் புலமை பெற்றவர் என்பது நன்றாக விளங்கிவிட்டது. ஒரே கம்பெனியார் 6-மாத காலத்திற்குள் 47 ஸப்மெரின்களைச் செய்வதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இந்த லேக்டார்பீடோ கம்பெனியைப் போல எத்தனையோ கம்பெனிகள் அமெரிகாவில் இருக்கின்றன; கோடிகோடியாகப் புரட்டக்கூடிய தனவந்தர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்; தொழிலாளிகளுக்கும் பஞ்சமில்லை. இங்ஙனம் பொருள் பணம், புத்தி ஆகிய இம்மூன்றும் ஒன்று சேர்ந்திருக்குமே யானால் செய்யும் காரியம் செவ்வனே பிரகாசிப்பதற்குத் தடையு முண்டோ?

---

8000 LOCOMOTIVES.

## கெட்டுப்போன 8000 எஞ்சின்கள்.

எஸ்ஸென் என்னுமிடம் ஜர்மனி தேசத்திலுள்ளது. இவ்விடத்தில்தான் விசேஷ பெருமை பெற்றிருக்கும் க்ரூப் தொழிற்சாலை யிருப்பது. இரும்புச் சாமான்களும் இதர வகையான யந்திரக் கருவிகளும் இத் தொழிற் சாலையிற் செய்யப் படுவதோடு பெரும்பீரங்கி, சட்டிபீரங்கி, யந்திரபீரங்கி முதலியனவும் துப்பாக்கி, ஈட்டி, கத்தி, பாலா முதலான போர்க்கருவிகளும் அபரிமிதமாக இதிற் செய்யப்பட்டு வருகின்றன. இங்கு தற்போது யுத்தத்திற் கெட்டுப் போன 8000 எஞ்சின் வண்டிகள் ரிபேருக்காக விழுந்துகிடக்கின்றன; வருஷ கணக்காயுழைக்கக் கூடிய இரும்பினாலாய எஞ்சின் வண்டிகள் கெட்டுக் கிடப்பது ஒன்றல்ல, இரண்டல்ல, எண்ணாயிரம் என்றால் எவ்வளவு தூரம் யுத்தம் கடுமையிருக்கும் என்பதை நம் நண்பர்களே கவனிக்கட்டும்!

---

BELGIAM'S SUFFERINGS.

## பெல்ஜீயத்தின் தொல்லைகள்.

இப்போது நடை பெறும் உக்ரமான ஐரோபிய யுத்தத்தில் பெல்ஜியம் தேச



ஜனங்களுக்குண்டானசங்கடங்கள் கொஞ்சமல்ல. வீடு வாசல்களையும் உறவின் முறையோர்களையும் மற்றும் தாம் பத்திரப் படுத்தியிருக்கக் கூடிய பணம், பண்டம் முதலியவைகளையும் பறிகொடுத்து மானிட வுருக்கொண்டு மிருகத்தன்மை மேலீட்டால் கட்டுண்டிருக்கும் ஜர்மானியப் பிசாசுகளால் அல்லற்படுஞ் செய்திகளைக் கேட்க எவர் மனமும் பீதியுறும். நடுவு நிலைமையை வகித் திருப்போர் பலர் பெல்ஜிய யுத்தக் கஷ்ட நிவாரணார்த்தம் என்னென்னவோ உதவி செய்து வருகிறார்கள். அவ் விதஞ் செய்வோருள் அமெரிகரும் ஒருவர். இவ்வமெரிக விசாரணைக்சங்கத்துச் சேர்மனான மிஸ்டர் H. C. ஹோவர் என்னுங் கனவான் சமீபத்தில் யுத்தம் காரணமாகத்தவித்துருகும் பெல்ஜியர் களுக்காக வேண்டிய அவசியமான காரியங்களைச் செய்யும்படியான தீர்மானத்துடன் பிரான்சு, இடாலி, இங்கிலாண்டு முதலான தேசங்களிற் சுற்றுப் பிரயாணஞ் சென்று இப்போது அமெரிகாவிலுள்ள நியூயார்க் நகரம்போய்ச் சேர்ந்திருப்பதாகச் சமாச்சாரமெட்டுகிறது. அவர் கூறுவதிலிருந்து பெல்ஜியம் நகரத்திலே சாவு முன்னிலும் மும்மடங்கு அதிகரித்து விட்டதென்றும், கடந்த மார்ச்சு, ஏப்ரில் ஆகிய இரண்டுமாத காலத்திற்குள்ளாக பெல்ஜியத்திற்கு அனுப்பப் பட்ட ஆகாராதி பண்டங்களுள் 60,000 டன் வரையில் ஜலக் கீழ்க் கப்பல்களின் அட்டூழியத்தினால் சமுத்திரபாதாளம் போய்ச் சேர்ந்திருக்கின்றன வென்றுந் தெரிவருகிறது. ஐயோ பாவம்! துரதிர்ஷ்டம் இப்படியா வரவேண்டும். இது எப்போதும் தனித்து வருவதன்று!

---

MISFORTUNE NEVER COMES SINGLE.

SUPER-DREADNOUGHT LAUNCHED.

## பெரும் போர்க் கப்பலின் வருகை.

எஞ்சினீரிங் விஷயத்தில் அமெரிகர் மகா புத்திசாலிகள் என்பது யாவர்க்குந் தெரிந்தது தானே. இப் போதை யுத்தம் காரணமாக புதிய புதிய நவீனங்கள் அமெரிகாவிலிருந்தும் கிளம்பிக்கொண் டிருக்கின்றன. அவைகளில் ஒரு பெரிய போர்க் கப்பலுஞ் சேர்ந்தது. சென்ற வாரத்திற் கிடைத்ததொரு தந்திச் சமாசாரத்திலிருந்து அமெரிகர் ப்ரூக்லின் என்னுந் துறைமுகத்திலே "நியூ மெக்ஸிகோ" வென்னும் பெயர் கொண்ட பிரம்மாண்டமான போர்க் கப்பலைச் சமுத்திரத்தில் விட்டிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. அக்கப்பலில் 32,000 டன் நிறையேற்ற முடியுமாம். அக்கப்பல் முஸ்திப்புக்களில் அடியிற் குறித்தவையும் அடங்கியுள்ளன:—18 பெரிய பிரங்கிகள், 14 அங்குலக் குறுக்களவுள்ள 12 பீரங்கிகள். அது மணி யொன்றுக்கு 23 மைல் வேகத்துடன் செல்லக்கூடியது. இந்தக் கப்பலிலிருக்கும் வேறோர் விசேஷம் என்னவென்றால், இது இயக்கப்படும் சக்தியே. எல்லாக் கப்பல்களிலும் சாதாரணமாக நிலக்கரியோ அல்லது கட்டையோ போட்டெரித்து நீராவி வரும்படி செய்து, அதைக்கொண்டு கப்பலை நடத்துவார்கள். ரெயில்வண்டிகள் எவ்விதம் நடத்தப்படுகின்றனவோ அவ்விதமே பெரும்பாலும் கப்பல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அப்படிக்கிருக்க, இப்போது நவீனமாக விடப்பட் டிருக்கும் "நியூமெக்ஸிகோ" வென்னும் கப்பலில் மின்சார விசையே (clectricity) பொருத்தப்பெற் றிருக்கிறதென்றும், அதுவே கப்பற்கருவிகளை யியக்கிச் சமுத்திரத்தில் நடத்திக்கொண்டு போகின்றன வென்றும், மின்சார விசையினால் இயக்கப்படுங்கப்பல்களில் இதுதான் முதலாவ தாகுமென்றும் செய்தியெட்டுகிறது. கவனித் தீர்களா, அமெரிகர்களின் புத்தி தீக்ஷண்யத்தை!

## NOTES.

### ஸ்ரீ ஷண்முகானந்த ஸபை.

மிஸ்டர் P. S. வேல் நாயரவர்களது ஸ்ரீ ஷண்முகானந்த ஸபையானது சென்னையிலுள்ள ராயல் தியேடரில் நடத்தப்பட்டு வருவதை இதற்கு முந்தியே ஒரு விசை சொல்லியிருக்கிறோம். சென்ற ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் இச்சபையார் 'வேதாள உலகம்' என்னும் நாடகத்தை நடத்தினார்கள். ஜனத்திரள் மிகுந்திருந்ததோடு தகுந்த கல்வியாளர்களும் யோக்கியதையும் அந்தஸ்தும் வாய்ந்த உத்யோகஸ்தர்களும் விஜயம் செய்திருந்தார்கள். மதிராஸ் பிரெஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டுகளில் ஒருவரான ரீவ்ஸாஹிப் S. N. V. ராஜாசார், மதிராஸ் போஸ்ட் மாஸ்டர் ஜனரலுக்குப் பர்ஸனல் அஸிஸ்டெண்டான மிஸ்டர் மீர்முஜஹருடீன் ஸாஹிப் ஐதராபாத்திலிருக்கும் டாக்டர் மேஜர் M. G. நாயுடு முதலினோரும் மற்றுமுள்ள உத்தியோகஸ்தர் பலரும் ஆரம்பம் முதல் கடைசி வரையிலிருந்து அகமகிழ்ந்து இறுதியில் ஸபைத்தலைவரும் பிரதம ஆக்டருமான மிஸ்டர் வேல் நாயருக்கு ஆசி கூறிச்சென்றார்கள். இச்சபை காலக்கிரமத்தில் நற்பெயர்பெற்று விளங்குமென்பதற்குத் தடையில்லை.

---

### பந்தோபஸ்தில் வைக்கப்பட்ட மூவர்.

'நியூ இந்தியா' வென்னும் ஆங்கிலத்தினசரிப்பத்திரிகை நடத்திவந்த மிஸஸ் பெஸண்டம்மை, மிஸ்டர் B. P. வாடியா, மிஸ்டர் G. S. அருண்டேல் ஆகிய இம்மூவரும் பொதுஜனவமைதிக்குப் பங்கமுண்டாகும்படி நடந்திருக்கிறார்களென்று நம்புதற்குப் போதிய காரணங்கள் இருப்பதாகக் கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டு 1915-ம் வருஷத்து தேசப்பாதுகாப்புச் சட்டத்தை யனுஸரித்த 3-ம் விதியினைக் கைக்கொண்டு ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதன் பிரகாரம் மேற்குறிப்பிட்ட மூன்றுபேர்களும் எந்தப்பொதுஜனமீடிங்கிலும் பிரவேசிக்கலாகாது; சம்பந்தப்படக் கூடாது; பிரசிங்கிக்கலாகாது. அவர்கள் எழுதும் காகிதவகைராக்கள் அதிகாரிகளால் பார்வையிட்டு உத்தரவு கொடுக்கப்பட்ட பிறகே அனுப்பப்படவேண்டும்; இவ்வறிக்கையைப் பற்றிய நோட்டீசு பெஸண்டம்மைகையிற் சேர்ந்த 7 தினங்களுக்குள்ளும், மற்றிருவர்கள் கையிற், சேர்ந்த 14 தினங்களுக்குள்ளும் அவர்கள் மேற்சொன்ன காலம் முடிவதற்குள் நீலகிரி ஜில்லா, கோயமுத்தூர் ஜில்லா, பெல்லாரி ஜில்லா, பழனிமலைக் குன்றுகள், சேர்வராய் மலைக்குன்றுகள், விசாக பட்டணம் ஆகிய இவ்விடங்களொன்றில் வசிக்க வாரம்பித்து அவ்விடத்திலேயேதங்கியிருக்கவேண்டும்.

---

### கற்சாந்து போட்டுக் கட்டிய கப்பல்.

மரத்தினாலும் எஃகுத்தகடுகளினாலும் ஒவ்வொரு தேசத்தவரும் கப்பல்களைக் கட்டுவது வழக்கமாயிருக்க நார்வே கவர்ன்மெண்டார் கற்சாந்துவைத்துக் கப்பல்களைக் கட்டுவித்துப் பரிசீலனை செய்தார்கள். அவை உறுதியாகவும் யுத்த சமயத்தில் குண்டடிகளால் எவ்விதலோபத்திற்கு உள்ளாகாமலும் இருப்பதாகத் தோன்றியதனாலே நார்வே கவர்ன்மெண்டார் 50,000 டன் எடையுள்ள கப்பல்களைக் கட்டுவிக்கும்படி உத்தரவு பிறப்பித்திருக்கிறார்களாம். அத்தகைய கப்பல்கட்டி முடிக்கப்படுமேயானால் அது சாதாரணமான நில வீட்டையொப்பக் கடல்வீடென்றே அழைக்கப்படும்படியாகவேயிருக்கும். இதுவும் இக்கலிகால புதுமைகளின் ஒன்று போலும்!

---

### ஐக்கிய நாட்டுக் கோதுமை.

அடுத்த மாரிகாலத்திலே அமெரிகா ஐக்கிய நாடுகளில் கோதுமை அறுவடையாகும் அவ்வறுவடையில் கிட்டுமென்று மதிப்பிடக் கூடியமாகசூல் 26,60,00,000 படிகளாம். கடந்த 13 வருஷங்களாகக் கிடைத்துவரும்மாசூல் இம்மகசூல்மிகவும் குறைந்து விட்டது. அதனிமித்தம் அமெரிகாவிலிருந்து வெளிதேசங்களுக்கு இவ்வருஷம் கோதுமையேற்றுமதியாவது சிறிது சந்தேகந்தான்.



---

### ரொட்டி விரயத்திற்காக அபராதம்.

கடந்த மேமாதம் 14-ந் தேதி ப்ராம்லியென்னு மிடத்தில் ஒரு ஸ்திரீ எக்காரணத்தாலோ 4 ராத்தல் எடையுள்ள ரொட்டி யொன்றைக் குப்பை கூடங்கள் நிரம்பியிருந்த தொட்டியில் வீசி யெறிந்ததற்காக அம்மாது ஐந்துபவுன் அபராதம் செலுத்தும்படி உத்தரவிடப்பட்டாள். கோதுமைப்பயிர் செம்மையாக விளையாமலும் ஒரு தேசத்திலிருந்து மற்றோர்தேசத்திற்குக் கிரம்மாவைகையாகக் கோதுமை செல்வதற்குச் சிரம ஸாத்தியமாயும் இருக்கும் இச்சமயத்தில் ஆகாராதி பண்டங்களை விரயஞ்செய்வது சிறிதேனும் மதிகொண்டதல்ல. மாதின் அசட்டுத் மனத்திற்கேற்ப தண்டனை விதிக்கப்பட்டது மிக்க சரியே.

---

### மேக ரோகிகளின் தொகை.

ஆக்ஸ்போர்ட் நகரில் வைத்திய சாஸ்திர விற்பன்னராக விருந்துவரும் ஸர் வில்லியம் ஆஸ்லர் என்பவர், பிரிடிஷ் சைந்யத்தில் 98,000 பேர் மேகரோகத்தினாற் கஷ்டப்படுவதாக ரிப்போர்ட்டிலிருந்து தெரியவருவதாக அறிவிக்கிறார்.

---

### காக்கைக்கு வந்த கிராக்கி.

ஜர்மனி தேசத்தின் பிரதான பட்டணமான பர்லின் நகருக்குச் சென்றிருந்த அமெரிகா தேச டாக்டர் ஒருவர் சொல்லுவதிலிருந்து அந்நகரில் காக்கை யொன்று ஒரு ரூபா இரண்டணாவாகவும், சிட்டுக்குருவி என்றக்கு 5 அணாவீதமாகவும் விற்கப்பட்டுவருவதாகத் தெரிகிறது. ஈதென்ன விநோதம் இவ்வூர்களிலெல்லாம் காக்கையைச் சீந்துவார் எவருமில்லை. அவ்வூரிலோ மொத்தமாகப் பக்ஷிகளுக்கு வந்த யோகமேயோகம்.

---

### 'விளையும்பயிர் முளையிலே.'

இப்பழமொழி ஒரு சிறுவன் விஷயத்தில் நிச்சயமாகிவிட்டது. 14 வயதுக்குட்பட்ட சிறுவனொருவன் உல்விச் நகரிலுள்ள போர்க்கருவித் தொழிற் சாலையில் வார மொன்றுக்கு 36 ஷில்லிங் அதாவது ரூ. 27 சம்பாதிக்கிறானாம். முக்கி முக்கி இரவுபகல் என்று கூடக்கருதாது படிப்பிலேயே வருஷக்கணக்காய்க் கவனித்துப் பரீக்ஷையில் தேறும் நமது வித்தியார்த்திகள் எவ்வளவுதான் படித்தென, பட்டம் பெற்று மென்ன? தொழிலும் தொழிலுக்குரிய ஆர்வமும் தான்வேண்டும். விளைஞனின் ஊக்கமே அவன் சம்பாத்தியதிற்குப் போதிய வித்தாகு மென்பதை நாம் சொல்லாதிருக்க முடியாது.

---

### ஜர்மனியில் காட்டுத்தீ.

கடந்த இரண்டு மாதங்களுக்குள் ஜர்மனி தேசத்திலுள்ள காடுகள் பலவற்றுள் அடிக்கடி தீப்பிடித்து வந்திருக்கிறது. இதுவரையில் அம்மாதிரியான இருபது ஸம்பவங்களுக்குக் குறைவில்லை. சமீபத்தில் காஸெல் என்னு மிடத்திற்கு அருகிலுள்ள அடவியில் அபாரமாகத் தீப்பிடித்தது காரணமாக மைல் கணக்காகக் காடுகள் அழிந்துபோயின, மரங்கள் ஒன்றோடொன்று உராய்ந்து இவ்விபத்துக்கள் நேரிட்டிருக்கக் கூடுமென்றாலும் அத்தேசத்திலுள்ளோர் இது வேண்டுமென்று செய்யப்பட்ட காரியமாக மதிக்கின்றனர். அப்படிக்கிருந்தாலும் இருக்குமோ என்னவோ அறிந்தவர் யாவர்?

### ஸிம்மாசலம் நாவிதர்கள்.

விசாகப் பட்டணத்தைச் சேர்ந்த ஸிம்மாசலம் கோயிலுக்குப் பிரார்த்தனை செலுத்துவதற்காகப் பலர்பேர் போவதுண்டு, போவோர் முடியிறக்கி வருவார்கள். இவர்கள் செலுத்திய பிரார்த்தனையினால் இது வரையிற் கிடைத்திருக்கும் மானிடத்தலைமயிர்கள் போர்போராகக் குவிந்து கிடக்கின்றன. சுமார் 6000 டன்களுக்கு மேலும் 7000 டன்களுக்குள்ளு மிருக்குமாம்! நாவிதர்கள்தான் அதற்குச் சுவந்தர்ய முள்ளவர்கள் ஆஹா, ஸிம்மாசலம் நாவிதர்களுக்குக் கிடைத்த அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்!

### வங்காள-நாகப்பூர் ரெயில்வேயில் வெள்ளம்.

காரக்பூர் ஜில்லாவிலிருக்கும் பாஞ்சகூரா, போச்பூர் ஆகிய இவ்விரண்டு ஸ்டேஷன்களுக்கும் மத்தியில் மழைபெய்ததனிமித்தம் நதிகளும் ஏரிகளும் பெருகிக் கரை வழிந்து வெள்ளம் பெருகலாயிற்று வங்காள நாகப்பூர் இருப்புப்பாதையில் ஆங்காங்கு ரெயில் தண்டவாளம் இருப்பது கூடத்தெரியவில்லை. எங்கு தாழ்ந்திருக்கும் கிராமாந்தரங்களுக்குத் தொல்லையேற்படுமோ வென்றுகூட அனுமானிக்கப்பட வேண்டியதாயுமிருக்கிறது.

### கல்கட்டாடர்ப் கிளப் லாட்டரி.

இதிற் சேர்ந்த சாந்தாத் தொகை 3,70,000 ரூபாய்க்கு அதிகம் போகவில்லை. ஆகவே முதற்பிரைஸ் முக்கால் லட்சத்திற்கு அதிகமாயிராதென்று தெரியவருகிறது.

### தென்னிந்தியா ரெயில்வே.

சென்ற வருஷம் ஜூன்மீ 9-ந் தேதியோடு முடிவான ஒருவார காலத்திற்குள் இவ்விருப்புப்பாதையில் பிரயாணிகளினுற் கிடைத்த வருமானம் 396,197 ரூபா; சாமான்களினுற் கிடைத்த வருமானம் 304,901 ஆகமொத்தம் 701008 ரூபா.

### மனந்தாளாது மாண்ட மாணவன்.

கல்கத்தாவில் சமீபத்தில் நடந்தேறிய B. A. பரீக்ஷைக்குச் சென்றிருந்த பிரபுல்ல குமாரபோஸ் தனக்குப் பரீக்ஷை தேறவில்லையென்று கேள்விப்பட்டதும், மனந்தாளாது சென்ற சனிக்கிழமை ஒருருண்டை அபினையுட்கொண்டான்; அதன் விஷந்தலைக் கேறியது; தக்ஷணமே அவனை ஆசுபத்திரிக்கு எடுத்துச் சென்று சிகிச்சை செய்தார்கள்; எனினும் திங்கட்கிழமை அவன் இறந்தே போனான். பரீக்ஷை தேறவில்லையென்று பாரினைவிட்டுச் செல்லும் துர்ப்புத்தி அம்மாணவனுக்குக் கற்பித்தது எவரோ விளங்கவில்லை. இதுவும் அவனது காலவசமே!

### புதிய ஆகாயவிமானங்கள்.

ஆகாய விமானங்களினால் அதிகமான உபயோகமுண்டென்பதற்கு இந்தக்கடும் போர்ச்சம்பவங்களே சாக்ஷியங்களாயிருக்கின்றன. ஆனதுபற்றி அமேரிகா ஐக்கிய நாட்டுக்கவர்ன்மெண்டார் முதல் வருஷத்தில் 3,500 ஆகாய விமானங்களையும் (ஏரோப்ளேன்) இரண்டாம் வருஷத்தில் அத்தொகைக்கு இரண்டுமடங்கான விமானங்களையும் செய்வதாக உத்தேசித்திருக்கிறார்கள். அதற்கான விமான கூடங்களையும் நிலங்களையும் ஏற்படுத்த 2,50,000 பவுன் செலவிடவும் தயாராயிருக்கிறார்கள். ஒரு நிலத்திற்கோ அல்லது ஆகாயவிமான கூடத்திற்கோ இவ்வளவு பெருந்தொகை யாகுமிடத்தி மற்றைக்கூடங்களுக்கு எவ்வளவு அபாரதொகையாகும் கவனியுங்கள்! ஆம் அதற்குத்தடையென்ன. அமெரிகாவோ கோடீசுவரர்கள் கொலுவிருக்கும் குபேர சம்பத்தோடுகூடினநாடு. அது பணம் செலவிடத்தயங்குவானேன்? இத்தொகை அமெரிகாவுக்கு ஒரு பிரமாதமல்ல.

# PART VIII.

## MORAL STORIES.

## நீதிக் கதைகள்.

### சீலவதி.

(100-ம் பக்கத் தொடர்ச்சி.)

இப்படிச்சொல்லிய அந்தக்ஷணத்திலேயே 'புத்திரன்' என்ற வார்த்தையை அவள் கூறியதும் அவளது சரீரத்தில் ஒருவிதமான உணர்ச்சியேற்பட்டது. நெற்றி வியர்த்தது; புருவங்கள் நெருங்க ஏதோ ஒன்றைக் குறித்துத் தீர்க்காலோசனை செய்பவளையொப்ப ஆகாயத்தை நோக்கினாள்; வெறிக்கப்பார்த்தாள். பொட்டுப் பொட்டாக அவளது நெற்றியில் வியர்வைத்துளிகள் செறிந்தன; அவளுடைய கண்களிலிருந்து முத்து முத்தாக நீர்த்திவலைகள் செந்தாமரைக் கன்னங்களில் வழிந்தன. பகவான் தனக்குப் புத்திரபாக்கிய மில்லாமற் செய்துவிட்டாரே யென்னும் ஞாபகம் அவளது மனதில் ஊடாடிக்கொண்டிருந்தது. தனக்குக் குழந்தையில்லை, தான் மலடியென்பது வந்தபிச்சைக்காரப் பெரியவருக்குத் தெரியாதிருக்க வேண்டுமேயென்று சீலவதியெண்ணினாள். பிச்சைக்காரர் சீக்கிரத்தில் வெளியே போய்விட்டால் நலமென்று கருதினாளவள். குழந்தையில்லாத கிருகம் பூதப்பிரேத பைசாசங்களுக்கு உறைவிடமாகும் பாழடைந்த வீட்டிற்கு ஒப்பாகுமென்று பெரியோர் சொல்லியிருக்கிறார்களே. பாழ்வீடுதேடிப் பிச்சைக்குப் போனேனேயென்று சாபமிட்டுக் கோபத்துடன் பெரியவர் போய்விட்டால், அச்சாபம் தன்னை வந்தணுகுமே யென்று சிந்தித்தாள் சீலவதி மழலைச்சொல் மாறாதகுழவியின் கொச்சை வார்த்தைகளைச் செவியாறக் கேட்டானந்திக்கும் தம்பதிகளிடம் சென்று இரப்பு மென்றுடுவது யுக்தமென்று பெரியவர் சொல்லிவிடுவரோ என்னவோ வென்று தனக்குள்ளே அவள் யோசித்து ஒன்றும் பேசாது கலவரத்துடன் பிரமித்துக் கற்சிலையை யொப்ப நின்று விட்டாள்.

பிச்சைக்காரர்:—பெண்ணே, என்ன யோசிக்கிறாய்? எதற்கும் சந்தேகப்படாதே சந்தேகப்பட்டது சரியாகமுடியாது. சந்தேகம் கவலைக் கிடந்தரும்; கவலையோ நோய்க்கிடங்கொடுக்கும்; நோயோ உயிரினை உருக்கிவிடும். ஆதலால் எதற்கும் சந்தேகமுறாதே. பின்னும் சந்தேகித்துச் செய்வது இறுதியிற் குந்தகமாகும்; ஆனதுபற்றி உனக்கு எவ்விதமான சந்தேகமும் இருக்கவேண்டாம் நீயும் உன்கணவனும் அக்கினி சாக்ஷியாகத் தொட்டுத்தாலிகட்டி வாழும் தம்பதிகளாயிருக்கிறீர்கள்; என்றாலும் ஜீவாத்மா உங்களிருவர்க்கும் வேருயிருக்கிறது. உனது மனமே ஒருபுறமிழுக்க உன்பர்த்தாவின் நோக்கம் மற்றோர்புற மிழுக்கிறது. உன்மனச்சாக்ஷிக்கு எது யுக்தமென்று தோன்றுகிறதோ அது உன்பர்த்தாவின் மனச்சாக்ஷிக்கு யுக்தமாய்ப் படக்காணோம். ஆதலால் மனச்சாக்ஷி வேறாயிருக்கையில், அதன் ஆதாரமாய்ப் பிறக்கும் கிரியைகளும் வேறாகத்தானிருக்கும். எப்போது க்ரியை வேறுகின்றதோ அப்போதே அவரவர் தத்தம ஸ்வேச்சாபத்தியத்தை யனுஸரித்து வருவதற்கு அருகராகிவிடுகிறார்கள். ஆகையால் ஏதேனும் ஒருகாரியத்தை நினைக்கவோ நினைத்தபடி செய்து முடிக்கவோ உன்

கணவனுக்கிருக்கும் ஸ்வேச்சையைப்போல உனக்கும் உண்டென்பதை நீ அரியாயோ?

சீலவதி:—ஸதிபதிகளாயிருக்கும் எங்களில் ஒருவர் போனவழியே மற்றொருவரும் போகவேண்டும். ஒருவரைவிட்டு மற்றவர் பிரிந்து வேறுவழி போவது முடியாது. ஒருவண்டியில் பூட்டப்பட்டிருக்கும் இரண்டு எருதுகளில் வலதுபக்கத்தெருது சிறிது முன்னேறிவிட்டால் இடது பக்கத்தெருதுவின் கழுத்தில் மாட்டப்பட்டிருக்கும் நுகத்தடியின் பாரம் அழுந்தி அவ்வெருது வண்டியை யிழுக்கமுடியாமற் சிரமப்படும். அதுபோல ஸ்திரீ புருஷர்களாயினோர் தம்பதிகளாயிருந்து வாழ்ந்து வரும்போது ஒருவருக்கொருவர் வித்தியாஸமான அபிப்பிராயங்களோடு இருந்து வருவது ரஸமாகமாட்டாது, எனவே தன்னிஷ்டப்பிரகாரம் இருக்கமுடியாது, எப்படியும் புருஷனுக்குப் பெண்சாதி கீழ்ப்படியத் தானேவேண்டும். அவனுக்கு அவளே துணைவி, அவளுக்கு அவனே துணைவன். அப்படியிருக்கையில் ஜீவாத்மா வேறென்று தம்பதிகளைப் பிரித்துக்காட்டுவது சுத்தமதியீனம். புருஷனில்லாது பெண்பிள்ளை செய்யும் சடங்கு எதற்குப் பிரயோசனம்? கணவனில்லாமல் மனைவி தன்னிச்சைகொண்டு செய்யுங்காரியம் கனவக்குமுதவாது. மனைவியில்லாது மணமகன் செய்யுங்காரியமும் சிறக்காது; அதனால் பலனுமில்லை. சககமனம் என்னும் உடன் கட்டையேறும் வழக்கத்தை நீர் அங்கீகரிக்கிறீரா?

பிச்சைக்காரர்:—ஸாவித்ரி தேவியைக்கவனி. அவளுடைய கணவனுயிரை யமதர்மராஜன் கொண்டுபோகையில் மனைவியான ஸாவித்ரி தன் ஸ்வேச்சையை முன்னிட்டன்றோ மறலியோடு மன்றாடிக் கணவனுயிரைத் திரும்பவும் அளிக்கப்பெற்றாள்? அவ்விதம் தன் ஸ்வேச்சாபத்தியத்தை அவள் உபயோகப்படுத்தாதிருந்தால் என்ன நேர்த்திருக்கும் ஆலோசித்துப் பார். அவள் அச்சமயம் நடந்துகொண்டது மிகவும் சரியானகாரியமென்றே எனக்குத் தோன்றுகிறது.

சீலவதி:—ஐயா, நீங்கள் அப்படிச் சொல்லாதேயுங்கள், அவள் தன்னிச்சைப்பிரகாரம் செய்ததாகவல்லவோ சொல்லுகிறீர்கள். அது அப்படியல்ல; கணவனிறந்தபிறகு அவள் உலகத்தில் வேறெதைக்குறித்துக் கவனிக்கவேண்டும். அவளுடைய ஆத்மாவின் உறைவிடம் கணவனுடைய ஸ்தானமானது பற்றி, உலகத்தில் கணவனில்லாத காலத்தில் அவள் கருதுவது கணவனைத்தவிர மற்றெதுவுமல்ல.

பிச்சைக்காரன்:—கணவன் ரோகியாகவாவது நபும்ஸகனாகவாவது, இன்னொருத்தியைக் கலியாணஞ் செய்துகொள்ளும் இயல்பினனாகவாவது இருந்தால் மனைவி அத்தகைய கணவனைத்தள்ளிவைக்க வேண்டுவதுதானே?

சீலவதி:—எங்கேயோ கோடியிலொன்று அப்படியிருக்கக்கூடும், அதுவும் அரிதாகவேயிருக்கும். ஐயா பெரியவரே, நான் வெகுநேரம் உம்மோடு பேசிக்கொண்டு நின்றுவிட்டேன், நீர் சிறிது நேரம் இங்கு உட்கார்ந்திரும். என் பிராணபதி சீக்கிரத்தில் வந்து விடுவார், வந்ததும் நீர் உமதிஷ்டத்தைப் பூர்த்திசெய்துகொண்டு செல்லலாம்.

(இன்னும் வரும்.)

உ

ஸ்ரீராமஜயம்.


# கல்பதரு.

KALPA THARU.

அறிவு வளர்ச்சிக்கான ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புஸ்தகம் 1. Vol. I. | பிங்களஹு ஆடிமீ—JULY, 1917. | ஸஞ்சிகை 5. No. 5.


## ஸ்வகீயம்.

நமது நண்பர்களுக்கோர் விக்ஞாபனம் :—

இக் கல்பதரு வென்னும் பத்திரிகையானது நமது ராஜதானியிலிருக்கும் தமிழ் ஜில்லாக்களிலுள்ள கிராமவாசிகளுக்கும் மற்றும் ஆங்கிலம் தெரியாத ஸாதாரணமாயுள்ள எல்லோருக்கும், தெரிந்திருக்கவேண்டிய ஸகல விஷயங்களையும் அடங்கியுள்ளது. இது விபரங்களைப்பற்றி இப்பத்திரிகையின் முதல் ஸஞ்சிகையில் விபரமாக வெளியிடப் பட்டிருக்கிறது.

ஆனால் இந்த ஸஞ்சிகையில் எம்மால் நண்பர்களுக்கு வெளியிடப்பட வேண்டியதும் முக்கியமானதுமான சங்கதி ஒன்றுளது. அதாவது, இந்த கல்பதருவென்னும் பத்திரிகையை வாரந்தோறும் வெளியிடவேண்டுமென்ற பேரவாவுடன் வாரப் பத்திரிகையாக வெளியிடத் துணிந்தனம். "ஒன்று நினையாது முன் வந்து நிற்பினும் நிற்கும் எனையாளும் ஈசன் செயல்" என்றவாறு, இப்போது நடந்துகொண்டிருக்கும் பெரும்போரினால் அச்சியற்றுதற்குறிய ஸாதனங்களாகிய, கடுதாசு முதலியதற்கு கருப்பு யேர்ப்பட்டுவிட்டது. முன் அரை அணாவுக்கு எளிதில் கிடைக்கும் கடுதாசு இப்போது இரண்டு அணாவுக்கும் கிடையா. அப்படி ஜாஸ்தியான கிரயத்திற்குக் கிடைத்தாலும் வாரப் பத்திரிகைக்கு வேண்டுமளவு கிடைப்பதும் துர்லபமாய்விட்டது, இது விஷயங்களைக் கருதி எமது நண்பர்களில் அநேகர், நிகழும் யுத்தம் நமது ராஜாங்கத்தாருக்கு அனுகூலமாக முடியும்வரை இப்பத்திரிகையை மாதாந்தப்பத்திரிகையாக நடத்துமாறு வேண்டிக்கொண்டனர், அவ்வேண்டுகோளின் கருத்தின் சிறப்பை நன்கறிந்த யாம், கால,

தேச, வர்த்தமானங்களை உத்தேசித்து அவ்விதமே அநுஸரிக்கலாயினம். இப்பத்திரிகையின் வருஷச் சந்தாத் தொகையையும் ரூ. 8-0-0 லிருந்து ரூ. 3-0-0 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. நமது தமிழ் நாட்டிலுள்ள கனதனவான்களும் மற்றுமுள்ளோரும் இக் கல்பதருவை நன்குமதித்துப் பரிபாலனம் செய்ய கிருபைபுரிவார்களென்பது திண்ணம். சுபம்! சுபம்!!

பத்திராதிபர்.

---

# PART I.

## THE BRITISH ARMY.

## பிரிடிஷ் ஸைந்யம்.

'யுபீக்'

எஞ்ஜினீர் படையாளர்களது அடையாளங்களிலும் ராயல் பீரங்கிப் படையாளரது அடையாளங்களிலும் "Ubique" என்னும் பதம் செதுக்கப்பட்டிருக்கும். பிரிடிஷ் ராணுவத் தொழிலில் அமர்ந்திருக்கும் ஸைந்யத்தில் பொதுவாகக் காணப்படும் இப்பதமானது பிரிடிஷ் ஸைந்யம் எங்கிருந்தாலும் என்னவேலை செய்துகொண்டிருந்தாலும், எவ்விதமான சீதோஷ்ண நிலைமையிலும் எப்பேர்ப்பட்ட வித்தியாசங்களோடுகூடின ஜாதியாரின் மத்தியில் இருக்கும்படியான ஸ்திதியிலும், மேற்சொன்ன அப்பதங்கொண்ட அடையாளம் அங்கியிலிருக்குமாயின், அவ்வங்கியைத் தரித்திருப்பவன் பிரிடிஷ் போர்வீரனென்று வாய்கூசாமற் சொல்லலாம். வெளிதேச சைந்யங்களிலிருக்கும் ஸோல்ஜர்களைக் காட்டிலும் பிரிடிஷ் ஸோல்ஜருக்குப் பலவிதமான பலன்களுண்டு. உலகம் முழுவதும் சுற்றும்படியான சந்தர்ப்பம் அவனுக்குக் கிடைப்பது மிகவும் எளிது. இந்தியா, ஆபிரிகா, ஈஜிப்ட், மேற்கிந்தியத்தீவுகள், மோரீசு, மத்தியதரைக்கடலைச்சார்ந்த சிற்சிலவிடங்கள் ஆகிய இவ்விடங்களுக்குப் பிரிடிஷ்ஸோல்ஜர்கள் சிறிதும் ஆடங்கமில்லாமல் செல்லும்படியான அநுகூலங்கள் அவர்களுக்கு உண்டு. பிரிடிஷ் ஸோல்ஜராக ராணுவத்தில் புகும் ஒருவன், அவ்விலாகாவில் வேலைசெய்து அவன் பென்ஷன் பெற்றுக்கொள்கையில் பற்பல தேசாசாரங்களை யறிந்தவனும், அவ்வத்தேசத்திற்குத் தகுந்த கோட்பாடுகளையும் முறையீடுகளையும் நன்குணர்ந்தவனும், அந்தந்த வழக்கப் பழக்கங்களுக்குத் தகுந்த பிரகாரம் தான் நடந்துகொள்ளத் திறமைபூண்டவனும் விசாலமான நோக்கமும் ஜீவவாழ்க்கையைத் தெளிவாயுணர்ந்த தன்மையும் அடைந்தவனுமிருப்பதைப் பார்க்கிறோம். இன்னும் இது விஷயமாகப் பிறகு விவரிப்போம்.

### ஸைந்யத்தின் பரப்பு.

இப்போதிருக்கும் பிரிடிஷ் சைந்யம் எவ்வித அமைப்போடுகூடினது, அதன் விஸ்தீரணம் எவ்வாறு உளது, என்று தற்போதுள்ள நிலையிற் கூறுவது சாத்தியமல்ல. பொதுப்பட சைந்யத்தின் அமைப்பு இவ்வாறிருந்ததென்றுமட்டும் சொல்லவியலும். பிரிடிஷ் காலாட்படையில் 157 படாலியன்களும் (battalions) குதிரைப்படையில் 31 ரெஜிமெண்டுகளும், பீரங்கிப் படையில் 180 பாட்டரி (battery) களும் பிரிடிஷ் சைந்யத்தின் பிரதம அங்கங்களாகும். இவைகளோடுமற்றும் துருப்புகள் அடங்கிய 100 கம்பெனிகளும், ராயல் காரிஸன் ஆர்டிலெரி என்ற பகுதியில் 9 மலைபாடரிகளும் சேர்ந்தவை. பின்னும் மராமத்து வேலை செய்வதற்கான ராயல் எஞ்ஜினீர்கள், சைந்ய ஏவற்றொழில் புரியும் பகுதி (Army Service Corps) உடைவகைராக்களைக் கவனிக்கும் பகுதி (Royal Ordnance Department) R.A.M. C., சம்பள பட்டுவாடா செய்யும் பகுதி (Army Pay Corps) இதர வேலையாளர் ஆகிய இத்தனை யம்சங்களும் சேரப்பெற்றதாகும். ஒரு சைந்யமென்பது நாம் குறிப்பிட்டுக் கூறியது பொதுப்படவே யல்லாது நிஷ்கரிஷையாகவல்ல. ஏனென்றால் இப்போது நடந்துகொண்டிருக்கும் யுத்த நிலைமையில் காலாட்படை இவ்வளவென்றும் குதிரைப்படை இவ்வளவென்றும் பீரங்கிப்படை யிவ்வளவென்றும் யுத்தவாபீஸைத் தவிர மற்றெவர்க்கும் தெரியமாட்டாது. அன்றியும் சமாதானம் ஆனபிறகு சைந்யத்தின் சங்கியை இவ்வளவிருக்குமென்றுகூட எவராலும் இப்போது சொல்ல முடியாது. போகப்போகத்தான் தெரியவேண்டும்.

### ஸோல்ஜரின் தொழில்.

பொதுவாகப் பேசுமிடத்து பிரிடிஷ் ஸோல்ஜர் சைந்யத்தைச்சேர்ந்தவர் எப்பகுதியில் வேலைசெய்து கொண்டிருந்தபோதிலும் ஆரம்பத்தில் தொடர்ந்தேர்த்தியாக ராணுவப்பயிற்சி யடைந்தே தீரவேண்டும். காலாட்படையைச்சேர்ந்த ஒருவன், அப்படை சம்பந்தமான சகல வேலைகளையும் நன்குயறிய குறைந்தது மூன்று வருஷகாலம் பயிற்சி பெறவேண்டும். குதிரைப் படையாளன் அப்பகுதியைச்சார்ந்த பல்வேறு வேலைகளில் நிபுணத்துவமடைய குறைந்தது 5 வருஷகாலம் பயிற்சிபெறவேண்டும். பீரங்கிப்படையாளனுக்கு 5-வருஷமும் அதற்குமேலுமாம். ராணுவத்தில் வேலைசெய்வதற்காகச் சேர்க்கப்படுவோர் அனைவரும் பொதுக்கல்வி கற்றவராயிருப்பார்கள் என்று எண்ணுவதற்கில்லை. படித்தவருமிருக்கலாம்; படியாது முரட்டுவேலை செய்யத்தகுந்த பலாட்டியருமிருக்கலாம். மேலும் ராணுவத்திற் சேர்க்கப்படுகிற காலமோ சொன்னதைச் சொல்லுங் கிளிப்பிள்ளையைப்போல் வாலிபன் 18 வயதாவதற்குள் சேர்க்கப்படாமல் 18-வயதுக்கு மேற்பட்டே சேர்க்கப்படுகிறான். இளமையாயிருக்கும்போது போதிப்பது எளிது; இளமை கழிந்து தகுந்த பலாட்டியம் வருகையில், போதனுமுறை இளமையிற் பதிவதுபோல அவ்வளவு உறுதியாக மனதிற் பதிவதில்லை. அதவாத்பதிந்தாலும் ராணுவத்திற் சேர்ந்தவுடனே பொறுப்பினை வகித்த தரகதியாக காரியஞ்செய்ய விடப்படுவதுமில்லை, இத்தியாதி காரியங்களை யுத்தேசித்தே ராணுவத்தில் அப்போதைக்கப்போது ஒவ்வொரு

விஷயத்திலும் பயிற்சி கொடுத்து அதனைப் பழக்கத்திற் கொண்டுவருவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. சமாதான காலத்தில் ஒரு ஸோல்ஜரது ஜீவவாழ்க்கையைச் சாமானியன் காணுகையில், அந்த ஸோல்ஜரைப்போல் தானும் உடையுடுக்கவேண்டுமென்றும், வேளாவேளைகளில் உண்டு நண்பர்களுடன் நாட்களைக் கழித்துக் கவலையற்றுத் திரியலாமென்றும், இன்னும் பலவிதமாகச் சொல்லி மனப்பிராந்தி மிகுந்து ராணுவத்திற் சேர அபிலாஷைப்படுவது ஸகஜமாயிருக்கிறது. அவ்வபிலாஷையைப் பூர்த்தி செய்துகொள்ளும் நிமித்தம் ராணுவத்திற் சேர்ந்திருப்போரை முதன்முதல் ராணுவவேலைக்குத் 'தர்பீத்' செய்வதே ராணுவ அதிகாரிகளின் முதுமுதற்கடமையாகும். பிரதமத்தில் ராணுவசேவகத்திற்கு அவசியமாகவேண்டியிருந்தது 'கீழ்ப்படிதலே'. இப்போதோ அதோடு மற்றோர் அம்சமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது கீழ்ப்படிதலும், பயிலுவிப் போரது நடவடிகளை யுணர்வதும் (Obedience & initiative).

## சைந்யத் தொகுப்பு.

கடியாரமுள்ளுகள் விநாடி, நிமிஷம், மணிக்கணக்குகளை எவ்வளவு சரியாகக் காட்டுகின்றனவோ அப்படியே பிரிடிஷ் சைந்யம் தொகுக்கப்பட்டு, அவ்வத்தொகுப்பு அததற்குரிய வேலைகளைக் கவனிப்பதிற் கண்ணாயிருக்கிறது. இங்கிலாண்டில் பிரிடிஷ் சைந்யத்திற்குப் பிரதான பீடமாயிருப்பது ஆல்டர்ஷாட் என்னுமிடம். அதுவே பிரிடிஷ் பிரதம சைந்யத்தின் தலைமை ஸ்தானமாகும். தேசிய அவசரம் நேரும்போது ஆல்டர்ஷாட்டில் வைக்கப்பட்டிருக்கும் படைகளே ஆரம்பத்தில் யுத்த ஸன்னத்தர்களாகப் புறப்படுவார்கள். அங்கிருக்கும் படைகள் 24-மணி நேரத்திற்குள் போர்க்கவசம்பூண்டு தயாராயிருக்கும்படி பழக்குவிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கடுத்தாற்போலிருப்பவை கோல்செஸ்டர், ஷார்ன்க்ளிப், யார்க், புல்போர்ட் ஆகிய இவைகளாம். ஸாலிஸ்பரிமைதானத்து நடுமத்தியம் ராணுவ அதிகாரிகள் வசந்தானிருக்கிறது. அயர்லாந்திலே டப்ளின், கர்ரா இவ்விரண்டிடங்களும் ராணுவ நிலையங்களாக்கப்பட்டிருக்கின்றன. இவ்விடங்களிலுள்ள படைத்தொகுதிகளுக்கு டிஸம்பர் மாதக் கடைசியிலிருந்து மார்ச்சு மாதம் பாதிவரையில் ரஜாவுண்டு. பிறகு போர்க்கருவிகளையுபயோகிக்கும் விவரங்கள் சொல்லிக் கொடுக்கப்படும். தேகாப்பியாசப் பயிற்சி செய்வோரும், துப்பாக்கி, பீரங்கி, கத்தி, ஈட்டி, பாலா முதலியவைகளின் உபயோகத்தைக் கற்போரும், மற்றும் காலாட்படை, குதிரைப் படை, பீரங்கிப்படை மராமத்துப்படை முதலியவைகளைச் சேர்ந்த தொகுதியினர் தத்தம் வேலைகளை அலுப்புச் சலிர்ப்பு இல்லாமற் பழகியும், போர்க்களத்தில் நடவடிக்கை நடத்தச் செல்லுங்கால் கூடாரமடித்துக் காவல் புரியும் விவரங்களைக் கவனித்தும் ஆக இவ்விதமான வேலைகளை மும்முரமாக நடத்துவார்கள். ஒவ்வொரு படையினரும், அதனதற்கு வேண்டிய சிக்னல்



லர்கள், பாராக்காரர்கள், செருப்புத்தைப்போர், சமையற்காரர், பயனியர் முதலியோரைத் தயார்செய்து பழக்கிக்கொண்டிருப்பார்கள்; பீரங்கிப்படையாளருள், பீரங்கிகள் கெட்டுப்போனால் புதுப்பிக்கும்படியான 'மெகானிக்'களும் அடங்கியுள்ளார். குதிரைப்படையில் குதிரைக்குச் சேணம் பூட்டவும், சேணங்களை நன்றாய்த் தலக்கி அறுதலில்லாதபடி பாதுகாக்கவும் படையாளர்களுக்குள்ளேயே பலர் பழக்குவிக்கப்பட்டிருக்கிறார்கள். எஞ்சினீர்படையைச் சேர்ந்தவர்கள் தந்தியனுப்புவது, பாலங்கட்டுவது, பலமான பாதுகாப்பு அரண்முதல் களத்துச்சமையல் அறைவரைக்குமுள்ள பலவிதமான வேலைகளைக் களத்திலிருக்கும் சைந்யத்திற்குச் சௌகரியமானபடி செய்துகொடுப்பதில் கவனஞ்செலுத்தி வருவார்கள். சிவில் உத்தியோகத்தினும் ராணுவ உத்தியோகம் சுளுவென்று சிலர் நினைக்கக்கூடும். அது சுத்த தப்பு. ஸிவில் உத்தியோகத்தைக் காட்டிலும் ராணுவ உத்தியோகம் கடினமென்பதற்குச் சிறிதும் தடையில்லை.

---

# PART II.

## ஆரோக்கிய விமர்லனம்.

### நித்திரை.

BY Mr. K. P. SESHADRI AIYANGAR,
*(Teacher, Muthialpet High School, Madras.)*

இவ்வுலகில் ஜனித்துள்ள ஸகல ஜீவப்பிராணிகளுக்கும் அவைகள் உயிருடனிருப்பதற்காக காற்றும், நீரும், உணவும் எவ்வளவு முக்கியமானவையோ அவ்வளவு முக்கியம் நித்திரை என்பதும். இந்த நித்திரை என்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். யாவருக்கும் தெரிந்த விஷயத்தைப் பற்றி ஒருவன் எழுதுவதேன் என்று சிலர் அலக்ஷியமாக எண்ணுவார்கள். அப்படி எண்ணக்கூடாது. இன்னும் சிலருக்கு இதைப்படிக்கும் போதே நித்திரையும் வரும். எப்படியானாலும் நித்திரையைப்பற்றி வெகு சங்கதிகளிருக்கின்றன. அவைகளைக்கொஞ்சம் விவரமாக எடுத்துரைப்போம்.

நித்திரை எப்பொழுதுண்டாயிற்று? என்ற கேள்வி சிலர்க்குப் பிறக்கலாம். பிரபஞ்சம் எப்பொழுது ச்ருஷ்டிக்கப்பட்டதோ, மனிதன் பக்ஷி முதலிய பிராணிகள் எப்பொழுதுண்டாக்கப்பட்டனவோ அப்பொழுது முதல் இதுவும் உண்டாயிருக்கிறது. நாம் நித்திரையை நித்தியம் அனுபவிப்பதனால் வெறுப்படைகிறோம், ஒருநாள் தூங்காவிட்டால் படுகிறபாடு சொல்லி முடியாது. இந்த நித்திரை ஸகல பிராணிகளுக்கும் ஆனந்தத்தை விளைவிக்கிறது.

மனிதர்களும் பிராணிகளும் உதரபோஷணார்த்தம் எவ்வளவோ வேலைகளைச்செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே பகல் வேளைகளில் சரீரத்தைச் செருப்பாக பாவித்து கஷ்டப்படவேண்டியதாக விருக்கிறது. கடவுள் வேலை செய்வதற்குப் பகலென்றும், அதனால்வரும் சிரமத்தைத் தீர்த்துக் கொள்ள இரவென்றும் உண்டாக்கியிருக்கிறார். இரவில் கால் நீட்டித்தூங்கும் சுகம் யாருக்குத்தான் தெரியாது? அவ்விதமாய் மெய்ம்மறந்து கண்மூடுவதில் என்ன ஆனந்தம். மத்தியானம் முழுவதும் பரபரப்புடனும், ஆவலுடனும் நெற்றிவியர்வை நிலத்தில்விழ வேலைசெய்து மாலையணுகும்போது மெய்சோர்ந்து கைகால்கள் களைத்துப்போக இரவில் நித்திரையென்ற மந்திரமில்லாவிடில் யார்தான் வாழ்வை இனிமையாக எண்ணுவார்கள்? அந்த மந்திரத்தில் எத்தனைபேர் மனப்பூர்வமாக சந்தோஷத்துடன் சிக்கிக்கொண்டு சுகமனுபவிக்கிறார்கள். ஓர் அரும்புலவர் பெருமான் துயிலைப்பற்றி வெகுவாகப் புகழ்ந்து வரைந்துள்ளார். அது பின்வருமாறு.

“துயிலே! மாநுடர் துணையே! இமையினில்
நயனுற நடிக்கும் நலங்கனி நாரியே!
வருந்திய மனதுக்குப் பொருந்திய மருந்தே!
விண்ணவர் தமக்கும் மேவரி தாகி!
மண்ணுல கினர்க்கு வாய்த்தபே ரமுதே!
ஊக்க முயர்த்தி யாக்க மளிக்குறும்
அம்மையே! சுகந்தரு மனைத்திலுஞ் சிறந்ததே!
இம்மையிற் செம்மைசா லின்ப வூற்றே
உன்னைத் தணந்தா ரொரு பொழுதுய்வரோ?
இன்னியல் புணரா நீசரே யிகழ்வார்.
செய்யவ டௌயாச் செப்புநர் கருத்தென்?
செய்யவ டன்னினுஞ் சிறந்தனை யென்பதே;
இகழ்ச்சியோ விதுதான்? இயம்புதி;
புகழ்ச்சியே யன்றோ? பொருக வற்பகையோ.”

இன்னும் மிருச்சகடி என்னும் சமஸ்கிருத நாடகத்தில் சூதர்கன் என்னும் கவி நித்திரையை ஒரு பெண்ணாகப்பண்ணி அவள் தன்பலத்தால் மனிதன் பலத்தைக்கவர்ந்து அவனைத் தன்வசத்தி லகப்பட்டுக்கொள்ளும்படி செய்வதாக வருணித்திருக்கிறார்.

பிராணிகளின் உயிருக்கு உறுதிகொடுக்கும் ஊட்டம் நித்திரையே. அதுவேதான் கை, கால் கீல்கள் இவைகளுக்குப் பலத்தைக்கொடுத்துக் கெட்டுப்போகாமலோடிக்கொண்டிருக்க மைபோல் உதவுகிறது. பகலில் வேலைசெய்து அயர்ந்தவனை மறுநாள் வேலைசெய்ய யோக்கியனாகச்செய்யும் வைத்தியமும் அந்த நித்திரையே.

“இனி உட்காரமுடியாது. கொஞ்சம் சாய்ந்துகொள்கிறேன். தூக்கம் வந்துவிட்டது, பாக்கி கதையை நாளைக்குச் சொல்” என்று எத்தனைபேர் சொன்னதில்லை. தூக்கம் வரும்போது புத்திகொஞ்சம் கொஞ்சமாய்த்



தேகத்தைவிட்டு நீங்கிவிடுகிறது. கைமேல் தலையை வைத்துத்தூங்கும் குழந்தையைவிட்டு மெதுவாய் ஒருதாய் தன்கையை யெடுப்பதுபோல தூங்குமுடலைவிட்டு அறிவு கொஞ்சம்கொஞ்சமாய் அகன்றுவிடுகிறது.

நித்திரை ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியமானது என்பதைப்பற்றி ஒரு வைத்தியர் பின்வரும்விதம் அபிப்பிராயப் பட்டிருக்கிறார். காலைமுதல் மாலைவரை ஒவ்வொரு மனிதன்படும் அவஸ்தை நாழிகை ஏற ஏற அதிகரித்து வருகிறது. ஹிருதயம் நாழிகையாக ஆக அதிகமாக அடிக்கிறது. இராத்திரி தூங்குமுன் அடிப்பது வெகு அதிகம். நித்திரைமாத்திரம் அந்த வேகத்தைக் குறைத்து மறுநாள் காலை சரியான நிலைமையில் கொண்டுவைக்காமற் போகுமாயின் அம்மனிதன் இந்நிலவுலகை நீத்து வானுலகையடைய வேண்டியதுதான். அவன் பிழைத்திருப்பதே வெகு வருத்தமாக முடியும். காலையில் நித்திரைநீத்து எழும்போது ஹிருதயம் நிதானமாக அடிக்கும். மனம் நிம்மதியாகவிருக்கும். தேகம் சிரமமற்று வேலைசெய்யத் தகுந்ததாயிருக்கும். இக்காரணத்தைக் கொண்டுதான் நம்நாட்டு வைத்தியர்கள் காலைவேளையில் தாது பார்க்கவேண்டும் என்கிறார்கள். இக்காரணத்தை யறியாதார் அநேகரிருக்கின்றனர்.

கூண்டைவிட்டு வெகு தூரஞ்சென்ற பக்ஷிகளெல்லாம் இனிமையான குரலுடன்மீண்டும் இரவைக்கழிக்க கூண்டில் வந்தடைகின்றன. ஏழையும் பணக்காரனும் ஒரேமனதாய் நித்திரையை விரும்புகிறார்கள். சிலர் ஈசுவரன் கொடுத்திருக்கும் இந்த நித்திரையை செய்யவேண்டிய காலத்தில் சரியாகச் செலவிடுகிறதில்லை. சிலர்குறைந்துத் தூங்குகிறார்கள். சிலர் அதிகமாகத் தூங்குகிறார்கள். சிலர் இரவெல்லாம் விழித்துப் படிப்பதோ எழுதுவதோ வழக்கமாக விருக்கிறது. அப்படிச்செய்வதால் அதிக காரியங்களை முடிப்பதாக எண்ணுகிறார்கள். இரவெல்லாம் விழித்திருப்பார்களாகையால் பகலெல்லாம் தூங்கு முகமாகவேயிருப்பார்கள். இரவும் கெட்டுப் பகலும் கெட்டு ஒரு காரியமும் சில சமயத்தில் நிறைவேறாமல் முடிகிறது.

தூக்கத்தில் எவ்வளவு காலம் சரியாகச் செலவிடுகிறோமோ அவ்வளவும் ஆயுள்விருத்தி. தூக்கத்திற்குவேண்டிய காலத்தைக் குறைத்தவனொருவனும் இதுவரை உறப்பட்டதில்லை. எல்லாப்பிராணிகளும் அறுபது நாழிகைக்கு ஒருதடவை தூங்கியே தீரவேண்டும். பகல் 30 நாழிகை விழித்திருக்கலாம். இரவு 30 நாழிகையும் விழித்திருந்தாலுமிருக்கலாம். பிறகு ஒருவன் தூங்கியே தீரவேண்டுமல்லாது சுகத்துடன் தூங்காமலிருக்கமுடியாது. அவன் என்ன வேலைக்காரனாகத் தானிருக்கட்டும். எவ்வளவு பலவானாகத் தானிருக்கட்டும். வண்டியோட்டுகிறவனும் ஏற்கால்மீதிலுட்கார்ந்துகொண்டே தூங்குகிறான். குதிரையின் பேரில்விடாமல் 60 நாழிகை சவாரி செய்தால் அதற்குப் பிறகு அவன் குதிரையின் மேலிருந்தால் சேணத்தின் மேலேயே தூங்கிவிடுவான், யுத்தகளத்தில் இடைவிடாமல் சண்டைசெய்

கிற போர்வீரர்கள் 60 நாழிகைக்குப் பிறகு சண்டை மத்தியிலேயே தூங்கிவிடுவதாக சரித்திரம் எழுதுகிறவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு திடமனதும், சித்தமுமிருந்தபோதிலும் 60 நாழிகைக்குமேல் தூக்கத்தைத் தடுக்கமுடியாது.

---

# PART III.

## KNOWLEDGE ON AGRICULTURE, etc.

BY Mr. G. RAJAGOPAL,
*Late Editor "South Indian Agriculture."*

## விவசாய ஞானம்.

(114-ம் பக்கத் தொடர்ச்சி.)

இயற்கையில் செடிகள் மண்ணை இளகச்செய்கின்றன. வேர் மண்ணை நயமாக்குகிறது. செடி இந்திரியவஸ்துவைச் சேர்க்கிறது. வேர் மண்மணிகளுக்கு இடையில்சென்று வேர்முனையில் உண்டாகும் ரசத்தால் மண்மணிகளைக் கரையச்செய்கிறது. ஒரு பாறுங்கல்லைப்பார்த்தால் முதலில் அதின்பேரில் பாசம் படிந்திருக்கும். கல்கொஞ்சம் மிருதுப்படும். கல் அவ்விடத்தில் குழிந்து மண்ணை வைத்திருக்கும். பிறகு வேறுவித செடிவளரும். இப்படி வருஷாவருஷம் அனேக நூறு ஆண்டுகளில் ஷை மண் ஆழ்ந்துபோம். சில கல் மிகவும் கடினமாயிருந்து பார்வைக்கு யாதொரு மாறுதலும் அடையாததுபோலதோன்றும். மழை வரும்போதெல்லாம் அக்கல்லை மிருதுபடுத்தும். சிலமண்ணில் கல்லுகள் சிறிதாயிருக்கும். சிலவற்றில் எல்லாக்கல்லுகளும் உடைந்து நயமாய் இருக்கும். உறுத்து இருக்கும் கல்லில் நெடுநாள் செடிகள் வளர்ந்திருந்தால் செழுமையான மண் ஆகும். இயற்கை அனேக ஆயிரம் வருஷம்செல்லும். அவ்வளவு நாள் காற்க மனிதனுக்கு பொறுமை கிடையாது. ஆகவே அவன்வெகு சீக்கிரத்தில் மண்ணை இளக்கசெய்கிறான். எவ்வளவு சத்துள்ளதாயிருந்தபோதிலும் கடினமான மண்ணில் நல்லவிளைவு உண்டாகாதென்று ஒவ்வொரு குடியானவனுக்கும் தெரிந்தவிஷயம். பதம் வராதமுன் அதிக ஈரத்திலே செழுமையான களிமண் நிலத்தை உழுதுவிட்டால் இரண்டு மூன்றுவருஷத்துக்கு அது மலடாய்ப்போகும்.

மண்ணின் இளகலை மாற்றினதால் இக்கெடுதி சம்பவித்தது. இதுபோலவே மண்ணிலுள்ள இந்திரீயவஸ்து சீக்கிரத்தில் தகிக்கபட்டால் அம்மண் ஈரம் கொள்ளாது வெயில்காலத்தில் அதிக உஷ்ணம்கொள்ளும். ஆகவே மண்ணின் கொழுமையானது அதினுள் இருக்கும் ஆகாரத்தினால் மாத்திரமல்ல. அதன் இளகும் தன்மையே முக்கியமானது.



ரசாயனசத்துக்கள் ஒன்றுபோலிருந்தாலும் கடினமான மண்ணைவிட சிலுக்க உழுதமெதுவான பொரைச்சல் மண்ணில்விளைவு அதிகம். ஏனெனில் அது அதிக ஈரம்பிடிக்கும். அதிக காற்று உள்ளே இருக்கும். வேர்பரவ அதிக இடம் கொடுக்கும்.

சிகணசத்து அடையும், தாதுவர்க்கங்கள் நன்றாய் உருக்கும், சீதோஷ்ணம் சமப்பட்டு இருக்கும். வேருக்கு நல்ல பிடிப்பு கொடுக்கும். ஆகவே சிலுக்க உழுதநிலத்தில் ஆகாரம் அதிகம் செடிக்கு உதவும். இதனால் சீமை எருவை கடினமான இடத்தில்போட்டால் பயன்படாதென்பது தெளிவாய் விளங்கும்.

மண்தளர்ச்சியை விருத்திசெய்யும் மார்க்கம்:—(1) மண்ணுக்குள்வடிவு (2) சிலுக்க உழுதல் (3) செடி சம்பந்தமான வஸ்துக்களைச்சேர்த்தல் (4) சுண்ணாம்பு முதலியன, இவை மண்மணிகளை இளகச்செய்யும்.

இயற்கையில் மண்ணுள்வடிவு அனேக இடங்களில் இல்லை. ஆனால் இயற்கையில் பலவிதசெடிகள் உண்டு. சோளம்விளையாத பள்ளமானால் நீர்யாசை விளைகிறது.

பயிரறுத்தபின்பு மண்ணில் இருக்கும் வேர், மண்ணை இளகவைப்பதற்குப் பிரயோசனமானது. அவுரியைப்போல் ஆணிவேர் செலுத்தும் பயிர்கள் சிரேஷ்டமானவை. அவுரிவேர் துளை செய்துவிடுவதால் காற்றுகூடவே மண்ணுக்குள் செல்கிறது. மண் காங்கை யடைகிறது. அடியிலிருந்து ஆகாரத்தை மேலுக்குக்கொண்டு வருகிறது. குதிரை மசாலா (Lucerne) செடி 5417 ராத்தல் உலர்ந்ததீவனம் கொடுத்தது. அதன் உலர்ந்த வேர் 8 அங்குலத்துக்குள் 2368 ராத்தல் இருந்தது. அதிக ஆழத்திலுள்ள வேரும், கட்டையும் பழுத்து உதிர்ந்ததழையும் சேர்த்துப்பார்க்கும் பக்ஷத்தில் சரிபாதியாகுமென்று (Roberts) ராபர்ட்ஸ் தெரிவிக்கிறார். வேரில் பிரகாசதமும் சிகணவாயும் தழையிலிருப்பதைவிட அதிகம் இருந்தது. சாம்பல்காரமோ இரண்டிலும் சமப்பட்டிருந்தது. ஒவ்வொரு பயிரிலுள்ள வேர்களைச் சோதித்தாலும் அப்பயிரினால் திரும்பி கிடைக்கும் இந்திரிய வஸ்துவையும் கவனிப்பது மேன்மை.'

ஆகாரம் தன்மை:—மண் என்றால் செடி உணவு. இவ்வுணவு மிகவும் நிதானமாய் உபயோகப்படுகிறது. ராபர்ட்ஸ் ரசாயனசாஸ்திரி செய்த மண்பரீக்ஷைகளில் கேவலம் ஏழ்மை நிலத்திலும் அனேகவருஷம் பயிர் விளைவிக்கக்கூடிய சத்து உண்டு என்று தெரிகிறது. செழுமையான மண்ணில் 200-300 வருஷத்துக்கு நீடித்து மாசூல் கிடைக்கும். அவர் செய்த 34 பரீக்ஷைகளில் ஒரு ஏகரா நிலம் எட்டு அங்குலத்தில் 3217 ராத்தல் சிகணவாயுவும் 3,936 ராத்தல் பிரகாசதமும் 17,597 ராத்தல் சாம்பல்காரமும் வைத்திருந்ததாகத் தெரிகிறது: இச்சத்து ஒரு அங்குலத்தில் 50 பாகம் கண்ணற்ற ஜல்லடையில் வடிந்த நயமான மண்ணில் இருந்தது. ஜல்லடையில்

நின்றமணல், கல்லுகள், முதலியன காளாவட்டத்தில் உளுத்து செடிகளுக்கு உதவிக்கொண்டே வரும். இவ்வாறு உதவாமல் அடைந்து இருப்பது எவ்வளவு விசேஷம். எல்லாம் உதவும் ஸ்திதியிலிருந்தால் சலத்தில் கரைந்து போம். சாக்கிரதையுடன் சாகுபடிசெய்தால் நிதானமாய் உபயோகப்பட்டு வருகிறது. நன்றாய்ச் செய்நேர்த்தி செய்யப்பட்டால் அதிகமாக கொழுமையுண்டாகும். சிலுக்க உழவும் தகுந்தபடி இந்திரியவஸ்து எருவும்சேர்ந்த நிலத்தில் சீமை எருசேர்த்தால் இன்னமும் அதிகமாகப் பலனைக்கொடுக்கும். உழவு அதிகப்பட அதிகப்பட இந்திரிய வஸ்துகுறையும். ஆகவே கட்டாயமாக அதிகம் சேர்க்கவேண்டும்.

மண்ணுயிர்-மண் உயிரற்றதல்ல. அதிக பிராணிகளிலும் சுருசுருப்பும் இருக்கின்றன. காற்று, சலம், சூடு ஆவியாதல் முதலியன அனேக பிராணிகளுக்கு உதவி செடிகளையும் மண்மணிகளையும் மட்கச்செய்து நிலத்துக்கு உரமேற்றுகின்றன. மண்ணை ஓர் ஆய்தசாலைக்கு ஒப்பிடலாம். எல்லா வஸ்துக்களும் மண்ணிலிருந்து பிறந்து மண்ணுக்குத் திரும்புகின்றன. ஆக மண்ணில் அனேக உயிர்மடிவதும் மறுபடியும் உண்டாவதும் உண்டு.

---

## COMMERCE AND INDUSTRY.
## வர்த்தகமும் கைத்தொழிலும்.

### ஸோப் செய்யுந்தொழில்.

(116-ம் பக்கத் தொடர்ச்சி.)

இரண்டு வருஷங்களுக்குமுன் 75 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பல வகை ஸோப்புகளை நாம் இறக்குமதி செய்திருக்கிறோம். இதல்லாது ஸோப்புக்கு அவசியமான காஸ்டிக்ஸோடா என்னும் ஒரு வகை உப்பையும் $8\frac{1}{2}$-லட்சம் ரூபா மதிப்புவரையில் நாம் வெளிநாடுகளிலிருந்து தருவித்திருக்கிறோம். இச்சென்னைராஜதானி, ஸோப்பின் நிமித்தம் இவ்வளவு லட்சம் லட்சமாகச் செலவிடுகையில், ஸோப்புக்கு இப்பாகத்தில் கிராக்கியில்லாமற் போகவில்லை யென்று தெளிவாக ஏன் சொல்லலாகாது? இங்கிருக்கும் சீதோஷ்ண நிலை ஸோப்தொழிலைப் பொறுத்தமட்டில் சௌகர்யமானதே. ஸோப்புக்களைக் காயவைப்பதற்காகப் பெரிய பெரிய யந்திரங்களாவது அவைகளைப் பார்த்துக்கொள்ள தொழிலாளிகளாவது வேண்டுமென்பது அவசியமல்ல. ஸோப்பைத் தயாரிப்பதில் நான்குவகைச் சாமான்கள் அவசியமாகும். எண்ணெய், கொழுப்பு, ஆல்காலி, (மரவுப்பு) வாஸனைத் திரவியங்கள். எண்ணெயும் கொழுப்பும் காஸ்டிக் ஸோடா அல்லது பொடாஷ் என்னும் வஸ்துவோடு நெருக்கமாகச் சேர்க்கப்படுகையில், அச்சேர்க்கை ஸோப்பாக மாறுகின்றது. அதிலும் இரண்டு விதமான தயாரிப்புகளுண்டு. உஷ்ண



மென்பதைக் காட்டாமலே பச்சையாகவே தயாரிக்கப்படும் ஸோப் வகையொன்று; மற்றொன்று மேற் சொன்னவாறு சேர்மானங்களை ஒன்று கூட்டிக் கொதிக்கவைத்துத் தயாரிப்பது. குளிர்ந்த வகையாகச் செய்யப்படும் விவரணங்களில் தேங்கா யெண்ணெய்போன்ற சிற்சில எண்ணெய்கள் பெரும்பாலும் காஸ்டிக் ஸோடாவுடன் கலக்கப்படுகின்றன. இம்மாதிரி ஸோப்புகளைச் செய்ய யந்திரங்கள் பாரியாயிருக்க வேண்டுவது அனுவசியம். தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதும் அனுவசியம். தயாரிக்கும் வகை மிகவும் சுலபம். ஒரு பாத்திரத்தில் எண்ணெயை அளந்து விட்டுக்கொண்டு மற்றோர் பாத்திரத்தில் காஸ்டிக் ஸோடா கலந்து செய்திருக்கும் குழம்பைத் தயாரிக்கவேண்டும். பிறகு அக்குழம்பினை மெதுவாக எண்ணெயடங்கிய பாத்திரத்தில் விட்டுக்கொண்டிருக்கும் அதேசமயத்தில் ஓரகப்பையைக் கையிலெடுத்துக் கீழிருக்கும் பாத்திரத்திலுள்ள எண்ணெயைக் கிளறிக்கொண்டே யிருக்கவேண்டும். இவ்விதமாக எல்லாக் குழம்பும் எண்ணெயுடன் கலக்கப்பட்டபிறகு அகப்பையால் கிளறுவதை நிறுத்தாது கீழிருக்கும் சேர்மானத்தின் இளகல் பாதி கெட்டிப்படும் வரையில் கிளறிக்கொண்டே யிருக்கவேண்டும். அப்போது தான் வாசனைத்திரவியம் சேர்க்கப்படவேண்டிய சமயம். வாசனைத்துளிகளைச் சேர்த்துப் பிறகு யதாப்பிரகாரம் பாதி யிளகலாயிருக்கும் சேர்மானம் முழுவதும் கெட்டிப்படும் வரையில் அதைக் கிளறிக்கொண்டே யிருந்தால் நாழிகை யேற யேற அச்சேர்மானம் கெட்டியாகும். பிறகு அதை மற்றோர் தட்டையான பாத்திரத்தில் எடுத்துப்போட்டு அதன்மீது மற்றோர் தட்டையான கட்டையினால் அழுத்தி அடிப்பாத்திரத்தின் அடிப்புறம் வரையில் சேர்மானம் பரவியிருக்கும்படி செய்து பிறகு குறைந்தது 24-மணிநேரம் ஆறவிடவேண்டும். அதற்குப் பிறகுதான் அதைப் பல பில்லைகளாகவும் கட்டிகளாகவும் அறுத்து முத்திரையிடுகிறார்கள். இம்மாதிரியான சோப்புகளிலிருக்கும் அனுகூலம் என்னவென்றால் காஸ்டிக் ஸோடா குழம்பும் எண்ணெயும் சேருங்கால் க்ளிஸரின் என்னும் ஒரு புதியவஸ்து உற்பத்தியாகிறது. இது வெளியேற்றப்படுவதில்லை. ஸோப்பை ஆறவிடும்போது இதுவும் ஸோப்புடனேயே கலந்து நிற்கிறது. அப்படி நிற்பது கண்களுக்குச் செவ்வையாகப் புலப்படுவதில்லை. இதல்லாமலும் தயாராய்விட்டதாக யாம் கருதும் ஸோப்பில் உப்பு சம்பந்தமான அம்சமும் சரியாகச் சேராமல் தனித்தனியாக நிற்கிறது. இப்படிப்பட்ட காரணங்களினால் இந்த ஸோப்புகளை நாம் உபயோகிக்கும்போது வியர்வை ஒருபுறம் பலமாயுண்டாகவும் மற்றோர் புறம் நமது சர்மத்திற்கு சொரி சிறங்குபோன்ற நோய்களைக் கொணர்ந்தும் விடுவதாகின்றது.

சேர்மானங்களைக் கொதிக்கவைத்துத் தயாரிக்கப்படும் ஸோப் வகைராக்கள் மேலே சொன்ன தயாரிப்பு வகையினும் மேலானவை. 'ஸோப் தொழிலைக் கைக்கொண்டிருப்பவர்கள் அனைவரும் இம்முறையையே

அவலம்பித்து வருகிறார்கள். இதற்கு அவசியமாய் வேண்டுவது அனேக யந்திரக் கருவிகளடங்கிய தொழிற்சாலை, புதிதாய் உற்பவிக்கும் க்ளிஸரீன் என்னும் வஸ்துவை கொதிக்கவைத்துச் செய்யும் முறையினால்தான் தனித்தெடுக்கவேண்டும். பெரிய யந்திரங்களடங்கிய தொழிற்சாலை ஸ்தாபனத்திற்கு முன்பணமும் அதிகமிருக்கவேண்டும். போதுமான பணம் செலவு செய்து, நீராவியினால் சோப்புக்குரிய சேர்மானத்தைக் காய்ச்சுவதற்காக இரும்புத் தொட்டிகளும் பிடிகளும், நீராவியை விடுவதற்குரியத்தான குழாய்களும் சேர்த்தமைக்கப்படுகின்றன. கொஞ்சமாவது சிரமத்திற்கு இடமில்லாதவாறு சேர்மானம் ஸோப்பாக இறுகும் வரையில் கொதிக்க விடப்பட்டுப் பிறகு சிறிது உப்பைத் தூவி இறுகிய ஸோப்பைக் கசியுந் தண்ணீரிலிருந்து பிரிக்கிறார்கள். அப்போது ஸோப் தண்ணீர்மீது மிதந்து வருகிறது. பிறகு அச்சேர்மானத்தைத் தனித்தெடுத்து குளிர் காற்று படும்படிக்காவது மற்றும் குளிர்ந்த ஜலம் விழும்படிக்காவது தகுந்த கருவிகளைக் கொண்டமர்த்தி ஸோப்பைத் தனியே யெடுத்து விடுகிறார்கள். பொதுவாய் ஸோப் என்னும் வஸ்து செய்யப்படுவது இம்மாதிரியாகத்தான். இதிலிருந்தே பலவகையான வர்ணங்கள் கொண்ட ஸோப்புகள் தயார் செய்யப்படுகின்றன. சேர்மானம் இந்த நிலைமையை யடைந்ததும் வாஸனைத் திரவியங்களை அவைகளோடு கலந்து வார்ப்படக் கிண்ணங்களில் ஊற்றி ரோஜாஸோப் என்றும், சந்தனஸோப் என்றும் மல்லிகை ஸோப் என்றும் பலவகைப் பெயரிடுகிறார்கள். அதற்குப் பிறகு காகிதப்பெட்டிகளிலும் இதர வகைகளிலும் ஸோப்புக்கட்டிகள் போட்டுப் பாக் செய்யப்பட்டு வியாபாரத்திற்குரிய வஸ்துக்களாக மாறுகின்றன. சேர்மானம் முதலிற் காய்ச்சப்படுகையில் இறுகிய பாகம் ஒருபுறமும் உப்பிட்ட தண்ணீர் மற்றோர் புறமுமாகத் தனித்திருப்பதாய்ச் சொன்னோமல்லவா? அவ்வுப்புத் தண்ணீரை நன்றாயுணராமல் நம்மிந்தியத் தொழிலாளர் பலர் கீழே கொட்டிக்கொண்டிருந்தார்கள். க்ளிஸரின் என்னும் வஸ்து அவ்வுப்புத் தண்ணீரில்தான் கலந்திருக்கிறது. சிற்சில சாஸ்திரீயப் பரீக்ஷைகளால் உப்புத்தண்ணீரிலிருந்து க்ளிஸரீனைப் பிரித்து எடுத்து விடும்பக்ஷத்தில் க்ளிஸரீனுக்கு நல்ல 'பேய்' கிடைக்கும். இது பரியந்தம் அவ்வுண்மையை யுணராத ஸோப்புத்தொழில் செய்வோர் பலர் அந்த லாபத்தை இழந்திருந்தனர்; என்றாலும் ஸோப்புத்தொழில் கற்றுவந்த நிபுணர்கள் இதையறிந்து சொன்னதோடு சேர்மானக் 'கசண்டுகளோடு ரோஜனத்தை (Rosin)ச் சேர்த்துக் கொதிக்கவைத்து வஸ்திரம் வெளுப்பதற்கான காரஸோப்புகளையும் கார்பாலிக் திராவகஞ் சேர்த்த கார்பாலிக் ஸோப்புகளைச் செய்யும் வழிகளையும் செம்மையாக அறிவித்தார்கள். ஆனதுபற்றி இவ்விராஜதானியில் சோப் செய்வதற்கான எத்தனையோ சௌகர்யங்களுண்டு என்பதற்கு வேறென்ன அத்தாக்ஷி வேண்டும்? அதன் வியாபார நிலையை அடுத்த சஞ்சிகையில் எழுதுவோம்.'

(இன்னும் வரும்.)



# PART IV.

## HINDU LAW.

## ஹிந்துலா.

(122-ம் பக்கத் தொடர்ச்சி.)

கே.—ஸ்திரீ புருஷர்களுக்குள்ள விவாக சுதந்தரங்களும் விவாகத்துக்குரிய கிரியைகளும் எல்லா தேசத்திலும் ஒன்றுபோல இருக்குமா?

ஜவாப்:—ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு மதத்தை பின்பற்றுகிறவர்களுக்குள்ளும் மாறுபாடாகவேயே இருக்கின்றன.

கே.—ஸ்திரீ புருஷர் இருவர்களுக்குள் புருஷருக்கு ஸ்திரீகளைக்காட்டிலும் ஜாஸ்தியான ஸ்வதந்தரங்கள் கொடுக்கப்பட்டு ஸ்திரீகள் புருஷர்களைசார்ந்தவர்களாக இருக்கக் காரணமென்ன.

ஜ.—புருஷர்களுக்கு ஸ்திரீகளைக் காட்டிலும் பொதுவாக தேக தார்ஷ்டிகமும் (பலம்) மனோதயிரியமும் ஜாஸ்தியாக இருப்பதினால் ஸ்திரீயானவள் ஏற்கனவே புருஷனுக்கு உள்பட்டவளாக இருக்கவேண்டியதாய் இருக்கிறது. இக்காரணத்தினாலேயே விவாக விஷயத்திலும் மற்றெவ் விஷயத்திலும் புருஷனுக்கு ஸ்திரீகளை காட்டிலும் அதிக சுதந்தரம் ஏற்பட்டிருப்பதாக ஹிந்துலாவின் பற்பல பாகங்களிலுள்ள எவ்விஷயத்தினாலும் வெளியாகிறது. அல்லாமலும் ஹிந்து புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் இருக்கும் மற்றோர் முக்கியமான விஷயம் யாதெனில் இந்து புருஷர்கள் விவாகம் செய்துகொள்ளாமலேயே சாஸ்திரங்களுடையவும் மதங்களுடையவும் வர்ணாச்ரம தர்மங்களுடையவும் கோட்பாடுகளுக்கு யாதொரு யெவ்வித பாதகமுமின்றி தங்கள் வாழ்னாட்களை முடித்துவிடலாம். ஆனால் இந்து மதத்தைச்சேர்ந்த பெண்கள் எத்தேச வாசிகளாயிருப்பினும் எவ்வகுப்பைச் சேர்ந்தவராயினும் விவாகம் செய்துகொண்டே தீரவேணும்.

கே.—ஹிந்து மதத்தைச்சேர்ந்த ஆண் பிள்ளைகள் கல்யாணம் இல்லாமலே வாழ்நாளை கழிக்கலாமென்று சொன்னீர்கள். ஆனால் விவாகம் செய்து கொண்டால் ஒரே ஸ்திரீயைத்தான் விவாகம் செய்துகொள்ளலாமா? அல்லது பல ஸ்திரீகளை விவாகம் செய்யலாமா?

ஜ.—விவாகம் செய்துகொண்ட ஒருவனுக்கு முதலாவது தாரம் ஆண் ஸந்ததி யில்லாமலாவது அல்லது மலட்டுத்தனமாகவாவது அல்லது துர்வியாதியினால் பீடிக்கப்பட்டாவது அல்லது நடத்தைப் பிசகாய் இருந்தாலாவது அல்லது துர்குணம் உள்ளவளாய் இருந்தாலாவது புருஷன் 2-வது பார்யையை விவாகம் செய்துகொள்ளலாமென்று

யேற்படுகின்றது. ஆனால் ஹிந்துக்களுக்குள் தொன்றுதொட்டு நடந்தேறிவரும் வழக்கங்களினால் ஷை காரணங்கள் யாதொன்றும் இல்லாமலேயே புருஷன் இஷ்டப்படி யெத்தனை தாரங்களையும் விவாகம் செய்துகொள்ளுவதற்கு தடையில்லை யென்று தெரியவருகிறது. புருஷன் ஒருதாரம் இருக்கும்பொழுது மறுபடியும் விவாகம் செய்துகொள்ளும் காரணத்தால் முன்தாரங்கள் இவனை விட்டு நீங்கிப்போக நியாயமாக மாட்டாது. (I ம. ஹை. கோ. ரி. 375).

கே.—புருஷர்கள் பல தாரங்களை விவாகம் செய்துகொள்ளுவதுபோல் ஸ்திரீகள் பல புருஷர்களை விவாகம் செய்துகொள்ளலாமா?

ஜ.—ஒரு ஹிந்து ஸ்திரீயானவள் யேக காலத்தில் ஒரு புருஷனுக்கு மேற்பட்டு விவாகம் செய்துகொள்ளக்கூடாது. ஆனால் அப்படி விவாகம் செய்துகொள்ளும் வழக்கமானது ஹிந்து ஜாதியைச் சேராத நாகரீகமற்ற ஜாதியாருக்குள்ளும் காடு மலை முதலிய இடங்களில் வாசம்செய்துவரும் ஜனங்களுக்குள்ளும் இருந்து வருவதாக தெரியவருகிறது. ஆனால் ஒரு ஹிந்து ஸ்திரீயானவள் தன் புருஷன் உயிரோடு இருக்கும்பொழுது வேறு ஒரு புருஷனை விவாகம் செய்துகொள்ளுவாளாகில் அவள் இந்தியன் பினல்கோடு 494-வது பிரிவின்படி ஏழு வருஷம் கடுங்காவல் தண்டனைக்கும் அபராதத்துக்கும் உள்ளாகும். தண்டினைக்குள்படக்கூடிய குற்றம் செய்தவளாகிறாள்.

கே.—ராக்ஷஸம் பைசாசம் என்னும் விவாகங்களை இக்காலத்தில் நடத்தலாமா?

ஜ.—அவ்விருவகைப்பட்ட விவாகங்களையும் இக்காலத்தில் நடத்தினால் இ. பி. கோடு 366, 376-வது பிரிவுகளின்படி கடின காவல் விதிக்கப்படக்கூடிய குற்றங்களாகும்.

கே.—விவாகம் செய்துகொள்ளுகிற ஆண் பெண்களுடைய வயதைப்பற்றி யேதும் விதிகளுண்டா?

ஜ.—விவாகம் செய்துகொள்ளும் ஸ்திரீ, புருஷர்களில் புருஷன்மேல்பட்டவனாயும் ஸ்திரீயை ஆண்டு அடக்கி ஆளவேண்டியவனாகவும் இருப்பதினாலும், ஸ்திரீ தேகவளர்ச்சியுடையவளாய் இருக்கிறபடியாலும் புருஷனைக் காட்டிலும் சீக்கிரமாக ப்ரௌடையாகிறவளாகையாலும் ஸ்திரீயைப் பார்க்கிலும் புருஷன் வயதில் அதிகமாக இருக்கவேண்டும், என்ற கொள்கைகள் இருப்பதாக தர்ம சாஸ்திரங்களினால் வெளியாகின்றது.

கே.—இந்த கொள்கை இந்து மதத்தைச் சேர்ந்த எல்லா ஜாதியாராலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறதா?

ஜ.—இது பிரம்ம க்ஷத்திரிய வைசியர்கள் எல்லோராலும் சூத்திரர்களில் அனேகராலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. (இன்னும் வரும்.)



# PART V.

## CO-OPERATION IN AGRICULTURE.

By the Hon'ble Diwan Bahadur L. D. SWAMIKANNU PILLAI, M.A., B.L., LL.B., *Registrar of Co-operative Societies.*

## விவசாயத்திற் கூட்டுறவு.

(124-ம் பக்கத் தொடர்ச்சி.)

வாங்கின கடனைத் தவணை தவறாது செலுத்துவதே நாணயத்திற்கழகு. நாணயத்தைக் காப்பாற்றுவோன் வியவகாரத்தில் சிறிதும் நஷ்டமடையமாட்டான்; முந்தி ஒருவன் கடன் வாங்கினால் அவன் பட்ட பரிசிரமத்திற்கும் இப்போது ஒருவன் கடன்காரனாய்விட்டால் அவன் படும் தொல்லைகளுக்கும் வித்தியாஸமுண்டு. இவ்விதமான தராதரத்தை 'என்ஸைக்ளோபீடியா ப்ரிடானிகா' என்னும் கிரந்தத்தில் 'கடனிறுப்பது' (usury) என்னும் தலையங்கத்தின்கீழ் வெகு விஸ்தாரமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. அவ்வியாசத்திற் கண்டிருக்கும் பற்பல அம்சங்களில் கடனுக்குதவும் வட்டியுமொன்று. ஜூலியஸ் ஸீஸர் என்பவர் இடாலியில் ராஜாங்க நிருவாகத்தை நடத்தியபோது முதல்தரமான ஜாமீன்பேரில் கொடுக்கப்பட்ட கடன் தொகைக்கு ரோம்நகரில் சார்ஜு செய்யப்பட்டுவந்த வட்டி விகிதம் நூற்றுக்கு நான்குக்கு மேலில்லையாம். அந்நகரிலல்லாது வெளி மாகாணங்களில் கடன்கொடுப்போர் நூற்றுக்கு 25 முதல் 50 வரையில் வட்டி விகிதம் வாங்கி வந்ததுமுண்டு. வட்டி விகிதத்தைச் செலுத்துவதில் கடன்காரர்கள் தவணைதவறி விடுவார்களானால், இந்த 4 வட்டிக்குக் கடன் கொடுப்பதுடன் பெரிதும் சிரமப்பட்டுப்போகும். சென்னையிலிருக்கும் நாம் 1900 வருஷங்களுக்குப் பிறகு ஜூலியஸ் ஸீஸர் காலத்திருந்த ரோமானியரது விவகாரப் பழக்கங்களை நாடவேண்டியிருக்கிறது. ரோமானியரைச் சேர்ந்த மாகாணங்களில் வசிக்கும் பிரஜைக்கும் நம்முடைய ரயத்துக்கும் வித்தியாஸமில்லை யென்றே சொல்லலாம். அதாவது நமது ரயத்துகள் எந்த நிலைமையில் இருக்கிறார்களோ அந்நிலைமையிலேயே ரோமானிய மாகாணப் பிரஜைகளுமிருந்தனர். இங்கிருப்பதுபோல ரோமானிய ராஜாங்கத்தைச் சேர்ந்ததான தலைமைஸ்தானங்களில் ஜில்லா முன்சீப் கோர்ட்டுகள் ஸ்தாபிதமாயிருந்ததில்லை. பணம் ஒருவிசை கடனாகக் கொடுத்தால் அதைத் திரும்ப வாங்குவதற்குச் சரியான வகை தொகையோடு கூடின மார்க்கமில்லாததுபற்றியே அவ்விடங்களில் அபாரமான வட்டி விகிதம் ஏற்பட்டிருந்ததுபோலும் மார்க்கமென்று மேலே சொன்னோமே. எம்மார்க்கமெனின், வக்கீல் மூலமாகவோ நியாயஸ்தலங்கள் மூலமாகவோ பின்னும் இதர வழிகள் மூலமாகவோ பணத்தை வாங்க வியலாது, கடன்

தொகையைப்பற்றின அம்சம், கொடுத்தவனையும் வாங்கினவனையும் சேர்ந்த மனநிலையைப்பற்றியதா யிருந்ததென்பதைத் தவிர வேறொன்றும் சொல்லுவதற்கில்லை. எனவே லா கோர்ட்டுகள் மூலமாக முந்தியெல்லாம் கடன்தொகை வசூலிக்கப்பட முடியாமலிருந்தது. இவ்விடங்களிலோ இப்போது டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டுகளும் ஸ்மால்காஸ் கோர்ட்டுகளும் இதரவிதமான துறைகளும் தவணை தவறியோ, வாங்கின கடனைக் கொடாமலே பசப்பும் கடன்காரர்களை நன்மார்க்கத்தில் திருப்பி நாணயஸ்தர்களாகவும் கிருகஸ்தர்களாகவும் ஆக்க, அவை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தவணையைக் கவனியாமலும் கடனைச் செலுத்தவேண்டிய காலத்தை அவமதித்தும் நாட்களை யோட்டிச்செல்லும் கடன்காரனுக்கு விதிக்கப்படும் அபராதம், எச்சரிப்பு, காவல்போன்ற தண்டனைகளால் கடன் கொடுப்பவர்கள் ஒருவாறு திருப்தியடையக் கூடுமானாலும், முன்னிருந்ததுபோல சில்லறைக் குற்றவாளிகளைக் கடனுக்காகவேண்டி ஏட்டாதவாறு தண்டனைக்குட்படுத்துவது அவ்வளவாக அங்கீகரிக்கக்கூடியதல்ல; சிறிது சிரமம் எடுத்துக்கொண்டு வேலை செய்யும் பட்சத்தில் அச்சில்லறைக் குற்றவாளிகளை சட்டதிட்டங்களுக்குள்ளடங்கின பிரஜாலட்சணம் பொருந்தியவராக மாற்றிவிடலாம். இவ்வேலையையே இப்போது நாம் அவசியமாகக் கவனிக்கவேண்டும். கூட்டுறவில் ஆர்வங்கொண்ட அபிமானிகள் இவ்விஷயத்தில் அக்கறை காட்டுவாராயின் அதுவே அவர்கள் தம் பிராதாக்களுக்குச் செய்த பேருபகாரமாகும். தமக்குக் கிட்டும் ஒவ்வொரு சமயத்திலும் விவசாயிகளுக்கு உபந்நியாசங்கள் மூலமாகவும் நேராகவும் தவணை தவறாது கடன் செலுத்துவதைக் குறித்துப் போதிக்கவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த நிருவாகிகள் தம் வரம்புக்குட்பட்ட மெம்பர்களை மேற்சொன்ன விதியை மீறாதிருக்கும்படி அடிக்கடி வற்புறுத்திக்கொண்டிருக்கவேண்டும். விவசாயிகளுடைய மனதிலே இந்நல்லம்சங்கள் செம்மையாகப் பதியும்படி செய்வதை நாம் அடிக்கடி கவனித்துக்கொள்ளவேண்டும். அப்போது நாணயமென்பது வேரூன்றிச் செழிப்பதோடு எந்த உத்தேசத்துடன் கூட்டுறவு என்னும் அம்சம் ஸ்தாபிதமாயிற்றோ அது நிறைவேறவும் செய்யும். பொது ஜனங்களுடைய க்ஷேமலாபங்களும் பூர்த்தியாகும். பரஸ்பரோபகார நட்பும் மேலிடும்; ஜனங்களும் சுகஜீவிகளாகக் காலங்கடத்துவார்கள். முறை தப்பி நடக்குமொருவன் இறுதியில் மனங்கசிந்துபோக நேருமென்றிருக்கும் உலக சித்தாந்தத்தை மனதில் தாங்கி வேலை செய்வதே கூட்டுறவினர்க்கழகு. கூட்டுறவின் முழுமுதற் கடமையுமதுவே. இதைக் கவனியாமல் அசிரத்தை மிகுந்து தாறுமாறான காரியத்தில் பிரவேசிப்போர் கடைசியில் கடன் தொந்தரவுகளால் தொல்லைகளின் வாய்ச்சிக்கிக் கண்ணுங்கண்ணீருமாக நிற்பார்கள். ஆனதுபற்றி விவசாயத்திற் கூட்டுறவு இருக்கவேண்டுவது அத்தியாவசியமாகும். அக்கூட்டுறவை வியாபிக்கச் செய்வதற்காக அதிகாரிகள் கூட்டுறவு சங்கங்களை



ஆங்காங்கு ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவைகளை விருத்திக்குக் கொண்டுவருவதையே பொதுஜன ஸமூகத்தைச் சேர்ந்த பிரமுகர்களும் மற்றோரும் நாடி முனையவேண்டும். அப்போது அச்சபைகள் பலன் அளியாமலிராவென்பது நிச்சயம்.

# PART VI.

## கல்வி.

## THE TEACHER.

### உபாத்யாயர்.

பூவுலகில் ஜனித்துள்ள ஒவ்வொரு மனுஷ்யனுக்கும் எண்ணும் எழுத்தும் கண்ணைப்போல் அவசியமானவை. ஆகவேதான் அதிவீரராம பாண்டியரும் 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார். அத்தகைய எண்ணையும் எழுத்தையும் பிறருக்கு கற்பிக்கும் ஆசிரியன் கடவுளுக்குச் சமானமானவன் என்பதை ஒட்டி அப்பாண்டியனே 'எழுத்தறிவித்தவ னிறைவனாகும்' எனக் கூறியுள்ளார்.

மாத்ரு தேவோ பவ : பித்ருதேவோ பவ :
ஆசார்யதேவோ பவ : அதிதிதேவோ பவ :

என்று கூறியதிலிருந்து ஆசாரியர்கள் எவ்வளவு மேம்பட்டவர்கள் என்பது தெரியவரும். முற்காலத்திருந்த ஆசாரியர்கள் ஒவ்வொருவரும் தேவதா அம்சம் பெற்றிருந்தார்கள் என்பதில் கொஞ்சமும் ஸந்தேகமில்லை.

தற்காலத்திலும் தேவதாம்சம் பொருந்தியவர்கள் அபூர்வமாக விருக்கிறார்கள். காலஞ்சென்ற ஸ்ரீமான். கோபாலகிருஷ்ண கோகலே என்பவர் சாமான்யமானவரா? இப்பொழுது லோகத்திற்கே திலகமாய் கவிச்ரேஷ்டராய் விளங்கிவரும் ஸர். ரபீந்த்ரநாத் டாகூர் என்பவர் தேவதாம்சமுள்ளவர் என்பதில் ஆக்ஷேபனையுண்டோ?

உபாத்தியாயரது லக்ஷணம் என்ன? அவருக்கு என்னென்ன குணங்களிருக்கவேண்டும்? அவருடைய வேலை என்ன? வாழ்வு என்ன? அவரது கடமை என்ன? உரிமை என்ன? இப்படிப்பட்டக் கேள்விகள் உண்டாகலாம். இக்கேள்விகளுக்கு ஒவ்வொன்றாகத்தான் பதில் கூறமுடியும்.

உபாத்தியாயராயுள்ளோர் விஷயக் களஞ்சியமாகவும், எல்லா விஷயங்களையும் அறிந்து சொல்லுகிறவராயும், சிறுவர்களுக்கு உபயோகமுள்ளதும் உபயோகமற்றதுமான சமஸ்த விஷயங்களையு மளிப்பவராகவுமிருப்பதல்லாமல் அவர்களுக்கு வழிகாட்டியாகவும், தத்துவ சாஸ்திரியாகவும், சிநேகிதனாகவும், அவர்களது ஆசார ஒழுக்கங்களை சீர்திருத்துவோராகவும், தேகப்

பியாசம் செய்விப்போராகவும், அவர்களது மனதை விசாலப்படுத்துபவ ராகவு மிருக்கவேண்டும்.

இவ்வாறு இருப்பதன் முன் பிள்ளைகளைப்பற்றிய விஷயங்களெல்லா வற்றையும் தெரிந்துள்ளவராயும் அனுபவமுள்ள ஆத்ம தத்துவசாஸ்திரி யாகவும், நீதி சாஸ்திரியாகவு மிருக்கவேண்டும். உபாத்தியாயர் என்ற பெயருக்கு அருகராக வேண்டுவதற்குமுன் கவனப்படிப்பும், நீண்டகால அனுபவமுமுடையவரா யிருக்கவேண்டும். தனக்குப் பிள்ளைகளின்மீது திடமான பிரியமும் அனுதாபமுமில்லையானால் அவர் உபாத்திமைத் தொழிலை அவலம்பிப்பதற்கு பிரயத்தனப்படாமலிருப்பது மிகவும் உத்தமமானது. அவர் தன் நன்மையின் பொருட்டும், யாருடைய அபிவிர்த்திக்குத்தான் உத்தரவாதமாக விருக்கிறாரோ அவர்களுடைய நன்மையின் பொருட்டும், அவ்வேலையை மேற்கொள்ளாதிருப்பது நலம். 'ஒருபாத்தியாயன் நல்லெண்ணமும் நன்னோக்கமு முடையனில்லனாயின் அவன் உபாத்திமைத் தொழிலை விடுத்து மளிகைக்கடை ஒன்றை வைத்து வர்த்தகத்தொழிலை மேற்கொள்ளட்டும்; அதில் அவன் சிறந்து விளங்குவான்.

உபாத்திமைத் தொழிலில் கீர்த்தி பெறவேண்டு மென்றிருப்பவன் மிகுந்த பொறுமையும், தேகாரோக்யமும் வசீகரமும் சந்தோஷகரமுமான ரூபமும், சமத்காரமாய்ப் பேசுங்குணமும், சுலபமாய்ப் பல விஷயங்களில் புத்தி பிரவேசிக்கும் சக்தியும், கஷ்டப்படுவதற்கு அபாரமான சாமர்த்தியமும், ஸ்திரமான நம்பிக்கையும் தோஷரகிதமான குணமும், மரியாதையும், சுறுசுறுப்பும், சாந்தமும் கூர்மையான கண்ணும் காதும், ஆண்மையும் விடாமுயற்சியும், பக்ஷத்தினால் மறைக்கப்பட்ட திருட சித்தமும் பெற்றவனா யிருக்கவேண்டும்.

பிள்ளைகளுக்குத் தெளிவாகக் கேட்கும்படியான மெல்லிய குரலில் பாடம் சொல்லும் உபாத்தியாயரை ஒருவன் தெரிந்தெடுப்பது மிகவும் கஷ்டம். உபாத்தியாயர்களில் பெரும்பான்மையோர் உரத்திக்கத்தினால் தான் பிள்ளைகளுக்குப் பாடம் கற்றுக்கொடுப்பதாகுமென்று நினைக்கிறார்கள். இவ்விரண்டும் சுத்தப் பிசகான காரியம்: 'இந்தமாதிரி உரத்திக் கத்துவதால் சீக்கிரத்தில் பலஹீனமடைகிறான். தொண்டையும் கம்மிக்கொள்கிறது. எந்த விஷயத்தை நன்றாக மனத்தில் பதியவைக்கவேண்டுமென்று விரும்புகிறானோ அப்பொழுது சொல்லச் சக்தியற்றிருக்கிறான். மெல்லிய குரலில் பாடம் சொல்லிப் பழக்கப்பட்டிருக்கும் உபாத்யாயர் திடீரென்று உரத்துச் சொல்வதால், பிள்ளைகளின் கவனத்தைத் தன் பக்கம் இழுத்துக் கொள்வதுமல்லாமல் 'பின் தங்கும்' பையனை விஷயங்களைத் தெரிந்து கொள்ள அழைக்கவும் பிரயோஜனப்படுகிறது. எப்போதும் உரத்துக் கத்தும் உபாத்யாயர் மற்றைய வகுப்பிற்கு இடையூறாக விருப்பார். பிள்ளைகள் பேசிக்கொண்டு மிருக்கலாம், ஒருவருக்கொருவர் தள்ளி விளையாடிக் கொண்டு மிருக்கலாம். அப்படியிருந்தும் உபாத்யாயரின் உரத்த குரலை



ஸ்பஷ்டமாய்க் கேட்கவும் கூடும். அதே பிள்ளைகள் தாழ்ந்த குரலில் சொல்லும் உபாத்யாயரிடத்தில் அமைதியாயும் சந்தடியின்றியும் இருக்க வேண்டியது அவசியமாக விருக்கிறது. எவனாவது, ஒரு பையன் தான் சொல்லும் விஷயங்களைக் கவனியாமலிருந்தால் அப்போது உபாத்யாயர் "நீ மாத்திரம் சந்தடி செய்யாமல் அமைதியாய்க் கவனித்திருந்தால் நான் சொல்பவைகளை நன்றாகக் கேட்டிருப்பாய். உனக்காக நான் மறுபடியும் விஷயங்களைத் திருப்பிச் சொல்லமாட்டேன்" என்று சொல்ல இடமிருக்கிறது. பிள்ளைகளால் தெரிந்துகொள்ள முடியாதபடி உரத்திக் கூச்சல் போடவேண்டியதைக் காட்டிலும், அவர் சொல்லும் விஷயங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளப் பிள்ளைகள் அமைதியாக விருக்கவேண்டியது தான் முறைமை. எவ்வளவு மெதுவாக உபாத்யாயர் பேசுகிறாரோ அவ்வளவு அதிகமாகப் பிள்ளைகள் தங்களுக்குள் யோசனை செய்ய இடமுண்டாகும். பிள்ளைகள், கேள்விக்குப் பதில் சொல்லும்போது உபாத்யாயரின் குரலைப்போல வகுப்பு முழுமையும் கேட்கும்படியாகச் சொல்லவேண்டும். எந்தமட்டில் உரத்திப் பேசினால் போதுமோ அந்த விதமாய்ப் பேசவேண்டியது. உபாத்தியாயரின் தொழில் பிரசங்கம் செய்வதல்ல. (இன்னும் வரும்)

ஓர் உபாத்யாயர்.

---

# PART VII.

## NEWS AND NOTES.

## ஸமாசாரக் குறிப்புகள்.

### WAR NOTES.

### யுத்தக் குறிப்புகள்.

#### புதிய கப்பல்கள்.

அமெரிகா ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த ஸ்டீல் கார்பொரேஷன் அதிகாரிகள் நியூவார்க் குடாக்கடலின் ஒரு பகுதியை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். சாதாரணமாயிருக்கும் 5000 டன்களுக்குமேல் 8000 டன்களுக்குள்ளாக விருக்கும் கப்பல்களைக் கட்டுவிக்க வேண்டு மென்பதே அக்கார்பொரேஷன் அதிகாரிகள் உத்தேசமாம்.

---

#### ஒரு பெரிய நன்கொடை.

'கொடையில் கர்ணன்' எனவே யாவென்று பூவுலகத்தவர் சொல்லும்படியாக லட்சம் லட்சமாகப் பவுன்களைத் தருமத்திற்காகச் செலவிடும் மிஸ்டர் J. D. ராக்பெல்லர் என்னும் அமெரிகா தேச தனவான் இப்போது மற்றோர் தர்மகார்யார்த்தமாக 50,00,000 பவுன் உபகரித்திருக்கிறார். அத்தர்ம கைங்கர்யம் ராக்பெல்லர் அஸ்திவாரம் என்று சொல்லப்படுகிறது. நாளது வரையில் அதற்காகச் சேர்ந்திருக்கும் மொத்த தொகை 2,50,00,000 பவுனும். அதாவது 37,50,00,000 ரூபாயாம். அது கல்ப கல்பங்களாகத் தோன்றும் அவ்வளவு பெரிய தர்மம் போலும்!

---

#### ஓலாந்துக்குக் சோதனை.

ஐரோப்பாவிலுள்ள தேசங்களில் ஓலாந்தும் (Holland) ஒன்று. இப்போது கப்பல்களின் போக்குவரத்துத் திருப்திகரமாயில்லாதபடியினாலே ஓலாந்துக்கு வேண்

டிய கோதுமை தானியம் வெளிதேசங்களிலிருந்து போதுமான அளவு போக முடியாமலிருக்கிறது. அதற்காக வேண்டி ஒலாந்து தேசத்தை நிர்வகிக்கும் டச்சு கவர்ன்மெண்டார், அமெரிகாவிலிருந்து லட்சம் டன் நிறை யேற்றிக்கொண்டு வரும்படியான கப்பல்கள் வேண்டுமென்று அமெரிகா கவர்ன்மெண்டாரை வேண்டிக் கொண்டிருக்கிறார்கள். கோதுமை தானியத்தைக் கொண்டு வருவதற்கே அக்கப்பல்கள் உபயோகிக்கப்படும்.

---

## பெருந்துருக்கியக் கடன்.

ஜர்மனியானது துருக்கிக்கு இந்த ஐரோபிய யுத்தச் செலவை யொட்டி 3,000 மிலியன் மார்க் (மார்க் என்பது ஒருவித நாணயம்) கடன் கொடுத்திருப்பதாக ப்ரஷ்யன் வருஷாந்த நூலின் மேமாதச் சஞ்சிகையிற் குறிக்கப்பட்டிருக்கிறது. ஜர்மன் லேவாதேவிக்காரர்களுள் இது பெருத்த கவலையை யுண்டுபண்ணி யிருக்கிறது. துருக்கியினால் பணம் கொடுக்க முடியாது போனால் தம் கைப்பண மிழக்கும்படியாகுமே என்பது தான் கவலை.

---

## பாலஸ்டீனில் யூதர்களின் சங்கடம்.

பாலஸ்டீனில் யூதர்கள் மிகுந்த துன்பத்தி லாழ்ந்திருக்கிறார்களாம். ஜாபா என்னுமிடத்தை விட்டு வெளியேறும்படி அவர்கள் கட்டாயப் படுத்தப்படுகிறார்களாம். 8000 யூத ஜாதியினர் தமக்குச் சொந்தமான வஸ்திரங்களையாவது ஆகாராதி பண்டங்களையாவது எடுத்துப் போகாதபடி ஓட்டப்படுகிறார்களாம். அந்த யூதர்களின் கண்முன்பே அவர்களுடைய சொத்து சுதந்தரங்கள் சூறையாடப் படுகின்றனவாம். ரஸ்தாக்களின் இரு புறங்களிலும் ஆங்காங் கிருக்கக்கூடிய மணல் மேடுகளில் பசியினாலும் இதர துன்பங்களினாலும் வயிறு ஒட்டி வாய் கிட்டி உயிரிழந்து பல பேர் கிடக்கத் தென்பட்டார்களாம். யூதர்கள் தம் பாதுகாப்பினிமித்தம் நியமித்திருப்போர்களை துருக்கிய அதிகாரிகள் கைதிகளாகப் பிடித்துச் சென்றார்களாம். ஜாபா என்னுமிடத்திலிருந்து 7000 யூதர்கள் வரையில் இம்மாதிரி புறப்பட்டுச் சென்றிருக்கிறார்கள் என்று சம்பத்திற் கிடைத்த தந்திச் செய்தியினால் தெரிய வருகிறது.

## 13,00,000 ஜர்மானியர் இறந்தார்கள்.

டாக்டர் பிரடரிக் நியூமன் என்பவர் யுத்த ஸம்பவங்களைக் குறித்து உபந்யசித்த போது ஜர்மானிய ஜனத்தொகையின்கண் பிரகிருதய யுத்தமானது எவ்வளவு தூரம் வேலை செய்திருக்கிற தென்பதை அடியிற் சொல்லிய பிரகாரம் குறித்துக் காட்டினார்:—

“இது பரியந்தம் இந்த யுத்தமானது 13,00,000 பேர்களைக் கொள்ளை கொண்டிருக்கிறது. ‘இதுவுமல்லாமல் ஜர்மனியின் ஜனன விகிதத்தில் 38,00,000 குறைந்திருப்பதாகவுந் தெரிகிறது. புருஷர்களைக் காட்டிலும் அதிகரித்திருந்த ஸ்திரீகள் இதற்குமுந்தி 8,00,000 பேர்கள்தானிருந்தார்கள். இப்போதோ அவர்களுடைய சங்கியை 20,00,000-யை யெட்டியிருக்கிறது. 30-வருஷ யுத்தத்திற்குப் பிறகு இது வரையில் இம்மாதிரியான அகோர யுத்தம் நடந்ததாகத் தெரியக்காணோம்.”

---

## யுத்தக்கடனுக்கு ஒரு பெருந்தொகை.

பம்பாயிலுள்ள ஸர் கரிம்பாய் இப்ராஹிம் அண்ட் ஸன்சும் அவர்களாதிபத்தியத்தைச் சேர்ந்த யந்திரசாலைகளுமாகச் சேர்ந்து யுத்தக்கடனுக்காக 13,00,000 ரூபா உதவியிருக்கிறார்கள். நேர்வா காலியிலிருந்து கிடைத்திருப்பது ஒன்றரை லட்சமாம்.

---

## ஸினியர் மார்க்கோனி.

கம்பியில்லாத் தந்தி மூலமாகச் செய்தியனுப்பக் கூடிய யந்திர விசையை முதன் முதற் கண்டுபிடித்துப் புகழ் பெற்றிருக்கும் ஸினியர் மார்க்கோனி என்ற நிபுணர் இடாலிய மிஷனோடு அமெரிகாவிலுள்ள வாஷிங்டன் நகர் போயச் சேர்ந்திருக்கிறார். எவ்விதமாக ஜலக்கீழ்க் கப்பல்களைத் தொலைக்கலா மென்பதையும், அவை மூழ்குண்டிருக்கு மிடத்தை யெந்தமாதிரியாகக் கண்டு பிடிக்கலா மென்பதையும் குறித்து அவர் சிற்சில விசேஷமான பிளான்களைத் தயாரித்திருக்கிறார். இடாலியானது ஒரே வாரத்திற்குள் 13 ஜலக்கீழ்க் கப்பல்களைத் தொலைததுவிட்டது. அது ஸினியர் மார்கோனியின் மதியூகத்தினாலும் பிளான்களினாலும் இருக்கலாம். அமெரிகா ஐக்கிய நாடுகளின் கவர்ன்மெண்டாருக்கு மேற்படி பிளான்களை மார்க்கோனி நிதர்சித்துக் காட்டிய பிறகு ஜர்மனியக் கடல்கீழ் சுறுப்பு அக்கிரமங்கள் அடிபட்டுப் போமென்பது திண்ணம்.



---

## ரெயில் வேலைக்காரர்கள்.

பிரான்சிலுள்ள மேற்கரங்கத்தில் ரெயில் ரோடுகளில் வேலை செய்வதற்காக அமெரிகாவில் 9 ரெஜிமெண்டுகள் தயாராகி வருகின்றன.

---

## ஒரு மாந்த்ரீக சதுரம்.

அடியிற் குறித்த சதுரத்தில் 16 கட்டடங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கட்டடத்திற்குள்ளும் ஒவ்வோர் எண்ணிக்கை வரையப்பட்டிருக்கிறது. அவ்வெண்ணிக்கைகளை நான்கு நான்கு கட்டடங்களாகச் சேர்த்து நேராகவோ நான்கு கட்டடங்கள் சேர்ந்த உட்சதுரமாகவோ, குறுக்காகவோ, வரிசைக் கிரமமாகவோ, கூட்டினால் கூட்டுத்தொகை 34 ஆகிறது. பௌத்த சமயிகளைச் சேர்ந்த கோயிற் பிராகாரத்தில் ஒரு சிலாலோகத்தின்கண் இச்சதுரம் செதுக்கப்பட்டிருந்ததாகவும் மற்றோர் கல்லால் மூடுண்டு கிடந்த இந்த கணித சாஸ்திரச் சதுரக்கல் 11-ம் நூற்றாண்டி னிறுதியில் எழுதப்பட்டதென்று அதன்கீழ் குறிக்கப்பட்டிருந்த தென்றும் தெரியவருகிறது. அச்சதுரம் பின்வருமாறு:—

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | 34 |
| 7 | 12 | 1 | 14 | 34 |
| 2 | 13 | 8 | 11 | 34 |
| 16 | 3 | 10 | 5 | 34 |
| 9 | 6 | 15 | 4 | 34 |
| 34 | 34 | 34 | 34 | 34 |

---

## ஒரு நன்கொடை.

நமது கனம்பொருந்திய ஹோல்கர் மஹாராஜாவானவர், யுத்தச் செலவுக்காக, நமது மாட்சிமைதங்கிய வைஸ்ராய் அவர்களிடம் ரூ. 50,000 கொடுத்திருக்கிறார்.

## பேப்பருக்குப் பஞ்சம்.

பேபருக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது, இங்கு பேபர் வருவதும் அரிதாயிருக்கிறது. மேலும், நியூஸ் பேபர்களுக்கு (News paper) அனுப்பும்படியான பேபர் யந்திரசாலைகளெல்லாம்விரதாவாக கிடக்கவேண்டிருக்கின்றன. யந்திரங்களை நடத்த கூலியாட்கள் அகப்படுவதில்லை. சென்ற இரண்டு மூன்று மாதங்களில் கவர்ன்மெண்டாருடைய அனுமதிக்குள் அனுப்பப்பட்ட பேபர்களில், 100-க்கு, 10-வீதம்தான் கிடைத்திருக்கின்றது. “டெய்லி எக்ஸ்பிரஸ்” (Daily Express) எனும் நியூஸ் பேபரானது, இன்னும் கொஞ்சநாளில் பேபர்கள் அனுப்பப்படுவது தடைபட்டுப்போகும் போலிருக்கின்றது, என கூறுவதாகவும் நமக்குத் தெரியவருகின்றது.

---

## அமெரிக்காவின் பிரதான போர்வீரன்.

ஜெனரல் லேனார்டு உட் எனும் அமெரிக்கா தேசப் போர்வீரருக்கு, முதலில் ராணுவ பயிற்சியே கிடையாது. ஆனால், தனது புத்திக்கூர்மையினால் இவ்வித உயர்ந்த பதவியை அடைந்திருக்கிறாரவர்.

இவர் ஆரம்பத்தில், ஒரு டாக்டராக சைன்னியத்தில் சேர்ந்தார். ஹார்வார்டு என்னும் இடத்தில் நடந்தேறிய வைத்யப் பரீக்ஷையில் தேறி, வித்தியாபட்டம் பெற்ற பின், அவர், அமெரிக்கா ஐக்ய நாட்டு வைத்யப்படையில் ஒரு டாக்டர் உத்தியோகத்தில் அமர்ந்தார். உட் (Wood) என்பவருக்கு, மேல் உத்யோகஸ்தர்கள், இவர் டாக்டர் வேலை செய்வதைப் பார்க்கிலும், ராணுவ வேலையில் சேர்ந்தால் நலம் என்று நினைத்து, அவரை காலாட்படைக்கு அனுப்பினார்கள். அவர், தென்மேற்கு அமெரிக்காவின் எல்லைப்படையெழுச்சியில், லெப்டினெண்டு (Lieutinent) பட்டம்பெற்றுப் பின்னர்க் குதிரைப் படையாளர்களில் 6 பேர்களை பொறுக்கியெடுத்துக்கொண்டு, அரிஜோனா (Arizona) என்னும் நாட்டை மிகவும் குரூரமாய் ஆட்சி செய்துவந்த, ஜெரானிமோ எனும் ஒருபக்காப் போர்வழியை அடக்கிவிட்டு, பிறகு ஜெனரல் எனப் பட்டம் பெற்று இப்போது சீரும் சிறப்புமாக விளங்குவதாய் நமக்கு தெரியவருகிறது.

## ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி.

பேரும் பெருமையும் சீரும் சிறப்பும் ஒருங்கே அமையப்பெற்ற கீர்த்திவான் என்றும், இந்தியமாதா ஈன்றெடுத்த அருமைப்புதல்வர்களில் பழுத்த தேசாபிமானியெனப் பெயர்வாய்ந்து தமது ஜன்மதேசத்தில் மட்டு மல்லாது, கப்பலேறிக் கடல் கடந்து போயிறங்கிய புறநாடுகளிலும் புகழ் மிகுந்து விளங்கிய புண்ணியரென்றும், சுருங்கச் சொல்லின், தரணியில் உதித்தவர்க்குத் தொண்டுபுரியுந் தொழிலையே சிரோபூஷணமாய் அணிந்திருக்கும் தன்யரென்றும் பலராலும் போற்றப்பட்ட மகானுவர் ஸ்ரீமத் தாதாபாய் நௌரோஜி.

ஜனங்களது தன்மையை நன்குணர்வது கற்றுணர்ந்தவர்க்கு இயல்பேயாதலின், நம் தாதாபாய் நௌரோஜியும் பிரஜைகளது தன்மையைச் செவ்வையாய் உணர்ந்து அவர்களுக்கு க்ஷேம முண்டாக்கவேண்டுமென்கிற உத்தேசத்துடன் முன்வந்து விஷயாதிகளை எடுத்துரைக்கவும், அதன் வழியாகக் காரியங்களைச் சாதிக்கவும் சக்தி வாய்ந்தவர். இதோடுகூட ஆங்கிலேயர் இவ்விந்தியா தேசத்திற் செய்த பற்பல காரியங்களின் நிமித்தமாய் நம்மவர்க்குண்டான பிரயோசனம், உற்சாகம், வருத்தம், நன்றி முதலியவற்றை யாவர்க்கும் வியப்புண்டாகும்படி பலவருஷங்களாய் அவர்போதித்து வந்தவர். சிறுவயதில் அவர் அதிக கஷ்டத்துடன் உழைத்தவர்; ஆதலால், அவர் வயது முதிர்ந்தவராயினும் புத்தி ஸூக்ஷ்மத்திலும் சாதுர்யத்திலும் திறமை மிகுந்து பிரகாசித்தார். தம் ஜன்மதேசத்தவர்க்குப் பாடுபடவேண்டுமென்று காலங்கடத்திவரும் இம்மகானது ஜீவிய சரிதத்தை அவர் இறந்து போயிருக்கும் இச்சமயம் தேசபக்தர்கள் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்வதுநலம்; ஆதலால் அவரைப்பற்றிச் சுருக்கமாய் எழுதுகிறோம்.

### பிறப்பும் கல்வியும்.

ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி பார்ஸி ஜாதியைச் சேர்ந்தவர்; பர்ஷியா தேசத்தில் மகமதிய ஆட்சியின் கொடுமைகளைச் சகிக்க மாட்டாதவராய் ஆதியில் இப்பார்ஸி ஜாதியர் இந்தியாவின் மேற்குக்கரையில் குடியேறினார்கள். அப்போதிருந்த இந்து தேசமன்னர் இப்பார்ஸீ ஜாதியாருக்குத் தாம் உதவிசெய்வதாய் அபயங்கொடுக்க, அது முதலாகவே நம் பரதகண்டத்தில் பார்ஸி சந்ததியானது பெருகலாயிற்று. இந்த ஜாதியாருக்கு ஒரு வேலையென நிர்ணயமில்லை. தமக்கு ஆதியில் அபயங் கொடுத்த இந்து அரசர்களின் ஆதரவில் உயர்ந்த உத்தியோகங்களைப் பெற்று வியாபாரத் துறையில் விருத்தியடைந்து வாழ்ந்து வருகிறார்கள். எனினும் நம் நௌரோஜியின் மூதாதைகள் கடந்த 6 நூற்றாண்டுகளாய்க் கடவுளுக்குப் பூசை செய்யும் பூஜகர்களாயிருந்தார்கள்; அதாவது புரோகிதத் தொழிலைக் கைப்பற்றி வந்தனர். பரம்பரையாய்க் கைப்பிடித்து வந்த பூஜகத் தொழிலிலிருந்து வேறு விஷயங்களில் கவனஞ்செலுத்திய முதல்வர் மிஸ்டர் நௌரோஜியே. இவர் பம்பாய் நகரத்தில் 1825-ம் வருஷம் செப்டம்பர் 4௳ பிறந்தார். பிறந்த நான்கு வருஷத்திற்குள்ளேயே அவரது அருமைத் தந்தை பாபம் நிரம்பிய இந்தக் கர்மபூமியை விட்டுப் பரலோகஞ் சேர்ந்ததும் அவரது அன்னையே நௌரோஜியைப் பாதுகாக்கவேண்டியவளானார்.

“தந்தையோடு கல்விபோம்
தாயோடறுசுவை யன்னம்போம்,”

என்கிற தமிழரது முதுமொழிச் சொல்லுக்கு இடங்கொடாமல் நௌரோஜியின் அன்னை தன் அருமைப் புதல்வரைத் “தாதி” என்றழைத்துக்கொஞ்சிக் குலாவி மகிழ்ந்திருக்கும் வேளையில் மகிழ்ந்து பின்னர்ப் பம்பாய் நகரத்தில் “தாதி” கல்விப் பயிற்சியடையும்படியான வழிதேடினார். “தாதி” தந்தையை யிழந்த துரதிருஷ்டசாலியாய்விட்டாலும் அவரது மாமன் தம் மாலானவற்றை மருமகனுக்கு உதவிபுரிந்ததாகவுந் தெரிகிறது. ஆரம்பத்தில் ‘தாதி’ படித்தது திண்ணைப்பள்ளிக்கூடத்திலேயானாலும் வயதுமுதிர்ந்து தம் நிலைமையைத் தாம் அறிந்துகொண்ட பிற்பாடு தன் க்ஷேமாபி விருத்தியைக்கோரிய அவ்வன்னையின் மனோதிடத்தையும் நன்முயற்சியையும் குறித்துப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

நான் கைக்குழந்தையாயிருந்து எனது தாயின் கைகளில் ஊசலாடிக்கொண்டிருந்த காலத்து அவளுக்கு அமங்கலத்துவம் வந்துவிட்டது. அமங்கலியானதும், அம்மாதரார் என்னைவிடத் தனக்கு இந்தப்பூவுலகில் அருமையாயுள்ளது வேறெதுவுமில்லையென்றே கருதினாள். அக்கைக்குழந்தையை (என்னை) முன்னுக்குக் கொண்டுவர வேண்டி அவள் படாதபாடெல்லாம் பட்டனள். கல்வி வாசனை



யை அவள் கனவிலுங் கண்டறியாதவள், எனினும், புத்தி சாதுர்ய மிகுந்தவள்; என்னை அவ்விளம்பருவத்தில் கெடுக்க வந்த சுற்றுப்புறத்தூண்டுதல்களினின்றும் காப்பாற்றினவள். அவள் தான் பெண் கல்விக்காகவும் ஆசாரச் சீர்திருத்த விஷயங்களுக்காகவும் நான் உழைத்த காலத்து எனக்கு முற்றிலும் உதவிசெய்தவள். “என்னை இப்போது நானிருக்கிற பிரகாரம் செய்தவளும் அவளே (She made me what I am.”)

### கல்வியிற் பயிற்சி.

முந்நாளில் பம்பாய் நகரத்தின்கண் ஒருவன் கல்வியிற் பயிற்சி யடைய வேண்டுமானால் அதிக பணம் செலவிட வேண்டுவதில்லை. தன் மகனது படிப்புக்காகப் பணம்கொடுக்க “தாதி” யின் தாய்க்குச் சக்தியில்லாதிருந்ததனால் கல்விகற்க என் செய்வதென்று ஏங்கித் தெருப் பள்ளிக்கூடத்தில் திகைத்துக்கொண்டிருந்த காலத்து சம்பளமில்லாமல் அந் நகரத்திற் கல்வி கற்கலாம் என்றிருந்ததைப் பார்க்க நௌரோஜியை மிக்க அதிர்ஷ்டம் வாய்ந்தவரென்றே கருதவேண்டும். ஆரம்பத்தில் அவர் ஒரு சிறிய பாடசாலையிற் சேர்ந்தார். அக்காலத்தில் (19-ம் நூற்றாண்டில்) கவர்னராயிருந்தவர் எல்பின்ஸ்டன் துரையவர்கள். அவரது ஞாபகார்த்தமாய் ஸ்தாபிக்கப்பட்ட பள்ளிக்கூடத்தில் நௌரோஜி பிறகு சேர்ந்து வெகு சுறு சுறுப்புடன் படித்து வந்ததை உபாத்தியார்கள் கண்டு மெய்ச்சினர்; அவர் வெகு புத்திசாலியெனப் பெயரெடுத்தார்; பாடசாலையில் மற்றப் பிள்ளைகளைக் காட்டிலும் வெகு சுறு சுறுப்பாய் சொல்லும் பதில்களைப் பார்த்து ஜனங்கள் சந்தோஷப்பட்டு “வகவ்வா வகவ்வா” என்று சொல்லுவதுமுண்டு. அப்போதைக் கப்போது பல வெகுமதிகள் பெற்றார். அவர் மீது பல பிரபுக்களது அபிமானமும் பலப்பட்டது. மிஸஸ் போஸ்டன் என்னும் ஓராங்கிலமாதராள் ஸ்கூலுக்கு ஒரு முறை விஜயம் செய்தபோது சிறுவராயிருந்த நௌரோஜியினது கல்விப் பயிற்சியையும் புத்திக் கூர்மையையும் யோக்கியதையையுங் கண்டு மகிழ்ந்து, தாமெழுதிய “வெஸ்ட்ரன் இந்தியா” என்னும் புத்தகத்தில் வெகு சிறப்பாய்க் கூறியிருக்கின்றனள். அன்றியும் அவரது 20-ம் வயதில் வெகு தீக்ஷண்யத்துடன் கல்வி கற்பதைக் கண்ட கல்விச் சங்கத்துப் பிரெஸிடெண்டான ஸர் எல்கின் பெர்ரி என்ற பிரதம ஜட்ஜு தம் கைச்செலவிலிருந்து நௌரோஜி இங்கிலாண்டுக்குப் போய் வக்கீல் பரீக்ஷையிற் தேர்ச்சி யடைவதற்குப் பிடிக்கும் செலவுத் தொகையில் தாம் பாதி கொடுப்பதாய் ஒப்புக்கொண்டார். அதன் மேல் ஸர் ஜேம் ஸேட்ஜி ஜீஜிபாய் என்ற பார்ஸி தனிகர், தம் கையிலிருந்து மிகுதியான பாதித் தொகையைக் கொடுக்கவும் சம்மதித்தார்.

### உத்தியோகம்.

ஸர் ஜேம் ஸேட்ஜி ஜீஜிபாய் பாதிப்பணங்கொடுக்க சம்மதித்தும் ஒரு வேளை தாதாபாய் அந்நிய மதத்தில் பிரவேசித்து அதனால் குலத்திற்கு ஒரு அவச்சொல் வந்துவிடுமோவென்ற உத்தேசத்துடன் பணங்கொடுத்துதவ இணங்கவில்லை. ஆயினும் ஸர் எல்கின் பெர்ரிமட்டும் தாம் இந்திய கௌன்ஸிலில் மெம்பராயிருந்தபோது நௌரோஜி இங்கிலாண்டிற்கு வருவதனால் மிகுந்த பிரயோசன முண்டென்றும், முன்னோரது முறைமைகளுக்கு யாதொரு பங்கமும் வராதென்றும் சுட்டிக்காட்டினார். ஆயினும் கையில் போதுமான பணமில்லாதபோது அவர் செய்யக்கூடிய தென்னை? அத்துடன் இங்கிலாண்டிற்குச் செல்லக் கூடாதென்றும் ஏற்பட்டதும் இனி உத்தியோகத்தில் அமருவதே சரியென்று நௌரோஜியின் மனதிற்பட்டு அதனைத் தேடலானார். பிறகு தான் படித்த ஸ்கூலில் ஹெட் அஸிஸ்டெண்டாக அமர்ந்து கணித சாஸ்திரத்தில் தேர்ந்ததன் அறிகுறியாகப் பொன் பதக்கமொன்றும் அவர் பரிசாகப் பெற்றனர். தமக்கு மேலிருந்த கணித போதகாசிரியராகிய ஐரோப்பியர் 1854-ப் வருஷத்தில் மாண்டுபோனதும் நௌரோஜியின் திறமையை நன்குணர்ந்த அதிகாரிகள் அவருக்கே அவ்வுத்தியோகங்கொடுத்துப் பிரமோஷனாக்கினார்கள். இதுவே முதன் முதலாய் ஓராங்கில பாடசாலை யதிகாரிகள் இந்தியருக்குக் கொடுத்த கௌரவமாம். ஸ்கூல் உபாத்தியாயரா யிருந்த பத்து வருஷங்களில் பிள்ளைகளுக்குக் கல்வி பயிலுவிப்பதுதான் தமது வேலையென்று அவர் சும்மா இருக்கவில்லை. பெண்கல்வியி னபிவிருத்திக்காக முயன்று ஒரு பெண் பாடசாலை ஸ்தாபனமாகுமாறு வேலை செய்தார். அனேகர் பெண்கல்விக்கு மாறாய் வேலைசெய்தும் நௌரோஜி, இவர்களது அபிப்பிராயங்களு

க்கு இணங்காமல் தாம் பிடித்ததைத் திட
மனதுடன் நிறைவேற்றிவிட்டார். இத
ன்றி மத சம்பிரதாய முறைகளிலும் ஞாப
கார்த்தமா யிருக்கும்படி பம்பாய் லிடரெரி
ஸொஸைடி, பம்பாய் அஸோஸியேஷன்,
பைராம்ஜி கெளவாஸ்ஜி இன்ஸ்டிடியூட்,
அயரனி பண்டு, பார்ஸி ஜிம்னேஷ்யம், ஸ்தி
ரீகள் புனர் விவாக ஸங்கம், விக்டோரியா
அண்டு ஆல்பர்ட் மியூஸியம் முதலியவற்
றை யேற்படுத்தினர். இது மட்டோ?
இன்னு மனேகம்உள. தமக்கு ஒழிவான
நேரங்களில் மேற் சொன்னவாறு உழைத்
தது போதாதென்று கருதிய நெளரோஜி
1851-ம் வருஷத்தில் "ராஸ்டு கோப்டர்"
(உண்மையுரைப்போன்) என்னும் வாராந்
தப்பத்திரிகை யொன்றைக் குஜராத்தி
பாஷையில் ஆரம்பித்து இரண்டுவருஷ
காலம் உள்ளும்புறமுமாயுழைத்து, அதீ
அழியாவண்ணம் செய்தனர். பிறகு அது
வேறொருவர் கைக்கு மாறிவிட்டது அப்
பத்திரிகையின் மூலமாய் அவர் இந்திய
ஜன ஸமூகத்தவர்க்குக் கற்பித்த ராஜகீய
சம்பந்தமான விஷயங்களையும் ஜனசார
விஷயங்களையும் அளவிட்டுச் சொல்ல முடி
யாது. பம்பாயில் பெண்கல்விக்கு ஆதிகர்த்
தர் ஸ்ரீ நெளரோஜி தான் என்பதற்கு ஐய
மில்லை.

## புறநாட்டுப் பிரயாணம்.

இந்தியாவிற் பிறந்து இந்தியப் பிரஜை
களின் வழக்கானுபவங்களை அனுபவார்த்
தமாய் அறிந்து தாம் பயிற்சியடைந்ததை
முற்றுமுணர்ந்த நெளரோஜி, எவ்விதத்
திலும் இந்து ஜனஸமூகத்தவர் தமக்குச்
செய்த பேருபகாரங்களுக்குப் பதிலாக
உழைக்கலா மென்று வழி தேடினர். சாதா
ரணமாகவே, பிரிடிஷ் ஆட்சி ஸ்தாபித
மாகிதேசத்தில் அமைதியும் போக்கு வரவு
வசதிகளும் கல்வியும் மேம்பாடடைந்து
வருவதில் பார்ஸிஜாதியார் வெகு சுறு
சுறுப்பாயும் புத்திக்கூர்மையாயும் முன்னு
க்கு வந்துபற்பல துறைகளிலும் முதன்மை
வகித்து வருகிறார்கள். மேலும் உலகத்து
எம்மூலைக்கு வேண்டுமானாலும்போய் எவ
ருடனும் புசித்துக் காலதேச வர்த்தமான
ங்களுக்குத் தகுந்தபடி வேற்றுமைகளை
யேற்றுத் தங்களுக்கு நன்மையாயுள்ள
வற்றை முற்படுத்துவதில் எவ்விதமானதங்
குத் தடையில்லாதவர்கள்; பார்ஸி ஆட
வர்க்கிருக்கும் சுதந்தரங்களைப்போல பார்
ஸி ஸ்திரீகளுக்குமுண்டு; ஐரோபிய ஸ்திரீ
களை யொப்ப சுதந்தரங்கள் பெற்றவர்;
ஆதலின் அவர்களால் இச்சாதியாரின் அபி
விர்த்திக்குக் குந்தகம் ஏற்படுவதுமில்லை.
புறநாட்டுப் பிரயாணம் போக வைதிக
கர்மமாய்த் தடையொன்றும் குறுக்கிடா
மல் போக, வியாபாரப் பெருக்கையே பெரி
தும் ஆசரிக்கவேண்டுமென்று நெளரோஜி
எண்ணங்கொண்டார்.

1855-வது வருஷத்தில் பம்பாயிலுள்ள
மெஸர்ஸ் காமா அண்டு கம்பெனியார்
தமது வியாபாரத்தை விருத்திசெய்யக்
கருதி இங்கிலாண்டில் தம் பிரதிநிதியாக
ஒருவரைத் தேடிக்கொண் டிருக்கையில்
தாதாபாயின் ஞாபகம் அவர்கள் மனதிற்
பட்டது. உடனே அவர்கள் நெளரோஜி
யுடன் கலந்து அதன் சம்பந்தமாய் யோசித்
தார்கள். அவருக்கு வியாபாரத்தில் அவ்
வளவாகப் பரிச்சயமில்லாவிடினும் அவ
ரது மதியூகத்தால் அதனை அளவுக்கு மிஞ்
சிச் சம்பாதித்துக் கொள்ளலாமென்று
கண்ட கம்பெனியார் ஸ்ரீ நெளரோஜியைத்
தம் கம்பெனி பாகஸ்தருள் ஒருவராய்ச்
சேர்த்துக்கொள்ள இசைந்தனர். ஆகவே
நெளரோஜிக்குப் புறநாட்டுப் பிரயாணம்
போக நேர்ந்தது. இவர் இங்கிலாண்
டிற் போயிறங்கியதுதான் தாமதம்.
இந்தியாவின் சம்பந்தமாகப் பிரிடிஷாரின்
பொறுப்பு இத்தன்மையது என்று அத்தே
சப் பிரமுகர்களுக்கு விளக்கிக் காட்ட
முயன்றார். அதற்காகவே தான் "லண்
டன் இந்தியன் ஸொஸைடி" என்னு
மொரு சங்கத்தையும் ஏற்படுத்தினர். அது
ஏற்பட்ட இந்த 53 வருஷ காலத்திற்குள்
அதனால் நடைபெறும் விஷயங்கள் நிறை
வேறுவதற்குப் பற்பல குந்தகங்கள் நேரி
ட்டபோதிலும் அவைகளினால் சங்கத்
திற்கு யாதொரு தொல்லையும் வராமல்
நெளரோஜி பாதுகாத்து அதை என்றும்
அழியா நிலையில் இப்போது நிறுத்தி யிருக்
கிறார்.

## இங்கிலண்டில் அவரது ஊக்கம்.

மேலே சொன்ன லண்டன் இந்தியன்
ஸொஸைடியினால் இந்தியர்கள் மாத்திரம்
அதினில் மெம்பர்களா யிருக்கவும் இந்தியா
வின் க்ஷேமத்தில் ஆர்வங்கொண்ட ஆங்
கிலோ—இந்தியர்கட்கு மெம்பராக விட
மில்லா திருப்பதையும் உணர்ந்த மிஸ்டர்
நெளரோஜி 1867-வது வருஷத்தில் "ஈஸ்
டிந்தியா அஸோஸியேஷன்" என்னும் சங்
கத்தை யேற்படுத்தினர். அதோடு பொது



ஜன வபிப்பிராயத்தைப் பிரிடிஷ் மகா
ஜனங்கள் அறியுமாறு "ஜர்னல்" என்ற
வர்த்தமானப் பத்திரிகையையும் ஆரம்
பித்து, அதன்மூலமாக இந்திய ராஜகீய
விஷயங்களை வெகு தெளிவாய் விவகரித்
தார். இவை பெரும்பாலும் நெளரோஜி
யினாலேயே எழுதப்பட்டதாகலால் அவை
களைத் தனிப்பிரதிகளாக எவரேனும் முன்
வந்து பிரசுரித்தால் எவ்வளவோ மேன்
மையா யிருக்கும். கம்பெனி விவகாரத்
துடன் தாம் ஏற்படுத்திய இரண்டு சங்கங்
களைப்பற்றியவேலைகளையும் மிஸ்டர் நெள
ரோஜி பார்த்து வந்ததோடு மற்றும்
அனேக விதங்களிலும் அவர் கவனஞ்
செலுத்தாதிருக்க முடியவில்லை. லண்டன்
நகர யூனிவர்ஸிடி கலாசாலையில் குஜரா
த்தி பாஷை பயிலுவிக்கும் போதகாசிரி
யரா யமர்ந்து, ஸெனேட்டிலும் மெம்பரா
னார்; பிறகு ஒரு இன்ஷியூரென்சு கம்
பெனியின் டைரெக்டர் பதவி கிடைத்தது;
அதிமுக்கியமாயுள்ள இந்திய விஷயங்கள்
பலவற்றைக் குறித்து அவ்வப்போழ்து
வந்த இந்தியா மந்திரிகளுடன் காகிதப்
போக்குவரத்தினால் கலந்து யோசிக்கலா
னார். இதோடு அவர் நின்றவரல்லர்;
இங்கிலண்டிலுள்ள பற்பல விடங்களுக்குச்
சென்று தகுந்த பெரிய மனுஷர்களைப்
பார்த்து ஆங்காங்கு இந்தியரது கஷ்ட
நிஷ்டூரங்களையும் இந்தியர் விஷயத்தில்
செய்யப்படும் அதிக்கிரமங்களையும் தெற்
றெனப்புலப்படுத்தி மீட்டிங்குகளிற் பேசி
னார்; சுருக்கச் சொல்லின், எந்நாளும் தம்
ஜன்ம பூமியையே தம் மனத்திற் பரிபூரண
மாய் வகித்திருந்தார்.

## அவருக்கு வாய்ந்த அபூர்வ சக்தி.

இவ்விதமாக 12 வருஷகாலம் கழிந்தது.
சாரங்களின் (Planets) பலன் எப்போது
மே ஒரு வழியா யிராது. பத்து வருஷங்
களுக்கோ இருபது வருஷங்களுக்கோ ஒரு
விசை இடம்விட்டு இடமாகப் பெயர்ந்து
கொண்டே யிருக்கும். அவ்வாறே நெள
ரோஜிக்கும் மாறிற்று. அவர் பார்த்துவந்த
கம்பெனி வேலையானது சரிவர நடக்க
வில்லை. இங்கிலண்டில் நெளரோஜியை
அகௌரவஸ்தரென்றாவது அநியாயஞ் செ
ய்பவரென்றாவது எவரும் சொல்லவில்லை.
அங்கு வியாபாரஞ்செய்த வேறு நண்ப
ரொருவர் கடன் மிகுந்து அதன்வாயகப்
பட்டு வருந்த, அவரை விடுவிக்க ஸ்ரீ நெள
ரோஜி முயன்றதில் தமது கம்பெனிக்கே
அழிவகாலம் நேரிடலாயிற்று. கம்பெனி
யானது 3 லட்சம் ரூபாய் வரையில் கட
னுக்குள்ளாகவே,

"விடங்கொண்ட மீனைப்போலும்
வெந்தழன் மெழுகுபோலும்
படங்கொண்ட பாந்கள் வாயிற்
பற்றிய தேரை போலும்
திடங்கொண்ட ராம பாணஞ்
செருக்களத் துற்ற போது
கடன் பட்டார் நெஞ்சம்போலக்
கலங்கினா னிலங்கை வேந்தன்"

என்கிறபடி மிஸ்டர் நெளரோஜியின்
மனம் அக்காலத்தில் எவ்விதமிருந்திருக்கு
மென்பதை நமது நேயர்களே அறியட்டும்.
இதையறிந்த பிரிடிஷாருள் கடன் கொடுத்
தோர் நெளரோஜியிடம் மிக்க அனுதாபங்
காட்டியதுடன் நண்பர்களாயுள்ள வேறு
சிலர் அவருக்குப் பணங்கொடுத்தும் உதவி
னர். எவ்வளவு கஷ்டமிருந்தும் அவை
யினைப் பாராட்டாமல் 1869-வது வருஷத்
தில் பம்பாய் வந்து சேர்ந்தார். வந்ததும்
ஸர் பிரோஜிஷா மேடாவின் நன்முயற்சியி
னால் அந்நகர ஜனங்கள் ஒருமகா நாடு கூடி
அவருக்கு வந்தனோபசாரப் பத்திரமொ
ன்று அளித்ததோடு 30,000 ரூபாய் கொ
ண்ட ஒரு பண முடிப்பையுங் கொடுத்தார்
கள். அப்பணத்தில் ஒரு தம்பிடியேனும்
நெளரோஜி ஸ்வப் பிரயோஜனஞ் செய்து
கொள்ளாமல் பரோபகாரமான செயல்களு
க்கே செலவழித்தனர். 1900-வது வரு
ஷம் நவம்பர்மீ 24வ காலஞ்சென்ற
ஜட்ஜு ரானடேயினால் பிராம்ஜி கௌ
வாஸ்ஜி இன்ஸ்டிடியூட்டில் அவரது உருவ
மைப்புப் படமொன்றை 8000 ரூபாய்
செலவில் சிறப்பாயெழுதி அவரது ஞாப
கார்த்தமாய் மாட்டினார்கள்.

## இங்கிலண்டிற்குத் திரும்புதல்.

1873-வது வருஷத்தில் மிஸ்டர் நெள
ரோஜி திரும்பவும் இங்கிலண்டிற்குச்
சென்றபோது இந்திய அரசிறைக் கணக்கு
களைப் பற்றிப் பார்லிமெண்டு கமிடியாரின்
முன்னிலையில் வாக்கு மூலங்கொடுத்தார்.
இக் கமிட்டியாருக்குத் தான் பாஸெட் கமி
ட்டி (Fawcett Committee) என்று பெ
யர். அப்படி வாக்கு மூலங் கொடுத்த
போது தான் இந்தியாவின் வறுமை நிலை
மையை பிரிடிஷ் பிரமுகர்களின் முன்னர்
எடுத்துரைக்க மிஸ்டர் நெளரோஜிக்கு வச
தியுண்டாயிற்று. பிரிடிஷ் இந்தியாவில்

ஆள் ஒன்றுக்கு ரூ. 20, வருஷ வருமானமாய்க் கிடைப்பதாகவும், அதனில் வரிமட்டும் மூன்று ரூபாய் வரையில் போய் விடுவதாகவும் ஏற்பட்டதைச் சிற்சில ஆங்கிலோ-இந்திய 'மதியூகிகள்' சேட்டு மனந்தாளாமல் வாதமாடினர். கடைசியாக 1882-வது வருஷம் லார்டு ரிப்பனது நிர்வாகத்தில் அரசிறை மந்திரியாயிருந்த ஸர் எவலின் பாரிங் (இப்போது லார்டு க்ரோமர்) கணக்குப் போட்டுப்பார்த்து பிரிடிஷ் இந்திய ரொருவருக்கு வருஷ வருமானம் 27-ரூபாய்க்கு அதிகமில்லையென்று சொன்னார்.

## அவரது நிருவாக சக்தி.

ஒரு வருஷத்துக்குப் பின்பு, அதாவது 1873-ம் வருஷத்தில் பரோடா ஸமஸ்தானத்து அதிபதியான கெய்க்வாரவர்கள் மிஸ்டர் நௌரோஜியைத் தம் சமஸ்தானத்துத் திவானாய் அமர்த்திக்கொண்டார். அக்காலத்தில் பரோடா நிருவாகமானது சீர்கேடடைந் திருந்தது. மிகுந்த குழப்பத்திற் கிடந்தது. பரோடாவில் அப்போது "தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால்" என்று சொல்லும் அரசரும், எல்லா விஷயத்திலும் தன் வழியே வேண்டுமென்ற ரெஸிடெண்டும், அதிகாரஞ் செலுத்துவதில் திறமையில்லாத நிருவாக உத்தியோகஸ்தர்களும் மனநிலையற்ற நியாய விலாகாவும் கூடியிருந்ததனால் நௌரோஜி திவானாய் புறப்பட்டு வந்ததும் அவைகளை முதன் முதற் கவனிக்கலானார். அவர்செய்த பல்வகைச் சீர்திருத்தங்களையும் முதலிட்ட நற்காரியங்களையும் மனத்தினால் ஆலோசித்துத் தெளிந்து நிறைவேற்றுந் தறுவாயிலிருந்த விஷயங்களையும் சுருக்கமா யேனுங்குறிப்பதற்கு இப்பத்திரிகை இடம்தராது. அவர் ராஜதந்திர நிபுணரிற் சிறந்தவர்; வாய்மையுடன் நிருவாகத்தை நடத்துவது, செட்டாய்ச் செலவிடுவது, தேச வருமானத்தை விருத்திசெய்வது துரைத்தன முறைமையையும் பிரஜைகளின் உரிமைகளையும் இவற்றிற்குள்ள பரஸ்பர சம்பந்தத்தையும் ஜனங்களுக்குத் தெற்றென விளக்குவிப்பது—ஆகிய இவைகளே நௌரோஜியின் ராஜதந்திர முறைகளாம். இவை யனைத்தையும் அவர் வியவகாரத்திற்குக் கொண்டுவர வேண்டிய விஷயங்களை நன்று யாலோசித்துத் தெளிந்து அவ்வாறே அனுஷ்டானத்துக்குக் கொண்டு வரவும் ஆரம்பித்தார். அவர் செய்தவைகட்கெல்லாம் மாறாக ரெஸிடெண்டும் வேறு சிலரும் செய்தார்களெனினும், அது பலியாது இறுதியில் நௌரோஜியின் செயலே நிலைநின்றது. பரோடாவில் அப்போது ரெஸிடெண்டா யிருந்தவரை லார்ட் நார்த்ப்ருக் நீக்கிவிடலாயிற்று. பம்பாய் முனிசிபல் நிருவாகத்தைச் சீர்திருத்தவும் மிஸ்டர் நௌரோஜி போகவேண்டியிருந்தது. அவர் இரண்டு வருஷகாலம் முனிசிபாலிட்டியிலிருந்து உழைத்தார். லார்ட் லிட்டனது காலத்தில் நௌரோஜிக்கு எதுவும் செய்ய இயலாமற் போய் விட்ட போதிலும் லார்டு ரிப்பன் கவர்னர் ஜனரலாய் வந்தபோது நௌரோஜி திரும்பவும் முனிசிபாலிடியில் நுழைந்து 4 வருஷகாலம் உழைத்தார். அப்போது தான் முனிசிபல் கணக்குகளில் வந்த மாறாட்ட மொன்றைக் கண்டுபிடித்து நஷ்டமாக விருந்த 10 லக்ஷம் ரூபாயை நஷ்டமாகாது தப்புவித்தார். 1885-வது வருஷத்தில் லார்டு ரே தமது கௌன்ஸிலில் நௌரோஜியை ஒரு அடிஷனல் மெம்பராக நியமனம் செய்தபோது இந்தியா முழுவதிலும் உண்டான சந்தோஷத்திற்கு அளவில்லை.

## காங்கிரேஸ் அபிமானம்.

அதே வருஷத்தில் தான் காலஞ்சென்ற உமேச சந்திரபானர்ஜியின் அக்கிராசனத்தில் பம்பாய் நகரத்தின்கண் நடந்தேறிய இந்தியன் நாஷனல் காங்ரெஸில் மிஸ்டர்நௌரோஜியுங் கலந்துழைத்தார். 1886-ம் வருஷத்தில் அவர் இங்கிலண்டுபோய்ச் சேர்ந்ததும், ஹோல்பரன் லிபரல் சங்கத்தார் தம் பிரதிநிதியாய்ப் பார்லிமெண்டிலிருக்க மிஸ்டர் நௌரோஜியைத் தெரிந்தெடுத்தார்கள். ஒருவிசை ஸாலிஸ்பரி பிரபு சிலபோது நௌரோஜியை "கறுப்பு மனிதன்" என்று குறிப்பிட்டார். இங்கிலண்டிலும் இந்தியாவிலும் இதை குறித்து ஒரு பெரும் உணர்ச்சி உண்டாயிற்று. முதன் மந்திரியா யிருந்த மிஸ்டர் கிளாட்ஸ்டனும் ஸாலிஸ்பரிபிரபு கூறியதைக் கண்டனஞ் செய்தார். பின்னர் 1886-ம் வருஷக் கடைசியில் நௌரோஜி இந்தியாவுக்குத் திரும்பியதும் கல்கட்டாவில் கூடிய காங்க்ரெஸ் சபைக்குப் பிரெஸிடெண்டா யிருந்து அடுத்த வருஷத்தில் பம்பாயின்கண் வீற்றிருந்த "ப்பளிக் சர்விஸ்கமிஷன்" முன்னிலையில் வாக்குமூலங் கொடுத்து



மற்றும் ஒருமுறை இங்கிலாண்டிற்குத் திரும்பினார். ஐந்து வருஷம் ஓயாமல் உழைக்க, பெருமையால் 1892-ம் ஆண்டில் ஸெட்ண்ரல் பின்ஸ்பரி மெம்பராக ஜனப்பிரதிநிதியங்கத்தினர் சபையில் (House Of Commons) தெரிந்தெடுக்கப்பட்டார்.

அப்போது இந்தியாவின் நன்னிலைமைக்காக அவர் பட்ட பாடுகள் பல. மூன்று வருஷகாலம் அந்த மெம்பர் ஸ்தானத்தை வகித்திருந்தார். பிறகு ஸர் வில்லியம் வெட்டர்பரன், காலஞ்சென்ற W. S. கெயின்—இவர்களது உதவியையும் வேறு சில இந்திய நண்பர்களின் உதவியையும் கைக்கொண்டு இந்தியன் பார்லிமெண்டரி கமிட்டி என்னும் ஓர் ஸபையை ஸ்தாபனஞ் செய்தார். 1893-ம் வருஷக் கடைசியில் இந்தியாவின் வறுமை நிலை சம்பந்தமாய் அவர் எழுதிய வியாசங்களையும் பிரசங்கங்களையும் சேர்த்து ஒரு பெரும் புத்தகமாக "(Poverty and un-British Rule)" எனப்பெயரிட்டு முன் கொண்டு வந்தார். அது அவர் அரை நூற்றூண்டாய்ப் பாடுபட்டுச் செய்த வேலையாதலால், என்றென்றும் நம்மவரால் அது மறக்கற்பாலதன்று. 1905-வது வருஷத்தில் இவர் திரும்பவும் பார்லிமெண்டில் மெம்பராய்ச் சேர்ந்திருக்க வேண்டுமெனினும், 'லிபரல்' கட்சியிலேயே முரண்பாடு ஏற்பட்டதன் காரணமாக இவருக்கு அது கிடையாதுபோயிற்று. பழுத்த தேசாபிமானி யெனப்பெயர் கொண்டு, வாய்ந்த சமயங்களிலெல்லாம் இந்தியரது க்ஷேமாபிவிருத்திக்குகந்த விஷயங்களைப்பற்றியே உபந்நியசித்து உழைத்து வந்த நௌரோஜி முதிர்ந்த வார்த்திபத்தை யடைந்த காலத்தும் வாசா மகோசரமாய் அவர் தமது அபிப்பிராயங்களை வெளியிடுப்பதைக் கருதி, 1906 வது வருஷத்திற் கல்கத்தாவிற்கூடிய 22-வது இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ் மகாசபைக்குப் பிரெஸிடெண்டா யிருக்கும்படி ஜனங்கள் கேட்டுக் கொண்டபடி அவரும் பிரெஸிடெண்டா யமர்ந்தனர்.

## அவர் கூறிய தென்னை?

"அரண்கள் நிரம்பிய அருநகர்" என்று பெயர்படைத்த கல்கத்தாவில் 1906-வது வருஷம் டிசம்பர் மாதம் 26-ந்தேதி பிற்பகலில் காங்க்ரெஸ் மகாஸபை கூடியது. அதற்காகவென்று மகா விசாலமாகவும் விதரணையாகவும் ஒரு பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. காங்கிரெஸ் புதல்வன் பிறந்து, தவழ்ந்து, பயமறியாதோடி, பாலாரிஷ்டம் நீங்கி நடமாடி நிதானிக்கும் வயதான 22-ம் வயதை யடைந்ததும், அந்த ஜன்மதின் மகோற்சவத்தைத் தலைமையாயிருந்து நடத்த 8000-மைலுக்கு அப்பாலுள்ள இங்கிலாண்டி லிருந்து இந்தியப் புதல்வருள் திலகம்போன்றவரும் க்ஷமையும் தேசபக்தியும் வாய்ந்தவரும் மகா விருத்தருமான புண்ணிய புருஷராம் ஸ்ரீமத் தாதாபாய் நௌரோஜி கல்கத்தா நகரம் வந்தனர். வங்காளமாகாணப் பிரிவினையால் வங்காளி களுக்குண்டான மனக்கொதிப்பால் நேர்ந்த உற்சாகக்குறைவு காரணமாக கல்கத்தாவில் அவ்வருஷத்தில் காங்க்ரெஸ் சீராய் நடைபெறுமல் போமோவென்றிருந்த பயம் பனிமூட்டமானது சூரியனைக் கண்டதுபோல கண்ணிமைப்பொழுதில் மாறிக்காங்க்ரெஸ் வேலைகள் வெகு தீவிரமாய் நடத்தப்பட்டன. அவ்வருஷத்திலே தான் மற்ற வருஷங்களைக் காட்டிலும் வெகு உயர்வாய் அந்தஸபை நடந்தேறியது. அக்கிராஸனாதிபதி மிஸ்டர் நௌரோஜி வெகு அனுபவமாய்ப் பிரசங்க மாரிபொழிந்ததும், ஒன்றுசேர அவ்வருஷத்திய காங்கரெஸே மேன்மை பொருந்தியதென்று வாய்கூசாமல் சொல்லுதலுந் தகும். சுமார் 20,000 ஜனங்கள் கூடிய சபா மண்டபத்தில் உபசரணைக் கமிட்டி சேர்மனான டாக்டர் ராஷ் பிஹாரிகோஷ் பிரெஸிடெண்டையும் பிரதிநிதிகளையும் நல்வரவு கூறியழைத்த பிற்பாடு பிரெஸிடெண்டு ஸ்தானம் வகித்த ஸ்ரீ தாதாபாய் "வந்தே மாதா" கரகோஷத்தினடுவே யெழுந்தார்.

## அவரது பிரசங்கமாரி.

அது பரியந்தம் காங்கிரெஸ் சபா நாயகத்துவம் வகித்த மேதாவிகளைப்போல தம் நாட்டிற்கு வேண்டிய நன்மைகளான அரசாங்க உயர்பதவிகளென்ன, அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட் டிருக்கும் வரிப் பளுவைக் குறைக்க வேண்டிய விஷயங்களென்ன, அரசாங்கத்தார் ஜனசமூகத்திற்கு ஒத்த சட்டதிட்டங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதென்ன—ஆகிய இவைபோன்ற சாமானிய விஷயங்களைப் பற்றிப் பிரசங்கித்தாரோ வென்றால் இல்லை; இல்லை; நாகரிகம் மிகப்பெற்ற இங்கிலண்டில் அநேக வருஷங்களாக சஞ

சரித்து வருவதாலும், குடிகளுக்கு சுயேச்சையும், அவர்கள் மனம்போல் ஸ்வாதந்தரியங்களும் தாண்டவமாடும் அந்நிய நாட்டுப்பழக்கம் மஹரிஷி தாதாபாய் அவர்களுக்கு விசேஷமாய் ஏற்பட்டுள்ளதாலும், இந்தியாவின் தேசானுகூலத்திற்கு உகந்ததாயுள்ள விதை சுயஆட்சி தவிர வேறில்லையென்று கண்டும், எந்தெந்த நாகரிக தேசங்களிலும் ஜனங்கள் அம்முதல் விதையையே நட்டுப் பக்குவமாய்ப் பயிர்செய்து விர்த்திக்கு வந்திருக்கிறார்களென்று சரித்திர பூர்வகமாயும் அனுபவத்திலும் தீவிரமாய் கண்டறிந்த கிழச்சிங்கமானதால், அச்சிலாக்கியமான விதையை நம்மிந்தியாவில் நன்றாய் ஊன்றிப் பக்குவமாய்ப் பயிர்செய்து வரவேண்டியதைப் பற்றி பற்பல விதமாய்ப் வற்புறுத்திப் பேசினார். இங்கிலாந்து தேசம் விசேஷநாகரிகம் பெற்றதென்று பெயர்வந்தது அந்நாட்டிலுள்ளோர் அரசாங்கத்தாரிடமிருந்து தங்களுக்குக் கிடைக்கவேண்டிய சுதந்தரங்களைப்பற்றிப் பத்திரிகைகளுக்கு இடைவிடாமல் எழுதிவந்ததாலும் மேடைகள் கூடி ஓயாமல் பேசிவந்ததாலும் பெற்றுவந்தார்களென்றும், அவ்வாறே இந்தியர்களாகிய நாமும் மீட்டிங்குள் பிரதிஷ்டித்துவமாய் கூடியும் பேசியும பத்திரிகைகளுக்கு இடைவிடாமல் எழுதியும் அரசாங்கத்தாரிடமிருந்து நாம் பெறவேண்டிய சுதந்தரங்களை நாம கட்டாயம் பெறுவோமென்று உறுதியாய்க் கூறினார். இச்சுதந்தரம் எப்போது வருமோ அப்போதே அதற்கு ஸ்வராஜ்ய மென்னப்படும். இதுவே ஸ்ரீமத் நௌரோஜியின் மூல மந்த்ரோபதேசம். அம்மந்திரத்தின் விசேஷங்களை அறியாமல் அவர் நம்மவர்க்கு உபதேசிக்கவில்லை. எவ்வளவோ சரித்திர ஆதாரங்களையும் அனுபவ சித்தாந்தங்களையும கண்டு போதித்த மூலமந்திரம் அது. ஆகவே காங்கிரஸ் முடிந்து அவரவர்கள் தத்தமிருப்பிடம் சென்றதும் ஆங்காங்கு ஸபைகள் ஸ்தாபனம் செய்து ஜனங்களைக்கூட்டி அந்த மூலமந்திரத்தைப் போதியுங்கள், இடைவிடாது அவர்கள் முன் தேசோபகாரமான விஷயங்களைப் பேசுங்கள்" என்று சரமாரியாயப் பேசிய பிற்பாடு திரும்பி இங்கிலாண்டிற்குப புறப்பட்டார். 1907-வருஷம் ஜனவரி மாதம் 19-ம் தேதி இந்தியாவை விட்ட நௌரோஜி பிப்ரவரி மாதம் ப-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை தினம் லண்டன் போய்ச சேர்ந்த சில தினங்களுக்கெல்லாம் தேக அசௌக்கியத்துடன்கிடக்கிறார் என்ற செய்தி வந்தபோது, வடக்கே ஹிமாசலம் முதல் தெற்கே கன்னியாகுமரி முனை வரையிலுள்ள இந்திய ஜனங்கள் எல்லோரும் கிடந்துழன்ற துயரத்துக்கு அளவில்லை. நம் 'தாதி' சுகப்பட்டெழுந்து இன்னும் பலகாலம் தாண்டவமாட வேண்டுமென்று தங்கள் தங்களிஷ்ட தெய்வங்களைப் பிரார்த்தித்துக் கொண்டவர்கள் பலர். இந்திய அபிமானிகள் தங்கள் இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்தித்துக் கொண்டதன் பலனாக ஸ்ரீ தாதாபாய் அச்சமயம் சுகப்பட்டெழுந்தார். ஆனால் வைத்திய நிபுணர்களின் ஆலோசனைக் கிணங்கி ஸ்ரீ தாதாபாய் தமது அந்தியகாலத்தை தமது ஜன்ம பூமியிலேயே கழித்து விடலாமென் றெண்ணி இந்தியாவுக்குத் திரும்பினார். அவர் இந்தியாவுக்குத் திரும்பி இப்போது 10 வருஷங்களாகின்றன. இந்த 10 வருஷ காலத்தையும் அவர் வர்ஸோவாவிலேயே போக்கித்தீர்த்தார். பம்பாய்க்கு அவர் அடிக்கடி வந்தது கிடையாது. ஆனால் அவர் பம்பாய்க்கு இடையே ஒரு முறைகூட வந்ததில்லையென்று நாம் சொல்லுவோமானால் அது பொய்வார்த்தையாகும். அவர், பம்பாய் யூனிவர்ஸிடி தமக்குச் சமீபத்தில் L. L. D. என்ற கௌரவப்பட்டத்தை வழங்கினபோது அதனைப் பெற்றுக்கொள்ள ஒருமுறை வந்ததுண்டு. மற்றச் சமயங்களில் அவரைப் போய் யாரும் பார்த்து வருவது வழக்கம். லார்ட் ஹார்டிஞ்ச் கூட மூன்று வருஷங்களுக்கு முன்னே அவரைப் போய்ப் பார்த்ததுண்டு. அவர், வர்ஸோவா சென்று வசிக்கத் தலைப்பட்டபிறகு அவருடைய பிறந்த நாளன்று பார்ஸி மாதர்கள் அவரைப் போய்ப்பார்த்து விட்டு அவருடைய ஆசீர்வாதங்களைப்பெற்று வருவார். சென்ற 10-வருஷகாலமாய் அவருடைய பிறந்த நாளை இந்தியாவில் பலமாகாண வாசிகளும் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். அன்றைய தினம் அவர் தமது தேசவாசிகளுக்கு ஒரு நற்செய்தி அனுப்புவதுமுண்டு. அவருக்குப் போன மே மாதம் 25-ந் தேதி தேகத்தில் உபாதை கண்டது. டாக்டர்கள் அவர் பிழைக்க மாட்டாரென்று அபிப்பிராயப்பட, அவரை அவருடைய குடும்பத்தார் போன மாதம் 2-ந் தேதியன்று பம்பாய்க் கெடுத்து வந்தார்கள். அதுமுதல் சென்ற மாதம முழுதும் அவர் வருந்திக்கொண்டேயிருந்து ஜூன் மீ 30உ சனிக்கிழமை சாயங்காலம் 5-15-மணி சுமாருக்கு இறந்துபோனார். அவர் பம்பாய்க்கு எடுத்துக் கொண்டுவரப்பட்ட பிறகு நாளுக்குநாள் அவருக்குத் தென்பு குறைந்துகொண்டே வந்தது. இறப்பதற்கு சில தினங்களுக்கு முன்னால் பேசக்கூடச் சக்தியில்லாமல் போய்விட்டது. ஆனால் இறக்கும் வரையில் நல்ல ஞாபகத்தோடிருந்தார். பேசச் சக்தியற்று சிறிது உணவு அருந்துதலுமொழிந்து மரண வேதனைப் பட்டுக்கொண்டிருந்தபோதும் தேசப் பொதுவிசேஷங்களைப் பிறர் வாசித்துச் சொல்லக்கேட்டுத் தெரிந்து கொண்டாரெனப் படுகிறது. ஸ்ரீ தாதாபாய் தமது உற்றார் உறவினர் பலரும் சூழ்ந்திருக்க, 1917 ௵ ஜூன் மாதம் 30-ந் தேதி சனிக்கிழமை சாயங்கால மிறந்து போனது இந்தியர்களனைவருடைய மனதையும் மருகச்செய்யும்.

L. அனந்தய்யர்.



---

# PART VIII.

## MORAL STORIES.

## நீதிக் கதைகள்.

### சீலவதி.

(134-ம் பக்கத் தொடர்ச்சி.)

பிச்சைக்காரன்:—அம்மா, நான் தான் உன் கணவனால் எனக்காகவேண்டியது ஒன்று மில்லை யென்றேனே. நீ உனதிஷ்டம்போல் செய்யும் நிலைமையிலிருக்கும் போது உன் கணவனிடம் நான் போய்ப் பிச்சை கேட்பானேன்? ஆதலால் பெண்ணே, நான் ஸ்தலயாத்திரை போவதற்கு அனுகூலமாயிருக்கும்படி உன் சக்தியானுஸாரம் ஏதாவது கொடுத்து உதவுவாயாக. அவ்விதஞ்செய்ய உனக்கு மனம் வராதா? எத்தனையோ ஸ்திரீகள் உலகிற்கு உதவி செய்திருக்கிறார்களே, அவர்களைப்போல நீயும் செய்யக்கூடாதா?

சீலவதி:—ஐயா, பெரியவரே, திரும்பவும் சொல்லுகிறேன் கேளும்; வேதநூல்களை நன்றாய் ஆராய்ந்த ஒருவர் ஒரு ஸ்திரீக்கு ஸர்வ ஸ்வாதந்தர்யமு முண்டென்று ஒருபோதும் சொல்லமாட்டார். ஸ்திரீயானவள் நன்றாகக் கற்றுணர்ந்த விற்பன்னையாகவிருக்கலாம். வேத வேதாந்தங்களைத் தெளிவாயறிந்த உத்தமியாக விருக்கலாம். அவள் தன் புத்திவிசாலிக்கக் கூடிய சாஸ்திராதிகளைக் கற்றுத்தெரிந்த சிமாட்டியாகவும் இருக்கலாம். இவையனைத்தும் பெரும் பாலும்கணவனை ரமிக்கச்செய்வதற்கே யல்லாது வேறெதற்குமல்ல. அவள் ஒரு பரிவ்ராஜகியாயின், அவ்விதம் ஆனது உலகோத்தாரணத்திற்கே யல்லாது வேறெதற்குமல்ல. மனிதனாகப் பிறந்தோன் ஒவ்வொருவனும் மற்றவனுக்கு எவ்விதத்திலாவது தொண்டுபுரிந்தே தீரவேண்டும். மனுஷ்யனே புரியும் போது ஸ்திரீக்குக் கேழ்க்கவேண்டுமா? சிற்சிலசமயங்களில் மனைவி அவளுடைய நாதனை அதிகார தோரணையோடு நடத்தும் சமயமும் உண்டு. அதல்லாது கிருஹகிருத்தியங்களைப் பொறுத்த மட்

டில் மனைவி தன் வார்த்தையேறும்படி அதிகாரஞ் செலுத்துவதும் ஸகஜம். இவ்விதமிருப்பதைப் பார்த்துவிட்டு ஸ்திரீகளாயினோர்க்கு ஸ்வேச்சையுண்டென்று சொல்லுதல் பொருந்தாது. அவள் மேற்பார்வைக்குத் தன்னிச்சையாகவே ஒவ்வொன்றையும் செய்வதாகத் தோன்றினாலும் உண்மையில் அவள் எவ்விதமான பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதில்லை. எல்லாம் கணவன் சொற்படியே கேட்பவளாயிருக்கிறாள். ஒவ்வோர் காரியத்தையும் தன் தலைவனின் விருப்பத்திற் கிணங்கியே செய்கின்றாள். கணவன் நீடூழி நிலைத்திருந்தால் தான் தனக்கு சுகமுண்டென்று கருதுகிறாள். கணவனுக்கு மனங்கோணின் தன் மனமும் கோணலடைந்ததாகப் பாவிக்கிறாள். சுருக்கிச் சொல்லின், அவளுடைய சுகமனைத்தும் அவளது கணவனின் சுகத்தைச் சார்ந்ததாகவே யிருக்கிறது. அம்மாதிரியான நிலையில்தான் நானிருக்கிறேன்; அப்படிக்கிருக்க நீர் என்னிஷ்டப் பிரகாரம் காரியஞ் செய்யலாமென்றீரே. அது அவ்வளவு உசிதமாக எனக்குத் தோன்றவில்லை.

பிச்சைக்காரன்:—அதுபோகட்டும்; போன ஜன்மத்தில் நீ யாராக விருந்தாய் சொல்லு பார்ப்போம். எந்த மனிதனை நீ நாயகனென்றும் மணவாளனென்றும் சொல்லிக்கொண்டு இந்த ஜன்மத்தில் போற்றுகிறாயோ அம்மனிதன் போன ஜன்மத்தில் எவ்விதமிருந்தான்? அவனுக்கும் உனக்குமிருந்த சம்பந்தம் எப்படி ?

சீலவதி:—இக்கேள்வி எனக்குச் சிரிப்பையுண்டாகுகிறது. உமது கேள்விக்குச் சரியான பதில்சொல்ல என்னால் முடியாது. அதாவது இந்த ஜன்மத்தில் என் பர்த்தாவாயிருப்பவருக்கும் எனக்கும் முன் ஜன்மத்தில் என்ன விதமான பந்துத்துவம் இருந்ததென்பதைச் சொல்ல என்னால் ஸாத்தியப்படமாட்டாது. அந்த ஜன்மத்தில் அவருக்கு மனைவியாகவோ, சகோதரியாகவோ, வேறு எவ்விதமாகவோ இருந்திருக்கக்கூடும். தெய்வசங்கற்பமே ஓரலாதியான க்ரமமல்லவா? நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நடத்துவது உலகத்தில் சகஜமாய்ப் போய்விட்டது. நீர் என்னிடமிருந்து ஏதோ கற்றுப்போக எண்ணங் கொண்டிருக்கிறீர் போலும். முன் ஜன்மத்தில் என் நாதருக்கு நான் மனைவியாயிருந்திராமற் போனாலும், அவருக்கும் எனக்கும் எந்தவிதத்திலாவது சினேகத்துவம் இருந்திருக்க வேண்டுமென்பதை நீர் மறுக்கமுடியாது. இந்த ஜன்மத்திலோ இம்மாளிகைக்கு அதிபதியாயிருக்கும் துளசிராமனின் மனைவியாக நான் வாழ்க்கைப்பட்டிருக்கிறேன். நான் முன் ஜன்மத்திற்செய்த கர்மவசத்தினாலேயே இப்பிறவியில் துளசிராமனுடன் இருவாறான சம்பந்தம் ஏற்படலாயிற்றென்று கருதவேண்டியதா யிருக்கிறது. ஒரு ஜன்மத்தில் லபித்ததுதான் ஏழுஜன்மங்களிலும் லபிக்குமென்று பெரியோர் சொல்லுவார்கள். இந்த ஏழு ஜனமங்களிலும் நான் அந்த ஜீவாத்மாவுக்கு மனைவியாகவிருந்து எந்தெந்த விதங்களில் அவருக்கு உடல், உயிர், ஆவி ஆகிய இம்மூன்றினையும் அர்ப்பிதஞ்செய்து உழைக்கவேண்டுமோ அவைகளெல்லாம் தீர்ந்தபிறகே என்னிஷ்டப் பிரகாரம் ஏதொரு காரியத்தைச் செய்யும் ஸ்வேச்சாதிபத்தியம் எனக்குண்டாகும். ஆனால் இன்னோர் அம்சமும் குறிப்பிடத்தக்கது. அவ்வேழு ஜன்மங்களுக்குப் பிறகும் நான் ஸ்திரீ ஜன்மமெடுக்கும்படியாக விதியிருக்குமாயின், திரும்பவும் ஓராடவனைச் சார்ந்திருக்கவே வேண்டும். (இன்னும் வரும்.)



சாலிவாகன சகாப்தம் ௧௮௩௯ / கலியப்தம்-௫௦௧௮ } ஆஷாடம் / சிராவணம் { பிங்களஹூ ஆடிமீ / தக்ஷிணாயனம்-கிரீஷ்மருது } கொல்லம் / ௧௦௯௨ { இங்கிலீஷ்-௧௯௧௭, பஸலி-௧௩௨௭ / ஜூலைமீ-ஆகஸ்டுமீ } ஹேஜரா-௧௩௩௫. / ரம்ஜான்-ஷவ்வால்மீ.

| | | | | |
|---|---|---|---|---|
| 25 | 16 | ௧ | திங் | துவா ௦-௫௧, மிருக ௫௧-௩௨, விரு ௧௧-௪, தை ௦-௫௧, தி ௧௧-௩௫, சூன்யார்க்கம், அஹ ௩௧-௩௦, வாக்கியம், துருவம், பிரதோஷம், சூன்யதிதி, அ, சி, |
| 26 | 17 | ௨ | செ | திர ௧-௪௪, திரு ௯௦-௦, துரு ௯-௨௮, வணி ௧-௪௪, தி ௨௧-௫௦, சிவராத்ரிவிருதம், கிருஷ்ணாங்காரகசதுர்தசி, கடகிருஷ்ண |
| 27 | 18 | ௩ | புத | சதுர் ௩-௪௭, திரு ௩-௫௫, விபா ௮-௪௮, சகு ௩-௪௭, ரா ௪-௫௫, தர்சசிரா, சி, [சதுர்தசிதிதி, ம, |
| 28 | 19 | ௪ | வியா | ● அமா ௭-௨, புன ௮-௭, ஹர் ௯-௩, நா ௭-௨, தி ௩௦-௧, இஷ்டி, அ, |
| 29 | 20 | ௫ | வெ | சிராவணசுக்லபிர ௧௯-௮, பூச ௧௩-௪௩, வஜ் ௯-௫௮, பவம் ௪௧-௮, ரா ௧௭-௪௨, அஹ ௩௧-௨௮, சந்திரதர்சனம், ம, |
| 1 | 21 | ௬ | சனி | துவி ௧௫-௪௭, ஆயி ௨௦-௦, வித் ௧௧-௧௯, கௌ ௧௫-௪௭, ரா ௨௧-௫௨, ம, |
| 2 | 22 | ௭ | ஞா | திரு ௨௦-௩௮, மக ௨௯-௨௧, வியதீ ௧௨-௫௪, கர ௨௦-௩௮, ரா ௧௭-௧௦, ஸ்வர்ணகௌரீவிருதம், அதிதி, ம, சி, |
| 3 | 23 | ௮ | திங் | சது ௨௫-௨௩, பூர ௩௨-௩௩, வரி ௧௪-௨௦, பத் ௨௫-௨௩, ரா ௨௦-௫௧, சதுர்தீவிருதம், ஆடிப்பூரம், நாகசதுர்த்தி, சி, அ, |
| 4 | 24 | ௯ | செ | பஞ் ௨௧-௩௯, உத்தி ௩௮-௨௦, பரி ௧௫-௨௮, பா ௨௧-௩௯, தி ௦-௦, அஹ ௩௧-௨௯, கருடபஞ்சமி, சி, |
| 5 | 25 | ௧௦ | புத | ஷஷ ௩௨-௫௫, ஹஸ் ௪௩-௮, சிவ ௧௫-௫௯, கௌ ௧-௧௯, தி ௧-௦, விம்மயனம் ௫௫-௧௫, ஷஷ்டிஉபவாஸம், ம, சி, |
| 6 | 26 | ௧௧ | வியா | ஸ ௩௫-௧௦, சித்தி ௪௯-௫௩, ஸித்த ௧௫-௩௭, கர ௪-௨, தி ௪-௪௩, சி, அ, |
| 7 | 27 | ௧௨ | வெ | அஷ் ௩௯-௧௧, சுவா ௪௧-௨௩, ஸா ௧௪-௨௩, பத் ௫-௪௧, தி ௧-௨௮, ஸ்ரீவரலக்ஷ்மீவிருதம், சி, |
| 8 | 28 | ௧௩ | சனி | நவ ௩௫-௩௯, விசா ௫௦-௩௩, சுப ௧௨-௮, பா ௯-௩, தி ௩-௪௧, அஹ ௩௧-௨௪, சி, |
| 9 | 29 | ௧௪ | ஞா | தச ௩௪-௨௫, அனு ௫௦-௪௦, சுப் ௮-௫௩, தை ௫-௧௧, தி ௦-௩௧, ஆதித்யவிருதம், ம |
| 10 | 30 | ௧௫ | திங் | ஏகா ௩௧-௪௫, கே ௪௩-௩௫, ப்ரா ௪-௪௧, உபரி ௫௪-௫௫, வணி ௩-௫, தி ௪-௨௫, ஸர்வைகாதசி, சி, |
| 11 | 31 | ௧௬ | செ | துவா ௨௮-௪, மூல ௪௭-௩௧, வை ௫௩-௩௯, பா ௨௮-௪, தி ௮-௫௪, ரா ௧௨-௧௭, பிரதோஷம், வைதிருதீசிரா, அ, சி, |
| 12 | 1 | ௧௭ | புத | திர ௨௩-௩௪, பூரா ௪௪-௩௯, விஷ் ௪௭-௫, தை ௨௩-௩௪, தி ௧௦-௨௧, அஹ ௩௧-௧௧, திதித்வயம், அ, |
| 13 | 2 | ௧௮ | வியா | சதுர் ௧௮-௨௯, உரா ௪௧-௧௭, ப்ரீ ௪௦-௯, வணி ௧௮-௯, தி ௩-௨௧, ரா ௧௯-௨௭, சி, [காயத்திரீஜபம், ஸர்பபலி உபக்கிரமஹ,சி, |
| 14 | 3 | ௧௯ | வெ | ○ பௌ ௧௨-௪௮, திரு ௩௭-௨௯, ஆயு ௩௨-௪௫, பவ ௧௨-௪௮, ரா ௧௫-௩௫, சிரவணோபவாஸம், இஷ்டி, ரிக்யஜுருபாகர்மா, |
| 15 | 4 | ௨௦ | சனி | சிராவணகிருஷ்ணபிர ௯-௪௪, அவி ௩௩-௨௨, ஸௌ ௨௩-௧௫, கௌ ௯-௪௯, ரா ௧௮-௫௧, சி, அ, |
| 16 | 5 | ௨௧ | ஞா | துவி ௦-௩௨, உபரி ௫௩-௫௯, சத ௨௯-௧௭, சோ ௧௭-௩௫, கர ௦-௪௨, வணி ௨௯-௫௮, ரா ௧௯-௯, அஹ ௩௧-௧௪, அவமா, சி, |
| 17 | 6 | ௨௨ | திங் | சது ௪௮-௪௧, பூட் ௨௫-௨௨, அதி ௪௦-௫, பவ ௨௧-௪௩, ரா ௧௯-௫௧, ம, சி, |
| 18 | 7 | ௨௩ | செ | பஞ் ௪௩-௩௭, உட் ௨௧-௫௧, ஸுகர் ௨-௫௦, உபரி ௫௩-௧௩, கௌ ௧௯-௧௩, ரா ௧௯-௧௯, அ, சி, |
| 19 | 8 | ௨௪ | புத | ஷஷ ௩௯-௧, ரே ௧௮-௫௪, சூல ௪௯-௧௧, கர ௧௧-௧௯, தி ௦-௦, ம, |
| 20 | 9 | ௨௫ | வியா | ஸ ௩௫-௧௧, அசு ௧௯-௪௨, கண் ௪௪-௧௮, பத் ௮-௩௯, தி ௭-௩, ரா ௯-௯, அஹ ௩௧-௩, ஜன்மாஷ்டமி, ஸ்ரீஜயந்தி, அ, சி, |
| 21 | 10 | ௨௬ | வெ | அஷ் ௩௨-௧௧, பர ௧௫-௨௩, விரு ௩௧-௨௪, பா ௩-௪௫, ரா ௧௪-௧௩, கிருத்திகோபவாஸம், ஸூர்யஸாவர்ணிகமன்வாதி, சி, |
| 22 | 11 | ௨௭ | சனி | நவ ௩௦-௩௩, * கார் ௫௫-௧, துரு ௩௫-௪௪, தை ௧-௨௯, ரா ௨௪-௪௯, அ, |
| 23 | 12 | ௨௮ | ஞா | தச ௨௯-௫௭, ரோ ௧௯-௫. வியா ௩௨-௫௨, பத் ௨௯-௫௭, நி ௩௦-௩௯, சி, |
| 24 | 13 | ௨௯ | திங் | ஏகா ௩௦-௪௮, மிரு ௧௮-௧௮. ஹர் ௩௧-௦, பா ௩௦-௪௮, ரா ௯-௩, அஹ ௩௧-௩, ஸர்வைகாதசி, அ, சி, |
| 25 | 14 | ௩௦ | செ | துவா ௩௨-௫௦, திரு ௨௧-௪௫, வஜ் ௩௦-௭, கௌ ௧-௪௧, ரா ௨௩-௪, ம, சி, [தசிதிதி, சி, |
| 26 | 15 | ௩௧ | புத | திர ௩௫-௫௧, புன ௨௯-௧௯, ஸித்தி ௩௦-௭, கர ௪-௨௫, ரா ௧௭-௧௩, பிரதோஷம், சிவ்ராத்திரீவிருதம், கடகிருஷ்ணதிரயோ |

## இராகு காலம்.

| காலம். | ஞாயிறு. | திங்கள். | செவ். | புதன். | வியா. | வெள். | சனி. |
|---|---|---|---|---|---|---|---|
| இராகு காலம் | உகவ | கரு | உஉஇ | கஇ | கஅரு | கசவ | எஇ |
| குளிகை காலம் | உக | உஉ | கஅ | கச | கய | க | ௮ |
| இராக்குளிகை காலம் | கய | க | உ | உக | உஉ | கஅ | கச |

## சுபமுகூர்த்தங்கள்.

மகஉ சக்கிரவாரம் பகல் நாழிகை எரு-க்குமேல் கன்னியா லக்கினத்தில் சுபமுகூர்த்தம்.

உகஉ ஆதிவாரம் பகல் நாழிகை எஇ-க்குமேல் கஅஇ-க்குள்ளாக கன்னியா லக்கினத்தில் கூர்த்தம். சந்திரப் பிரீதி.

உசஉ புதவாரம் பகல் நாழிகை எ-க்குமேல் கஇ-க்குள்ளாக கன்னியா லக்கினத்தில் சுபமுகூர்த்தம்.

| | | |
|---|---|---|
| வி | செ. செ. | |
| அஉ ஸிம்ஹ சுக் கிரன் சுஉ சைபுதன். | ஆ. ப சுக் சனி. | |

## நக்ஷத்திரங்கள் கூடும் திருநாள்கள்.

கசஉ ஸ்ரீ ராமா ஜொதிகூஷைத் குருபகவான் நாயனார்.
கஉஉ சுவாதி சுந்தரமூர்த்தி நாயனார்.
சை கேரமான் பெருமாள் நாயனார்.
சை கேட்டை கணம்புல்ல நாயனார்.
சை கோட்புலி நாயனார்.
கஅஉ கார்த்திகை மூர்த்தி நாயனார்.
உகஉ சைவ புகழ்ச்சோழ நாயனார்.
உஅஉ மூர்த்தி ரோகிணி நாயனார்.
அஉ ஆதிரை திருநக்ஷத்திரங்கள்.
ஆ. மூலம் ஸ்ரீ ஆண்டாள்.
கஉஉ சுவாதி பக்திராஜர்.
கஅஉ உத்திராடம் ஸ்ரீ ஆழ்வார்கள்.
ரா.
கசஉ நாழிகை உள் வாஸ்து.

| நக்ஷத்திரங்கள். | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அசுபதி | | | | | | | |
| பரணி | | | | | | | |
| கார்த்திகை | | | | | | | |
| ரோகணி | | | | | | | |
| மிருகசீரிடம் | | | | | | | |
| திருவாதிரை | | | | | | | |
| புனர்பூசம் | | | | | | | |
| பூசம் | | | | | | | |
| ஆயில்யம் | | | | | | | |
| மகம் | | | | | | | |
| பூரம் | | | | | | | |
| உத்திரம் | | | | | | | |
| ஹஸ்தம் | | | | | | | |
| சித்திரை | | | | | | | |
| ஸ்வாதி | | | | | | | |
| விசாகம் | | | | | | | |
| அனுஷம் | | | | | | | |
| கேட்டை | | | | | | | |
| மூலம் | | | | | | | |
| பூராடம் | | | | | | | |
| உத்திராடம் | | | | | | | |
| திருவோணம் | | | | | | | |
| அவிட்டம் | | | | | | | |
| சதயம் | | | | | | | |
| பூரட்டாதி | | | | | | | |
| உத்திரட்டாதி | | | | | | | |
| ரேவதி | | | | | | | |

ஸ்ரீராமஜயம்.

# கல்ப தரு.

# KALPA THARU.

அறிவு வளர்ச்சிக்கான ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புஸ்தகம் 1. Vol. 1. } பிங்கள ஆவணிமீ -AUGUST, 1917 { ஸஞ்சிகை. 6 No. 6.

# PART I.

## THE BRITISH ARMY—THE WAY OF THE RECRUIT.

## பிரிடிஷ் சைந்யம்—ரிக்ரூட் நடக்கவேண்டிய க்ரமம்.

பிரிடிஷ் ராணுவ அமைப்பைக்குறித்துப் பொதுவாகப் போனமாதச் சஞ்சிகையிற் சொன்னோம். அந்த ராணுவ அமைப்புக்கு ஜீவாதாரமாயுள்ள பிரிடிஷ் சோல்ஜர்களையும்பற்றி ஒருவாறாகக் குறிப்பிட்டோம். இம்மாதச் சஞ்சிகையில் ராணுவ ஊழியத்திற்காகச் சேர்க்கப்படுகின்ற 'ரிக்ரூட்' எனப்படும் ஆட்களைக்குறித்துச்சிறிது ஆராய்வோம். விஷயம் மிகவும் பெரியது. அதை விரிவாக ஆராய்வதெனின் பெருகும்; ஆனதுபற்றி மிகவும் சுருக்கமாக 'ரிக்ரூட்'களைக் குறித்த சிற்சில அம்சங்களைமட்டும் பேசுவோம். ரிக்ரூட் என்று எவருக்குப் பெயர், ரிக்ரூட் நடக்கவேண்டிய தன்மையெப்படி, ரிக்ரூட் செய்யவேண்டிய காரியங்களென்ன, ராணுவ ஊழியத்தில் ரிக்ரூட் இருக்கும்படியான நிலையெது—என்பனவாகிய விஷயங்கள் எவர்க்கும் முன்னிடக்கூடும். ராணுவ இலாகாவில் நமக்கு நேரான பரிச்சயமில்லாவிடினும் நடைமுறைப் பழக்கத்தினாலும் கவனிப்பினாலும் தெரியவந்த சிற்சில உண்மைகளை யாதாரமாகவைத்து இப்பெரிய விஷயத்தை நம் நண்பர் முன்பாக எழுதப் புகுந்தனம்.

ராணுவத்தில் உழைப்பதற்காகப் புதிதாய்ச் சேர்க்கப்படுவோனுக்கு ரிக்ரூட் என்று பெயர். அவ்விதம் சேர்ப்பதற்காகப் பொறுப்புக் கட்டிவிடப்படும் ஆபிஸருக்கு ரிக்ரூடிங் ஸார்ஜெண்ட் என்று சொல்லுவார்கள். இந்த உத்தியோகஸ்தர் பிரதமமான ஊர்களுக்கும் கிராமங்களுக்கும் சென்று தேகவலிமையும் மனோவலிமையும் பூண்ட பலாட்டியர்களைத் தொகுத்து அவர்களுக்கு ராணுவ ஊழியஞ்செய்ய விருப்பமுண்டோவென விசாரித்துப் பிறகு அவர்களுடைய பெயரைப் பதிவுசெய்து கொள்ளுவார். அங்ஙனம் பதிவானபிறகு ராணுவ ஊழியத்திற் புகவிருக்கும் ரிக்ரூட்கள், தாம் எந்த ராணுவத்திற் சேர்ந்திருக்கிறார்களோ அந்த ராணுவத்திற்கு அதிபராகவிருக்கும் அரசரிடம் தமக்குள்ள ராஜாபிமானத்தைக் குறித்துப் பிரமாணஞ்செய்து கொடுக்கவேண்டும். ராஜாபிமானப் பிரமாணம் (oath of allegiance) ஆனபிறகு ரிக்ரூட்டானவன் ராணுவ உழைப்பை வகிக்கத்தக்க சரீரபலங்கொண்டவனா வென்பதைக்குறித்து டாக்டர் மூலமாக அத்தாக்ஷிப் பத்திரம் பெறவேண்டும். அதற்காக அவனை டாக்டர் பரீக்ஷை செய்வார். பரீக்ஷையென்றால் சாமான்ய பரீக்ஷையென்று நம் நண்பர் நினைக்கவேண்டாம். உடுப்புகள் அனைத்தையும் களைந்துபோட்டுப் பின்னர் சரீரத்தினுடைய ஒவ்வோர் உறுப்பின் இலக்கணங்களைப் பரிசீலனை செய்து, அதற்குப் பின் கண்ணொளியையும் உச்சுவாஸ நிச்சுவாஸங்களையும் ஆராய்ந்துபார்த்து பிறகே அந்த ரிக்ரூட் விஷயத்தில் டாக்டர் திருப்திகரமான ரிப்போர்ட் செய்வார். அப்படிக்கில்லாது ஏதேனும் ஓரம்சத்தில் ரிக்ரூட் திருப்திகரமாயில்லாது போவானாயின் சரீரபலாட்டியத்திற்கு உகந்த பயிற்சிபெற அவன் அனுப்பப்பட்டுவிடுவான். அதுவே ரிக்ரூட் செய்யவேண்டிய ஸர்விஸின் முதல்வருஷ க்ரமமாம். ஆரம்பத்தில் ரிக்ரூடிங் ஸார்ஜெண்ட் இட்ட வேலைகளை மணிக் கணக்காகவோ நாள் கணக்காகவோ அல்லது மாதக்கணக்காகவோ ரிக்ரூட்டானவன் செய்துமுடித்துப் பிறகு தன்னைப்போன்ற இதர ரிக்ரூட்டுகள் சேர்க்கப்பட்டிருக்கும் டெபோ போய்ச் சேருகிறான்; அல்லது தான் எந்த படைப்பகுதியில் சேரவேண்டுமென்று ஸார்ஜெண்டினால் பதிவு செய்யப்பட்டிருக்கிறானோ அப்படைப் பகுதிக்குப் போகவாவது உத்தரவு பெறுகிறான். அதில் போய்ச் சேர்ந்த பிறகே ரிக்ரூட்டுக்கு ராணுவப் பயிற்சி ஆரம்பமாகின்றது.

### ரிக்ரூட்டின் ஆரம்ப வேலை.

பற்பலவிதமான கருத்துகளோடு ராணுவத்திற் சேர்ந்திருக்கக்கூடிய ஒரு ரிக்ரூட்டை யெடுத்துக்கொள்வோம். ஒரு கிராமத்திலோ மற்றுமெங்கிருந்தோ ஸார்ஜெண்டினால் பதிவுசெய்து கொள்ளப்பட்ட ஒரு ரிக்ரூட்டானவன் ஒரு ராணுவஸ்தலம் போய்ச் சேர்ந்தபிறகு மாலையில் நேராக ஸோல்ஜர்களுக்கான விடுதிகளெனப்படும் பாரெக்ஸ் (Barracks) ஸுக்கு அனுப்பப்படுகிறான். அவன் புதிதாக ஆரம்பிக்கும் ஜீவவாழ்க்கைக்கு அவ்



விடுதியிற் புகுவதே பிரதம வேலையாகும். குன்றுகளையும் சேறும் சகதியுமான சந்து பொந்துகளையும் கடந்து ரிக்ரூட் பாரெக்ஸ்போய்ச் சேர்ந்ததும் "C" படையின் க்வார்டர்மாஸ்டர் ஸார்ஜெண்ட் ஆபீசுக்குச் செல்லவேண்டும். அவ்வாபீசு இருக்குமிடந் தெரிந்துகொண்டு அங்கு சென்றதும் அங்குள்ள இளவயதுள்ள கார்ப்போரல் ஒருவன் வந்த ரிக்ரூட்டின் பெயரையும் காரியத்தையும் தமாஷாவாகக் கேட்டுவிட்டுப் பிறகு ரெஜிமெண்டைச்சேர்ந்த சிற்றுண்டிச் சாலைக்குக் கொண்டுபோய் ரொட்டி காபி, இறைச்சி இவைகளை ஸமர்ப்பித்துப் படைச்செலவில் சாப்பாடு செய்விக்கிறான். அதோடு புதிதாகவந்த ரிக்ரூட் இன்ன இடத்தில் படுத்து நித்திரை செய்யவேண்டுமென்று அறையைக் காண்பித்துவிட்டு அழைத்து வந்த கார்ப்போரல் ஆபிஸர் போய்விடுவான். பிறகு ரிக்ரூட்டானவன் அறையின் கதவைத்திறந்து பார்ப்பான்; அவ்வறை இரண்டொருவர் தங்கியிருக்கக் கூடிய சிறிய அறையென்று நம் நண்பர் நினைக்கவேண்டாம். அது ஒரு நீளமான அறை. அதை ஒருநீண்ட 'ஹால்' என்று குறிக்கவேண்டுமேயல்லாது அறையென்று சொல்லுவது பொருந்தாது.

### அறையின் தோற்றம்.

நீண்டிருக்கும் அந்த ஹாலின் இருபுறங்களிலும் இரண்டுவரிசை இரும்புக்கட்டில்கள் போடப்பட்டிருக்கும் ஒவ்வொருகட்டிலிலும் கயிறுமெத்தை, ஒருகம்பளி, ஒரு விரிப்பு இவை விரிக்கப்பட்டிருக்கும். அனேகமாய் ஒவ்வொரு கட்டிலிலும் ஒவ்வொருவர் உட்கார்ந்து தம் தம் சாமான் எதையாவது துடைத்துக்கொண்டோ 'க்ளீன்' செய்துகொண்டோ வேலையில் முயன்றிருப்பார்கள். சிலர் சட்டைப் பொத்தான்களைத் தேய்த்துக்கொண்டும், சிலர் இடுப்பு பெல்ட்டுக்களைக் கம்பளத்தினால் துடைத்துக்கொண்டும், சிலர் கத்திப்பிடிகளை யழுக்கெடுத்துக் கொண்டும், தாம் அணியும் பூட்சுகளில் படிந்திருக்கக்கூடிய செங்கற் காவிகளைத் தட்டிப் 'பாலிஷ்' செய்துகொண்டும், தம்முடைய உயிரே அக்காரியங்களில் பதிந்திருப்பதுபோலக் காட்டி வேலைபண்ணிக்கொண்டிருப்பதுண்டு. இரவு 9-மணியானபிறகு 'பத்தேகால் மணிக்கு விளக்குகளை யணைக்கவேண்டு'மென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக ஒரு சப்தம்கேட்கும் இந்த சந்தர்ப்பத்தில் புதிய ரிக்ரூட் உட்புறம் போகையில் ஏதோ என்னவோ, எங்கோ வந்துசேர்ந்தோமே யென்று தோன்றிச் சிறிதுநேரம் பிரமைபிடித்தவன்போல் நிற்கக்கூடும். இவனது நிலையைக்கண்ட உட்புறத்துள்ளோர் 'இன்னொருவன் வந்துசேர்ந்தான்' என்று சொல்லிக் குதூகலித்துப் பாடவாரம்பிப்பார்கள். இவனென்ன இங்குவந்து சேர்ந்தான், இவன் ஸிவில் உடையைக்கழற்றி ராணுவ உடைதரிக்குமுன் இதைவிட்டு ஓடிப்போகட்டுமென்றுகூடச் சிலர் சொல்லிப் பரிகசிப்பதுண்டு. சிலர் 'கொக் கொக்கொ' வென்று பல்லிளித்துச் சிரித்து ஹாஸ்யம்செய்து கொண்டிருப்பார்கள். ராணுவத்திற் பழக்க

மிராத ஸிவிலியர்களுக்கு ஏற்கெனவே அவ்வறையின்கணுள்ள ரிக்ரூட்கள் செய்வது பெருந்தடுமாற்றமாகத் தோன்றுமாயினும், உள்நோக்கிப் பார்க்குமிடத்து அதெல்லாம் வழக்கமாய் அனுஸரணையிலிருப்பதென்றே தெரியவரும். இதையெல்லாங் கவனித்த ரிக்ரூட்டுக்கு ஒன்றுமே புரியாது. பிரமையொருபுறமும் கிலியொருபுறமுமாக நின்று பார்த்துக் கொண்டிருப்பான். எல்லாக் கட்டில்களிலும் முட்டு முட்டாக ஒவ்வோராள் உட்கார்ந்திருப்பதோ அல்லது வேலை செய்துகொண்டிருப்பதோதான் அவன் கண்களுக்குப் புலப்படும். இத்தியாதி நிலைமையில் இரண்டொரு நிமிஷங்களுக்குப்பிறகு அந்த ஹால் நடவடிக்கைகளைக்கவனிக்கும் கார்ப்போரல் என்னும் உத்தியோகஸ்தர் முன்வந்து அறைக்கோடியிலிருக்கும் ஒரு படுக்கையைக் காண்பித்து, அதில் வழக்கமாயிருப்பவர் 24-மணி நேரம் பாராவுக்காகச் சென்றிருப்பதால், அதை இரவு நேரத்தில் வந்தவன் உபயோகித்துக் கொள்ளலாமென்று சொல்லிச் சுட்டிக்காட்டுவார். காலையில் புதிய ரிக்ரூட் க்வார்டர்மாஸ்டர் ஸ்டோருக்குச் சென்று பிளாங்கெட், விரிப்பு, கம்பளி தலையணை முதலியனவும் 'பிஸ்கட்டு'களும் அவனுடைய உபயோகத்திற்காக வாங்கிவரவேண்டும். 'பிஸ்கட்' என்பது ராணுவத்தில் வழங்கும் ஒரு பதம். கயிற்றினால் பின்னப்பெற்ற சதுர அளவுள்ள ஒரு விரிப்பு. அதைப் பிரித்துப்போட்டால் ராணுவக்கட்டிலுக்குச் சரியாகவிருக்கும். அப்பேர்ப்பட்ட கட்டிலில் ரிக்ரூட் உட்கார்ந்து ஒருவிசை சுற்று முற்றும் அவ்வறையைப் பார்ப்பான். மற்றவர்கள் வேலைசெய்வதும் ஒரு மூலையிலிருந்து மற்றோர் மூலையிலிருப்பவரைக் கூவியழைப்பதும், தமாஷாவாகச் சம்பாஷிப்பதும், ராணுவப்பெயர் வைத்தழைப்பதும், பாடுவதும் பரிகசிப்பதும் பலமாயிருப்பது அவனுக்குப் புலப்படும். எவனாவது ஒருவன் குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தால் மற்றொருவன் அவன்மீது கால்பூட்ஸைக் கழற்றியெறிவதுண்டு. பூட்ஸ் மேல்விழப்பெற்றவன் எழுந்துபார்த்துப் பிறகு பேசாது படுத்துவிடுவான்; எல்லோரும் கொல்லென்று கரகோஷஞ் செய்து கொக்கரிப்பார்கள். இந்தவிதமாக ரிக்ரூட் புகுந்த பாரெக்ஸ் அறையிருக்கும். விளக்கவிக்கப் படவேண்டுமென்ற உத்தரவுக்குப் பிறகு எல்லோரும் படுத்துவிடுவார்கள். தன்னுடைய வாழ்நாட்களில் ஒரு பகுதியை இதற்கு அர்ப்பிதம் செய்ததாக அப்போதே ரிக்ரூட்டின் மனதிற்படும். பட்டுமென்செய்வது? தானும் அவர்கள் மத்தியில் வந்துவிட்டது பற்றி அம்மாதிரியான வழக்கப் பழக்கங்களைத் தான் அனுஸரித்தாலல்லது முடியாது என்று நினைத்து முதலிரண்டொரு தினங்களில் ஒருவிதமான பயத்தோடு நின்றாலும் பழகப்பழக மற்றவர்களைப் போலவே இவனும் நடக்க வாரம்பித்து விடுகிறான்.

(தொடரும்.)



# PART II.

## ஆரோக்கிய விமர்சனம்.

### நித்திரை.

BY K. P. SESHADRI AIYANGAR
(*Teacher, Muthiyalpet High School, Madras.*)

(142-ம் பக்கத் தொடர்ச்சி)

அலெக்சாந்தர் (Alexander the Great) மஹாவீரன் அர்பேலா (Arbela) என்ற போர்க்களத்திலும், நெப்போலியன் (Nepolean) என்ற யுத்தவீரன் ஆச்டர்லிட்ஜ் (Austerlitz) என்ற சமர்பூமியிலும் யுத்தம் நடந்துகொண்டிருக்குமிடத்திற்கு மத்தியில் தங்களைச்சுற்றி நானாவித ஆயுதங்கள் வந்து விழுந்து கொண்டிருக்கும்போதே அயர்ந்து தூங்கினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் சாதாரணமானவர்களல்ல. அசகாயசூரர்கள். தூங்காதே தூங்காதே என்று ஒருவனை சாட்டைகொண்டு அடித்தாலும் அவன் சுகதேகியாயின் 60 நாழிகைக்குமேல் தூங்கியே தீருவான்.

சப்தங்களில்லாமலிருந்தால் தூக்கத்திற்கு நல்லது என்பது பெரும்பாலும் எல்லோரும் கொண்டிருக்கும் அபிப்பிராயம். சப்தங்களின் மத்தியில் தூங்கி வழக்கப்பட்டவனுக்கு சப்தம் நின்றுவிட்டால் தூக்கமும் நின்றுவிடும். ஓர் பிரபு கொல்லனது சாலைக்குப் பக்கத்தில் மாளிகையில் வசித்து வந்தான். அக்கொல்லன் இரவில் வேலைசெய்யும் வழக்கம். கொல்லனது சம்மட்டியின் சப்தத்தையும் துருத்தியின் ஓசையையும் கேட்டுக்கொண்டே பிரபு தூங்குவது வழக்கம். ஒரு சமயம் கொல்லன் அவசர நிமித்தம் வேற்றூர் செல்ல வேண்டியிருந்ததால் சாலையை மூடிச்சென்றான். இரவில் சம்மட்டியின் சப்தம் கேட்கப்படாததால் பிரபுவிற்குத் தூக்கம் பிடிக்கவில்லை. சப்தம் நிற்கவே இவனுக்குத் தூக்கமும் நின்றுவிட்டது. பிரபு கொல்லனின் வரவை எதிர்பார்த்திருந்தான். கொல்லனும் வந்தான். சாலையில் வேலையும் நடக்க ஆரம்பிக்கவே பிரபுவிற்குத் தூக்கமும் செவ்வையாக வந்தது. ஒருவனுக்குத் தூக்கமே யில்லாமல்போனால் இறந்துவிடுவது திண்ணம். இதற்கு ஒரு திருஷ்டாந்தம். சீனாவில் ஒருவன் தன்மனைவியைக் கொலை செய்ததற்கு தூங்கவொட்டாமல் சாகடிக்கத் தீர்ப்பு செய்யப்பட்டது. அவ்விதமே அக்கைதியை தூங்கவொட்டாமல் செய்ய அவன் இரண்டு மூன்று தினத்திற்குள் உயிர் துறந்தான். தூக்கமில்லையேல் உயிரையும் துறக்கவேண்டும்.

நித்திரை தேகத்திற்குப் பலம் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ராவணனது சகோதரனான கும்பகர்ணன் 6-மாதம் தூங்கி ஒருநாள்

விழித்திருப்பது வழக்கம் என்று ராமாயணத்தில் படித்திருக்கிறோம். அன்றையதினம் அவனுக்கு நிகரான பலிஷ்டர்கள் கிடையாது. இக்'கல்பதரு'வின் முதல் சஞ்சிகையில் 'ஜாக் வெஸ்ரேய்மான்' என்கிற போர்வீரன் 29-மாதகாலம் நித்திரையிலிருக்கிறான் என்று எழுதப்பட்டிருக்கிறதைக்காண அவன் விழிக்கும்போது கும்பகர்ணனது பலத்தைவிட ஐந்துபங்குக் கதிகமான பலத்தைக்கொண்டிருப்பான்போலும். இதை நோக்குங்கால் கும்பகர்ணன் 6-மாதம் தூங்கினான் என்பதை இதுவரை நம்பாதிருந்தவர்கள் இதைக் கேட்டபிறகு நம்பத் தடையேயிராது.

## நித்திரையில் அநேகவிதம்.

நித்திரையிலநேக விசிரத்திரங்களுண்டு. பலவிதமாய் சிலர் தேகத்தை வளைத்துக்கொண்டு தூங்குவார்கள். சிலர் முட்டிக்கால் போட்டுக்கொண்டும் வேறு சிலர் தங்கள் இருகைகளையும் முழங்காலில் மறைத்துக்கொண்டும் இன்னும் சிலர் ஒரு கண்ணைத் திறந்துகொண்டும் (திறக்கவாவது அது ஒரு தோற்றம்) மற்றும் சிலர் இரண்டுகண்களையும் திறந்துகொண்டும் (இதுவும் ஒருதோற்றப்) தூங்குவார்கள். இப்படிக் கண்களைத்திறந்துகொண்டு தூங்குகிறவன் கண்முன்னால் விளக்கைப்பிடித்தால் விழிப்பானோ? விளக்கொளி கண்ணில் பொம்மைபோல் தெரிய நாம் பார்க்கலாம். ஆனாலவன் எழுந்திருக்கமாட்டான். ஏன் விழிக்கவில்லை. இந்த உணர்ச்சிக்கு ஆதாரமாகிய மனம் கலைபடவில்லை. அவனைத்தட்டி எழுப்பினால் உடனே அவன் கண்ணைப் பிசைந்துகொண்டு யாரவன் விளக்கைக்கொண்டு வந்திருக்கிறது. கண் கூசுகிறது என்பான்.

சிலர் குறட்டை விட்டுக்கொண்டு தூங்குகிறார்கள். இந்த குறட்டை என்பது அயலார்கள் தூக்கத்தைக் கெடுக்குஞ் சத்ரு என்று சொல்லலாம். குறட்டையோ டிருப்பவன் வெகுகஷ்டப்படுவான். ரெயில் சத்திரம் முதலிய இடங்களில் இவர்களது கஷ்டம் சொல்லிமுடியாது. குறட்டையில் இரண்டுவிதம் உண்டு. முதலாவது அதிககாற்றை சுவாசித்து கொஞ்சம் காற்றை வெளிவிடுவது. இது ஆரோக்கியமான குறட்டை. இரண்டாவது கொஞ்சம் காற்றை உட்கொண்டு காற்றவ்வளவையும் வெளியிடுவது. இந்த குறட்டை குணமல்ல. எப்படியிருந்தாலும் குறட்டை என்பது தூரப் பியாசந்தான். குறட்டை விடுவோர்களுக்கெல்லாம் தூங்கி எழுந்திருக்கும் போது தாகமுண்டாகும்.

சிலர் கண்களைத்திறந்து தூங்குவதாகச் சொன்னோமே அவர்கள் வாயை மூடித்தூங்குவார்கள். அவர்களுக்கு எதிர் கட்சிக்காரர்கள் சிலர் உண்டு. அவாகள் இருகண்களையுமூடி வாயைத்திறந்துகொண்டு தூங்குவார்கள். இவர்களுக்கும் தூங்கி எழுந்திருக்கும்போது தாகமெடுக்கும்.

(தொடரும்.)



# PART III.

## KNOWLEDGE ON AGRICULTURE, etc.

BY Mr. G. RAJAGOPAL,
*Late Editor "South Indian Agriculture."*

## விவசாய ஞானம்.

(144-ம் பக்கத் தொடர்ச்சி.)

### செடிகள் ஆகாயத்தை எப்படிப் புசிக்கின்றன?

இதுவரையிலுமே செடிகள் வேர்களினால் நீர்கலந்த மண்சாரத்தைக் கிரகிக்கிறதென்று தெரிவித்திருக்கிறோம். செடிகள் ஆகாயத்தையும் புசிக்கிற தென்பதினால் வாயுரூபமுள்ள பதார்த்தங்களையும் உணவாக்குகிற தென்று யூகிக்கவேண்டும். காற்றில் கலந்திருக்கும் வாயுக்களில் என்ன என்னவைகளை எப்படி எடுக்கிறதென்றும் என்னமாய் உபயோகிக்கிற தென்றும் நாம் அறியவேண்டும். அப்போது செடிகளுக்கு ஆகாரம் மண்ணிலிருந்தும் காற்றிலிருந்தும் கிடைக்கிறதென்று அறிவோம்.

கதிர் முதிர்ந்த மக்காசோளச்செடிகள் சிலவற்றைப் பிடுங்கி வெயிலில் போட்டுவைத்தால் நீர்வற்றிச் சருகாகின்றன. அப்போது ஐந்திலொருபங்கு எடையிருக்கும். மற்ற நாலுபங்கு ஜலம் சேர்த்திருந்து ஆவியாய்ப் போய்விட்டது. இந்த ஜலம் வேர்மூலமாய்க் கிடைத்தது. இந்தச் சருகு செடியை ஒரு தட்டில் எரித்தால் 20-ல் ஒருபாகம் சாம்பல் நிற்கிறது. மற்ற 19 பாகம் ஆவியாகப்போய்விட்டது. இந்த 19-பாகம் வாயுவஸ்துவாகக் கிரகிக்கப்பட்டது. ஆனால் இதில் இரண்டுபாகம் சிகணவாயுவாக இருக்கும் அது மண்ணிலிருந்து கிடைத்திருக்கும் ஆகாயத்தில் சிகணவாயு அதிகமிருந்தாலும் செடிகளுக்கு உதவத்தகுந்த ஸ்திதியில் இருக்கவில்லை.

முன்போன்ற சருகு செடி மற்றொன்றை காற்றுபடாதபடி ஒரு பாத்திரத்தில் எரித்தால் செடிமுழுவதும் கருத்துப்போய் சற்றேறக்குறைய எடை குறையாமலிருக்கும். இது அவ்வளவும் கரி, சாம்பலான செடி. எரியும்போது இக்கரி பிராணவாயுவோடு கலந்து கரியமிலவாய்ப் போயிற்று. கரி கடினமானது கரியமிலவாயு காற்றுரூபமுள்ளது காற்றுரூபமுள்ள கரியை செடிகள் தின்று கடினரூபமுள்ள கரிக்கு ஆதாரமான மரம் இலை முதலியன ஆகின்றன. செடி எரியும்போது கரி தனியாக ஓடிப்போவதில்லை. ஒரு அளவு கரியும் இரண்டு அளவு பிராணவாயுவும் கலந்து கரியமலவாயுவாகிப் போயிற்று. ஒருபாகம் சாம்பல் மண்ணிலிருந்து கிரகிக்கப்பட்ட வஸ்துக்கள். இதற்காகத்தான் விவசாயப் பயிர்களுக்கு எருவிடும் வழக்கம் வந்திருக்கிறது. ஒரு பாகம் மிகக் கொஞ்சமாகத்தோன்றும். அது இல்லையானால் பயிர் உண்டாகாது.

வளரும் செடி ஆகாயத்திலிருந்து கரியைச் சம்பாதிக்கிறது. ஆகவே செடியின் அதிகபாகமான கடினமுள்ள கரி ஆகாயத்திலிருந்து கிடைக்கிறது. ஆகாயத்தில் கரியமிலவாயு 1000-ல் நாலுபாக மிருக்கிறது. இந்தக் காற்று மிருகஜீவராசிகளுக்கு விஷத்தைப் போலொத்தது. இயற்கையின் மகிமை இதில் தெரியும். இச்சிறு 4-பாகம் அதிகப்பட்டாலோ அனேக ஜீவராசிகள் மாண்டுபோம்.

இது நெருப்பு எரிவதினாலும், பிராணவாயு சம்பந்தத்தால் ஜீவராசி அங்கங்கள் மட்குவதாலும், மூச்சுவிடுவதாலும் சுண்ணும்பு சுடுவதாலும் உண்டாகிறது. இது பளுவுள்ளவாயு, பாழ்கிணறுகளிலும் தானியக் குழிகளிலும் அதிகமுண்டு. எரியும் விளக்கு ஒன்றை உள்ளேவிட அவியாமலிருக்கு மானல் மனிதர் இறங்க அபாய முண்டாகிறதில்லை.

செடிக்கு வேண்டிய ஆகாரம் மண்ணிலிருந்தும் ஆகாயத்திலிருந்தும் கிடைக்கிறதல்லவா? வேரும் இலைகளும் முறையே உதவுகின்றன. வேரும் இலைகளும் செடிகள் ஜீவிக்கிறதற்கு மூலகாரணங்களாய் இருக்கிறபடியால் அவைகளின் அமைப்பு தெரிவது அவசியம். வேர்கள் மண்ணைக் கரைத்து உணவாக்கும் விஷயம் வேறு இடத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இலைகள் எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றி, விசாரிப்போம்.

இலைகள் புரைச்சல் நிறைந்து மிருதுவாக இருக்கின்றன. காற்று அனேகமாய் இலைகளில் நேராக இப்புரைச்சலில் பாய்வதுண்டு. இருந்தாலும் கரியணுகலந்த காற்று உள்ளேபோவதற்கு பசுமை நிறமுள்ள இலைகளிலும் வேறு இடங்களிலும் பிரத்தியேகமான சிறு துவாரங்கள் இலையின் பின்பக்கத்தில் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு ஆபில்பழ செடி இலையில் ஒரு சதுர் அங்குலத்தில் ஒரு லக்ஷம் துவாரங்கள் (Stomata) இருப்பதாக கணக்கிடப்பட்டிருக்கின்றது. இத்துவாரங்களின் வழியாய் காற்று இலைக்குள்சென்று பிராணாதாரமான வஸ்துக்கள் அடங்கிய பிந்துக்களில் கலக்கிறது.

இலைகள் பசுமையா யிருப்பதற்கு அதில் இலை பச்சைமணிகள் (Chlorophyll Grains) இருப்பதினாலேயே இவைகளைத் தனியாக பிரிக்கக் கூடும். 2,3 மணி நேரம் வெயிலில் வதங்கிய இலையை ஒரு கோப்பையில் போட்டு சாராயம் அதன்மேல் ஊற்றி அனல் மேல்சூடு ஏற்ற பசுமை வெளிப்பட்டுச் சாராயம் பச்சையாகும். அதிக சூடுபட வைத்தால் சாராயம் தானே எறிந்துவிடும்.

இப்பச்சை இலையின் மேல்பாகத்தில் அதிகமாயும் அடிப்பாகத்தில் மிகக் குறைந்துமிருக்கும். மேல்பாகத்தில் சூரிய வெளிச்சம் அதிகப்படும். ஆகவேதான் இலையின் மேல்பாகம் அதிக பசுமையடைந்து இருக்கிறது. இலை அகலமாயும் செடிகளின் வெளிப்பாகத்திலும் வெளிச்சத்துக்கென்றே பொருந்தி யிருக்கிறது. அடர்த்தியாய் வளர்க்கும் நாற்றங்காலில் போதுமான வெளிச்சம் படாததினால் வெளுத்தும் அழுகியும் போவதுண்டு.

(தொடரும்.)



# COMMERCE AND INDUSTRY.

# வர்த்தகமும் கைத்தொழிலும்.

## ஸோப் செய்யுந்தொழில்—அதன் வியாபார நிலை.

(146-ம் பக்கத் தொடர்ச்சி.)

நாகரிகம் மேம்பட்டு வருமிக்காலத்தில் சரீரபோஷணைக்குரிய சம்பத்துக்களைத் தேடாதவரைக் காண்பதரிது. உயர்மக்களென்று சொல்லிக் கொள்ளுவோர் ஸோப் வகைராக்களை உபயோகிப்பதுதான் நாமெல்லோரும் அறிந்ததாயிற்றே. கௌரவமாகக் காலந்தள்ளும் நடுவகுப்பினர்களும் கேவலம் கூலிவேலைசெய்தும் மற்றும் வீடுதுலக்கிக் குப்பை வாரியும் ஊதியம் பெறும் கீழ்மக்கள்கூட காலணா அரையணாவுக்கு விற்கும் சாமான்ய ஸோப்களை வாங்கி யுபயோகிப்பதும் நிதர்சனமாயிருக்கிறது. ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம். அதுபோல் ஓரிடத்தில் அனுஸரணையிலிருப்பதுதானே மற்றோரிடத்திற்கும். எந்த வீட்டிற்குச் சென்றாலும் எந்த ஸோப்பிலாகிலும் ஒரு கட்டியாவது இராமலிருப்பதில்லை. அது இவ்விராஜதானியிலுள்ள குக்கிராமங்களில்கூட காணப்படுகிறதென்றால் பெரிய பெரிய நகரங்களிலே கேட்கவும் வேண்டுமோ? நம் சென்னை ராஜதானியைப் பொறுத்தமட்டில் சோப் செய்யுந்தொழிலுக்கு எவ்வளவோ சாதகங்கள் இருக்கின்றன. மேற்றிசைக் கல்வியதிகரித்து வரவர ஸோப்பின் இறக்குமதியும் அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறது. ஸோப் நசுவரமானதென்று சிலர் சொல்லக்கூடும். ஆம் நசுவரமானது தான்; இருந்தாலுமென்ன? அதன் உபயோகம்மட்டும் குறைந்தபாடில்லையே. வெளிதேசங்களிலிருந்து அபரிமிதமாக ஸோப்கள் இந்நாட்டில் வந்திறங்கி யிருப்பதே ஸோப்புக்குள்ள கிராக்கி இத்தன்மையதென்பதை நன்றாய் விளக்குகிறது. ஸோப் இறக்குமதியின் பெருக்கினைக்குறித்து ஐந்துவருஷக் கணக்கை இதனடியிற் குறித்திருக்கிறோம். வருஷத்திற்கு வருஷம் அது பெருகியிருப்பதைக் காண்க:—

1909-10-ம் ௵ 45 லட்சம்.
1910-11-ம் ௵ 57 லட்சம்.
1911-12-ம் ௵ 62 லட்சம்.
1912-13-ம் ௵ 71 லட்சம்.
1913-14-ம் ௵ 75 லட்சம்.

மேற்சொன்ன கணக்கை யனுசரித்துக் கவனிக்குமிடத்து பிரதிவருஷத்திலும் ஸோப்களின் செலவு இந்நாட்டில் அதிகரித்து வருவதாகவே தெரிகிறது. அதிகமாய்ச் செலவாகும் சரக்குகளை நாம் கைப்பிடித்தாலன்றோ கைத்தொழில் வேரூன்றுவதற்கு ஸாத்தியமாகும்? காற்றுள்ள

போதுதான் தூற்றிக்கொள்ளல்வேண்டும். அதைக் கைசோரவிட்டு பின்னால் பின்னர்க்காரியம் நிறைவேறுவ தெப்படி? தேசத்தில் கிடைக்கும் சாதகக் கருவிகள் பலவுண்டு. அவைகளை வெளிதேசங்களிலுள்ள வியாபாரஸ்தர்கள் வாங்கிக்கொண்டுபோய் யந்திரசாலைகளில் வைத்து பலவகைப்பட்ட உபயோகமான பண்டங்களாகவும் வஸ்துக்களாகவும் செய்து திரும்ப நமக்கனுப்புகிறார்கள்; உதாரணமாகப் பருத்தியை யெடுத்துக் கொள்ளலாம். இந்தியாவிற் பலவிடங்களில் அந்தந்தப் பிரதேசத்தின் பூஸாரத்திற்குத் தகுந்தபிரகாரம் பருத்தி விளைகிறது. அவைகளை அவ்வவ்வாறே வெளிதேசத்தவர் வாங்கிச் சென்றுவிடுகிறார்கள்; திரும்பிவருவதெப்படி? முதல்தரமான வஸ்திரங்களாக. அது போகட்டும். பருத்திக் கொட்டையை யெடுத்துக் கொள்ளுங்கள், அதன் எண்ணெய் முதல்தரமான வைத்திய காரியங்களுக்கு உபயோகிக்கப்படுகின்றன. வேர்க்கடலை, கொட்டைமுத்து, புண்ணாக்கு, நாகப்பழக்கொட்டை, வேப்பங்கொட்டை மற்றும் இவைபோன்ற அற்பமானவைகளென்று நாமிங்குமெண்ணுவதை மேனாட்டவர் பலவித காரியங்களுக்கு உபயோகித்துப் பலவகைச் சரக்குகளாகச் செய்து பிறகு நமக்கே யனுப்பி லாபமும் பெறுகிறார்கள். இதனால் அவர்களுக்குக் கிடைக்கும் பலன் என்னவென்று சிறிது ஆலோசித்துப் பார்க்கவேண்டும். கைத்தொழில் விருத்தியாவது ஒன்று; வியாபாரம் பெருகுவது மற்றொன்று. தேசத்துச் செல்வநிலை சீர்படுவது வேறொன்று; இவையனைத்திற்கும் மேலாக ஜனங்கள் தனிகர்களாக வழியேற்படுவது பின்னுமொன்று. இதை அமெரிகா ஐக்கியநாட்டு ஜனங்கள் செவ்வையா யுணர்ந்து கொஞ்சங் கொஞ்சமாகப் பாடுபட்டுழைத்துத் தற்போது பூவுலகம் கைத்தொழிலாளர்களுள் முதன்மைபெற்று விளங்குகிறார்கள். அவர்களுக்குச் சகல விஷயங்களிலும் ஸ்வாதந்தர்யமுண்டு; ஒற்றுமையுண்டு; அவ்விரண்டினையும் பலப்படுத்திக் கொள்வதே தேசமுற்போக்குக்கு இன்றியமையாத ஸாதனம். கைத்தொழிலில் சீரடையாதோர் என்னும் மற்றோர் சார்பினருமுண்டு. தன்னிலையில் தானிருந்து பிறர் தன் சார்பாயிருக்கவேண்டுமெனின் கைத்தொழிலிற் சீரும் சிறப்பும் மிகுந்திருப்பது அவசியமாகும். இதுவே அமெரிகா கொண்டிருந்த கொள்கை. தீர்க்காலோசனையின் மீது அமெரிக்கா அக்கொள்கையைக் கைப்பிடித்து உழைத்து வந்ததனாலேயே இப்போது அது புவிபெங்கும் பேரும் பெருமையுங்கொண்டு பிரகாசிக்கின்றது. ஒரு மனுஷ்யனுக்கு அவனுடைய ஜீவவாழ்க்கையில் ஒரே ஒரு தடவைதான் நல்லதிர்ஷ்டமும் நற்சமயமும் வாய்க்கும். அச்சமயத்தைக் கைவிடாது அவன் உழைக்கும்படி முயற்சிசெய்ய வேண்டும். அம்முயற்சி பலன் தரும் நிமிஷம் வரையில் எடுத்தகாரியத்தை நழுவவிடலாகாது. நம்மவர் அனைவரும் மற்றும் மேனாட்டவரும் விசேஷ நன்மதிப்போடு கருதும் ஸ்ரீமான் ஸ்வாமி விவேகானந்தர் கூறிய நன்மொழி யொன்று இப்போது நம் ஞாபகத்திற்கு வருகிறது. அதை நமது நண்பர்களும் சிந்தனைசெய்து



தேசாபிவ்ருத்திக்குகந்த இந்தஸோப் செய்யுந் தொழிலை நிறக்கச் செய்வதே அவர் தம் கைப்பற்றிய நெறி. விவேகானந்தஸ்வாமி மொழிந்த நல்லுபதேசம் என்னவெனில் 'Arise, awake, and stop not till the goal is reached'.

# PART IV.

## HINDU LAW.

## ஹிந்துலா.

(148-ம் பக்கத் தொடர்ச்சி.)

கே.—இக்கொள்கையை மீறி நடக்கும் ஹிந்துக்கள் உண்டா?

ஜ.—தென் இந்தியாவிலுள்ள சூத்திர ஜாதியாரில் சிலரும் தொட்டிய ஜாதியை சேர்ந்தவர்களும் சிறுபையனுக்கு பெரிய பெண் பிள்ளையைக் கல்யாணம் செய்துகொடுக்கும் துர்வழக்கத்தை அனுஸரித்து வருகிறார்கள்.

கே.—அப்படியானால் அப்படிப்பட்ட கல்யாணம் சட்டப்படி செல்லத் தக்கதாக உள்ளதா? அந ஸ்திரீகளுக்கு பிறக்கும் குழந்தை இப்பையனுடைய குழந்தையாகப் பாவிக்கப்பட்டு வருகிறதா?

ஜ.—அப்படிப்பட்ட வழக்கத்தை அனுசரித்து செய்யும் விவாகங்கள் செல்படி உள்ளதாகயிருந்து வருவதல்லாமல் அது தவிர அந்த பெண் பிள்ளைகளுக்கு பிறக்கும் குழந்தைகள் யாவும் அப்புருஷனுக்கு பிறந்ததாகவே எண்ணப்பட்டு வருகின்றன.

கே.—விவாக சம்பந்தமான நிபந்தனைகள் அனைத்தையும் அறிய விரும்புகிறோம்.

ஜ.—விவாகம் செய்துகொள்ளும் ஆண் பெண் ஒரே ஜாதியாயும் ஆனால் வெவ்வேறு குடும்பத்தையும் சேர்ந்தவர்களாகவும் இருக்கவேண்டும். விவாகம் செய்துகொள்ளும் ஆண் பெண் இருவர்களும் ஒரே கோத்திரத்தையும் குலத்தையும் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடாது. கல்யாணம்செய்துகொள்ள உத்தேசிக்கும் பெண்ணானவள் கல்யாணம்செய்து கொள்ளும் புருஷனுக்கு தகப்பன் வழியைச்சேர்ந்தவளாக இருந்தால், 7 தலைமுறை விட்டும், தாய் வழியைச் சேர்ந்த பந்துவாயிருந்தால் 5 தலைமுறை விட்டும் இருக்கவேண்டும். ஆனால் இப்பொழுது இந்த விதியை அவ்வளவு கண்டிப்பாய் அனுஷ்டிக்கிறதில்லை.

கே.—ஜாதிவிட்டு ஜாதியில் கல்யாணம் செய்துகொள்ளும் வழக்கம எப்பொழுதாவது இருந்ததா?

ஜ.—முன் யுகங்களில் மேல் ஜாதி புருஷர்கள் கீழ் ஜாதிப் பெண்களையும் விவாகம் செய்துகொள்ளலாமென்று யிருந்தது. ஆனால் இப்பொழுது அவ்வழக்கம் நின்றுபோய்விட்டது.

கே.—ஒரு பெண்ணை விவாஹம் செய்துகொடுக்க அதிகாரமில்லாத ஒருவன், அந்தப் பெண்ணினுடைய விவாஹத்தைநடத்த ஏற்பாடுகள் செய்துவிடுகிறான். அந்த கலியாணத்தை நிறுத்தமுடியுமா?

ஜ.—அப் பெண்ணினுடைய ஸரியான பாத்தியஸ்தர்கள் அந்தக் கல்யாணத்தைத் தடுக்கும்பொருட்டு கோர்ட்டில் மனுச்செய்துகொள்ளலாம். அதன்பேரில் ஷை விவாகத்தை நடத்தவொட்டாமல் கோர்ட்டார் தடுத்துவிடுவார்கள். (11 பம்-253.)

கே.—விவாகம் நிச்சயமானதின்பேரில் வதூவரர் இருதிறத்தாருக்குள் யாதாமொருவர் கல்யாணத்தை நிறுத்த முயற்சித்தபொழுது கோர்ட்டார் பலவந்தஞ் செய்து கல்யாணத்தை நடத்திவைக்க அதிகாரமுண்டா?

ஜ.—அப்படி நடத்திவைக்க கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை. 1877-ம் ஹூ முதலாவது ஆக்டாகிய ஸ்பெஸிபிக் ரிலீவ் ஆக்ட் (Specific Relief Act) 21-ம் பிரிவு 6-வது உட்பிரிவைப் பார்க்க.

கே.—விவாகத்தை நடத்துவதாய் ஏற்பாடுகள் செய்துவிட்டு பின் கல்யாணத்தை நிறுத்திவிட்டால் அதற்கு யாதொரு பரிகாரமுமில்லையா?

ஜ.—செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கு விரோதமாய் யாதாமொருவர் விவாகத்தை சரியான காரணமில்லாமல் நிறுத்திவிட்டால் அதனால் யேற்படும் நஷ்டங்களை அவன்பேரில் மற்றவன் வியாஜ்ஜியம் தாக்கல் செய்து நஷ்ட பரிகாரம் பெற்றுக்கொள்ளலாம். (11 பம். 412, 20 பம். 23, 7 பம். ஐ. கோ. ரி. 122, இ. லா. ரி. 11 பம்-422.)

கே.—விவாகம் செய்து கொள்ள உத்தேசித்த புருஷன் விவாகத்துக்காக பெண்ணைச் சேர்ந்தவர்களிடம் கொடுத்திருந்த பணம் திரும்பக் கிடைக்குமா?

ஜ.—கிடைக்கும் (10 கல் 1054)

கே.—விவாகத்திற் கேற்பட்ட பற்பல கிரியைகளில் எந்தக் கிரியை செய்த பின் கல்லியாணத்தை ரத்து செய்யமுடியாது.

ஜ.—மேல் ஜாதியாருடைய விவாகங்களில் கன்னிகாதானம், பாணிக்கிரகணம் என்னும் கிரியைகளுக்குப் பின் நடத்தப்படும் ஸப்த்தபதி என்னும் கிரியை முடிந்த பிறகு விவாகம் பூர்த்தியாய் விட்டது. ஸப்த்தபதி என்பது ஹோமாக்னிக்கு முன்பாக வதூவரர்கள் யேழு அடி எடுத்து வைப்பதுதான். இது செய்யப்பட்ட பிறகு கல்யாணத்தை ரத்துசெய்ய முடியாது. (14 ம 316). (தொடரும்.)



# PART V.

## CO-OPERATION.

## கூட்டுறவு.

### A NEW TYPE OF CO-OPERATIVE SOCIETY.

### ஒரு புது வகையான கூட்டுறவுச் சங்கம்.

வங்காளத்தில் ஒரு புதுவகையான கோவாபரேடிவ் ஸங்கம் நடந்து வருகிறது. அந்த ஸங்கத்தின் ஏற்பாடு எப்படி யென்றால் க்ராமத்தில் ஒரு பொது நெற்களஞ்சியம் ஏற்படுத்தி க்ராமவாஸிகள் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கொருதடவை கொஞ்சம் தான்யம் அந்த பொது நெற்களஞ்சியத்தில் கொட்டி வைப்பதற்குக் கொடுக்கிறார்கள். இந்த நெற்களஞ்சியம் க்ராமத்தில் செல்வாக்குள்ள ஒரு பஞ்சாயத்தார் வசமிருந்து வருகிறது.

தான்யம் கொடுக்க முடியாதவர்கள் அதற்கு ப்ரதியாகப் பணமாகக் கொடுக்கலாம். இந்த தான்யத்தை பஞ்சகாலத்தில் தான் உபயோகிக்கிறார்களாம். ஒவ்வொருவரும் ஸ்வல்ப தான்யமே கொடுத்து வருவதால் அது அவர்களுக்கு ஒரு ச்ரமமாகத் தோன்றுவதில்லை. ஆனால் கொஞ்ச காலத்துக்கெல்லாம் அவர்களுக்கு ஸொந்தமாக ரொம்ப தான்யம் களஞ்சியத்தில் சேர்ந்துவிடுகிறது. இதனால் க்ஷாமகாலத்தில் அதிக வட்டி கொடுத்துக் கடன்வாங்கி நெல் வாங்கவேண்டியதில்லை. இந்த ஏற்பாடு அனுஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் அது த்ருப்தியாக நடந்து வந்திருக்கிறதென்று தெரியவருகிறது.

### ECONOMIC BENEFITS OF CO-OPERATION.

### கோவாபரேஷனால் உண்டாகும் பொருளாதார நன்மைகள்.

ஐரோப்பா கண்டத்திலுள்ள பல தேசங்களில் ஜனங்கள் விவஸாய வேலைகளில் கோவாபரேஷனை அனுஷ்டித்து வருகிறார்கள். இதனால் அங்கே பொருளாதார ஸம்பந்தமாய்ப் பலவித நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன.

ஜெர்மெனியில் விவஸாய ஜில்லாக்களில் 2543-ஜனங்களுக்கு ஒரு ஸங்கமாக ஸுமார் 2,000 கோவாபரேடிவ் ஸங்கங்கள் இருக்கின்றன. அந்த தேசத்திலும், ப்ரான்ஸில் சில பாகங்களிலும், வட ஜர்மெனியிலும் க்ராமாந்தரத்துப் பொருளாதார விஷயங்களையெல்லாம் கோவாபரேஷன் முறையில் நடத்தி வருகிறார்கள்.

உதாரணமாக, பணம் கடன் வாங்குதலும் கொடுத்தலும், கால்நடைத் தீவனம், விதைகள், உரங்கள், விவஸாயத்துக்கு வேண்டிய மற்ற ஸாமான்கள், இவைகளை வாங்கிப் பங்கிட்டுக்கொள்வது; யந்த்ரங்களை பொதுவில் வாங்கி உபயோகிப்பது; கால்நடைகள் வளர்ப்பதும் விற்பதும்; சர்க்கரை காய்ச்சுதல், சாராயம் இறக்குதல் முதலிய கைத்தொழில்களுக்கு வேண்டிய சரக்குகள் தயார் செய்தல், கால்நடை இன்ஷூரென்ஸ், நிலங்களின் பாசனம், வடிகால் வேலைகள்; பொலிகாளைகள், ஆட்டுக் கடாக்கள், குதிரைகள் ஆகிய இவைகளை வைத்து வளர்த்து விவஸாயிகளுக்கு உதவுதல்; ஆகிய இந்த வேலைகளெல்லாம் கோவாபரேஷன் முறையிலேயே நடத்தி வருகிறார்கள். இவைகளுக்கு ஏற்பட்ட கோவாபரெடிவ் ஸங்கங்களைத் தவிர பசுக்களைப் பரீக்ஷிக்கும் ஸங்கங்களும் ஸ்தாபித்திருக்கிறார்கள். இன்னம் சில ஸங்கங்களின் ஸிப்பந்திகள் விவஸாயிகள் சாகுபடி செய்யும் ஒவ்வொரு வகைப் பயிருக்கும் என்ன வரும்படி கிடைத்தனவென்று கணக்குப் போட்டுக் கொடுப்பதோடு மாற்றுப் பயிர் சாகுபடி செய்வது விஷயமாயும், விதைகள் விஷயமாயும் யோசனை சொல்லுகிறார்கள்.

இப்படிப் பொருளாதாரமான மாறுபாடுகளே யன்றி ஸன்மார்க்க ஸம்பந்தமான நன்மைகளும் உண்டாயிருக்கின்றன.

அநேக ஸங்கங்கள் க்ராமத்து பப்ளிக் ஹால்கள், லைப்ரெரிகள், க்ராமத்து நர்ஸுகள் (அதாவது நோயாளிகளைப் பாதுகாக்கும் ஸ்த்ரீகள்) ப்ராவிடண்ட் பண்டுகள் முதலியவைகளுக்குப் பணம் கொடுத்து வருகின்றன. இந்த ஸங்கங்களின் உதவியால் 458 லைப்ரெரிகள் (புஸ்தக சாலைகள்) 345 பள்ளிக்கூடங்கள், 96 ஸாதாரண ஸங்கங்கள், 23-சிறுவர் ஸங்கங்கள், 24 ப்ரஸங்க ஹால்கள் க்ராமங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளே யன்றி குழந்தைகள் ஸேவிங்க்ஸ் பாங்கிகள், பரோபகார நிதிகள், கால்நடை இன்ஷூரென்ஸ் ஏற்பாடு முதலியவைகளும் கோவாபரெடிவ் ஸங்கங்களின் உதவியால் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன.

கோவாபரேஷனில் நிபுணராகிய ஸர் ஹாரெஸ் ப்ளங்க்கெட் சொல்லுகிறபடி, கோவாபரேஷனால் விவஸாயியின், க்ருஷித்தொழிலும், வ்யாபாரமும், ஜீவன மார்க்கமும் உயர்வடைகிறது.

நிலத்துக்காக அதிகப் பணம் செலவழிப்பதாலும், உயர்ந்த விதையும் எருவும், கருவிகளும், கால்நடைகளும் உபயோகிப்பதாலும், விவஸாய விஷயமாக தக்க யோசனை கிடைப்பதாலும் விவஸாயமும் உயர்வடைகிறது. சிறு முதலாளி மற்றவர்களோடு சேர்ந்து வ்யாபாரம் செய்வதால் பெரிய வ்யாபாரிக்குள்ள ஸௌகர்யங்களெல்லாம் கிடைக்கின்றன. கோவாபரேஷனால் பொருளாதார அபிவ்ருத்தியும் ஒற்றுமையும் ஏற்பட்டு ஜன ஸமூக வாழ்க்கை ஒழுங்கு அடைந்து ஜனங்களுடைய அறிவு விசாலமடைவதால் அவர்களுடைய ஜீவன மார்க்கம் உயர்வடைகிறது.



இன்னும் கோவாபரேஷனால் கல்வியும் ஸுகாதாரமும் வ்ருத்தி யடைகிறது. ஜனங்களுக்குள் ஐக்யம் ஏற்படுகிறது. விவஸாயிகளின் ப்ரதிநிதிகள் அடங்கிய ஒரு கமிட்டி ஒரு க்ராமத்திலிருக்கிறது என்பதனாலேயே கவர்ன்மெண்டுக்கும் பொதுவாய் தேசத்துக்கும் பலவிதங்களில் ப்ரயோஜனம் ஏற்பட இடமேற்படுகிறது. (பிழைக்கும் வழி.)

# PART VI.

## கல்வி.

### THE TEACHER.

### உபாத்யாயர்.

(153-ம் பக்கத் தொடர்ச்சி.)

"Costly thy habit as they purse can buy,
But not express'd in fancy, rich, not gaudy;
For the apparel oft proclaims the man"

என்று உலகப்பிரசித்திப்பெற்ற ஜெகப்பிரியரான ஷேக்ஸ்பியர் தன் நாடகங்களில் ஒன்றில் கூறியுள்ளார். உபாத்தியாயர்கள் தங்கள் அந்தஸ்துக்குத் தக்கவிதம் ஆடைதரித்தல்வேண்டும். உபாத்தியாயருக்குப் பணம் கொஞ்சமானதால் அதற்குத் தகுந்தவிதம் ஆடையுமிருக்கவேண்டும். ஆடையினால் தான் ஒருவனுக்கு மதிப்பு ஏற்படும். ஆகவேதான் ஆடையில்லாதவன் அரைமனிதன் என்னும் பழமொழியும் வழங்குகிறது. அழுக்கு வஸ்திரமும் க்ஷவரம் செய்து கொள்ளப்படாத முகமும் அவருடைய உயர்ந்த பதவியையும் மதிப்பான வார்த்தைகளையும் கெடுத்துவிடும்.

சுறுசுறுப்புள்ளவராயிருக்கவேண்டும். வகுப்பில் நிற்றல் முதலிய செய்கைகளில் அவயவங்களை வைத்துக்கொள்ளும் ரீதியைப்பற்றி உபாத்தியாயர்கள் கொஞ்சம் கவனக்குறைவாகவே யிருக்கிறார்கள். சோம்பலாய்ப் படுத்த மாதிரியாக நாற்காலியில் உட்கார்ந்திருப்பது, மனம் சோம்பலாயிருப்பதை முன்னமேயே எடுத்துக்காட்டும். ஓர் உபாத்தியாயர் நாற்காலியில் உட்காரும் நேரத்தைவிட அதிகநேரம் அதைவிட்டு வகுப்பில் நடந்து பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கவேண்டும். உபாத்தியாயர் சரியாய் நிற்கவேண்டும். மேஜையின்மீது காலைவைத்தோ அல்லது அதன்மீது சாய்ந்துகொண்டோ மற்ற எந்தவிதமாகவோ நிற்கக்கூடாது. நாற்காலியில் இரண்டுகால்களைத் தூக்கி வைத்துக்கொள்வதும், புஸ்தகத்தை முழங்காலின்மீது வைத்துக்கொள்வதும், சுவரின்மீது தன்தலையைக் கற்பிக்கும்போது சாய்த்துக் கொள்வதும் எப்படியிருக்கிறதென்றால், "நான் சோம்பலாயிருக்கிறேன், நீங்களும் அப்படியிருக்க இஷ்டப்பட்டால்

இருக்கலாம்" என்று சொல்வது போலாகும். பிள்ளைகளுக்குச் சுறுசுறுப்பும் கவனிப்பு மிருக்கவேண்டுமென்று எண்ணுகிறவரானால் தனக்கு அவைக ளிருப்பதாகத் தானே நேரில் பிள்ளைகளுக்குச் சுறுசுறுப்பாகவிருந்து காட்டவேண்டும். ஸ்பஷ்டமாகப் பேசவேண்டும். சுத்தமான ஆடைகளைத் தரிக்கவேண்டும் என்பவை உபாத்தியாயர்களுக்கு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் கோணலில்லாமல் நேராக நிற்பதும், நிமிர்ந்துட்காருவதும். பிள்ளைகளிடத்தில் அதிகக் கவலை எடுத்துக்கொள்பவராயிருக்கவேண்டும். உபாத்தியாயர் காலை பத்துமணியடித்தால் தன் வேலை யாரம்பிக்கிறதென்றும் பகல் ஒருமணி யடித்தால் காலை வேலை முடிந்து விடுகிறதென்றும், மத்தியானம் இரண்டுமணி யடித்ததும் வேலை தொடங்குகிறதென்றும் மாலை ஐந்தடித்ததும் தன் ஒருநாள் வேலை முடிந்துவிடுகிறதென்றும் நினைக்கக்கூடாது. பள்ளிக்கூடத்திற்கு வெளியிலும் தன்னிடம் படிக்கும் பிள்ளைகளைப்பற்றிச்சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டியது ஒவ்வொரு உபாத்தியாயர்களுடைய கடமையாகும். பிள்ளைகள் பள்ளிக்கூடத்தைவிட்டுப் போய்விட்டால் அவர்களுடைய பொறுப்பும் அவர்களுடனே போய்விடுகிறதென்று எண்ணுகிறார்கள். அப்படி எண்ணுவது கூடாது. உபாத்தியாயர் பிள்ளைகளின் தகப்பன் மார்களையோ அல்லது பந்துக்களையோ தெரிந்துகொண்டு, அவர்களுடன் பிள்ளைகளைப்பற்றிச் சம்பாஷிக்கவேண்டும். உபாத்தியாயர் சொல்லும் வார்த்தைகளை அவர்கள் யாவரும் கேட்டு நடப்பார்கள். ஒருபையன் படியாமலோ அல்லது கவனந்தப்பியோ துஷ்டத்தனம் செய்துவந்தால் அவனைத் தண்டியாமல் 'நான் உன் தகப்பனுருடன் இதைச் சொல்கிறேன்" என்று உபாத்தியாயர் சொல்லும்போது பிள்ளைகளுக்கு ஒருபெரியமனக்கலக்கமுண்டாகி' இனிவரும் கெடுதியைத் தெரிந்து பயப்படவும் மார்க்க முண்டாகிறது.

இதற்கு மாறாக உபாத்தியாயர் பிள்ளைகளின் தகப்பனுரிடம் அதிகமாகச் சிநேகஞ்செய்து தன்னுடைய தீர்ப்பைப் பக்ஷபாதமாகவோ அல்லது தன் யோக்யதையைப் பிள்ளைகள் மேல்வகுப்பிற்கு உயர்த்தும் சமயத்தில் கெடுத்துக்கொள்வதோ கூடாது. ஒரு பையன் தான்படிக்கும் வகுப்புக்கே தகுந்தவனல்லவென்றால், அவன் எப்படி மேல்வகுப்புக்குச் செல்ல அருகனாவான்?

ஒரு பையன் மேல்வகுப்புக்கு மாற்றப்படச் சிறிதும் தகுதியற்றவனென்று ஓர் உபாத்தியாயர் தெரிந்திருந்தும் அவனுடைய தகப்பனார் உபாத்தியாரிடம் வந்து மேல் வகுப்புக்குத் தன் பிள்ளையை மாற்றும்படி வேண்டும்பொழுது உபாத்தியாயர் செய்ய வேண்டுவதென்னவென்றால், அந்தப் பிள்ளை மேல்வகுப்புக்கு அனுப்பப்படுவதற்கு ஆக்ஷேபிக்கவேண்டும். அப்படிச் செய்யாமல் தாக்ஷண்யத்திற்காவது, பணத்தாசையினாலாவது மற்றுமெந்த பிரதிபலனை இச்சித்தாவது அவ்விதம் மூடப்பிள்ளைகளை மேல் வகுப்புக்கு உபாத்தியாயர் உயர்த்தக்கூடாது. (தொடரும்.)



# PART VII.

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

### இந்தியக் காப்புச் சேனை.

நாளது ஆகஸ்டு௴ 14௳ முடிய இந்தியா முழுவதற்குமாக இந்தியக் காப்புச் சேனையில் சேர்ந்திருப்போரது சங்கியை 2,974.

---

### ஆகாயத்தையளாவும் மரம்.

ஆகாயத்தை யளாவும் பாரி விருக்ஷமென்று அரசு, ஆல், ஆகிய இம்மரங்கள் சொல்லப்படுகின்றன. உலகத்திற் சாதாரணமாக வழங்கும் இச்சொல்லை நம்மவர் பலர் கேட்டிருப்பார்கள். ஆனால் இப்போது தெரிய வரும் ஒராஸ்திரேலிய விருக்ஷத்தைக் கவனிக்கும்போது மேற்சொன்ன மரங்கள் அதன் முன் நிற்கச் சிறிதும் வகையிராது. ஏனென்றால், அவ்வாஸ்திரேலிய மரம் உயரத்தில் சற்றேறக் குறைய 450 அடி இருக்கிறதாம். எனவே சென்னை லைட்ஹௌஸைக் காட்டிலும் கால் மடங்கு பெரியது.

---

### சுதேசியப் பண்டசாலைகள்.

லார்டு கர்ஸன் இந்திய ராஜப் பிரதிநிதியாக விருந்தபோது வங்காள மாகாணம் பிரிவினை யாயிற்றென்பது நம்மவர் அறியாததல்ல; அச்சமயம் எங்கு பார்த்தாலும் தேச பக்தியும் தேசாபிமானமும் பூண்ட தொண்டர்கள் ஒன்றாயிருந்த மாகாணத்தைப் பிரிப்பதேனோ வென்ற கேள்வியைப் பிறப்பித்துக்கொண்டு விதேசியத்தை விலக்கிச் சுதேசியத்தை வர்ஜிதப் படுத்த முயன்றார்கள். அதாவது வெளிதேசச் சரக்குகளுக்கு இருந்த கிராக்கியைத் தவிர்த்துச் சுதேசச் சரக்குகளுக்கு அக்கிராக்கியை யுண்டுபண்ண வேண்டுமென்பதே அத்தொண்டர்களின் கருத்தாயிருந்தது. அப்போதுமுதல் அம்முயற்சி சிறிது சிறிதாக வேரூன்றித் தற்போது பலன் தரும் வகையாகச் செழித்து வருகிறது. ஏனெனில், இம்மாதத்தில் இச்சென்னைமா நகரத்தில் மட்டும் எத்தனை பண்டசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன, பாருங்கள். திருவல்லிக்கேணியி லொன்று, மவுண்ட் ரோட்டிலொன்று, சென்னை சீனாபஜார் கடைத்தெருவி லொன்று, மைலாப்பூர் 'வசந்த விலாஸ' மாளிகையில் ஒன்று. உள்நாட்டுச் சரக்குகளே இப்பண்டசாலைகளில் பெரிதுமகப்படும். அவை யேற்படுத்தப்பட்டதன் உத்தேசம் தேசியத் தொழில்கள் விருத்தியாக வேண்டுமென்பதே.



---

### திருபுவனத்தில் மோதுண்ட கடற்படை வண்டி.

மெஸபடோமியாவிலிருந்து ஒரு மாதம் ரஜாவின்பேரில் புறப்பட்டுவந்த பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த நூறு பேர்கள் கொழும்புவுக்கு அருகிலுள்ள ஒரு ஆரோக்கிய ரஷிதமான ஸ்தலத்தில் சில நாள் தங்கிப்பின்னர்த் தனுஷ்கோடி மார்க்கமாகச் சென்னைக்கு வரலாயினர். அவர்களுக்காகத் தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியார் ஸ்பெஷல் டிரெயினும் தயார் செய்து நிறுத்தியிருந்தார்கள். அதில் அவர்கள் ஏறி அபாயத்தைச் சிறிதுஞ்சிந்தியாமல் பிரயாணம் செய்துகொண்டிருந்த போது நாளது ஆகஸ்ட்௴ 21௳ மேற்படி ஸ்பெஷல் டிரெயின் தென்னிந்தியா ரெயில்வேயிலுள்ள திருபுவனம் ஸ்டேஷனண்டை வந்த சமயத்தில், அங்கு ஏற்கெனவே

னின்றிருந்த 735-ம் நெம்பர் கூட்சுடிரெயிலோடு அது மோதிக்கொண்டது. அவ்விபத்தினால் ஒருவன் கொல்லப்பட்டுப் போனான். நான்குபேர் காயம்பட்டிருக்கிறார்கள். எஞ்சின் சிப்பந்திகளுக்கும் சிற்றுண்டிக்கான 'ரிப்ரெஷ்மெண்ட்' வண்டியிலிருந்தவர்களுக்குங்கூடக் காயமாம். இறந்துபோன கடற்படையாளனுக்கு ராணுவ மரியாதைகளோடு மதுரையில் அபரக்கிரியை நடந்தேறி சவம் அடக்கம் செய்யப்பட்டது. மற்ற நால்வரும் திருச்சி ரெயில்வே ஆசுபத்திரியிற் சிகிச்சையிலிருந்து வருகிறார்கள். இவ்விபத்து நேர்ந்ததற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்க்கப்பட்டபோது தண்டவாளங்கள் பிரியவும் சேரவுமாக வைக்கப்பட்டிருக்கும் 'பாயிண்டி'ல் இணைத்துப் பிடிக்க வேண்டியவிடம் பூட்டப்படாமல் மறை கழற்றிவிடப் பட்டிருந்ததுதான். மறை ரிபேருக்காகக் கழற்றப் பட்டிருந்ததென்றும், அவ்விதம் கழற்றிய பிட்டர் (கருமான்) எங்கேயோ ஓடி ஒளிந்திருக்கிறானென்றும் அறிவிக்கப்பட்டது. இது எம்மட்டிலும் வாஸ்தவமென்பது இனி போகப் போகத்தான் விசாரணையில் தெரியவேண்டும்.

### சிம்லா கல்வி கான்பரேன்ஸ்.

இம்மாதம் 20-தேதி இமயமலையினடிவாரத்திலிருக்கும் ஸிம்லாவில் ஒரு கல்வி கான்பரென்சு கூட்டப்பட்டது. நம் மேன்மைதங்கிய ராஜப்பிரதிநிதி லார்ட் செம்ஸ்போர்ட் அக்கான்பரென்ஸைத் திறந்து வைத்தார். ஸெகண்டரி ஸ்கூல்களில் இங்க்லீஷ் பாஷை கற்பிப்பதைக் குறித்து ஆலோசனை செய்வதே அக்கான்பரென்சு கூட்டப்பட்டதன் கருத்து. ஒவ்வொரு மாகாணக் கல்வியிலாகா அதிகாரிகள் புறப்பட்டுச் சென்றிருந்தார்கள். ராஜப்பிரதிநிதி அக்கான்பரென்ஸைத் திறந்து வைத்தபிறகு நம் மாகாண வாசியும் இந்தியா கவர்ன்மெண்ட் கல்வி மெம்பருமான ஸர் C, சங்கரன் நாயர் அதை நடத்தினார்.

### திவான் பகதுர் L. D. ஸ்வாமிக் கண்ணுபிள்ளை.

பரஸ்பரோபகாரக் கூட்டுறவுச் சங்க ரெஜிஸ்டிராராக விருந்த திவான் பகதூர் L. D. ஸ்வாமிக்கண்ணுபிள்ளை யவர்கள் இப்போது ரஜாவின்மீது சென்றிருக்கிறார். அவரது ஆழ்ந்த கல்வியையும் நிருவாகத் திறமையையும் உத்தேசித்துக் கவர்ன்மெண்டார் அக்கனவானுக்கு நெல்லூர் ஜில்லா கலெக்டர் உத்தியோகம் கொடுத்திருக்கிறாரென்று கேட்டு நாம் மனப்பூர்வமான சந்தோஷமடைகின்றோம். இந்தியரொருவர்க்கு ஜில்லாக் கலெக்டர் உத்தியோகங் கொடுக்கப்பட்டதற்கு நாம் சந்துஷ்டி யடைவதோடு நம் "கல்பதரு"வை யாரம்பத்திலிருந்து ஆசிரயித்து கூட்டுறவு சம்பந்தமாயுள்ள அருமையும் பெருமையும் வாய்ந்த விஷயங்களைத் தானமாயீன்று கௌரவப்படுத்திக் கைதூக்கிவிட்ட பிள்ளையவர்களின் நன்றி நம்மால் என்றும் மறக்கற்பாலதன்று. தம்மிடம் ஓர் உதவியும் பெறாதவர் தமக்குச் செய்த உதவி இப்புவியினும் ஸ்வர்க்கத்தினும் பெரிதாகுமல்லவா ?

'செய்யாமற் செய்தவுதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றலரிது.'

### செயற்கை நிலக்கரி.

நிலக்கரிக்கு இப்போது பெரும்பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது ; நிலக்கரிச் சுரங்கங்களில் வேலைசெய்ய ஆள் அகப்படுவதில்லை. அதவாத் அகப்பட்டாலும் பொறுப்பும் சிரத்தையு மிகுந்த தனவந்தர்கள் சுரங்கங்களை வேலைசெய்வதில் முற்படுவது கிடையாது. இத்தியாதி சந்தர்ப்பத்தில் அனேக தொழிற்சாலைகள் வேலைசெய்வதற்கு இடமில்லாது போகிறது. நிலக்கரியினுபயோகத்தை நாடியிருக்கும் நீராவி மரக்கலங்களும் இருப்புப்பாதை வண்டிகளும் தத்தம் பிரயாணத்தைக் குறைத்து மிருக்கின்றன. எல்லாம் நிலக்கரிப் பஞ்சத்தினாலேதான். இத்தகைய நிலைமையில் ஒருவர் 20 நிமிஷங்களில் நிலக்கரியெடுத்துக் காட்டுவதாகச் சொன்னால் அது அற்புதமல்லாது மற்றென்னை ? மிஸ்டர் R. கோல்பரன்லவல் என்னுங் கலைஞர் அமெரிகாவிலுள்ள சிற்பசாஸ்திர விற்பன்னர்களுக்கு முன்னிலையிற் சமீபத்திற் செய்ததோர் பிரசங்கத்தில் வெறுங்கல், குப்பை முதலான கூளமிகுந்திருந்த ஓரிடத்தை இருபது நிமிஷ நேரத்திற்குள் நிலக்கரி நிலயமாகச் செய்துவிடக் கூடுமென்று சொல்லி, மாதிரி நிலக்கரியையும் செய்து காண்பித்தாராம். ஈதென்ன அதிசயம் ! அநாதிகாலந் தொட்டு நிலக்கரி சுரங்க மூலமாகவெட்டியெடுக்கப்பட்டுவருவது இயற்கை யனுபவமாயிருக்க, இப்போது செயற்கை ரூபமாக மேற்குறித்த விற்பன்னர் நிதர்சித்து காட்டுவது புதுமையிலும் புதுமையே !

### பொக்கிஷ நிலையங்கள்.

பணத்தைப் பத்திரப்படுத்திவைக்க இப்போது பாங்குகளும், நிதிகளும், இரும்புப் பெட்டிகளும், பைகளும் இருக்கின்றன. சிலர் வட்டிக்குப் பணம்போட்டுத் தம் பணத்தைப் பத்திரப்படுத்தி வைக்கிறார்கள். ஆனால் முற்காலங்களிலோ சிற்சிலர் வெவ்வேறு வகையாகத் தாம் சம்பாதித்த பொருள்களைப் பத்திரப்படுத்துவது வழக்கமாயிருந்திருக்கிறதென்று சிற்சில சூசனைகளால் தெரிகிறது. உதாரணமாக இங்கிலாந்திலுள்ள லிவர்ப்பூல் நகரத்திலே உபயோகமற்று மூலையிற் கிடந்த ஒரு பழைய பீரங்கித் துவாரத்தில் 100 ஸவரன் கொண்டதோர் முடிப்பு கண்டெடுக்கப்பட்டதாம். பிராட்போர்ட்டு நகரைச் சேர்ந்த பீல்பார்க் என்னுந்தோட்டத்தின்கண் வைக்கப்பட்டிருந்த மாசுபடிந்து மூலையில் மணலிற்பதிந்து உபயோகமற்றுக் கிடந்திருந்ததோர் பீரங்கியின் வாயில் 70 பவுன் கொண்டதோர் முடிப்பு கண்டுபிடிக்கப்பட்டது. பின்னும் ஷோர்ஹாம் என்னுமிடத்திலுள்ள பெரியதோர் மரப்பொந்தில் ஆபரணாதிகளோடுகூடின சிறிய முடிப்பொன்று கண்டெடுக்கப்பட்டது. இன்னுமோரிடத்தில் பழைய தஸ்தாவேஜிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய ரிக்கார்ட் ரூம் கூளத்தை அப்புறப்படுத்திய போது அவைகளுக்கு மத்தியில் 7000 கரென்ஸிநோட்டுகள் கிடக்கக் காணப்பட்டன. இவ்விதமும் பணத்தைப் புதைத்துப் பிறரறியாது விட்டுப்போவோரை அறிவிலிகளென்று கூறுது வேறென்ன சொல்வது ?

### இந்தியா மந்திரியின் வருகை.

இந்தியா மந்திரியாரான மிஸ்டர் மாண்டேகு தற்காலத்து இந்தியா நிர்வாகச் சீர்திருத்தத்தை முன்னிட்டு இவ்விடம் வரப் போகின்றதாகச் செய்தி எட்டுகின்றது.

### ஜீ. ஐ. பீ. ரெயில்வே வேலைக்காரர்கள்.

தங்களுக்கிருந்த குறைகள் ஒருவாறாக ரெயில்வே அதிகாரிகளால் நிவர்த்தி செய்யப்பட்டதன் பலனாக ஜீ. ஐ. பி. ரெயில் வேலையாளர் திரும்பவும் தத்தம் வேலைக்குச் சென்றிருப்பதைக் கேட்க யாம் மிக்க சந்தோஷிக்கிறோம்.

## REVIEW OF BOOKS.

### புஸ்தக மதிப்புரை.

ஸரோஜா :—இந்நாவலை நமக்கு அனுப்பின ஸ்ரீமானுக்கு வந்தனம். இதை இயற்றியவர் ஸ்ரீமான் கீ. பி. சேஷாத்திரி அய்யங்காராவர். இந்நாவல் இனிய நடையிலும், தெள்ளிய தமிழிலும் எழுதப்பட்டிருப்பதல்லாமலும் படிப்போர் மனதைக் கவரக்கூடியதாயு மிருக்கிறது. இது புருஷர்கள் பெண்கள் ஆகிய எல்லோரும் படிக்கத் தகுந்தது. இதன் கதாநாயகன் லண்டனுக்குப்போய் ஐ. ஸி. எஸ். பரீக்ஷை தேறியிருந்தாலும் மேனாட்டு பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ளாமல் தன்னுடைய ஜாதிக்குள்ள வழக்கங்களையே கைப்பிடித்து வந்தானென்பது படிப்போர் மனதிலும் அப்படியொரு எண்ணத்தை யுண்டுபண்ணி சன்மார்க்க மார்க்கத்துக்கு வழிகாட்டுமென்பதில் சந்தேகமில்லை. இந்தப் புஸ்தகத்தின் விலை அணா (ஐந்து.) வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். வேண்டுவோர் "கல்பதரு" ஆபீஸ் மண்ணடி, மதராஸ், என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

# PART VIII.

## MORAL STORIES.

## நீதிக் கதைகள்.

### சீலவதி.

(164-ம் பக்கத் தொடர்ச்சி.)

பிச்சைக்காரன்:—பெண்ணே, உனக்கு ஸர்வமங்களமும் உண்டாவதாக. உன்னுடன் வாதாட எனக்குச் சமர்த்தில்லை, ஆகவே தயவுசெய்து எனக்கு ஏதேனும் பிச்சைபோடும்படி உன்னை மன்றாடிக்கேட்கிறேன். உதவியில்லாமல் அவ்வளவுதூரம் பிரயாணம்போக என்னால் முடியாது. கற்பிற்சிறந்த மாதே, அவ்வுதவிசெய்ய உன்னை நாடியிருக்கிறேன். சற்று செவி சாய்க்கலாகாதா? அம்மணி, ஒருவரை ஒருகாரியத்தை யுத்தேசித்து நெருங்குவதென்றால் சிரமமாகத் தானிருக்கிறது. கேட்ட காரியத்தைச் செய்து கொடாது மறுதளிப்பது பாபமாகும். அப்பாப கர்மம் மனைவியால் செய்யப்பட்டாலும் கணவனாற் செய்யப்பட்டாலும், கடைசியில் இருவர்க்குமே அது வந்து சேரும்.

சீலவதி:—அஃதெப்படி? மறுதளிப்பிருந்தாலன்றோ பாபம் வந்து சேர? இங்கு மறுதளிப்பு ஒன்றுமில்லையே. அப்படிக்கிருக்க, பாபம் வந்து சேருவதெங்ஙனம்?

இம்மாதிரியாகச் சீலவதி தாழ்ந்தகுரலுடன் ஹிருதயம் பதைக்க தலை குனிந்தவண்ணமாகச் சொல்லிவிட்டு மற்றும் பேச மனமில்லாதவளாகக் கண்களினின்றும் முத்து முத்தாகக் கண்ணீர்த் திவலைகள் இருகன்னங்களிலும் வழிய 'ஐயோ, இவ்வளவு நாழிகை பிச்சை கேட்கவந்த ஒருவரைத் தாமதிக்கச்செய்தோமே' யென்று நினைந்து உருகினாள். தன்னைத்தானே நொந்துகொண்டாள். பிறகு தலை நிமிர்ந்து வந்த பெரியவரைப்பார்த்து 'ஐயா' நானுமக்கு என்ன செய்யக்கூடும்? என்னிடத்தில் ஒரு காசுகூடக் கிடையாதே' என்று சொல்லவும், அப்பிச்சைக்காரன் 'அம்மணி' ஓரெளியவன் மீது சிறிது கருணை காட்டுங்கள். நானோ வழிப்போக்கன், வறிஞன், பெண்ணே, உன்னையீன்ற தந்தை இக்கோலத்துடன் வந்து உன்னை வேண்டுமிடத்து நீ மறுதளிப்பாயோ, அவ்விதஞ்செய்ய உனக்கு மனம் வருமோ, என்றான். இவ்வார்த்தைகளைக்கேட்ட சீலவதியின் மனம் இளகியது. அவளது மூக்கில் நத்து என்னும் ஆபரணத்தை அணிந்து கொண்டிருந்தாள். கண்ணீரால் சுத்திகரிக்கப்பட்ட அவ்வாபரணத்தைச் சீலவதி சரேலென்று தன் மூக்கிலிருந்து கழற்றித் தன் ஆடையினால் துடைத்துக் கண்ணீர் பொழிந்தவாறே அந்நத்தினை வந்த வறிஞரிடமீந்தாள். பெரியவரும் பெண்மணியை மனமுவந்து வாழ்த்தி வெளியேறினர். அதற்கப்புறம் அந்த



சம்பவத்தைச் சீலவதி சிறிதும் எண்ணவேயில்லை. தன் கிருஹகிருத்தியங்களைக்கவனித்துக் கொண்டிருந்தாள். முதன்முதல் தன் பர்த்தாவுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்துவிட்டுப் பின்னர் வீட்டுவேலைகளைக் கவனிப்பாளாயினள். பயபக்தியோடு சமையல்செய்து வைத்தாள், விட்டல தேவருக்கு நைவேத்தியம் செய்து நத்தினைக் குறித்த ஞாபகம் சிறிதுமில்லாமல், அச்சமயலறையிலேயே மானஸீகமாக அக்கருணா மூர்த்தியை ஸ்தோத்திரம் செய்துகொண்டிருந்தாள் சீலவதி.

சீர்பூத்தமங்கையாம் சீலவதி கொடுத்த நத்தாபரணத்தைப் பெற்றுக்கொண்ட வறிஞன் மிகவும் சந்தோஷத்துடன் துளசிராமனின் வீட்டுத் திண்ணையிலிருந்து தெருவிற் குதித்துக் கடைவீதியை நோக்கிப் புறப்பட்டான். கையிற் பிரகாசம் வீசும் நத்தாபரணத்தோடு பிச்சைக்காரன் முதற் கடைக்குச்சென்றான். அங்கு இவனது உடையைக்கண்ட கடையின் எஜமானன் புருவத்தை நெருக்கிக் கடூரமான பார்வையோடு பார்க்கவும், பிச்சைக்காரன், அதைவிட்டு அடுத்த கடையினுட்சென்றான். அக்கடைத்தலைவன், பிச்சைக்காரன் கையிலிருக்கும் நத்தாபரணத்தைக் கண்ட மாத்திரத்தில் இவ்விலையுயர்ந்த நகை இவனிடம் வருவானேன்? இது திருட்டு ஸொத்தாக இருக்கவேண்டுமென்று சந்தேகித்தான்; அதோடு மட்டுமா? அவன் அவ்வறிஞனை தனக்குப் பெரியவனும் தனவந்தனுமான ஒருவியாபாரியிடம் அழைத்துச் சென்றான். அந்நகையைக்கண்ட ஒவ்வொரு வியாபாரியும் இது துளசிராமுடையதாயிற்றே, இது இந்தப் பிச்சைக்காரனிடம் எப்படி வந்தது என்று திகைத்து நின்றனர்; எவரும் அந்நகைக்குரிய அபார தொகையைத் தம்மால் கொடுக்கமுடியாதென்று தட்டிக்கழித்து விட்டார்கள். வறிஞன் அதன்பேரில் அங்கந்தளர்ந்து இனி தன்னால் நடக்கமுடியாதென்று தள்ளாடித் தள்ளாடி முக்கிக்கொண்டே எந்தக்கடையில் சீலவதியின் புருஷனான துளசிராம் இருக்கிறானோ அதற்குள் சென்றான். வறிஞன் நடக்கையில் தன்னிருகைகளையும் முன்னும் பின்னுமாக ஆட்டிக்கொண்டே வந்ததையும், அவனது வலது கரத்தில் ஊன்றுகோல் 'டொக் டொக்' என்று சப்தித்துக்கொண்டும் இடது கரத்தில் நத்தாபரணம் 'பளபள' வென்று ஜ்வலித்துக்கொண்டுமிருந்ததைத் துளசிராம் பார்த்து 'அவ்வாபரணம் என் அகமுடையாளதாயிற்றே, அது இப்பிச்சைக்காரன் கைக்கு எவ்விதம் வந்தது' என்று தனக்குள்ளேயே யோசிக்கலானான். பிறகு அவ்வாபரணத்தைத் தன்கையில் வாங்கிப் பார்த்து, தான் தனது மனைவிக்குச் செய்து போட்ட ஆபரணமென்றே உறுதி செய்துகொண்டான். துளசிராமின் கண்கள் சிவந்தன; உதடுகள் படபடவென்று துடித்தன; ஒருவிசை நகையையும் மற்றோர் விசை பிச்சைக்காரனையும் ஏறிட்டுப் பார்த்துப் பெருமூச்செறிந்து இரண்டொரு நிமிஷம் ஒன்றுஞ் சொல்லத்தோன்றாதவனாகப் பிரமித்துப் பிறகு பிச்சைக்காரனை நோக்கி 'அடே, உன்னிடம் இந்த ஆபா

ணம் எப்படி வந்ததடா' என்றுகேட்டான். அதற்குப் பிச்சைக்காரன் 'ஐயா, அது திருட்டு சொத்தென்று நீர் சந்தேகப்பட்டு அந்தக் கேள்வி கேட்கிறீர்போலத் தோன்றுகிறது. அப்படிப்பட்ட சந்தேக மெதுவும் உமக்கு வேண்டாம். உண்மையைச் சொல்லுகிறேன் கேளும். அந்த மகா பதிவிரதா சிரோமணியாகிற சீலவதி யிருக்கிறாளே, அவள்தான் பெரிய வியாபாரி துளசிராமின் மனைவி, அந்த உத்தம பத்தினிதான் கொடுத்தாள்; ஏதாவது காசு கொடுக்கும்படி வற்புறுத்திக் கேட்டேன். இந்த நகையைக் கொடுத்தாள். அந்த அம்மாள் மகராஜியா யிருக்கவேண்டும்' என்றான். தான் எண்ணியதுபோல் உண்மை விளங்கப்பெற்ற துளசிராமன் கடை வேலைகளைச் சடுதியில் முடித்துக்கொண்டு, அவ்வாபரணத்தைத் தான் வாங்கிக்கொள்வதாகவும் தன்னை அன்று சாயங்காலம் கடையில் வந்து திரும்பப் பார்க்கும்படிக்கும் பிச்சைக் காரனுக்குச் சொல்லிவிட்டு, நகையைப் பத்திரமாக இடுப்பிற் சொருகி வீடு நோக்கிப் புறப்பட்டான். இரண்டு நாள் இரையில்லாது பசியிருந்திருக்கும் கடும்புலியானது இரைபுசிக்கும் நிமித்தம் கூண்டிலிருந்து விடுபடுகையில் எம்மாதிரியான ஆத்திரத்துடன் வெளியேறுமோ அத்தன்மைபோல துளசிராமன் வேர்க்க வியர்க்க நெஞ்சம் படபடக்க, வந்த வேகத்தினால் மார்பு துடிதுடிக்க ஓடோடியும் வந்து தன் வீட்டு வாயிற்படி யேறி வாசற் கதவைப் படபடவென்று தட்டினான். இனி நடப்பது இன்னது என்று முன்னதாகவே அறிவிக்கும் குறியாகத் துளசிராம் தட்டினானென்றால், அது எப்படி யிருந்திருக்கவேண்டும் பாருங்கள். கணவன் குரலைக்கேட்ட சீலவதி ஓடிவந்து கதவைத் திறந்தாள். புன்சிரிப்பு மிகுந்த சுந்தர வதனத்தோடு 'வாருங்கள் வாருங்கள்' என்றழைப்பதை யொப்ப அவளது முக கலாவிலாஸ மிருந்தது. ஆனால் துளசிராம் முகத்திலோ சந்தோஷக்குறி யொன்றும் காணப்படவில்லை. கோபக் குறியே பிரதிபலித்திருந்தது. கணவன் உள் நுழைந்ததும் கால் கழுவுவதற்காகப் பாத்திரத்தில் சீலவதி தண்ணீர் எடுத்துவந்தாள். அதைத் துளசிராம் மறுதளித்துவிட்டான். வெளியிலிருந்து வந்த களைப்பினால் சிறிதுநேரம் போகட்டுமென்று சொன்னாரோ என்னவோ வென்று சீலவதி நினைத்து தானே அவரது பாதங்களைக் கழுவித் துடைத்து ஆஸனத்திலிருத்தலாமெனக் கருதிச் சமீபத்தில் சென்றாள். நெருங்கி வந்த மனைவியை இடது புறங்கையினால் தடுத்து வாய்க்கு வந்த பிரகாரமாகத் திட்ட வாரம்பித்தான். பெண்களை நம்பலாகாதென்று மொழிந்தான்; பெண்கள் உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைக்கும் துரோகிகளென்று பேசினான். வைத்த நம்பிக்கைக்குக் கேடுவிளைக்கும் விதவைகளென்று பிதற்றினான். பின்னும் அவன் அவளைப் பார்த்து 'அடி நீலி, நன்றிகெட்ட கெடுவாய், நானுன்மீது வைத்த அன்பெல்லாம் பறந்து போயிற்றே. அவ்வன்புக்கு இதுவா பிரதி? துரோகசிந்தை கொண்ட துஷ்டை, நயவஞ்சக



மாகவா காரியஞ்செய்கின்றனை? தன் நாயகனை விட்டுக் கள்ளநாயகனிடமா ஆசை காட்டுகிறாய்? இப்படிப்பட்ட நிலைமையில் உன்னை நம்புவதெப்படி? உன்னை நம்பி வீடுவாசல்களையும் நகை நட்டுக்களையும் ஒப்புவிப்பதெப்படி? அவைகளைப் பத்திரமாய்ப் பாதுகாக்க நீ தகுந்தவளல்ல; என் முன்னிலையில் நீ மிக்க தணிவும் பணிவுங் கொண்டவளைப் போல் பசப்புகிறாய்; என் தலை மறையவேண்டியதுதான், உடனே உனக்குக் கோலாகலந்தான்; எப்பேர்ப்பட்ட பாபகிருத்தியத்தையும் செய்ய நீ பின்வாங்குவதில்லை. நீ இவ்வீட்டி லிருக்கலாகாது; போ வெளியே, படுநீலி' யென்று சொல்லிக் கொண்டே கையோங்கிச் சீலவதியைத் துளசிராம் அடிக்குமாறுச் சமீபத்திற் சென்றான்.

(இன்னும் வரும்.)

# ஹரிஹரன்

## ஓர் இனிய தமிழ் நாடகம்.

K. P. சேஷாத்ரி ஐயங்கார் எழுதியது.

நாடக பாத்திரங்கள்.

| | |
|---|---|
| காஞ்சேயன் | — மாளவநாட்டு மன்னன். |
| ராஜேந்திரன் | — விதர்ப்ப வரசன். |
| பிரதாபன் | — உஜ்ஜனி சிற்றரசன். |
| பாலநேசன் | — காஞ்சேயனது மைத்துனன். |
| மகபதி | — மாளவநாட்டு மந்தரி. |
| ஹரிஹரன் | — கோசலநாட்டு இளவரசன். |
| ஸுரேந்திரன் | — ஹரிஹரன் மாறுவேஷம் பூண்ட சமயத்தில் புனைந்த பெயர் - கதாநாயகன். |
| ஜயந்தன் | — ஹரிஹரனின் தோழன். (வேலையாள் போல் நடிப்பவன்.) |
| பிங்களன் | — ராஜேந்தரனது சேனைத்தலைவன். |
| விசித்திரன் | — விதூஷகன். |
| ஸரோஜனி | — காஞ்சேயன் குமாரி, கதாநாயகி. |
| லலிதை | — ஸரோஜனியின் தோழி. |

மற்றும் வீரர்கள், வைத்தியன் முதலியவர்கள்.

கதைநிகழுமிடம்— பெரும்பாலும் மாளவநாட்டிலும் அதற்கடுத்த தானகத்திலும்.

ஸ்ரீ

# ஹரிஹரன்.

## முதல் அங்கம்.

### முதற் களம்.

இடம்: மாளவநாட்டின் அரண்மனைக்கெதிரில்.
காலம்: பிற்பகல்.

(ஜயந்தனும் ஹரிஹரனும் பேசியவண்ணம் பிரவேசம்.)

ஜயந்தன்:—ஒருகாலும் தங்களுடைய ஆக்கினைகளை மீறேன். ஐயனே! இது முக்காலும் நிச்சயம் தாங்கள் மனமுவந்து அனுமதியளிப்பின் உங்களுக்குக் குற்றேவல் புரிய நான் சித்தமாயிருக்கின்றேன்.

ஸுரேந்திரன்:—ஜயந்தா! முதலில் நான் சொல்லிய புத்திமதிகளைக்கொண்டு நீ உன் கடமையைச் செவ்வனே செய். எனக்கு விருப்பம் இம்மாளவ நாட்டிலிருக்க அதன் காரணத்தை நீ கேட்க விரும்புவது தகாது. அவ்விதம் தெரிய இஷ்டங்கொள்ளின் உனது யஜமானனின் தாழ்மையை எடுத்துரைப்பதுமன்றி உனது அயோக்யதையையும் தெற்றெனவிளக்கும். தெரிந்ததா சொல்வது.

ஜயந்தன்:—ஐயனே! தெளிந்தேன், தயவுசெய்து எனது நடக்கை தான் என்னவோ? அதை அறிய ஆவல் அதிகரிக்கிறது.

ஸுரேந்திரன்:—ஜயந்தா? உன்னைப்போலும் சற்குணமும், யோக்யதையும் பொருந்தியவனை இது காறும்யான் கண்டதில்லை. இனியும் யான் காணப்போவதுமில்லை. இது நிச்சயம். எனதூழியன் போல் நன்றாக இதுவரை நடித்தனை. என்னுயிர் போன்ற நண்பன் என்றும் பாராமல் உன்னைத் தாழ்ந்த பதவியிலிருத்தியதற்கு என்னை மனிக்கவேண்டுகிறேன். ஆர்வல! இங்கு எவர்களிடத்திலேனும் உண்மையை வெளியிடப்போகிறாய் என்பதற்காக முன்னமேயே சொல்லுகிறேனே தவிர வேறில்லை. இன்னும் ஒரு விஷயத்தில் என்னை நீ திருப்தி செய்ய வேண்டும்.

ஜயந்தன்:—எவ்விஷயத்திலோ?

ஸுரேந்திரன்:—அதைச் சொல்கிறேன் கேள். அதைக் கேட்டுப் பின் நம் நாட்டிற்குச்செல். கடந்த ஆறுமாதமாக மாறுவேஷம் பூண்டிருந்த மாதிரியே இனியும் சில காலமிங்கிருக்க விரும்புகிறேன். இதை ஒருவருடனும் கூறுமலிருப்பையோ?

ஜயந்தன்:—ஒருவருடனும் கூறுவதில்லை இதை. தங்களுடைய பந்துக்களிடமும் உமது விஷயங்களை உரைப்பதில்லை, பிரமாணம் வேண்டுமானாலும் செய்கிறேன் பிரபு.



ஸுரேந்திரன்:—மித்திரனே! இதற்கா பிரமாணம். வேண்டாம் வேண்டாம். என்னுறவினரிடம் இதைத்தடையின்றி கூறலாம். (பொறுத்து) ஜயந்த! இவ்விடம் ஒரு வதந்தி உலவுகின்றது. விதர்ப்பவரசன் காஞ்சேயன்மீது சண்டையிடப் போகின்றானாம். நான் அப்போரில் மிகவும் ஊக்கங்கொண்டிருக்கிறேன். ரகுவீரனது கிருபையினால் வெற்றி மாலை தரித்து மீண்டும் நம் நாடடைகின்றேன்.

ஜயந்தன்:—என்னரசே! சேனாதிபதிப்பதவி உமக்கு மிகவும்தாழ்ந்ததன்றோ?

ஸுரேந்திரன்:—அப்பதவியே எப்பதவியினும் மேம்பாடுற்றது. வேந்தர்களும் அவ்வுன்னதப் பதவியை யடைய விருப்பங்கொள்கின்றனரென்றால் நான் மாத்திரம் ஏன் வெறுப்புக் கொள்ளவேண்டும்.

ஜயந்தன்:—அப்படியே செய்யுங்கள். ஹே! தேவாதிதேவ. என்னன்பார்ந்த இளவரசரை ஆபத்காலத்தில் உதவிபுரிந்து காப்பது நின்பாரம். அரசே! செல்கின்றேன்.

ஸுரேந்திரன்:—செல்! யான் சீக்கிரத்தில் வந்து விடுகிறேன். யானுரைத்தவாறு செய். ஜயந்தா! (ஜயந்தன் செல்கை). ஓர் யுத்தம் வருவது போலிருக்கின்றதாம். போலிருப்பதென்ன? வரப்போகின்றது கட்டாயமாய் விதர்ப்ப நாட்டிலிருந்து. காதல் வலையில் சிக்கி விழிக்கும் நானோ சண்டையில் வெற்றிபெறுவது? என் இன்பவல்லியைக் கண்டதும் நான் மூர்ச்சையானேன். மதனன் எவ்விதம் ரதியைக்கண்டு மதிமயங்கிக் காமமெய்தினனோ அதுபோல் யான் இது தருணம் விரகத்தினால் பீடிக்கப்பட்டிருக்கிறேன். ஹிருதயம் அனலிலிட்ட மெழுகுபோல் நினைக்குந்தோறும் நெகிழ்கின்றது. ஹா! மந்த பாக்யனான எனக்கும் அத்தருணி கிடைப்பளோ? ஏது. துர்லபம். துர்லபம். ஏ! மனமே! அடைதற்கு அரிய ஓர் ஜோதி மிகுந்தமணியிடம் சென்றனையே. உனக்கு அபயம் தந்தருளுவள் என்ற எண்ணங்கொண்டனையோ? உன்னை இத்துணையாண்டு போஷித்து வந்த என்னைவிட்டு அந்நங்கையைக் கண்டதக்ஷணம் செல்வதும் உனக்கு நீதியோ? உன்னை நிந்திப்பதில் யாது பிரயோஜனம். ஹா! அன்று நீலவர்ணச் சேலையில் வானத்துறையும் நக்ஷத்திரங்கள் போல் சரிகைப்பொட்டுகள் பிரகாசித்தன. மேகமென்னும் கூந்தல் நடுவில் உன்முகமாயமதி ஒளி மிகுந்திருந்தது. என்ன சௌந்தர்யம்! என்ன தேகவனப்பு! கண்ணே! உன் எதிரில் நான் நிற்கவும் அஞ்சுகின்றேனே! அவ்வச்சமகல ஒரு வார்த்தையாவது சொல்லக்கூடாதா? நீ செல்லுமிடங்களெல்லாம் உன் நிழலைப் பின்தொடருகின்றேன். கொஞ்சமும் ஈவு இரக்கமில்லையோ உனக்கு. என் கண்ணாரக்கண்டு நான் ஆனந்தமடைகின்றேன். என் மற்ற அங்கங்கள் யாவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க நேத்திரம் மாத்திரம் ஸந்தோஷமடையும் பாக்கியத்தையாவது பெற்றேனே! அதுவும் என்

கண்கள் செய்த புண்ணியமே! அடிக்கடி உன் தாமரையொத்த மெல்லிய பாதங்கள் நந்தவனத்தை நாடிவர அச்சோலை செய்த தவமும் யான் பெறவில்லையன்றோ? இந்துமுகி! என்மனத்திற் குடிகொண்டிருப்பதை உனக்கு வார்த்தையானும் மற்று லிகிதத்தானும் வெளியிடத்தகுந்த தீரமும் சக்தியுமற்றவனாகவிருக்கின்றேனே! எதற்கும் நான் உன்னையே தரிசிக்கிறேன். மனத்திலுறையும் நெருப்பு என்னைத் தீய்த்தபோதிலும் சரியே. எவர் என்னைக் காணினும் சரி. எவர் என்னைத் தடை செய்தபோதிலும் சரியே! கண்ணே! மணந்தால் உன்னையே மணப்பேன். இல்லையேல் சந்நியாசியாகிவிடுவேன். இச்சமயம் எவ்விடத்திலிருக்கின்றாயோ. பூஞ்சோலையிலோ அல்லது கன்னிகாமாடத்திலோ? எவரே யறிந்து சொல்பவர்? விதூஷகனிடம் சென்றால் சகல விஷயமும் தெரியும். கண்ணே! வருகின்றேன் நின்னைக் காண. உன்னைக் காண்பதே எனக்குப் பெரும்பாக்கியம். அதினினும் பெருமை வேறு எனக்கு ஏதேனுமுண்டோ. (செல்கை.) (இன்னும் வரும்.)

காட்சி முடிகிறது.

## THE MARRIAGE SACRAMENT.

## விவாஹ ஸம்ஸ்காரம்.

"உன் சமர்த்தெல்லாம் இழந்து விட்டாயோ? உன் அப்பாவைப் பார்க்கிலும் நீ புத்திசாலியோ? இந்த மிலேச்ச வாசிப்பென்ன? எல்லாந் தலைகீழ் வியாபாரமா யிருக்கும் கலியுகமென்ன" வென்று ஜானகியம்மாள், மார்கழி மாஸ லீவில் வந்திருக்கும் தன் குமாரன் சேஷுவுக்குத் தலைவாரிக்கொண்டே சொன்னாள். சேஷுவுக்குப் பல பேர் தம் தம் பெண்களைக் கொடுப்பதாய்ச் சொல்லி யிருந்தார்கள்: ஆனாலும் புத்தூர் மகாதேவய்யர் பெண்ணை நிச்சயம்பண்ணி ஜனவரி மாதம் 25-ந்தேதி முகூர்த்தமும் வைத்தாய்விட்டது. இதை நிச்சயம் பண்ணிக்கொள்வதற்கே சேஷுவின் தகப்பனார் அவனை மார்கழிமாத லீவில் கட்டாயமாய்ப் புறப்பட்டு வரும்படி பின்னைக்கு எழுதியிருந்தார். அவனும் வந்து சேர்ந்திருக்கிறான். கறு நிறத்துடன் நீண்டு தொங்கும் அவனுடைய தலைமயிரை வாரிக்கொண்டிருக்கும்போது அவன் தாயான ஜானகியம்மாள் மேலே சொன்னபடி கூறியதும்,

சேஷு:—என் அம்மா, நீ கூட இப்படிச்சொன்னால் நான் என்ன செய்வது? எனக்கு இப்போது தான் 18 வயசு. இவ்வளவு சீக்கிரத்தில் எனக்கு எதற்காகக் கலியாணம் செய்யவேண்டும்? நான் எல்லாப் பரீக்ஷைகளிலும் தவறாமலிருந்தேனானால், இன்னும் மூன்று அல்லது நான்கு வருஷங்களுக்குள் படிப்பு பூர்த்தியாகிப் பட்டமும் பெறுவேனே.



ஜானகியம்மாள்.—சரி, நீ என்ன செய்வாயடா அப்பா. எனக்கு எப்போது கலியாணமாச்சு தெரியுமோ. கலியாணமானபோது உன் அப்பாவுக்குப் பன்னிரண்டுவயசு; எனக்கு ஏழு வயசு. ஏதடா, அம்மாவுக்கு வயஸாய் விட்டதே, இந்தத் தள்ளாத வயஸில் அவளைப்போட்டு வருத்துகிறோமே யென்று தோன்றுகிறதா. அது போகட்டும். சாகிற வரையில் கிணற்றிலிருந்து ஜலம் கொண்டுவந்து சமைத்து, வீட்டு வேலை யெல்லாவற்றையும் செய்து பிராணனை விடவேண்டும் நான். பிள்ளைக்குக் கலியாணத்தைப் பண்ணிப் பார்ப்போமென்று நினைத்தால் அந்த சந்தோஷங்கூட எனக்குக் கிடைக்காது போலிருக்கிறதே. இந்த ஜன்மத்தில் ஈசுவரன் எனக்கு ஒரு பெண் குழந்தையைத் தான் கொடுக்கவில்லை. கொடுத்திருக்கும் பிள்ளையும் இப்படிக் கலியாணம் பண்ணிக் கொள்ள மாட்டேனென்கிறானே. அட தெய்வமே!

சேஷு.—அதற்குள்ளே என்ன அம்மா, செத்துப்போகிற சமாசாரத்தைப் பற்றிப் பேசுகிறாயே. உனக்கு இன்னும் வயசு ஐம்பதுகூட ஆகவில்லையே, கொஞ்சகாலம் என்னைமட்டும் தனியாய் விட்டு விடு, உன் மனம்போலே நான் கலியாணம் பண்ணிக் கொள்ளுகிறேன். பெண்டாட்டி அகத்துக்கு வந்துவிடுவள். பெண்ணைப்போல் நீ அவளைப் பார்த்துக்கொள்ளலாம்.

ஜானகியம்மாள்.—இருபது அல்லது முப்பது வயசிலா நீ கலியாணம் செய்து கொள்ளப்போகிறாய். நீ இப்போதிருப்பதைப்போல் அப்போது உனக்குக் குழந்தைகள் பிறந்திருக்குமே. நீ என்னதான் நினைத்திருக்கிறாய் உன் மனதிலிருப்பது எனக்குத் தெரியட்டும். ஏன் இந்தமாதிரி யெல்லாம் பேசுகிறாய்?

சேஷு.—அம்மா, நம்முடைய பெரியோர்களெல்லாம் அனேகமாய் 30 வயசு ஆன பிறகு தானே கலியாணஞ்செய்து கொண்டிருக்கிறார்கள். இது உனக்குத் தெரியாதா? அதல்லாமல் பெண்களுக்குக் கூட விவாகப் பொறுப்பைச் செவ்வையாய் அறியக் கூடிய வயசு வந்த பிறகல்லவா கலியாணம் நடந்து வருகிறது. பெண்கள் பால்யமாயிருக்கும் போதா கலியாண மாகிறது, ஒருநாளுமில்லை.

ஜானகியம்மாள்.—நீ என்னவோ முட்டாள் தனமாய்ப் பேசுகிறாய். ஏனடா சேஷு, சாஸ்திரங்களைக் காட்டிலும் நீ நிரம்ப அறிந்து விட்டாயோ?

சேஷு.—நானறிந்து விடவில்லை. அம்மா, பால்யத்தில் குழந்தைகளுக்கு விவாகஞ்செய்வித்து சாஸ்திரங்களைக் காட்டிலும் தமக்கு நிரம்ப தெரிந்து விட்டதாய்ப் பசப்புகிறார்களே அவர்கள் தான் அறிந்தவர்கள்; இப்போது நான் பார்த்திருப்பதைப் போல் அவர்கள் விவாகச் சடங்குகளுக்குரிய மந்திரங்களை ஆராய்ந்து பார்த்திருப்பாரானால் வயசானவர்களே கலியாணத்திற் கேற்றவர் என்பது தெரியவரும். இதன்றியும் சாஸ்திரமறியாதவர்கள் இருக்கிறார்களே, அவர்கள் தான் பாலிய விவாகத்தை யவலம்பிப்பவர்கள். இந்த நாளுக்குத் தகுதியான பண்டைக்கால அனுஸரணைகளைக் கைகொள்ளும் நான் பாலியத்தில் விவாகஞ் செய்து கொள்வதை யவலம்பிப்பவனல்ல.

ஜானகியம்மாள்.—எனக்கு அதெல்லாந் தெரியாது. எனக்குக் கலியாணமானபோது ஏழு வயது. என் தாயாருக்கு ஐந்து வயசிலேயே தாலிகட்டியாய் விட்டதாம். உனக்கு இன்னும் நாலைந்து வருஷம் கலியாணமாகாமல் இருந்தால், உனக்கு ஏதோ: உடம்பில் கோளாறு இருக்கிறதென்று சொல்லிச் சந்தேகித்து யாரும் பெண்ணைக் கொடுக்கமாட்டார்கள். அது போனாலும் போகட்டும். எனக்கும் வயஸாய் விட்டது. உடம்பு தள்ளவில்லை. உனக்குத் தகுந்த பெண்ணைப் பார்த்துக் கலியாணம் பண்ணி வைக்கவேண்டுமென்று உன் தகப்பனார் ஆசக்திகொண்டிருக்கிறார். அப்பேர்ப்பட்ட

இடம் இப்போது கிடைத்திருப்பது நமது பாக்கியந்தான். நீ கொண்டிருக்கும் அபிப்பிராயங்களை மாற்றிவிடு. உன் பெற்றோர் வார்த்தையைக் கேளு; தடை சொல்லாதே.

சேஷு.—நான் எவ்வளவு தடுத்துப் பார்த்துந்தான் பலிக்கவில்லையே: என்ன செய்கிறது. அதனாலேதான் முதன் முதல் நீங்கள் நிச்சயம் செய்திருந்த தின்னூர்ப் பெண்ணைக் கலியாணஞ் செய்துகொள்வதென்று தீர்மானித்து, பிறகு பெண்ணையும் நேரிடப்போய்ப் பார்த்தேன். பெண் அழகாய்த்தா னிருக்கிறாள். எட்டு அல்லது ஒன்பது வயசுக்குமேலிராது. புத்திசாலியாயிருப்பள் போலுந் தோன்றிற்று. அவளைக் கலியாணம் பண்ணிக் கொண்டால் என் படிப்புக்கு யாதொரு குந்தகமும் ஏற்படாது. அப்படியிருக்க இப்போது புத்தூர்ப்பெண்ணைக் கலியாணஞ்செய்து கொள்ளும்படி யேன் சொல்லுகிறீர்கள்? புத்தூர்ப் பெண்ணுக்கு இப்போது வயசு 12. இத்துடன் நானும் அந்தப் பெண்ணை நேரில் பார்த்ததில்லை. இருந்தாற்போலிருந்து ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு ஏன் திடீரென்று பாயவேண்டும்?

ஜானகியம்மாள்.—உன் அப்பா இரண்டொரு தடவைகளில் அந்தப் பெண்ணைப் போய்ப் பார்த்திருக்கிறார். பெண் பெரிசென்றும் கூடிய சீக்கிரத்தில் பெரியவளாகிப் புக்ககத்துக்கு வந்து விடுவளென்றும் சொல்லியிருக்கிறார். வந்து விட்டால் கொஞ்ச வருஷமாவது நான் வீட்டுவேலை செய்யாமலிருந்து பிறகு மரிப்பேனே.

சேஷு.—என்ன அம்மா, எதற்கெடுத்தாலும் மரிக்கிற பேச்சும் செத்துப்போகிற பேச்சுந்தானா? நீ இந்த மாதிரி பேசுவது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை.

ஜானகியம்மாள்.—(மெதுவாக) அடே அப்பா, நான் இத்தனை நாள் உன்னோடு சொல்லவில்லை. எனக்கு 53-ம் வருஷம் போராது. நான் அந்த வருஷத்தைக் கண்ணாலே காணப்போகிறதில்லை. இது எனக்குப் பத்து வருஷமாகவே தெரியும். குன்னூர் ஜோஸியர்தான் பார்த்துச் சொன்னார். அவர் ஜோஸியமும் பலிக்காமல் போவதுண்டோ?

சேஷு.—என்ன அம்மா, மூடத்தனமாயிருக்கிறாய். இந்த ஜோஸியர்களெல்லாம் ரிஷீசுவரர்களல்ல. இப்போதைய ஜோஸியமெல்லாம் பஞ்சப்பாட்டு ஜோஸியந்தான். வேறொன்றுமில்லை.

ஜானகியம்மாள்.—சரி சரி, உனக்கு ரொம்பத் தெரியுமோ. இங்க்லீஷ் படிப்பு படிச்சுப் படிச்சு ஜோஸியத்திலே மாத்திரமில்லை மற்றெல்லாவற்றிலும் உனக்கு நம்பிக்கை அற்றுப்போய்விட்டது. நீ என்ன செய்வாய்?

சேஷு.—சரி அப்படியே யிருக்கட்டும் அம்மா, இங்கிலீஷ் படிப்பினாலே தான் எனக்கு இந்தமாதிரி யெல்லாம் தோன்றுவதா யிருக்கட்டுமே. எனக்குக் கலியாணமாச்சுதானால் தின்னூர் பெண்ணே யிருக்கவேண்டும். ஏன் என்றால் அந்த மாதிரியே நிச்சயம் பண்ணித் தாம்பூலமும் வாங்கியாய் விட்டது. இவ்வளவான பிறகு அதை உதறிவிடுவது அழகா?

ஜானகியம்மாள்.—இல்லையடா சேஷு, அவளப்பா ஓர் ஏழைக்குமாஸ்தா. ஐந்நூறு ரூபாய்க்குமேலே அவனால் கொடுக்கமுடியாது அதுவும் கடன்தான் வாங்கவேண்டும். அப்படிப்பட்டவன் என்ன சீர் செய்வன்? இதல்லாமல் இன்னும் அவனுக்கு 3 பெண்கள் கலியாணத்துக்கு நிற்கிறது. இது போகட்டும்; புத்தூர் மகாதேவய்யர் இந்தப் பக்கங்களில் நல்ல தகுந்த மிராசுதார். நல்ல ஐவேஜுள்ளவர். அவருக்குக் கிட்டத்தட்ட நூறுவேலி நிலமிருப்பதாய்ச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். பிள்ளைக்கு ரொக்கமாய் 2,500 ரூபாயும் சீர் ஓர் ஆயிர ரூபாய்க்கும் செய்வர். கலியாணமும் விமரி



சையாய் நடக்கும். அப்பேர்ப்பட்ட சம்பந்தம் நமக்குக் கிடைத்ததே, அது நம்முடைய அதிர்ஷ்டந்தான். அதனாலே தான் கூடிய சீக்கிரத்தில் இதை முடித்துவிட வேண்டுமென்று அப்பா அவசரப்படுகிறார். என்னைப் பொறுத்த மட்டிலே, பெண்ணுக்கு பன்னிரண்டு வயசாகிறது; அடுத்த வருஷம் அகத்துக்கு வந்துவிடுவள்; அந்தக் காலம் எப்போது வருமோவென்று காத்துக் கொண்டிருக்கிறேன்.

சேஷு.—என்ன அம்மா, ஒரு ஏழைக்கு முதலிலே வாக்குக் கொடுத்துவிட்டுப் பிறகு அதிலிருந்து பிறழ்வது தர்மமாகுமா? நமக்கு இப்போது ஐயாயிரம் ரூபா சொத்திருக்கிறது. அந்த சொத்துக்கு நான் ஒரே பிள்ளைதான், இன்னும் கொஞ்சகாலம் போனால் நானும் சம்பாதிப்பேன்; தின்னூர்ப் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொள்ள வேணும் என்று ஏன் சொல்லுகிறேன் தெரியுமோ? முதல் முதல் அவன் ஏழை, இன்னும் 3 பெண்கள் தாலிகட்ட நிற்கிறதே யென்று பரிதபித்தே நான் அங்கே சம்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென்பது. அவாளாய்க் கொடுக்க முடிவதை மட்டும் பெற்றுக் கொள்வோம். அதிக பணத்திற்கு ஆசைப்பட்டு முதல் முதல் கொடுத்த பேச்சிலிருந்து பிறழ்வது நமக்கு அழகல்லவே.

ஜானகியம்மாள்.—என்ன அழகில்லை? புத்தூர் மகாதேவய்யரோடும் நிச்சய தாம்பூலமாய் விட்டது. அவர் பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ளாவிட்டால் அங்கேயும் பேச்சு புரண்டதுபோலாகு மல்லவா? நம் கையிலிருந்து ஒரு தம்பிடி கூட செலவழியாது. அவரே தம்முடைய கிராமத்திற்கு நம்மை அழைத்துப்போக வண்டிகள் அனுப்புவதாக வாக்களித்திருக்கிறார். இதல்லாமல் நாட்டுப் பெண் பெரிசாயிருப்பதனாலே உன் அப்பாவுக்கும் ஸம்மதம் எனக்கும் ஸம்மதம். உனக்கு இது விஷயமெல்லாம் என்ன தெரியும். நீயோ குழந்தை. இன்றைக்கு உன் தாய் தகப்பனார் இருக்கிறார்கள். அவர்கள் உன் க்ஷேமத்தைக் கோருவரேயல்லாமல் கேட்டைக் கோரமாட்டார்கள். உனக்கெல்லாம் தெரிந்துவிட்டதாய் நினைத்து உன் தகப்பனாருக்குக் கோபமூட்டாதே. ஏதாவது ஒரு விஷயத்தில் அவருக்குப் பிடிமானம் விழுந்து விட்டால் அதை அவர் நிறைவேற்றித்தான் விடுவர் என்பது உனக்குத் தெரிந்ததேயல்லவா? ஆதலால் அப்பேர்ப்பட்ட குடும்பத்தில் கலியாணஞ் செய்துகொள்வது உனக்குப் பெருமையென்று நினை.

இவ்வளவு தூரம் தர்க்கம் ஆயிற்று. தன் தாயிடம் இது விஷயமாய்ப் பேசிப் பிரயோசனப் படாதென்று சேஷு தெரிந்துகொண்டான்; ஆயினும் தான் சொன்னவற்றை அப்பாவிடம் சொல்லும்படி கேட்டுக்கொண்டான். அதற்காவது ஜானகியம்மாள் உடன்படுகிறாளா? இல்லை. அப்பாவிடஞ் சொன்னால் அவருக்கு இன்னும் கோபம் அதிகமாய் வந்து விடுமென்று மழுப்பிவிட்டாள். சேஷு அவன் தந்தையோடு ஸமரஸமாய்ப் பேசமாட்டான். ஆகவே இது விஷயமாய் எடுத்துச் சொல்வதற்குப் பயம். தன் மாமாவை மத்தியஸ்தமாய் வைத்துக்கொண்டு தன் காரியம் பலிக்குமோவென்று பார்த்தான். அதுவும் பலிக்கவில்லை. என்ன செய்வான்? நடக்கிறது நடக்கட்டுமென்று மனோதிடஞ்செய்து கொண்டதுடன், தன் முழு மனவில்லாமலே இக்கலியாணத்துக் கிணங்கிவிட்டு மார்கழி மாதம் லீவு தீர்ந்ததும் கலாசாலைப்போக வேண்டிப் புறப்பட்டு விட்டான்.

## கலியாண விமர்சை.

புத்தூர் மகாதேவய்யர் நல்ல ஐவேஜுள்ளவர்; தகுந்த மிராசுதார், அவர் வீட்டுக் கலியாணமென்றால் சாமான்யமாய் நடக்குமா? அவர் வீட்டு வாசலில் வீதிப்புற முழுவதும் வளைத்துக் கொட்டகை போட்டிருக்கிறார். வந்த வேலையாளர்க் கெல்லாம் ஒவ்

வொருவனும் ஒவ்வொரு வேலையைப் பார்க்கும்படி தாக்கீதுசெய்கிறார், தம்முடைய வீட்டுக்கு இருபுறத்திலுமுள்ள பக்கவீட்டு வாயில்களையும் சேர்த்து, ஆக மூன்று வீட்டு வாயில்களில் பந்தல் சேர்ந்தாற்போல் போட்டிருக்கிறார்கள். விவாகத்திற்கு வேண்டிய முஸ்தீப்புகளைத் தயாரிக்கும் தடபுடலில்,கலியாணத்துக்கு 10 நாள் முந்தியே மகாதேவய்யருக்குத் தொண்டை கம்மிப்போய்விட்டது, ஜனவரிமாதம் 17-ந் தேதி தபால்காரன் அவருக்கு ஒரு கடிதம் கொண்டுவந்து கொடுத்தான். அதில் இங்கிலீஷில் விலாஸம் எழுதியிருந்தது, பட்டணத்து முத்திரை தெரிந்தது. மகாதேவய்யருக்கு அவ்வளவாக இங்கிலீஷ தெரியாது. ஏதோ தனவந்தராயிற்றேயென்று நல்ல ஸபைகளில் அவருக்குக் கௌரவார்த்தமாக மெம்பர் ஸ்தானம் கொடுக்கிறார்களே யல்லாது, இங்கிலீஷில் நல்ல கல்வியாளர் என்றல்ல. தம்முடைய மாப்பிள்ளைப் பிள்ளையாண்டானுக்கு ஹம்பர் ஸைவிகல் ஒன்று வேண்டுமென்று ஆர்டர் கொடுத்திருந்த மகாதேவய்யர், அந்தக் கடிதத்தைப் பார்த்ததும், அது ஹம்பர் ஸைவிகலுக்கான ரெயில்வே ரசீதுபோலிருக்கிறதென்று சந்தேகித்தார். லெட்டரைப் பிரித்ததும் உள்ளே தமிழில் ஒரு கடிதம் எழுதப்பட்டிருந்தது. யாரோ ஒரு ஸ்கூல் சிறுவன் எழுதினதுபோ லிருந்தது. ஆனால் இலக்கணப் பிழை யேதுமில்லை. அந்த லெட்டரின் சமாசாரம் என்னவென்றால்,

"மகா-ா-ா-ஸ்ரீ புத்தூர் மகாதேவய்யர் அவர்களுக்குப் புத்தூர் சங்கரய்யர் குமாரன் சேஷனின் தோழனான ராஜாங்கம் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்த விஞ்ஞாபனம்.

முன்பின் அறியாத ஒருவனிடமிருந்து கடுதாசு வருவதென்றால் ஆச்சரியமாகத்தான் தோன்றும். ஆனால் இப்போதிருக்கும் நிலைமையைக் கவனிக்கும்போது சாதாரண சமுதாயங்களெல்லாவற்றையும் அப்புறப்படுத்தவேண்டு மென்றே தோன்றுகிறது. ஏனென்றால் விஷயம் அவ்வளவு அவஸரமானது. நீங்கள் யாரை மாப்பிள்ளையாகப் பார்த்து வைத்திருக்கிறீர்களோ அவன் எனக்கு நெருங்கிய தோழன்; காலேஜ ஹோஸ்டலில் அவனும் நானும் கூடவேயிருந்து வருகிறோம். ஆனால் இந்தக் கடிதம் தங்களுக்கு எழுதுவது அவனுக்குத் தெரியாது. எனது அபிப்பிராயத்தை மட்டும் அவன் அறிந்துவிட்டால், நான் செய்வது சரியென்றே அவன் அங்கீகரிப்பான். சிற்சில காரணங்களையொட்டித் தங்களுடைய பெண்ணைக் கலியாணஞ்செய்துகொள்வதில் அவனுக்கு இஷ்டமில்லை. அக்காரணங்கள் என்னவெனின் (1) தின்னூரில் அவனுக்கு முதன் முதலாக ஒரு பெண்ணை நிச்சயம் செய்திருந்தார்கள்; அதிலிருந்து பிறழ்வது அயோக்கியத்தனமென்று அவன் இப்போது நினைக்கிறான். (2) தின்னூர்ப் பெண்ணை அவன் நேரிற் போய்ப் பார்த்திருக்கிறான்; அப்பெண்ணின்மீது ஆசைப்படுகிறான். உங்கள் பெண்ணை அவன் பார்த்ததுகூடக் கிடையாது. (3) உங்களுடைய பெண்ணுக்கு 12 வயதாய்விட்டதனாலே தன்னுடைய படிப்புக்குக் குந்தகம் விளைந்துவிடுமென்று கருதுகிறான். (4) கவர்ன்மெண்டாரிடமிருந்து உபகாரச் சம்பளம் பெற்று வெளிதேசங்களுக்குப் போய்த் தொழிற் கல்வியிற் றேர்ச்சியடைந்துவர விருப்பங் கொண்டிருக்கிறான். இது அவன் பெற்றோருக்குக் கூடத் தெரியாது. உங்கள் பெண்ணை விவாகம் செய்துகொண்டால் இவனது பேராவல் முழுவதும் குலைந்துபோம் என்று நினைக்கிறான். அவன் வகுப்பில் மற்றவரைக் காட்டிலும் திறமையாய்ப் படிப்பதுடன் எல்லாருக்கும் முதலிலேயே யிருக்கிறான். அவனிஷ்டப்படி விட்டுவிட்டால் அதிக சிரமமில்லாமல் இந்தியன் ஸிவில் ஸர்விஸ் பரீக்ஷையில் தேறிவந்து விடுவான். ஆனது பற்றி இப்போது கலியாணஞ் செய்துகொள்வதில் அவனுக்குக் கொஞ்சமாவது இஷ்டமில்லை. அதோடுகூட இருதிறத்தாருக்கும் இறுதியில் துன்பம் வந்து லபிக்குமே யென்று ஏங்குகிறான். நான் அவனோடுகூட விருப்பதனாலே அவன் மனஸை அறியும்படி நேர்ந்தது. அறிந்த பிறகு



அதைத் தங்களுக்குத் தெரிவிக்காமல் இருக்க என்மனசு கேட்கவில்லை. ஆகையால் இவ்வளவு தூரம் எழுதித் தெரிவிக்கலானேன். சிரமப் படுத்தியதற்கு மன்னிக்கவும்.

அனேக கோடி நமஸ்காரம்

ராஜாங்கம்."

இந்தக் கடிதம் முழுவதும் படித்து முடிந்ததும் ஓர் இடி யிடித்தால் எப்படியோ அப்படியே ஒருவிசை தூக்கி வாரிப்போட்டது. தன் பெண் ரூபவதியல்லவென்பதை மகாதேவய்யர் அறிந்தே பிள்ளை வீட்டுக்காரர் வந்து பார்க்காமல் இருப்பதற்கு என்னென்ன வேண்டுமோ அவ்வளவு தூரம் செய்துவைத்திருந்தார். மேலும் சேஷு அவர் தகப்பனுக்கு ஒரே பிள்ளை. பி. ஏ., கிளாஸில் படிக்கிறான். அழகா யிருக்கிறான். பார்த்த பேரெல்லாம் அவனைக் கெட்டிக்காரன், புத்திசாலி யென்று பேசிக் கொள்ளுகிறார்கள்; இந்தக் கடுதாசு ஒன்றே அவனுடைய உத்தம குணங்களை விவரித்துக் காட்டப்போதுமே. இதுவரைக்கும் வந்த இருபது வரன்களுக்குள்ளே சேஷுவைத்தான் மகாதேவய்யர் பொறுக்கியெடுத்தார். ஏழைத் தின்னூர் குமாஸ்தாவுக்கு இந்த வரன் கிடைக்குமாவென்று சொல்லிக்கொண்டிருந்தார். இங்கிலாண்டுக்குப் போய்ப் பரீக்ஷையில் தேறி கலெக்டர் உத்தியோகம் பெறக்கூடுமானால், கப்பலில் ஏறிச் சமுத்திரத்தைத் தாண்டாமலே தன் செல்வாக்கையும் தன் தனத்தையும் கருதி ஒரு டிபுடி கலெக்டர் உத்தியோகமாவது செய்துவைத்து விடலாமென்று தமக்குள்ளேயே சிறிது நேரம் யோசித்துப் பிறகு இந்த வரனை எவ்விதத்திலும் நழுவவிடலாகாதென்று உறுதி செய்துகொண்டார். தக்ஷணமே தமக்கு சம்மந்தியாகப் போகிற சங்கரய்யருக்குச் சொல்லி யனுப்ப, அவரும் மறுநாள் வந்து சேர்ந்தார். முதல் தினம் தமக்கு வந்த கடிதத்தை மகாதேவய்யர் சங்கரய்யருக்குக் காண்பித்துப் பின்னர் இருவரும் சேர்ந்து ஆலோசித்தார்கள். சங்கரய்யருக்கு உள்ளுக்குள் பயம், மகாதேவய்யருக்கு இந்த சமாசாரமெல்லாம் தெரிந்துவிட்டதே, இனியென்ன செய்வதென்று சங்கரய்யருக்கு உள்ளுக்குள் துக்கம். தன் புத்திரன் விவாக விஷயத்தைப்பற்றிப் பேசியபோது ஆரம்பத்தில் சிறிது தடைசொன்னது வாஸ்தவமேயானாலும், தான் அவன் மனவில் படும்படியாய்ச் சொல்லிக் கலியாணத்துக்கு உடன்படும்படி செய்திருப்பதாய்ச் சங்கரய்யர் சொன்னதுடன், இது ஒருவேளை தின்னூர் குமாஸ்தா தான் ஏமாந்துபோனதைக் குறித்துச் செய்த சூழ்ச்சியா யிருக்கலாமென்றுஞ் சொன்னார். இருவரும் சேர்ந்து யோசித்துப் பார்க்கப் பார்க்க இது ஒருவேளை நிச்சயமாயிருந்தாலும் இருக்கலாமென்று அவர்கள் மனவில் தோன்றிற்று. மகாதேவய்யருக்கு இது விஷயத்தில் சந்தேகம் இருக்கக்கூடாதென்று மதித்த சங்கரய்யர் அன்றைய தினத்திலேயே அவ்வூரை விட்டுப் புறப்பட்டுத் தன் பிள்ளையிடம் வந்து. அவன்கைப்படதான் நிச்சயம் செய்யும் பெண் எதுவானாலும் சரி, அதை விவாகம் செய்துகொள்வதில் தனக்கு யாதொரு ஆக்ஷேபணையு மில்லையென்று ஒரு காகிதம் கொண்டுவந்து கொடுத்தார். இது நிச்சயமானதும், முன்னிலும் பதின் மடங்கதிகமாய்க் கலியாணக் காரியங்கள் செய்யப்பட்டன. தான் மாப்பிள்ளைக்கு மனங்கோணாதிருக்க வேண்டுமென்று புத்தூர் மிராசு மகாதேவய்யர் தாம் மாப்பிள்ளைக்கென்று வைத்திருக்கும் சகல வெகுமதிகளோடுகூட சென்னப்பட்டணத்திலிருந்து ஒரு தங்கக் கெடியாரமும் அதற்கேற்ற தங்கச் சங்கிலியும் வரவழைத்து வைத்தார். கலியாண தினமும் வந்தது. (தொடரும்.)

L. அனந்தய்யர்.

[illegible]

| Date | Date | Day | Details |
|---|---|---|---|
| 27 | 16 | வியா | [illegible] |
| 28 | 17 | வெ | [illegible] |
| 29 | 18 | சனி | [illegible] |
| 30 | 19 | ஞா | [illegible] |
| 1 | 20 | திங் | [illegible] |
| 2 | 21 | செ | [illegible] |
| 3 | 22 | புத | [illegible] |
| 4 | 23 | வியா | [illegible] |
| 5 | 24 | வெ | [illegible] |
| 6 | 25 | சனி | [illegible] |
| 7 | 26 | ஞா | [illegible] |
| 8 | 27 | திங் | [illegible] |
| 9 | 28 | செ | [illegible] |
| 10 | 29 | புத | [illegible] |
| 11 | 30 | வியா | [illegible] |
| 12 | 31 | வெ | [illegible] |
| 13 | 1 | சனி | [illegible] |
| 14 | 2 | ஞா | [illegible] |
| 15 | 3 | திங் | [illegible] |
| 16 | 4 | செ | [illegible] |
| 17 | 5 | புத | [illegible] |
| 18 | 6 | வியா | [illegible] |
| 19 | 7 | வெ | [illegible] |
| 20 | 8 | சனி | [illegible] |
| 21 | 9 | ஞா | [illegible] |
| 22 | 10 | திங் | [illegible] |
| 23 | 11 | செ | [illegible] |
| 24 | 12 | புத | [illegible] |
| 25 | 13 | வியா | [illegible] |
| 26 | 14 | வெ | [illegible] |
| 27 | 15 | சனி | [illegible] |

உ

ஸ்ரீராமஜயம்.


# கல்ப தரு.

KALPA THARU.

அறிவு வளர்ச்சிக்கான ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புஸ்தகம் 1. Vol. I. } பிங்களஹு புரட்டாசிமீ-SEPT., 1917. { ஸஞ்சிகை 7. No. 7.


# PART I.

## THE BRITISH ARMY—THE WAY OF THE RECRUIT.

## பிரிடிஷ் சைந்யம்—ரிக்ரூட் நடக்கவேண்டிய க்ரமம்.

(170-ம் பக்கத் தொடர்ச்சி.)

பாசறை விளையாட்டு.

இராணுவத்திற் சேரவிரும்பிய ரிக்ரூட்டானவன் முதன்முதல் மற்ற ரிக்ரூட்கள் இருக்குமிடம் வந்து சேர்ந்து, அவர்களுடன் கலந்து பழகவாரம் பித்த சில தினங்களுக்குப் பிறகு அவ்விடம் நடைபெறும் ஒவ்வொரு காரியமும் அவனுக்கு சகஜமாய்ப் போய்விடுகிறது. மற்ற ரிக்ரூட்கள் உடை தரிப்பதை யொப்ப இவனும் தரிக்க முதலிற் பழகவேண்டும். சாதாரண சட்டை நிஜார்போட்டுக் கொள்வதுதானே, அதிலென்ன சிரமம் இருக்கும் என்று நம் நண்பர்கள் நினைக்கக்கூடும். அது தப்பு. இன்னின்னவுடை இவ்விவ்விதம் இருக்கவேண்டுமென்று இராணு இலாகாதார் நிர்ணயித்திருக்கும் வண்ணம் ரிக்ரூட் உடைதரிக்கவேண்டும்; அதில் ஏதேனும் பிசகு ஏற்படுமேயானல் அவனுக்குத் தண்டனை விதிக்கப்படும். அங்ஙனம் விதிக்கப்படும் சிக்ஷைக்கு அவன் உட்பட்டே தீரவேண்டும். அவனது உடைகளுக்கு வேண்டிய சகலவிதமான உபக்கிரமங்களையும் ராணுவத் தையற்காரன் அளவு

பார்த்துச் செய்து கொடுத்துவிடுவான். க்வார்டர் மாஸ்டர் என்னும் ராணுவ உத்தியோகஸ்தரது பண்டசாலையிலிருந்து உடைக்கு வேண்டிய சகல சாமான்களும் தையற்காரனுக்கு அளிக்கப்படும். புதிதாக வந்த ரிக்ரூட்டின் அளவு பார்த்து தலைக் குல்லாய்முதல் காலில் அணியும் பூட்ஸ் வரையிலுள்ள சகல வுடைகளையும் ரிக்ரூட் பெற்றபிறகு, அவனுக்கு ஒரு சிறிய பை (a small kit) கொடுக்கப்படுகிறது. அப்பையில் பல்லுத் தேய்க்கும் ப்ரஷ் முதல் முக்கியமான வஸ்துக்கள் அடங்கியிருக்கும். வஸ்திரங்களை மாசு மருவில்லாது துடைப்பதற்குப் பிரஷ், பிளானல், தலைவாரிக் கொள்ள சீப்பு, முகம் பார்த்துக்கொள்ளக் கண்ணாடி, ஒரு துண்டு சோப், ஊசி, நூல் மற்றும் இவைபோன்றவை அதில் அடங்கியிருக்கும். இம்மாதிரி ஒவ்வொரு ரிக்ரூட்டுக்குமிருக்கு மாதலால் புதிய ரிக்ரூட் இச்சிறு பையைத் தன் அலமாரியில் வைத்துப்போகவோ அல்லது கட்டிலின்கீழ் வைத்துப் பூட்டியோ போகாது தனியேவிட்டு அசிரத்தையாக போவதுண்டு. யார் இங்கு வந்து இச்சாமான்களைத் தீண்டுவரென்பது அவனது அபிப்பிராயம்; ஆனால் அவன் நினைத்தபடிக்கிராது அவ்விடம் நிகழ்வது. ராணுவப் பயிற்சிக்காகவோ வேறெக் காரியத்திற்காகவோ அவன் போய்த் திரும்புவதற்குள் அவனுடைய சிறுபைச் சாமான்களுட் சிலவற்றை மற்ற நண்பர்கள் எடுத்தொளித்து விடுவதுண்டாம். இவன் வந்து தன் சாமான்கள் குறைந்திருப்பதைக் கண்டு திக்பிரமை கொண்டவன்போல் விழிப்பான்; இவனுடைய மனநிலையையும் வெருண்டு விழிக்கும் தன்மையையும் மற்றவர் பார்த்துச் சிறிதேனும் பச்சாத்தாபங் கொள்ளமாட்டார்கள்; அறைகுறையான வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு கொக்கரிப்பார்கள். காலக்கிரமத்தில் இப்புதிய ரிக்ரூட்டுக்கு அநேகமாதிரியான பழக்கங்கள் மேலிட்டு 'கொண்டதே காட்சி, கண்டதே கோலம்' என்றவாறு பாசறையிற் காலங்கடத்தி வருவான். சிறிது சிறிதாகத் தனக்கு அவசியமாயுள்ளவைகளைக் காத்துக் கொள்ளும்வகையறிந்து, நடக்க வாரம்பிக்கும் 'ரிக்ரூட்'டிற்கு அவனுடைய நண்பர்களது நடையுடைபாவனைகள் படிகின்றன. பாசறையில் எவனும் தன் நண்பரது முழுப்பெயர்வைத்துக் கூப்பிடுவது கிடையாது. நமது வீடுகளில் செல்லப்பெயர்களாகவாவது சுருக்குப் பெயர்களாகவாவது கருதி 'லக்ஷ்மி' என்றிருப்பதை 'எச்சு' வென்றும், 'ஸ்ரீனிவாஸன்' என்பதை 'சீசு' அல்லது 'சீமா' வென்றும், 'கிருஷ்ணன்' என்பதைக் 'கிட்டு' வென்றும் எப்படி அழைக்கிறோமோ அப்படியே பாசறை நண்பர்களான ரிக்ரூட்டுகள் தத்தம் நிஜப்பெயர்களை மாற்றி சார்லி, கோபி, ஜாக், பெட்லார், என்றிவ்விதமாக அழைத்துக்கொள்வது வழக்கம். இன்னு மிவைபோன்ற பல விளையாட்டுகளுமுண்டு.

### ரிக்ரூட்டுக்குக் கிட்டும் கைக்காசுத் தமாஷா.

பாசறைக்குள்ளாக ரிக்ரூட்டுகளுக்கென்று தனியே யமர்த்தப்பட்டிருக்கும் நீண்ட அறைக்குள்ளாகத் தான் மேலேசொன்னவாறு வேடிக்கை



களும் விளையாட்டுகளுமாகக் காலம் கழிக்கப்படுமென்று நமது நண்பர் நினைக்கவேண்டாம். இவர்கள் ஆடுவதைத் தம்மோடுமட்டும் வைத்துக் கொள்வது கிடையாது. தம் ரெஜிமெண்டிற்குத் தலைவராகவுள்ள ஆபீசருக்கும் ஏதாவது பெயர் கொடுத்து விடுவார்கள். அவ்விதம் ரெஜிமெண்டல் ஆபீஸருக்குப் பெயர் கிடைத்துவிடுமே யானால், அவ்வாபீஸர் மீது ரிக்ரூட்டுகளுக்கு அதிருப்தியோ அல்லது வெறுப்போ ஏற்பட்டிருப்பதாக அர்த்தம். உருவத்திற் பெருத்து மூளை குன்றியிருந்தாலும் சரி, மெலிந்த சரீரத்தோடும் பேச்சுத் துடுக்கோடுங்கூட விருந்தாலும் சரி, 'டப்பர்,' 'பௌன்ஸர்,' 'பல்கி' என்றிவ்விதமாக விளையாட்டுப் பெயரிட்டு ரிக்ரூட்டுகள் தமக்குள்ளாகப் பேசி ஹாஸ்யஞ்செய்வதுண்டு. ஸோல்ஜருக்கு வேண்டிய சகல பயிற்சிகளல்லாது புதிதாக வந்து சேர்ந்த ரிக்ரூட்டை மற்றையோர் வேறு விதமான தமாஷாவுக்கு உட்படுத்துவதுண்டு. இது பெரும்பாலும் குதிரைப் படையில் (Cavalry regiment) தான் அதிகம். ஒவ்வொரு ரிக்ரூட்டிற்கும் அவனது ஸர்விஸ் ஆரம்பமாகுங் காலத்தில் மற்றவர்கள் ஒன்று சேர்ந்து அப்புதியவனைப் பலவகைப்பட்ட தமாஷாக்களுக்கு 'உட்படுத்துவார்கள். 'ஜோடு துடைக்கூலி' (shoeing-money) யென்னும் ஒருமாதிரியான பணங் கொடுப்பது வழக்கம்; 'நீபோய் பெர்ரியர்மேஜரைக் கேள்' என்று ஒரு ரிக்ரூட்டைப் பார்த்து ஒரு ஸோல்ஜர் சொன்னால், மற்றவர் அனைவரும் "ஆம் ஆம், அது மெய்தான். சீக்கிரம் சென்று காசுகொண்டுவா" என்று கத்துவார்கள். புதிதாகச் சென்றவனுக்கு என்ன தெரியும் பாவம்! உண்மையென்று நினைத்து சீக்கிரம் உடைதரித்து மேஜர் என்னும் ஆபீஸரிடம் செல்வான்; ரிக்ரூட்டைத் தமாஷாவுக்காக அவனது நண்பர்கள் அனுப்பியிருப்பதை மேஜர் அறிந்துகொண்டு புன்னகையுடன் 'ஆர்டர்லி-ஸார்ஜண்ட் என்ற உத்தியோகஸ்தர் அம்மூலையறையிலிருக்கிறார், அங்குபோய்க் கேளெ'ன்று தட்டிக் கழித்துவிடுவார், அவ்விடம் தள்ளாடித் தள்ளாடி ரிக்ரூட்டானவன் சென்று செய்தியைச் சொல்லுவான்; ஆர்டர்லி சார்ஜண்டிற்கு இத்தமாஷா புதிதல்லவாதலால், அவர் இந்த ரிக்ரூட்டை 'ப்ரொவோஸ்ட்' ஸார்ஜெண்டிடம் அனுப்புவார். இம்மாதிரியாக இடம்விட்டு இடமாக இவன் அலைந்துகொண்டிருப்பதுதான் இறுதியில் பிராப்தமாகுமேயல்லாது வேறொரு பயனையும் இவன் அறியமாட்டான். பாசறையில் நடக்கும் மற்றோர் 'ஜோக்கு' இன்னும் வேடிக்கையாகவிருக்கும். புதிதாக வந்த ரிக்ரூட்டைப் பார்த்து 'ஸ்பூனுக்குத் தகுந்தாற்போல உன்வாய் அளவெடுக்கப் படவேண்டும்; க்வார்டர்மாஸ்டரிடம் போய்வா'வென்று சொல்லுவதுண்டாம்; இவனென்னத்தைக் கண்டான் பாவம்! நிஜந்தானென்று செல்லுவான். போனவிடத்தில் அவனுக்கு நடக்கும் பரிகாசத்தையும் மற்றுமுள்ள தமாஷாக்களையும் பார்த்து எல்லோருந் தன்னை முட்டாளாக்க நினைத்ததைக் கருதி வருந்தித் திரும்புவான். இம்மாதிரியான பாசறைத் தமாஷாக்கள் எவ்வளவோ உண்டு.

# PART II.

## ஆரோக்கிய விமர்சனம்.

### நித்திரை.

BY K. P. SESHADRI AIYANGAR,
(*Teacher, Muthiyalpet High School, Madras.*)

(172-பக்கத் தொடர்ச்சி.)

சிலர் தூங்கும்போதெல்லாம் தங்கள் கைகால்களை உதைத்துக் கொள்கிறார்கள். இவர்கள் படுப்பது தூங்குவதற்கல்ல. குஸ்தி செய்ய என்ற எண்ணத்துடன் தூங்குகிறார்கள் போலும்.

தூக்கம் பிடிப்பது ஒருவனுக்கு அவனுடைய தேகஸ்வபாவம், தேக முயற்சி, சிரமம் இவைகளைப் பொறுத்ததாக விருக்கிறது. சிலர் வழக்கப்படுத்திக்கொண்டு படுத்ததும் தூங்கிவிடுகிறார்கள். ஆனாலிதுமட்டும் நிச்சயம். எவ்வளவுதூரம் வழக்கத்திலிருந்த போதிலும் நாம் எப்போது கண்ணை மூடிக்கொண்டு தூங்க வேண்டுமென்று பிரயத்தனம் பண்ணுகிறோமோ அப்போது தூக்கம் வருவதேயில்லை. எப்போது நாம் தூங்கக்கூடாது என்று பிரயத்தனப்பட்டு விழிக்கமுயலுவோமோ அப்போதே நம்மையறியாமலே தூக்கம் வந்துவிடுகிறது. ஆகையால் தூங்க வேண்டுமென்று எண்ணுகிறவன் தூங்க முயலக்கூடாது.

### நித்திரையா லெய்தும் பயன்.

நாம் மெய்ம்மறந்து தூங்கும்போது நமது தேகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு உறுப்புகளும் அவைகள் செய்யுந்தொழிலிலிருந்துகொண்டு சரியாய்த் தங்கள் காரியத்தைச் செய்கின்றன. சிரமபரிகாரத்தையு மடைகின்றன. மனதும் புத்தியுமட்டும் சரீரத்தைவிட்டு எங்கேயோ ஓடிவிடுகின்றன. மற்றைய உறுப்புகள் படுத்தபடி தங்கள் வேலையைச் சரிவர நடத்தும்போது மனமும் புத்தியும் இப்படி ஓடிவிடுகின்றன. தூக்கத்தில் தேக உறுப்புகள் தங்கள் தங்கள் காரியத்தைச் செய்கின்றன என்று சொன்னோமே, எந்தெந்த உறுப்புகள் என்னென்ன வேலையைச் செய்கின்றன? ரத்த ஓட்டம் விழித்திருக்குங் காலத்தில் தேகத்திலெப்படி நடந்து வந்ததோ அந்தப்படியே தூங்கும்போதும் நடக்கிறது. ஆனால் பகலில் நாழிகை ஏற ஏற அதுவேகமாக ஓடுகிறது. இரவிலோ அது வெகு நிதானமாயும் மெதுவாகவும் நடக்கிறது. இப்படி இவ்விரண்டும் நடந்தபோதிலும் இவைகள் அதிக புஷ்டியும் பலமுமடைந்த மனிதனுக்கு சுகத்தைக் கொடுக்கும். ஒவ்வொரு அவயவமும் தூக்கத்தில் அதிக பலத்தைப் பெறுகிறது. ஜீரணம் அதிக பலமாய் நடக்கிறதும் தூங்கும் போதுதான். தூக்கத்தில் தேகத்திலிருந்து



மேல்தோல் வழியாய்வரும் வியர்வை ஒன்று நீங்கலாக மற்றவித நீர்வடிகள் குறைவாக நடக்கும். நித்திரையால் கண்களுக்குண்டாகும் சுகத்தைச் சொல்லமுடியாது. நமதிருநயனங்களும் நமக்குபயோகப்படுவது தூக்கத்தாலன்றி வேறல்ல. ஈசுவரனமைப்பில் கண்கள் வெகு ஆச்சரியகரமானவை. வெகு அற்புதமான ச்ருஷ்டி. திடீரென்று வெளிச்சத்திலிருந்து இருட்டிற்காவது அல்லது இருட்டிலிருந்து வெளிச்சத்திற்காவது நமது கண்களை நாம் திருப்பினால் அவைகள் ஒருவித அதிர்ச்சியடையாமலிருக்கும் பொருட்டே ஈசன் பகலிலிருந்து இரவு வரும்போதும் இரவிலிருந்து பகலுண்டாகும் போதும் 'ஸந்தி' என்ற எழுத்து மறையும் வேளையையும் கொடுத்திருக்கிறார்.

### தூங்குவதற்கு யுக்தமான காலமேது?

நடுராத்திரிக்கு இரண்டு மணிக்கு முன்னதாகவே எப்போதும் தூங்கச் செல்லவேண்டும். நடுராத்திரிக்கு முந்தி 1-மணி தூங்கும் தூக்கம் நடுராத்திரிக்குப் பிந்தி 2-மணிநேரம் தூங்கும் தூக்கத்திற்குச் சமானம் என்று அநேக பாஷைகளில் பழமொழிகளிருக்கின்றன. இப்படிக்கில்லாமல் சிலர் கூத்திலும் ஆட்டத்திலும் படிப்பிலும் செலவிட்டு விடியற்காலமாயும் தூக்கத்தில் செலவிட்டு காலைவேளையில் தூங்குகிறார்கள். இவர்கள் தேகத்தில் ஆரோக்யம் கிடையவே கிடையாது. இராப்போஜனம் அதிகமாக விருக்கக்கூடாது. இரவில் நன்றாகத் தூங்கி விடியற்காலத்தி லெழுந்திருப்பது சுகத்தைக் கொடுப்பதல்லாமல், நீடித்த வாழ்நாளைக் கொடுப்பதாக அநேக வைத்தியர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ப்ரஷ்யாவில் (Persia) ப்ரேடரிக் (Frederick II) என்னும் ராஜனிருந்தான். அவன் தனது ராஜகார்யங்களைத் தானே நேரில் பார்ப்பது வழக்கம். இப்படியவன் செய்ததற்கு முக்கிய காரணம் தான் விடியற்காலத்துக்கு ஒரு முகூர்த்தம் முன் எழுந்திருப்பது ஸகாயமாக விருந்தது. தான் என்றைக்காவது அதிக நாழிகை தன்னையுமறியாமல் தூங்கிவிடாமலிருப்பதற்கு ஒரு வீரனை தன் படுக்கையறையண்டை காவல் வைத்திருந்தான். அவன் தன்னை எழுப்பத்தவறினால் சிரச்சேதம்தான் தண்டனை என்று திட்டம் செய்திருந்தான். ஒருநாள் ஒரு சிறு பையன் தன் படுக்கையறையண்டை காவல் இருக்க நேரிட்டது. அரசன் விடியற்காலத்திற்கு முன் எழுந்திராததால் அச்சிறுபையன் படுக்கையண்டைவந்து "மகாராஜா எழுந்திரும். விடியற்காலமாகிவிட்டது" என்று தைரியமாகச் சொன்னான். அதற்கு பதில் அரசன் "இன்றைக்குச் சிரமமாக விருக்கின்றது. ஹே! பாலகா! நான் கொஞ்சம் $\frac{1}{2}$ நாழி தூங்குகிறேன். கொஞ்சம் தூங்கவிடு என்று கேட்டுக்கொண்டான். அதற்கு அந்தப்பையன் இனி தூங்கக்கூடாது. நீர் எழுந்துதான் தீரவேண்டும் என்று கடினமாகத் திட்டம் செய்தான். பிறகு அரசன் எழுந்திருந்து அந்தப் பையனை மெச்சினான். அப்படி விடியற்காலத்தில் எழுந்திருப்பதால், தானே ராஜகாரியங்களை நேராகச் செய்தான் என்று சரித்திரங்கள் கூறுகின்றன. (தொடரும்.)

# PART III.

## KNOWLEDGE ON AGRICULTURE, etc.

BY Mr. G. RAJAGOPAL,
*Late Editor, "South Indian Agriculture."*

## விவஸாய ஞானம்.

(174-ம் பக்கத் தொடர்ச்சி.)

### செடிகள் எப்படி ஆகாயத்தைப் புசிக்கின்றன.

பசுமை செடியில் இல்லையானல் மாவு (Starch) உண்டாகாது. ஐயோடின் (I-odine) என்னும் மருந்தால் எந்தப் பதார்த்தத்திலும் மாவுகலந்து இருப்பதை கண்டுபிடிக்கலாம். மாவிருந்தால் அது நீலமாகவும் தீய்ந்த செகப்பு (Brown) நிறமாகவும் இருக்கும். நெய் வெண்ணெய் பால் சர்க்கரை இவைகளில் மாவுகலந்து மோசம் செய்வது இம்மருந்தால் கண்டுபிடிக்கலாம். சில செடிகளில் ஒருபாகம் சில வெளுத்தும் ஒருபாகம் பசுமையாயும் இருப்பதுண்டு. வெளுத்த பாகத்தை ஐயோடின் மருந்தால் தொட்டுப் பார்க்க மாவில்லையென்று தெரியும். அப்படியே பசுமை பாகத்தை பரீக்ஷிக்க நீல நிறமாகும். ஒருதரம் மாவு இலையில் உண்டானல் அது சர்க்கரையாகி வேறு இடத்தில் போகவும் அங்கே மறுபடியும் மாவுஆகமாறி சேரும். கிழங்குகளிலும் விதைகளிலும் இவ்வாறே. இலைகளில் உண்டான மாவு தண்டு வழியாய்போய் வேரில் மறுபடியும் மாவாகிறது. இந்தரசம் இனித்திருப்பதால் அனேக மரங்களில் வெட்டின உடனே பூச்சி விழுந்து உளுப்பதற்கு காரணம். தென்னை பனை ஈச்சு இவைகளில் சர்க்கரை அதிகப்பட்டிருப்பதால் இவ்விரசம் முதலில் இனிப்பாக இருக்கும். இதில் வெல்லம் எடுப்பதுண்டு.

இருட்டில் செடிகள் பச்சை கொள்வதில்லை. வீட்டுக்குள் வைத்த கருணை, சேமை; வெங்காயம், உருளைக்கிழங்கு முதலியன முளையுருவி வெள்ளையாய் முளைப்பதுண்டு. கிழங்கில் மாவு செலவாகும் வரையில் ஓங்கி மெலிந்து வளரும். பிறகு சோய்ந்து மாண்டுபோம். சூரிய வெளிச்சம் பட்டால் கரியமிலவாயு கலந்த காற்று இலைக்குள் போய் பசுமையும் மாவும் உண்டாகும்.

செடிகள் பகலில் ஆகாயத்தைச் சுத்தம் செய்வதாக அறிகிறோம். கரியமிலவாயு, கரியும் பிராணவாயுவும் கலந்த காற்று இலை பச்சைமணிகளில் இவ்வாயு சேர கரியணு செடியிலே நின்று பிராணவாயு வெளிப்படுகிறது. மிருகங்கள் பிராணவாயுவை உட்கொண்டு கரியமிலவாயுவை வெளிவிடுகின்றன. செடிகளோ ஜீவராசிகளுக்கு உபகாரமாக இருக்க கரியமிலவாயுவை உட்கொண்டு பிராணவாயுவை வெளிவிடுகிறது. காற்றில் கண்



ணுக்குத் தெரியாமல் இருக்கும் கரியணு செடிகளில் கடினமுற்ற கரியாக மாறுவதின் ஆச்சரியம் எத்தனை பேருக்குப் புலப்படுகிறது. சூரிய கிரணத்தில் வரும் சக்தியைப் பிரயோகித்து வேரினல் வரும் ஜலத்திலுள்ள பிராணவாயு ஜலவாயுக்களுடன் கரியணு கலந்து மாவு ஆகிறது. இலையின் பசுமை கருமைக்கு ஒத்து இருப்பதால் சூரிய வெப்பம் சீக்கிரம் கிரகிக்கப்படுகிறது. கருப்புக்கு சூடுகிரகிக்கும் சக்தி அதிகம். வெயில் காலத்தில் கருப்புச் சொக்காய் அணிந்தவர்களுக்கும் கருப்பு குடை பிடிப்பவர்களுக்கும் இது விஷயம் புலப்படும். மாவு முதலில் உண்டாகி, செடிக்கு ஆதாரமாகிய கிளை, கொம்பு, பட்டை, நார், பிசினி, சர்க்கரை முதலியவைகள் உண்டாகின்றன. இலையின் வேலை மனித மிருகங்கள் ஜீவிப்பதற்கு ஆதாரமாக இருக்கிறது.

மாவு (C. H. O. 105) கரியணு பிராணவாயு ஜலவாயு இவைகளால் சேர்க்கப்பட்ட வஸ்து. நார், சர்க்கரை, தைலம் இது போன்றவஸ்துக்களே. கரியமில வாயுவிலுள்ள கரியணுவும் பிராண்வாயுவும் சலத்திலுள்ள பிராணவாயு ஜலவாயு இவைகளுடன் கலப்பதில் மாவு (Cb. H. 1005) உண்டாகி மிச்சமான பிராணவாயு வெளிப்படுகிறது. ஆகவே வெயிலில் அடிப்படும் இலையில் மாவு உண்டாகிறது. இருட்டில் அவ்வாறு உண்டாவதில்லை டின்சர் ஐயோடின் மருந்தைச் சலத்தில் கலந்து ஒரு துளியை மாவு அல்லது ஒடித்த கிழங்குவாயில் ஊற்ற நீலமாகவாவது தீய்ந்த செவப்பு நிறமாகவாவது நிறம் மாறும். இலைப்பச்சையைச் சாராயத்தில் எடுத்து அதில் இம்மருந்தைச் சேர்க்க ஷை நிறம் காணும்.

இருட்டில் இரண்டு நாள் வைத்திருந்த பச்சிலையின் பகலில் அம்மாதிரியே மருந்து சேர்க்க நிறம் மாறுவதில்லை. ஏனெனில் இருட்டில் மாவுண்டாவதில்லை. பின்னும் ஒரு சடையை இரண்டு துண்டாக குறுக்கே துண்டித்து 24-மணிநேரம் இருட்டில் வைத்த இலைக்கு இருபுறத்தில் இரண்டு துண்டுகளையும் ஒரே இடத்தில் தைத்து மறுபடியும் வெயிலில் காலையில் போட்டு இவ்விலையை மத்தியானம் சாராயத்தில் துவைத்து பசுரை வெளிப்படுத்தி சடையைநீக்கி ஐயோடின் மருந்தை ஒரு பொட்டு விட்டுப் பார்க்க சடை இருந்த இடம் தவிர மற்ற இடத்தில் நிறம் மாறும். ஏனெனில் இருட்டில் மாவு வெளிப்பட்டு போயிற்று.

இவ்வாறு உண்டாகும் மாவு சிறு மணிகளாக இருக்கும் செடிகள் வளர்வதற்கு இது வெவ்வேறு இடத்திற்கு சர்க்கரையாகிப்போகும். நமது வாயில் மாவு சர்க்கரையாக மாறுவதுபோலவேயாம். இவ்வினிப்பு செடியின் எல்லாபாகப் போஷிப்புக்கு உதவுகிறது. இவ்வினிப்பு ரசம் பட்டையின் உட்புறத்தின் வழியாய்க் கீழே வேருக்குப் போவதுண்டு. வெட்டின மரம் உளுப்பதற்கும் கள் இனிப்பாக இருப்பதற்கும் இதுவே காரணம்.

(தொடரும்.)

## COMMERCE AND INDUSTRY.

## வர்த்தகமும் கைத்தொழிலும்.

### இந்தியாவிற் கனிகள்.

பூத பௌஷ்ய ரசாயன சாஸ்திராதிகள் மிகுந்து, அவைகள் மூலமாக தாதுப் பொருள்களும் உலோகப் பொருள்களும் பூவுலகில் அபரிமிதமாக நடைமுதற்பழக்கத்திற்குவர முக்கியமான காரணம் என்னவாயிருக்கலாமென்று நாம் ஒருவாறு ஆலோசிப்போமாயின், இயற்கையாயிருப்பதைச் செயற்கையாயாக்கும் தீவிரமான புத்தியே யென்பது எவர்க்கும் நன்றாகப் புலப்படும். காலவேறுபாட்டினால் கரை கடலாவதும், கடலில் திடீரெனத் திட்டு தோன்றுவதும், திட்டாயிருப்பது குபீரென்று கடலுக்குள் மூழ்குவதும் மற்றும் இவைபோன்ற மாறுபாடுகள் தினந்தவறாது இங்கு நடந்தது அங்கு நடந்தது என்று பற்பல வகைகளாக நமது செவிகளில் விழுந்துகொண்டிருக்கின்றன. இடவேறு பாடுகளினால் செயற்கையானுபவங்கள் வேறுபடுவதை யொப்ப சாஸ்திரீய முறைகளின் உதவியால், நாம் முதன் முதலிற் குறித்தவண்ணம், சாதகக் கருவிகளே பூவுலகத்தில் பெருகிப் பலன் தருவதற்குக் காரண பூதங்களா யிருக்கின்றன. அவைதான் சுரங்கமெனப் படுவதும் கனி யெனப்படுவதும்.

நாம் வஸிக்கும் இப்பரதகண்டத்தில் எத்தனையோ சுரங்கங்கள் இருக்கின்றன. ஸர்க்காரால் அங்கீகாரமான சுரங்கங்களைப்பற்றி மட்டும் இப்போது பேசுவோம். இந்தியா முழுவதிலுமுள்ள சுரங்கங்களைக் கணக்கெடுத்துப் பார்ப்பதில் பலனொன்றுமில்லை. பிரைவேட்டாக வேலை செய்யப்படும் கனிகளின் விவரம் ஒருபுற மிருக்க மற்றோர் புறத்தில் ஸர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் சுரங்கங்களில் மட்டும் தினசரியில் 1,97,919 பேர்களுக்குக் குறைவில்லாது வேலைசெய்துகொண் டிருந்ததாகத் தெரியவந்தது. பிரிடிஷ் இந்தியாவைப் பொறுத்தமட்டில் தான் மேற்சொன்ன கணக்கைக் கொள்ளவேண்டும். கோலாறில் பற்பல கனிகளிருக்கின்றன; அவைகளில் எத்தனையோ பேர் வேலை செய்கிறார். ஆனால் கோலாறு சுரங்கம் பிரிடிஷ் இந்தியாவுக்குள்ளடங்கிய கனிகளோடு சேர்க்கப்படவில்லை. இந்தியாவிற் சுரங்கவேலைக் கிடமுண்டா வென்பதை யாராயு முத்தேசத்துடனேயே நாம் இவ்வியாசத்தை யெழுதலானோம். தேசத்தில் தொழிலில்லாது வெளிநாடு சென்று குபேரசம்பத்தோடு போகலாமென்று மனோராஜ்யமாடும் இந்திய மகா ஜனங்களுட் பலர் தமது ஜன்மபூமியாம் இவ்விந்தியாவினிடத்துச் சிறிது கண்ணோட்டம் வைத்துத் தீர்க்காலோசனை செய்வதனால் பலிதமுண்டாகக் கூடும். சுரங்கத் தொழில் இந்தியாவிலே இன்று நேற்று ஏற்பட்டதல்ல; பிராசீன காலத்திருந்தே கனிகளின் பிராதான்யத்தை



ஜனங்கள் உணர்ந்து தனியாகவேனும் கூட்டமாகவேனும் முயற்சித்து வந்திருக்கிறார்கள். மேற்கு ஜில்லாக்களைச் சேர்ந்த வைநாட்டிலும், கபதிநதிதீரத்திலும், மற்றும் ராஜபுதனக் காடுகளிலும் இன்றும் கனிகளுக்குரிய அறிகுறிகளைக் காணமுடியும். கோல்கொண்டா சமஸ்தானத்தில் வைரக் கல்லுகள் சுரங்கங்களிலிருந்து வெட்டி யெடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போது வைரக்கல்லுகள்காணப்படாவிடினும் ஓரோரிடத்தில் மாணிக்கக்கல்லுகளும், நீலக்கற்களும் கோமேதக புஷ்பராகங்களும் அவ்வப்போது ஆங்காங்கிருந்து வெட்டி யெடுக்கப்படுவதாகக் கேள்விப்படுகிறோம். ஒளிவீசுங்கற்கள் நதிகளிலும் வேறிடங்களிலும் பொறுக்கி யெடுக்கப்பட்டு சாணைக்காரரால் தீட்டப்பட்ட பிறகு அவைகளுக்கு ஒருவித உயர்வு ஏற்படுகின்றது. இது நிற்க, புதிதாக நிலக்கரிக் கனிகளும் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. சென்ற வருஷத்தில் மாத்திரம் 160 லட்சம் டன் எடையுள்ள நிலக்கரிகள் வெட்டி யெடுக்கப்பட்டிருக்கின்றன. நிலக்கரிப் பஞ்சமென்று உலகமெல்லாம் பெருங் கூக்குரல் எழுப்பப்படுமிச் சமயத்தில் இந்தியாவின்கண் நிலக்கரி ஏராளமாயகப்படுவது ஓரதிர்ஷ்டமே யல்லவா; ஊக்கமிருந்தால் உழைப்புண்டு; உழைப்பிருந்தால் பிழைப்புண்டு. இதை யறியாது இந்திய நண்பர்களுட் பெரும்பாலர் தத்தம் குஞ்சுகுழந்தைகளை விட்டு வெளிதேசம் போக வழி தேடிக்கொண்டிருப்பது பெரிதும் பரிதபிக்கத்தக்கது. யந்திர விசைகளும் சாஸ்திரீய விற்பன்னர்களும் மலிந்து கிடக்கும் இக்காலத்தில் இயற்கைப் பொருளைச் செயற்கைப் பொருளாக்குவது ஒரு கடினமல்ல. மேற்குறித்த சுரங்கத் தொழில் புரிவோரான 1,97,919 பேர்களில் 1,27,289 பேர்கள் பூமியின் அடிப்புறத்தில் (underground) வேலை செய்பவர்களாம். சுரங்கத் தொழில் பெருத்த அபாயகரமானதென்பதை யெவரும் மறுக்கமாட்டார்கள்; என்றாலும் சென்ற வருஷக் கணக்கை யெடுத்துக் கவனிக்கையில் 66855 மாதர்களும் 6274 பால்யர்களும (12-வயதுக் குட்பட்டவர்கள்) பூமிக்குக் கீழ்சென்று சுரங்க வேலை செய்திருப்பது ஆச்சரியந்தான். சூரிய வெளிச்சம் படுமிடத்திற்குச் சற்றேறக்குறைய 1000 அடிகளுக்குக் கீழ்டன்னல் என்று சொல்லப்படும் வளைவான கணவாய்போன்ற. குழாய்களில் சிறுவர்போய் வேலைசெய்வதென்றால் உயிரைத் திருணமாக நினைத்தன்றோ விருக்கவேண்டும். துராகிருதஞ் செய்யும் ஜாதியாரை (Criminal tribesmen)ச் சுரங்கவேலைகளில் மதிராஸ் கவர்ன்மெண்டார் விட்டுப் பார்த்தார்கள். அது பலிதமாவதாகத் தோன்றவில்லை. திருட்டுத் தொழிலில் கவனஞ் செலுத்தும் துராகிருத வகுப்பினர் சுரங்கத்தினுட் சென்றதும் சிரமப்பட்டு வேலைசெய்வது ஸாத்தியமா? அல்ல. ஆனால் சுரங்கவேலையினால் பெருத்த லாபம் மட்டும் உண்டு; ஒரு வாகன் நிலக்கிரி ஆயிரம் ரூபா என்றால், ஒரு நிலக்கிரிச் சுரங்கத்திலிருந்து எவ்வளவோ வாகன்கள் நிலக்கரி யெடுக்கலாம்; ஆகலால் தொழிலுக்குத் தொழிலும் பணத்துக்குப் பணமும் கொடுக்கக்கூடிய சுரங்கத்

தொழிலை நம்மிந்திய ப்ராதாக்கள் அதை அசட்டை செய்யலாகாது; பொருளாதாரத்திற்கு இன்றியமையாச் சாதனங்களோடுகூடின கனிகளை நாளாவர்த்தியில் நம்மிந்திய வியாபாரிகளும் தனிகர்களும் கல்விமான்களும் ஒன்று சேர்ந்து வேலை செய்ய ஆரம்பிப்பார்களாயின், பெரும் புகழும் அடைய மார்க்கமுண்டு; கல்கட்டாவைச் சேர்ந்த ஸிப்பூர் கலாசாலையில் கனிகளில் வேலை செய்யக்கூடிய வகைகள் யாவும் கற்பிக்கப்படுகின்றன. பிரதி வருஷத்திலும் அவ்விலாகாவை யணுகிய துறையில் இந்தியராயினோர் முயன்று முறைப்படி கல்வி கற்றுவருமிடத்து அமெரிகா ஐக்கிய மாகாணங்களில் அநுஸரிக்கப்படும் சுரங்கவேலைகளை யொப்ப இந்தியாவிலும் சுரங்க வேலைகள் முதுமைபெற்றுச் சீரடைய ஹேதுவுண்டு.

---

# PART IV.

## HINDU LAW.

## ஹிந்துலா.

(178-ம் பக்கத் தொடர்ச்சி.)

கே.—விவாகம் முடிந்தவுடன் தன் பெண்ஜாதி ருதுவிட்ட ப்ரௌடையாகாத பெண்ணை புருஷன் தன்கூட அனுப்பிவிடும்படி பெண்ணின் பெற்றோர்களை கட்டாயப்படுத்த புருஷனுக்கு பாத்தியதை உண்டா?

ஜ.—அப்படி அனுப்பும்படி கட்டாயப்படுத்த புருஷனுக்கு பாத்தியதை கிடையாது (17 கல். 298; 24 ம. 255; 23 ஸதர்லண்டு வீக்லி ரிப்போர்டர் 178.)

கே.—பெண்ஜாதியானவள் ப்ரௌடையான பிறகு புருஷன்கூட இருக்க மாட்டேனென்று சொல்லலாமா? அல்லது அவள் புருஷனோடு கூடவே யிருக்கக் கடமைப்பட்டிருக்கிறாளா?

ஜ.—பக்குவவதியான பிறகு பெண்ஜாதியானவள் புருஷன்கூட வசிக்க கடமைப்பட்டவளாகிறாள். (11 மூ-இ-அ. 551; 28 கல். 751.) அவளை சம்ரக்ஷணை செய்ய புருஷனும் கடமைப்பட்டிருக்கிறான். (13 அல. 126.)

கே.—மேலே பெண்ஜாதி புருஷன்கூட இருந்து வசிக்க கடமைப்பட்டிருக்கிறதாகச் சொன்னீர்கள். ஆனால் புருஷன் வேறு பெண்ஜாதியை மணம்செய்து கொள்ளுகிறான், அல்லது வைப்புவைத்துக் கொள்ளுகிறான், அல்லது புருஷன் அங்கஹீனனாய் விடுகிறான், அல்லது கொடிய வியாதியஸ்தனாய் விடுகிறான், அல்லது சம்போகஞ்செய்ய சக்தியற்றவனாய் இருக்கிறான். இப்பேர்ப்பட்ட கேசுகளில் பெண்ஜாதி புருஷனை விட்டு விலகியிருப்பதற்கு போதுமான காரணங்களா யில்லையா?



ஜ.—ஷை காரணங்கள் பெண்சாதி புருஷனை விட்டு விலகியிருப்பதற்கு போதுமான காரணங்களாகமாட்டாது. (1 ம-ஹை-கோ-ரி. 375; 10 பம். 301., 13 அல. 126. 17 ம. 260: 20 ம. 470. 19 கல். 84; 21 பம் 610.)

கே.—புருஷன் தாசியை வீட்டிலே வைத்துக்கொண்டு அவளோடு ஸம்ஸர்க்கம் செய்துகொண்டிருக்கிறான். இந்த கேசில் புருஷன்கூட வசிக்க மாட்டேனென்று அவள் சொல்லலாமா?

ஜ.—தாசியை வீட்டில் வைத்துக்கொண்டிருந்தாலும் பெண்சாதியை உபத்திரவம் செய்யாவிட்டால் அவனை விட்டு விலகியிருக்க அவளுக்கு அதிகாரமில்லை. (1 ம-ஐ-கோ-ரி. 376.)

கே.—பெண்சாதி புருஷனைவிட்டு நீங்குவதற்கு போதுமான காரணங்கள் தான் எவை?

ஜ.—(1.) புருஷன் மதப் பிரஷ்டனாய்ப் போய்விடுகிறான். (2.) அவனுடைய தாய் சகோதரிகள் முதலியவர்கள் பெண்ணை (அவன் பெண்சாதியை) அடித்து நிர்ப்பந்தம் செய்கிறார்கள். (3.) புருஷன் கெட்ட தொத்து வியாதியினால் அவஸ்தைப்பட்டு பெண்சாதி சமீபத்திலிருந்தால் அவளுக்கு ஷை வியாதி அணுகி பிராணாபாயம் உண்டாகும் என்று தோன்றுவது, இப்பேர்ப்பட்ட விஷயங்களில் பெண்சாதி புருஷனை விட்டு நீங்கிவிடலாம். (11. மூ-இ:அ 126; இ-லா-ரி. 1 பம் 364; இ-லா-ரி. 5 கல 500; இ-லா-ரி. 13 அ 126.)

மகம்மதிய-கிருஸ்துவ முதலான அன்னியமத ஸ்திரீகளையாவது நீச ஸ்திரீகளையாவது வைப்பாக வைத்திருப்பவன் ஹிந்து தர்ம சாஸ்திரங்களின்படி மதப் பிரஷ்டனாய் விடுகிறான். ஆகையால் அவனுடன் ஹிந்து மதப் பெண்சாதிகூட இருக்கமாட்டேனென்று சொல்லலாம். (14 ஸதர்லண்டு வீக்லீ ரிப்போர்டர் 145; 6 அல. 617).

ஒருவன் தன் பெண்சாதியை யெப்பொழுதும் கொடூரமாய் நடத்தி அவளை இம்சை செய்துவருகிறது (2) புருஷன் தன் ஜீவனுக்கே ஹானி செய்வானென்றபயம் அவனுடைய மூர்க்கமாயும், குரூரமாயும் உள்ள செய்கைகளால் அவளுக்கு உண்டாவது-இப்பேர்ப்பட்ட கேசுகளிலும் பெண்சாதி புருஷனை விட்டு விலகியிருக்கலாம். இப்படி சரியான காரணங்களின் பேரில் பெண்சாதி புருஷனை விட்டு விலகியிருந்தால் அவளுக்கு தனி ஜீவனாம்சம் புருஷனிடத்திலிருந்து கிடைக்கும். (19 கல் 84; 1 பம் 164; 11 மூ.இ.அ. 551; 13 அல 126; 5 கல் 500).

கே.—ஒரு ஹிந்து ஜாதிப் பிரஷ்டனாய் விடுகிறான். அவன் தன் பெண்சாதியை தன் வசப்படுத்திக்கொள்ள வியாஜ்ஜியம் செய்ய அவனுக்கு பாத்தியதையுண்டா?

ஜ.—அப்படி வியாஜ்ஜியம் செய்ய அவனுக்கு பாத்தியதையில்லை. (5 ஸதர்லண்ட் வீக்லீ ரிப்போர்டர் 235.)

கே.—பெண்சாதி ஜீவனாம்சத்தை யிழந்து விடுவதற்குரிய காரணங்களென்ன?

ஜ.—1. தகுந்த காரணமில்லாமல் அவள் புருஷனை விட்டு விலகி யிருப்பது, (2) விபசாரியாய் இருப்பது, இப்பேர்ப்பட்ட கேசுகளில் புருஷன் ஜீவனாம்சம் கொடுக்கமாட்டான். (இ. லா. ரி. 2 பம் 634; 1 ம ஹை. கோ. ரி. 372; 2 ம ஹை. கோ. ரி. 377).

கே.—தகுந்த காரணமின்றி தன்னை விட்டு விலகியிருக்கும் பெண்சாதியை தன்னுடன்கூட இருந்து வாழும்படி செய்வதற்கு என்ன செய்யலாம்?

ஜ.—புருஷன் கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்து கோர்ட்டில் தீர்ப்புப் பெற்றுக்கொள்ளலாம. (13 அல 126.)

(இன்னும் வரும்.)

---

# PART V.

## CO-OPERATION.

## கூட்டுறவு.

### CO-OPERATIVE RESULTS.

### கூட்டுறவின் பயன்.

*அன்பின் வழிய துயிர்நிலை: அஃதிலார்க்*
*கென்பு தோல் போர்த்த உடம்பு*

என்றார் பொய்யாமொழிப் புலவரான திருவள்ளுவ நாயனார். உலகத்தில் அன்பு என்னும் ஓரம்சம் ஒரு குடும்பத்திலும் ஒரு சபையிலும் ஒரு பட்டணத்திலும் ஒரு தேசத்திலும், சுருக்கிச் சொல்லின் ஒரு ராஜ்பத்திலும் இருக்குமேயானால், அதுகாரணமாக உண்டாக்கக்கூடிய பலன்கள் ஒவ்வொரு துறையிலும் பலவுண்டு. அறம், பொருள், இன்பம், வீடு முதலான சதுர்வித புருஷார்த்தங்களையும் கொடுப்பது அன்பு என்னுந் தகைமையே யன்றி மற்றொன்றுமல்ல. அன்பு என்னும் மூன்று அக்ஷரங்களோடு சேர்ந்திருக்கும் இப்பதத்தில் அருள், பொருள், ஈகை, இரக்கம், கருணை, அநுதாபம் முதலான ஸத்கருமங்களை யனுஸரித்த தன்மை யடங்கியிருக்கிறது. அதாவது நட்புரிமை, நன்றி மறவாமை, பக்தியோடிருப்பது, தீங்கிழையாமை, பரோபகாரம், தங்கலங்கருதாதிருத்தல், ஏகிபவித்து வாழ்வது முதலான அம்சங்கள் மேற்சொன்ன தன்மையில் அடங்கிவிட்டன; ஆகவே அன்பென்னும் ஆதிமொழியை இன்னும் விஸ்தரிப்பது அனுவசியம். அன்புக்கு மிஞ்சிய அம்சம் உலகத்தில் மற்றெதுவுமில்லை; எவ்வளவு அத்தியாயங்கள் வேண்டுமானாலும் அன்பைக்குறித்து உபந்யசிக்கவும் செய்யலாம், வியாசங்களு மெழுதலாம். ஆனால் சுருங்கச்சொல்லி விளங்கவைப்பது நம்பெரியோர் கொண்டிருக்கும் முறையாதலின், இவ்விடத்தில் அவ்வன்பையே மூலாதாரமாக யெடுத்துக்கொண்ட கூட்டுறவின் பலன் இத்தன்மையதென்று சிறிது சுட்டிக் காட்டுவோம்.



அரசாங்கத்தார் செங்கோல் செலுத்தி வரும் பற்பல துறைகளில் கூட்டுறவுக்காகவேண்டித் தனியே ஓரிலாகாவை ஏற்படுத்தி யிருப்பதும் ஒன்று. பரஸ்பரோபகாரக்கூட்டு நிதிச் சங்கங்கள் செய்து வருகின்ற வேலைகள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் இப்போது நிதர்சனமாய்க் கொண்டிருக்கின்றன. பொதுஜன க்ஷேமத்தைக் கருதும் முக்கியமான சாகைகளில் கூட்டுறவு பிராதான்யமா யிருப்பதை மேற்றிசையாளரும் அமெரிகர்களும் செவ்வையாயுணர்ந்து தங்கள் தங்களுடைய தேசங்களில் அதை வேரூன்றச் செய்யுமாறு எவ்வளவோ வேலைகள் செய்து வருவதைப் பார்க்கிறோம். பரஸ்பரோபகாரக் கூட்டு நிதிச்சங்கங்களென்ற பெயருடன் ஜாதி வித்தியாசம், நிறவித்தியாசம் ஏதுமில்லாது இறுதியிற் கிடைக்கும் பொருளாதாரப் பலனையே முக்கியமான நோக்கமாகக் கைப்பிடித்துச் செல்வப் பெருக்கையும் மானஸீகத் திருப்தியையும் மேலிடச்செய்யும் மகநீயமான குணப்பொலிவு பெற்றிருப்பது கூட்டுறவு என்னும் அம்சமல்லாது மற்றெதுவுமல்ல; அமெரிகாவில் ஸ்டீல் கார்ப்பொரேஷன் என்றும், எண்ணெய் கார்ப்பொரேஷன் என்றும், இங்கிலாண்டில் பால் வெண்ணெய் தயிர் இவைகளுக்கான சங்கங்களும், ஜப்பான் தேசத்தில் ஜின்ரிக்ஷா சங்கங்களும் ஸ்தாபிதமாகி புத்தியும் யுக்தியும் வாய்ந்த பிரமுகர்கள் கூட்டுத் தொழில்புரிந்து குடி வளப்பத்தையும் அதன் மூலமாகக் கோல் வளப்பத்தையும் சிறப்பிக்கச்செய்து வருவதையும் பார்க்கிறோம். வெளிநாடுகளில் இவ்விதமிருக்க நம் தேசத்தில் ஒன்றுமில்லையேயென்று நாம் ஆசங்கைப் படவேண்டியதில்லை. சுமார் 10 வருஷங்களுக்குமுன் கூட்டுறவின் பிராதான்யம் இத்தேசத்திலும் பரவுவது இன்றியமையாததாகு மென்றுணர்ந்த நம் இந்தியா கவர்ன்மெண்டார் இத்தேசத்திலும் மேனாட்டு முறையை யனுஸரித்த கூட்டுச் சங்கங்களை முன்னுக்குக் கொண்டுவர முயற்சித்தனர். திவான் பகதூர் P. ராஜகோபாலாசாரியார், திவான்பகதூர் R. ராமசந்திர ராவ், திவான்பகதூர் L. D. ஸ்வாமிக் கண்ணுப்பிள்ளை முதலியோர் இவ்விராஜதானியில் பரஸ்பரோபகாரக் கூட்டுறவுச் சங்கங்களின் ரெஜிஸ்டிரார்களாகவிருந்து ராஜதானியைச் சேர்ந்த எத்தனையோ விடங்களில் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்திக் கூட்டுறவின் பயன் இப்படிப்பட்டதென்பதைக் கற்றோரும் மற்றோரும் நன்றாயறியும்படி உதாரணங்கள் மூலமாகக் காட்டியிருக்கிறார்கள். மற்றும் கூட்டுறவை விருத்தி செய்வதனிமித்

தம் ஏற்பட்டிருக்கும் இலாகாதார், அதனாலுற்ப விக்கக்கூடிய நன்மைகளை அவ்வப்போது பிரசங்கங்கள் மூலமாகவும், வியாசங்கள் மூலமாகவும், துண்டுப் பத்திரிகைகள் மூலமாகவும் பரப்பியும் வருகிறார்கள். தேசமோ ஆயிரக்கணக்கான மைல் விஸ்தீரணமுள்ளது; ஜனங்களோ கோடிக் கணக்காயுள்ளர். இனிய நீர்ப் பெருக்கினாலும் இன்கனி வளத்தினாலும் தனி நறுமலயத் தண்காற் சிறப்பினாலும், பைந்நிற பழனம் பரவிய வடிவினாலு மான ஜன்ம பூமியாம் இப்பாரத மாதா ஈன்றெடுத்த அருந்தவ மக்களாது க்ஷேம லாபங்களுக்குக் கூட்டுறவு என்னும் அம்சம் எவ்வளவோ நன்மை களைச் சாதித்துக்கொண்டு வருகிறது. அந்நன்மைகள் பலவகைகளாகப் பிரிவுண்டுப் பலவிதமான பலன்களை நேராகவும் மறைவாகவும் அளித்து வருவதாயினும், அவ்விதம் அளிக்கும்படி நம் காருண்ய ஸர்க்காரின் திரு வுளத்திற் பதிந்திருப்பது, நாம் ஆரம்பத்திற் சொன்ன மூன்றக்ஷர பதமே. அதுதான் அன்பு.

---

# PART VI.

## கல்வி.

## THE TEACHER.

### உபாத்யாயர்.

(183-ம் பக்கத் தொடர்ச்சி.)

பிள்ளைகளை உயர்த்துவதால் அவர்களுக்கும், சேர்ந்திருக்கும் வகுப்புக்கும், உபாத்தியாயருக்கும் கடைசியில் பள்ளிக்கூடத்திற்குமே கெடுதியாக முடியும். சுருங்கச் சொல்லின் நியாயமான உபாத்தியாயர் பள்ளியிலும், வெளியிலும் நிர்மாணிப்பவராயும், ரக்ஷகராயும், போதனாமுறையில் தேர்ந்தவராயும் சீர்திருத்தம், அபிவிருத்தி, நாணயம் முதலியவைகளில் சதா கவனமுள்ளவராகவுமிருக்க உத்தேசங்கொண்டு பிரயத்தனப் படவேண்டும்.

அவர் பூர்ண ஞானமுடையவரா யிருக்கவேண்டும். பலவிதமான புத்தகங்களைப் படித்தவரா யிருக்கவேண்டும். பிள்ளைகளுக்கு எதைக் கற்பிக்கவேண்டும்? ஏன் கற்பிக்கவேண்டும்? எப்படி கற்பிக்கவேண்டும்? முதலிய விஷயங்களை ஒன்றுகூட விடாமல் முழுமையும் தெரிந்துள்ளவரா யிருக்க வேண்டும். தனக்குத்தானே மனோகற்பனை செய்யும் சக்தியையும், அப்படி மனோகற்பனை செய்ததை பிறருக்கு மனதில் பதியும் வண்ணம் வர்ணித்துச் சொல்லும் சக்தியையும் உடையவரா யிருக்கவேண்டும். சம்பாஷிப்பதில் தேர்ந்தவராயும் கதை சொல்வதில் சமத்காரமுள்ளவராயு மிருக்கவேண்டும்.

நாமொவ்வொருவரும் தோஷமற்றவர்களாக விருக்கமுடியாது. அப்படிக்கு தோஷமுடையவர்களா யிருந்தாலும் தோஷமற்றவர்களாகவும் மேன்மையடையவும் இடஞ்சலாயிருக்கும் நமக்கு ஸ்வபாவத்திலேயே ஏற்



பட்டிருக்கும் பலஹீனங்களையும், தவறுகளையும், குறைகளையும், வேரோடு களைய நாம் ஒவ்வொருவரும் பிரயத்தனப் படுவோமாக.

இதுவரை உபாத்தியாயரின் இலக்ஷணங்களைப்பற்றிக் கூறிவந்தோம். இனி உபாத்தியாயருடைய வேலை என்ன? வாழ்வு எத்தன்மைத்து? என்பதைப்பற்றி சற்று ஆராய்வோம்.

'உபாத்தியாயர்' என்றால் பள்ளிக்கூடத்து போதகர் என்றும் வாத்தியார் என்றால் புரோகிதம் செய்பவர் என்றுமட்டுமே அனேகர் நினைத்திருக்கின்றனர். உபாத்தியாயரது வேலை யின்னதென்று பலருக்குத் தெரியாது. சிலர் பிள்ளைகளைக் கொஞ்சங்கூட சிரமப்படுத்தாமல் எல்லா விஷயங்களையும், வகுப்புக் கதிகமானவைகளையும் தாமேசொல்லிக் கொடுப்பதென்று நினைக்கிறார்கள். இது மிகவும் தவறு. இன்னும் சிலர் வகுப்பின் பிள்ளைகளின் பாடங்களைத் தமக்குக் குறிப்பிட்ட காலத்தில் ஒப்புவித்துக் கொள்வதுதான் தன் வேலையென்று எண்ணி நடக்கிறார்கள். இதுவும் பிசகே. வாசிக்கவும், எழுதவும், கணக்குப்போடவும் யார்சொல்லித் தருகிறார்களோ அவர்கள்தான் உபாத்தியாயர் என்று நினைக்கக்கூடாது. எழுதப் படிக்கக் கற்றுக் கொடுப்பது உபாத்தியாயர் கிரமமாய்ச் செய்யவேண்டிய வேலையில் ஓர் அணுவிற்குச் சமானம். பிள்ளைகளின் மனதைப் பயிற்சிசெய்து அவர்களுடைய மனோதத்வங்களைப் விருத்திபண்ணி நன்னடக்கைகளை அவர்கள் பின்பற்றும்படிச்செய்து அவர்களிடத்தில் ஸத்குணங்களை யுண்டாக்கி எந்த விஷயத்தைக் குறித்தும் தாங்களே சிந்தித்துத் தகுந்தபடி செய்யும் ஆற்றலை அவர்களிடத்தில் ஏற்படுத்தி இன்னமும் அன்னவர்களை ஈன்றவர்களுக்கும் சார்ந்தவர்களுக்கும் சந்தோஷத்தையும், கௌரவத்தையும் கொடுக்க என்ன லக்ஷணங்கள் இன்றியமையாதவையோ அவற்றையெல்லாம் உண்டாக்க வல்லவர் யாரோ அவர்தான் உபாத்தியாயர், போதகர் என்ற பெயர்களுக் குரியவராவர். மற்றவர்களெல்லாம் அப்பெயர்களுக்கு அபாத்திரர்களாவார்கள். ஒருவனைக் கண்யமுள்ள ஆளாக்க என்னவேண்டுமோ அதைச் செய்பவருக்குத்தான் அப்பெயர் தகும்.

(இன்னும் வரும்.)

ஓர் உபாத்தியாயன்.

# PART VII.

## NEWS AND NOTES.

## ஸமாசாரக் குறிப்புகள்.

### விநோத நாணயங்கள்.

நீங்கள் எப்பொழுதாவது இரும்பு நாணயங்களைப் பார்த்திருக்கிறீர்களா? ஜெர்மனியில் இந்த நாணயம் வெளிப்பட்டிருக்கிறதாம். இது ஓர் ஆச்சரியமன்று. மெக்ஸிகோவில் உலோக நாணயங்கள் பூச்சியமாய்ப் போய்விட்டதால் அட்டை நாணயங்கள் உபயோகத்திலிருப்பதாகச் சொல்லப்படுகிறது. பர்மா சயாம் என்னும் பிரதேசங்களில் பீங்கான் நாணயங்களையும் சாண்டாக்ரூஸ் தீவுகளில் ஓர்விதக் கிளியின் சிவந்த இறகை நாணயங்களாகவும், பஸிபிக் சமுத்திரத்திலுள்ள 'லாயல்டி' தீவுகளில் பழந்தின்னி வௌவாலின் ரோமத்தைக் கயிறாகத் திரித்து அதை நாணயங்களாகவும் உபயோகித்திருப்பதாகத் தெரிகின்றது.

---

### ஐந்து மனிதர்களைப் பிடித்த போலீஸ் நிபுணர்.

ஓடி ஒளித்துக்கொண்ட ஒரு மனிதனைப் போலீஸ் டிபார்டுமெண்டார் ஒரு சமயம் பிடிக்கவேண்டியிருந்தது. அதை உத்தேசித்து ஒரு ஊர்ப் போலீஸ் தலைவருக்கு ஆறுவிதமாக எடுக்கப்பட்ட அம்மனிதனின் போட்டோ படங்களை டிபார்டுமெண்டார் அடையாளமாக அனுப்பினார்கள். சில நாட்களுக்குப் பிறகு அவ்வுத்தியோகஸ்தர் மேல்அதிகாரிக்குப் பின்வருமாறு தந்தி சொன்னார்:—"மிகுந்த சிரமத்துடன் ஐந்து மனிதர்களைப் பிடித்துவிட்டேன். இன்னும் ஒருவன்தான் பாக்கி."

---

### ப்ளாரீடாவில் முதலைகள்.

ப்ளாரீடா என்னும் பிரதேசம் முதலைகளுக்குப் பேர்பெற்றது. முதலைகளோ சோம்பேரித்தனத்திற்கு மூலஸ்தானம். ப்ளாரீடாவைச் சேர்ந்த ஜார்சன் வயல் என்னுமிடத்துள்ள இஞ்சினியர்கள் இம் முதலைகளுக்கு ஓர் தொழில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்பிராணிகளுக்கு ஓர் கயிற்றையோ அல்லது சங்கிலியையோ கட்டி அதை நீர் சரியாக ஓடாத சாக்கடைக்குள் விட்டு விடுகிறார்கள். அந்த பிராணி மந்தகதியாக சாக்கடை வழியே செல்லுகிறது. வெளியே யிருக்கும் மனிதர்கள் அப்பிராணியைக் கட்டியிருக்கும் கயிற்றைப் பிடித்து முன்னும் பின்னுமாக இழுக்கிறார்கள். அதனால் சாக்கடை சுத்தம் செய்யப்பட்டுப் போகிறதாம். அமெரிக்காவில் சில பட்டணங்களிலிருந்து இம் முதலைகளைப் பிடித்து வருவதற்காக ஏஜெண்டுகளைப் ப்ளாரீடாவிற்கு அனுப்பியிருக்கிறார்களாம்.

---

### காஸ்மீரத்தில் புதுப் படை சேர்த்தல்.

காஸ்மீரத்தில் 'ரிக்ரூட் மெண்டு' எனப்படும் சைந்யத்துக்கு புது ஆள் சேர்க்கும் கார்யம் மிகுந்த ஊக்கத்துடன் நடந்துவருகிறது. மாதம் ஒன்றுக்கு 800 பேர்கள் சேரக்கூடுமென்று சொல்லப்படுகிறது.

---

### துன் மரணம்.

சில நாட்களுக்குமுன் திருக்கோஷ்டியூரில் ஓர் வைஷ்ணவ பெண் பிரஸவித்த ஒருவாரத்துக் பிறகு ஒரு நாளிரவு எவருமறியாத சமயத்தில் தன் சிசுவைத் தூக்கிச் சென்று திருப்பாக் கடலென்னும் அவ்வூர் தடாகத்தில் விழுந்து தன் சிசுவுடன் மரணமடைந்தாளாம். இதற்கு சித்தப் பிரமையே காரணமென்பதைத் தவிற வேறொருகாரணமும் புலப்படவில்லையாம்.



### சென்னை கவர்னரவர்களின் அறிவிப்பு

இந்த யுத்த சமயத்தில் தம் வரவையுத்தேசித்து பொது ஜனங்கள் அலங்கார ஆடம்பரங்களில் செய்யும் செலவுகளைக் குறைத்துக் கொள்ளும்படிக்கும் அல்லது நீக்கி விடும்படிக்கும் மாட்சிமைதங்கிய கவர்னரவர்கள் அபிப்பிராயப்படுவதுடன், இனிவரும் குளிர்காலத்தில் தாம் செய்யப் போகும் விஜயங்களில்பொது ஜன பணச் செலவை உண்டு பண்ணக்கூடிய வரவேற்பு வந்தனோபசாரங்களை நீக்கிவிடும்படிக்குச் சொல்லுகிறாராம்.

---

### ருஷியாவின் நிலைமை.

லண்டன். செப்டம்பர். 10௳ பீட்ரோகிராடிலிருந்து வரும் தந்திகள் அங்கு பயம் அதிகரித்து விட்டதாகத் தெரிவிக்கின்றன. ரயில்வண்டிகளில் வெளியூர் போகும் ஜனக்கூட்டம் அதிகம். சாமான்களையெல்லாம் அப்புறப்படுத்துவதற்கு கவர்ன்மென்டார் வேண்டிய ஸாதகங்களைச் செய்து வருகிறார்கள்.

---

### ஓர் ஆச்சர்யமான சம்பவம்.

ஒரு பத்திரிகை கூறுகிறது.

காரைக்குடியைச் சேர்ந்த இலுப்பைக்குடியில் வசித்து வந்த ஒரு பிராமணன் அக்கிராமத்தில் வசித்துவந்த ஒரு கள்ளச் சாதியானுக்கு 10 ரூபாய் கொடுக்க வேண்டியவராயிருந்தார். அக்கள்ளச்சாதியான் பலமுறை கேட்டும் அந்தப்பிராமணர் தனக்குக் கொடுக்கவேண்டிய ரூபாயைக் கொடாதிருத்தலை முன்னிட்டுக் கோபங் கொண்டு இம்மாதம் 2-ந்தேதி அவர் வீட்டுக்குச் சென்று அவரை நோக்கி ரூபாயைக் கொடுக்காவிட்டால் இந்தக் கத்தியால் உன்னை வெட்டிவிடுவேனென்று பயமுறுத்தினான். அவர் இன்னது செய்வதென்று தெரியாது நடுக்கமுற்றிருந்தார்; அவருக்கு உதவிசெய்ய ஒருவரும் வரவில்லை. அப்போது அங்கே ஒரு வண்டியில் கட்டியிருந்த இரண்டு மாடுகளில் ஒன்று அறுத்துக் கொண்டு வந்து அவனை முட்டிக் கீழே தள்ளிவிட்டது. மற்றொன்றும் அறுத்துக் கொண்டு வந்து அவனைக் கொம்பால் கிழித்துக் கொன்றுவிட்டது. அதனால் நியாயமுள்ள விடத்துக் கடவுள் துணை செய்வாரென்பது விளங்குவதாம்.

---

### ஒரு கலியாணச் சந்தை.

ஸிம்லாவுக்கு ஆறுமைல் தூரத்தில் உள்ள ஸிபி என்னும் ஊரில் வருஷந்தோறும் ஒரு தடவை கல்யாணச் சந்தையொன்று நடக்கிறது; அங்கே கல்யாணங்கள் முடித்துவைக்கிறார்கள். மனைவிகளை மாற்றிக்கொள்ளவுங் கூடுமாம். ஒரு மனைவியின் விலை சராசரியில் 80 ரூபாயாகும். அந்தப்பிரதேசத்தில் ஸ்திரீ புருஷர்கள் ஒருவரை ஒருவர் தள்ளிவைப்பதென்பது கிடையாதாம்.

இம்மாதிரியான வழக்கம் பேபிலோன் என்னும் பட்டணத்தில் முற்காலத்தில் நடந்து வந்ததாம். பேபிலோன்என்னும் பட்டணம் ஆசியத்துருக்கியில் இருந்தது. அது பூர்வீக காலத்தில் மிகவும் பிரபலமடைந்திருந்தது.

அங்கே கல்யாணச் சந்தையில் சிறு வயதுள்ள பெண்களையெல்லாம் கொண்டு வந்து ஏலம் போடுவார்களாம். நிரம்ப அழகு வாய்ந்த பெண்ணை முதலில் ஏலம் போடுவார்கள். யார் அதிகப்பணம் கொடுக்கிறானோ அவன் அந்தப் பெண்ணை அடைவான். அதற்குப்பின் சற்று அழகு குறைவாயுள்ள பெண்ணையும் அதற்குப்பின் படிப்படியாகக் குறைந்த அழகுள்ள ஒவ்வொரு பெண்ணையும் ஏலத்தில் விற்பார்கள். அழகு மிகவும் குறைவாகவும் 'தளுக்கு' கொஞ்சம்கூட இல்லாதவுமான பெண்களை நிரம்பவும் ஏழையாயிருப்பவர்கள் அடைவார்கள். விலைபோகாதப் பெண்களைப் பிள்ளைகளுக்கு இனாமாகக் கொடுத்துவிடுவதுமுண்டு.

## ஸ்திரீ நியாயாதிபதிகள்.

ஆஸ்டிரேலியாவில் 4 ஸ்திரீகள் நியாயாதிபதிகளாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுள் மூன்றுபேர் கலியாணமானவர்கள்; ஒருவர் கன்னிகை.

---

## 15,000 பவுன்.

இங்கிலாந்தில் காண்டர்பரியிலுள்ள (ஆர்ச்பிஷப்) பெரிய கிறிஸ்தவ குருவுக்கு வருஷத்திற்கு 15,000 பவுன் சம்பளம். அதாவது மாதம் 1,250 பவுன் அல்லது 18,750 ரூபாய்.

---

## இங்கிலாந்தில் ஜெர்மன் ஆகாய விமானங்கள்.

சென்றவாரம் இங்கிலாந்தில் ஜெர்மன் ஆகாய விமானங்கள் பல இடங்களில் தாக்கியதால் மிகுந்த உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் நேர்ந்ததாகத் தெரிகிறது.

---

## பூப் பிரதக்ஷணம்.

நியூஜிலாந்து தேசவாசியான மூர் என்பவர் 10 வருஷகாலத்தில் உலக முழுவதும் கால் நடையாய்ச்சுற்றி வருவதாக 6000 பவுன் பந்தயம் வைத்துக்கொண்டார். 1907-ம் வருஷம் பிரயாணமானார். இதுவரை ஐரோப்பா, ஆசியா ஆப்ரிகா மார்க்கமாக 60000 மைல் வரை நடந்திருக்கிறார். இவ்வருஷத்துடன் அவர்யாத்திரை முடிவுபெறும்.

## ராக்பெல்லரின் செல்வம்.

அமெரிக்காவிலுள்ள பிரசித்திபெற்ற கோடீசுரரான ஜான். ராக்பெல்லரின் வருஷ வருமானம் 2 கோடியே 300 பவுன். இந்தக் கணக்குப்படி அவருக்குத் தினந்தோறும் 60,000 பவுனும், மணிதோறும் 2,289 பவுனும் கிடைக்கிறது. அவரது செல்வம் நிமிஷந்தோறும் 38 பவுன் வீதம் பெருகி வருகின்றது.

## லண்டனில் வாயுபகவான்.

சென்றவாரம் வியாழக்கிழமை இரவு லண்டனில் பயங்கரமான புயற்காற்றும் பெருமழையும் உண்டாய் 2 மணிநேரம் வரை பட்டணத்தைக் கலக்கச் செய்தன. அநேகவீடுகள் இடியால் சேதமடைந்தன. ட்ரபால்சர் ஸதுக்கம் மழையினால் பெரிய ஏரிபோலாய்விட்டது. தெருக்களெல்லாம் ஜலமயமாய் விட்டன.

---

## ஒரு தாசில்தார் மாற்றப்பட்டார்.

ஈரோட்டில் சேது ஐயர் என்பவர் தாசில்தாராயிருந்தார். இவர் மிகுந்த நல்லவராம். இவர் அன்னிபெசன்ட் அம்மாளைச் சேர்ந்த பிரம்ம ஞானசங்கத்தில் ஒரு மெம்பரென்று தெரிகிறது. இவர் திடீரென்று மாற்றப்பட்டிருக்கிறார். இப்பொழுது ஈரோட்டில் சுயராஜ்ய முயற்சியும் சுயராஜ்ய கொடிப்போடுதலும் மும்முரமாயிருப்பதால் அவர் ஒருகால் அநுகூலமாயிருப்பாரென்று கருதி அதிகாரிகள் அவரை உடுமலைப்பேட்டைக்கு மாற்றிவிட்டார்கள் என்று ஊகிக்கவேண்டும்.

---

## KALIYUGA 'KARNARS.'

### கலியுகக் 'கர்ணர்'கள்.

இவர்கள் இன்னவர்களென்பதை நாம் சொல்லாமலே நமது 'கல்பதரு'வின் அபிமானிகள் அறிந்து கொள்ளுவார்கள்; நம் பத்திரிகையின் முதற் சஞ்சிகையில் 'தேஹி' என்றார்க்கு 'நாஸ்தி' யென்று சொல்லாது பேருதவி செய்துவரும் இருபிராதாக்களைக் குறித்துச் சொல்ல வாரம்பித்து இறுதியில் அவர்கள் ஸ்ரீமத் ராவ் ஸாஹிப் கலவலா கண்ணன் செட்டியாரும் ஸ்ரீமத் ராவ் ஸாஹிப் கலவலா ராமாநுஜம் செட்டியாரும் என்றும், அவர்களைக் குறித்து நுங்கம்பாக்கத்தில் சுமார் 3 மாதங்களுக்கு முன் நமது கிழச்சிங்கமாம் டாக்டர் ஸர் S. சுப்பிரமணியய்யர் பேசியபோது 'கலியுகக் கர்ணர்' எனச் சுட்டிக்காட்டி யுரையாடினாரென்றும் ஏற்கெனவே கூறியிருக்கிறோம். அப்பெயர் அச்சகோதரர்களுக்கு எவ்விதத்தும் பொருந்துமென்பதற்கு யாதொரு ஆக்ஷேபணையுமில்லை. பிராதாக்கள் செய்துவரும் தர்மங்கள் இரண்டொன்றல்ல; அனந்தமென்றே சொல்லவேண்டும். ஒரு பக்கம் கல்வி யபிவிருத்திக்கான பாடசாலைகள் ஒன்றுக்குப் பின் ஒன்றாக அச்சகோதரர் ஆதரணையில் உற்பவித்துக் கொண்டிருக்கின்றன; இன்னொரு பக்கம் இகத்தில் துன்புறும் ஜீவான்மாக்கள் தற்கால சாந்தியாய்த் துன்ப நிவாரணம் செய்துகொள்ளும் பொருட்டான சத்திரங்களென்ன; மற்றோர்புறம் தேசபாஷாபி விருத்திக்கும் மதானுஸார சிரேஷ்டத்திற்கும் அநுகுணமான நிலையங்களென்ன, இன்னுமோர் புறத்தில் ஜீவவாழ்க்கையை யல்லற்படுத்தும் பலவகைப்பட்ட வியாதிகளைக் கண்டிக்கும் ஆயுர்வேத சாஸ்திர விற்பன்னர்களான தன்வந்தரி முறைகளை முன்னிட்டு 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று சொல்லும்படியான சிகிச்சாக் கிருஹங்கள் என்ன, இன்னும் இவைபோன்ற எத்தனையோ தர்மகாரியங்களில் தலைகொடுத்துத் தருமதேவதை இக்கலியுகத்திலும் இல்லாமற் போகவில்லை யென எப்பேர்ப்பட்ட கிருபணனும் சொல்லும்படி தம் கிரியைகளால் காட்டிவரும் நம் செட்டிச் சகோதரர்களின் சிறப்பே சிறப்பு! லக்ஷ்மீ கடாக்ஷ வீட்சண்யமும் பெரியோர்களது ஆசீர்வாத பலமும் சமானமானவர்களது வியப்பும், அரசாங்கத்தாரது அங்கீகரிப்பும் ஒன்று சேர்ந்து உருவாய்த் திரண்டு உலகத்தவர் போன்ற உத்தமப்பொன்மணிகளிற் படிந்து துலங்கும் பழுதறு சிகாமணிகளாக நம் நன்னகர் மத்தியில் நடுநாயகங்களாய் விளங்குமிப் பிராதாக்களை ஸதா ஸ்மரித்துக் கொண்டிருக்கும் லோபியும் 'கர்ண'னாவானென்றால, பின்னும் அவர்களுடைய குண விசேஷங்களை யெடுத்துச்சொல்ல வார்த்தை யேதும் எமக்கு அகப்படவில்லை; எமது கையிறகும் ஓடவில்லை. சுருக்கிச் சொல்லுமிடத்து, நம் தேசவாஸிகள் அவர்களுக்குப் பலவிதங்களிலும் கடமைப்பட்டிருக்கிறார்கள்; நம்மரசாங்கத்தார் அப்பிராதாக்களின் பரோபகாரங்களைப் பலவிதங்களிலும் அங்கீகரியாமற் போகமாட்டார்; எனவே அங்கீகரிப்பர் என்பதற்கு ஆக்ஷேபணையில்லை. மகாவிஷ்ணுவின் அம்சங்களான கண்ணபிரான் ராமபிரான் இவர்களுடைய திருவிளையாடல்களை நாம் படித்தும் கேட்டுமிருக்கிறோம். அவைகளில் சிற்சிலருக்கு மட்டும் அவ்வவதாரங்களின் மெய்ம்மை நன்கு புலப்படும். உதாரணமாக, அர்ச்சுனன், விதுரர், பீஷ்மர், துரோணர், அசுவத்தாமா, தர்மர் இவர்களுக்குக் கண்ணன் விஷ்ணு வவதாரமென்பதும், சுமித்திரை, ஸுமந்த்ரர், விபீஷணர், குகன், ஆஞ்சநேயர், இவர்களுக்கு ராமபிரான் விஷ்ணு அவதாரமென்பதும் நன்குதெரியுமென்றே நம்மாற் சொல்லமுடியும். பற்பல சமயங்களில் கிருஷ்ண பகவான் தம்மைச் சேர்ந்தோரிடத்துப் பேசுகையிலும், மேற்சொன்னவரிடத்துப் பேசுகையிலும் உள்ள வித்தியாசங்களை வேத வியாசரது கிரந்தத்திலிருந்தே தெரிந்துகொள்ளலாம். ராமபிரான், சுமித்திரை, சுமந்த்ரர், விபீஷணர், முதலினோரிடம் உரையாடுகையில் அவர்கள் தன் உண்மையையறிந்தவர்களென்பதை முகக் குறியிலும் வார்த்தைப் பிரயோகத்திலும் செய்த நடவடிக்கைகளிலும் காட்டியிருக்கிறார்களென்று வால்மீகி முனிவர் பலவிடங்களில் பல சுலோகங்களினாற் காட்டியிருக்கிறார். உலகிலுள்ளோர்க்கு அக்கிரந்தங்கள் எவ்வளவு தூரம் அவ்வவதார புருஷர்களது பிராபல்யத்தையும் குணவிசேஷங்களையும் எடுத்து காட்டுகின்றனவோ அதுபோல இக்கலியுகத்தில் பிராதாக்களாகத் தோன்றியிருக்கும் ஸ்ரீமான்களான கண்ணஞ் செட்டியாரும் ராமாநுஜம் செட்டியாரும் இருக்கப்பெற்ற இச்சென்னைமா புரியின் பாக்கியந்தான் என்னே? இதன் மாட்சியே மாட்சி! இப்பாக்கியம் மற்றைச் சோதரர்க்கும் கிட்டுமாறு அப்பிராதாக்கள் ஆயுராரோக்கிய ஸம்பன்னர்களாக நீடூழிவாழ எம்பிரான் கஞ்சமலர்க் கண்ணனையும் கார் முகில் எழுந்திடில் வண்ணனையும் திரிகரண சுத்தியாகப் பிரார்த்திப்போமாக. சுபம். சுபம்.

---

## ஒரு ஜோதிஷ யந்திரம்.

சூரத்தில் நடந்த ஒரு கல்விக் கான்பரன்சை யொட்டி நடந்த பொருட்காக்ஷியில் ஓர் அற்புதமான ஜோதிஷயந்திரமும் வந்தது. அஃது அவ்வூரிலிருந்த வான

சாஸ்திரியும் ஜோதிஷருமான ஒரு பண்டிதரால் சுமார் 400 வருஷங்களுக்குமுன் கண்டு பிடிக்கப்பட்டதாம். அது வானத்திலுள்ள நட்சத்திர மண்டலங்களின் போக்கைக் காட்டுகின்றதாம்.

## இங்கிலாந்தில் வாயுபகவான்.

இங்கிலாந்தில் வாயுபகவானது அமுல் ஜாஸ்தியாயிருக்கிறது. அங்கு அடிக்கடி பெரும் புயற்காற்று அடிப்பதால் மிகுந்த உயிர்ச்சேதமும் பொருட் சேதமும் ஏற்பட்டுவருகின்றன. சில தினங்களுக்குமுன் இங்கிலாந்து ஸ்காத்லாந்து, ஐயர்லாந்து முதலிய நாடுகளில் பெரும் புயற்காற்று அடித்ததென்றும் அது மணிக்கு நூறுமைல் விசையில் அடித்ததென்றும் அத்துடன் பெருமழையும் பெய்ததென்றும் தெரிகிறது. அதனால் சில விடங்களில் படகுவிபத்து நேர்ந்திருக்கு மென்று தெரிகிறது. பழமரங்களுக்கும் பயிர்களுக்கும் மிகுந்த சேத முண்டாயிற்று.

## 9 அணா

சீமையில் செப்டம்பர்மாதம் 17 ந் தேதிக்கு மேல் ஒரு ரால் ரொட்டியின் விலை 9 அணா விற்குமாம்!

## நார்வே ராணியார்.

ஐரோப்பாவிலுள்ள ராணிகளில் நார்வே நாட்டு மகாராணியார் மிகவும் செட்டாய் வாழ்பவர். அவர் உடைகளுக்காக வருஷத்தில் 200 பவுண்மட்டும் செலவு செய்கின்றார்.

## பேர்லினில் ஸ்திரீப் போலீஸார்.

பெர்லினிலில் ஸ்திரீப் போலீஸாரே இராக்காலத்தில் வீதிகளில் காவல் செய்கிறார்கள். அவர்களுடன் காவல் நாய்களும் வேலை செய்யும.

## 30 லட்சம்.

ஜப்பானில் 30 லட்சம் குஷ்டரோகிகள் இருக்கிறார்கள் அவர்கள் சென்ற வருஷம் வரை அவர்கள் இஷ்டம்போல நாடெங்கும் திரிந்து கொண்டிருந்தனர். இப்பொழுது அவர்கள் தனி இடங்களில் அடங்கியிருக்கின்றனர்.

## பிளேக்.

கோயம் புத்தூரையடுத்த சிங்கநல்லூரில் பிளேக் நோய் பரவியிருப்பதாகத் தெரிகிறது. சுமார் 60 பேர்வரை அந்த வியாதிக்கு இரையாய் விட்டனர். அதனால் அந்த கிராமம் காலிசெய்யப் பட்டிருக்கிறது.

## வெடிவிபத்து.

ருஷியாவில் தலை நகரான பெட்ரகிரேட் அடுத்த ஒரு இடத்தில் ஒருபெரிய வெடிவிபத்து நேர்ந்தது. அதனால் ஒருபெரிய தீ விபத்து நேர்ந்தது நாலு தொழிற்சாலைகளும் அநேகவீடுகளும் நாசமாயின. சுமார் 120 பேர் இறந்தும் காயமடைந்தும் போயினர்.

## REVIEW OF BOOKS.

### புஸ்தக மதிப்புரை.

பெற்றமனம் பித்து:—இதில் பிள்ளையினிடம் அதிக வாஞ்சையுள்ள ஒரு கிராம முன்சீப் தன் பிள்ளையை வைய அவன் கோபித்துக்கொண்டு ஓடிவிட அதனால் அவர் படுந்துக்கமும் அவனைத் தேடப் போன ஆட்களின் வேடிக்கையான பேச்சுகளும் இன்னும் கிராம வாழ்க்கையைச் சேர்ந்த அநேக விஷயங்களும் அடங்கியுள்ளன. இதன் விலை அணா ¼. வேண்டுவோர் ஜி. ஏ. வைத்தியராமன அண்ட்கோ, 3,4 கொண்டிசெட்டித்தெரு, சென்னை என்றெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஹாஸ்யமஞ்சரி:—இதில் அநேக வேடிக்கைக் கதைகளும் பள்ளிக்கூடங்களில் உபாதயாயர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பிள்ளைகள் கூறும் பதில்களும், கோர்ட்களில் சாக்ஷிகள், வக்கீல்கள் முதலியவர்களுள் நடக்கும் வேடிக்கையான ஸம்பாஷணைகளும், காதலர் காதலிகளுக்குள் ச்ருங்காரமான ஸம்பாஷணைகளும், சிலர் அசட்டுத்தனமாய்ப்பேசும் பேச்சுகள் முதலிய 160 கதைகளும் ஸம்பாஷணைகளும அடங்கியுள்ளன. துக்கமடைந்தவனுக்கும் இதைப் படிக்க சிரிப்பும் ஆனந்தமும ஒருங்கேவரும் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. இதன் விலை அணா 6 தான். மேற் கூறிய விலாசத்துக்கே எழுதிப்பெற்றுக கொள்ளலாம்.



# PART VIII.

## MORAL STORIES.

## நீதிக் கதைகள்.

### சீலவதி.

(189-ம் பக்கத் தொடர்ச்சி.)

உதடுகள் துடிக்கக் கண்கள் சிவக்க படபடவென்று பதட்டமாக வார்த்தைகளைக் கொட்டிக்கோபித்து கணவனுடைய ஆவேசத்தைச் சீலவதி கண்டு பயந்து நடுநடுங்கி முகம்வெயர்க்க மெய்சோர கண்களினின்று நீர் வஸோர்த்தாரையாக வடிய சிறிதுநேரம் தன்னிலை தான்றியாது நின்றாள். பிறகு பதில் சொல்லாதிருந்தால் கணவனுடைய கோபம் இன்னுமதிகமாகுமென்று நினைத்த அம்மாது குனிந்த வண்ணமாகவே 'பிராணபதி, நான் என்ன தப்பிதஞ் செய்துவிட்டேன். என்ன பாபம் இப்போது நமக்கு லபித்துவிட்டது? எதைப்பற்றி நீங்கள் கோபிக்கிறீர்கள்? என்று மெதுவாகச் சொன்னாள். படபடத்து நிற்கும் துளசிராம் அப்போது கட்டைக் குரலுடன் 'உன்னுடைய நத்து எங்கே!' என்று இடியிடித்தாற்போல பேரிரைச்சலோடு கேட்டான். உடனே தானளித்த நத்தாபரணத்தின் ஞாபகம் அவளுக்கு வந்துவிட்டது. இன்னது செய்வதென்று தெரியவில்லை. ஒருவிசை அவளது சரீரம்தூக்கி வாரிப்போட்டது. இரண்டொரு நிமிஷங்கள் பிரமித்து நின்றுவிட்டாள். அவளது சரீரம் நூதன உணர்ச்சியினால் திகழ்ந்தது; மயிர்கள் மயிர்க்குச்செறிந்தன. தான் எந்த பிச்சைக்காரனிடம் நத்தைக் கழற்றிக்கொடுத்தாளோ அவனை இனி எவ்விடம் காண முடியும்? ஐயோ, இவ்விதந் தவித்துருகும் தௌர்ப்பாக்கியத்தையடைந்திருக்கிறேனே யென்று பல பலவிதமாக அவளது மனம் ஊசலாடிக் கொண்டிருந்தது. அச்சமயத்திற் சீலவதியை எவராவது கண்டால் பெரிதும் பரிதாபப்படுவரென்பது நிச்சயம். அவள்தன் ஆவி பூதவுடலினின்று பிரிந்துபோகும் சமயம் வந்துவிட்டதெனக் கருதினாள். இருகன்னங்களிலும் கண்ணீர்த் திவிலைகள் முத்துமுத்தாக வழிந்து பாதத்தில் விழுந்து கொண்டிருந்தன. கணவன் கேட்ட கேழ்விக்கு இன்னபதில் சொல்லுவதென்று அறியாது தவித்த சீலவதி எல்லாம்வல்ல இறைவனே தன்னை இங்ஙனம் பரிசோதிப்பதாகக் கருதினாள். சாதாரணமான பிச்சைக்காரனாக இருந்தால் மற்றொருவனுடைய மனைவியிடம் இவ்வளவுதூரம் வாதாடி நின்றிருக்கமாட்டான். அவன் வெகுநேரம் பயமின்றி வாதாடியதனாலேயே கடவுளே தன்னைச்சோதிக்க வந்திருக்கக்கூடுமென்று மதித்தாள். மற்றும் சந்நியாசியாகத் தோன்றிய அப்பிச்சைக்காரனிடம் அவ்வளவு நேரம் தான் வாதாடிக் கொண்டிருந்ததையும் அவள் சிந்தித்தாள். வந்தவர் விட்டலதேவ

ரல்லாது வேறெவருமில்லையென்று கடைசியாக மனோதிடம் செய்துகொண்ட அம்மாதராள், அத்தேவரே தன்னை இந்நெருக்கடியான சமயத்திற் காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்தித்தாள்; ஆபத்பாந்தவா, அனாத ரக்ஷகா, பரந்தாமா, ஆதிமூலமே, என் ஹிருதய கமலவாசா, என்று கதறியழுத கஜேந்திரனை முதலைவாயினின்று தப்புவிக்கவில்லையா? வணங்காமுடி மன்னனும் துரியோதனனுக்குத் தம்பியான துச்யாஸனன் பாஞ்சாலியை ஏகவஸ்திர தாரியாயிருக்கையில் கௌரவர் ஸபைக்குச் சிகையைப் பிடித்துக் கொண்டுவந்து மானபங்கஞ் செய்யவிருந்த தறுவாயில் 'அக்ஷயம்' என்று அபயகரமளித்துப் பாஞ்சாலியின் மானங்காத்த மணிவண்ணா, கஞ்சமலர்க் கண்ணா, இக்கட்டான இச்சமயத்தில் என்னைப் பாதுகாப்பது உமது கடமை. என் பர்த்தாவுக்கு விரோதமாக யான் ஒன்றுஞ் செய்யவில்லையே. உமது கருணைக்குப் பாத்திரமாயின், கிருபை புரியுங்கள்; இல்லையேல் என்ன சிக்ஷை விதிக்கப்படவேண்டுமோ அவ்விதச் சிக்ஷைக்கு உட்படக் காத்திருக்கிறேன். பதிபக்தி, தெய்வபக்தி, மனுஷ்யபக்தி ஆகிய இவைகளை நான் ஒருபோதும் மறந்தவளல்ல. உங்களால் விதித்துச் சங்கற்பிக்கப்பட்ட கணவனுக்குச் செலுத்தவேண்டிய கடமையில் யான் எவ்விதத்தும் பின் வாங்கவில்லை. எம்பிரான் ஸ்ரீராமசந்திர மூர்த்தியின் தேவியாரான சீதா பிராட்டியாரையே மானஸிகமாக ஸ்தோத்ரஞ் செய்துகொண்டிருக்கிறேன். எத்தனையோ வழிகளில் அவதிப்படுவோரைக் காத்தருளிய உங்களுக்கு இச்சமயத்தில் என்னைக் காப்பது ஒரு சிரமமல்ல. 'திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை' யென்று சொல்வார்களே. அம்மொழி பொய்த்துவிட்டதா? விரோதிகளாயிருந்தபோதிலும் சரணாகதம் அடைந்துவிட்டால் அவர்களை ரக்ஷித்தருளும் பரப்பிரும்ம ஸ்வரூபியே, நானொரு திக்கற்ற அபலை. லோபமே உருவெடுத்த என் கணவனுடைய கேள்விக்குப் பதில் சொல்லமுடியாது தலைகுனிந்து உருகுகின்றேன்' என்றிவ்விதமாக மனதில் தியானம் செய்துகொண்டே பதில் சொல்ல நாவெழாமல் கண்ணீர் உதிர்த்துத் தலைகுனிந்த வண்ணமே சிலவதி நின்றிருந்தாள்.

(இன்னும் வரும்.)

---



ஸ்ரீ

# *ஹரிஹரன்.

K. P. சேஷாத்ரி ஐயங்கார்.

## முதல் அங்கம்.

### இரண்டாங் களம்.

192-ம் பக்கத்தொடர்ச்சி.)

இடம்: வசந்தசோலை.

காலம்: மாலை.

(ஸுரேந்திரனும் விசித்திரனும் பேசியவண்ணம் பிரவேசம்.)

ஸுரேந்திரன்:—எங்கே விதூஷகரே! இளவரசியிடத்திற்கு அழைத்துப் போகிறேனென்று சொல்லி எங்கேயோ அழைத்துச்செல்கின்றீரே! இதுதானா.

விசித்திரன்:—என்ன ஐயா! இதற்குள் அவசரமா? ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறாதுபோலும்.

ஸுரேந்திரன்:—சரி. எப்படியாவது எனக்கு இளவரசியாரின் தரிசனம் கிடைத்தால்போதும், எங்கு அழைத்தேகினும் வரச் சித்தமாயிருக்கிறேன்.

விசித்திரன்:—அப்படிச் சொல்லும். அதுதான் சரி. அந்த மாதிரி சொல்லாமல் என்னமோ ஒருவாறு சொன்னீரே. இருக்கட்டும் நீர் இங்கே தான் இருக்கவேண்டும். நான் சென்று இளவரசி யிங்கு வருகின்றார்களா என்பதைத்தெரிந்து வருகின்றேன்.

ஸுரேந்திரன்:—சீக்கிரம் வந்துவிடவேண்டும்.

விசித்திரன்:—யார். நான்தானே சீக்கிரம் வந்துவிடவேண்டும்.

ஸுரேந்திரன்:—இல்லை. ராஜகுமாரியை இங்கு விரைவினில் வருமாறு செய்ய வேண்டுகிறேன்.

விசித்திரன்:—ஏது! அப்புறம் நம்மபாடு திண்டாட்டந்தான். உங்கபாடு கொண்டாட்டந்தான். ஐயா நம்ம ஸ்திதி அப்படியாகிவிடக் கூடாது.

ஸுரேந்திரன்:—நண்பா! தாமதம் செய்யாதே. போய் சீக்கிரம் கண்டு வா.

விசித்திரன்:—சரிதான். முதலில் நிரம்ப மரியாதையாக இருந்துவிட்டு நாளாக நாளாக சமத்துவத்திற்கு வந்திருக்கிறது. இன்னும் கொஞ்சம் காலமானால் அடே பட்டத்திற் குள்ளாவேன் போலிருக்கிறது.

ஸுரேந்திரன்:—அப்படி யொருநாளும் ஆகாது. உன்னை என்னுயிரினும் மேலானதாக மதித்திருக்கின்றேன். ஆகையினால் சீக்கிரம்—.

---

* All Rights Reserved.

விசித்திரன்:—சரி. உமதிஷ்டத்தை நான் ஏன் கஷ்டமாக்கவேண்டும். இதோ நிமிஷத்தில் மீண்டு வருகின்றேன் (செல்கை.)

(ஸுரேந்திரன் உலாவுகிறான் லலிதையும் விசித்திரனும் பிரவேசம்.)

லலிதை:—தெரியுமா உனக்கு அந்தப் பிரபுவை!

விசித்திரன்:—என்ன! எனக்கா அவரைத் தெரியாது உனக்குத்தான் தெரியாது.

லலிதை:—நான் அவரை அநேகதரம் கண்டிருக்கிறேன். அவர் எப்பொழுதும் இளவரசி மாடத்தருகே இருக்கக் கண்டேன். ஆனால் அவருடைய வேலை யின்னதென்றும், அவருடைய பெயர் இன்னதென்றும் எனக்குத் தெரியாது. ஆகவேதான் கேட்டேன். அதற்கு என்னமோ மாதிரி பதில் வருகிறதே.

விசித்திரன்:—என்ன லலிதா! இன்னும் மனம் வரவில்லையோ என்னை விவாகம்—

லலிதை:—என்ன, என்னசொன்னாய். அப்புறம் இளவரசியிடம் சொல்லி—

விசித்திரன்:—இல்லை. கோபம் ஏன் உனக்கு. நீ நல்லவளாயிற்றே. இன்று இளவரசி சோலைக்கு வரப் போகிறார்களா?

லலிதை:—ஆம். வரவேண்டுமென்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஸுரேந்திரன்:—(பெருமூச்சுவிட்டு) ஹா! ஹா! என்னருங் கண்மணீ. (உலாவுகிறான்.)

விசித்திரன்:—பார்த்தாயா மூச்சுவிட்டதை. அம்மாதிரி இன்னும் இரண்டு தரம் விட்டால் அந்தக் காற்றில் நாமிருவரும் பஞ்சாய் பறக்கவேண்டியதுதான். எனக்குத் தெரிந்தமட்டில் அவர் ஒரு காம உன்மத்தன்.

லலிதை:—என்ன! நீசொல்வது எனக்கு விளங்கவில்லையே. என்ன அது. காம-உன்மத்தன்.

விசித்திரன்:—ஆம். அவர் ஓர் பெண்ணின்மீது பூரணமான காதல் கொண்டிருக்கிறார் என்றேன்.

லலிதை:—அதெப்படி உனக்குத் தெரியும்.

விசித்திரன்:—எனக்கா, எனக்கா எப்படித்தெரியும் என்கிறாய். இன்னாரோடு காதல் கொண்டிருக்கிறாரென்றும் எனக்குத் தெரியுமே. அதையும் சொல்லட்டுமா.

லலிதை:—ஏதோ கொஞ்சம் சொல் பார்ப்போம்.

விசித்திரன்:—ஆனால் அருகேவா! காதோடுதான சொல்லவேண்டும்.

(லலிதா அருகில்செல்ல விசித்திரன் மெதுவாகக் காதில் ஏதோ சொல்லல்.)

லலிதை:—என்ன இளவரசியோடா. நம் ஸரோஜனியுடனா! (பொறுத்து) அப்படித்தான் இருக்கும் இல்லாவிட்டால் அவர் நம்மாடத்தருகே இருப்பானேன். விசித்திர, உன்னை மறக்கவேமாட்டேன்.

(தொடரும்.)



# THE MARRIAGE SACRAMENT.

## விவாஹ ஸம்ஸ்காரம்.

### கலியாண தடபுடல்.

(197-ம் பக்கத் தொடர்ச்சி.)

புத்தூர் மிராசு வீட்டில் கலியாணமென்ற பேச்சே எங்கும் பரவியிருந்தது. புத்தூருக்குப் பத்துமைல் தூரத்திருந்த கிராமங்களிலிருந்தும் பலபேர் கலியாண வேடிக்கை பார்க்க வந்திருந்தார்கள். அநேக கனவான்களும் தாசில்தார் முதலான உத்தியோகஸ்தர்களும் நாலு நாள் புத்தூரிலேயே முகாம் போட்டிருந்தார்கள். ஒரு நாள் சாயங்காலம் டிவிஷனல் ஆபிஸர்கூட விஜயம் செய்திருந்தார். எத்தனையோ வைதிகர்கள் தங்கள் தங்கள் குடும்பங்களோடுகூட சாப்பாட்டுக்கும் பூரி தக்ஷிணைக்குமாக வந்திருந்தார்கள். குனோப், லஸ்தர்களின் பிரகாசமும் தோரணங்கள், வாழை கமுகு முதலான சுப சூசகங்களாகிற அலங்காரங்களெல்லாம் மிகவும் நேர்மையாய்ச் செய்யப்பட்டிருந்தன. இவற்றுள் ஏதேனும் ஒன்றைமட்டும் விவரித்துச் சொன்னால் மற்றுமுள்ளது எப்படியிருக்கும் என்பதை இதை வாசிப்போரே நன்கறியட்டும்.

முதல் முதல் வாத்தியங்கள் எங்கெங்கிருந்து வந்திருந்தனவென்றால் திருவையாற்றிலிருந்து ஒரு மேளகாரன் நாயனம், தஞ்சாவூர்த் தவுல், திருக்கோடிக்காவல் பிடில்; மைசூர் வீணை; இரண்டு பாடகர், ஒருவர் ராமநாதபுரத்திலிருந்தும் மற்றொருவர் பாலக்காட்டிலிருந்தும்; இரண்டு தாஸிகள், ஒருத்தி பெங்களூரிலிருந்தும் மற்றொருத்தி திருவாலூரிலிருந்தும் வந்திருந்தார்கள். இவ்விதமாக சங்கீதக் கச்சேரிகளுக்காக வந்த ஒவ்வொருவரும் தத்தம் வித்பத்தியில் பெயரும் புகழும் படைத்துப் பிரக்கியாதி பெற்றவர்கள். இதோடுகூட சென்னையிலிருந்து பாண்டுவாத்தியமும் வந்திருந்தது. கலியாணம் நாலு நாளும் புத்தூர் திமிலோகமாயிருந்தது. பாட்டுக் கச்சேரி யொருபுறம், வீணைக்கச்சேரி மற்றோர்புறம், சதிர்க்கச்சேரி இன்னோர்புறம், அபிநயக்கச்சேரி பின்னுமோர் புறம், மேளக்கச்சேரி மத்தியானம்; பிடில் கச்சேரி ராத்திரி; இம்மாதிரியாக குதூகலம் நிரம்பியிருந்தது. தாஸிகளாடிய சதிர்க்கச்சேரிகளிலே தான் பலபேர்க்குப் பிரியமதிக மிருந்ததாகத் தோன்றியது.

மூன்று நாள் கலியாணம் முடிந்து நான்காம் நாள் இரவில் 8 மணிசுமாருக்கு மகாதேவய்யர் வீட்டுக் கலியாணப்பந்தலிலிருந்து ஊர்கோலம் புறப்பட்டது. வீதியினிருசருகிலும் தீவட்டி விளக்குகள் குபுகுபென்ற கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கின்றன. மத்தாப்பு வெளிச்சம் விதம்விதமாய் எழும்புகின்றன. அவுட்வாணம், சீர்வாணம் முதலான வாணவேடிக்கைகள் முன்னும் பின்னுமாய் நடக்கின்றன. அவரவர் தத்தம் வாத்தியங்களைக் கோஷிக்கின்றனர். ஆரம்பத்தில் மதிராஸ் பாண்டு மிக்க மனோஹரமாய் கோஷித்துச் செல்லுகிறது. அதற்கடுத்தது வாணவேடிக்கை; இதைச்சுற்றிலும் சிலர் வேடிக்கை பார்த்துச் செல்லுகிறார்கள். இதற்குப்பின் திருவையாறு நாயனக்காரனும் தஞ்சாவூர் தவுலும் தடலடி யடிக்கிறார்கள். எள்ளு விழுவதற்கிடமில்லாமல் இவர்களைச் சுற்றிக்கொண்டு புத்தூர் வைதீகர்களும் அதன் சுற்று வட்டக்கிராமங்களிலிருந்து வந்திருக்கும் வைதிகர்களும் மெய்ம்மறந்து வாய்புதைந்து தம் கவன முழுவதையும் நாயனத்தின் நளினமான கானரஸத்தில் ஆழ்த்தி நிற்கின்றனர். 'தத்தலாங் க்ருதின் னத்தீம்' என்று தவுல்காரன் தஞ்சாமிருதமாய் அடிக்கும் வாத்தியத்தைக் கண்டு மனமகிழ்ந்து தலையசைத்தவாறே திறந்தவாயும் பிடித்த மூச்சுமாய்

வின்றனர் பலர். இதற்கடுத்தது வந்தனர் நாட்டியப்பெண்களிருவரும். இவர்களைச் சுற்றிலும் நான் நீயென்று முந்தி ஒருவர்மீதொருவர் இடித்துக்கொண்டு நிற்கிறார்கள். இந்த நாட்டியப் பெண்களின் ஆடலாகட்டும் பாடலாகட்டும் சமீபத்திருக்கும் இரண்டொருவருக்குமட்டும் தெரியுமேயல்லாது, ஊர்கோலப் பேரிரைச்சலில் மற்றவர்க்குக் கேட்குமென்று ஸ்வப்பனத்தில்கூட எண்ணவேண்டுவதில்லை. இவர்களுக்குப் பின்னுகத்தான் புஷ்பப்பல்லக்கு வெகு திவ்யமாய்த் தோரணங்களோடும் புஷ்பச் செண்டுகளோடும் குஞ்சலங்களோடும் ரமணீயமாய் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எப்புறந் திரும்பினாலும், அவரவரது பிரதிபிம்பத்தைக் காட்டக்கூடிய கண்ணாடிகளாலும் அப்பல்லக்கில் வேலை செய்திருந்தார்கள். இப்பல்லக்கை நல்ல உருண்டு திரண்ட புஜங்கள் கொண்டு பலிஷ்டராய் விளங்கிய பதினாறு பேர்கள் தூக்கிச் செல்லுகிறார்கள். மாப்பிள்ளையும், பெண்ணும் எதிரும்புதிருமாய் இரண்டு நாற்காலிகளில் உட்கார்ந்திருக்கிறார்கள். நல்ல வெல்வெட்டில் துய்யாவும் சரிகையும் வைத்துத் தைத்த உடுப்பை அணிந்து கொண்டிருக்கிறான் மாப்பிள்ளை. உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் பெண்ணுக்கும் அலங்காரம் செய்திருக்கிறார்கள். மாப்பிள்ளைக்கு இழைப்பு வேலை செய்த வெல்வெட் குல்லாயும் பூப்பதிப்பித்த வெல்வெட் ஜோடுகளும் அந்தப் பிரகாசத்தில் ஜோதிரஹிதமாய் விளங்கின. இந்தப் பல்லக்குக்குப் பின்னால் மகாதேவய்யர் குடும்ப ஸ்திரீகளும் மற்றும் சம்மந்தியாத்து ஸ்திரீகளும், கிராமத்திலுள்ள இதர மாதர்களும் வாரியெடுத்துக் கட்டிய பின்னலுடனும் வாயிற் வெற்றிலையை யடக்கிக் கொண்டு காஞ்சீபுரம் புடவை, மேக வர்ணப் புடவை, குறநாட்டு ரவிக்கை, பனாரஸ் முதலிய வஸ்திரதாரிகளாய் ஆபரணாலங்க்ருதம் பூண்டவராய்த் தட்டுகளில் வெற்றிலை பாக்கு கற்கண்டு, சந்தனம் புஷ்பம் முதலியவைகளைத் தூக்கித் தமாஷாய்ப் பேசிச் சிரித்தாடிப் பரிகாசஞ்செய்து கொண்டு வருகின்றனர். அதற்குப் பின் இருவர் நகராவை ஒரு வண்டியில் ஏற்றி இரண்டு கொம்புகளினால் அதன் தோல்புறத்தில் 'டப்டப்' என்று கெடியோசை செய்து கொண்டு வருகிறார்கள். எங்கே பார்த்தாலுந் தீவட்டிகள்; கையில் ஒரு கலயத்துடன் ஒருவன் ஒவ்வொரு தீவட்டியண்டை போய்ப் போய்வருகிறான்; கூட்டத்தவர்க்கெல்லாம் சந்தன தாம்பூலாதிகள் தாட்டியாய் வழங்கப்பட்டன. சந்தனம் பூசா மார்பையாவது வெற்றிலை ரங்கேறாத வாயையாவது அக்கூட்டத்தினுள் காண்பதரிதென்றால் ஊர்கோலம் எவ்விதமிருந்திருக்குமென்பதை வாசிப்போரே அறியட்டும்.

## துன்பக்கடலில் இன்பம் வேண்டினால் வருமா?

கலியாணத்தின் முதல் நாள் இரவிலிருந்து மற்றொரு விஷயமும் மாப்பிள்ளை சேஷுவின் மனதைக் கரையவடித்தது. சேஷுவுக்கு நல்ல யௌவன வயசு. இவ்வயசில் தான் அன்பென்பதும் பட்சமென்பதும் பிரியமென்பதும் ஒருவனுடைய ஹ்ருதயகமலத்தில் பதிவதாகும். அவ்விதம் பதிந்தால் அது பசுமரத்தாணிபோலிருக்குமேயல்லாது சாதாரண உளுத்துப்போன தூணில் அறைபடும் மறைபோலிராது. எனவே வாலிப வயதில் ஒருவனுடைய மனதில் எதுபடுமோ அது மிக்க உறுதியாயிருக்குமென்பதற்குத் தடையில்லை. வாலிபப் பருவம் எதற்குந் துணிவுறுங்காலம்; காற்றுப் பனிக்குச் சிறிதும் அஞ்சாக்காலம். வயற்கரையில் விழுந்து உறங்குங்காலம்; கைப்பிரம்புக்கொண்டு கடலோரஞ் செல்லுங்காலமும் அதுவே. கண் மையிடுவதும், புருகப்புனுகிடுவதும் நெற்றியில் வசிப்பொட்டு மிடுவதும் அக்காலத்தில் தான். ஸர்வேசுவரனால் சங்கற்பித்துள்ள ஆசையென்பது அப்பருவத்திற் கெடுத்தது. அதுவே மாரன்கணையால் மருங்கிவிழிப்பதும். மேலேசொல்லிய பிரகாரம் முதனாளிரவில் தாஸிகளுள் இருவர்



நாட்டியமாடினர். வெகுவாய்ப் பெங்களூர் தாஸியே மிகவும் அழகாயும் பார்ப்போரை மயக்கவல்ல சௌந்தர்யமுடையவளாயும் இருந்தனள். அவள் நாட்டியமாடினபோது தன் முழு கவனத்தையும் மாப்பிள்ளையின்மீது செலுத்தியதுபோல் முகஜாடையாலும் கண் ஜாடையாலும் பாவனைசெய்து முன்வரிசைப் பற்கள் சிறிது தெரியவும் கண்கள் அரைமூட்டமாய் மூடினதும் மூடாததுமாகப் புன்சிரிப்புச் சிரித்து பரத சாஸ்திரப் பயிற்சியில் தான் திறமை கொண்டவள் என்பதைத் தன் பாதச்சிலம்பு கலீர் கலீர் என்பதனால் தெரிவித்து ஆடிக் கூடியிருந்தார் அனைவரையும் தன்வசமாக்கும் தருணீமணியோவென்று திகைக்கும் வண்ணம் பாடலோடு ஆடலைப் பகட்டாய்க் காட்ட, மாப்பிள்ளையின் மனம் முழுவதும் அந்த பெங்களூர்க் கன்னிகையின்மீது சென்றுவிட்டது. அவள் ஆடிக்கொண்டுவரும் ஒவ்வொரு தடவையிலும் அவளது முந்தாணி மாப்பிள்ளையின்மீது பட்டதும் படாததுமாய்ச் சென்றது. அவளது இனிய குரலோசையைக் கேட்கக்கேட்க மாப்பிள்ளையின் மனம் புளகிதமாகின்றது. தனக்குள் ஏதோ ஒருவகை யுணர்ச்சியுண்டானதாகத் தெரிந்துகொண்டான் சிறுவன். அவ்வுணர்ச்சி இத்தன்மையதென்று அவனால் சொல்லக்கூடவில்லை. அவளுடைய 'சாக சக்ய'ங்களை அது பரியந்தம் அவன் அறியாதவன்; ஆதலால் இவனுக்குண்டான உணர்ச்சி, எதிரில் நாட்டியஞ்செய்யும் ஸ்திரீயினாலேயே யென்பனதயுந் தெரிந்துகொண்டான். இவ்விதமாக ஒருமணிநேரம் நாட்டியமானபின்பு மாமனார் மகாதேவய்யர் தன் மாப்பிள்ளையிடத்தும் பெண்ணிடத்தும் ஒவ்வொரு பவுன் கொடுத்து அப்பவுன்களை முறையே இரண்டு தாஸிகளுக்கும் இனாமாய் அளிக்கும்படி சொல்ல, மாப்பிள்ளை சேஷு எந்த தாஸியின்மீது மனம் வைத்தனனோ அந்த தாஸியாகிற பெங்களூராளை அவனிடமும், திருவாரூராள் பெண்ணிடமும் இனாம் வாங்கச் சென்றார்கள். சவரனைக் கையில் வாங்கும்போது மாப்பிள்ளையின் கையில் தன்னுடைய விரல்படும்படி பெங்களூராள் வெகு தந்திரமாய்ப் பெற்றாள். ஏதோ தெரியாமல் அவள் கை நம்மீது இடித்து விட்டதென்று அவன் நினைத்திருந்தானாயினும், அவனது உள்ளத்துள் அக்கன்னிகையின் ஸ்பரிசத்தினால், மேற்சொன்ன வண்ணம் ஒருவகையுணர்ச்சி பிராப்தமாயிற்று. அவள் சவரனை மாப்பிள்ளையின் கையிலிருந்து பெற்றதும் புன்சிரிப்புடன் தலை வணங்கிக் கைகூப்பிக் கும்பிட்டுப் பின் நகர்ந்தாள். அவ்விதம் நகர்ந்தபோது அவள் மட்டும் நகர்ந்தாள் என்று சொல்வதற்கில்லை. மாப்பிள்ளையின் மனதையும் கொண்டு சென்று விட்டாள். அன்று முதல் அவனுக்கு அவள் மீதில் அபிலாஷையுண்டாகி விட்டது. பின்னிரண்டு நாளிலும் அவள் ஞாபகமே அவனுக்கு. நான்காம் நாள் ஊர்கோலத்தின் போது தனக்கெதிரில் வீற்றிருந்த தன் பெண்டாட்டியையும் தன் முன் நாட்டியமாடிய தாஸியையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது, தாஸியினுடைய சுந்தரமான வதனத்திற்குத் தன் மனையாளுடைய கோரமுகம் ஒருபோதும் ஈடாகாதென்று செவ்வையாய்த் தெரிந்து கோபங்கொண்டு, இக்கலியாணம் ஏன் நடக்கவேண்டும் என்று தன்னறியாமலே மனைவியைப் பார்த்துக் கேட்டான்.

தன் நாயகன் தன்னுடன் இவ்விதம் பேசுவான் என்று பெண் எதிர்பார்க்கவில்லை. எனினும் அவனுடைய குரல் தன் செவியிற் பட்டதும் தலை நிமிர்ந்து கணவனைப் பார்த்து அவனுடைய சுந்தரமான வதனத்தை உற்று நோக்கி அக்கூட்டத்தினடுவில் எவ்விதம ஸமரஸமாய் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது என்று சிறிது அச்சமுற்றாள். அப்படிப் பேசிக்கொண்டால் சுற்றிலுமுள்ளவா கணடு பரிகசிப்பாாகளே யென்றும் நாணமுற்றாள். மேலும் தன கணவன சொன்னது தெளிவாய் அவள் காதில் விழாதபடியினாலே நிமிர்ந்து பார்த்த அவள் அவன் கேட்டதற்குப் பதிலுத்தரமாக 'என்ன' என்றாள்.

"இந்தக் கலியாணத்தை உன் தகப்பனர் எதற்காகச் செய்யவேண்டும்?"

"ஏன், உங்களுக்கு இது பிரியமில்லையா!"

"பிரியமா, சை, எனக்கு இது மிக்க வெறுப்பாயிருக்கிறது. இங்கிருப்பதைக் காட்டிலும் ஒரு சமுத்திரத்தின் அடிப்புறத்தில் இருந்தால் நலமென்று தோன்று கிறது."

"அப்படியானால், இதற்கு முதன் முதல் ஏன் சம்மதித்தீர்?"

"நான் ஒருபோதும் சம்மதிக்கவேயில்லை. பலவந்தத்தினாலேயே இது நடந்தேறியது. தேகத்திலும் மனவிலுமாக என்னை விற்று விட்டார்களே."

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் பெண்ணுக்கு ஒன்றுந் தோன்றாமல் சிறிது நேரம் மலங்கமலங்க விழித்துப் பிறகு "உமக்கு என்னைக் கண்டால் வெறுப்பாயிருக்கிறதா அல்லது சீர்கள் சரியானபடி யில்லையென்ற கோபமா" என்றாள்.

"சீருமாச்சு, கீருமாச்சு; உன் சீரைக்கொண்டுபோய் உடைப்பில்போடு. அந்தப் படுபாவிச் சீரினாலேயே என் முழு சுதந்தமுரம் கெட்டுப்போச்சுது; நான் அடையக்கூடிய இன்ப மெல்லாம் துன்பமாய் முடிந்தது. சீரைக் கொடுத்தல்லவோ என்னை ஏமாற்றிவிட்டார்கள். இந்த முழு விவகாரத்தையும் நான் வெறுக்கிறேன். உன்னைக் கண்டால் எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவேயில்லை. உன்னைக் கலியாணஞ் செய்து கொண்டதைக் காட்டிலும் அதோ அங்கே நிற்கிறாளே தேவதாஸி அவளைக் கலியாணஞ் செய்து கொண்டிருப்பேனாயின் நிரம்ப சந்தோஷமாயிருக்கும்" என்றான்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட மணப்பெண்ணின் மனம் கசிந்துருகியது. கண்களினின்றும் நீர் தாரையாய்ப் பெருகி வடியலாயிற்று. இருகன்னங்களிலும் முத்து முத்தாய்க் கண்ணீர்த் திவலைகள் வடிந்துகொண்டிருக்கின்றன. அவ்வெளிய பெண்ணுக்கு ஒருவிதமான பீதி ஏற்பட்டுவிட்டது. யாதொரு பழிபாவத்திற்கும் உள்ளாகாத அவ்வெளிய மங்கையின் இருதயகமலத்தில் சூடு போட்டதுபோல் தன் கணவனது வார்த்தைகள் பாய்ந்தன. சிறிதுநேரம் அவனுடைய முகத்தைக் குறிப்பாய் உற்று நோக்கினள், கணவனே மனதைக் கொள்ளைகொள்ளும் தேவதாஸியின்மீது கண்ணோக்கமாயிருக்கிறான்; மனைவி கண்ணீர் வடிக்கின்றாளே யென்ற இரக்கமில்லை அவனுக்கு. இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த அப்பெண்மணிக்குப் பிறகு மனந் தாங்காமல் விசனத்தினால் யாதொன்றும் பேசமுடியாமல் அவனைப்பார்த்து "ஐயோ, அப்படிப் பேசாதேயுங்கள், அவளைக் கவனித்துப் பார்க்காதேயுங்கள்; என்னைப்பார்த்துக் காருங்கள்" என்று குழந்தை பேசுவதுபோல் குளறவும், அவன் வாஞ்சையாயிருப்பதை யொப்பத் திரும்பினான். அவ்வெளிய பெண்மணிக்கு மனத்துயரம் உண்டாகும்படி தான் வார்த்தையாடினதைக் குறித்துத் தனக்குள்ளேயே விசனித்துப் பிறகு சிறிது மனோதிடத்துடன் 'உன்னைக் கடிந்துகொள்வதில் யாது பயன்? என்னைப் போலவே நீயும் துர்த்தசையில் அகப்பட்டவளாகினும்' என்னைப்பார்க்கிலும் நல்லதாயுள்ள வரன்களைத்தேடி உன் தகப்பனர் உனக்குக் கலியாணஞ்செய்து வைத்திருக்கலாம். அப்போப்பட்ட வரன்கள் இம்மாதிரியான வெகுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும் சித்தமாயிருப்பார்கள். ஆயினும் என் செய்வது! இதெல்லாம் ஒரு பெரிய தவறு; சொல்லமுடியாத தவறு; இரண்டு யௌவனஸ்தர்களை அவர்களது கால முழுவதும் துக்கசாகரத்தில் அமிழ்ந்து கிடக்கும்படி செய்தது முன் யோசனையில்லாததைத் தவிர வேறில்லை" என்று கூறினான்.

இவன் சொன்னது இன்னதென்று அவளால் அறியக்கூடவில்லை. தாங்கள் கூறியது தனக்கு விளங்கவில்லையென்று பெண்கேட்டும், அவன் யாதொருபதிலும் சொல்லாமல் சிறிது நேரம் சும்மாவிருந்து, ஊர்கோலம் முடியும் பரியந்தம் தன் மனதிற்குள் என்னென்னவோ நினைத்தவாறே யிருந்தனன்.

(இன்னும் வரும்.)

L. அனந்தய்யர்.



| சாலிவாகனசகாப்தம்-௧௮௩௯ கலியப்தம்-௫௦௧௮ | | | | பாத்திரபதம் அதிகாச்வீஜம் } பிங்களஹு புரட்டாசி-ஐப்பசி தக்ஷிணாயனம்-வருஷருது } கொல்லம் ௧௦௯௩ } இங்கிலீஷ்-௧௯௧௭, பசலி ௧௩௨௭, அக்டோபர்மீ } ஹிஜரா-௧௩௩௬. ஜில்ஹஜ்-மொஹர்ரம்மீ. |
|---|---|---|---|---|
| 13 | 1 | கசா | திங் | அதிகா விஜகிருஷ்ணபிர சக-சச, உட் க-ருரு, உபரி ருசு-ச0, திரு ௩எ-உச, பா கஅ-ருக, ரா 0-உச, இஷ்டி, சி, |
| 14 | 2 | கஎ | செ | துவி சக-சசு, அசு ருசு-0, வியா ௩0-சசு, தை சச-உ, ரா கசு-௩அ, அஹ உக-ருக, சி, |
| 15 | 3 | கஅ | புத | திரு ௩எ-ருசு, பர ருச-கக, ஹர் உச-சரு, வணி கூ-ருஉ, தி சசு-கசு, சி, அ, |
| 16 | 4 | கசு | வியா | சது ௩ரு-கக, * சார் ருசு-உஅ, வஜ் சக-உசு, பவ கூ-௩ரு, தி உ௩-சக, கிருத்திகோபவாஸம், ம, |
| 17 | 5 | உ0 | வெ | பஞ் ௩௩-௩உ, ரோ ரு௩-ருஉ, வித்தி சரு-உ, கௌ ச-உக, ரா ச-க, வியதீபாதசிரார், ம, சி, |
| 18 | 6 | உக | சனி | ஷ ௩௩-ரு, மிரு ருரு-உசு, விய சக-௩௩, சர ௩-சஅ, தி எ-உச, அஹ உகூ-சரு, சி, |
| 19 | 7 | உஉ | ஞா | ஸ ௩௩-ருஉ, திரு ருஅ-சச, வரி கூ-உ, பத் ௩-உசு, தி சஎ-உச, அலப்யம், சி, |
| 20 | 8 | உ௩ | திங் | அஷ் சரு-ருஎ, புன சு0-0, பரி எ-௩க, பா ச-ருச, ரா 0-௩எ, அ, |
| 21 | 9 | உச | செ | நவ ௩௩-கக, புன உ-சஅ, சிவ எ-0, தை அ-௩ச, தி உச-0, சி, |
| 22 | 10 | உரு | புத | தச ச௩-உச, பூச எ-உரு, வித் எ-சக, வணி கக-சஎ, ரா சஉ-ருஉ, அஹ உசு-௩அ, சி, |
| 23 | 11 | உசா | வியா | ஏகா சஅ-சச, ஆயி க௩-சக, ஸா அ-அ, பவ சரு-சக, ரா சசு-ரு௩, ஸர்வைகாதசி, சி, அ, |
| 24 | 12 | உஎ | வெ | துவா ரு௩-உஉ, மக சக-௩ரு, சுப கூ-உச, கௌ உ0-சஅ, ரா சஉ-க0, ம, சி, [ரவிருதம், அ, |
| 25 | 13 | உஅ | சனி | திர ருஅ-உ௩, பூர உரு-ருக, சுப் க0-சசு, சர உரு-ருஉ, ரா சசு-கஅ, பிரதோஷம், அ, சி, |
| 26 | 14 | உசு | ஞா | சதுர் சு0-0, உத் ௩உ-ரு, ப்ரா சரு-ருஎ, பத் உக-கச, ரா உரு-உக, அஹ உசு-௩உ, சிவராத்ரீவிருதம், திருதினஸ்பிருக், கேதா |
| 27 | 15 | ௩0 | திங் | சதுர் உ-ருரு, ஹஸ் ௩எ-௩உ, பா சஉ-சச, சகு உ-ருரு, ரா உக-௩ச, தர்சசிரா, வைதிருதிசிரா, கன்யாஅமாதிதி, ஸோமவார |
| 28 | 16 | ௩க | செ | ● அமா சு-௩ச, சித் சஉ-ச, வை கஉ-சஅ, நா சு-௩ச, சே ௩-உ, ரா உஎ-உக, துலாரவி சஅ-சஎ, இஷ்டி, நவராத்திரிபூஜாரம் |
| 29 | 17 | க | புத | சுஜாச்வீஜசுக்லபிர கூ-அ, சுவா சரு-உ௩, விஷ் கஉ-உ, பவம் கூ-அ, சே 0-சஅ, ரா ௩0-உஅ, விஷ்ணுபுண்யகாலம், விருத்தியர்க [கப, அஹ உக-உஅ, வாக்கியம், துருவம், சந்திரதர்சனம், துலாஸ்நாநம், துலாசுக்லதுவிதியாதிதி, சி, |
| 1 | 18 | உ | வியா | துவி க0-உக, விசா சஎ-௩க, ப்ரீ க0-கசு, கௌ க0-உசு, சே ௩-ரு௩, ரா உஅ-சரு, சி, |
| 2 | 19 | ௩ | வெ | திரு க0-௩௩, அனு சஅ-உஉ, ஆயு எ-௩எ, கர க0-௩௩, சே க-௩க, சதுர்தீவிருதம், துர்காகேசசோதனம், சி, ம, [ணம், சி, அ, |
| 3 | 20 | ச | சனி | சது கூ-உக, கேட் சஅ-௩, ஸௌ ௩-ருஉ, உபரி கரு-உஉ, பத் கூ-உக, தி உ-கஎ, தூர்சாஸ்நாநம், சி, |
| 4 | 21 | ரு | ஞா | பஞ் எ-க, மூல சசு-௩க, அதி ரு௩-ச0, பா எ-க, தி எ-௩ரு, ரா க௩-உ0, அஹ உக-உஉ, ஷஷ்டிவுபவாஸம், ஸரஸ்வத்யாவாஹ |
| 5 | 22 | சா | திங் | ஷ ௩-௩அ, உப ருரு-சக, பூரா சச-உ௩, ஸுக சஎ-உசு, தை ௩-௩அ, சர உஎ-ருரு, தி கூ-சச, அவமா, தூர்காவிருதம், சி, ம, [ம, சி, |
| 6 | 23 | எ | செ | அஷ் ருச-உஅ, உரா சக-உ௩, திரு சரு-௩அ, பத் உக-ருஎ, தி ௩-உ௩, ரா உக-௩0, தூர்காஷ்டமி, சி, |
| 7 | 24 | அ | புத | நவ சஅ-ருக, திரு ௩எ-சக, சூல ௩௩-சஅ, பா உக-ச௩, ரா கஎ-ருரு, சிரவணோபவாஸம், ஸ்வாயம்புவமன்வாதி, ஸரஸ்வதீபூஜா |
| 8 | 25 | கூ | வியா | தச ச௩-ச0, அவி ௩௩-ருஉ, கண் உரு-சஅ, தை கசு-ச, ரா உக-உச, விருச்சிகாயனம், உரு-ருரு, அஹ உகூ-கசு, விஜயதசமி, தச |
| 9 | 26 | க0 | வெ | ஏகா ௩எ-கச, சத உக-சசு, விரு சஅ-ச, வணி ச0-கஉ, ரா கரு-உஅ, ஸர்வைகாதசி, சி, [ரத கௌரீவிருதம், சி, ம, |
| 10 | 27 | கக | சனி | துவா ௩க-உஉ, பூட் உரு-சஉ, திரு க0-கக, பவ ச-கஅ, ரா உ௩-௩, பிரதோஷம், ம, சி, |
| 11 | 28 | கஉ | ஞா | திர உரு-சஎ, உட் உக-ரு௩, வியா உ-சசு, உபரி ருஉ-சரு, தை உரு-சஎ, ரா உக-உ, துவவீவிருதம், அ, |
| 12 | 29 | க௩ | திங் | சதுர் உ0-௩க, ரே கஅ-௩க, வஜ் சஅ-௩சு, வணி உ0-௩க, தி 0-0, அஹ உக-கக, அன்னாபிஷேகம், திதித்வயம், சி, [கௌரீவிருதம், சி, |
| 13 | 30 | கச | செ | ○ பௌ கசு-க, அசு சரு-ச௩, வித்தி சஉ-கஅ, பவ கசு-க, தி சு-கக, ரா கூ-சஅ, இஷ்டி, சி, |
| 14 | 31 | கரு | புத | சுஜாச்வீ கிருஷ்ணபிர கஉ-உசு, பர க௩-ச௩, விய ௩சு-சஉ, கௌ கஉ-உசு, ரா கச கு, கிருத்திகோபவாஸம், சந்திரோதய |

## கிரிமினல் வியவஹார ஸங்கிரஹம்.

எல்லாக் கிரிமினல் சட்டதிட்டங்களையும் அடங்கியதும் ராயல் 450-பக்கங்களுக்கு மேல் அடங்கியதும் பூரா காலிக்கோத் துணியினல் பைண்டு செய்யப்பட்டு தங்கஇல்ட்டுக் கொடுக்கப்பட்டதும், மாட்சிமை தங்கிய கவர்ன்மெண்டார் அவர்கள், கனம் ஹைக்கோர்ட்டு ஜட்ஜிகள் முதலியவர்களாலும் நன்கு மதிக்கப்பட்டு நற்சாட்சி பத்திரம் அளிக்கப்பட்டது. 33 வருஷம் கிரிமினல் பிராக்டிஸ்செய்த உலகறிந்த ஓர் வக்கிலால் எழுதப்பட்டது.

சில பிரதிகள்தானிருக்கின்றன. இனி அச்சிடப்படமாட்டா இதன் விலை, ரூ. 2-8-0. தபால் சார்ஜ் பிரத்தியேகம். வேண்டுவோர் "கல்பதரு" ஆபீசு மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.




டாக்டர் பார்த் என்பவரின் சர்வபடை சங்காரியை யுபயோகித்தால் எவ்விதத்திலும் தீராத படைகள், மேகப்படைகள், தடிப்பு படைகள், படர்தாமரை, எச்சிற்றேம்பல் இன்னும் அநேகவித படைகள், தேம்பல்கள், வண்டுகடி, தேக ஊரல், நமைச்சல், சொறி இவைகளெல்லாம் கண்டிப்பாய் குணமாகிவிடும். இம்மருந்தின் ஆச்சரியமான குணமாவது வெகு சீக்கிரத்தில் குணமாக்கி மறுபடியும் வராதபடிக்குச் செயயும். இக்குணத்தைத் தான் ஒவ்வொருவரும நன்றாய்க் கவனியுங்கள். இதர படை மருந்துகளைப போலல்லாமல எக்காலத்திலும திரும்ப வராதபடிக்குச் செய்யும். பெரியகுளம் மிஸ்டர் அருணசலம் செட்டியாா பின்வருமாறு எழுதுகிறார்:—"தங்களுடைய டாக்டர் பார்த் என்பவரின் சர்வபடை சங்காரிக்கு ஒன்றையும் ஈடாகச சொல்லமுடியாது. நான் இது பரியந்தம அநேகரிடத்தில் பணததைச் செலவு செய்து மருந்து உபயோகித்ததில் ஒனறிலும சுகப்படாமல் தங்களுடைய மருந்தே என்னுடைய அசங்கிதமான தேமல்களையெலலாம் 3 நாளில் தீர்த்துவிட்டது." இம்மாதிரி வேண்டிய நற்சாட்சிப் பத்திரகைள் இருக்கின்றன. டப்பி 1-க்கு அணு 12. தபால் பாக்கிங்கூலி பிரத்தியேகம்.

வேண்டுவோர்:—பி. எஸ். பொம்மையா அண்ட் கோ.,

52, செம்புதாஸ் தெருவு, மதராஸ் என்றெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

## N. வேங்கடராயலு அண்டு ஸன்.,

புத்தக வியாபாரிகள், 87, ராமசாமித்தெரு, முத்தியாலுப்பேட்டை, சென்னை.

**BOOKS SUITABLE FOR SCHOOL AND HOME READING**

***All Approved by Text-Book Committee.***

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஸரஸ்வதி ... | 2 | 0 | கண்களின் பயன் ... | 1 | 0 | படிக்லை ... | 1 | 6 |
| ஸுலோசனை ... | 2 | 0 | எறும்பின் அனுபவங்கள் ... | 2 | 0 | விசித்திர வைத்தியன். | 2 | 0 |
| இட்டார்க்கு இட்ட பயன் ... | 1 | 0 | நற்கீரன் ... | 1 | 0 | பொனமான் ... | 1 | 0 |
| ஊக்கமே உயிர்த்துணை | 1 | 0 | லக்ஷ்மன் ... | 1 | 6 | கோமளாங்கி ... | 1 | 6 |
| கனகாங்கி ... | 4 | 0 | பரதன் ... | 2 | 0 | பெரிய மனிதனுடைய பிள்ளை ... | 0 | 6 |
| பம்பண்ணன் ... | 1 | 0 | கௌசல்யாதேவி ... | 2 | 6 | இரண்டு நாய்களின் கதை ... | 1 | 6 |
| மீனுக்ஷி ... | 1 | 0 | க்லைமைக்குத தகக | | | | | |

ஸ்ரீராமஜயம்.

# கல்ப தரு.

KALPA THARU.

அறிவு வளர்ச்சிக்கான ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புஸ்தகம் 1. Vol. 1. } பிங்களஹு அற்பசி-OCTOBER., 1917. { ஸஞ்சிகை 8. No. 8.

# PART I.

## THE BRITISH ARMY—THE WAY OF THE RECRUIT.

## பிரிடிஷ் சைந்யம்—ரிக்ரூட் நடக்கவேண்டிய க்ரமம்.

### ரிக்ரூட்டின் பயிற்சி.

(201-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு ஸிவிலியனுக்கு அவனுடைய வேலையில் இஷ்டமில்லாமற் போமாயின் எச்சமயத்திலும் அவ்வேலையை விட்டுவர அவனல் முடியும். அவனுடைய எஜமானர்களாயினூர்க்குத் திருப்தி செய்யமுடியாதவாறு ஸிவில் உத்யோகத்திலிருப்பவன் நடந்துகொண்டால், மேலதிகாரிகள் அவனை எச்சரித்தாவது விடுகிறார்கள்; வேலையிலிருந்து நீக்கியாவது போடுகிறார்கள். சைங்யத்திலோ அப்படியல்ல; ராணுவத்திற் சேர்ந்த ஒரு ரிக்ரூட்டிற்கு அவனுடைய வேலை வெறுப்பாகக் காணுமிடத்து, அவ்வெறுப்பை வெளிக்குக் காட்டாது கட்டி தூரத்தில் வைக்கவேண்டுமே யல்லாது நிதர்சித்துக் குறிக்கலாகாது. வேலையைச் செய்துகொண்டே போகவேண்டும். ரெஜிமெண்டல் அதிகாரிகள் ஒரு ரிக்ரூட்டின் வேலை அதிருப்திகரமாயிருக்கக் காணின், அவனை எச்சரிப்பதற்கும், வேலையிலிருந்து நீக்குவதற்கும் முந்தி, அவன் காட்டிய அதிருப்திக்கும் அசிரத்தைக்குமாக

அவனுக்கு வெவ்வேறு மாதிரியான சிக்ஷை விதிப்பார்கள். பொதுவாகப் புதிய ரிக்ரூட்டுகளுக்குத்தான் இச்சிக்ஷைகள் அதிகமிருக்கும்; ஏனென்றால் ராணுவத்திற் சேர்ந்து பழகிய பழைய ஸோல்ஜருக்கு இதினைச் செய்யவேண்டும், இதினை விட்டுவிடவேண்டும் என்பது நன்றாகத் தெரியுமாதலால் அவன் ஸமயானுஸாரத்தைத் தழுவிப்போய் விடுவான். ராணுவத்தில் குற்றம் என்று சொல்லப்படும் முக்கால்வாசிக் காரியங்கள் ஸிவில் இலாகாவில் குற்றங்களாக மதிக்கப்படமாட்டா. உதாரணமாக, ஒரு ரிக்ரூட்டானவன் தான் இருக்கும் அறைப் பாதுகாப்பாளியாகிற கார்ப்போரலையும், 'ட்ரில்' பயிலுவிக்கும் ட்ரில் இன்ஸ்டர்கடரையும், தான் சேர்ந்திருக்கும் ராணுவப்பகுதிக்கு மேலாயிருக்கும் ஸார்ஜெண்டையும், நான்-கமிஷண்டு ஆபிஸரையும் மற்றுமுள்ள பல்வேறு மேலதிகாரிகளையும் திருப்தி செய்ய வேண்டியவனாக இருக்கிறான். அற்பகுற்றத்திற்கும் அவன் உத்தரவுசொல்லியே தீரவேண்டும். ஸிவில் உத்தியோகத்தில் சகஜமாகத் தோன்றுவதனைத்தும் ராணுவத்தில் கவலையோடும் தீர்க்கமாகவுங் கவனிக்கப்படும். பயிற்சிக்குப் போகுங்கால் ரிக்ரூட்டின் சட்டைப் பொத்தான் பளபளப்பாயிராது மாசுபடிந்திருந்ததாகத் தோன்றினாலும், அதிகாரத்திலிருப்போரிடம் அவசரமாக வார்த்தையாடினாலும், பயிற்சியில் கவனமில்லாது வேறெதிலாவது 'பராக்கு' வைத்தாலும், ராணுவத்தில் அவன் திருப்தி காட்டவில்லை யென்ற குற்றம் ஏற்படுத்தி அறையில் வைத்துப் பூட்டிவிடுவார்கள். சில்லரை வேலைகளைச் செய்யச் சொல்லுவதும் ராணுவத்தில் ஒருவித சிக்ஷையெனவே கருதப்படும். பாராச்சாலையில் பிற்பகலிலும் மாலையிலும் கூப்பிட்டகுரலுக்குப் பிரதியுத்தரம் சொல்லும் டியூடியில் தொடர்ந்தேர்த்தியாக அமர்த்தியிருப்பதும் ஒருவகைச் சிக்ஷையாகும். சுருக்கிச் சொல்லின் ராணுவத்தில் எவ்வளவு சிறிய வேலையாயினும் ஒருபோதும் அதனை அலக்ஷ்யமாகக் கருதுவது கூடாது. அலக்ஷியமாயின், அது குற்றத்திற்கிலக்காகும்.

### குற்றத்திற்கேற்ற தண்டனை.

ஸிவில் இலாகாவில் எந்தச் செய்கை அவ்வளவாகக் குற்றமென்று கருதப்படாதோ அதே செய்கை, எவ்வளவு அற்பமாயிருந்த போதிலும், ராணுவ இலாகாவில் குற்றமெனவே பாவிக்கப்படுமென்று மேலே சொன்னோமல்லவா? ராணுவத்தில் ரிக்ரூட்டானவன் வேண்டுமென்றோ தானறியாமலோ செய்யக்கூடிய அவ்வற்பச் செய்கைகளில் இரண்டொன்றை உதாரணங்களாகக் காட்டுவோம். குறித்த நேரத்திற்கு ரிக்ரூட் ஆஜராகாதிருந்தால் அது தவறு; ஆடையுடுப்பதில் ஏதேனும் வித்தியாஸமிருந்தால் அது தவறு; மேலுத்தியோகஸ்தர் தன்னைக்கடந்து செல்லும்போது அவருக்கு மரியாதை காட்டுமாறு 'ஸல்யூட்' (சலாம்) செய்யாதபோனால் அது தவறு; பின்னும், க்ஷவரம் செய்துகொள்ளாமற் போனாலும், சட்டைப் பொத்தான் 'தகதக'வெனப் பிரகாசிக்கும்படி 'க்ளீன்' செய்யப் படாமலிருந்தாலும், அதிகாரத்தைச் செலுத்தும் ஆபிஸரிடம் அவசரம் அவசரமாக வார்த்தையாடினாலும் சரி—இவையெல்லாம் பார்க்கப்புகின், அற்பமாயினும், ராணுவ துவாராவில் குற்றமெனவே பாவிக்கப்படும். இம்மாதிரியாக அறிந்தும் அறியாமலும் இருக்கக்கூடிய அற்பசெய்கைகளே குற்றங்களாகப் பாவிக்கப்படுகையில் உண்மையிலேயே குற்றமாயிருக்கும் வேறு செய்கைகளுக்குச் சாற்றப்படும் குற்றங்களைக் குறித்து நாம் ஒன்றுமே சொல்ல வேண்டாம். அற்பகுற்றஞ் செய்த ரிக்ரூட்டிற்குச் சாதாரண தண்டனை விதிக்கப்படுவது எப்படியென்றால், இரண்டு மணி நேரம் அந்த ரிக்ரூட் காவலிலிருக்கவேண்டுமென்று வைத்துக்கொள்வோம்; அதை இன்னும் இரண்டுமணிநேரம் அதிகமாக்கி விடுவார்கள். இம்மாதிரி செய்விப்பதிலும் ரிக்ரூட் திருந்தாதுபோனால், அவனை டிடென்ஷன் பாரெக்ஸ் (Detention barracks) என்று சொல்லப்படும் 'தங்குபாசறை'க்கு அனுப்பி ஒரு மணியோ, இரண்டு மணியோ அல்லது மூன்றுமணியோ அடைத்து வைத்திருப்பார்கள்.



### ரிக்ரூட்செய்யும் குற்றேவல்கள்.

மற்றும் ரிக்ரூட்செய்திருப்பது பெரிய குற்றமாக மேலதிகாரிகளுக்குத் தோன்றுவதாகவே வைத்துக்கொள்வோம். "பாசறையில் அடைத்துவைப்பது" குற்றஞ்செய்தவனென்று யோக்கியதா விவரங்களைக் குறிப்பதற்காகவிருக்கும் ரிமார்க்கு புஸ்தகத்தில் எழுதுவது—இன்னும் இவைபோன்ற சில்லரைத் தண்டனைகள் ரிக்ரூட்டிற்கு விதிக்கப்படும். இன்னுஞ் சில பெரிய குற்றச்செய்கைளுக்கு ரிக்ரூட்டுக்கு விதிக்கப்படுந் தண்டனையோ, இடைவெளி நேரத்தில் ரெஜிமெண்டிற் செய்யப்படவேண்டிய ஈனத்தொழில்களாகும்; துடைப்பமெடுத்துக் குப்பை கூளங்களைப் பெருக்குவது, உண்டபின் உணவுப்பாத்திரங்களைத் துலக்குவது, பாசறையிற் கட்டியிருக்கும் படுதாக்களையும் தட்டிகளையும் தூக்கிக்கட்டவோ, அவிழ்த்து விடவோ செய்வது, பாசறைத் தோட்டங்களைக் கொத்திவிடுவது, புஷ்பச்செடிகளுக்குத் தண்ணீர் மொண்டு ஊற்றுவது, சவர்க்காரம் போட்டு அழுக்கு வஸ்திரங்களைத் தோய்த்துச் சுத்திகரிப்பது, பண்டங்களைக் கைவண்டிகளிற் போட்டு ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு இழுத்துக் கொண்டு போவது—ஆக இவ்விதமாகக் குற்றேவல்கள் புரியவேண்டும். இன்னுமொருதண்டனை 'கார்டுரூம்' என்று சொல்லப்படும் பாரா கொடுக்கும் ஸ்தானத்தில் கூப்பிட்ட குரலுக்குத் தயாராயிருந்து பதில் சொல்லவேண்டுவது. இம்மாதிரி பதில் சொல்லுவது ஒரு மணியோ, இரண்டு மணியோ, அல்லது ஒரு பகல் முழுவதுமாயிருக்கும். கடைசியில் ஒருராணுவ ஆபீஸர் ஊதுகுழலினால் சப்திக்கவும், தண்டனை விதிக்கப் பட்டிருக்கும் ரிக்ரூட் எந்த ரெஜிமெண்டைச் சேர்ந்தவனோ அந்த ரெஜிமெண்டைச் சேர்ந்த மற்ற ஆபிஸர்கள்

வரிசையாக மைதானத்திற்கு வந்து வரிசையாக நின்று விடுவார்கள். அவர்களுக்கு முன்னிலையில் இந்தக் குற்றேவல்புரியும் ரிக்ரூட்டைக் கொண்டு போய் நிறுத்தி அவன் செய்தகுற்றததை உரக்கவாசிப்பார்கள்; அச்சமயத்தில் ரிக்ரூட்டின் மனம் இன்னவிதமிருக்குமென்பதை நாமிங்கு சொல்ல வேண்டாம். ரிக்ரூட்டின் குற்றச்செய்கை உரக்கப் படிக்கப்பட்ட பிறகு அவன் மீது சார்ஜை யேற்படுத்திய தலைமையாபிஸரிடமிருந்து முதல் வாக்குமூலம் வாங்கப்படும். குற்றம் நேர்ந்த சமயத்தில் வேறெவராவது இருந்தால் அவரிடமிருந்து இரண்டாவது வாக்குமூலம் வாங்கப்படும். பிறகு குற்றவாளியாக நிற்கும் ரிக்ரூட்டைப்பார்த்து 'நீ என்ன சொல்லுகிறு' யென்று கேட்பார்கள். குற்றஞ்சாட்டப்பட்டிருப்பது விசேஷ அக்கிரமமாயிருந்தாலன்றி அநேக சந்தர்ப்பங்களில் குற்றவாளியாக நிற்கும் ரிக்ரூட்டானவன் 'ஏதுமில்லை, ஐயா' என்று சொல்லி விடுவான். பிறகு அங்கிருக்கும் மேலதிகாரி தீர்ப்புச்சொல்லுவார்.

---

# PART II.

## SANITATION.
## ஆரோக்கிய விமர்சனம்.

### நித்திரை.

BY Mr. K. P. SESHADRI AIYANGAR.
(*Teacher, Muthiyalpet High School, Madras.*)

(203ம்-பக்கத் தொடர்ச்சி.)

#### எவ்வளவு நேரம் தூங்கவேண்டும்.

5-மணி தூங்கினுல் போதுமானது. 7-மணி தூக்கம் ச்லாக்யமென்று சிலர் வைத்துக்கொண்டிருக்கிறுர்கள். இவ்வளவு காலம் தூக்கத்தில் போவது வீண். ஆனுல் இவ்வளவு அதிகமாகச் செலவிட பாக்கியம் பெற்றவர்களை நாம் வெறுக்கவேண்டாம். அவர்கள் புண்ணிய புருஷர்கள். இரவில் $10\frac{1}{2}$-மணிக்குப் படுத்து $4\frac{1}{2}$-மணிக்குத் தப்பாமல் எழுந்திருக்கவேண்டும். இவர்கள் மட்டில் இரண்டுமணி காலம் அதிகமாகத் தூங்குகிறுர்கள். அது அனுவச்யமென்றே சொல்லவேண்டும். 5-மணி தூக்கம் நியாயம். 7-மணித்தூக்கமோ புண்ணியவான்கள் செய்த பாக்கியம். இந்த 7-மணியும் போதாதென்று சிலர் 9-மணியும் தூங்குகிறுர்கள். இப்படித் தூங்குகிறவர்களைச் சோமாரிகள் என்று நித்திரையைப் பற்றிய புத்தகங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் மகாபாபிகள்.



ஆம் எழுதுவது வெகு சுலபம். கம்மென்று துப்பட்டியைப் போர்த்துக்கொண்டு தூங்கும் சுகத்தைவிட்டு விடியற்காலம் யாரால் இந்த குளிர்காலத்தில் எழுந்திருக்க முடியும் என்று சிலர் எண்ணக்கூடும். அது வாஸ்தவந்தான். இப்படி யோசித்துக்கொண்டு படுத்திருந்தால் மட்டில் எழுந்திருப்பது வருத்தமேயல்லாது எழுந்திருக்கவேண்டுமென்று நிச்சயித்துவிட்டால் எழுந்திருப்பது வருத்தமேயல்ல. துலுக்கவித்வான்கள் காலையில் தூங்குகிறவர்களை 'சண்டாளன்' என்று சொல்கிறுர்கள்.

"பார், புத்தியற்ற கோழி என்ன! காக்கை என்ன! இவை முதலிய பக்ஷிகளும் சூரியனுதயமாகும் முன், ராத்திரிபோய் விட்டது பகல் வரப் போகிறது, அவனவன் தன் தன் வேலைக்குக் கிளம்பும் காலமிது, கிளம்பு முன் ஈசுவரன் தூக்கத்தைக் கொடுத்து ஊக்கத்தை ஊட்டியதற்காக அவரைத் தோத்திரம் செய் என்று பாடுகின்றனவே! புத்தியுள்ள மனிதன் மட்டில் மெய்ம்மறந்து இந்தக் காலத்தில் தூங்கினுல் அவனைவிடச் சண்டாளனுமுண்டோ?" என்று இவ்வாறு சொல்லியுள்ளார். நமது நண்பர்களில் சிலர் காலைத் தூக்கமுள்ளவர்களா யிருக்கலாம். இதை எழுதும் யானும் சிலவேளையில் நித்திரை செய்துமிருக்கலாம். என்னையும் மற்றவர்களையும் நிந்திப்பதற்காக இதை எடுத்து எழுதவில்லை. அதிகாலையில் ஒவ்வொருவரும் நித்திரை நீத்து எழுந்திருக்கவேண்டியது அவசியம் என்பதை மட்டும் வற்புறுத்தவேண்டியதிருக்கிறது.

#### ஸுகமாய் நித்திரையடையும் மார்க்கம்.

ஒருவன் நன்ருய் நித்திரிக்கவேண்டு மென்றெண்ணங் கொள்ளுவானுனல் சில விஷயங்களை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். உலகத்தில் ஜனித்திருக்கும் ஸகல ஜீவராசிகளும் இந்த நித்திரை வலையில் அகப்பட்டுத்தான் தீரவேண்டும். அப்படியிருக்க இந்த நித்திரையை வேண்டாத ஒரு ஜீவனும் இராதென்றே திண்ணமாய்ச் சொல்லலாம்.

காபி, தேயிலை முதலிய பானங்களை யுட்கொண்டால் நித்திரைக்குப் பங்கம்வரும். அபினியென்பதை ஔஷதமாக உபயோகித்தால் நித்திரை கொஞ்சம்வருவதுபோலிருக்கும். ஆனுல் அது வழக்கமாக உபயோகிக்கப் பட்டுவரின் தூக்கம்வருவது நாளுக்குநாள் குறைந்துகொண்டுவரும் என்பதைத் திண்ணமாய்ச் சொல்லலாம். நித்திரை கொள்ளவேண்டி வைத்யர்கள் வியாதிஸ்தர்களுக்கு அபினிமுதலிய லாகிரிவஸ்துக்களைக் கொடுக்கிருர்கள். அந்த ஔஷதம் உட்கொண்ட சமயந்தான் நித்திரைவரும். பரீக்ஷைக்குப் படிக்கும் மாணவர்கள் இரவெல்லாம் கண்விழித்துப் படிக்க எண்ணிநித்திரைவராமல் தடுக்க தேயிலை, காபி முதலிய பானங்களை இரவில் அருந்துகின்றனர். இதனுல் அந்தப்பானங்கள் நித்திரையைக் கெடுக்கும் என்பது விளங்குகிறது.

நமது சரீரத்தில் எந்த அவயவத்திற்கேனும் இயற்கைக்கு மாருக

ஏதாவது அவஸ்தைநேரிட்டால் நித்திரைக்குப் பங்கம்வரும். ஸ்வாசபந்தம், மலபந்தம், ஹ்ருதயரோகம் முதலிய வியாதிகளிருப்பின் இரவில் கண்ணோடு கண்மூடாது உட்கார்ந்தபடி அவஸ்தைப்படவேண்டிவரும். இந்த அவஸ்தையில் நித்திரை வருவதெப்படி? ஆகையினால் தேகத்தையும் மனஸையும் முற்றிலும் ஆரோக்ய நிலைமையிலும் இன்பமான ஸ்திதியிலும் அமைத்து வைக்கவேண்டியது ஸுகமான நித்திரையை யடைய நன்மார்க்கம்.

### சயன க்ருஹம் எவ்விதமிருக்கவேண்டும்.

நித்திரிக்கும்போது பரிசுத்தமான காற்றோட்ட மிருக்கவேண்டும். மாடி வீடாகவிருப்பின் மாடியிலேயே ஓர் அறையைப் பள்ளியறையாக அமைத்துக்கொள்வது மிகவும் நல்லது. பட்டணங்களில் விஷவாயு அதிகம். அந்த விஷவாயுக்கள் பூமிமட்டத்திலேயே அதிகமாயிருக்கும் ஸ்வபாவத்தை யுடையன. ஆகவே, சயனக்ருஹத்தை மாடிகளில் அமைத்துக்கொள்வது முறைமை. ஈரமான தரைகளில் படுத்துறங்கக்கூடாது. அதனால் வியாதிகள் உண்டாகும். நம்ம ஸ்த்ரீகளில் அநேகர் ஈரத்தரையில் பாயும் படுக்கையு மில்லாமல் சுருட்டி சுருட்டிப் படுத்துக்கொள்ளும் வழக்கமுண்டு. அவர்கள் அவ்விதம்செய்வதை விட்டுவிடவேண்டும்.

சயனிக்கும் படுக்கையும் நல்ல நித்திரைவருவதற்குக் கவனிக்கவேண்டிய முக்கியமான ஸாதனங்களுள் ஒன்று. நாம் கதைகளில் ராஜாக்கள் ஹம்ஸதூலிகா மஞ்சத்தில்படுத்து நித்திரைசெய்ததாகப் படித்திருக்கிறோம். அப்படிப்பட்ட மெதுவான படுக்கையில் படுத்தால் சுகமான நித்திரைவரும் என்பதுமட்டும் நமக்குத் தெரிகிறது. சிலர் படுக்கை மெதுவாக விருக்கக்கூடாது, உரப்பாகவும், அழுத்தமாகவு மிருக்கவேண்டும் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். அதுவும் சரிதான். ஆனால் அவனவனுடைய இஷ்டத்திற்குத் தகுந்தபடி படுக்கை அமைக்கப்பட்டிருக்கவேண்டும். சிலருக்குத் தளர்ந்துள்ள மெதுவான படுக்கையில் விருப்பமிருக்கலாம். வேறு சிலருக்கு கல்லைப்போல கெட்டியான படுக்கைவேண்டுமென்று எண்ணமிருக்கலாம் படுக்கை அவனவனிஷ்டத்திற்குத் தகுந்தபடி அமையாவிட்டால் நல்ல நித்திரையுண்டாகாது. படுக்கையின்மேல் கனமானதும் உஷ்ணமுள்ளதுமான நல்ல விரிப்பைப்போட்டுவைக்கவேண்டும். அந்த விரிப்புகளை அடிக்கடி துவைத்து உலர்த்திப்போட்டுக் கொள்ளவேண்டும். இந்தக் குளிர் காலங்களில் வெயில் காயும்போது படுக்கைகளை உலர்த்திவைக்கவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் உடம்புக்கு வியாதிகள் உண்டாகும்.

கீ. பி. சேஷாத்திரி அய்யங்கார்.



# PART III.

## KNOWLEDGE ON AGRICULTURE, etc.

BY Mr. G. RAJAGOPAL,
*Late Editor, "South Indian Agriculture."*

## விவசாய ஞானம்.

(205-ம் பக்கத் தொடர்ச்சி.)

வேர் மூலமாக கிரகிக்கப்படும் ஜலமும் இரும்பு, கந்தகம், பாஸ்பரம், பொடாஷியம் முதலிய தாதுக்களும் இளமரத்து பிந்து வழியாக மேல் நோக்கி இலைகளில் சேர்கின்றன. அங்கே ஆகாயத்திலிருந்து எடுத்த கரியணுவுடன் கலந்து பிந்துக்களில் உயிர்நிலை வஸ்துவாகி (Protoplasm) இளகியிருக்கும்.

ஒவ்வொரு செடியும் ஒவ்வொரு வருஷத்துக்கு வேண்டியவளர்ச்சிக்குத் தக்கபடி மாவு உண்டாக்கினாலும் மறுவருஷத்திற்கு வேண்டிய வளர்ச்சிக்கும் மாவை வித்துக்களிலாவது கிழங்கிலாவது சேர்ப்பதுண்டு. கிழங்குகள், தாளிப்பனை குருத்துகள் நாகதாளிபடைகள், தாமரை வேர்கள், வற்றிக்கிழங்கு, கற்றாழை படல் முதலியவைகளிலும் மாவு சேர்ந்திருக்கும்.

பழமரங்களில் அரும்பு கட்டும் போதே புஷ்பங்களும் கிளம்புகின்றன. இவைகள் போஷிக்கப்படவேண்டுமென்று முன் வருஷத்திலேயே கிளைகளிலும் கொம்புகளிலும் மரத்திலும் வேரிலும் மாவு சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில் புஷ்பத்தோடு இலை வருவதால் அதன்வேலை புஷ்பத்துக்கு அச்சமயம் உதவாது. ஆகவே முன் வருஷத்திய இலையின் பலன் பின் வருஷத்து காய்ப்புக்கு உதவுகிறது. ஆகவே மரங்களில் தழை கெடுதிபடாமல் வைக்கப்பட்டால்தான் மறுவருஷம் பலன் கிடைக்கும். மரங்கள் ஒன்றோடொன்று படாமலும் இலைகள் நன்றாய் வெயிலில் பட்டும் இருந்தால் தான் பழம் உற்பத்தியாகும்.

மிருகராசிகளைப்போலவே செடிகளும் ஆகாயத்திலிருந்து பிராணவாயுவை ராத்திரியில் உட்கொள்ளுகின்றன. பிராணவாயு இலைப் புரைச்சல்கள் வழியாய் பிந்துக்களுள் சென்று பிராணநிலைமையைக் காப்பாற்றுகிறது. பிராணவாயு கலந்த ஆகாரம் செடி முழுவதும் பரவி போஷிக்கிறது. காற்றில் விடுதியாயிருக்கும் உப்புவாயு பிராணவாயுவின் வேகத்தைக் குறைக்க உதவுகின்றது. உப்புவாயுவும் பிராணவாயுவும் கலந்திருந்தால்தான் மிருகராசிகள் மூச்சு உட்கொள்ள பருவப்பட்டிருக்கிறது. மிருகராசிகள் ஆகாயத்தை அசுத்தம் பண்ணிக்கொண்டே யிருக்கின்றன செடிகளோ அசுத்தத்தைக் கண்டித்து ஆகாயத்தைச் சுத்தப்படுத்துகிறது. ராத்திரி காலங்களில்

பிராணவாயுவை உட்கொண்டு கரியமிலவாயுவை வெளிவிடுகின்றன. ஆனால் இவ்வாறு வெளிவரும் கரியமிலவாயு மிக்க கொஞ்சம் ஆனதால் ராத்திரி காலத்தில் செடிகள் அடியில் தூங்குவதில் இக்கெடுதி புலப்படுவதில்லை. படுக்கை அறையில் இத்தீங்கு தெரிவதில்லை.

செடிகள் இலைகளிலிருந்தும்மிருதுபட்ட இடங்களிலிருந்தும் நீராவியை வெளிவிடுகின்றன. ஆகாயத்திலிருந்து முக்கியமாய் வேண்டிய கரியணுவை கிரகிப்பதுபோல அதன் கமிர்ப்புக்கும் செடிகளுக்கும் பிடிப்புண்டு. ஒரு சிறு இள இலையை ஒரு வெண்மையான சீசாவுக்குள் அடைத்து தலைகீழாக வைக்க கண்ணாடி உள்புரம் கிரமமாகவே மங்கலடைந்து ஜலத்துளிகள் வடிவதுண்டு. இந்த ஜலம் ஆவியாக வெளிப்பட்டது. வேர் கிரகிக்கும் ஜலம் இவ்வாறு இலைவழியாய் வெளிவருகிறது. வேரில் வரும் ஜலம் மண்ணின் சத்துக்களுடன் கலந்திருக்கும். செடிக்குவேண்டிய ஈரத்துக்கு, அதிகமாக வேர் மூலமாக ஜலம் வருவதால் ஆகாரம் இலையில் தங்கி அதிகப்பட்ட ஜலம் வெளியாகிறது. இந்த ஜலம் ஆவியாவது முன்சொன்ன (Stomcta) துவாரங்களின் வழியாய்த்தான். இவைகள் இலையின் அடிப்பாகத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆறு அடி உயரமுள்ள ஒருசூரியகாந்தி செடி வளரும் காலத்தில் ஒரு நாளில் அரைபடி ஜலத்துக்கு அதிகமாக வெளியாக்கிற்று. பெரிய மரம் வேனிற் காலத்தில் ஒரு நாளில் 50 மரக்கால் தண்ணீரை வெளிப்படுத்துகிறது. ஒரு அவுன்ஸ ($2\frac{1}{2}$-துலம்) உலர்ந்த பதார்த்தம் செடியில் நிலைக்க 15-25-ராத்தல் செடி மூலமாகப் போகவேண்டும். அதாவது 240 முதல் 400 பாகம் அதிகம் ஜலம் பிடிக்கும்.

இலைகள் வெளிவிடக்கூடிய அளவு வேர் கிரகித்துக் கொடுக்காவிட்டால் செடி துவண்டுபோம். காற்று, உலர்ந்த ஆகாயம், சூடு முதலியவைகளில் ஜலம் அதிகமாக வெளிப்படுகிறது. ஆகாயத்துச் சீத உஷ்ணத்துக்குத் தக்கபடி இலை உதிரங்கள் திறக்கவும் மூடவும் அமைந்திருக்கிறது. ஜலம் மண்ணில் அதிகமிருந்தாலும் கொடிய வெயில் காலத்தில் செடிகள் துவண்டு இராத்திரியில் தழைத்து இருப்பது சகஜம்.

இதனால் இலை வாயுவைக் கிரகித்து வேரின் மூலமாய் ஜலத்துடன் கலந்து வந்த ஆகாரத்தில் கலந்து செடிகளிற்குப் போஷாப்பு ஆகிறது.

---

## COMMERCE AND INDUSTRY.

## வர்த்தகமும் கைத்தொழிலும்.

### காகிதத்தொழில்.

வியாபாரம் செழிக்க கைத்தொழில் அவசியமென்பதை ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். மூளையைத் தொழில்களில் உபயோகித்து, அவைகளின் மூலமாக வர்த்தகாபி விருத்தியை மேம்பாடடையச் செய்து திரவியம் சேர்ப்பதற்கு இன்றியமையாச் சாதனங்கள் வர்த்தகமும் கைத்தொழிலுமாம். ஆகவே இரண்டிற்கும் இணைபிரியாச் சம்பந்தமுண்டு. ஒன்றில்லாவிடின் மற்றொன்று ஓங்காது. பணம் சம்பாதிக்கப் பிரியப்படுவோர் இவ்விரண்டு முறைகளையும் கைக்கொண்டு அப்பியசிக்கவேண்டும். மனுஷ்யனோ மிருகமோ செல்லும்போது, அவ்வுருவத்தை யொட்டினாற்போல அதன் சாயை (நிழல்) எவ்விதம் தொடர்ந்து போகிறதோ அதைப்போலவே தான் வியாபாரத்திற்கும் கைத்தொழிலுக்குமுள்ள சம்பந்தமாகும். ஒன்றைவிட்டொன்று பிரிந்திருக்குமாயின், அதுகாரணமாக உண்டாகக்கூடிய லாபமொன்றுமில்லை; உளுத்துப்போன உத்தரத்தில் மேற்பூச்சு (வார்னிஷ்) பூசினாலெப்படியோ, சுடுகாட்டில் ஆகாயத்தையளாவி நிற்கக்கூடிய வடவிருக்ஷம் (ஆலமரம்) எவ்வகை உபயோகத்தைத் தருமோ, அத்தன்மைபோலவதாகும் இவ்விரண்டும் ஒன்றற்கொன்று பிரிந்திருப்பது. அவ்விதம் பிரிந்திராது பாதுகாப்போன் பாரி தனவானாவான் என்பதற்குச் சந்தேகமில்லை. விற்குமிடமிருந்து, அதில் விற்கப்படுவன அரிதாயின், பிரயோசனமென்ன? ஏராளமாக விற்பனையாகவும், அதனாற் காலியான விடத்திற் றிரும்பவும் சரக்குகள் ஏராளமாய் வந்து சேரவுமாக விருந்தால், இதைக் கவனிப்போன் பெருத்த செல்வம் படைத்தவனாவா னென்பதற் கையமில்லை. இது வியாபாரிகளாயினோர் அனுபவரூபமாகக் கண்டறிந்த வித்தாந்தம். இப்போது காகிதத்தொழிலை யெடுத்துக்கொள்வோம்.

நாகரிகம் மிகுந்திருக்கும் இக்காலத்தில் காகிதமின்றி விவகாரமில்லை; எவ்விஷயத்திற்கும் காகிதமே அவசியமாக வேண்டியிருக்கிறது. பிராசீன காலத்தில் பனையோலைகளிலும், மரங்களின் உட்பட்டைகளிலும், பருத்தியினாலாய துணிகளிலும், செப்புத்தகடுகளிலும் சமாசாரங்கள் எழுதப்பட்டு வந்தன. எழுதுவதற்கான உபக்கிரமங்கள் மேற்சொன்ன சாமான்களாயிருந்ததில் ஜனங்களுக்கு உண்டான சிரமம் கொஞ்சநஞ்சமல்ல. இன்னும் சௌகர்யமான வகையாக ஏதேனும் சாமான் இராதோவென்று ஜனங்கள் திகைத்து வந்த சமயத்தில், கல்வியின் பயனும் பூகபௌஷ்யரசாயன சாஸ்திரத்தின் வித்பத்தியும் சிறிது சிறிதாக மேலோங்க, ஜனங்கள் விசேஷ ஆராய்ச்சிகள் செய்ய வாரம்பித்தார்கள். அவைகளின் பலனே தற்போதைய காகிதத்தினுகவியாம். ஜனசாரத்திலும், ஜனசமூக புத்தி விசாலத்திலும், செல்வப் பெருக்குக்கு அவசியமாயுள்ள வியாபாரத்திலும் காகிதத்தினுற்பவிக்கும் பலனைப்போல் வேறெதிலும் இருப்பதாகக் காணோம். எவ்விஷயத்திற்கும் காகிதமின்றித் தீராமலிருக்கிறது. சுபாசுபகாரியங்களைத் தெரிவிப்பதற்கும், குடும்பக் கலைசல் ஏற்படாது தஸ்தாவேஜிகள் எழுதுவதற்கும், நானாதேச சமாசாரங்களை உடனுக்குடனறிந்து வர்த்தமானப் பத்திரிகைகள் பிரசுரிப்பதற்கும் காகிதமே பிராதான்யமாகிறது. சுருக்கிச் சொல்லின் மனுஷ்யனுடைய ஜீவவாழ்க்கையில் காகிதமானது அத்தியா

வசியமானதோர் ஜீவகருவியாகு மென்றும் சொல்லலாம். இப்போது நடந்துகொண்டிருக்கும் ஐரோபிய யுத்தத்தில் காகிதம் அளவுக்கு மிஞ்சி விலையேறியிருப்பதைக் கவனியுங்கள். மேனாடுகளிலிருந்து வரும் காகிதம் சிறிது தடைப்பட்டுப் போமாயின் பெரும் விபத்துக்கள் நேரக்கூடுமென்ற சின்னங்கள் தென்படுகையில், அம்முக்கியமான தொழிலை நாம் தெரிந்து கொள்ளாதது பெரிய மதியீனமாகுமல்லவா? ஸமூகத்தவருள் கூட்டுறவு ஏற்படுவதற்குக் காகிதமின்றிச் சாத்தியமாகுமா? காகிதமில்லாது அச்சடிப்பது எங்ஙனம்? மேனாடுகளில் செய்யப்படும் காகிதத் தொழிற்சாலைகளில் லட்சக்கணக்கான ஜனங்கள் வேலையிலமர்ந்து தம் குடும்பங்களை ரக்ஷித்து வருகிறார்கள்; அதேமாதிரி கூலிவேலை செய்வதற்கு எத்தனையோ இந்தியர்கள் இத்தேசத்தில் காத்திருக்கையில் அத்தொழில் இந்தியாவில் ஸ்தாபனமாவது பொதுஜன க்ஷேமத்திற்கு எவ்வளவு தூரம் உகந்ததாயிருக்கும் பாருங்கள். ஏழைகளாயினோர் கால்வயிற்றுக் கஞ்சி அரைவயிற்றுக் கஞ்சி கிட்டினாற் போதுமென்று நினைத்து வெளிதேசம் போகிறார்களே. ஏன் அப்படிச் செல்லவேண்டும்? தேசத்தில் அவசியமாய் வேண்டியிருக்கும் காகிதங்களைச் செய்யும் தொழிற் சாலைகளிருந்தால், அவைகளிலமர்ந்து வயிறு வளர்க்கலாமே. இத்தொழில் இந்தியாவின்கண் எவ்வளவுதூரம் ஆரம்பமாயுள்ள தென்பதையும், இத்தொழிலினால் உண்டாகக்கூடிய பலாபலன்களையும் அடுத்த சஞ்சிகையிற் குறிப்பிடுவோம்.

---

# PART IV.

## HINDU LAW.

## ஹிந்துலா.

(210-ம் பக்கத் தொடர்ச்சி.)

உயில்களைபற்றிய விஷயங்கள்.

கே.—உயில் என்பது என்ன?

ஜ.—ஒருவன் தான் இறந்த பிறகு தன்னுடைய சொத்துக்களை இன்னின்னார் இன்னவிதமாய் அனுபவிக்கவேணுமென்று தன்னிஷ்டப்படி, தன் சொத்துகளை விநியோகம் செய்து எழுதிவைக்கும் தஸ்தாவேஜூக்குத் தான் உயிலென்று சொல்லுகிறது.

கே.—உயில் என்று இதற்கு எப்படிப் பெயர் வந்தது.

ஜ.—உயில் என்பது Will என்ற ஆங்கிலேய பதமேயாகும். "Will" என்ற ஆங்கிலேய பதத்திற்கு "இஷ்டம்" அல்லது "மனது" என்று அர்த்தம். ஒருவன் தன் சொத்துக்களை இன்னவிதம் செலவு செய்ய



வேண்டுமென்ற விஷயத்தில் தன் இஷ்டம் இன்னதென்று வெளியிடுவதனால் அதற்கு "will" என்று பெயர் வந்தது.

கே.—அதற்குத் தமிழில் சாதாரணமாக என்ன சொல்லுகிறது.

ஜ.—மரணசாஸனம் என்றும் சொல்லுவார்கள்.

கே.—எப்பேர்ப்பட்ட சொத்துக்கள் விஷயமாக ஒருவன் உயில் எழுதிவைக்கலாம்?

ஜ.—உயில் தஸ்தாவேஜூ மூலமாக செலவிடப்படும் சொத்தானது, உயில் செய்து கொடுக்கிறவனுக்கு, தனிமையாகவும் ஸர்வசுதந்தரமாகவும் பாத்தியப்பட்டதாக யிருக்கவேண்டும். ஷை சொத்தில் பூராபாத்தியதையும் உயில் செய்து கொடுக்கிறவனுக்கு இல்லாத விஷயத்தில், ஷை யானால் செய்துகொடுக்கப்படும் உயில் செல்லமாட்டாது. (இ-லா ரி-12-மது 126; 12. மூ. இ. அ. 88; இ-லா-ரி-22-மது. 9.)

கே.—உயில் எழுத்து மூலமாகவேயே யிருக்கவேண்டுமா? அல்லது வாய் மொழியாகவும் செய்யப்படலாமா?

ஜ.—உயில் செய்வது தஸ்தாவேஜூ மூலமாகத்தான் இருக்கவேண்டும் என்றதில்லை. அது எழுத்துமூலமாகவாவது வாய் மொழியாகவாவது செய்யப்படலாம். (2-மது-ஹை-கோ. ரி-3).

கே.—வாய் மொழியாயும் உயில் செய்யக்கூடுமாகில், பொதுவாக, ஜனங்கள் உயில் யெழுத்து மூலமாகவேயே செய்யும் காரணம் என்ன?

ஜ.—உயில் தஸ்தாவேஜூ மூலமாக ஏற்பட்டிருந்தால், உயில் பிரிந்ததைப் பற்றி ஏதேனும் ஆக்ஷேபணை நேரிடும்பொழுது அது தக்க சாக்ஷியமாக ஏற்படும். உயிலை ருஜூச்செய்வது மிகவும் லேசாகயிருக்கும் எழுத்து மூலமாக உயில் ஏற்பட்டிருந்தால் வீணான வியவஹாரங்களே ஏற்படமாட்டாது என்பது திண்ணம்.

கே.—எழுத்து மூலமாக எழுதப்படும் உயில்கள் எத்தனை ரூபாய் ஸ்டாம்பில் எழுதப்படவேண்டும்.

ஜ.—உயில் தஸ்தாவேஜூ ஸ்டாம்புக் காயிதத்தில் எழுதப்படவேண்டியதில்லை. வெற்றுக்காயிதத்திலேயே எழுதப்படலாம்.

கே.—உயில்தஸ்தாவேஜூ ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டுமா?

ஜ.—உயில் தஸ்தாவேஜை ரிஜிஸ்டர்செய்ய வேண்டியதும் இல்லை.

கே.—பொதுவாக ஜனங்கள் உயில் தஸ்தாவேஜை ரிஜிஸ்டர் செய்கிறார்களே அதின் காரணம் என்ன?

ஜ.—உயில் பிறந்ததைப்பற்றி ஆக்ஷேபனை ஏற்படுங்காலத்தில் உயிலை ரிஜிஸ்டர்செய்த உத்தியோகஸ்த்தரே தக்க சாக்ஷியாக ஏற்படுவார். உயிலில்கண்ட மற்றசாக்ஷிகள் தன் முன்னிலையில் ஆஜராய் சாக்ஷி சொன்னதையும் ருஜூச்செய்வார். இவ்விதமாக உயிலுக்குப் பலம் ஏற்

படும். இதல்லாமல் இந்த உயில்ரிஜிஸ்டர் ஆபீசு புஸ்தகங்களிலும் பதிவு செய்யப்பட்டுவிடும். உயிலின் அஸல் தவறிவிட்டாலும் நகல் எடுத்துக் கொள்ளலாம். ரிஜிஸ்டர் செய்யப்படாத உயில்கள் தவறிவிட்டாலுமே விரோதிகள் கையில் அகப்பட்டுப் போய்விட்டாலுமே—உயிலில் எழுதிவைத்தவர்கள் இறந்துபோய்விட்ட கேசுகளில், உயிலில் கண்ட விஷயங்கள் நிறைவேறுவதற்கு மார்க்கம் இல்லாமல் போய்விடும். இப்பேர்ப்பட்ட விஷயங்களை உத்தேசித்துத்தான் உயிலை ரிஜிஸ்டர் செய்துகொள்ளுவது.

கே.—உயிலை எழுதிக்கொடுத்தவர் ஷை உயிலில் கையெழுத்துசெய்யாமல் இறந்துபோய்விடுகிறார். அந்தஉயில் செல்லுமா செல்லமாட்டாதா?

ஜ.—உயில் எழுதிவைப்பதின் நோக்கமானது உயில்செய்கிறவனுக்கு தன் சொத்தை விநியோகம்செய்யும் விஷயத்தில் இருக்கும் நோக்கம் இன்னதென்பது சந்தேகமில்லாமல் தெரியவேண்டியதற்கு மட்டுமே உயிலை எழுத்துமூலமாகப் பிறப்பிக்கிறதே யல்லதுவேறில்லை. ஆகையால் உயில்செய்துகொடுக்கிறவனுடைய கையெழுத்து வேண்டுமென்பது அவசியமில்லை. (இ. லா. ரி. 3. பம். 7 ; 2. மூ. இ. அ. 7; 17 இ. அ. 82; 26. இ. அ. 194; இ. லா. ரி. 18. கல். 1.)

கே.—ஒருவன் தன்னிஷ்டப்படி ஒரு உயிலைஎழுதி ரிஜிஸ்டர் செய்துவிடுகிறான். அப்பால் ஷை உயிலை பூராவும் ரத்துச்செய்துவிடவாவது அல்லது சீர்திருத்தவாவது உயில் எழுதிவைத்தவனுக்கு அதிகாரம் உண்டா?

ஜ.—ஒருவன் எழுதிவைத்த உயில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தாலுமே அந்த உயிலை பூராவும் ரத்துசெய்யவாவது அல்லது சீர்திருத்திக் கொள்ளவாவது, செய்துகொள்ள உயில் எழுதிவைத்தவனுக்கு அதிகாரம் உண்டு. ஏனென்றால் உயிலில் கண்ட நிபந்தனைகள் அவனுடைய மரணத்துக்குப் பிறகே ஊர்ஜிதத்துக்கு வரவேண்டியதாக யிருக்கின்றன.

கே.—ஒருவன் எழுத்துமூலமாக ஒரு உயிலைப் பிறப்பித்து அதை ரிஜிஸ்டரும் செய்துவிடுகிறான். அப்பால் ஷை உயிலை ரத்துசெய்யவேண்டுமானால், மறுபடி வேறு எழுத்துமூலமான தஸ்தாவேஜின் மூலமாகத்தான் ரத்துசெய்யவேண்டுமா, அல்லது வாய்மொழியாகவே ரத்து செய்து விடலாமா?

ஜ.—எழுத்துமூலமான உயிலை, எழுத்துமூலமான மற்றொரு தஸ்தாவேஜின் மூலமாகத்தான் ரத்துசெய்யவேண்டுமென்கிற கட்டாயம் இல்லை. வாய்மொழியாகவும் ரத்துசெய்துவிடலாம். (இ.லா.ரி. 3. கல். 426; 4. இ. அ. 228.)

(தொடரும்.)



# PART V.

## CO-OPERATION.

## கூட்டுறவு.

### ஐரோப்பிய யுத்தமும் ஐக்கிய சங்கங்களின் உதவியும்.

[வடமலைபுரம் ம-ா-ா-ஸ்ரீ, R. ஆனந்த ராவ் அவர்கள்சென்னைக் கூட்டுர தொழில் வர்த்தமானிக்கு எழுதியது.]

தற்சமயம் ஐரோப்பாவில் நடந்துவரும் யுத்தமானது உலக முழுவதும் திடுக்கிடச் செய்துவருகின்றது. சுயேச்சையை நிலைநிறுத்தவும், அராஜீகத்தன்மையையும் கொடுமைச் செயலையும் கைக்கொண்ட ஜெர்மனியின் கெர்வத்தை அழிக்கவும், உலக சமாதானத்தைக் கருதியும், இந்த யுத்தத்தில் நம் பிரிட்டிஷார் தலையிட்டு இருக்கிறார்கள் என்பது முன்னமே யாவருக்கும் தெரிந்தவிஷயம். தர்மம்குன்றி அதர்மம் மேலிட்டு சாதுக்களுக்கு கஷ்டம் வரும்பொழுது சாக்ஷாத் பகவான் பூலோகத்தில் அவதரித்து துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனம் செய்து பூபாரத்தை குறைப்பது வழக்கமென்று பாரதம், இராமாயணம், பாகவதம் முதலிய புண்ணிய புராணங்களினால் நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். தற்சமயம் ஜெர்மனியின் கொடுமையை அடக்கவும், பெல்ஜியம், ஸெர்வியா, முதலிய சிறு தேசராஜாங்கங்களைப் பரிபாலனம் செய்யவும், விஷ்ணுவே ஜார்ஜ் சக்கிரவர்த்தியாக அவதரித்து இந்த யுத்தத்தை நடத்துகிறார். இதில் இராஜ பக்தியே ஆபரணமாகக் கொண்ட நம் இந்தியர்கள் செய்துவரும் உதவியை இங்கிலாந்தில் ஆங்கிலேயர்கள் மெச்சி வருகிறார்கள். கூட்டுறவின் கோட்பாட்டின்படி செய்துகொண்ட உடன்படிக்கையின் ஷரத்தை மீறி ஜெர்மானியர் பெல்ஜியத்தில் பிரவேசித்ததின் காரணத்தால் நமது பிரிட்டிஷார் யுத்தத்தில் தலையிட்டு வல்லரசுகள் மறுபடியும் கூட்டுறவை நிலைநிறுத்த இந்த யுத்தத்தை நடத்திவருகிறார்கள். கூட்டுறவின் ஸ்தாபகத்தின்த நிலைநிறுத்த யுத்தம் ஏற்பட்டிருப்பதில் இந்திய கூட்டுறவு சங்கங்கள் விசேஷ உதவிசெய்யக் கடமைப்பட்டிருக்கின்றன. யுத்தம் ஆரம்பமானதும் நம்மாகாணத்தில் அநேக ஐக்கியச் சங்கங்கள் தங்கள் இராஜ பக்தியை வெளிப்படுத்தியும் தங்களால் செய்யக்கூடிய சகாயத்தை செய்வதாயும் தீர்மானங்கள் செய்து கவர்ன்மெண்டாருக்கு தெரியப்படுத்தினார்கள். கவர்ன்மெண்டார் நமது இராஜபக்தியை மெச்சி வந்தனமளித்து ஐக்கியச் சங்கங்களின் தொகையை யுத்தத்திற்கு உபயோகப்படுத்துவது உசிதமல்லவென்று தாங்கள் ஐக்கியச் சங்கங்களின்பேரில் வைத்த அபிமானத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதினால் கவர்ன்மெண்டார் உத்திரவுக்குக் கீழ்படிய வேண்டியதான ஒரு எண்ணத்தைக் கருதி தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தன.

இப்பொழுது தக்க சமயம் வாய்த்திருக்கிறது. கவர்ன்மெண்டார் ஐக்கியச் சங்கங்களின் தொகையை இப்பொழுதும் அபேக்ஷிக்கவில்லை. கடனைக் கொடுத்தால் வாங்கத் தயாராயிருக்கிறார்கள். இதை அனுசரித்து இந்தியாவின் இதரமாகாணங்களில் ஏற்பட்டிருப்பதுபோல் நமதுமாகாணத்திலும் ஐக்கியச் சங்கங்கள் தங்கள் ரிசர்வு பண்டை யுத்தக் கடனுக்குக் கொடுக்க வேண்டுமென்று நமது மாகாண ரிஜிஸ்த்ரார் உத்திரவுசெய்தது நமக்கெல்லாம் ஓர் சந்தோஷத்தை கொடுக்கிறதென்பதிற் தடையில்லை. இந்தக் கடன் கொடுப்பதினால் சங்கங்கள் தம் ஐவேஜ் ஒன்றையும் கொடுத்து விடவில்லை. சங்கத்தின் விதியின்படிக்கும் ஆக்டின் ஷரத்துப் படிக்கும் ரிஜிஸ்த்ரார் அவர்கள் உத்திரவுப்படி நமது க்ஷேம நிதியை கட்டிவைக்க வேண்டியதே தவிர வேறில்லை. சிற்சில சங்கங்கள் இந்த உத்திரவினால் தங்கள் பணத்தை யுத்தத்துக்கு கொடுப்பதைப்பற்றி யோஜிக்கிறார்கள். இது சுத்த தெரியாத்தன்மை. செண்டிரல் பாங்கில் செலுத்துவதற்கு பதிலாக யுத்தபாண்டுகள், தபாலாபீசு சர்டிபிகேட்டுகள், வாங்கி வைத்துக் கொள்ள வேண்டியது. செண்டிரல் பாங்கில் டிபாசிட் செய்வதைவிட யுத்தகடனுக்கு போஸ்டாபீஸ் சர்டிபிகேட்டுகள் வாங்கி கொள்வதுமேல். ஏனெனில், செண்டிரல் பாங்கில்போடும் பணத்திற்கும் செண்டிரல் பாங்கின் ஐவேஜ் தான் ஜாமின். தபாலாபீசு சர்டிபிகேட்டுக்கோ இந்தியா கவர்ன்மெண்டாரும், இந்தியச் செல்வம் பூராவும் ஜாமீனாகயிருக்கிறது. அப்படியிருக்க சந்தேகப்படவேண்டியது அனாவசியம். கனம் ரிஜிஸ்த்ரார் அவர்கள் ஸர்குலர் வந்து ஜாஸ்திகாலமாயும், அநேக சங்கங்கள் தாங்கள் செலுத்த வேண்டியதாயிருக்கும் க்ஷேம நிதியை இன்னும் தபாலாபீசில் செலுத்தாமலிருக்கிறார்கள். இப்படியிருப்பது கூட்டுறவின் தன்மைக்கும் விரோதமாயிருப்பதுடன் டிபார்ட்மெண்டாரின் கற்பனையை அலக்ஷியம் செய்ததாகவும் ஏற்படும். இது முற்றிலும் தவறு. சங்கங்கள் இதற்கென்று ஏற்பட்டிருக்கிற ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதென்றும், அந்த ஆக்டின்படி ஏற்படுத்திய டிபார்ட்மெண்டாரின் கற்பனையின்படி சங்கங்கள் நடக்க வேண்டியது அவசியமென்றும், இச்சமயத்தில் வற்புறுத்த வேண்டியதாயிருக்கிறது. இந்த யுத்தத்தின் விஷயமாய் நமது இந்தியச் செல்வங்கள் ஆற்றுவெள்ளம்போல் வந்து உதவிபுரியும்பொழுது நமது இந்தியர்களின் முன்னேற்றத்துக்காக ஏற்படுத்தப்பட்ட ஐக்கியச் சங்கங்கள் தங்கள் சொந்த ஐவேஜை கொடுக்காவிட்டாலும் க்ஷேம நிதியை கடனைக் கொடுக்கவேண்டியது ரொம்ப அவசியம். ஆகையால் ஒவ்வொரு சங்கமும் தாங்கள் செலுத்த வேண்டியதாய் பாக்கி வைத்திருக்கும் க்ஷேமநிதியை 1916-17-ல் ஏற்படும் க்ஷேமநிதியையும் உடனே செலுத்தி இந்த தர்ம யுத்தத்துக்கு உதவி புரியவேண்டியது அவசியமென்று நினைத்து காலதாமசம் செய்யாமல் உதவிபுரிய முன்வரவேண்டுமாய் கோரப்படுகிறது. இப்பொழுது வரும் யுத்தசமாசாரத்தின்படி ஜெர்மனியின் கொடுமை அடக்கப்பட்டு நேசக் கட்சியார் ஜெயமடைந்து வருவதாய்த் தெரிவதால் தற்சமயம் நாம் தளராமல் உதவிபுரிந்து பூரண ஜெயத்தைக்கூடிய சீக்கிரத்தில் எதிர் பார்ப்போமாக.



# PART VI.

## EDUCATION.

## கல்வி.

### THE TEACHER.

### உபாத்யாயர்.

(213-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒருவனைக் கண்யமுள்ளவனாகவும், லோகோபகாரமாயிருக்கும்படியாகவும் செய்யும் தொழில் லேசானதாகவிருக்குமா? மிகவும் கடினமான வேலையாக விராதா? அத்தகையவேலையில் புகுந்து கீர்த்திபெறவேண்டுமென்று முயலுகிறவர்களைப்பற்றி நாம் மிகவும் பெருமைபாராட்டவேண்டியது அவச்யமே. இதில் கீர்த்திபெற இடமிருந்தபோதிலும் சிலர் உபாத்திமைத் தொழிலில் பிரவேசிக்க இஷ்டப்படுகிறதில்லை.

உபாத்திமைத்தொழிலை மேற்கொண்டால் உடம்பு கெட்டுப்போகும் என்பது சிலபேருடைய அபிப்பிராயம். காலைமுதல் மாலைவரை கத்திக் கத்தித் தீர்க்கவேண்டியதே உபாத்யாயரின் வேலையென்றும் அதனால் அநேக விதமானநோய்கள் உண்டாகுமென்றும் எண்ணுகிறார்கள். அம்மாதிரி எண்ணுவதற்குக் காரணம் அவர்கள் அந்த உபாத்யாயர்களின் உத்யோகமின்னதென்று உணராததுதான். பள்ளிக்கூடத்தில் காலைமுதல் சாயங்காலம்வரை ஒரே கத்தலாய் கத்திக்கொண்டிருந்தால் உடம்பு கெட்டுப்போகுந்தான். பிள்ளைகள் விஷயங்களைத் தாங்களே ஆராய்ந்து தெரிந்துகொள்ளும்படி செய்வது உபாத்யாயருடைய கடமையாதலால் இந்த வேலையின் சிரமம் உபாத்யாயருக்கும், பிள்ளைகளுக்கும் சமமாயிருக்கும். சிறுபிள்ளைகள் படும் அவ்வளவு சிரமம் உபாத்யாயர்பட்டால் அதனால் உடம்பு கெட்டுப்போகுமா? மற்றத்தொழில்களி லிருப்பவர்களைக் காட்டிலும் உபாத்யாயருக்கு வேலையதிகமில்லை. இவர்கள் வேலையெல்லாம் 5-மணி நேரத்துக்குமேல் கிடையாது. அதனிடையில் ஓய்வு நேரமுமிருக்கிறது. வர்த்தகர்களுக்குக் காலைமுதல் இரவு பத்துமணி வரையில் வேலைதான். சாப்பிடவும் நேரம் கிடைக்காது அவர்களுக்கு. வைத்யர்களுக்கும் வக்கீல்களுக்கும் ஸதாவேலைதான். பொழுது விடிந்ததுமுதல் அர்த்தராத்ரிவரையில் கடையில் மொட்டுமொட்டென்று உட்கார்ந்த யிடத்திலிருந்தபடியே வந்தவர்களுக்கு விலைகூறி மனம் களிக்கும்படிப் பேசி சரக்குகளின் குணத்தைப் புகழ்ந்து வாங்கும்படிச் செய்வதிலும், வந்தபோதெல்லாம் கக்ஷிக்காரர்களுடன் பேசிப்பேசி விஷயங்களைத் தெரிந்துகொண்டு கோர்ட்டுக்குப்போய் விஷயங்களைத் தோரணையாக எடுத்து வாதிக்கும் வக்கீல்கள் பேசுவதிலும் உபாத்யாயர் பேசவேண்டியது ஆயிரத்தில் ஒருபங்கிருக்குமா? அல்லது அல்லும் பகலும் ஓயாது வெயி

லென்றும் மழையென்றும் பாராது கூப்பிட்டபோதெல்லாம் வந்து நோயாளியைப்பார்த்து மருந்து கொடுக்கும் வைத்யர்களைப் பார்க்கிலும் இவர்களுக்குச் சரீரசிரமம் அதிகமாயிருக்குமா? வேறு உத்யோகங்களிலிருப்பவர்களுக்கு ஒய்வென்பது கிஞ்சித்தும் கிடைக்காது. உபாத்யாயர்களுக்கோயெனின் கோடைகால மழைகால பெரிய விடுமுறைகளைத்தவிர வாராவாரம் இரண்டுநாள் விடுமுறையும், பண்டிகைகளுக்காக அவ்வப்போது வேறு விடுமுறைகளும் அதிகமாயுண்டு. ஒருகால் அவர்கள் வேலையினால் ஏதேனும் சிரமமடைந்தாலும் அதை பரிகரித்துக்கொள்ள ரொம்ப அவகாசமிருக்கிறது. ஆகையால் இந்த உபாத்யாய உத்யோகம் உடம்புக்குக் கெடுதியை யுண்டு பண்ணுமென்பது தப்பான அபிப்பிராயம்.

அநேகருக்கு உபாத்திமைத் தொழில் கௌரவமானதாகத் தோற்றவில்லை. இது தப்பெண்ணம். சிலர் அந்த உத்யோகத்தை இகழவும் இகழ்கிறார்கள். 'என்னடா போயும் போயும் வாத்தியார் வேலையா? எவ்வளவோ படித்துக் கடைசியில் பள்ளிக்கூடத்து வாத்தியாராகவோ ஆனாய்? வேறு எங்கும் உத்யோகம் கிடைக்காமலா போய்விட்டது.' என்று ரொம்ப இகழ்ச்சியாகப் பேசுகின்றனர். எல்லா உத்யோகங்களைவிட உபாத்திமைதான் மேன்பாடுற்றது, பிரயோஜனமானது, லோகோபகாரமானது. ஒருவனை இம்மை மறுமையிரண்டிலும் கீர்த்திபெறக்கூடியவனாக்கிற இத்தொழிலைவிட வேறு சிறந்தது ஒன்றுமேயில்லை. வக்கீல்களுக்கு ஒருபெரிய கேஸை ஜயித்தால் உடனே ஒருகீர்த்தி வந்துவிடும். அதேமாதிரி ஒரு பெரும்பிணியை சொஸ்தப்படுத்தினால் உடனே வைத்யனுக்கு 'ஜகப்பிரசித்திபெற்ற தன்வந்திரி' என்றபட்டமும் அவனது பெயர் எல்லோருக்கும் தெரிந்துபோகும். ஆனால் உபாத்யாயர் ஸங்கதியோ அப்படியல்ல. அவர் செய்யும் வேலையின் பயன் அப்பொழுதே தெரியாது. நாட்பட நாட்படத்தான் தெரியும். பாமர ஜனங்கள் உபாத்யாயரின் அருமைதெரியாமல் மற்றவர்களையே கொண்டாடுகிறார்கள். உபாத்யாயரின் அருமை கற்றறிந்தோர்கட்கு மட்டுந்தான் தெரியும். இவர்கள் இந்தத் தொழிலைப்போல் மேம்பாடுற்றதொழில் வேறு கிடையாதென்றும், உபாத்யாயரிடம் தான் தேசத்தின் முன்னேற்றமும் மதத்தின் மாண்பும் தங்கியிருக்கின்றன வென்றும் கொண்டாடுகின்றார்கள். ஆயிரம் பாமரர் புகழ்வதைக் காட்டிலும் கல்விகற்ற ஒரு பண்டிதன் புகழ்வது பெரிது. ஆகையால் உபாத்யாயர்கள் சந்தேகிக்கவேண்டியதில்லை. இங்கிலாந்து அமெரிக்கா இந்நாடுகளில் பெரிய கிரந்தங்கள் எழுதுவோர் உபாத்யாயர்களே. அவர்களுடைய கீர்த்திக்கு ஒருநாளும் குறைவில்லை.

(இன்னும் வரும்.) ஓர் உபாத்யாயன்.



# PART VII.

## NEWS AND NOTES.

## ஸமாசாரக் குறிப்புகள்.

### மூன்றரைமைல் நீளமுள்ள தலைமயிர்.

க்ரீஸ் தேசமென்பது ஐரோப்பா கண்டத்திலுள்ள தேசங்களில் ஒன்று. அதில் ஜெஸ்விகா என்னும் மாது சமீபத்தில் இறந்துபோனாள்; அவளுடைய சட்டைஜேபியில் ஒரு காகிதம் எழுதிவைக்கப்பட்டிருந்தது. அதைப் படித்துப் பார்த்ததில் பதினைந்து தினங்களுக்கு ஒரு விசை தன்னுடைய தலைமயிரிலிருந்து நாம் சாதாரணமாக எழுதும் காகிதப் பென்சில் பருமனுள்ள தலைமயிரைக் கத்தரித்துச் சேர்த்துவைத்து வந்திருப்பதாகவும், அச்சுருளை ரணரங்கத்தில் போர்வீரர்க் குதவிபுரியச் செல்லும் செஞ்சிலுவைச் சங்கத்தாரின் உபயோகத்திற்கு அவசியமானால் கொடுக்கும்படி எழுதியிருந்ததாம். அம்மாதின் பெட்டியைச் சோதித்து அம்மயிர்ச் சுருளையெடுத்து அளந்து பார்க்க அது மூன்றரைமைல் நீளமுள்ளதாயிருந்ததாம். அது ஏதென்சு நகரக்காட்சிக் சாலைக்கு அனுப்பப்பட்டிருப்பதாகக் கேள்வி.

### பம்பாய் யுத்தநிதியின் மாதர் பகுதி.

இப்பகுதியாரின் ஆதரவிலே பெல்காம் என்னும் ஊரில் ஒரு வேடிக்கைச் சந்தை கூட்டப்பட்டது. அதில் விற்பனையான சரக்குகளின் கிரயம் மொத்தம் மூவாயிரம் ரூபாய்க்குக் குறையாதென்று ஒரு தோராயமாக மதிப்பிடக்கூடும். மாதர்கள் ஒன்று சேர்ந்து யுத்தக் கஷ்ட நிவாரணார்த்தம் பாடுபடுவது பெரிதும் சிலாகிக்கத்தக்கதே.

### 21 மரியாதை வேட்டுகள்.

காலெட்வாலி என்ற ஸ்தானம் பெற்றிருக்கும் ஹிஸ் ஹைனெஸ் பெக்வார் பேகியினிஸ் ஸர் மகம்மது சானுக்கு 21 மரியாதை வேட்டுகள் இனி தீர்க்கப்படவேண்டுமென்று நம் மாக்ஷிமைதங்கிய சக்கிரவர்த்தியார் ஆக்ஞையிட்டிருப்பதாக "கெஜட் ஆவ் இந்தியா" விசேஷ பிரசுரமொன்று கூறுகிறது.

### டிரெயின் தண்டவாளத்திலிருந்து அப்புறப்பட்டது.

வட இந்தியாவிலுள்ள ஜாகல், ஹிம்ஹாட்புட் ஆகிய இவ்விரண்டு ஸ்டேஷன்களுக்கும் மத்தியில் ஒரு பிரயாணி வண்டித்தொடர் இம்மாதம் தண்டவாளத்திலிருந்து அப்புறப்பட்டுவிட்டது. ஏராளமான மழை பொழிந்ததன் மேல் இருப்புப் பாதையனைத்தும் தண்ணீர் நிரப்பிக் கல்லும் கட்டிகளும் லயனில் பரவிக்கிடந்ததே ரெயில் வண்டி தண்டவாளத்திலிருந்து அப்புறப்பட்டதற்குக் காரணமாம். பிரயாணிகள் ஒரு டிரெயினிலிருந்து மறு டிரெயினுக்கு இறங்கி ஏற்றப்படுகிறார்களாம்.

### ஒரு மதம்பிடித்த யானை.

ஸிலோனைச் சேர்ந்த உலுக்கலாமா என்னும் ஊரில் வெகு தினங்களாகப் பயிர் பச்சைகளையும் ஆடு மாடுகளையும், சிற்சில சமயங்களில் தன்னந்தனியே எதிர்ப்பட்டுச் செல்லும் மனிதர்களையும் எதிர்த்தழித்து அட்டூழியம் செய்துகொண்டிருந்த மதம் பிடித்த கிழயானை யொன்றை மிஸ்டர் டி. ஸி. விக்கின் என்பவர் சுட்டுக் கொன்றுவிட்டார். அது கொல்லப்படுவதற்கு முதல் தினத்தில்தான் 200 ரூபாய் பெருமான கரும்புப் பயிரை யழித்துவிட்டதாம். 'யானை செத்தாலும் ஆயிரம் பொன், இருந்தாலும் ஆயிரம் பொன்' என்று ஒரு பழமொழி சொல்லுவார்கள். அப்பழமொழி

இந்த யானை விஷயத்தில் உண்மையாயிற்று. மிஸ்டர் டி. வி. விக்கினுக்கு அவ்வூர் கனமரியாதை செய்ததோடு, யானைக்குரிய விலையும் அவருக்குக் கிடைத்து விட்டதாம்.

---

## திருட்டு மாப்பிள்ளை.

தின்ஷா சந்திரதேவ் என்பவன் கல்கத்தாவில் வசிப்பவன்; அவனுடைய மாமி மாமன் இருப்பது எண்டாலியில்; அவ்விடத்திற்கு அவனுடைய மனைவி போயிருந்தாள். அவளைப் பார்த்து வருவதற்கு தின்ஷா சந்திரதேவ் இம்மாதத்திற் சென்றிருந்தான்; மாப்பிள்ளை வந்திருக்கிறானே யென்று வேட்டகத்தவர் பலவிதமான பண்டபலகாராதிகளுடன் விருந்து செய்வித்தார்கள்; ஆசார உபசாரங்கள் செய்தார்கள்; எல்லாவற்றையும் பெற்றுக் கொண்ட மாப்பிள்ளை தனது மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடாதா? இவன் தன் மனைவி கழற்றிவைத்துப் போயிருந்த 600 ரூபா பெறுமான ஆபரணாதிகளைத் தன் மாமியார் பெட்டியிலிருந்து திருடிக்கொண்டு ராம்பாகன் என்னுமிடத்திலிருக்கும் தன் சோர நாயகியிடம் கொண்டுபோய்க் கொடுத்து விட்டான். மாப்பிள்ளையின்மீது சந்தேகித்த வேட்டகத்தவர் துப்பு விசாரித்து ராம்பாகனிலிருக்கும் சோரிணியின் கிருகத்திற்குப் போய்ப் பார்க்க திருட்டுப்போன ஆபரணாதிகளை அச்சோரிணி அணிந்திருக்கக் கண்டார்கள்; மாப்பிள்ளையும் அவ்விடத்திலேயே வீற்றிருந்தான். வந்தவர்கள் அவனைப் பிடித்துப் போலீஸார் வசம் ஒப்புவித்துவிட்டார்கள்; என்றாலும் ஜாமீன் பேரில் மாப்பிள்ளை விடப்பட்டிருக்கிறான். தனக்கும் தன் மாமனாரகத்திலுள்ளவர்க்கும் ஏற்பட்டிருக்கும் நேசப்பான்மையை யறுத்து இத்தியாதி அருவருப்போடு கூடின பிரவர்த்திகளில் பிரவேசிக்கும்படி தன் புத்தியைப் புகுத்திய மாப்பிள்ளையின் புத்தி 'உலக்கைக்கொழுந்தும் குந்தாணிவேரும்' போலும்!

## மதிராஸ். Y. M. I. A.

சென்னை அரண்மனைக்காரன் வீதியிலுள்ள யங்மென்ஸ் இந்தியன் அஸோஸியேஷன் என்னும் பெயர்கொண்ட சங்கமொன்று ஸ்ரீமதி அன்னி பெஸண்டம்மையவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றும், அதற்காகவேண்டி ஒரு திவ்யமான கட்டடம் கட்டி முடிந்திருக்கிறதென்றும் நம் அபிமானிகளுக்குத் தெரிந்திருக்கலாம். இப்போது இரண்டு மெத்தைகளோடுகூடியிருக்கும் அக்கட்டடத்திற்கு மூன்றாவது மாடி கட்டி அதில் மாணவர்களுக்கான அறைகள் தடுக்கவேண்டுமென்று யோசனை செய்யப்பட்டிருக்கிறது. பொது ஜனங்களிடமிருந்தும் சந்தா வசூலிக்கப்பட்டும் வருகிறது; கூடிய சீக்கிரத்தில் அதற்கு வேண்டிய தொகை சேர்ந்துவிடுமென்பதற்கு ஆக்ஷேபமில்லை.

---

## விசனகரமான சம்பவம்.

நாளது அக்டோபர் மாதம் 26-ந்தேதி சாயங்காலம் சில மாணவர் ஒன்றுசேர்ந்து என்னூருக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்; புதிதாக ஏற்பட்டிருக்கும் 'பாய்ஸ் கௌட்' (Boyscout) என்னும் 'பாலியவூழிய' முயற்சியின் ஆதரவை முன்னிட்டு அம்மாணவர் சென்றார்களாம்; சனிக்கிழமை தினம் காலை 9-மணிக்குக் கத்திவாக்கத்தில் இம்மாணவர் சமுத்திரஸ்நானம் செய்யக்கருதி எல்லாரும் தண்ணீரிலிறங்க, அங்கு 'நரிப்பள்ளமா'யிருந்ததனாலே சில பிள்ளைகள் நீந்த முடியாமல் தத்தளித்தார்களாம்; அச்சமயம் அங்கு வலைவீசிக்கொண்டிருந்த செம்படவர் சிலர் பிள்ளைகளின் தடுமாற்றத்தை யறிந்து ஓடோடிப்போய்ச் சிலரைக் கரையிலிழுத்துப் போட்டார்கள்; என்றாலும் சென்ற மாணவருள் இரண்டு பேர்களைக் காணோம்; ஒருவன் தெலுங்குச் சிறுவனும்; மற்றொருவன் சென்னையிலுள்ள டாக்டர் M. கிருஷ்ணசாமி ஐயரின் சகோதரரான மிஸ்டர் தக்ஷிணாமூர்த்தி ஐயரின் சீமந்த புதல்வராம். கண்ணுக்



கெட்டியவரையில் கரை தென்படாமலிருக்கும் ஆழாழியில் எவ்வஸ்து விழுந்தாலும் அதை அலை மூலமாகக் கரையிற் கொணர்ந்து சேர்க்கும் தன்மை சமுத்திர இயல்பாயிருந்தபோதிலும் மேற்சொன்ன இரண்டு சிறுவர்களுடைய சவங்களும் நாளது வரையில் கரையில் ஒதுக்கப்படக் காணோமாம். ஐயோ பாவம்! புதிதாகச் சென்ற சிறுவர்கள் கடனீராடுவதற்குமுன் அங்குள்ள செம்படவர்களைக் கேட்டு இங்கிறங்கலாமா கூடாதாவென்று ஆலோசித்திருக்கக் கூடாதா? எல்லாம் விதிப்பயன். தமக்கு இயற்கையாயுள்ள கல்வி கேள்விகளை விட்டு தொலைதூரத்திற் சென்று இம்மாதிரியான அனாவசியமான கார்யங்களில் விருதாவாக இவர்கள் ஏன் தலையிடவேண்டும். பெற்றோரும் போதகர்களும் அவ்வப்போது கூறும் நன் மொழிகளைச் சிறுவர் மனதில் இனியேனும் தாங்கி நடப்பாராக.

---

## ஆகாய விமான குண்டுச் சேதப் பாதுகாப்பு.

ஆகாய விமானங்கள் ஒரு தேசத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சென்று வெடிகுண்டு போடுகையில், அக்குண்டுகள் எதன்மீது விழுகின்றனவோ அது சரேலென்று தீப்பிடித்துக்கொள்வதையும் வெடிப்பதையும் மற்றும் பலவிதமாகச் சேதமாவதையும் கேள்விப்படுகிறோம். பெருங் கட்டடங்கள் குண்டுகள் வீழ்ந்து இடிபட்டுப் போவதும் சகஜமாயிருக்கிறது. 'கருங் கல்லே காற்றிற் பறக்கையில் இலவம் பஞ்ச[illegible]னக்கென்னகதி' என்று கேட்ட கதையை யொப்பகற் சாந்துபோட்டுக் கட்டிய பாரிக்கட்டடங்கள் வெடி குண்டுகளால் சுக்கல் முக்கலாக சாதாரண கூரைகளடங்கிய குடிசைகளின் கதி என்னவாகும் பாருங்கள். இதற்காகவேண்டி ஐரோப்பாவிலுள்ள சிற்சில விடங்களில் பூமிக்குக்கீழ் இருபது அடி ஆழத்தில் குகைபோல் தோண்டிக்கொண்டு அக்குகைகளில் தாம் குடும்ப சகிதமாய் வசிக்கிறார்களாம். இவர்களிருக்குமிடத்திற்கும் மேல் தரைக்கும் மத்தியிலுள்ள அடைவெளி சுமார் 20 அடி கனமுள்ளதாம்; இதில் அடிப்புறம் கற்சாந்தும் மேற்புறம் மணலுமாகக் கொட்டப்பட்டிருக்கிறதாம்; மேனின்று விழுங் குண்டுகள் மணலில் நாலு அல்லது ஐந்து அடி ஆழத்திற்குக் கீழாகப் போவது கிடையாதாம். இவ்விதமான குண்டுகளால் ஏற்படும் சேதங்களுக்குத் தப்பிப் பிழைப்பதாக ரணரங்கத்திலிருந்து திரும்பிய ஒருவர் தெரிவிக்கிறார்.

---

## REVIEW OF BOOKS.

### மதிப்புரை.

ஸ்ரீராமலீலை:—இது ஒரு நாடகம். ஹைகோர்ட் வக்கீல் வீ. வீ. தேவநாத ஐயங்கார் எழுதியது. மஹா விஷ்ணு ராமாவதாரம் எடுத்து, சீதையை விவாஹஞ் செய்து கொள்ளுமிடத்திலிருந்து இப்புத்தகத்தில் ஆரம்பம் செய்யப்பட்டுக் கடைசியில் ராவணயுத்தம் புரிந்து ராவண ஸம்ஹாரம் வரையில் எழுதப்பட்டுள்ளது. இதனது நடை மிகவும் ச்லாகிக்கத்தக்கது. மணிப்பிரவாளமே சிறந்த காம்பீர்யமான நடை. இதில் நவரஸமும் திகழ்ந்திருக்கிறது. ஸ்ரீராமன் லக்ஷ்மணன் பிரம்மாஸ்திரத்தினால், மூர்ச்சையடைந்தது கண்டு சோகத்தினால் உருகும் பாகம் கன்மனத்தோரையும் கரைத்துருகச் செய்யும் அவ்வளவு சோகரஸம் பொருந்தியிருக்கிறது. அரங்கத்தில் நன்றாக நடிக்கக்கூடிய விதமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 12. எஸ். வைத்யா அண்டுகோ பிரசுரம் செய்தது. வேண்டுவோர்:—

S. Vaidya & Co., Madras-க்கு எழுதவும்.

# PART VIII.

## MORAL STORIES.

## நீதிக் கதைகள்.

### சீலவதி.

(220-ம் பக்கத் தொடர்ச்சி.)

துளசிராமுக்குக் கோபம் மற்றும் அதிகரிக்கலாயிற்று. தன் மனைவி முறைதப்பி நடந்திருக்கிறாளென்று நிச்சயித்துவிட்டான். பின்னும் ஒரு முறை கண்ணீர் உதிர்த்துத் தலைகுனிந்து நிற்கும் சீலவதியை நோக்கி "பெண் பேயே, ஏன் பேசாமலிருக்கிறாய்? எங்கே நத்தாபரணம்? யாருக்குக் கொடுத்தாய்?" என்று உரக்கக் கேட்டுக்கொண்டே அவளை ஓரடியடிக்கக் கையோங்கியவாறே சமீபத்திற் சென்றான்; இன்னும் ஒருக் கணம் தாமதித்திருந்தால் ஓங்கின கை சீலவதியின்மீது விழுந்திருக்கும்; ஆனால் அவ்வளவு பெரிய தண்டனைக்குச் சீலவதி பாத்திரமாவது தெய்வத்திற்கு அடுக்குமா? கடுங்கோபத்திற்குள்ளாகும்படி அம்மாது என்ன தப்புசெய்துவிட்டாள்? தர்மம் தப்பாகுமா? ஆனால் லோபிக்குத் தர்மத்தின் தன்மை எவ்விதம் விளங்கும்? பணம் பணம் என்று பறைசாற்றிக் கொண்டிருக்கும் ஊத்தைவாயுடன் ஊடாடும் கர்மிகளது மரபினைச் சார்ந்தவனானதுபற்றித் துளசிராமுக்கு அந்த லோபித்தனம் பூர்ணமாயிருந்தது. கண்கள் சிவக்க, உதடுகள் துடிக்க, கோபாவேசம் பூண்ட கணவனது முகத்தை ஏறிட்டுப் பார்க்கமுடியாதவளாகி சீலவதி, தன் கணவன் ஓங்கின கை தன்மீது விழுந்துவிடுமென்பதைச் சிறிதும் சிந்தியாது மானஸீகமாக அப்பரம்பொருளையே ஹிருதய கமலத்திருத்தி, குனிந்தவாறே இனிய குரலுடன் "அது பெட்டியிலிருக்கிறது" என்றாள். அவ்வார்த்தைகள் அவளறியாமலே அவளுடைய வாயினின்று வெளிப்போந்தன. இதைக்கேட்ட துளசிராம் சரேலென்று "பெட்டிச்சாவி யாரிடமிருக்கிறது" எனவும், "என்னிடமில்லை; அனேகமாய் ஷாப்பிலிருக்கலாம்" என்றாள். துளசிராம் "ஷாப்பிலில்லை என்று எனக்கு நன்றாகத் தெரியும்" என்றான். "பிறகு உம்மிடந்தானிருக்கும், என் நாதா, உமது மடியிற்பாரும்" என்று சீலவதியுரைக்க துளசிராம் அவ்விதமே தன் இடுப்பிற் சொருகிக்கொண்டிருந்த கொத்துச் சாவியையெடுத்து பெட்டியைத் திறந்து பார்க்கவே, எந்த ஆபரணத்திற்காகத் தன் மனைவியைக் கடித்து பேசிக்கொண்டிருந்தானோ, எந்த ஆபரணத்தை யுத்தேசித்து வேலையை விட்டுக் கடையைப்பூட்டி ஓடோடியும் வீடுவந்து சேர்ந்தானோ, எந்த ஆபரணத்தை முன்னிட்டு தன்னரும் பெரும்பத்னியையறையக் கையோங்கினானோ, அந்த ஆபரணமாகிற நத்து பளபளவென்று அப்பெட்டியினுள் ஜ்வலித்தது. தானிருப்பது நினைவா அல்லது கனவா



வென்பது அவனுக்கு விளங்கவில்லை. தன் மேற்சுவுக்கத்தினால் ஒரு விசை இரண்டுக்கண்களையும் துடைத்துக்கொண்டு மறுவிசையும் நோக்கினான்; நத்து பெட்டிக்குள்தானிருக்கிறது. அதைப் பார்த்ததும் அவனுக்கு அவ்விடம்விட்டுப் பெயர மனம் இடங்கொடுக்கவில்லை. ஸ்தம்பாகாரமாக நின்றுவிட்டான். தான் வழினனிடமிருந்து வாங்கி வஸ்திரத்தில் முடிபோட்டுக் கொண்டு வந்த நகை பெட்டிக்குள் போனவாறெங்ஙனம் என்பதும், பெட்டியினுடைய சாவி தன்னிடமிருக்கையிலேயே அவ்வாபரணம் பெட்டிக்குள் எப்படிப் போயிருக்கும் என்பதும் அவன் எளிதில் அறிய முடியாத ஆச்சர்யத்தை விளைவித்துக்கொண்டிருந்தன. வாய் பேசமுடியாது திக்பிரமை கொண்டவன்போல் பெட்டி நகையை ஒருதரம் பார்க்கிறான், சீலவதியின் சந்திரவதனத்தை ஒருதரம் பார்க்கிறான், தன்னிடுப்பைத் தடவிப் பார்க்கிறான், மறுபடி பெட்டி நகையை நோக்குகிறான். அவனுக்கு ஒன்றுமே சொல்லத் தோன்றவில்லை. கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருகிக்கொண்டிருக்கிறது. அது காறும் நடத்திவந்த அவனுடைய நடவடிக்கைகள் அனைத்தும் துச்சமாகவே அவனுக்குத் தோன்றின. ஈசுவரகடாக்ஷம் மேலிட்டிருக்கும் எக்காரியமும் சித்திபெறும் என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் வேண்டாம். இதற்கு நம் பத்னியே சாக்ஷியென்று கருதித் தன் கைகால்கள் நடுக்கலுற, வாய்குழற, கண்ணீர் ததும்ப, மலங்க மலங்க விழித்து ஒன்றும் சொல்லத் தோன்றாமல் தன் மனைவியைத் தான் கடுமையாக நடத்தியதையும் கோபித்ததையும் பழி சாற்றியதையும், பின்னும் தன் விவகாரத்தில் தினசரி செய்யவேண்டியிருந்த சாகசக்யாதிகளையும் பற்றி ஒன்றுக்குப் பின் ஒன்றாக சிந்திக்கலானான். ஒவ்வோரம்சமும் ஒவ்வொரு மலையைப்போலக் கண்ணெதிரில் ஊடாடுவதாக அவனுக்குப் புலப்பட்டது. ஒரு கணநேரத்தில் மானிடவாழ்க்கையின் உத்கிருஷ்டம் அவனுக்கு விளங்கலாயிற்று. நசுவரமான காரியங்களல்லாது மகத்தான காரியங்களைச் சாதிக்கவல்ல ஜீவவாழ்க்கையில் பல தினங்களை வீணே பிரவர்த்திகளில் பிரயோசனப்படுத்தினோமே யென்று அவனுக்குத் தோன்றியதோடு இச்சமயத்தில் தனது தர்ம பத்தினியின் மாசற்ற பக்தியால் தன் மூடமதியானது பிரகாசிக்கும் வண்மைவாய்ந்ததே யென்றும் அவனுக்கு நிதர்சனமாக விளங்கியது.

பாபகர்மங்களைத் தொலைக்க விரும்பிய புண்ணியனை யொப்ப துளசிராமன் அந்நகையைப் பெட்டியிலிருந்து எடுத்துக்கொண்டு தன் மனைவியின் முன் வைத்து 'அம்மணி உனக்கே அது உரியது; நீயே அதற்குச் சொந்தக்காரி; எனக்கென்றே பிரம்மன் சிருஷ்டனைசெய்த நீ எனக்கிருக்கையில், நசுவரமான அவ்வாபரணம் எனக்கெதற்கு? மூடமதியினாலும் அகங்கார மேம்பாட்டினாலும் இறுமாப்படைந்த நான் உனது திவ்ய மங்கள ஸ்வரூபத்தையும், பதிபக்தி செய்யும் மகத்துவத்தையும் சிறிதும் அறியாது

கேவலம் இப்புவியே சாசுவதம், மாயப்பிரபஞ்சமே சாசுவதம், நீர்க்குமிழி போன்ற இவ்வாறுலே சாசுவதம் என்றிம்மாதிரியான மனப்பிராந்தியோடு பிதற்றினேன், கோபித்தேன், குரூரமான வார்த்தைகளாடினேன், கையோங்கி அடிக்க முன்வந்தேன் : என் அன்பே, ஆருயிர்ச்செல்வமே, நீயே என் தலைவி, நீயே யென் கலிதீர்க்கவந்த குணமணி, சுருக்கிச் சொல்லின் நீயே என்னுடைய ஹிருதயபூர்வகமான சற்குணவதி, அன்னையும் நீ, அப்பனும் நீ, மற்றெவரும் நீயே யென்றிவ்விதமாக ஸ்தோத்தரிக்கலானான். அச்சமயம் சீலவதிக்குண்டான ஆச்சர்யத்திற்கு அளவில்லை. பரஸ்பரம் தம்பதிகளுக்குண்டான ஆச்சர்யத்தையும் அன்பின் நிகழ்ச்சியையும் இவ்விடம் எழுத இயலாது. கணவன் அஞ்சலிசெய்து (கை கூப்பி) ஸ்தோத்தரிப்பதைக்கண்ட அச்சீலவதி தன் பிராணபதியை நோக்கி நாதா, அடியாள் 'தங்கள் அடிமை ; அடிமையைப் பர்த்து உயர்வாக ஸ்தோத்தரிப்பது உதவாது ; எப்போதும்போல இருங்கள் ; திடீரென்று உங்களுடைய நடவடிகள் மாறுபடக்காரணமென்ன' என்றாள். துளசிராமனின் நாவெழவில்லை. எனினும் அத்தருணியைப் பார்த்து 'உன்மீது யாதொரு குற்றமுமில்லை. நீயே இனி எனக்குக் குருவும் சிஷனுமாவாய்; இனி ஒருக்கணமும் பிரியேன் ; எல்லாம்வல்ல இறைவ, எம்மிருவரையும் இகத்திலாகட்டும், பரத்திலாகட்டும் இணைபிரியாதிருக்கச் செய்வாயாக, இதுவே எனது பிரார்த்தனை' என்று சொல்லிப் பின்னும் தன் மனைவியை நோக்கி நான் என்ன செய்யவேண்டும் ; எங்கும் நிறைகின்ற பரிபூரணானந்தம் என்றழைத்த பெரியோரது வாக்குக்கிணங்க அப்பரந்தாமனது திருவிளையாடல் மகத்துவத்தை நீ நன்கறிந்தாய் ; அதை யெனக்குத் தெரிவிக்கும்படி வேண்டுகிறேன்' என்று துளசிராம் வணங்கிவிட்டான். சீலவதி கணவனை யெடுத்து மார்போடணைத்து 'நாதா, குற்றமற்ற இவ்வபலை செய்யவேண்டிய கடமையைத் தங்களுக்குச் செலுத்தினாளன்றி வேறொன்றுமில்லை' யென மொழிந்து பின்வருமாறு பாதிவ்ருத்திய லக்ஷணத்தை விவரிக்கலானாள்.

(தொடரும்.)

---

# VIEWS & REVIEWS.

**OTTO MOHINI :—The lasting perfume of the age.**

ஒட்டோ மோஹினி :—உயர்ந்த வாஸனை. நீண்டகாலம் பரிமளிக்கும்.

**ROBINIA HAIR OIL :—Fountain of Attars, Cool & refreshing.**

ரொபீனியா தலைத்தைலம் :—அத்தர்களின் ஊற்று. குளிர்ச்சியையுண்டாக்கும்.



ஸ்ரீ

# *ஹரிஹரன்.

(222-ம் பக்கத்தொடர்ச்சி.)

விசித்திரன்:—லலிதா ! இவ்விஷயத்திற்கு எனக்கு என்ன கொடுக்கப்போகிறாய்.

லலிதை:—அதெல்லாம் அப்புறம் பார்த்துக்கொள்வோம். இவரைப்பற்றி இன்னும் என்னவிசேஷம் உனக்குத் தெரியும்.

விசித்திரன்:—இவரைப்பற்றியா! நமது இளவரசி இருக்குமிடத்திலெல்லாம் இவரைக் கட்டாயமாய்க் காணலாம். உலாவச்செல்லினும், அல்லது சோலையின்கண் வீற்றிருக்கும் சமயத்திலும் அரசகுமாரியின் பின்னால் இவர் வரப் பார்க்கலாம்.

லலிதை:—விசித்திர ! இன்றொன்று. இந்தப் பிரபு ஸரோஜனி முன்னேவர நான் கண்டதேயில்லை.

விசித்திரன்:—அவ்வண்ணம் இவர் செய்வது கிடையாதே. பின் என்னத்தான் செய்வார் என்றால் ராஜகுமாரியைத் தரிசித்து, பெருமூச்சுவிட்டு, பரந்த கண்களினின்று முத்துப்போன்ற பாஷ்ப பிந்துக்களை உதிர்ப்பர். பிறகு மறைந்துவிடுவார். இதுதான் அவர் செய்கை.

லலிதை:—மிகவும் விந்தையாக இருக்கிறது இவர்புரிவது. விசித்திர! அவரைப் பார் ! என்ன வருத்தங்கொண்டவர் போலிருக்கிறார். இவரைக் காண என்மனமும் குழைகின்றது. எப்படியும் இந்த விஷயத்தை ராஜகுமாரிக்கு உரைக்கின்றேன். விதர்ப்பநாட்டிலிருந்து எழுந்த மிரட்டல்களினால் ஸரோஜனி மனம் வாடி வருத்தமுறுகிறாள். அவளை இங்கு அழைத்து வருகிறேன். இப்புதுமை ஸரோஜனிக்கு ஓர் விளையாட்டாக விருக்கும். வருத்தமும் குன்ற ஏதுவாகவிருக்கும். விசித்திர! இந்தப் பிரபுவை அரைமணிநேரம் இங்கு தங்கும்படிச் செய்கிறாயா! நான் ஒன்றுசெய்ய எண்ணங் கொண்டிருக்கிறேன்.

விசித்திரன்:—லலிதா ! நான் அவரை அரைமணியல்ல. ஒரு மணியல்ல ஒருநாள் முழுவதும் தங்கும்படிச் செய்வேன். ஆனால் நீ மாத்திரம் சீக்கிரம்வந்து விடவேண்டும்.

லலிதை:—இதோ ஒருநிமிஷத்தில் இளவரசியுடன் வருகின்றேன். (செல்கை.)

(ஸுரேந்திரன் உலாவியவண்ண மிருக்கிறான்.)

ஸுரேந்திரன்:—நேசா! என்ன இவ்வளவு நேரமாகியும் இளவரசியைக் காணவில்லையே.

விசித்திரன்:—என்ன ! நான் கஷ்டப்பட்டது இவ்வளவு அவ்வளவு அல்ல. இங்கிருந்தபடியே சொல்லிவிடலாம் எல்லாம்.

ஸுரேந்திரன்:—கோபித்துக்கொள்ளாதே. என் நண்பனல்ல நீ.

விசித்திரன்:—ஆமாம். யார் இல்லை என்றார்கள். பணம்வாங்கும் வரைதான்.

ஸுரேந்திரன்:—ஹூம். ஹூம்.

விசித்திரன்:—ஏன் பெருமூச்சுவிடுகின்றீர். சமஸ்தானத்தில் ஏதேனும் அவசரமான வேலை நடக்கவேண்டுமாயின் சொல்லும். நீர் யாரைக் காணவேண்டுமோ அவரைச் சீக்கிரம் பார்ப்பீர்.

ஸுரேந்திரன்.—வேலை! அவளைக் கண்ணுறுவதைவிட வேறு வேலை எந்த மனிதனுக்கேனும் இருக்குமோ. நன்மையே அவதாரமாக வந்தவளன்றோ அப்பொன்னங்கை. என்னைப் பொறுத்தமட்டில் அவள் பக்கமிருக்க வெகு ஸந்தோஷம் கொண்டவனாயிற்றே.

விசித்திரன்.—நண்பனே! ஒருவிஷயம். இப்போது ராஜசபையில் ஒரு தூதன் வந்திருக்கிறான். அவனுக்காக நாளையதினம் ஒருசபை கூடப்போகிறது.

ஸுரேந்திரன்:—இந்தவிஷயம் சொன்னதற்கு அநேக வந்தனம். ஏன் இன்னும் இளவரசி வரவில்லை. என்ன காரணமோ?

விசித்திரன்:—ப்ரபோ! இவ்வளவு சிநேகமாயிருந்தும் தாங்கள் தங்களது பெயரைச் சொல்லவில்லை பார்த்தீரா? இம்மாதிரி உலகத்தில் அநேகரிருக்கிறார்கள்.

ஸுரேந்திரன்:—என் பெயர் ஸுரேந்திரன். கோசலநாட்டு வாசி. (தனக்குள்) இளவரசியின் திவ்யநாமம் நமக்குத் தெரிந்திருப்பினும் இவன் மூலமாய்க் கேட்டறிவோம் (வெளியே) விசித்திர! ராஜகுமாரியின் பெயரென்ன?

விசித்திரன்:—நம் இளவரசியின் திருநாமதேயம் ஸரோஜனி அம்மை. தெரிந்தீரோ?

ஸுரேந்திரன்:—ஆம். ஸரோஜனி அம்மை இன்னும் வரக்காணோமே.

விசித்திரன்:—வரும் சமயமும் நெருங்கிவிட்டது. இங்கேதானே யிரும்.
(ஒருபுறம் செல்லல்.)

ஸுரேந்திரன்:—என் காதலி வருமளவும் இங்கு படுத்து அவளது அங்கவனப்பைப்பற்றி மனதில் எண்ணுகின்றேன். (படுத்தல்.)

[லலிதையும் ஸரோஜனியும் வருவதைக்கண்டு விசித்திரன்
முன்னே விரைந்து வருகிறான்.]

விசித்திரன்:—எழுந்திரும்! எழுந்திரும்! ஸுரேந்திரா! இளவரசி வருகின்றார்கள். அதோ வருகின்றார்கள்.

ஸுரேந்திரன்:—இந்தா விசித்ர! இந்தச் சுபசெய்திக்காக இதைப் பெற்றுக்கொள். (பொன் தருகின்றான் அதைப்பெற்று விசித்திரன் ஒருபுறமா செல்கின்றான்.) ஆரியர்கள் உதய சூரியனை எவ்விதம் ஸந்தோஷமும் விச்வாஸமும் கொண்டு வணங்குகின்றார்களோ அவ்விதம் யான் வணங்குகின்றேன். ஹே! இருதய வாஸினி! உன்னை மீண்டும் காணப்பெற்றேன் ஹே! கண்காள்! நன்றாய்ப் பாருங்கள். இதுகாறும் பசித்திருந்த நீவிராவது களிதிருங்கள்.



லலிதை:—இளவரசி! அவர்தான். அவர்தான்.

ஸரோஜனி:—லலிதா! என்ன அழகு! என்ன வனப்பு? என்னை அவர் பார்க்கும் பார்வையின் நேர்மையை என்னவென்று சொல்வேன். என்னுடன் ஆவர் வார்த்தையும் சொல்லாரோ.

லலிதை:—என் அரசியே! உமது எழில் மிக்க உருவம் அவரை மூங்கையாக்கியது போலும். தேகமும் அசையவில்லையே. அவர் கண்ணையும் கொட்டக்காணோமே.

விசித்திரன்:—(பின் பக்கமாகவந்து) அவருக்கு இதெல்லாம் வரும் வழக்கம் தான். அம்மணி! இது ஒரு புதுமை அன்று. சகஜமே.

ஸரோஜனி:—யாரது! விசித்திரனா? என்ன சொன்னாய்? ஒன்றும் தெரியவில்லையோ உனக்கு. வாயைமூடு.

விசித்திரன்:—அம்மணி! கோபிக்கவேண்டாம். பேதையாகிய என்னை மன்னிக்க வேண்டுகிறேன். இனி ஒன்றும் பேசேன் நான் தங்கள் ஆக்ஞைப்பிரகாரம்.

ஸரோஜனி:—சகி! அவரென்ன சிலைபோல் நிற்கின்றாரே! உண்மையான சிலையானால் நல்ல வேலைப் பாடுற்றதேயாம். சௌந்தர்யமே சௌந்தர்யம்.

லலிதை:—அரசிபெரும! சற்றே விளையாட்டிற்கேனும் அவரிடம் பேசுங்களேன்.

ஸரோஜனி:—விளையாட்டிற்கென்று சொல்லாதே சகி! நீ சொல்வது போல் அவர் என்மீது காதல் கொண்டிருப்பின் நான் எழில் மிக்க சுந்தரனை அவமரியாதை செய்யக்கூடாது. நான் இப்போது காதல் கொண்டிருப்பதுபோல் அவரும் கொண்டிருப்பின் கற்கண்டு மலையில் தேன்மாரி பொழிந்தது போலுமாகும். சகி! அவரைப் பார். அசைக்கின்றார். யாருக்கு வணங்குகிறார் அவர்.

(ஸுரேந்திரன் வணங்கிசென்று மறைகின்றான்.)

லலிதை:—சகி! சந்தேகமின்றி உமக்கே!

ஸரோஜனி:—எங்கு செல்கிறார் அவர் இப்போது.

விசித்திரன்:—அம்மணி! அவரது இருப்பிடத்திற்குச் செல்கிறார். எதற்காகவோ எனக்குத் தெரியாது. இதுவே தான் அவரிடம் நான் காண்கிறேன்.

ஸரோஜனி:—(தனக்குள்) ஹா! என்ன ஸௌந்தரம். என்ன தேஜஸ், குணவானாயும், க்ஷத்திரியவம்சத்தில் உதித்தவர்போலும் இருக்கிறார். எனது பாக்கியம் தான் அவரை மணாளனாகப் பெறுவது. அப்பாவி ராஜேந்திரன் படை எடுக்கப்போகின்றானாம். என்செய்வது? என் மனம் இவரையே நாடுகின்றது. நான் எவ்விதத்திலாவது இவரையே மணம்புரிவேன். இன்றேல் தக்ஷணம் பிணக்கோலமாவேன். (வெளியாய்) ஸகி! அவரது வ்ருத்தாந்தம் ஏதேனும் உனக்குத் தெரிய வருமோ?

லலிதை:—எனக்கு ஒன்றும் தெரியாது. ஒருவேளை விசித்திரனுக்குத் தெரிந்திருக்கலாம்.

ஸரோஜனி:—விசித்திர! உனக்கு ஏதேனும் அப்பிரபுவைப்பற்றித் தெரியுமோ?

விசித்திரன்:—அம்மணி! நான் அவரை விசாரித்ததில் கோசலநாட்டைச் சேர்ந்தவர் என்றும், தனதுநாமம் ஸௌரேந்திரன் என்றும் தெரிவித்தார்.

ஸரோஜனி:—என்ன! ஸௌரேந்திரரோ அவர் திவ்வியநாமம்.

விசித்திரன்:—ஆம் அம்மணி! அதோ தங்களது மாமாவும், உஜ்ஜனி அரசரும் வருகின்றார்கள்.

(பாலநேசனும், பிரதாபனும் பிரவேசம்.)

பால:—என்னருமை ஸரோஜனி! இதோ நிற்கும் இளவரசர் உஜ்ஜனி நாட்டுப்பதி. இவர் எனக்குற்ற நண்பர். மாசிலாமணி! அழகில் என்ன. நான் சொல்லவேண்டியதுமில்லை. நீயும் அறியாப் பாலிகையுமல்ல. நான் உனது நன்மையைக் கோரியே இவரை உனக்குப் பதியாக நியமிக்க என் மனம் தூண்டுகிறது. என்ன விடை பகருவாயோ சீக்கிரம் அறிவி.

ஸரோஜனி:—அன்புள்ள மாமா! மணம் செய்விப்பது பெரியோர் பொறுப்பு. பெற்றோர் குழந்தையின் ஸௌகத்தையும், இஷ்டத்தையும் நாடுவதே தருமம். அவ்விதம் புத்ரிகள் ஸௌகத்தை நாடாது தங்கள் ஸௌகத்தை கருதுவோர்களாயின் அவர்களே அப்புத்ரிக்குச் சத்ருவாகின்றனர். இப்பொழுது என் விஷயத்தில் என்னை ஈன்ற தந்தை என்ன சொல்லுகின்றாரோ அதன்படி நடக்கச் சித்தமாயிருக்கின்றேன்.

பால:—கண்மணி! ஸரோஜனி! உன் நிமித்தம் தன் நாட்டையும்விட்டு இப்பொழுது நடக்கப் போகும் யுத்தத்தில் தானும் சமர்க்களத்திற்கு வரத் தயாராகவிருக்கின்றார் இவர்.

பிர:—ஆமாம். அவர் சொல்லிய பிரகாரமே! அந்த ராஜேந்திரனை யான் கொல்லாமல் விடுவதில்லை.



விசித்திரன்:—(தனக்குள்) இது என்ன! ரொம்ப புத்திசாலிதான் பிள்ளை. கட்டாயமாய் இவனைத் தான் ஸரோஜனி மணம் செய்துகொள்ள வேண்டும்.

ஸரோஜனி:—மாமா! அவ்விதம் ஒரு பெண்பேதைக்கு உதவிபுரியும் வீரனுக்கு நான் என்ன கைம்மாறு செய்யவல்லேன். ஒரு மங்கையைக் காத்த புண்ணியம் உஜ்ஜனி பதிக்கு வரப் பிரார்த்திக்கின்றேன். இளவரசரே! உமது கஷ்டமும், நன் முயற்சியும் வீண்போகா. இறைவனது திருவருளால் உமக்குக் கீர்த்தியும் புகழும் உண்டாகும்.

பிர:—அரசிபெரும்! நான் உமது அடிமையே. என்னை எது செய்ய விரும்பினும்நான் செய்ய காத்திருக்கிறேன்.

பால:—ஸரோஜனி! நேரமாகின்றது. சீக்கிரம் மாடத்திற்குச்செல். பிரதாப! வாரும் நாம் செல்வோம்.

[பிரதாபன் பாலநேசன் இருவரும் ஒரு புறமும் லலிதை
ஸரோஜனி விசித்திரன் மூவரும் மற்றொருபுறமும் நிஷ்கிரமம்.
ஸௌரேந்திரன் மறைவிடத்திலிருந்து வெளிவரல்.]

ஸௌரேந்திரன்:—இவ்விளவரசனும், இளவரசியை மணக்க இச்சிக்கிறான் போலும். பாலநேசன் ஸரோஜனியை பிரதாபனுக்கு கொடுக்கப் பிரியமும் கொண்டுள்ளார்போலும். இருக்கட்டும். என்னாருயிர் ஸரோஜனியின்மீதுள்ள காதலே என்னை அரிய பெரிய காரியங்களை நிறைவேற்றத்தூண்டும். நான் இஷ்டப்பட்டபொழுது அந்த வனிதாசிரோமணியைக் காண்கின்றேன். இந்த நன்மங்கையை அடைவதில் எவ்வித கஷ்டம் எனக்கு ஸம்பவித்தபோதிலும் அதை ஒரு பொருட்டாகக் கருதேன். பிறவியில் அரிதான மானிடப் பிறவியும் பெற்று, க்ஷத்திரிய வம்சத்திலும் உதித்த நான் எடுத்த கருமத்தை தொடுக்காது விடுவனோ? என்காதற் களஞ்சியத்தை அடையாது போவேனோ? பிரதாபனை, காஞ்சேயன் காரிகை கருத்திலும் உன்னுவளோ? எப்படியாவது ஸரோஜனியை விரைவினில் பெறுகின்றேன். அவ்விதம் அடையாவிட்டால் விடுகிறேன் என்னுயிரை. இதுவே என் கடைசி முடிவு. இப்பொன்னங்கை என்மீது பூரண காதல் கொண்டிருக்கிறாளென்பதற்கு யாதொரு ஐயமுமில்லை. கண்ணே! ஸரோஜனி பஞ்சுபடும் பாடுபட்டாயினும் இறுதியில் நின்னையே மணக்கின்றேன். இது சத்தியம். முக்காலும் சத்தியம். (செல்கை.)

காட்சிமுடிகிறது.

கீழ்வீதி. பிரயாகை. சேஷாத்ரி ஐயங்கார்.

# THE MARRIAGE SACRAMENT.

## விவாஹ ஸம்ஸ்காரம்.

### விவாகத்தில் வதூவரர்களின் சம்மதம் அவசியம்.

(226-ம் பக்கத் தொடர்ச்சி.)

புத்தூர் மிராசு மகாதேவய்யர் வீட்டுக் கலியாணத்தில் ஊர்கோல வைபவமானதாய்ச் சொன்னோமே. அது ஆய் ஏழு வருஷகாலங் கழிந்தது. ஒரு நாள் நல்ல நிலவு களங்கமற்ற வானத்தில் சந்திரன் நட்சத்திரங்களுக்கு நடுவில் திவ்யமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறான். தென்றல் மிக்க மனோஹரமாய் வீசி யடிக்கின்றது. அவ் வெண்ணிலாக் காலத்தில் போலீசு இன்சபெக்டர் பி. சேஷய்யரவர்கள் தமக்கு இன்சபெக்டர் ஸ்தானம் காயமாக்கப்பட்டதைக் கொண்டாடும் நிமித்தம் தம் நண்பர் பலரை யழைத்துக் காவிரியாற்று மணலில் நிலாச் சாப்பாடு வைத்திருந்தார். அந்நிலாச் சாப்பாட்டிற்கு 80 ரூபா செலவு. அவர் தம் கைப்பணம் சிறிதளவிருந்தாலும் அவருக்காக அவரது நணபர்கள் முன் வந்து தம்மாலான மட்டும் செலவை யொப்புக்கொண்டார்கள். இந்த விருந்திற்கு சங்கீதக் கச்சேரி வேண்டுமே. அதற்கு ஏதாவது தனியாய்ச் செலவழிந்ததோ வென்றால் இல்லை. இவரது வைப்பான பெங்களூர் தாஸியே அங்கு வந்திருந்தாள். வெண்ணிலவில் அவரவர் வயிறு நிரம்பவுண்டு பின்னர்ச் சங்கீதக் கச்சேரியிலாழ்ந்து பரி பூரணித்திருக்கையில் ஐயரது மனைவியின் நிலைமை யென்னவென்று பார்ப்போம். அக்கினிசாட்சியாய்த் தொட்டுத் தாலிகட்டிய அவரது மனைவி தனிமையான தன் படுக்கையிற் படுத்துப் புரண்டு "ஆ தெய்வமே, இப்படியும் என்னைத் தனியே விட்டனையே; இவ்விதம் தனிமையாய் நான் காலங்கடத்துவதைக் காட்டிலும் தேவரீர் திருவடிகளில் என்னைச்சேர்த்துக் கொள்ளலாகாதா" வென்று துக்கித்தனள். தலையணை, கண்ணீர் வடிந்து நனைந்திருந்தது. இது நிற்க, மற்றோரிடத்தில் நடந்த கூற்றையும் விவரிக்க மனம் கூசுகிறது. அதேயிரவில் ஆணவம் மிகுந்து மிருகத்தன்மை மேலிட்ட கணவனொருவன் தன்னுடைய மனைவியை அடித்தும் வைதும் உதைத்தும் அட்டகாசஞ் செய்துகொண்டிருந்தான். அந்த மனைவியோ மெலிந்த சரீரமும் வனப்பும் வாய்ந்த வனிதையுமாயிருந்தனள். அவளது முக கலாவிலாஸத்தில் களங்கத்திற்கு யாதொரு இடமுமில்லை. தணிவும் பணிவுங்கொண்ட அந்நாரீமணியை அவனது மிருகத் தன்மை மேலிட்ட கணவன் தன் தாய் வார்த்தையைக் கேட்டு அடித்து வற்புறுத்திக்கொண்டிருந்தான். இந்த மாதராள், மாமியின் மனப் பூர்த்திக்கேற்றவாறு ஏதோ வீட்டு வேலை செய்யத் தவறியதனாலே, அகங்காரங் கொண்ட மாமி தன் பிள்ளையிடம் ஒன்றுக்கு ஒன்பதாய்க் கோட்சொல்லி நீலித்தனஞ் செய்து நாட்டுப்பெண்ணைத் துன்பத்திற்குள்ளாக்கினாள். அந்நாட்டுப் பெண் யாரென்று கேட்பீர்களோ, ஏழை தின்னூர்ப் பெண்தான். அப்பெண்ணுடைய தகப்பனார், வரசுல்கமாக நூறும் ஆயிரமுமாகப் பணம் கொடுக்க ஐவேஜில்லாமல் அடுத்த கிராமத்துக் கர்ணனுக்குத் தன் பெண்ணை இளையாளாகக் கன்னிகாதானஞ் செய்துகொடுத்தார். அப்போது பெண்ணுக்கு பதினொரு வயது. பெண் ருதுவாய் விட்டால் தனக்கும் தன் குடும்பத்துக்கும் ஓர் அவச்சொல் வந்து சேருமே யென்று பயந்துதான் தின்னூர்ப் பெண்ணுக்கு அவசரமாகக் கலியாணஞ்செய்ய நேரிட்டது. கர்ணனுடைய தாயாருக்கு



தன் நாட்டுப் பெண் ஏழை யென்ற கோபம், சீர் ஒன்றுங் கொண்டுவரவில்லையென்று நிமிஷத்துக்கு நிமிஷமாய்ப் பிடுங்கியெடுக்கிறாள். இதல்லாமலும் அவளுக்கு இன்னொரு பயம். தின்னூர்ப் பெண் அழகாயிருக்கிறாள்; மேலும் தன் பிள்ளைக்கு இளையாளாய் வாழ்க்கைப்பட்டிருக்கிறாள்; எப்போதும் புருஷனுக்கு இளையாளிடத்தில் மோகம் அதிகமிருக்கும்; அந்த மோகத்தில் தன் பிள்ளை தன்னை விட்டுப் பிரியும்படி நேர்ந்துவிட்டால் என்ன செய்வது என்று எண்ணினாள் மாமி. தாய் வார்த்தையைக் கேட்டு வந்த கர்ணம் உத்தியோகஞ் செய்யும் அந்த மூடப்பிள்ளை, தினந்தவறாது தன் மனைவியின் ஏழ்மையைக் குறித்துச் சுட்டிப் பேசுவதும் "அழகுள்ள மனைவி அகமுடையானுக்கு சத்துரு" என்ற பண்டைக்கால பழமொழிக்கிணங்க தாயின் தாறுமாறான அகங்காரம் திருப்தி யடையும் வண்ணம் அவ்வெளிய பெண்ணை அடித்துத் துன்புறுத்துவதும் தன் காரியமாய்ச் செய்து வந்தான். இந்த விதமா யேற்பட்ட விவாக சம்ஸ்காரத்தினாலே இரண்டு குடும்பங்கள் செப்பவொண்ணாத் துன்பக் கடலில் ஆழ்ந்தன. ஆனதுபற்றி விவாகமாகுங்காலத்து பெற்றோராயினோர் கண்மூடித்தனமாய்ச் செய்துவிடாமல் வதூவரர்களின் மனஸைச் செவ்வையாயுணர்ந்து, அவ்வனுகூல தம்பதிகள் அமோகமாய்க் காலங்கடத்துமாறு பார்த்து விவாக சம்ஸ்காரத்தை நிர்ணயிக்கவேண்டுமென்றே இவ்வளவுதூரம் எழுதலானோம்.

L. அனந்தய்யர்.

ஸகோதரிமார்களே! உங்கள் வாழ்நாட்களை சுகமாக அனுபவியுங்கள்.

அநேக சிறந்த நற்சாட்சிப் பத்திரங்கள்.
திருப்தி அடைவீர்களென்பது திண்ணம்.

விலை, ரூ. 4—0—0.

எல்லா வியாதிகளுக்கும் இதே மருந்து.
அறிந்து கொள்ளவேண்டும் விஷயங்களை சிலவின்றி கடிதப் போக்குவரவு மூலமாகத் தெரிந்து கொள்ளலாம்.

ஸ்திரீகளுக்குறிய எல்லா வியாதிகளையும் அடியோடு நிவர்த்திக்கும் கைகண்டதும் மலட்டுத்தனத்தை நீக்கக்கூடியதுமான

ஆபால்ஸ்மிருதம்.

ஔஷதம்.

இன்னும் ஏதும் விஷயம் தெரிந்து கொள்ளவேண்டுமென்றால், ஸௌத்மலபார் ஒட்டப்பாலம் மார்க்கம் புலப்பட்டாவில் ஆயுர்வேத ஔஷதசாலை மானேஜர், அவர்களுக்கு எழுதிக்கொள்ளவும்.

கதசாலீவாகனசகாப்தம்-கஅகக கதகல்யப்தம்-ஞOகஅ } விஜ ஆச்வீஜம் கார்த்திகம் { பிங்களஹு ஐப்பசீ-கார்த்திகை தக்ஷிணாயனம்-சரத்ருது } கொல்லம் சOகரு { இக்கிலீஷ்-கககஎ,பஸலி கருஉஎ, நவம்பர்௴ } ஹேஜரா-கருருடு-ருகு. யோஹார்௴-ஸபர்௴

நவம்பர்௴ · கார்த்திகை௴ · டிஸம்பர்௴

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | 1 | கரு | வியா | துவி கூ-சரு, * கார் கஉ-சக, வரி ருக-டுஅ, சர கூ-சரு, ரா உரு-சO, ம, |
| 16 | 2 | கஎ | வெ | திரு அ-அ, ரோ சஉ-சஎ, பரி உஅ-எ, பத் அ-அ, தி உஎ-கூ, அஹ உரு-கூ, ம, சி, |
| 17 | 3 | கஅ | சனி | சது எ-டுO, மிரு கச-எ, சிவ உடு-தகூ, பா எ-டுO, ரா கூ-டுக, சி, |
| 18 | 4 | சக | ஞா | பஞ் க-சஉ, திரு கரு-கச, வித் உரு-உடு, தை அ-சஅ, ரா கரு-ருடு, சி, |
| 19 | 5 | உO | திங் | ஷ ககடு, புன உO-ருO, ஸா உஉ-ருஉ, வணி ககடு, ரா சரு-எ, அ, சி, |
| 20 | 6 | உக | செ | ஸ கச-உக, பூச உடு-உக, சுப உஉ-உக, பவ கச-உக, தி O-O, அஹ உக-க. சி, |
| 21 | 7 | உஉ | புத | அஷ் கஅ-சக, ஆயி கக-ச, சுப் உரு-அ, கௌ சஅ-சக, தி O-உச, அதிதி, சி, |
| 22 | 8 | உரு | வியா | நவ உரு-சரு, பக ருஎ-உO, ப்ரா உச-சடு, கர உரு-சரு, தி ச-கஉ, ரா ருO-ருச, அ, சி, |
| 23 | 9 | உச | வெ | தச உக-க, பூர சரு-சஉ, மா உடு-ருO, பத் உக-க, சே ரு-உஎ, சி, |
| 24 | 10 | உடு | சனி | ஏகா ருச-உ, உத் சக-டுரு, வை உகூ-சக, பவ க-ருஉ, தி ரு-சO, அஹ உஅ-டுகூ, ஸர்வைகாதசி, |
| 25 | 11 | உகூ | ஞா | துவா ருஅ-ருடு, ஹஸ் டுடு-ருக, விஷ் உஎ-உக, கௌ கூ-சஅ, தி கஉ-டுக, அ, சி, [வைதிருதீசிரார்த்தம், ம, |
| 26 | 12 | உஎ | திங் | திர எஉ-உக, சித் கூO-O, ப்ரீ உஎ-சக, சர கO-உஅ, தி கஎ-சO, பிரதோஷம், சிவராத்திரீவிரதம், நரகசதுர்தசிஸ்நாநம், சி, |
| 27 | 13 | உஅ | செ | சதுர் சச-டுஅ, சித் O-உO, ஆயு உஎ-கூ, பத் கரு-ருக, தி கடு-சO, கிருஷ்ணாங்காரகசதுர்தசி, தீபாவலி, சி, |
| 28 | 14 | உக | புத | ● அமா சகூ-உச, சுவா ரு-டுச, ஸௌ உடு-ருக, சது கடு-சச, தி கஅ-உஅ, அஹ உஅ-டுO, தர்சசிரா,கேதாரகௌரீவிரதம்,சி, |
| 29 | 15 | ருO | வியா | கார்த்திகசுக்லப்பிர சகூ-உக, விசா கூ-உO, சோ உரு-சக, கிம ககூ-உகூ, தி ககூ-ருச, விருச்சிகரவி சஉ-டுச, விஷ்ணுபதபுண்ய [காலம, இஷ்டி, சடைமூகஸ்னனம், கிருத்திகாஸ்நாநம்; விருஷபவிரதம், துலாவிருச்சிக சுக்லபிரதமாதிதி, சி, |
| 30 | 16 | க | வெ | துவி சடு-சடு, அனு எ-உஅ,அதி சகூ-சஉ,பா கடு-டுஉ,தி உக-உஎ,விருத்தியர்க்கம்,அஹ உஅ-சஅ,வாக்கியம்,துருவ,சந்திரத |
| 1 | 17 | உ | சனி | திரு சஉ-டுடு,கே எ-உச,ஸாக சடு-உச,தை கச-டு,தி உஎ-உ,சி,[சனம்,திந்திர்ணீகௌரீவிரதம்,விருச்சிகசுக்ல துவிதிகாதிதி, |
| 2 | 18 | ரு | ஞா | சது ருக-ருக, மூல கூ-சஅ, திரு கO-உ, வணி கக-சரு, தி உ-சஅ, ரா O-சச, சதுர்தீவிருதம், நாகசதுர்த்தீ, அ, சி, |
| 3 | 19 | ச | திங் | பஞ் ருடு-சக, பூரா ச-கஉ, சூல உ-டுஅ, உபரி டுச-உO, பவ எ-உடு, தி உஉ-டுடு, சி, ம, |
| 4 | 20 | டு | செ | ஷ ருO-உஉ, உரா க-உஉ,உபரி டுகூ-உஅ,விரு டுO-க,கௌ அ-டுக,தி கO-சகூ,அஹ உஅ-சஉ,ஷஷ்டிவுபவானம்,சிரவணோபவா |
| 5 | 21 | கூ | புத | ஸ உச-டுகூ, அவி டுரு-டுஅ,துரு சஉ-உஅ,வணி உச-டுகூ,தி எ-சக,சாகானந்தஸப்தமி,ம,சி, [ஸம்,ஸ்கந்தஷஷ்டி,மகாஷஷ்டி, |
| 6 | 22 | எ | வியா | அஷ் சக-சச, சத சக-டுடு, வியா ருச-சடு, பவ கக-கச, தி கO-சடு, கோஷ்டாஷ்டமி, திதித்வயம், ம, சி, |
| 7 | 23 | அ | வெ | நவ சரு-உரு, பூட் சடு-சஅ, ஹர் உக-டுஎ, கௌ சரு-உரு, தி ச-சக, கிருதயுகாதி, சி, [காதசி, சி, ம, |
| 8 | 24 | க | சனி | தச எ-ருஉ, உட் சக-டுக, வஜ் சக-சஉ, கர எ-ருஉ, தி அ-க, சாபாடணம், சO-உரு,அஹ உஅ-ருஅ,ஸ்மார்தைகாதசி,உத்தானை |
| 9 | 25 | கO | ஞா | ஏகா க-சO,உபரி,டுடு-சக,ரே ருஅ-உO,வித்தி கக-சரு,பத் க-சO, பவ உஎ-சக,தி கO-கூ, வைஷ்ணவைகாதசி, அவமா வியதீ |
| 10 | 26 | கக | திங் | திர டுஉ-உக, அசு ருடு-ருடு, விய ச-ருஎ, உபரி டுரு-உஎ, கௌ உச-சO, தி உடு-டுச, ரா உக-டுடு, பிரதோஷம், சி, |
| 11 | 27 | கஉ | செ | சதுர் சஅ-டுஉ, பர ருரு-சரு, டரி டுஉ-சரு, சர உO-சO, சே உ-ருஉ, பாஷாணசதுர்தசி, கார்திகௌரீவிரதம், சி, |
| 12 | 28 | கரு | புத | ○ பௌ சகூ-சஅ, * கார் ருக-டுஅ, சிவ சஎ-கஉ, பத் கஎ-ருடு, தி உ-ருக, அஹ உஅ-ருடு, கிருத்திகோடவாஸம், ஸ்ரீ அருண [ஜலதீபம், ஸர்வாலயதீபம், தக்ஷஸாவர்ணிகமன்வாதி, விருஷபோத்ஸர், ஸர்ப்பலி, அ, சி, |
| 13 | 29 | கச | வியா | கார்த்திகிருஷ்ணபிர சச-கூ,-ரோ ருக-சஅ, வித் சஉ-சகூ, பா சடு-கஉ. தி கக-டுக, ரா கஎ-உஅ, இஷ்டி, விஷ்ணுதீபம், ம, |
| 14 | 30 | கடு | வெ | துவி சச-சஉ, மிரு ருஉ-சக, ஸா ருக-சக, தை கச-உச, ரா உகூ-ச, சி, |

ஸ்ரீராமஜயம்.

# கல்பதரு.

KALPA THARU.

அறிவு வளர்ச்சிக்கான ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புஸ்தகம் 1. Vol. I. } பிங்களஹு கார்த்திகை-NOV., 1917. { ஸஞ்சிகை 9. No. 9.

# PART I.

## THE BRITISH ARMY—THE WAY OF THE RECRUIT.

## பிரிடிஷ் சைந்யம்—ரிக்ரூட் நடக்கவேண்டிய க்ரமம்.

குற்றவாளியைப்பற்றிய தோரணை.

(232-ம் பக்கத் தொடர்ச்சி.)

சாதாரண குற்றமல்லாத ரிக்ரூட் செய்திருக்கும் வேலை பெரிய குற்றமென்று வைத்துக்கொள்வோம். அப்போது அங்கிருக்கும் மேலதிகாரியினுடைய தீர்ப்பு செல்லமாட்டாது. சுமார் ஏழுநாள் ரிக்ரூட் அடைபட்டிருக்கும்படியான குற்றத்தை அவன் செய்திருப்பதாக மைதானத்திலிருக்கும் அவ்வாபீஸருக்குத் தோன்றின்பக்ஷத்தில், தான் தீர்ப்பேதும் சொல்லாது, அந்த ரெஜிமெண்ட், பட்டாலியன் அல்லது ஆர்ட்டிலரி பிரிகேட் (பிரக்பிடை) தலைவரிடம் அவனை அனுப்பிவிடுவார். மைதானத்தில் நின்றிருக்கும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள ரிக்ரூட்டை முன்னும் பின்னும் 'கான்—கமிஷண்ட்' ஆபீஸர்கள் பாராவாக நடத்திக்கொண்டு போவார்கள். 'ரெஜிமெண்டல் ஆர்டர்லி' என்ற ஆபீஸர்முன்னின்று வழிவிடுக்க இந்தக் குற்றவாளி விசாரணைக்கூடம் போய்ச்சேருவான். பொதுவாக இவ்விசாரணைகள் முற்பகல் 11-மணிக்கு நடைபெறும்; படைத்தலைவரான கர்னல்,

அல்லது அவருக்கு அடுத்தபடியாக அவரது டிபுடியாவது குறித்த நேரத்திற்கு அவ்விசாரணைக்கூடத்திற்கு வந்து சேருவார். மொத்தம் அங்கிருப்பது சுமார் 15 - அல்லது இருபது பேர்களாயினும், ஒரூசி விழுவதும் செவியிற் படுமாறு நிச்சப்தமாக விருக்கும். உடனே ரெஜிமெண்டில் அட்ஜுடெண்டு உத்தியோகம் வகித்திருப்பவர் குற்றவாளியின் மீதுள்ள சார்ஜை உரக்கப்படித்து, மைதானத்தில் வாங்கப்பட்ட சாக்ஷி வாக்குமூலங்களையும் சொல்லுவார். அதற்குப் பிறகு கர்னல் தமது தீர்மானத்தைக் கூறுவார். இதற்கே கோர்ட்மார்ஷல் (Court-martial) எனப்படுவது, இதில் விடுதலைடைவது மிகவும் அரிது. எவனொருவன் இவ்வித விசாரணைக்குள்ளாகிறானோ அப்போதே அவன் ராணுவத்திற்காகாத எவ்வேலையையோ செய்துதானிருக்கவேண்டு மென்பது நிதர்சனமாகிறது. இந்த இடத்தில் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவன் தான் செய்த வேலையைக் குறித்துத் தாங்கிப் பேசச் சந்தர்ப்பமுண்டு; என்றாலும் அனுபவம் வாய்ந்த ஆபீஸர்களுக்கு ரெஜிமெண்டிலுள்ள உட்காரியங்களும் மர்மங்களும் நன்றாகத் தெரியுமாதலால், இன்ன வகையில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் ரிக்ரூட் தப்பிதஞ் செய்திருப்பான், இன்னவகையில் தப்பிதஞ் செய்திருக்கமாட்டான் என்பது நன்றாக விளங்கும்; அதன்பேரில் அவனுக்குத் தண்டனை விதிப்பார்; அநேக சந்தர்ப்பங்களில் விதிக்கப்படும் தண்டனை அதிக கடூரமாயிராது. "ஜாங்கர்ஸ்" (Jankers) என்னும் ஒருவகைத் தண்டனை—அதாவது விலங்குபோடுவது. இதனாலேயே அநேகமாய் ரிக்ரூட் திருந்தமடைந்து நல்ல ஸோல்ஜரென்று பெயரெடுக்குமாறு திருந்துவான்; இதற்கும் மேலானது "ஸெல்ஸ்" (Cells) என்று சொல்லப்படுவது. சிறைக்கூடத்திலுள்ள அறைகளுக்கே ஸெல்ஸ் என்று சொல்லப்படுவது. குற்றஞ்சாட்டப்பட்டவனை அவனது நண்பர் இத்தண்டனைக்காக அவமதிக்கமாட்டார்களாயினும், அதவாத் அவமதிப்பு ஏற்படுமானால் அதுகாரணமாகத் தன்னுடைய பிற்கால நடத்தைக்கு யாதொரு லோபமும் ஏற்படமாட்டாதாயினும், அவ்வறையினுள் அடைபட்டிருப்பதன் அஸௌகர்யத்தினாலும் கடும்வேலைகளைச் செய்யவேண்டுவதன் தர்மசங்கடத்தினாலும் முரட்டு ரிக்ரூட்டின் தன்மை மாறி, அவனிருக்கவேண்டிய நெறியைப்பற்றி நன்குணர்ந்து திரும்புவான். சிக்ஷாகாலத்தில் ரிக்ரூட் இருக்கும் பரியந்தம், அதாவது அவனுடைய அர்ரெஸ்ட் முதல் விடுதலையும்பரியந்தம், அவனுடைய சம்பளம் நிறுத்திக்கொள்ளப்படும். மிதமிஞ்சிக் குடிப்பதற்கும் விலங்கிடுவது, சிறைக்கூடத்திற் போட்டடைப்பது போன்ற தண்டனைகளுண்டு.

### தினசரி வேலை.

இம்மாதிரி ஒவ்வொரு விஷயத்திற்கும் ரிக்ரூட்டானவன் கண்ணும் கருத்துமாயிருந்து வருவதனாலேயே அவனுடைய தினசரிவேலை வேறொரு



வருடைய உதவியில்லாமலே நடந்தேறி விடுகிறது; பாசறைக்குள்ளிருக்கையில் அவன் குடிக்கலாகாது, மணிக்கணக்கை யனுஸரித்து ஒவ்வொரு காரியத்தையும் கவனிக்கவேண்டும். அதிற் சிறிது பிசகினால் உடனே தண்டனைக்குள்ளாகவேண்டு மென்னும் நிர்ணயம் அவனது மனத்தில் எப்போதும் ஞாபகத்திலிருந்து கொண்டே யிருக்கவேண்டும். இராப்பொழுதில் தன் படுக்கையைத்தானே விரித்துக் கொள்வான்; தானிருக்குமிடத்தைச் சுற்றிலும் தானே துலக்கிக்கொள்வான்; பிளாங்கெட்டுகளைத் தானே விரிக்கவோ மடிக்கவோ செய்துகொள்வான்; இன்னவிதமாக விரித்துக் கொள்ளவேண்டும், இன்னவிதமாக மடித்துக்கொள்ள வேண்டும் என்பதுகூட ராணுவத்தில் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறது; அதன் பிரகாரந்தான் ரிக்ரூட்டும் செய்யவேண்டும். வெளியானொருவன் பாசறைக்குள் ரிக்ரூட்டுகளிருக்குமிடத்திற்குச் சென்று பார்த்தால் அச்சுப்போட்டதுபோல் ஒரே வரிசையாக ரிக்ரூட்டின் சாமான்கள் வைக்கப்பட்டிருப்பதையும் மற்றும் கண்களைக் கவர்வனவாயும் மனதை மனோஹரிப்பன வாயுமுள்ள அம்சங்களொவ்வொன்றும் பலப்படுவது இனிது விளங்கும். இதுவே ரிக்ரூட்டின் தினசரி வேலையாகும். ஒரு குதிரைப்படையாளனுடைய வேலையைக் கவனிப்போம். பொழுதுவிடிந்ததற்குறியாக ரெவீல் (reveille) என்னு சங்கத்தின் சப்தம் பாசறையில் ஒலிக்கப்படும் அது படையாளருடைய செவியிற் பட்டதோ இல்லையோ தக்ஷணமே ரிக்ரூட்டானவன் தினசரிவேலைக்கு ஆரம்பித்து விடவேண்டும். இதற்கு முன் வெளியான சஞ்சிகைகளில் தெரிவித்த பிரகாரம் பாடுபட்டுப் பகற்பொழுதனைத்தையுங் கழித்து இரவு நேரத்தில் 'விளக்கவிக்கப்படட்டும்' (lights out) என்னும் சப்தம் முன்னிடும் வரையில் ஓயா தொழியாது ரிக்ரூட் வேலைசெய்தே தீரவேண்டியவனாயிருக்கிறான். ஆகவே அவனுக்குத் தினந்தவறாது உழைப்பிருக்குமேயன்றி ஓய்ச்சலில்லை. இதனால் எந்நேரமும் உழைப்பென்று நினைக்கவேண்டாம்; உழைக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கும் நேரந்தீர மற்ற வேளைகளில் ரிக்ரூட்டானவன் கவலையேதுமின்றிக் காலங்கழிக்க வேண்டியவனாகிறான்.

### குதிரைப்படையாளனின் வேலை.

விடியற்காலை நாலரை மணிக்குமேல் ஆறரை மணிவரையில் அந்தந்தப் பருவத்திற்குத் தகுந்தபடி ரெவீல் சப்திக்கப்படும். தம்பட்டத்தின் ஓசை நிற்பதற்குள்ளாக பாசறையின் சார்ஜிலிருக்கும் கார்ப்போரல் என்னும் ஆபீஸர் தம் உச்சஸ்வரத்துடன் படையாளரை யழைப்பார்; இச்சப்தம் இடப்பட்ட 15 நிமிஷத்திற்குள்ளாகப் படையாளர் எழுந்து முகங்கழுவியோ கழுவாமலோ உடையுடுத்தி மைதானத்தில் ட்ரில் பழகுவதற்காக ஏற்படுத்தப் பட்டிருக்கும் வகுப்புக்களில் ஆஜராகத்தயாராய் செல்லவேண்டும். அவ்விதம் செல்லுவதற்குமுன் தம் குதிரைகள் கட்டப்பட்டி

ருக்கும் லாயங்களுக்குச் சென்று ஒருமணி நேரம் அவ்விடங்களைச் சுத்தி கரிக்கவேண்டும். பிறகு குதிரைகளை யழைத்துக் கொண்டுபோய்த் தண்ணீர்காட்டி திரும்ப லாயங்களிற் கொணர்ந்து கட்டிப் புல் போட்டுவிட்டு இப்படையாளர் திரும்ப தம்மறைக்கு வந்து காலை போஜனமுண்டு 'ட்ரில்' பயிற்சிக்குச் செல்லுவார்கள். இப்போது அவர்கள் காலையுடையிலிருக்கலாகாது; உடைகளை வேறு விதமாக மாற்றுவார்கள். குதிரைப் படையாளருக்கு ட்ரில் பயிற்சியென்றால் அசுவங்களின்மீதேறி சவாரிபோவதும், கத்தி, கேடயம், துப்பாக்கி, ஈட்டி, பாலாமுதலான கருவிகளைக் குதிரைகளின்மீதிருந்தே உபயோகிக்கும் மாதிரிகளையும், கற்பிப்பார்கள்; இது முடிவதற்குள் மணி பத்தரையாகிவிடும். திரும்பிவந்து குதிரைகளை லாயங்களிற் கட்டி சேணங்களையெடுத்துக் கொடிகளில் மாட்டிப்படையாளர் பாசறைக்குத் திரும்பி வேறுடை தரித்து 10 நிமிஷநேரம் ஆசுவாசஞ் செய்து கொள்ளுவார்கள். அதற்குப்பிறகு அப்படையாளர் மறுபடியும் லாயங்களுக்குச் சென்று குதிரைகளை 'மாலீஸ்' செய்வார்கள். இது ஒரு மணிநேரம் பிடிக்கும்; பிறகு சேணங்கள் க்ளீன் செய்யப்படும். பெரிய வாபிஸர் வந்து சரிபார்ப்பதற்குள் மணி ஒன்றாகிவிடும். உடனே பகற்போஜனத்திற்குப் படையாளர் சென்று விடுவார்கள். ஒருமணிநேரம் போஜனசாலையில் ஸாவதானமாக அவர்கள் உட்கார்ந்து அன்னமுண்டு பகல் 'ட்ரில்' பயிற்சிக்குச் செல்லுவார்கள்; இப்போது குதிரைகளிற் செல்லார்; தேகப் பயிற்சிக்கான உடை தரித்துக் கால் நடையாகச் செல்லுவார்கள். இவ்விரண்டிற்கு இரண்டு மணிநேரமாகிவிடும்; பின்னர்ப் பாசறைக்குத் திரும்பி 5-மணி அடிப்பதற்குள் கால் பூட்சில் போட்டிருக்கும் ஸ்பர்களையும் (spurs) கத்தி முதலான போராயுதங்களையும், நன்றாகத் துடைத்து 'க்ளீன்' செய்வார்கள். 5-மணியானதும் இவர்கள் மறுபடியும் லாயங்களுக்குச் சென்று குதிரைகளுக்குத் தண்ணீர் காட்டி ஆகாரமிட்டு ஒருமணி நேரம் செலவிடுவார்கள். அங்கிருந்து தேத்தண்ணீர் அருந்துவார்கள்; பிறகு எவரெவருக்கு இராப்பாராவென்று கூறப்படும்; அத்தொழில் ஒழிந்த ஏனையோர் தம்மிஷ்டப்பிரகாரம் இருக்கமுடியும். இம்மாதிரியாக ஒவ்வோரம்சத்திலும் அக்கரையும் கவனமும் காட்டி நடப்பது ரிக்ரூட்டின் கிரமமாகும்; காலாட்படை குதிரைப்படையினர் எப்படி வேலை செய்கிறார்களோ, அப்படியே பீரங்கிப்படையினரும் வேலை செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஓரிடத்தில் சிறிது துருப்பிடித்திருந்தால் பின்னர் அக்கருவியின் உபயோகமே கெட்டுவிடுமாதலின் அவைகளைக் குறித்துப் படையாளர் விசேஷ கவனமெடுக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். எதிலும் ஒரு வருஷ காலம் ரிக்ரூட் சிரமப்பட்டு வேலை செய்யவேண்டும். பொதுவாக படையிற் சேருங்காலம் 18-வயதுக்குமேல் 25-வயதுக்குள்ளாகத்தான். முதல் வருஷத்தில் சாதாரணப் பயிற்சிபெற்று பிந்திய வருஷங்களில் ராணுவத்தின் முழுப்பயிற்சியையும் ரிக்ரூட் பெறவேண்டுவது இப்போது அனுஸரணையிலிருந்து வருகிறது.



# PART II.

## SANITATION.

## ஆரோக்கிய விமர்சனம்.

### DREAMS.

BY Mr. K. P. SESHADRI AIYANGAR,
(*Teacher, Muthiyalpet High School, Madras.*)

(203-ம்பக்கத் தொடர்ச்சி.)

#### ஸ்வப்னம்.

முன் சஞ்சிகைகளில் நித்திரை என்னும் விஷயத்தைப்பற்றி வெகு விரிவாக எழுதினோம். இப்பொழுது அந்த நித்திரையின் பந்துவான ஸ்வப்னம் அல்லது கனவு என்பதைப்பற்றி விவரிக்க எண்ணங்கொண்டுள்ளோம். நாம் நித்திரை புரியுங்கால் நமது கர்மேந்திரியங்களெல்லாம் அடங்கி ஒடுங்கிக்கிடக்கின்றன. ஆனால் மனோ சக்திமாத்திரம் தன் காரியத்தைச்செய்து வருகிறது. அந்த மனோசக்தி விளையாடும் விளையாட்டாக ஸ்வப்னத்தைச் சொல்லலாம். ஸ்வப்னம் என்பது மிகவும் ஆச்சரியகரமானது. இதன் உண்மையான காரணங்களை இதுவரையில் ஒருவரும் கண்டு பிடித்தார்களில்லை. அதியத்புதமாயிருக்கிற சில விஷயங்களில் இந்த ஸ்வப்னம் என்பது ஒன்று.

கனவென்பது பகவானால் நமக்குப் பின்வரும் சுபாசுபங்களை முன்னமேயே யறிந்துகொள்ள அனுப்பப்படுந் தூது என்று பழைய காலத்தில் சில பெரியவர்கள் நம்பியிருந்தார்கள். இதற்கு உதாரணமாக ராமாயணத்தில் பரதன் தன் தகப்பனான தசரதன் இறப்பதற்குமுன் கண்ட கனவு, சீதை, சூடாமணியைக்கொண்டு ஹநுமான் லங்கைக்குச் சென்று பிராட்டியாரைக் காண்பதற்குமுன் கண்ட ஸ்வப்னம்; ஹரிச்சந்திரன் தன் பத்நியான சந்திரமதியை ராஜாக்ஞைபால் சிரச்சேதம் செய்வதற்குமுன் கண்ட கனவு இவைகளை நம்மவர்கள் யாவரும் படித்திருக்கலாம். கனவைத் தூதாக எண்ணியவர்கள் நம் தேசத்தார் மட்டுமல்ல. பிரபஞ்சங்களிலுள்ள எத்தேசத்தினரும், எம்மதத்தினரும் இக்கனவு என்பதை தத்தம் முழுமுதற் கடவுளால் அனுப்பப்பட்ட தூது என்றே எண்ணி பூரணமாக நம்பிவந்தார்கள். இதற்கு திருஷ்டாந்தம்:

நாகரீகம், கல்வி கேள்விகளிற் வெகுகாலத்திற்கு முன்பே பிரக்யாதி பெற்ற ரோம், க்ரீஸ் முதலான இடங்களில் கனவு ஈசுவரனாலனுப்பப்பட்ட தூது என்றகொள்கை முற்றிலுமிருந்தது. இந்தக்கொள்கை வெகுவாக முற்றியிருந்த காலம் அகஸ்டஸ் ஸீஸர் என்னும் ரோமாபுரியின் சக்கர

வர்த்தி ராஜ்யபாரம் வகித்துக் கொண்டிருந்த காலந்தான். தன் ராஜ்யத்தில் ஒவ்வொருவனும் தான் இரவில் காணும் கனவை அரண்மனையில் வந்து பதியவைத்துப் போகவேண்டுமென்று திட்டமிட்டிருந்தான். பதியவைக்கத் தவறினால் தண்டனையும் ஏற்படுத்தியிருந்தான். அந்த சக்கரவர்த்திக்குப் பின்னால் ஜூலியஸ் ஸீஸர் என்பவன் சக்கரவர்த்தியானான். அவனுக்கு காலிபோர்னியா என்னும் சுந்தரமடந்தை மனைவி. ஜூலியஸ் ஸீஸர்க்கும் குடிகளுக்கும் கொஞ்சம் மனஸ்தாபமும் சச்சரவு மிருந்துவந்தன. இப்படியிருக்குங் காலையில் ஒரு நாளிரவு காலிபோர்னியா ஒரு கனவு கண்டாள். மிகவும் பயங்கரமான கனவு. திடீரென்று கண்விழித்து ஓவென்று கதறி அலறி தன் கணவனை எழுப்பி "நாதா! என்றைக்கும் காணாததும் எப்பொழுதும் கேட்கப்படாததுமான ஒரு பயங்கரமான கனவுகண்டேன். வீதிகளில் பெண் சிங்கங்கள் குட்டிகளை ஈன்றன. சமாதிகளெல்லாம் திறந்து, இறந்தவர்களை வெளிக்கிளப்பின. பராக்ரமும் வீரமும் பொருந்திய யுத்தவீரர்கள் மேகங்களோடு யுத்தம் புரிந்தனர். அவ்விதம் சமர் செய்யும்போது சிம்மாதனத்தின் மீது ரத்தம் மழையாக வருஷித்தது. குதிரைகள் யாவும் கனைத்தன; மனிதர்கள் இறக்கும் தருணத்தில் மரணவேதனையால் வீறிட்டனர். பிசாசங்கள் பேரிரைச்சலுடன் தெருத் தெருவாக அலைந்து திரிந்தன. ஹே! ஸீஸர்! ஐயோ! இம்மாதிரியான கனவை ஒருவரும் கண்டிருக்க மாட்டார்கள். கேட்டுமிருக்க மாட்டார்கள். வழக்கத்தில் வராத கனவாகவன்றோ இது இருக்கிறது. நமக்கு என்ன கெடுதி சம்பவிக்கப் போகிறதோ தெரியவில்லையே! ஐயோ! காதல: என்செய்வது, பின்வரப் போகும் கெடுதியை இக் கனவு முன்னமேயே சூசிப்பிக்கும் என்பார்களே! ஏதோ ஒரு அசுபம் கட்டாயமாய் வெகு சீக்ரத்தில் வரப்போகிறது. அதென்னமோ நான் அறியேன்" என்று மிகவும் பயந்து தன் கணவனுடன் சொன்னாள். காலிபோர்னியா கண்டகனவு மறுதினமே நிதர்சன மாகிவிட்டது. ஜூலியஸ் தன் சிம்மாதனத்தில் வீற்றிருக்கும் சமயத்தில் குடிகளில் மூவர் கத்திகளை அவன் மார்பில் பாய்ச்சினர். ரத்தவெள்ளம் பெருகியது. ஜூலியஸ் ஸீஸர் கொல்லப்பட்டான்.

சில கவிகள் இந்த உலகம் எப்படிப் பொய்யோ அதுபோல கனவு என்பதும் தூக்கத்தாலுண்டாகும் பொய்த்தோற்ற மென்பார்கள். இது கவனமே யல்லாது கனவின் காரணங்களைக் கூறும் சாஸ்திரமல்ல.

ஆனால் கனவு என்பது என்ன? அது நமது விழிப்புக்காலங்களில் நமது புத்தியில் படியும் எண்ணங்களின் பிரதிபிம்பம். என்று ஒருவாறு சொல்லலாம். தூக்கத்தில் உண்டாகி விழிப்புச் காலத்தில் உண்டாகாதபடியால் அநேகவித விசித்திரத்துடன் கனவு நிறைந்திருக்கிறது. ஒருவன் விழிப்பில் காணாததை கனவில் காண்பதில்லை. ஆனால் விழித்திருக்கையில் எப்படிக் கண்டானோ அப்படியே காணாமல் சிலவேளை வித்தியாசமாயும், விபரீத



மாயும் அலங்கோலமாயும் காணக்கூடும். அதற்குக்காரணம் தூக்கத்தில் புத்தி சரியாய் தன் காரியத்தை நடத்துகிறது என்று நாம் சொல்லியிருக்கிறோமே அது தான், அற்ப எண்ணமும் அற்பபுத்தியுமுடையவன் பெரும்பாலும் பயங்கரமான கனவுகளைக் காணுவான். கொலை செய்தவனை ஜாக்கிரதையாய் தூங்கும்போது கவனித்துப் பார்ப்போமானால் கனவு அவன் மனதிலிருப்பதுடன் கலந்து பயங்கரமாகப் பிதற்றி அவன் ஒளித்து வைத்திருக்கும் சங்கதிகளை வெளியிடச்செய்யும். குழந்தைகள் தூங்கும்போது கவனிப்போமானால் அது குற்றமற்றதாகையால் தான் பகலில் சிரித்து விளையாடியதை மனதில் வைத்துக்கொண்டு தூக்கத்தில் சிரிக்கும். பின்பு துக்கப்படும். நாம் இதை "நரிமிரட்டு" என்று சொல்கிறோம். நாம் விழிப்புக் காலத்தில் கெட்ட காரியங்களைச் செய்யக்கூடாது. அப்படிச்செய்தால் கனவில் மிகப் பயங்கரமான கனவுகளைக் காணநேரிடும். சில கணித சாஸ்திரிகள் விழிப்புக்காலத்தில் கண்டுபிடிக்க முடியாத உண்மைகளைக் கனவில் கண்டுபிடித்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

நமது ஆகாரப் பையினுடைய ஸ்திதிக்கும் கனவுக்கும் சம்பந்தமிருப்பதாக அநேக வைத்யர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். வயிறு புடைக்கத்தின்றால் எவ்வளவு நிதானமோ அதற்கும் குறைவாக வெறொருவன் சாப்பிடுகிறானோ அவன் தூக்கத்தில் விருந்தைப்பற்றியும் சாப்பாட்டைப் பற்றியும் கனவு காண்பான். நித்திரையில் எவ்வளவோ பேர் கைகொண்டு ஆகாரத்தை பெடுப்பதுபோலும் வாயில்போட்டு மெல்லுவதுபோலும், நொட்டை விடுவதுபோலும் கனவு காண்கின்றனர். சிறு குழந்தைகள் நித்திரையில் தன் பாலமுது சாப்பிடுவதுபோல் தன்வாயை அசைத்தசைத்து கனவு காண்கின்றன. "பைரன்" என்னும் ஆங்கில பிரபு ஒரு பெரிய கவி. அவர் தனக்கு சாப்பாட்டைப்பற்றி நல்ல சரியான அபிப்பிராயமுண்டாகும்படி இரண்டொரு நாள் ஆகாரமில்லாது தூங்குவது வழக்கம். அவ்விதத் தூக்கத்தில் அவருக்குச் சாப்பாட்டைப்பற்றிய கனவே உதிக்கும். ஒருவன் ஏதோ வியாதியால் நாக்கு உள்ளுக்கு இழுக்கப்பட்டுப் பேசுஞ்சக்தி இழந்திருந்தான். நாலுவருஷங்களுக்குப்பின் ஓரிரவில் தான் நெருப்பு பிடித்தெரிந்தாகக் கனவு கண்டு ஓவென்றலறி ஐயோ பற்றி எரிகிறதே எரிகிறதே என்று கதறினான். கனவின் பயத்தினால் உள்ளிழுக்கப்பட்ட நாக்கு வெளிவந்தது. பேசும் சக்தியை மீளவும் பெற்றான்.

(இன்னும் வரும்.) கீ. பீ. சேஷாத்ரி ஐயங்கார்.

# PART III.

## KNOWLEDGE ON AGRICULTURE, etc.

BY Mr. G. RAJAGOPAL,
*Late Editor, "South Indian Agriculture."*

### விவஸாய ஞானம்.

(236-ம் பக்கத் தொடர்ச்சி.)

மண்.

விதைக்கும் வித்து நல்ல மண்ணில் விழுந்தால் விதை நன்றாய் முளைக்கும் என்பது வழக்கம்.

நல்ல மண்ணென்றால் என்ன?

மண்புலபுலத்து புழுதியாக இப்பதுதான்.

மண்புலபுலத்து இருக்கவேண்டிய காரணமென்ன?

பயிர் உண்டாக வேண்டுமென்று உத்தேசித்து விதைக்கும் வித்துகள் அநேகமாய் சிறியவைகளா யிருக்கிறபடியாலும் பெரிய வித்துக்களா யிருந்தபோதிலும் முளைக்கும்போது உண்டாகும் வேர் மிக நாணயமாயும் நாசூக்காயும் இருக்கிறபடியாலும் மண்ணில் புல் பூண்டு இல்லாமலும் அது கல்லுக் கட்டியாயில்லாமலும் இருப்பது அவசியம். இவ்வாறு தன்மைமண் அடைவதற்கு அது உழவுக் கருவிகளால் கிறக்கப்பட காற்று அதனுள் பாய்ந்து மண்ணை மட்கசெய்யும். அப்போது மண்மணிகள் சிறுத்துப் போம். சிலபாகம் ஜலத்தில் கரையும் தன்மையடைந்து ஆகாரமாகும்.

பயிர் உண்டாவதற்கு மண் வளப்பம் பொருந்த வேண்டுமல்லவா?

மண் வளப்பமென்றால் என்ன?

மண் அணுக்கள் கல் தூளாயிருக்கும்: அவைகளில் மட்கிய தழை முதலிய பிராண சம்பந்த வஸ்து கலந்திருக்கவேண்டும்.

மண் அணுக்கள் விசாலித்து காற்று அவைகள் மத்தியில் அடங்கியிருக்கவேண்டும்.

பிராண சம்பந்த வஸ்து எது?

செடி புல் பூண்டு இவைகளால் உண்டாகும் வேர், மரம், கொப்பு, இலைகள், தழை, பூ, இசழ், காய், பழம் இவைகள் மட்குவதாலும் மண்ணில் குடியிருக்கும் நாகுபூச்சி எறும்பு முதலியவைகளாலும் மற்ற பெரிய மிருகங்களாலும் உண்டாகும் மல ஜல பிணங்கள் மட்குவதாலும் மண் கருமையடையும். இக்கருமை யடைந்த வஸ்துவுக்கு ஆங்கிலேயர் ஹியூமஸ் (Humus) என்பார்கள். நாம் இந்திரியவஸ்து என்னலாம். மிருக மரங்கள் இந்திரியங்கள் மட்குவதினால் உண்டாகும் வஸ்து இந்திரியவஸ்து. அது கருப்பாயிருப்பதால் இந்திரவஸ்து என்றும் சொல்லுவதுண்டு. ஏனெனில் இந்திரன் கருப்பு.



மண்ணில் காற்று இருக்கவேண்டியதால் மண்ணை உழவுக் கருவிகளால் திறப்புவதுண்டு-காற்றில் மண் மலர்ந்தால்தான் செடிகள் தாராளமாய் வளரும் செடிகள் நன்றாய் வளருவதற்கு இன்றியமையாத சிறு கருக்கள் (Germ) தாராளமாய்ப் பலுகும் - அவைகளால் மண் உரமேற்றப் படுகிறது. அவைகளால் தான் மண் கறையும் ஸ்திதியடைகிறது. அப்போது தான் மண் நீரில் கரைந்து செடிக்கு உணவாக உதவும்.

மண் உழவினால் உஷ்ணமடைகிறது.

ஆகவே செடிகள் க்ஷேமத்திற்கு வேண்டிய மேற்கண்ட அம்சங்கள் வேர்கள் செல்லும் ஆழம் வரையில் இருப்பது மிகச்சிரேஷ்டம்.

இவ்வேர் எவ்வளவு ஆழம் செல்லும்?

அவுரியைப் போலொத்த குதிரை மசாலா என்னப்படும் லூசர்ன் (Lucern) செடியின்வேர் 7 அடிக்கு அதிகமாக ஆழம் செல்கிறது.

மக்காசோளம் வேர் 3½ அடி ஆழமும் கோதுமை 2 அடி ஆழமும் செல்லுகின்றன - வேர் மிக்க குறைந்த வெண்காயத்துக்கு ஒரு அடி ஆழம் வேர் இருக்கிறது.

ஆகவே அகல உழுவுதை ஆழ உழ என்று சாதமியமான வரையில் ஆழமாக கலப்பையை அழுத்தி உழுவதுண்டு.

சில குடித்தனக்காரர் அவ்வாறு பிரயத்தனப் பட்டும் 5-6 அங்குலத்துக்கு அதிக ஆழம் போவதில்லை-தமிழ் நாட்டில் அநேகமாய் 3 அங்குலத்துக்கு அதிகம் போவதில்லை.

இதனால் இவர்கள் பயிர் இணைப்பது மானதுவே.

(இன்னும் வரும்.)

## COMMERCE AND INDUSTRY.

### வர்த்தகமும் கைத்தொழிலும்.

காகிதத்தொழில்.

(238-ம் பக்கத் தொடர்ச்சி.)

இந்தியாவின் வடமேற்கிலுள்ள காஷ்மீரதேசத்தில் அபரிமிதமாக வளர்ந்து வந்த ஒருவகை மரத்தின் உள்பட்டைகள் பண்டைக்காலத்தில் காகிதத்திற்குப் பதிலாக உபயோகமாகி வந்தன. எகிப்தியர் (Egyptians) முற்காலத்தில் மரப்பட்டைகளிலிருந்து நாரெடுத்து, அதை ஒன்றோடொன்றாக ஒட்டி அதன் மீது எழுதி வந்தார்கள். ஆனால் இந்தியர் அம்மாதிரி ஒட்டும் வேலை யொன்றை வைத்துக்கொள்ளாமல் பட்டைகளை முழுவீட்டாக எடுத்து எழுதியது புத்திசாலித் தனந்தான். இன்றைக்கும் இமயமலைச் சாரலி

ளுள்ள பள்ளத்தாக்குகளில் அப்பட்டைகளைக் கொடுக்கும் மரங்களை அபரிமிதமாகக் காணலாம். அதற்கு வட இந்தியாவில் 'போஜபாத்ர' மென்று சொல்லுகிறார்கள். ஒரு கிளையைவெட்டி பட்டையின் மத்தியிற் பிளவுபடாது கழித்து ஜலத்தில் ஊறப்போட்டுவிட்டால் மேல்பட்டையானது எளிதில் பிரிந்துபோகும். அல்லாமலும் தண்ணீரில் வெகுநேரம் ஊறுவது காரணமாக அப்பட்டையி லிருக்கக்கூடிய தித்திப்பான அம்சம் கரைந்து போகுமாதலால் பூச்சி புழுக்களால் அப்பட்டைக்குச் சேதம் வருமென்று சொல்லவும் இயலாது. பிறகு அதை மெதுவாக 'சஜ்ஜிமாத்தி' யென்னும் ஒருவகை யுப்புடன் காய்ச்சி யலம்பி உலர வைக்கவேண்டும். பிறகு அதன்மீது எண்ணெயைத் தடவிப் பாலிஷ்செய்து மழமழப் பாக்கவேண்டும். இம்மாதிரி செய்யப்பட்ட மரப்பட்டைகள் உஷ்ணப் பிரதேசங்களில் நூற்றாண்டுகளாக அழியாதிருக்கும். சீதளம் நிரம்பிய விடங்களிலோ இப்பட்டைகள் வெகுகாலம் நில்லா. அதாவது 300-வருஷங்களுக்கு மேலாக அவைகளைக் காணமுடியாது. இப்பட்டைகளாலாய காகிதங்கள் காஷ்மீரத்திலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக நர்மதைப் பிராந்தியம் வரையில் பெருகலாயின. 'போஜபாத்ரம்' என்று நாமிங்குக் குறிப்பிட்டதனாலே இந்தியாவில் அரசுபுரிந்த போஜராஜனுக்கும் இதற்கும் ஏதாவது சம்பந்தமிருக்குமோ வென்று நம் நண்பர் நினைக்கவேண்டாம். வட இந்தியாவிலுள்ள அனேக மலைப்பிராந்தியங்களில் மேனாட்டு முறைப்படி செய்யப்பட்ட காகிதங்கள் அமுலுக்குவருகிற வரையில் மேற்சொன்னப் பட்டைகளே காகிதத்திற்குப் பதிலாக உபயோகிக்கப்பட்டு வந்தன. இப்போதுகூட மலைவாசிகளாயினோர். பலர் தம்முள்ளத் துணர்வு பூண்டெழுதும் அன்பினர்க்கான லிகிதங்கள் பலவற்றை இம்மரப்பட்டைகளில் எழுதுவதையே ஸம்பிரதாயமர்கக் கொண்டிருக்கிறார்கள். என்றாலும் மொஹலாயர் இந்தியாவுக்கு வந்த காலம் முதல் இப்பட்டைகளின் உபயோகம் கொஞ்சங் கொஞ்சமாகக் கைவிடப் படவாரம்பமாயிற்று.

இந்த போஜபாத்ரமென்னும் பட்டைக் காகிதத்துடன் காடத்தம் என்னும் ஒருவகைப் பருத்தியினாலான துணியும் காகிதமிருக்கும் ஸ்தானத்தில் உபயோகிக்கப்பட்டு வந்தது. இதை முதல்முதல் மைசூர்ப் பிராந்தியத்தவர்களும் பம்பாய் ராஜதானியிலுள்ளவர்களும் உபயோகிக்க வாரம்பித்தார்கள். கன்னடபாஷை பேசுவோர் பலர் இப்பருத்திக் காகிதத்திலேதான் கணக்குகளை யெழுதிவந்ததாக எம்முன்னோர் பலர் சொல்லக் கேட்டிருக்கிறோம். முந்திக்காகிதம் செய்து கொண்டிருந்தவிதம் எப்படியென்றால் கந்தைகளாயுள்ள பருத்தித் துணிகளை நன்றாக ஜலத்தைவிட்டு அரைத்து அளவுப்பிரகாரம் ஒரு கல்லில்தடவி, அதன்மீது புளியங்கொட்டையை விழுதாக அரைத்த குழம்பைத் தடவி, அதன்மீது கரிப் பவுடரைத் தூவிவிடுவார்கள். இதன்மீது சீமைச் சுண்ணாம்பினால் எழுதினால், எழுது



வது வெண்மையாகவும், எழுதப்படும் வஸ்து கறுப்பாகவு மிருக்கும். இப்போதோ வெண்மையான காகிதத்தில் கறுப்பு பென்ஸிலினால் எழுதுகிறோம். ஒன்றுக்கும் மற்றொன்றுக்கு மிருக்கும் தாரதம்மியத்தைப் பாருங்கள். பனையோலையில் எழுதுவது வெகு காலமாக அமுலிலிருந்து வந்தது. இன்றைக்கும் பனையோலைச் சுவடிகளைக் கிராமாந்தரங்களில் காணலாம் என்றாலும் உண்மைக் காகிதம் வந்ததும் போஜபாத்திரம், பனையோலை முதலியன பறந்துபோயின.

மேற்றிசைத் தேசங்களில் மிருகங்களின் சர்மங்களின்மீது ஜனங்கள் எழுதிவந்ததாகப் பூர்வீக சரித்திரங்களினால் தெரிகிறது. அமெரிகாவிலுள்ள சிவப்பு இந்தியர்கள் சர்மங்களையே யுபயோகித்து வந்திருக்கிறார்கள். இந்துக்கள் புஸ்தகங்களைப் புனிதமாகக் கொண்டாடுவர் ; ஏனென்றால் அதில் சரஸ்வதியம் சம்பூர்ணமா யிருக்கிறது. புத்தி விசாலிப்பதற்கு நாமகளே காரணபூதமென்று இந்து தர்மசாஸ்திரங்கள் முறையிடுவதாலும், அந்நாமகள் அம்சமாகிற புஸ்தகங்கள் அத்தேவியின் சிலம்பாகச் சொல்லுவது பொருந்து மாதலாலும் புஸ்தகங்களிடத்து நம்மவர்க்குப் பெரும்பக்தி யேற்பட்டிருக்கிறது. அவ்விதம் ஞானோதயம் உண்டு பண்ணத்தக்க அபூர்வத்தை சுத்தமில்லாத சர்மத்தினிடம் குவித்துவைப்பது தகாதென்று பரதக்கண்டத்திலிருந்தோ சர்மத்தி லெழுதுவதைச் சிறிதும் கைக்கொள்ளவில்லை. ஒரு விசை ஸாக்ரெடீஸ் (Socrader) என்னும் தத்துவ சாஸ்திரியரிடம் ஒருவர் சென்று 'நீர் ஏன் புஸ்தகம் எழுதலாகாது' என்று கேட்டதற்கு அவர் 'மனுஷ்யாது ஜீவியசக்தி வாய்ந்த ஹிருதய கமலத்திலிருந்து பயிற்சி யென்கிற ஸத்தை ஆடு அல்லது மாடுகளின் தோல்களுக்கு மாற்ற எனக்கு இஷ்டமில்லை' யென்றாராம். இதனாலேயே மேற்றிசைத் தேசங்களில் பண்டைக் காலத்திருந்த அநாகரிகவழக்கம் அப்போது இந்தியாவில் மட்டும் இருந்தது கிடையாதென்பது நிதர்சனமாகிறது.

# PART IV.

## HINDU LAW.

## ஹிந்துலா.

(210-ம் பக்கத் தொடர்ச்சி.)

கே.—ஒருவன் தன் சொத்துக்கள் விஷயமாய் ஒன்றின்பின் ஒன்றாக 4 உயில்கள் பிறப்பிவித்து விடுகிறான். அப்படியானால் அவைகளில் எந்த உயில் ஊர்ஜிதத்துக்கு வரும் ?

ஜ.—கடைசியாகச் செய்யப்பட்ட உயில் ஏதோ அதில் கண்ட நிபந்தனைகளே ஊர்ஜிதத்துக்குவரும். மற்றதுகள் ரத்தாகிவிடும்,

கே.—ஒரு அவிபக்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஸந்தானமில்லாமலிருக்கிறது. தனக்கு மேல்படி குடும்ப சொத்தில் கிடைக்கக் கூடிய பாகத்தை மூன்றும் மனுஷருக்குக் கொடுத்து உயில் செய்து விடுகிறுன். இந்த உயில் செல்லுமா?

ஜ.—அந்த உயில் செல்லமாட்டாது. ஏனென்றால் மேற்கண்டபடி உயில் செய்து கொடுத்தவனுக்கு, குடும்ப சொத்தில் இன்ன குறிப்பிட்ட பாகம் கிடைக்கிறதென்கிற உறுதியில்லாமலிருக்கிற காரணத்தால் அது அவனுக்கு தனிமையாக பாத்தியப்பட்ட சொத்தாகமாட்டாது. அல்லாமலும் அவனுக்கு ஸந்தானமில்லாத காரணத்தால் ஷை சொத்தானது, அவனுக்குப் பிறகு ஷை குடும்பத்தில் உயிருடன் இருப்பவர்களுக்கே சேரவேண்டியதென்கிற விதி ஏற்பட்டிருக்கிறது. (Right of Survivorship) உயிலினுல் யேர்ப்படும் பாத்தியதையை விட ஸர்வைவர்ஷப் பாத்தியதையே முன் யேர்ப்பட்டதாகையால் உயில் பிரயோசனமற்றதாய் விடுகிறது. ஆகையினுல் அவிபக்தகுடும்பத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு ஷை குடும்ப சொத்தில் தன் பங்குக்கு யேர்ப்படக்கூடிய சொத்து விஷயமாக உயில் பிறப்பிக்க அதிகாரமில்லை. (8. மது. ஹை. கோ. ரி. 6; இ. லா. ரி. 5. பம். 48; இ. லா. ரி. 12. பம். 105; இ. லா. ரி. 7. மது. 357; இ. லா. ரி. 14. மது. 459; இ. லா. ரி. 16. மது. 353; இ. லா. ரி. 19. பம். 803; 7. இ. அ. 181.)

கே.—தன் பொதுக் குடும்பத்தைவிட்டு விலகிய ஒருவன் தனக்கு பெண்சாதி பிள்ளைகளிருக்க, தன் சொத்துகளை வேறொருவருக்கு உயில் எழுதி வைத்தால் அது செல்லுமா?

ஜ.—அப்படி எழுதிவைக்க அவனுக்கு அதிகாரமில்லை. (இ. லா. ரி. 5 பம். 48; 7. இ. அ. 181; இ. லா. ரி. 8. மது. 89; இ. லா. ரி. 16. மது. 84; 16. மது. 353.)

கே.—யாரால் செய்யப்படும் உயில்தான், உறுதியாக யேற்படும்.

ஜ.—அவிபக்த குடும்பத்திலிருந்து பாகம் செய்துகொண்டு தனித்து வாஸம் செய்பவரும், சுயார்ஜிதச் சொத்தையுடையவருமாகிய இவர்களால் செய்து கொடுக்கப்படும் உயில்தான் நிராக்ஷேபணையாகச் செல்லக்கூடியது. (இ. லா. ரி. 10. மது. 251; இ. லா. ரி. 24. மது. 429; 2. மூ. இ. அ. 54; 6. மூ. இ. அ. 309.)

கே.—மேல்கண்டவர்கள், தாங்கள் காப்பாற்றக் கடமைப்பட்ட பெண்சாதி, பிள்ளை முதலியவர்களுக்கு சொத்து யாதொன்றும், கொடுக்காமலேயே, தன் சொத்துகள் பூராவையும், பிறருக்கு உயில் செய்து கொடுத்துவிட்டால், உயில் யெழுதி வாங்கினவர்களுக்கு உயிலில் கண்ட சொத்துக்கள் எல்லாம் பாத்தியப்பட்டுப் போய்விடுமா?



ஜ.—ஜீவனும்சமாவது கொடுக்காமலேயே தன் சொத்துக்கள் பூராவையும் உயில் செய்துவிட்டால், அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய ஜீவனும் சம்சம்மந்தப்பட்டமட்டில் ஷை உயில் செல்லமாட்டாது. அந்த உயில் மூலமாகச் சொத்தையடைந்தவன் ஜீவனும்சத்திற் குரியவர்களுக்கு ஜீவனும்சத்துக்கு வேண்டிய சொத்தைவிட்டுவிடக் கடமைப்பட்டிருக்கிறுன். (3. மது. ஹை. கோ. ரி. 8; 2. மூ. இ. அ. 54; இ. லாரி. 10. கல். 638; இ. லா. ரி. 12. மது. 267.)

கே.—உயில் செய்யும் ஒருவன், தான் உயில் யெழுதிவைத்த சங்கதி, யாருக்கும் தெரியாமல் ரகசியமாகயிருக்கும்படிக்கும், ஆனுல் அதை ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களுடைய வசத்தில் வைத்திருக்கவேண்டும் என்றும் அபிப்பிராயப்படுகிறுன். இப்படிச் செய்வதற்குவழி என்ன செய்யவேண்டும்?

ஜ.—ஒருவனுக்கு, தான் பிறப்பிவித்திருக்கிற உயிலின் சங்கதி ஒருவருக்கும் தெரிந்துவிடக் கூடாதென்றும், ஆனுல் அந்த உயிலானது பலப்பட்டு விடவேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டால், அவன் அந்த உயிலை ஒரு கவர் (காகித உரை)க்குள் போட்டு, கவரில் முத்திரைபோட்டு, ரெஜிஸ்ட்ரார் ஆபீசில் கொடுத்தால், அவர் அந்த உரையை, ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்டு 40-வது பிரிவுப்படி பெற்றுக்கொண்டு பந்தோபஸ்தாகக் காப்பாற்றி வைத்துக்கொள்வார். அப்பால் உயில் செய்து கொடுத்தவர் இறந்த பிறகு அதை தன் ஆபீஸ் புஸ்தகத்தில் பதிந்து கொண்டு, கேழ்கிறவர்களுக்கு நகல் கொடுப்பார். உயில் யெழுதிக் கொடுத்தவனே அந்தக் கவரை திரும்பக் கேட்டாலுமே அவனிடம் திரும்பக் கொடுத்துவிடுவார்கள் (ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்டு 44-வது பிரிவு.)

கே.—பாகிக்கத்தகாத ஜமீன் சொத்துக்களிலுள்ள நிலம் வகையராக்களை, ஜமீந்தார்கள் தங்கள் இஷ்டப்படி உயில் செய்யலாமா.

ஜ.—செய்யலாம். செய்தால் சட்டப்படி செல்லும். (15. இ. அ. 51; இ. லா. ரி. 22. மது. 383; 26. இ. அ. 83.)

கே.—ஸ்திரீகளுக்கு உயில் செய்யும் அதிகாரம் உண்டா?

ஜ.—தங்களுக்கு ஸர்வ சுதந்திரமாகப் பாத்தியப்பட்டுப் போயிருக்கும் ஸ்திரீதனச் சொத்துக்களை, ஸ்திரீகள், உயில் மூலமாகக் கொடுத்து விடலாம். இ. லா. ரி. 1. மது 166; இ. லா. ரி. 2. மது. 333.)

கே.—தன் புருஷனுக்குப் பிறகு தனக்கு தாய பாத்தியதைக் கிரமமாகக் கிடைக்கிற சொத்துக்களை ஒரு ஸ்திரீயானவள் உயில் மூலமாகக் கொடுத்துவிடலாமா?

# PART V.

## CO-OPERATION.

## கூட்டுறவு.

92 செ. மௌளூர் கிராம நாணயச் சங்கத்தின் செக்ரடெரி ம-ா-ா-ஸ்ரீ, புட்டிரசின்னய்ய நாயுடு அவர்கள் எழுதியது.

கனவான்களே சில வருஷங்களுக்குமுன் நமது தேசத்தில் கிராம நாணயச்சங்க சட்டம் ஏற்பட்டு ஷை சட்டத்தின்படி அனேக கிராமங்களில் சங்கங்கள் ஏற்படுத்திக்கொண்டு ஷை சங்கங்களினால் கிராமவாசிகள் அதிக நன்மைகள் அடைந்துவருகிறது நாம் கண்டும் கேட்டும் இருக்கிறோம். கிராம நாணயச் சங்கங்களுக்கு தேவையான விஷயங்களைப்பற்றி இப்பத்திரிகையில் சில வியாஸங்கள் எழுதவேண்டுமென்றிருக்கிறோம். தயவு செய்து அவைகளை வாசித்து குற்றங்களை தள்ளி குணங்களைக் கைக்கொள்ள வேண்டுமாய் கோரப்படுகிறது.

கிராம நாணயச் சங்கங்களுக்கு தேவையான விஷயங்கள் முக்கியமாய் மூன்று. முதலாவது, சங்கங்களை ஏற்படுத்தவும், ஏற்படுத்தின பிறகு அவைகளை நடத்தவும் தக்க மனிதர்கள் வேண்டும். இரண்டாவது, சங்கங்களுக்கு சுலபமான வட்டிக்கி பணம் கிடைக்கும்படி செய்யவேண்டும். மூன்றாவது சங்கங்களுக்கு இப்பொழுது இருக்கிறதுபோலவே இன்னம் சில வருஷங்களுக்கு கவர்ன்மெண்டாரின் இலவசமான மேல்பார்வை வேண்டும்.

முதலாவது தக்க மனிதர்கள் வேண்டுமென்று சொன்னோம். சில ஜில்லாக்களில் தக்க மனிதர்கள் முயற்சி யெடுத்துக்கொண்டதினால் தான் இவ்வளவு சங்கங்களாவது உண்டாயிற்று. மற்ற ஜில்லாக்களிலும் தகுந்தவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு சங்கங்களை யேற்படுத்த வேண்டும். நாம் சொல்லுகிறது மாத்திரமல்ல, அனேக கனவான்கள் அபிப்பிராயப் பட்டிருக்கிறபடி நமது தேசம் க்ஷேமமடைய வேண்டுமானால் ஒவ்வொரு கிராமத்திலும் இச்சங்கங்கள் ஏற்படவேண்டும். சங்கங்கள் ஏற்படுத்த தகுந்த கனவான்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியதுமின்றி செங்கற்பட்டு ஜில்லா கூட்டுரவினர் சங்கத்தைப்போலவே ஒவ்வொரு ஜில்லாவிலும் கூட்டுரவினர்கள் சங்கங்கள் உண்டாகவேண்டும். அனேகருக்குத்தெரிந்திருக்கிறபடி செங்கற்பட்டு கூட்டுரவினர் சங்கத்தார் எத்தனையோ கிராமங்களில் சங்கங்களை யேற்படுத்தினார்கள். அந்தமாதிரி முயற்சி எடுத்துக்கொண்டால்தான் ஒவ்வொரு கிராமத்திலும் சங்கங்கள் ஏற்படும். சங்கங்கள் ஏற்பட்ட பிறகு அவைகளை நடத்த பஞ்சாயித்து மெம்பர்களும் கமிட்டிமெம்பர்களும் தக்கவர்களாய் ஏற்படவேண்டும். எங்கேயாவது ஒரு சங்கம் வேலைசெய்யாமல் நின்றுபோயிற்றென்கிற விசனகரமான சப்தம் நமது காதில் விழுமானால்



அது கேவலம் பஞ்சாயித்துதாரர்களின் தப்பிதமேயன்றி மெம்பர்களின் தப்பிதமே யல்ல. இரண்டாவது, சங்கங்களுக்கு சுலபமான வட்டிக்கு பணம் சம்பாதிக்க கூடிய வழிகளைப்பற்றியும், மூன்றாவது கவர்ன்மெண்டார் இந்த சங்கங்களை இலவசமான மேல்பார்வை பார்க்கவேண்டியதற்கான நியாயங்களும் மறுமாதங்களில் தெரிவிக்கப்படும்.

---

# PART VI.

## EDUCATION.

## கல்வி.

### MEDICAL INSPECTION OF SCHOOLS.

### பள்ளிக் கூடங்களின் வைத்திய பரிசீலனை.

‘ஆரோக்கியமே பாக்கியம்’ என்று நம்மவர்கள் சாதாரணமாகச் சொல்லுவார்கள். உண்மையில் அவ்வாக்கியம் எல்லோராலும் பரிவுடன் ஆசிரயிக்கத்தக்கது. அரோகதிட காத்திரராகக் காலங்கடத்தும் ஒருவரது ஜீவ வாழ்க்கைக்கும் நோய்வாய்ச் சிக்கி அங்கந்தளர்ந்து உற்சாகங்குலைந்து பலஹீனத்தினால் கை நடுக்கலோடுகூடின ஒருவரது ஜீவ வாழ்க்கைக்கும் உள்ள தாரதம்மியத்தை நாம் இங்கு குறிப்பிடவேண்டுவது அனாவசியம். ஆரம்பக் கல்வி பயிலும்போதே இளைஞர் மனதிற்பதியுமாறு சுகாதாரத்திற்குரிய பயிற்சியும் இருக்குமேயானால், காலக்கிரமத்தில் அவ்விளைஞர் பெரியோராகையில், நோய் நொடிகளினால் அவதிப்படாமல் கூடியமட்டில் சுகஜீவிகளாகக் காலங் கடத்துவது ஸாத்தியமாகும். இதனால் பள்ளிக் கூடங்களில் சுகாதாரப் பாடங்கள் கற்பிக்கப் படுகிறதில்லையென்று நாம் சொல்ல வரவில்லை. அப்பாடங்கள் மாணவர்களுக்குப் போதிக்கப்படுவது ஒருபுறமிருக்க, மற்றோர் புறத்தில் ஸ்கூல்கள் ஆரோக்கியத்திற் கனுகுணமான ஸாதனங்களோடு அமைக்கப்பட்டிருக்கவும் வேண்டும்; அச்சாதனங்கள் இல்லாவிடத்துப் போதகர்கள் எவ்வளவுதான் ஆரோக்கிய முறைகளைப் போதித்தபோதிலும், க்ரியாம்சைகளில் அவை நிதர்சனமாகக் காட்டப்பட்டாலன்றி, அப்போதனைகள் பலன் தரமாட்டாவென்பது திண்ணம். ஆதலால் வைத்திய சாஸ்திர முணர்ந்த டாக்டர்களைக்கொண்டு அப்போதப்போது ஸ்கூல்களை வைத்திய பரிசீலனை செய்வது மிகவும் நலமாகும். இங்கிலாண்டு தேசத்திலுள்ள பாடசாலைகளில் பிரதி வருஷத்திலும் வைத்திய பரிசீலனைகள் நடைபெறுகின்றன. போதனாமுறைக் கல்வியைச்சேர்ந்த அம்சங்களில் வைத்திய பரிசீலனையும் ஒன்றாகுமென்று அத்தேசத்தவர் மதித்து மேற்சொன்ன பிரகாரம் பரிசீலனைகள் செய்துவர, அவ்வளவு

திருத்தமான வகையாய் இந்தியாவில் வைத்திய பரிசீலனை நடக்கக் காணோமேயென்று யாம் வருந்தும்படியா யிருக்கிறது. சிற்சில இடங்களில் பரீக்ஷார்த்தமாக இரண்டோர் விசாரணைகள் செய்யப்பட்டதாக மட்டும் எமக்கு ஞாபகமுண்டு. கொஞ்ச காலத்திற்குமுன் மதிராஸ் கவர்ன்மெண்டார் கார்ப்பொரேஷன் நிருவாகத்தில் நடத்தப்பட்டுவரும் எலிமெண்டரி ஸ்கூல் பிள்ளைகளின் ஆரோக்கிய சம்பந்தமாகப் பரிசீலனை செய்யும்படி லெப்டினெண்ட் கர்னல் C. தானவன் என்ற டாக்டரை அமர்த்தியிருந்தார்கள். அவரது இறுதியான ரிப்போர்ட் இப்போது கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இவ்விஷயமாக ஸர்ஜன் ஜனரல் குறிக்கும் இரண்டோரம்சங்களை யிங்கு கூறுவோம். ஸ்கூல்களில் வாசிக்கும் சிறுவர் சிறுமியர் ஆகிய இருபாலர்க்குள்ளும் ஐந்தில் ஒருபாகம் பள்ளிக்கூடத்திற்கு வராமலே நின்றிருக்கிறார்கள். அதற்கு டாக்டர் தானவன் கூறும் காரணம் என்னவென்றால்,

(1) க்ஷயரோகமே அதற்குக் காரணமென்று சந்தேகிக்கப்படுகிறது. அப்படியாயின் அப்பேர்க்கொத்த குழந்தைகளுக்கு ஸ்பெஷல் பாடசாலைகளை ஏற்படுத்துவது அவசியமாகும்.

(2) பரிசீலனை செய்து பார்த்ததில் நூற்றுக்கு ஐந்து வீதம் குஷ்டரோகத்தினால் பீடிக்கப்பட்டிருப்பதாகவுந் தெரியலாயிற்று.

இப்பரிசீலனையைக் குறித்து ஸர்ஜன் ஜனரல் மற்றும் பின் வருமாறு அபிப்பிராயப் பட்டிருக்கிறார்:—"பள்ளிக்கூடச் சிறுவர்களின் க்ஷேமாபிவிருத்தியைக் கோரி வைத்திய பரிசீலனை செய்வது மிகவும் முக்கியமான காரியம். இதைக் குறித்துக் கவர்ன்மெண்டாரும் விசேஷ கவனமெடுத்து வருகிறார்கள். யுத்தம் காரணமாகப் பணத்தைச் சிறிது இழுத்துப் பிடித்துச் செலவிட வேண்டியிருப்பதனாலே, அப்பரிசீலனையை யின்னும் அதிகமாக நடத்த முடியவில்லை. பணமுடை தீர்ந்ததும், அப்பரிசீலனையைத் தொடர்ந்தேர்த்தியாக நடத்திக்கொண்டு போவதோடு வியாதியினால் பீடிக்கப்பட்ட குழந்தைகளுக்குச் சிகிச்சாக் கிரமங்களை யேற்படுத்துவதும் விரும்பத்தக்கது." வைத்திய பரிசீலனையோடு வைத்திய சிகிச்சையும் இருப்பது விரும்பத்தக்கதென்று அவர் அனுபவத்தால் கூறியது உண்மையென்று கருதி யாம் சந்தோஷப்படுகின்றோம்.

ஸ்கூல்களுக்கு ஒரு திருத்தமான வைத்திய பரிசீலனை யேற்படும்போது வைத்திய சிகிச்சையைப் பள்ளியிற் படிக்கும் குழந்தைகள் விஷயத்தில் காட்டுவது பலன் தராமற்போகாது; சிகிச்சைக்கு உரித்தாயிருக்கும் ஸாதனங்களை யமைப்பதும் சிரமமாக மாட்டாது. ஒன்றைவிட்டு ஒன்றை மட்டும் அப்பியாசத்திற்குக் கொண்டுவருவதில் பிரயோசனமில்லை. ஆகவே இரண்டையும் அமுலுக்குக் கொண்டுவருவது சாலவும் பொருந்தும். ஐந்து வருஷங்களுக்கு முந்தி கல்வி சம்பந்தமாக இந்தியா கவர்ன்மெண்டார் விடுத்ததோர் தீர்மானத்தில் ஸ்கூல் வித்தியார்த்திகளுக்கு வைத்தியப் பரி



சீலனை யிருக்கவேண்டுமென்றும், ஸ்கூல், கலாசாலை முதலான கல்விக்கூடங்களின் சுகவழி முறைகளை ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகுமென்றும் குறிப்பிட்டிருந்தார்கள். பணமில்லாததனாலும் ஜனங்களுடைய அசிரத்தையினாலும் சுகாதார முறைகளிற் போதிய கவனஞ் செலுத்தப்படவில்லையென்று அப்போது அறிவிக்கப்பட்டது. பணத்திற்கு முடையுண்டா யிருப்பது ஒருவாறாய் ஒப்பத்தகுந்ததாயினும் ஜனங்களுடைய அசிரத்தைக் காரணமாகுமென்று இப்போது சொல்வதற்கில்லை. இது விஷயத்தில் பீஹார் ஒரிஸா கவர்ன்மெண்டார் எடுத்திருக்கும் சிரத்தையை யொப்ப மற்ற கவர்ன்மெண்டுகளும் சிரத்தை யெடுப்பது நலமாயிருக்கும். ஸ்கூல் குழந்தைகளையும் ஸ்கூல் கட்டடங்களையும் வைத்தியானுசாரமாகப் பரிசீலனை செய்யவேண்டுமென்றும், அப்படிச்செய்யும் பொறுப்பு முனிசிபல் ஹெல்த் ஆபீஸர்களே கைக்கொள்ள வேண்டுமென்றும், பீஹார் கவர்ன்மெண்டார் விதித்திருக்கிறார்கள். இதோடு அவர்கள் நிற்கவில்லை. ஸிவில் ஸர்ஜன்களாயினோர் தலைமை ஸ்தானத்திலுள்ள எல்லா ஸ்கூல் வித்தியார்த்திகளையும்பற்றி வருஷத்திற் கிரண்டுவிசை வைத்தியானுஸாரமாகப் பரிசீலனை பண்ணி ரிப்போர்ட்டு செய்ய வேண்டுமென்றும், அவர்கள் சுற்றுப்பிரயாணம்போகையில் வெளி ஜில்லாக்களிலுள்ள பாடசாலைகளின் விஷயத்திலும் கவனம் செலுத்த வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஹெல்த் ஆபீஸர்களிருக்கும் 12 முனிசிபாலிடிகளில் மூன்று மாதங்களுக்கொருவிசை ஸ்கூல் கட்டடங்கள் சுகாதார அமைப்புக்களோடு இருக்கின்றனவா வென்பதையும், தொற்று வியாதிகள் ஏதேனும் பரவியிருக்கிறதாவென்பதையும் பார்க்கும்படி ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அங்கு அவ்விதமிருந்தாலும் இங்கு நாம் ஒன்று சொல்லுவோம். ஸ்கூல்களையும் கலாசாலைகளையும் பொறுத்தமட்டில் வைத்திய விற்பன்னர்களை ஏன் ஸ்பெஷலாக யாம் நியமித்துக் கொள்ளலாகாது? அப்படிக்கு வைப்பது சிரமஸாத்தியமாயின், பரீக்ஷார்த்தமாகச் செய்யப்படும் பரிசீலனைக்காகப் பணம் செலவிடுவதிற் பின் வாங்கலாகாது. எத்தனையோ பிரைவேட் மெடிகல் பிராக்டிஷனர்கள் (டாக்டர்கள்) இருக்கிறார்களே. அவர்களைக் கொண்டும் இப்பரிசீலனைகளை ஏன் நடத்தலாகாது? வெளியூர்களில் வேண்டுமானால் ஆங்காங்கிருக்கும் ஸிவில் ஸர்ஜன்களைக் கொண்டு அவரவரது ரேஞ்சுக்குட்பட்ட கிராமாந்தரங்களி லிருக்கும் ஸ்கூல்களைக் கவனிக்கும்படி செய்து கொள்ளலாம். பெரிய நகரங்களைப் பொறுத்தமட்டில் மேற்சொன்னவாறு பிரைவேட் மெடிகல் பிராக்டிஷனர்களின் உதவியை இவ்விஷயத்தில் நாடுவது மிகவும் நலமாயிருக்கும்.

L. அனந்தய்யர்.

(இன்னும் வரும்.)

# PART VII.

## NEWS AND NOTES.

## ஸமாசாரக் குறிப்புகள்.

### THE CONVOCATION ADDRESS.

### கான்வோசேஷன் பிரசங்கம்.

ஸர்வகலா சபையாரால் நடத்தப்படும் பரீக்ஷைகளில் தேறிப் பட்டம் பெறும் வித்தியார்த்திகள் வருஷத்திற் கொரு முறை ஸர்வ கலாஸபையிருக்கும் பிரதான பட்டணத்திற்கு வந்து ஸபை யதிகாரிகள் கொடுக்கும் அத்தாக்ஷிப் பத்திரங்களைப் பெற்றுப்போவது வழக்கம்; இதற்கே 'கான்வகேஷன்' என்பது. டிக்ரி பெறுவதென்று ஜனங்கள் சாதாரணமாக இதைச் சொல்வது முண்டு. வித்தியார்த்திகள் ஒன்றுகூடி யிருக்கும் ஸபா மண்டபத்தில் அவரவர்களுக்கு அத்தாக்ஷிப் பத்திரங்களை யளித்த பிறகு, தகுந்த யோக்கியதையும் அந்தஸ்தும் கல்வி நலமும் அனுபவமும் வாய்ந்த ஒருவரைக்கொண்டு அவ்வித்தியார்த்திகளுக்கு நற்குண நற்செய்கைகள் படியே வேண்டுமென்றும், அவர் தம் வாணாட்களைப் பிரஜா லக்ஷணம் பொருந்திய விற்பன்னர்களாகக் கடத்த வேண்டுமென்றும் அபிப்பிராயங்களோடு கூடின ஸ—போதங்கள் நிரம்பிய பிரசங்கஞ் செய்விப்பது சகஜமாயிருந்து வருகிறது. ஸர்வ கலாஸபை யென்ற யூனிவர்ஸிடி யேற்பட்ட காலத்திலிருந்து பிரதி வருஷத்திலும் கான்வொகேஷன் கூடாமலிருந்ததில்லை. அச்சமயம் மேற்சொன்னவாறு பிரசங்கம் நடை பெறாமலுமிருந்ததில்லை. அவ்வழக்கத்தை யனுஸரித்து நானது நவம்பர்மாதம் 22-ந் தேதி வியாழக்கிழமை மாலை மதிராஸ் யூனிவர்ஸிடி கான்வோகேஷனது சேப்பாக்கத்திலுள்ள ஸெனெட் ஹௌஸில் கூட்டப்பட்டது. சான்ஸலர் ஸ்தானம் வகித்திருக்கும் மதிராஸ் கவர்னர் அக்கிராசனம் வகித்திருந்தார். பட்டாதாரிகளுக்கு வழக்கப்பிரகாரம் டிப்ளமாக்கள் அளிக்கப்பட்ட பின்னர் இந்தியாவிலுள்ள பிரான்சிய ஸ்தலங்களுக்குக் கவர்னரான ஹிஸ் எக்ஸலென்ஸி மான்ஷியர் மார்ட்டினே அவர்கள் கான்வோகேஷன் பிரசங்கஞ் செய்தார். சென்னையில் யூனிவர்ஸிடி ஏற்பட்ட காலம் முதல் இது பரியந்தம் இம்மாதிரியாக கான்வொகேஷன் பிரசங்கஞ் செய்வது வழக்கமான அனுஸரணையிலிருந்து பிறழ்ந்தது கிடையாதென்றே நாம் சொல்லுவோம். ஏனெனில் இத்தேசத்திலே பிரிட்டிஷ் பிரஜைகளாயுள்ளவரும் மற்றும் இந்த யூனிவர்ஸிடிகளில் சம்பந்த முள்ளவருமா யிருப்பவர்களுமே பிரசங்கிப்பதற்காக சாதாரணமாகத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்க, இப்போது மட்டும் அதிலிருந்து வேறு விதமாகத் திரும்பியது காலானுஸாரத்தையொட்டியே போலும். மகா கடூரமாகத் தற்போது நடந்துகொண்டிருக்கும் ஐரோப்பிய யுத்தத்தினால் பூவுலகெங்கும் பெரும் உணர்ச்சி பிராபல்யமாயிருப்பதை யெல்லோரு மறிவார்கள். பொது விரோதிகளாயிருக்கும் ஜர்மனியர் ஆஸ்திரியர் இவர்களுக் கெதிராக நேச வல்லரசுகள் ஒன்றுசேர்ந்து த்வஜங் கட்டிக் கொண்டிருக்கின்றனர். இத்தியாதி சந்தர்ப்பத்தில் நம் பிரிடிஷ் ராஜாங்கத்திற்கும் பிரான்சிய ராஜாங்கத்திற்கு முள்ள நேசப்பான்மையை நன்கு விளக்குவதற் கறிகுறியாக ஏதேனும் காரியம் செய்யப்படுமாயின், அது எவ்வளவு சமயோசிதமா யிருக்கும் பாருங்கள். இணைபிரியா நட்பு இவ்விரு தேசங்களுக்கு முண்டென்று உலகத்தவர் அறிய பிரிடிஷ் கவர்னரும் பிரான்சிய கவர்னரும் ஒரே பிளாட் பாரத்தில் அன்று அமர்ந்திருந்ததே போதியசான்றாகும். இனி பிரசங்கத்தின் போக்கு எவ்விதமென்பதைச் சிறிது ஆராய்வோம். பிரான்சிய கவர்னர் அளித்த கான்வொகேஷன் பிரசங்கம் தேச சரித்திர சம்பவங்களைச் சுட்டிக்காட்டும் விமர்சன மாயிருந்தது. பொறுப்பையும் கவலைகளையும் பெரும்பாலும் உணராத பட்டம் பெற்ற வித்தியார்த்திகளுக்கு, அவர்தம் வாழ்க்கைக்குரிய பிரவர்த்திகளில் பிரவேசிக்கக் காலம் முன்னிடும் இத்தகைய சந்தர்ப்பங்களில் தாம் படித்த படிப்பினை நன் முறைகளிலும் லோகோபகார மாகவும் பொதுஜன க்ஷேமகரமாகவும் உபயோகப்படுத்துவதன் ஆவசியகத்தை உறுத்திக்கூறி அவ்வித்தியார்த்திகளுக்குப் புத்திமதி யளிப்பதைப் பிரசங்ககர்த்தர்கள் முறையாக விமர்சனஞ் செய்வார்கள். ஆனால் இம்முறை கான்வோகேஷன் பிரசங்கமானது அம்மாதிரியான தன்மையோடிராமல், தென்னிந்திய தேச சரித்திர சம்பவங்களைச் சுட்டிக் காட்டுவதாகவே தெரிந்தது. பட்டம் பெற்ற வித்தியார்த்திகள் நிரம்பிய கூடத்தில் இது பிரகாசிப்பதைக் காட்டிலும் சரித்திர வாராய்ச்சி சங்கங்களில் இவ்வியாசம் விசேஷ மேன்மை கொண்டு விளங்கக்கூடும். இதனால் புராதனமாயுள்ள சரித்திர சம்பவங்களைக் கூறலாகாதென்று நாம் அர்த்தங்கொள்வதாக நமது நண்பர் நினைக்கவேண்டாம். ஆனரபிள் மிஸ்டர் வி. கிருஷ்ணசாமி ஐயர், ஆனரபிள் ஜட்ஜ் அப்துர்ரஹீம் ஆகிய இவர்கள் கொடுத்த கான்வோகேஷன் பிரசங்கங்களைச் சிறிது கவனியுங்கள். அவைகளில் பிராசின தர்மங்களையும், பிராசீன காலத்திலேற்பட்டிருந்த வித்தியா விநோதங்களையும், முறையே இஸ்லாம் மதத்தையும் இந்து மதத்தையும் தழுவிய இதர விசேஷ போதனாமுறை லட்சியங்களையும் ஒட்டியவாறு குறிப்பிடப் பட்டிருந்ததோடு, வித்தியார்த்திக்கு அவனது பயிற்சி லட்சியங்கள் அவனிறங்கப் போகிற வாழ்க்கைத் துறையில் நிகழ்காலத்திற்கும் வருங்காலத்திற்கும் உதவிசெய்வனவா யிருக்கவேண்டுமென்னும் அம்சங்களும் தெளிவாகக் காணப்பட்டன. அம்மாதிரியான லக்ஷியங்களொன்றும் இப்பிரசங்கத்திற் காணோம். வெகுகாலம் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் ஏற்பட்டிருந்த மனஸ்தாபங்கள் அவ்விரு ஸமூகத்த வர்க்கும் ஏற்படவில்லையென்றும், அது ஓரரசர்க்கும் மற்றோரரசர்க்கும் தத்தம் ராஜ்யாதிகார உயர்வினைக் குறித்தேற்பட்ட மனஸ்தாபமாகுமென்றும் மான்ஷர் மார்டனே ஆரம்பித்து, இத்தென்னிந்தியாவில் அவ்வுணர்ச்சி எவ்வித மிருந்ததென்று சரித்திர ரீதியாக விவரித்திருக்கிறார். அம்மனஸ்தாபங்களெல்லாம் இப்போது ஒழிந்துபோனதினாலேயே அவர் வெகுதாராளமாக அப்பிற்கால சம்பவங்களை யிப்போது ஞாபகப் படுத்தினார்போலும்.

பூர்வம் சத்ருத் துவமாயிருந்தது தற்போது இணைபிரியா மித்திரத்துவமாக மாறியிருப்பது மிக்க திருப்தியைத் தருவதாகுமென்று ஊன்றிச் சொல்லவேண்டுமானால் பிரான்சிய கவர்னர் அளித்த கான்வோகேஷன் பிரசங்கத்தைக் காட்டிலும் வேறொன்றும் வேண்டுவதில்லை. சரித்திர பாடமெடுத்துப் பட்டம் பெற்றிருக்கும் வித்தியார்த்திகள் பிராசின சரித்திரங்களை ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று கவர்னர் கூறியிருக்கிறார்; வீணான ஆசைகளையூட்டும் லட்சியங்களில் புத்தியைப் புகவிடாது எச்சரிக்கையோடிருக்கவேண்டுவதை அவர் மறந்துவிடவில்லை. மொத்தத்தில் பிரிடிஷ் கவர்னரும் பிரான்சியக் கவர்னரும் ஒரே மேடையில் அமர்ந்து ஒரு ஸமூகத்தைச் சேர்ந்த வித்தியார்த்திகளின் க்ஷேமார்த்தமாகப் புத்திமதி சொல்லுவது காலானுஸாரத்தை யனுஸரிய தாயிருப்பதோடு, தென்னிந்திய தேச சரித்திராதி ஸம்பவங்களில் பிரான்சிய கவர்னர் அபிலாஷைகாட்டி விமர்சித்திருப்பது அவருக்கிருக்கும் தேச சரித்திர பரிச்சயத்தை நன்கு விளக்குவதாகின்றது. இதில் நாம்

ஒன்றுமட்டும் எடுத்துக் காட்டுவோம். பிரான்சிய யூனிவர்ஸிடிகளில் வித்தியார்த்திகள் எவ்விதம் பயின்று ஸமூகத்தவர்க்குழைக்கும் ஸற்பிரஜைகளாக சிநேகம், ஸ்வேச்சை, ஸமத்துவம் என்னும் மூன்று குணங்களையும் தாங்கி வெளிவருகிறார்களென்பதையும், அங்கு தேசிய ஸ்தாபனங்களும் கல்வி ஸ்தாபனங்களும் எவ்வாறிருக்கின்றனவென்பதையும், இவைகளை யாதாரமாக வைத்துக்கொண்டு இளம் பிராயமுள்ள பட்டதாரிகள் தம் ஜீவகாலத்தை இன்னவிதமாகக் கடத்தவேண்டுமென்பதையும் மான்ஷியர் மார்ட்னே தம்பிரசங்கத்திற் சொல்லியிருந்திருப்பாரானால் அது விசேஷதிருப்தியைக் கொடுத்திருக்குமென்பது எமது துணிபு.

L. அனந்தய்யர்.

---

## Mr. MONTAGU'S VISIT.

## மிஸ்டர் மாண்டேகுவின் விஜயம்.

இந்தியா மந்திரியாராகவிருக்கும் ரைட் ஆனரபிள் மிஸ்டர் மாண்டேகு இப்போது இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கிறார். சுபாவத்திலேயே ஆழ்ந்த கருத்தும் புத்திக் கூர்மையும் விஷயவாராய்ச்சி செய்யும் புலமையும் வாய்ந்த இவர் இந்தியாவுக்குச் சுற்றுப் பிரயாணம் புறப்பட்டுவந்த முதலாவது இந்தியா மந்திரியெனச் சொல்லுதலும் நன்றாகப் பொருந்தும். இதற்குமுன், இந்தியாவைப்பற்றிய விஷயங்களில் இவருக்குப் பரிச்சயமுண்டு என்பதற்கு இவர் லார்டு மார்லி இந்தியா மந்திரியாயிருந்த காலத்தில் அவருக்குக் கீழிருந்து வேலை செய்தது ஒருபுறமிருக்க, மற்றோர் புறத்தில், ஜார்ஜ் சக்கரவர்த்தியார் இந்தியாவுக்கு விஜயமானபோது அவரது பரிவாரங்களில் மிஸ்டர் மாண்டேகுவும் ஒருவராக இந்தியாவுக்குப் புறப்பட்டுவந்தவர்; இந்தியாவை நேரிற்பார்த்த அனுபவமும், இந்தியர்களோடு நேரிற்கலந்து பழகிய பரிச்சயமும் மிஸ்டர் மாண்டேகுவுக்கு இருப்பது பற்றியே இந்தியாவின் சம்பந்தமான எப்பேர்ப்பட்ட பிரசினைகளையும் தம் முழுமுதற் கவனத்தால் தீரவுணர்ந்து அபிப்பிராய முரைக்கத்தக்க தீரராக விளங்குகிறார். அதற்குதாரணம் வேண்டுமாயின், மெஸபடோமியப் படையெழுச்சியையொட்டிய காரியங்களை விசாரித்தறிவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைச் சங்கத்தவர் கூறிய ரிப்போர்ட்டின்மீது சிறிதேனும் மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் உள்ளதை உள்ளபடிப் பார்லிமெண்டில் உரைத்து இந்தியர்களுடைய நன்மதிப்பை மிஸ்டர் மாண்டேகு பெற்றவர். தேச நிர்வாகத்தில் பொறுப்பேறிய ஸ்தானங்கள் இந்தியருக்குக் கொடுக்கப்படவேண்டுமென்றும், சுருக்கிச் சொல்லின், இந்தியா தேசபரிபாலனத்தில் இந்தியர்கள் விசேஷ அக்கறை கொண்டவர்களாதலின், அவர்களுடைய சுகதுக்காதிகளை சமயோசிதமாக உணரக்கூடிய தன்மையிருந்த செல்வாக்கு இந்தியர்களாயினோர்க்கு இருக்கவேண்டுமென்று காங்கிரஸ்-முஸ்லீம் லீக் மெம்பர்களான ஜனப்பிரதிநிதிகள் கோரியபடி ஸாதனங்கள் செய்து கொடுக்கலாமென்னும் மனப்பான்மை கொண்டவராவர் மிஸ்டர் மாண்டேகு. பரிபாலன முறைகளைக் கவனிக்கக்கூடிய ஸ்வய ஆட்சி ஸ்தாபனங்கள் பெருகுவது இந்தியாவின் முற்போக்குக்கு ஓரடையாளமாகுமென்றும், பிரிடிஷ் ஏகாதிபத்தியத்திற்குள்ளடங்கிய ஸ்வய ஆக்ஷிபெற்ற தேசங்களுக்கொப்பாக இந்தியாவுக்கும் ஸ்வய ஆக்ஷி முறைகள் ஏற்படுவது இந்தியர் கொண்டிருக்கும் நியாயமான லக்ஷியமேயென்றும், இதையனுஸரித்து இந்தியப் பிரதிநிதிகளாயினோர் தத்தம் அபிப்பிராயங்களை வெளியிடுவது ஆலோசிக்கப்படவேண்டிய அம்சங்களில் ஒன்றாகுமென்றும், மிஸ்டர் மாண்டேகுவின் மனதில் நன்றாகப் பதிந்துவிட்டமையால், அவர் கூடியவரையில் இந்தியப் பிரமுகர்களோடும் இராஜப் பிரதிநிதியாரோடும் மாகாண கவர்ன்மெண்டுகளோடும் கலந்து பேசி அவரது அபிப்பிராயங்களைத் தீர்க்கமாகவுணர்ந்து பின்னர் எவ்வகையான திருத்தங்கள் செய்யக்கூடுமோ அவைகளைச் செய்யலாமென்றே நோக்கங்கொண்டு இந்தியாவுக்குப் புறப்பட்டு வந்திருக்கிறார். அவருடன் வேறு சில நண்பர்களும் புறப்பட்டு வந்திருக்கிறார்கள். டெல்லியில் பிரதம சபைகள் ஒவ்வொன்றுக்கும் அவர்பேட்டி கொடுத்துக் கொண்டு வருகிறார். இந்தியா மந்திரியாரின் மீது சுமந்தப்பட்டிருக்கும் பொறுப்பு சாமான்யமானதல்ல, அப்பொறுப்பு எவ்விதத்தும் இந்தியர்க்குத் திருப்தியாகும்படி அவர் அதை வகித்துத் தம் காரியங்களை நிறக்கச் செய்வாரென்ற நம்பிக்கையுடன் திரிகரண சுத்தியாக அவரை நல்வரவேற்று அழைக்கின்றோம்.



---

# PART VIII.

## MORAL STORIES.

## நீதிக் கதைகள்.

### சீலவதி.

(250-ம் பக்கத் தொடர்ச்சி.)

### பாதிவிரத்ய லக்ஷணம்.

சீலவதி தன் கணவனைப்பார்த்து 'என் அரசே, எல்லாமறிந்த தாங்கள் எனக்கு நாதனாயிருக்க, நானென்ன சொல்லப்போகிறேன். எல்லாம் விட்டலதேவரின் திருவருட் பிரஸாதமே' என்றனள். தன் முன் நிற்பது தன் இன்னுயிர்க் காதலி சீலவதியோ அல்லது கலைமகளோ வென்ற சந்தேகம் துளசிராமனுக்கு ஜனித்துவிட்டது. ஒருவிசை கண்களை மூடுவதும் திறப்பதுமாக ஆனந்த பாஷ்பத்தைப் பெருகவிட்டுக் கொண்டிருந்தானவன்; ஏதேனும் பேசலாமென்றால் அவனுடைய நாவெழவில்லை. அவளுடைய வாக்கிலிருந்துவரும் மொழிகளை அமிருததாரையாகத் துளசிராமன் மதித்துக் கர்ணாமிருதமென சிரவணஞ் செய்வனாயினன். நிஷ்களங்கமான நீலவானத்திலே பூவுதிர்த்தாற்போன்று, நக்ஷத்திர மண்டலத்தின் நடு நாயகமாக திவ்ய தேஜஸ்ஸுடன் விளங்கும் பௌர்ணமைச் சந்திரனை நிகர்த்த ஸுப்ரஸன்னமான சீலவதியின் முகத்தினொளியையும், மனதிற்கு ரம்மியமும் கவர்ச்சியும் உண்டாகும் வண்ணம் குயிலினம் வல்ல இனிய குரலின் தொனியையும், அர்த்த புஷ்டியோடு கூடின ஸுமார்க் கஸாதனத்திற்கனுகுணமான திவ்யபதங்களையும் சீலவதி சரமாரியாகத் தொடுத்து விட்டலதேவரின்மீது கவனத்தைச் செலுத்திவிடுகையில் அவ்வார்த்தையம்புகளான அப்புஷ்பங்கள் துளசிராமன் மீதுவிழ, அவன் கண்களை மூடியவனாய் அப்புஷ்பங்களிலிருந்து ஒழுகுந் தேனையருந்தி ஆனந்த ஸாகரத்தி

லாழ்ந்திருந்தான். தெய்வபக்தியில் கணவனுக்கு நம்பிக்கை வந்துவிட்டதை யுணர்ந்த சீலவதி தெய்வத்தின்மீது பாரத்தைப்போட்டு ஆடித்தூங்கும் பம்பரம்போல் மனத்தை ஏகாக்ர சித்தத்தில் நிறுத்தி ஆமுஷ்மிக (பரலோக) சிந்தனையை யடைந்து "ஆடினதே ஆட்டம், கண்டதே காட்சி, கொண்டதே கோலம், உண்டதே போகும்" என்று மருள்கொண்டு மாயாவாதம் பிதற்றாது, ஆரியர்குலத்தை உயர்வில் நிறுத்த கங்கணங் கட்டிய கருணாதேவியோ வெனப் பார்ப்போர் சொல்லும்படி சீலவதியானவள் பின்வருமாறு கூறினாள்:—

"ஒரு ஸ்திரீயானவள் அவள் கணவன் எத்தன்மையனா யிருந்தாலும் (வர்த்திபனாயினும் ரோகியாயினும் நிர்மூடனாயினும், பிறவிக் குருடனாயினும்) அவனையே யெப்போதும் மனத்தில் தொழுதுகொண்டு, தெய்வத்தைத் தொழாவிடினும் இரவில் படுப்பதற்குமுன் அவனைத்தொழுது, அவனே ஞாபகமாய் உறங்கி, விடியற் காலையில் எழுந்திருக்கும் போதும் அதே நினைவுடனெழுந்து, இவ்விதமாக எல்லாக் காலத்திலும் பதிபக்தி செய்பவள் மகாவுத்தமியாவள். இப்படிப்பட்டவளைப்பற்றித் தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவநாயனார்,

"தெய்வந்தொழா அள்கொழு நற்றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யுமழை"

யென்று இரண்டுவரியிற் சொல்லியிருக்கிறார். அவளே புனிதையாவள்; அவளே ஸத்திய ஸ்வரூபியுமாவள். ஸ்திரீகளுக்கு முக்கியமாயிருக்க வேண்டுவது கற்பு, அதாவது 'பாதிவிரத்யம்.' பாதிவிரத்யத்தை யனுஸரிப்பவளே பதிவிரதை. பதி=பர்த்தா; விரதை=(பக்திசெய்வதில்) விரதமாக அனுஷ்டிப்பவள் எவளோ அவளே பதிவிரதையாவள். அவளிடம் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நால்வகைக் குணங்களும் பொருந்தியிருக்கும். என்னைப்பொறுத்தமட்டில் நான் பேசுகிறேன். சாதாரணமாய்க் குளங்களிலும் நதிகளிலும் ஸ்திரீகளும் புருஷர்களும் அருவருப்புக் கிடமாய் ஒரே துறையிற் கலந்திறங்கி ஸ்நானஞ் செய்கிறார்கள். அதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். தேவாலயங்களுக்குக் கூட்டங் கூட்டமாகப்போய் நடப்பதற்கும் நிற்பதற்கும் இடமில்லாமல் நசுக்குலுற்று மிகக் கஷ்டப்பட்டும் ஸ்வாமி தரிசனம் கிடையாமல் (புருஷனல்லாத) பரபுருஷரின் தேகஸ்பரிசமும் இடிபிடியும், இதனிடையில் ஆபரணாதிகளைக் களவு கொடுப்பதுமே பயனாகத் திரும்பி வருகிறார்கள். இந்த இடங்களுக்குப் போய் இதர புருஷர்களின் தரிசன ஸ்பரிசங்களினாலும் சாஸ்திரவிதியினாலும், சம்ஸாரவாழ்க்கையின் நிர்ப்பந்தத்தினாலும் வழக்கத்தினாலும் தங்கள் மனத்திலுதித்திருக்கும் நுண்ணிய தன்மையையும் லஜ்ஜையையும் சங்கோசத்தையும் அடக்கத்தையும் வரவரப் போக்கடித்துக்கொண்டு, அவர்களுக்குள்ள அடங்கிய தன்மைமாறிப் புருஷர்களும் தங்களைப்போல மானிடரே யென்று வேதாந்தம்



பேசி, அவர்களுக்குள்ள ஸ்வதந்திரம் தங்களுக்கு என் இருக்கக்கூடாதென்று வீண் வாதஞ்செய்து, குனிந்த தலை நிமிர்ந்து அண்ணாந்து பார்த்து கைவீசி, காலையுதறி நடந்து புயங்களதிரக் குயங்கள் குலுங்க, விழிகளின் நயங்காட்டி வேகமாய்க் கொந்தளித்து 'பார்பார்' எனப் பாதச்சிலம்பினால் வழிப்போக்கரைக் கூவியழைத்து மோகக் கனல் மூட்டி மையல்செய்து, மகிழ்ந்து மதங்கொண்டு மமதையடைந்து மறலி (யமன்) விடுகின்ற மாயையென்னுந் தூதராய்த் திரியும்படியான மனப்பாங்கை (அவ்விடங்களுக்குப் போய்ச் சம்பாதித்துக் கொள்வதைவிட, ஸ்திரீயானவள் தனது வீட்டிலேயே யிருந்துகொண்டு பரிசுத்தமான ஆடையாபரணங்களைத் தரித்துக்கொண்டு, தான் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றி 'கணவனே கடவுள்' என்பதைக் கணப்பொழுது மறவாது கருதி நின்று அவனிருக்கும் வீடே தேவதாக்கிருகமென்று நினைத்து வீட்டைத் துலக்கிச் சுத்தமாய் வைத்துக்கொண்டு, அவனைத்தொழுது உபசரித்து ஆனந்தப் படுத்துவதே தான் பேரின்பவீட்டை யடைவதற்குச் சாதனமாக வெண்ணிப் 'பதியே கதி' யென்றிருப்பவளே கற்புடைய மனைவியாவள்; பதிவிரதாதர்மத்தை யனுஷ்டிக்கும் பத்தினியாவள். (இவ்வாறு கூறியதனால் கோவில் குளங்களுக்குப் போகவேண்டாமென்று அர்த்தமன்று 'ஆலயந்தொழுவது சாலவும் நன்று' என்று கூறப்பட்டிருக்கிறது. நாமிருக்கவேண்டிய நிலையிலிருந்து வந்தால் கோவில் குளங்களுக்குப் போவதை யெவர்தான் மறுப்பர்? இதைப் பொதுவென்றே நமது நேயர் எடுத்துக் கொள்வார்களாக.) நம் பெரியோர் தர்மபத்தினிக் குண்டான குணங்களைக் குறிப்பிடுகையில்,

"கார்யேஷு தாஸீ கரணேஷு மந்த்ரீ
ரூபேஷு லக்ஷ்மி க்ஷமயா தரித்ரீ
ஸ்நேகேஷு மாதா சயனேஷு வேச்யா
ஷட்கர்மநாரீ குலதர்மபத்னீ!"

என்றும்,

"அன்னை தயையும் அடியாள்பணியுமலர்ப்
பொன்னினழகும் புவிபொறையும்—வன்னமுலை
வேசிதுயிலும் விரல்மந்திரிமதியும்
பேசிலிவை யுடையாள்பெண்"

என்றும் கூறியுளர், அதாவது வேலை செய்வதில் தாதியைப்போலவும், சமயோசிதத்திற்கேற்ப யுக்திகளைக் கணவனுக் குபதேசிப்பதில் மந்திரியைப் போலவும், ரூபத்தில் லக்ஷ்மிதேவியைப் போலவும், பொறுமையில் பூதேவியைப் போலவும், அன்னமிட்டு விசுவாஸிப்பதில் பெற்றெடுத்த மாதாவைப் போலவும், மஞ்சத்தில் (படுக்கையில்) வேசியைப் போலவும் எந்த ஸ்திரீயிருக்கிறாளோ அவளே குலத்திற்கேற்ற பத்தினியாவள். நாதா, நீரே எனக்குப் பதியும் பரதெய்வமும். எந்த விட்டலதேவரை என் ஹிருதய

கமலத்தில் நான் வைத்து பஜிக்கிறேனோ அத்தேவர் உம்முருவங் கொண்டவா. இதுவே நான் கண்டதும் கேட்டதும்."

சீலவதியைப் போல நம் சோதரிமார்களும் நடப்பார்களாக.

ல. அனந்தய்யர்.

---

ஸ்ரீ

# *ஹரிஹரன்.

---

(255-ம் பக்கத் தொடர்ச்சி.)

## முதல் அங்கம்.

### மூன்றம் களம்.

இடம்:—ஸ்ரோஜனியின் சயனவறை.

காலம்:—இரவு.

(ஸரோஜனி மஞ்சத்தில் சாய்ந்தவண்ணம்.)

ஸரோஜனி:—ஹா! அச் சுந்தராங்கனின் எழில் தான் என்னே! என்னே! ஒளிமிகுந்த தேஜனே! கருகி வளர்ந்த திருவளர் புருவமும், மழை குலம் போலப் பேரருள் பொழியும் செவ்வரி படர்ந்த நயனங்களும், மலையொடு மலைக்கும் வலி மிகு புஜமும், மாதர் மனங்கவரும் தீதறு மார்பும், அழகு மிகுந்த என்னிருதயவாஸனே! ஸுரேந்திரா! உமக்கு எவரைத் தான் உவமைகூறுவல்? அறிதுயில் கொள்ளும் ஹரியின் மைந்தனுன மதனனும் உம்மைக் கண்டால் வெட்கியோடுவனே!

(எழுந்துட்கார்ந்து) ஹா! என் காதலின் நாதனே!

அன்பனே! மணியே! கலையின் நிலையே! காதற்றுரையே! நாதனும் துரையே! என் ஆர்யனே! எம்முள உறைவோய்! உயிரே? உறவே! இள்ளத்திலுறையும் ஒளியே! அடியாள் கதியே! ஹே! காதலா! உமது வாய்திறந்து என்னுடன் வார்த்தையாடீரோ? உமது திருவுருவம் கோசலநாட்டு இளவரசரது போலிருக்கின்றதே! ஒருகால் அவர்தானோ நீர்! அவ்விதம் இருப்பின் உமது நாமம் மாத்திரம் வேறுபட்டிருக்கின்றதே! எனக்காக நீர் மாறுவேஷம் பூண்டு வந்திருக்கிறீரோ! ஹா! என்ன கஷ்டம் உங்களுக்கு. என்னுடன் ஒரு வார்த்தை சொன்னல் அதன்படி நடக்கக் காத்துக்கொண்டிருக்கின்றேனே! என்னிடத்திலும் நீர் வர்மம் செய்யலாமோ! (சற்றுபொறுத்து) நான் உமது அடியாள் என்பது உமக்கு எப்படித்தெரியும்? (ஜன்னலருகேசென்று) ஹே! மல்லிகைகாள்! அல்லிகாள்! இம்மெல்லியலாள் என் காதலற்கு நீவிரெடுத்து நவிலீரோ? காதலரே! என்னுடன் ஒரு வார்த்தை பேசலாகாதா? இன்றுமலை என்னைக்கண்டு



வணங்கி புன்னகை புரிந்தீரே. யார் வணங்குவது? நீரோ எனக்குத் தலைகுனிவது. தலை வணங்கி பணிபவள் நான் அன்றோ? உமது பார்வை என் உள்ளத்தை ஊடுருவுகின்றதே! மற்றொருமுறை காண நேரிடின் நானே உம்முடன் வார்த்தையிடுகின்றேன். ஸுரேந்திரா! உம்மையே மணப்பேன்! இல்லையேல் இவ்வாழ்க்கையைத் துறப்பேன். எதற்கும் பகவானது க்ருபை பூரணமாகவேண்டும். அவரன்றி யோரணுவு மசையாதன்றோ? இதுவரைக்கும் லலிதா ஏன் வரவில்லை. வராதிருந்ததும் எனக்கு நலமே.

(லலிதா கதவைத்திறந்து வருகிருள்.)

லலிதை:—ஆம் இளவரசி! நான் இருந்தால் உங்களுக்கு வெகு கஷ்டம் தான். நான் வராதவரைக்கும் நலம்தான்.

ஸரோஜனி:—ஸகி! கோபித்துக் கொள்ளாதே! என்னமோ நான் தான் சொல்லிவிட்டாலும் நீ அதைத் தப்பாக எண்ணுகிருயே.

லலிதை:—அம்மணி! எனக்குத் தெரியக்கூடாதென்று என்னென்னமோ இதுவரை சொல்லிவந்தீர்கள். என்னைக் கூப்பிடாவிட்டாலும், சொன்னவைகளை யெல்லாம் நான் கேட்டிருந்தேன். அதற்காக மன்னிக்கவும். கேட்காதிருக்கவும் முடியவில்லை. நானும் ஒரு பெண் பேதைதானே!

ஸரோஜனி:—ஸகி! நீதான் மறைந்திருந்து கேட்டுவிட்டாயே! இனி நான் சொல்வானேன். உனக்குத்தான் தெரியுமே.

லலிதை:—ஆம் அம்மணி! நான் உம்முடன் அடிக்கடி வார்த்தையாடுகிறேன். ஆகவே என் வார்த்தை உங்களுக்கு ஸுகத்தைத் தராது. ஸுரேந்திரர் வார்த்தையாடவில்லையே என்று ஏங்குவீர். ஆமாம்! பருவம் வந்தால் மனுஷாளையும் மறக்கவேண்டியது தானே!

ஸரோஜனி:—இவ்விஷயத்தை எவருக்கேனும் தெரிவிக்கப்போகிருய். தெரியுமா லலிதா.

லலிதை:—அம்மணி! நான் ஒருபோதும் வெளியிடேன். இதுவரை ஏதேனும் உமது விஷயங்களை எப்பொழுதாவது எவருக்காவது சொல்லியிருக்கிறேனு? எப்படியாவது உமாதேவியின் க்ருபையினல் நீங்கள் ஸுரேந்திரரையே மணக்கவேண்டும். பரமசிவனை பார்வதிகாந்தனை நான் எப்பொழுதும் உமது ஆத்மநாதனை உம்மிடம் சேர்ப்பிக்கும்படி ப்ராத்திக்கின்றேன்.

ஸரோஜனி:—லலிதா! உனது ப்ரார்த்தனைகளாவது நிறைவேறட்டும். ஜகதீசா! நீயே எனக்குத் துணை. இச்சமயம் வேறு சகாயம் புரிவோர் இல்லை. எனக்காக என் தந்தை என்ன கஷ்டப்படுகிறுர் இவ்விருத்த தசையில். ஐயோ! அந்தக் கிழராஜேந்திரனுக்கு என்ன புத்தி

தோன்றிற்று? விநாசகாலே விபரீதபுத்தி என்பார்களே! அதுபோல் அந்தச்சண்டாள கிழவனுக்கு என்ன போகுங்காலமோ தெரியவில்லையே!

லலிதை.—அம்மணி! பதிவிருதையான சீதைமீது ஆசைகொண்ட பாபி ராவணன்போல் கடைசியில் அந்தக்கிழவன் மாளத்தான் போகின்றான்.

ஸரோஜனி:—அதில் ஒருவித ஸந்தேகமுமில்லை. என் வயிற்றெரிச்சல் வீண் போகாது. இந்தக் கிழவன் என்மீது ஆசைகொண்டிருப்பனோ?

லலிதை:—ஆசைகொண்டிருக்கலாம் அம்மணி! ஆனால் காதல் கொண்டிருப்பனோ?

ஸரோஜனி:—இரான்! வாஸ்தவமாயிரான், என் நாதன் ஸுரேந்திரர் மூலமாய் என்ன செய்விக்கிறேன் பார் அந்த ராஜேந்திரனை. இவன் தான் இப்படியென்றால் என் மாமா முழுமூடனும், பைத்தியனுமான குலோத்துங்கனை மணக்கச் சொல்லுகிறார். நானோ அவனைக்காதலிப்பது. இது எங்கேனும் அடுக்குமோ? கருணாகரா! இவ்விடர் நின்றும் காப்பாற்றுவது நின் கருணாவிலாஸத்திற்கு அசாத்தியமோ! என் அண்ணலே! வாசுதேவா! கோபிகாநந்தனா! கார்மேனியனே! என் ஐயனே! சீக்கிரத்தில் எனக்கு உமது அருள் பாலிக்கப் பிரார்த்திக்கிறேன்.

லலிதை.—அம்மணி! எல்லாம் இறைவன் செயல். உமது ப்ரார்த்தனை வீண் போகாது. படுத்து நித்திரைசெய்யும். காலை பார்த்துக்கொள்வோம்.

ஸரோஜனி:—ஸகி! என்னமோ என் மனம் அவரையே நாடுகின்றது. கண்களும் அவரையே எப்பொழுதும் காண்கின்றன. எப்படியாவது நான் அவரை அடைந்தால் போதும். நாளை என் தந்தை சபையில் ஒரு தூதன் வரப்போகின்றானாம். என்னசொல்லப் போகிறானோ தெரியவில்லை. எதற்கும் எழிலிவண்ணன் இருக்கின்றார்.

(படுத்துக்கொள்ளுகிறாள்.)

லலிதை:—அம்மணி! கவலையின்றி உறங்கும். எப்படியும் அவரை அடைவீர். நான் சென்று வருகிறேன். (செல்கை.)

காட்சிமுடிகிறது.

கீழ்வீதி. பிரயாகை. சேஷாத்திரி அய்யங்கார்.



# KARPUTHIRUMALI.

## கற்புத்திருமலி.

S. T. N. சிதம்பரம் பிள்ளையவர்கள் எழுதியது.

இப்பூமாதிற்குத் திலகம்போன்றிராநின்ற மாளவநாட்டின்கண் மஹாதேவபுரமென்ற நகரில் பிர்மகுலத் துதித்த களமலாதாயர் என்றோர் சீமான் இருந்தார். இப்புமான் ஆறுசாஸ்திரம் அறுபத்துநான்கு கலைகள் பதினெண் புராணம் இருபத்தெட்டாகமங்களில் மிக்கவல்லவராய் தர்மத்திலேயே நிலையாக நின்று நிஜமே குடிகொண்டவராயிருந்தார். இவர் மனைவியோ, பெண்களுக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு எனும் நாற்குணங்களமைந்தவளாய் தங்கணவரையே வழிபடு கடவுளாகக் கருத்துட்கொண்டு கணவர் உயிரும் தான் உடலுமாயிருந்த காந்திமதி என்னும் பெயருடையாள். இச்செல்வச் சிரோமணிகளுக்குப் பகவானனுக்கிரகத்தினால் ஒரு பெண் மகவுபிறந்ததை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்த்து கற்புத்திருமலி என்னும் அழகிய பெயரிட்டுச் சகல கலைஞானங்களையுங் கற்றுக்கொடுத்து கற்றுத் தேர்ந்தவளாய் விவாஹத்துக்குரிய வயதுடைய வளாயிருந்த தமது பெண்ணைப் பார்த்து தாயார் இனிது புகல்வாள்.

காந்திமதி:—எனது அருமைப் புதல்வியே! நாம் இக்கடல் சூழ்ந்த தாரணியில் மானிட ஜென்மமெடுத்ததின் பயனுக்குரிய விஷயங்களைத் தினந்தோறும் வழுவாது செய்து வரல்வேண்டும்.

கற்புத்திருமலி:—ஆ! ஆ!! அது என்னம்மா.

காந்தி:—அதுவா, நாம், நம் வாழ்நாளெல்லாம் நம் முன்னோர்களைப் போல் முறைபிறழாது இருந்து வரல்வேண்டும்.

கற்பு:—முற்காலத்துப் பெண்கள் எப்படி இருந்தார்களம்மா?

காந்தி:—பெண்களுக் கழகமைக்கும் ஆபரணம் பூண்டிருந்தார்கள்.

கற்பு:—இது தானா? பணமிருந்தால் வெள்ளியாலும் உயர்ந்த பொன்னினாலும் இவைகளோடு நவரத்னங்களாலும் உச்சி, காது, கழுத்து, மார்பு, கை, இடை, கால்கள் முதலியவிடங்களில் செம்மையா யமைந்த நகைகளிட்டு நல்ல ஆடைகளும் இடுப்பிலுடுத்தி நல்ல வர்ணப்பட்டுக் கச்சணிந்திழுத்துக்கட்டி வர்ணப் பொட்டுமிட்டால் வந்து விடுகிறது அழகு. இது என்ன பிரமாதம்.

காந்தி:—அது அல்லடி அல்ல, கவனமாய்க்கேள். உலகில் பெண்களாய் ஜனனமெடுத்தவர்கள் அவர்களுக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு எனும் நான்கு குணங்கள் அமைந்திருப்பது அதி யவசியமாம். அஃதெவ்வாறெனில், ஜனனமுதல்,

" மணம்புரிவதன்முன் குரவராணையினும்
மணவினை முற்றியபின்ன
ரிணங்குறவருள் செய்கொழுனராணையினு
மிருப்பர் தம்வயமிலரென்றும்" என்றபடி,

கன்னிகைகளாகி மணவாளம்வரைத் தாய் தந்தையரைக் குருவாகக் கொண்டு அவர்களாதீனத்திருந்து அவர்கள் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளவேண்டும். மணமுடிந்தவுடனே பெண்களுக்குரிய ப்ரஹ்மச்சரிய ஆசிரமத்தை யௌவனம் வரைகைக்கொண்டு கிரகஸ்தாசிரமம் பூண்டு "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" எனும், ஔவையார் திருவாக்கைக் கடைப்பிடித்துக் கணவன் சொல்லுக்குக் கீழ்படிந்து நடந்து கொள்ளவேண்டும்.

கற்பு:—பெண்களுக்குரிய ப்ரஹ்மச்சரிய ஆசிரமமென்பது யாதென விளங்கவில்லையே.

காந்தி:—சொல்லுகிறேன் கேள். பூர்வம் செய்த நற்றவப்பயனால் மானிடப் பெண்ணாய் இப்பூவுலகில் பிறந்தோம். இளமையின் முயற்சி முதுமையிற் காக்கும் என்ற பழமொழிக்கிணங்க இப்பிறவியை வீணாகச் செய்யாது கடவுள் பக்தி, கடவுள் அடியார் பக்தியோடு இல்லறத்திற்குரிய நல்லொழுக்க நூல்களைப் படித்தறிந்து ஆசார அனுஷ்டானத்துடன் இருத்தலையாம்.

கற்பு:—கடவுள் யார். எப்படிப்பட்டவர்.

காந்தி:—கடவுள் என்பவர் யாரெனில் ஆகாயம், காற்று, நெருப்பு, தண்ணீர் மண் யாவு முண்டாக்கி சத்தியமஹாதபோசனர் சுவர்க்க புவர் பூ அதல விதல சுதல நிதல ரிஸாதல தராதல பாதாளமாகிய பதினாலுலகங்களையும் அதனதனில் வசிக்கும் ஆன்மாக்கள் பூர்வம் செய்த நல்வினை தீவினைக்கேற்ப அண்டசம், சுவேதசம், உற்பிச்சம் சராயுசம் எனும் தோற்றத்தினுள் தேவர்கள், மனுஷ்யர்கள், மிருகங்கள், பக்ஷிகள், ஊர்வனங்கள், நீர்வாழ்வனங்கள், தாவரங்களாகிய ஏழுபிறப்பையும் எண்பத்து நான்கு நூறாயிரயோனி பேதத்துடனுண்டாக்கி அததன் மெய் நாக்கு மூக்கு கண் செவியாகிய பொறிகள் சித்தம் இவைகளாலறிவு ஆறுவகையாகப் புகட்டிப் படைத்தும் இரக்ஷித்தும் அழித்தும் வருபவரே கடவுள். அவர் இல்லாத இடம் எங்குமில்லை. எங்கேயும் பூரணமாய் நிறைந்து எல்லாவற்றையும் இரக்ஷிக்குந் தொழிலே மிக்க மிகைபடச் செய்துவரினும் நம் போன்றவர்கட்குத் திருக்கோவில்களில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளிலும், கடவுளடியாரிடத்திலும், சமையாசாரியர்களிடத்திலும் நின்று கடவுள் அருள்செய்ய ஆயத்தமாயிருக்கிறார் என்பது திண்ணமே.



கற்பு:—அம்பூகுழலி! இல்லறத்திற் குரிய நல்வழி போதிக்கும் புஸ்தகங்கள் இன்னதென எனக்கு விளங்கச் சொல்லவேண்டும்.

காந்தி:—நான் சொல்வதைக் கவனமாய்க்கேட்கும் நற்குணமுடையவளே கேள். புராணங்கள், ஸ்மிருதிகள், சாஸ்திரங்கள், இதிகாசங்கள் முதலியவைகளின் கருத்துக்களை ஒருங்கே அடங்கியிருக்கும் அறுபத்துமூன்று நாயன்மார்கள் சரிதம், ஆழ்வாராதியர் அறுபத்துநால்வர்கள் சரிதம், திருவிளையாடற்புராணம், தேவாரம், திருவாசகம் இவை போன்ற பல புஸ்தகங்களேயாம்.

கற்பு:—அருமைவசனம் புரி அழகு அம்மையே? பெண்களுக்குரிய கிரகஸ்தாசிரமத்தை வினவ வேண்டுகிறேன். (இன்னும் வரும்.)

S. T. N. சிதம்பரம் பிள்ளை.


# மஹானின் மகிமை.

தேடுதற்கரிய மஹானால் எனக்குக் கிடைத்த அருமையான மூலிகையாலும் மகிமையுள்ள தாயத்தாலும் குஷ்ட முதல் தீராதென்று கைவிடப்பட்ட சகலவிதமான நோய்களும் நீங்கி சுகமாகி வருகிறதென்பது அனேகருக்கு தெரிந்த விஷயமே.

அன்பர்களே! குஷ்ட வியாதி முதல் தீராதென்று கைவிடப்பட்ட பலவித வியாதிகளெல்லாம் குணமாகியிருப்பதை நேரிலும் பார்க்கலாம், நற்சாக்ஷி கடிதங்களாலும் காணலாம்.

நேரில் பார்க்க விரும்பும் வியாதியஸ்தர்களுக்கு கூடுமானால் நமது ஏஜண்டுகளை அனுப்புவோம்.

மகிமையுள்ள தாயித்தை ஒவ்வொரு வீட்டிலும் குழந்தைகளும், படிக்கும் மாணவர்களும், ஆண் பெண் சகலரும் அணிந்திருப்பார்களானால் சகல கெடுதிகளினின்றும் நீங்கி சகல சுகமும் அடைவார்கள். அதனால் உண்டாகும் நன்மையை அவாளவாளே தெரிந்து கொள்ளலாம்.

☞ நற்சாக்ஷி கடிதங்களை கவனியுங்கள்.

தபாலில் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்புவீர்களானால் இவைகளின் விபரங்களடங்கியதும் விலை விபரமுள்ளதுமான இரண்டு கலரில் மூன்று வருஷத்திய காலண்டர் போட்டோவுள்பட அனுப்பக்கூடும்.

வேண்டியவர்கள் வியாதியின் விபரத்தை ஆரம்பமுதல் சரிவர தெளிவாக நமக்கு எழுதுவதோடு தங்கள் தங்கள் விலாசங்களையும் விபரமாக ஒவ்வொரு கடிதங்களிலும் குறிப்பிட்டு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

எஸ். ஏ. கெ. பிள்ளை, மேட்டுப்பாளையம்,
கோயமுத்தூர் ஜில்லா, சவுத் இந்தியா.

பிங்களஞு கார்த்திகை-மார்கழி விருச்சிகரவி, இங்கிலீஷ்—1917, பசலி—1327, ஹிஜிரி—1334. தக்ஷிணாயனம்—சரத்ருது.

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | 1 | கக | சனி | திரு சடு-சஎ, திருவா, ௩டு-ச, சுப ௩எ-௩டு, வணி சடு-கச, |
| 16 | 2 | கஎ | ஞா | சது சஅ-க௩, புனர் ௩அ-௩௩, சுப்ர ௩௬-கக, பவ கக-௫அ, திவி ௬-சஅ, ஸங்கடஹரசதுர்த்தி, கரிநாள், |
| 17 | 3 | கஅ | திங் | பஞ் ௫க-௩௩, பூச ச௩-அ, பிரா ௩டு-௫எ, கௌ கக-௫ச திவி ௦-௫, |
| 18 | 4 | சக | செ | ஷஷ் ௫௬-௬, ஆயி சஅ-௩அ, மாஹே ௩௬-கக, கர உ௩-௫உ, திவி கஅ-ச, |
| 19 | 5 | உ௦ | புத | ஸப் ௬௦-௦, பக ௫ச-சஅ, வை ௩எ-கஉ, விஷ் உஅ-௩எ, திவி உக-ச௩, திருதினஸ்பிருக், வைதிருதி சிரார்த்தம், |
| 20 | 6 | உக | வியா | ஸப் க-௬, பூர ௬௦-௦, விஷ்க ௩அ-உ௩, பவ க-௬, திவி க௬-௫எ, |
| 21 | 7 | உஉ | வெ | அஷ் ௬-உஎ, பூர க-கடு, பிரீ ௩க-௩டு, கௌ ௬-உஎ, திவி உச-எ, |
| 22 | 8 | உ௩ | சனி | நவ கக-௩எ, உத் எ-உக, ஆயி ச௦-உக, கர கக-௩எ, ரா க-சக, |
| 23 | 9 | உச | ஞா | தச க௬-கஉ, ஹஸ் க௩-கடு, ஸௌ ச௦-௫௩, விஷ் க௬-கஉ, ரா ௬-எ, |
| 24 | 10 | உடு | திங் | ஏகா கக-௫ச, சித் கஅ-க௩, சோப ச௦-௩௩, பா கக-௫ச, ரா ச-உ௦, ஸர்வத்திரைகாதசி, சூன்னியதிதி, |
| 25 | 11 | உ௬ | செ | துவா உஉ-உக, சுவா உஉ-௬, அதி ௩க-கக, தை உஉ-உக, ரா எ-௫எ, பிரதோஷம், அன்ஹாந்தம் உ௩-க, |
| 26 | 12 | உஎ | புத | திர உ௩-சஎ, விசா உச-சஅ, ஸௌக ௩எ-எ, வணி உ௩-சஎ, ரா ௬-கடு, மாஸசிவராத்திரி, அன்ஹாதி கஎ-க௬, |
| 27 | 13 | உஅ | வியா | சது உ௩-௫க, அனு உ௬-கச, திரு ௩௩-௫டு, சகு உ௩-௫க, ரா கக-௩௦, போதாயனுமாவாஸ்யை, [சுக்கில பிரதமை திதிகள், |
| 28 | 14 | உக | வெ | ● உஉ-௩எ, கேட் உ௬-உக, சூல உக-ச௬, நா உஉ-௩எ, ரா கஎ-உ௬, அமாவாஸ்யை, அலப்பியம், விருச்சிக கிருஷ்ண அமா |
| 29 | 15 | க | சனி | பிர உ௦-கக, மூல உடு-௩டு, கண் உச-சஉ, பவ உ௦-கக, திவி உக-௩க, ரா உ௰-௫, மார்க்கசீர்ஷசுத்தம், சாபரவி க௩-கஅ, சூன் |
| 1 | 16 | உ | ஞா | துதி க௬-௫௩, பூராட உ௩-ச௩, விரு கஅ-௫டு, கௌ க௬-௫௩, ரா கச-ச, [னியாக்கம், ஷடசீதி, சாப சுக்கிலத்தீயாதிதி, |
| 2 | 17 | ௩ | திங் | திரு கஉ-௩க, உத்திரா உக-உ, துரு கஉ-உ௬, கர கஉ-௩க, ரா க-சச, |
| 3 | 18 | ச | செ | சது எ-ச௩, திருவோ கஎ-சச, வியா ௫-உஉ, ஹரு ௫உ-௩க, விஷ் எ-ச௩, திவி உஎ-௬, அலப்பியம், சதுர்த்தீ விரதம், |
| 4 | 19 | ௫ | புத | பஞ் உ-கஅ, ஷஷ் ௫ச-கக, அவி க௩-௫அ, வஜ் ௫௦-அ, தா உ-கஅ, கௌ, உஎ-அ, ரா உ-உ, தாரகஹர குமாரஷஷ்டி அவமா, |
| 5 | 20 | ௬ | வியா | ஸப் ௫௦-ச௩, சதய க-௫௩, விஷ் சஉ-கஅ, கர உ௩-௩அ, திவி உச-சஎ, கரிநாள், |
| 6 | 21 | எ | வெ | அஷ் சடு-ச, பூரட் ௫-ச௬, விய ௩ச-௩க, விஷ் கஎ-௫௩, திவி உஅ-கக, மஹா வியதீபாதம், வியதீபாத சிராத்தம், |
| 7 | 22 | அ | சனி | நவ ௩க-௩க, உத்திரட் க-சக, ரேவ ௫௬-உ௦, வரி உ௬-௫எ, பா கஉ-கஎ, ரா க-க௬, பிரணயகல்ப்பாதி, |
| 8 | 23 | க | ஞா | தச ௩ச-௩ச, அசு ௫டு-ச, பரி கக-சக, தை எ-உ- ரா க௬-௫௩, மகராயனம், உஎ-௩, கரிநாள், |
| 9 | 24 | க௦ | திங் | ஏகா ௩௦-க௬, பர ௫உ-சஉ, சிவ சஉ-௫௬, வணி உ-உடு, விஷ் உஎ-௫க, திவி கஅ-எ, ஸ்வர்க்கைகாதசி ஸ்வத்திரைகாதசி, |
| 10 | 25 | கக | செ | துவா உ௬-ச௬, *கார் ௫க-க௩, விஷ் ௬-சஅ, பா உ௬-ச௬, திவி உக-௫அ, பிரதோஷம், கார்த்திகை விரதம், கரிநாள், |
| 11 | 26 | கஉ | புத | திர உச-கஅ, உரோ ௫௦-சஅ, ஸாத க-உ௩, சுப ௫டு-உக, தை உச-கஅ, ரா உ-கச, [உ௩-௦, சதுர்த்தசி திதி, |
| 12 | 27 | க௩ | வியா | சது உ௩-க, மிரு ௫க-௩உ, சுப் ௫௩-உ௦, வணி உ௩-க, திவி ச-௫அ, பௌர்ணிமை விரதம் தத்தாத்ரேயஜயந்தி அன்ஹாந்தம், |
| 13 | 28 | கச | வெ | ○ உ௩-ச, திருவா ௫௩-௩௦, பிரா ௫௦-சஎ, பவ உ௩-ச, திவி உ-௫ச, திவி க௩-க௩, ஆருத்திராதர்சனம், கர்ப்போட்டாரம்பம், |
| 14 | 29 | சடு | சனி | பிர உச-கஉ, புனர் ௫௬-சஉ, மாஹே சக-கக, கௌ உச-கஉ, திவி உடு-௬, மார்க்கசீர்ஷ பகுளம், |
| 15 | 30 | க௬ | ஞா | துதி உ௬-சக, பூச ௬௦-௦, வை சஅ-௩உ, கர உ௬-சக, திவி கஅ-க௦, வைதிருதி சிராத்தம், |
| 16 | 31 | கஎ | திங் | திரு ௩௦-கஅ, பூச க-௫, விஷ்க சஅ-ச௦, விஷ் ௩௦-கஅ, ரா எ-கக, ஸங்கடஹர சதுர்த்தி, |

ஸ்ரீராமஜயம்.

# கல்ப தரு.

KALPA THARU.

அறிவு வளர்ச்சிக்கான ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புஸ்தகம் 1. Vol. I. பிங்களஞு மார்கழி-DEC., 1917. ஸஞ்சிகை 10. No. 10.

# PART I.

## THE FRUIT OF Mr. MONTAGU'S VISIT.

## மிஸ்டர் மாண்டேகு விஜயம் செய்ததன் பலன்.

நம்மாக்ஷிமைதங்கிய சக்ரவர்த்தியாாவர்களின் செங்கோற்சிறப்பு மிகுந்த ஆதிபத்தியத்தில் அமைக்கப்பட்டிருக்கும் மந்திராலோசனை சபையின்கண் ராஜகீய விஷயங்களை நன்குணர்ந்த நிபுணர்கள் மெம்பர்களாயிருக்கிறார்கள்; அவர்களுள் இந்திய சம்பந்தமான விஷயங்களைக் கவனிக்கும் விற்பன்னர் மிஸ்டர் E. S. மாண்டேகு ஆவர். ஆங்கில பாஷையில் இவருக்கு செக்ரிடெரி ஆப் ஸ்டேட் (Secretary of State for India) என்று பெயர். இந்தியாவில் ராஜீயசீர்திருத்தங்கள் வேண்டுமென்று பெருங்கூக்குரல் ஏற்பட்டிருக்கும் இச்சமயத்தில் பலர் பலவகையான அபிப்பிராயங்களைச் சொன்னபோதிலும் நேரில் பார்த்தறிவதற்கு எதுவும் ஈடாகாதென்று மதித்து இந்தியாமந்திரியாரான மிஸ்டர் மாண்டேகு தம் அபிப்பிராயத்தைத் தம் நண்பர்களிடம் தெரிவித்து இந்தியாவுக்குப் புறப்பட்டு வந்தார். இந்தியமந்திரி ஸ்தானம் வகித்த எவர்களும் இதுவரையில் இம்மாதிரி தம் உத்தியோக காலத்திற்குள் இங்கிலாண்டிலிருந்து புறப்பட்டுவந்ததில்லை. எனவே இந்தியாமந்திரியாக உத்தியோகம் வகித்திருக்கும் ஒரு கனவான் அவ்வுத்தியோகப்பற்றுதல் இருக்கும் காலத்திற்குள்ளாகவே இங்கிலாண்டி

லிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டுவந்தது இதுவே முதல் தடவையாகும். இந்தியாமந்திரியார் இந்தியாவுக்கு வந்தார் என்றதனால் ஒவ்வோர் இடத்திற்கும் விஜயம் செய்ய ஸாத்தியமாகும் என்றர்த்தமல்ல; பிரதான பட்டணங்களுக்கு அவர் விஜயம் செய்ததில் நம் சென்னைமாநகரமும் ஒன்று. பம்பாய், டெல்லி, கல்கட்டா இந்நகரங்களுக்கு வந்த அவர் சென்னைமாநகருக்கும் வந்து ஒருவாரகாலந் தங்கி முக்கியமாயுள்ள பொதுஜன சங்கங்கள் சிலவற்றிற்குப் பேட்டிகொடுத்து அச்சங்க மெம்பர்கள் அளித்த வந்தனோபசார நல்வரவுப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்டதுடன் பிரமுகர்களாயினோர் சிலர்க்குத் தனி பேட்டியுங்கொடுத்துக் கலந்து பேசி, ராஜீய விஷயங்களின் போக்கு இத்தன்மையதென்பதையும், இந்தியாவுக்கு இச்சமயம் தேவையாயிருக்குந்திருத்தங்கள் இன்னின்னவையென்பதையும் உணர்ந்து சென்றார். அவர்மட்டும் விஜயம் செய்தாரென்று நினைக்கவேண்டாம். ராஜப்பிரதிநிதியாரான லார்டு செம்ஸ்போர்டும், லார்டு டெனோமூர், பாபு பூபேந்திரநாத்பாஸு, பார்லிமெண்ட் மெம்பர் ராபர்ட்ஸ் முதலானவர்களும் வந்திருந்தார்கள். ஒருவாரகாலம், அதாவது, டிஸம்பர் மாதம் 14-ந் தேதி முதல் 22-ந் தேதிவரை நம் சென்னை மிகுந்த கோலாஹலமாகவேயிருந்தது.

### இந்தியரது அபிமானி.

அன்பும் அருளும் கருணையும் கடாக்ஷமும் நிறைந்து ததும்பும் புருஷோத்தமரான மிஸ்டர் மாண்டேகு இந்தியாவின் அபிவிருத்தியிலும் இந்தியப் பிரஜைகளின் க்ஷேமத்திலும் விசேஷ அக்கரைகொண்டவர்; அதற்கு அவர் செய்திருக்கும் பல்வேறு காரியங்களே போதியசாக்ஷியமாகும்; இம்மாதஞ்சஞ்சிகையில் யாமெடுத்த முதல்வியாசம் நந்தேகிய க்ஷேமத்தை பொறுத்த நற்றுறையில் இருக்கவேண்டுமென்னும் அபிலாஷை நமக்கு மிகுந்திருந்தமையினாலேயும், அதே அபிலாஷையைத்தாங்கி முப்பத்து மூன்றுகோடி ஜனங்களின் க்ஷேமத்தைத் தம் ஹிருதய கமலத்தில் பதிந்திருக்கும்படியான பொறுப்பை வகித்து இந்தியா மந்திரியார் தம் ஜன்மதேசத்தினின்றும் புறப்பட்டு நம்மிஷ்ட கஷ்டநிஷ்டூரங்களையுணர இந்தியாவுக்குப் புறப்பட்டு வந்திருப்பதனாலேயும், அக்கனவானைக்குறித்தே இரண்டொரு வார்த்தை இங்குசொல்லப் புகுந்தோம். மிஸ்டர் மாண்டேகுவிடம் இந்துமகாஜனங்களுக்கு விசேஷ பிரியம் ஏற்பட்டுவிட்டது; விசேஷ நம்பிக்கையும் ஏற்பட்டுவிட்டது; பற்றுதலும் உண்டாகிவிட்டது; இதற்கெல்லாம் காரணம் மிஸ்டர் மாண்டேகுவிடம் சுபாவத்திலேயே பொதிந்திருக்கும் தாராள சிந்தையும் தயாள குணமுமேயாகும். இந்தியாமந்திரியார் சமீபத்தில் நடந்துகொண்டவிதமும், அவர் செய்திருக்கும் அரும்பெருங்காரியங்களும், அவர்பால் இந்தியர்க்கு அதிகபிரியமும் நம்பிக்கையும் இருக்கும்படி செய்தன. இத்தகைய கனவானைக்குறித்து நம்மவர் தெரிந்துகொள்ள விரும்புவரெனக்கருதி சுருக்கமாக இதனடியில் நமக்குத் தெரிந்தவரையில் அவரைக்குறித்து எழுதியிருக்கிறோம்.



### மிஸ்டர் மாண்டேகுவின் அபூர்வ சக்தி.

1879-ம் ஆண்டில் மிஸ்டர் மாண்டேகு, லார்ட் ஸ்வெய்த்லிங் என்ற பிரபுவின் இரண்டாவது புதல்வராகப் பிறந்தார். 'விரையொன்று போட சுரை யொன்று முளைக்குமா' வென்று நமது நாட்டில் ஒருபழமொழி வழங்குவதுண்டல்லவா? அதைப்போல மிஸ்டர் மாண்டேகுவின் அருமைத்தந்தை உயர்பதவியிலிருந்தவர் என்றே தெரிகிறது. அவர் வொயிட் சேபல் என்ற ஸ்தலத்திற்குப் பிரதிநிதியாகப் பார்லிமெண்டில் அமர்ந்திருந்தார். மிஸ்டர் மாண்டேகுவுக்கு வயது 38-க்கு மேலில்லை. மந்திராலோசனை ஸபையிலிருப்பவர்களுக்குள் இவரே வயதிற்குறைந்தவராவர். இவ்வளவு இளவயதிலே பொறுப்பேறப்பெற்ற ஸ்தானத்தை வகிப்பது ஸாமான்யமல்ல. உலக அனுபவமும் பெரியவர்களுடைய ஆசீர்வாதபலனும், நண்பர்களின் நற்சகவாஸமும் இருந்தாலன்றி, பொறுப்பேறிய ஸ்தானத்தைத் திறமையுடன் வகிக்கமுடியாது; மிஸ்டர் மாண்டேகுவிடமோ எல்லாக்குணங்களும் அமைந்திருக்கின்றன. அவர் தம் இளமையைக் கேம்ப்ரிட்ஜு யூனிவர்ஸிடியிலும் ட்ரினிடி காலேஜிலும் கழித்துக்கல்வியில் அக்கரையும் அபிருசியும் காட்டி விஷயங்களை உள்ளாராய்ந்து நோக்குந் தன்மை தமக்கு உண்டென்பதைப் பலவிதங்களிற் காட்டியிருக்கிறார். யூத வம்சத்தைச்சார்ந்தவர் ரைட் ஆனரபில் மிஸ்டர் மாண்டேகு; அவரது முன்னோர்கள் யூதர்கள். யூதர்களாயினோர் விவகாரங்களிலும் லேவாதேவி விஷயங்களிலும் மகா கண்டிப்புடையவர்கள். இதற்கு நிதர்சனமாக ஆங்கில கவீந்தரும் ஒப்புயர்வற்ற மெய்ப்புலவருமான வில்லியம் ஷேக்ஸ்பியர் என்ற கவிசிரேஷ்டர் எழுதிய நாடகங்களில் ஒன்றான "வாணீபுர வணிகன்" என்னும் பெயர் வாய்ந்த நாடகத்தின்கண் ஷைலாக் என்னும் யூதனது நடவடிகளைக்குறித்து நிதர்சித்திருப்பதைச் சற்று கவனித்துப்பாருங்கள். அதை வாசிப்போன் எவனுக்கும் யூதர்களாயினோர்க்கு ஈவு, இரக்கம், பச்சாதாபம், தயை, தாக்ஷண்யம், கருணை, அனுதாபம் முதலான அம்சங்கள் பூஜ்யமாயிருக்குமென்று புலப்படக்கூடும்; அம்மாதிரியல்ல நமது மாண்டேகுவிடம். அவர் யூதஜாதியினராயினும், அன்பே ஓர் உருவெடுத்துவந்த உத்தமராக விளங்கின காரணம்பற்றி காலேஜிலும் மற்ற ஜனங்களிடமும் அவருக்கு ஆசக்தி அதிகமாயிற்று; தாராள சிந்தையும் பரோபகாரமும் வாய்ந்தவர்; அவர் கலாசாலை மாணவராயிருந்தபோதே கேம்ப்ரிட்ஜு யூனியனுக்குப் பிரெஸிடெண்டாயுமிருந்தார். அங்கிருந்து மெதுவாக அவரது திறமையை யுணர்ந்த ஸ்தலவாசிகள் அவரைத் தம் ஸ்தலப்பிரதிநிதியாகத்தெரிந்தெடுக்க, அவர் கேம்ப்ரிட்ஜ்ஷைர் என்ற ஜில்லாவுக்குப் பிரதிநிதியாகப் பார்லிமெண்டில் ஸ்தானம் பெற்றார்; அவரது அபூர்வசக்தித்திறமையையும் விஷயவாராய்ச்சியிலுள்ள ஊக்கத்தையும் கல்வியின் முதிர்ச்சியையும், அச்சமயம் பிரதமமந்திரியாராயிருந்த மிஸ்டர் ஆஸ்குவித் நன்றாயறிந்து அவரைத் தம் பார்லியமெண்டரி பிரைவேட் செக்டரியாக அமர்த்திக்

கொண்டார். நான்கு வருஷகாலம் மிஸ்டர் மாண்டேகு இந்த உத்தியோகம் வகித்துப்பிறகு இந்தியாமந்திரியாருக்கு உதவியாயிருந்து வேலை பார்த்து வந்தார். இந்தியாவைப் பொறுத்த விஷயங்களைத் தாம் கவனிக்க நேர்ந்த காலத்து இந்தியரைக் குறித்தும் தாம் அறியவேண்டுவது அவசியமென்று அவருக்குத் தோன்ற அதன்பிரகாரமே, அவர் இந்தியாவுக்கு ஒரு முறை வந்துவிட்டுப்போனார். இப்படி இவர் வந்துபோனது ராஜாங்க செலவிலல்ல; தம் சொந்த செலவிற்றான்; அங்ஙனம் அவர் வந்திருந்த காலத்தில் இத்தேச மகாஜனங்கள் பலரோடு அவர் நெருங்கிப்பழகும் சந்தர்ப்பங்கள் பல வாய்த்தன. இந்தியர் இயற்கையிலேயே இடைஞ்சற் குணமில்லாதவரென்பதையும், ஸாப்தீகரென்பதையும், ஏதேனும் ஒருவிஷயத்தில் தாம் நன்மை செய்யக்கடமைப் பட்டவரென்பதையும் அவர் நன்கு தெரிந்துகொண்டார்; கொண்டதோடுமட்டுமா? இங்கிலண்டில் ஒருசமயம் அவர் பேச நேர்ந்தபோது தம்முள்ளத்துணர்வைப் பரிஷ்காரமாகவே வெளிவிடுத்துக்கூறினார். அப்படி அவர்' கூறினபோது இந்திய விஷயங்களையும் இந்திய ஜனங்களின் க்ஷேமத்தையும் பற்றிய அம்சங்களைக்கவனிக்கும் அதிபரான இந்தியாமந்திரியாக மிஸ்டர் மாண்டேகு வருவரென்று எவரும் நினைத்ததாகத் தெரியவில்லை; அதவாத் இந்தியாமந்திரியாக உயர்ந்தாலும், அப்பதவியிலிருந்துகொண்டே இந்தியாவுக்கு வருவரென்று எவரும் நினைத்திருக்கமாட்டார். ஆனால் இந்திய ஜனங்கக்கோரிக்கையை ஒருவாறு நிறைவேற்றவேண்டுமென்னும் மனோகற்பிதஞ்செய்துகொண்ட மிஸ்டர் மாண்டேகு நம்மேன்மை தங்கிய ராஜப்பிரதிநிதியாரது அழைப்புக்கிணங்கி, இந்தியாவுக்குத் தம் நண்பர் சிலரோடு புறப்பட்டுவந்து இந்தியரது அபீஷ்டங்களை நேரிற் கேட்டுத் தம்மாற் கூடியவரையில் அந்த ராஜீய சுதந்தரங்களை யளிக்கும் நோக்கத்துடனேயே சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறார். இப்போதிருக்கும் பிரிடிஷ் மந்திராலோசனை சபையிலிருக்கும் மந்திரிகளுக்குள் மிஸ்டர் மாண்டேகுவே வயதிற் சிறியராவர். இவ்வளவு சிறியவயதில் இவ்வளவு பெரும்பொறுப்பை இவர் வகித்துச் சீரும் சிறப்புமாக நிர்வகித்து வருவதை நிறக்கச்செய்யுமாறு ஸர்வேசுவரன் கிருபைபுரிவாராக!

## TEAR SHELL.

### கிழிக்குங்குண்டு—ஒரு நூதனமான வேடி.

‘காலாக்னி ருத்திரர்’ என்று நம் புராணாதிகளில் தாம் படித்திருக்கிறோம். ஆனால் நேரிற்பார்த்ததில்லை. ருத்திரரின் காலாக்னியானது ஒரு வஸ்துவின்மீது பட்ட மாத்திரத்தில், அவ்வஸ்து பஸ்மீகரமாகுந் தன்மைகொண்டது என்று அறிவோம். இது பண்டைக் காலத்திலிருந்து வழங்கிவரும் சித்தாந்தம். இக்கலியுகத்தில் அம்மாதிரியாவதை நேரிற்



கண்டோர் எவருமிலர். எனினும் உலகத்தையே அசைத்தாட்டிக் கொண்டிருக்கும் தற்போதைய ஐரோப்பிய யுத்தத்தில் போரை பொட்டிய புதிய புதிய அம்சங்கள் புலப்படுகின்றன; அவைகளை நவீனங்களென்று கூறாது மற்றொன்றும் சொல்லவியலாது. ராணுவபலத்தையே முழுமுதற் காரியமாகக் கருதும் ஜர்மானிய சக்ரவர்த்தியான கெய்ஸர், தம் நண்பர்களென்றும், உறவின் முறையோரென்றும், அயல் நாட்டாரென்றும், சார்பு தேசத்தவரென்றும், மதியாது கேவலம் ராணுவச் செருக்கினால் அகங்காரம் மேலிட்டு செய்யவொண்ணாக் காரியங்களை இப்பிரகிருதயுத்தத்திற் செய்துவருகிறார். தம் பகைவரென்று கங்கணம் பூண்டெதிர்வந்தவர்களை வேரறுக்கக் கருதி கெய்ஸரும் அவருக்கு ராணுவ பலமூட்டும் ‘உடுக்கடிக்கும்’ மந்திரிகளும் எவ்வெவ்விதமாகவோ சூழ்ச்சியான தந்திரோபாயங்களைச் செய்து வருகிறார்கள்.. அக்கினித் திராவகத்தை யூற்றுவது, எரிகுண்டு விடுவது, விஷவாயுவைப் பிரயோகிப்பது, கிணறுகளிலும் ஏரிகளிலும் விஷங்கலப்பது, விஷக்கிருமிகளைக் கொட்டுவது, ரம்பம்போன்ற ஈட்டிகளை மானுஷீகத் தர்மத்திற்கு விரோதமாக உபயோகிப்பது, கடலுக்குள் மூழ்கியிருந்து துளைவெடிவிட்டுத் தாக்குவது, ஆகாய விமானங்களிலிருந்து ‘வான டார்ப்பிடோக்கள்’ விடுவது, உண்மையான ஸோல்ஜர்களைப்போல பொம்மைகளுக்கு வர்ணமிட்டு நிறுத்திவைப்பது, இன்னுமிவை போன்ற பற்பல குயுக்திகளை ஜர்மானியர் கடந்த மூன்று வருஷகாலமாக அவலம்பித்து வருகிறார்கள். வந்தாலுமென்ன? நேசத்துருப்புகள், பகைவருடைய குயுக்திகளனைத்தையும் தம் தந்திரோபாயங்களால் கலைத்து வருவதையும் யாம் காண்கிறோம். ஒன்றுபோனால் மற்றொன்று என்பதுபோல ஜர்மானியர் என்னென்னவோ சாகசச்யாதிகளினால் தம்முயற்சியை ஈடேற்றும் வண்ணம் மென்மேலும் ஆச்சரியப்படத் தக்கவகையாக உபாயங்களை அலுப்புச் சலிப்பில்லாமற் செய்து வருவதாகக் காண்கிறது. உடனுக்குடனே நம்மவர்கள் அம்முயற்சிகளை நொறுக்குவதையும் பார்க்கிறோம். சமீபத்தில் ஜர்மானியர் போர்க்களத்திற்குக் கொண்டு வந்திருக்கும் பற்பல கருவிகளில் ஒரு நூதனமான வெடிவகையுஞ் சேர்ந்தது. அதற்குப் பெயர் ‘கிழக்கும் வெடி.’ அக்குண்டு வெடித்து அதிலிருந்து ஈயச்சிப்பல்கள் மனுஷ்யனுடைய சரீரத்தில் தைத்ததோ இல்லையோ, அக்கணத்திலேயே, சரீரத்தில் ஒருவித உணர்ச்சியும் எரிவும் வெடிப்பும் உண்டாகிறதாம். அதோடு அவ்வெடி வெடித்து அதனின்றுங் கிளம்பும் புகையைச் சுவாஸிக்கும் ஸோல்ஜர்களுடைய கண்களிலிருந்தும் மூக்கிலிருந்தும் நீர் தாரை தாரையாய் வடியுமாம். இம்மாதிரியான குண்டினில் என்னென்ன சேர்மானங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவென்று ஆங்கில சாஸ்திரீய விற்பன்னர்கள் ஆராய்ந்து பார்த்து மேற் சொன்ன வெடிகளில் மிளகு, மிளகாய்வைத்தல்போன்ற காரமான வஸ்துக்களின் காற்று வெடிமருந்துடன் சேர்த்து இக்குண்டுகளில் அடைக்கப்

பட்டிருப்பதாக அபிப்பிராயப்பட்டார்களென லண்டனிற் பிரசுரமாகும் "லான்ஸெட்" என்னும் பத்திரிகை கூறுகிறது. ஈதென்ன ஆச்சர்யம்! இவ்வெடியினாற் காயமுண்டவர்கள்கூட அதே அபிப்பிராயத்தை நாடுகின்றனர். குண்டு வெடித்ததும், அதிலிருந்து எழும்பும் புகையானது கார வஸ்துக்களின் வாயுவை யெழுப்பிப் புகையைக்கக்கி ஸோல்ஜர்களுக்குத் துன்பத்தை விளைவிக்கிறதென்றால், அக்குண்டுளில் அவ்விஷமும் காரமும் பொருந்திய காற்றினை எவ்விதம் பகைவர் அடைத்திருப்பர் என்பதைச் சிறிது ஊன்றிப் பார்க்கவேண்டும். ஆஸ்திரியா-ஹங்கேரியிலும், பவேரியாவைச்சேர்ந்த ஒரு பகுதியிலேயும் செம்மிளகு அபரிமிதமாகப் பயிராக்கப்படுகிறது. அவையனைத்தையும் ஜர்மானியர் கேவலம் வெடிகுண்டுகளுக்கே யுபயோகிக்கின்றனர் போலும்! மிளகு, மிளகாய் முதலியவைகளை உரலிற் போட்டிடித்துத் தூளாக்கி அதை ஜலத்தோடு கரைத்து நன்றாகக் காய்ச்சி, அதிலிருந்து எழும்பும் ஆவியை அப்புறமிப்புறம் போகவொட்டாது கண்ணாடிக் குழாய்கள் மூலமாக தூரத்திற் கொணர்ந்து வெடிகளிற் புகும்படி செய்கிறார்களாம். இப்போதைய அகோர யுத்தத்தின்கண் நிதர்சனமாக்கப் பட்டிருக்கும் பலவகைப்பட்ட போர்க்கருவிகளில் இக்குண்டுதான் (கிழிக்கும் வெடிகுண்டு தான்) பிராபல்பமாகப் பேசப்படுகிறதாம். அடாது செய்தால் படாதபாடு படவேண்டிவரும். அதையொப்ப மகா மதியூகமாய்க் கிழிக்கும் வெடிகுண்டினைக் கண்டுபிடித்து விட்டதாகப் பசப்பும் ஜர்மானிய இறுமாப்புக்காரர் கூடிய சீக்கிரத்தில் தாமே கிழிபட்டுப் போவது திண்ணம்.

## AMERICA'S ÆROPLANES.

## அமெரிகாவின் ஆகாயவிமானங்கள்.

யுத்தத்திற்கு வேண்டியிருக்கும் சகலவிதமான உபக்கிரமங்களில் ஆகாயவிமானங்களும் சேர்ந்தவை. தரைப்படை, கடற்படை என்பவைகளைப்போல ஆகாய விமானப்படை யென்னும் ஒரு பகுதியிருக்கிறதல்லவா? இப்போது மகா உக்கிரமாய் நடந்து வருவதும் உலகத்தையே அசைத்தாட்டிக் கொண்டிருப்பதுமான ஐரோபியயுத்தத்தில் ஆகாய விமானங்களால் உண்டாகும் பிரயோசம் செப்பத்தரமின்று; பகைவர்களுடைய ராணுவ நிலைகளைக் கவனிக்கவும், கவனித்தபிறகு தாக்கவோ வெடி தீர்க்கவோ அல்லது துப்பறியவோ, புகைப்பட மெடுக்கவோ செய்யவும், ஆகாய விமானங்களே பெரும்பாலும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. ஆகாயத்தை யளாவிநிற்கும் மதில்கள் ஒரேமைல் கணக்காக சுற்றும் வட்டமாயிருக்க, அதனுட்புறத்தில் பிறரறியாவண்ணம் வெடி மருந்துகளையோ அல்லது நவீனமான போர்க்கருவிகளையோ, தளவாடங்களையோ செய்து



வருவது இந்த யுத்தகாலத்தில் மிகவும் சகஜம். அவ்வளவு ரகஸியமாயுள்ள காரியங்களைப் போரிற் கலந்திருக்கும் கட்சியார் அறிவராயின், அவை நிறைவேறாவண்ணம் முயற்சித்து பங்கப்படுத்தவேண்டுமென்று கங்கணம் பூண்டிருப்பார்கள். பூண்டும் பிரயோசனமென்ன? போர்க்கருவிச்சாலை, வெடி மருந்துச்சாலை, போர்த்தளவாடசாலை ஆகிய இவைகளிருக்கு மிடங்களை நாடி சந்தேகிக்கப்படக்கூடிய எவனும் சமீபத்தில் அணுகவிடப்படமாட்டானென்றால், சத்துருத்துவம்வாய்ந்த திறந்தவர்க்கு அச்சாலையை யண்டுவது எப்படி ஸாத்தியமாகும்? காவற்காரர்களும் பாராக்காரர்களும் அச்சாலைகளுக்குள்ளும் வெளியுமிருப்பார்கள். மற்றும் அச்சாலையை யண்டாதபடி விதிவிலக்குகள் போட்டு மானுஷிகப் பிரயத்தனங்களாலாகக்கூடிய ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டிருக்கும். ஆகவே தரையில் நடந்து அவ்விடங்களுக்குச் செல்வது முடியாத காரியம்; மேற்சொன்ன தொழிற் சாலைகளாகட்டும், ராணுவ நிலையங்களாகட்டும், சமுத்திரக் கரையை யொட்டினாற்போலிருக்கும் பக்ஷத்தில், சமுத்திரத்தில் கப்பல்களை நிறுத்திக்கொண்டு, அவைகளிலிருந்து பீரங்கிகளைப் பிரயோகம் செய்யவும் கூடும். கடற்கரைக்கு வெகு தூரத்திற் கட்டப்பட்டு விசேஷ காபந்துகளுக்கு அது உட்பட்டிருக்குமாயின், அப்பேர்ப்பட்ட இடங்களுக்கும் போகும் வழி கடலினாலல்ல, கரையினாலல்ல; மற்றெப்படி? ககனமார்க்கமாகத்தான். சாஸ்திரீய விற்பன்னர்கள் இதை யறிந்தே புகைக்கூண்டு, ஆகாய விமானம், ஆகாயக்கப்பல் முதலியவைகளைக் கட்டவாரம்பித்தார்கள். ஆரம்பத்தில் இரண்டொன்றாக அத்திப்பூப் பூத்ததைப்போல இங்குமங்கும் ஏதோ ஒவ்வொன்று தோன்றினபோதிலுங்கூட, யுத்தம் உற்பவித்த பிற்பாடு இவை ஒன்றுக்குப் பத்தாகவும் நூறாகவும் அதிகப்படலாயின. போரிற் கலந்த வல்லரசுகள் ஒவ்வொன்றும் தத்தம் ஆகாய விமானப்படையை வைத்து நிருவகிப்பதே இதற்குப் போதிய சாக்ஷியமாகும். இப்போது அமெரிக்காவும் போரிற் சம்பந்தப்பட்டிருப்பது காரணமாக அது ஆகாய விமானங்களைக் குறித்து எத்தகைய முயற்சி யெடுத்திருக்கிறதென்பதை ஒருவாறாக ஆராய்வோம்.

சாஸ்திரீய வேலைகளில் விசேஷ முன்னேற்றம் அடைந்திருக்கும் அமெரிகாவுக்கு ஆகாய விமானங்கள் இல்லாமற் போகவில்லை யென்றாலும் பிரகிருத யுத்தத்தை முன்னிட்டுத் தம்தேச ஆகாய விமானப்படையைச் சீரும் சிறப்புமாகச் செய்யவேண்டுமென்று அமெரிகா கவர்ன்மெண்டார் கருதியிருக்கிறார்கள். அக்கருத்திற்கிணங்க இப்போது புதிய விமானங்களை நிர்மாணிப்பதற்கும், விமானிகளைத் தயாரிப்பதற்கும், மற்றும் விமானங்களிலிருந்து துப்பு அறிந்து சொல்லுவோரைப் பழக்குவதற்கும் தூரஸ்து செய்வோர்க்கு விமானங்களைப்பற்றிய கல்வி கற்பிப்பதற்கும் ஆக இவை யனைத்திற்குமாக அந்நாட்டுக் கவர்ன்மெண்டார் 640,000,000 டாலர்பணம்

செலவிட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். 1918-ம் வருஷம் ஜூன்மாத வாக்கில் சற்றேறக்குறைய 22,000 ஆகாய விமானங்கள் தயாராகக்கூடுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. முதல்தரமான பிரிடிஷ் ஆகாய விமானங்களையும் பிரான்சிய விமானங்களையும் அவை நிகர்த்துள்ளனவாம். இதுவே அமெரிகா யுத்தத்தில் முனைந்திருப்பதற்கு முதலாரம்பமாகும். காலம் ஆக ஆக மற்றும் வேண்டிய முஸ்தீப்புக்களுக்கு அது சிறிதும் பின் வாங்கமாட்டாது. இது விஷயமாக கண்டேம்பரேரி என்னும் வர்த்தமானப் பத்திரிகையில் மிஸ்டர் டி. எப். பார்மன் என்பவர் எழுதியிருக்கும் ஒரு வியாசத்தில் ஆகாய விமானங்களைக் குறித்துக் கூறியிருப்பதைச் சங்கிரஹமாக இதன்கீழ் தெரிவிக்கிறோம்.

அமெரிகா ஆகாய விமானங்களுக்காக அபரிமிதமாய்ப் பணம் செலவிடத்தயாராயிருப்பதில் குறைவொன்றுமில்லை. 22,000 ஆகாய விமானங்களை அமெரிகா கட்டிமுடித்துவிடுவதற்கும் ஆக்ஷேபமில்லை; அப்படியிருந்தும் ஒரே தடவையில் 22,000 ஆகாய விமானங்கள் களத்தில் தம் விமானங்களை நடத்துவது ஸாத்தியமாவென்பது தான் சந்தேகம். ராணுவ காரியங்களுக்கு உபயோகமாகும் ஓராகாயவிமானம் ரணரங்கத்திற்குப் போமாயின் பொதுவாக நான்கு மாதங்களுக்கு வேலை செய்யக்கூடுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கையில் ஒரே காலத்தில் 22,000 ஆகாய விமானிகள் ஸர்விஸிலிருக்கவேண்டுமிடத்து வருஷவாரியில் 66,000 விமானங்கள் கட்டப்படவேண்டும். ஆனால் அடுத்த 12-மாதங்களுக்குள்ளாக 22,000 விமானங்களை நிருமாணிக்கத்தான் அமெரிகா திட்டம் போட்டிருக்கிறது. அவ்விமானங்கள் தயாராயின், வேலையிலிருக்கக்கூடிய விமானிகள் 7000 பேருக்குமேலும் 10,000 பேருக்குள்ளுமாகத்தான் இருப்பார்கள். ஒவ்வொரு விமானத்திலும் அச்சூழ்ச்சிகளை யுணர்ந்தோர் மூவர் இருக்கவேண்டுவது அவசியமாகும். 22,000 மெஷின்கள் (விமானங்கள்) தயாராகுமாயின் ஏழாயிரம்பேர்களே வெகுவாய்விமானங்களை நடத்துவதற்குரியராவர்; இவர்களெல்லோரும் ஒரே இடத்தில் தங்கிச் சேவகம் புரிவது ஸாத்தியமல்ல; ஆகலால் உள்ளாராய்ந்து பார்ப்போமானால் துப்பறிவதற்கும் பகைவர்களுடைய ராணுவ நிலையங்களைத் தகர்ப்பதற்கும் மற்றும் ராணுவ காரியங்களைக் கண்ணுங்கருத்துமாகக் கவனிப்பதற்கும் உள்ள ஆகாய விமானப்படையில் ஒரு தோராயமாக ஐயாயிரம் பேர்களடங்கிய ஒரு படையை ஒரு வருஷத்தில் தயாரிக்கலாமென்று தொகுத்துச் சொல்ல முடியும்.



# PART II.

## SANITATION.

## ஆரோக்கிய விமர்சனம்.

### USES OF PRICKLY-PEAR.

### சப்பாத்திக் கள்ளியினுபயோகங்கள்.

கள்ளியில் கொடிக்கள்ளியென்றும் சப்பாத்திக் கள்ளியென்றும் இரண்டுவகைகளுண்டு. கொடிக்கள்ளிக்குச் சிற்சில ஜில்லாக்களில் கண்ணாடிக் கள்ளியென்று சொல்லுவதுமுண்டு. சப்பாத்தியில் வெண் சப்பாத்தியென்றும் செஞ் சப்பாத்தியென்றும் இருவகைகள் இருக்கின்றன. கொய்யாப் பழத்தில் வெண்கொய்யா, செங்கொய்யா என்றிருப்பது போலவும், ரோஜா புஷ்பத்தில் சிவப்புரோஜா வெண்மைரோஜா என்றிருப்பதுபோலவும், சப்பாத்திக்கள்ளியிலும் நாம் மேலே சொன்னபிரகாரம் இரண்டு வகைகளிருக்கின்றன. இச்செடி கட்டாந்தரையிலும் அடர்ந்த புதர்களிலும் சுனைகளிலும் தானாகவே முளைத்துப் பரவியிருப்பதை நம்மவர் பலர் பார்த்திருப்பார்கள்; ஆனால் அது அவ்வளவு தூரம் ஸர்வ ஸாதாரணமாக விருந்தும், அதன் உபயோகம் அபரிமிதமானதென்பதை நாம் சொல்லாமலிருக்கக் கூடவில்லை. இவ்வுண்மையை யறியாதவர்கள் சப்பாத்தி முழுவதிலும் முள்ளாயிருக்கிறது என்று அருவருப்பும் அரோசகமும் காட்டுவது ஸகஜமேயாயினும், வைத்திய சாஸ்திர முணர்ந்த பெரியோர்கள் அச்செடியைத் திரஸ்கரிக்க மாட்டார்கள். ஜீவசத்துக்கு அச்செடி ஆதாரமாயிருப்பதாகப் பல வைத்திய சாஸ்திரிகள் மேற்றிசைத் தேசங்களில் பிரசங்கித்தும் வியாசமெழுதியும் வருவதைப் பார்க்கிறோம். முதன் முதல் சப்பாத்துக்கள்ளி தென்னமெரிகாவில் உற்பத்தியாயிற்றாம். அப்பிராந்தியங்களுக்குப் பிரயாணஞ் சென்றிருந்த தேசசஞ்சாரியொருவர், அச்செடியின் சிருஷ்டியைக்கண்டு வியந்து பரிசீலனை செய்தார். மனுஷ்ய கோடிகளுக்குச் சப்பாத்திப்பழம் ஆகாரமாகவுதவுவதையும், நன்செய் புன்செய் நிலங்களுக்கு அக்கள்ளி எருவாக உபயோகப்படுவதையும் அத்தேச சஞ்சாரி நன்காராய்ந்து மெதுவாக அதை ஐரோபாவுக்குக் கொண்டுவந்து பயிரிட்டார். ஐரோபியபூஸாரம் அச்செடிக்கு உகந்த தாயிருந்த காரணம்பற்றி அது மிகவும் ஏகமாய்ச் செழிக்க ஆரம்பித்துவிட்டது; பின்னர் அங்கிருந்து வைத்திய சாஸ்திரிகள் இந்தியாவுக்கும் கொண்டுவந்துவிட்டார்கள்; வேலி போட்டு வரம்பைக் காப்பதற்காகமட்டும் சப்பாத்திக்கள்ளி யேற்பட்டதென்று நமது அபிமானிகள் நினைப்பது தவறு; காலரா கண்டவனுக்கு நல்ல செம்பழமாயிருக்கும் சப்பாத்திப்பழத்தை யெடுத்து மேல் முள்ளைக்

கிள்ளி யெறிந்துவிட்டோ அல்லது தரையில் தேய்த்துவிட்டோ பிறகு பழத்தைப்பிதுக்கி உள்ளிருக்கும் கொட்டையை வேறுபடுத்தி நல்ல சுத்தமான வெண்மைத் துணியிற் போட்டுவடிக்கட்டிச் சிறிது சர்க்கரை கலந்தோ அல்லது சும்மாவோ உட்கொள்வது நலம். தேகாரோக்கியத்திற்குச் சப்பாத்தி இன்றியமையாதது வேப்பிலையைக் கண்டால் ஐயோ கசக்கும் என்று பலர் வெறுப்பதுண்டு; ஆனால் வேப்பிலையிலுள்ள சக்தி இத்தன்மையதென்று அறிவதில்லை. அதுபோலவே சப்பாத்திக் கள்ளியைக் கருதுவோருமுண்டு. பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பது பழமொழி. அதையொப்ப எங்குபார்த்தாலும் சப்பாத்திக்கள்ளி மயமாயிருப்பதை நாம் காணுகையில் ஈதென்ன தொந்தரவாயிருக்கிறதென்று சொல்லுகிறோம். ஆனால் அதன் மெய்யுபயோகத்தை யுணர்ந்தோர் அவ்விதம் ஒருபோதும் சொல்லமாட்டார்கள். மற்றோர் சஞ்சிகையில் இவ்விஷயத்தைச் சவிஸ்தாரமாக எழுதுவோம்.

---

# PART III.

## KNOWLEDGE ON AGRICULTURE, etc.

BY Mr. G. RAJAGOPAL,
*Late Editor, "South Indian Agriculture."*

### விவஸாய ஞானம்.

(267-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஏன் இவ்வாறு ஆழமில்லாமல் உழுது பலம் பூர்ணமாய் இல்லாமல் போகவேண்டும்?

சக்தியில்லாமையினாலேயே - மாடுகள் மூன்று அடி கிளப்பாது - மாடுகள் சக்திக்குத் தக்கப்படி பல்லாரில் 8-12 அங்குல ஆழ உழுவதுண்டு. குதிரைகட்டி ஓட்டும் ஆங்கிலேய நாட்டில் 8 அங்குல ஆழமும் - இன்ஜின்களால் ஒரு அடிவரையிலும் மண் கிளப்பப்படுகிறது - கேவலமாடுகளுள்ள தமிழ் நாட்டில் உழவும் மிகக்கேவலம் விளைவும் உழவுக்குத் தக்கபடியே.

மண் புலபுலப்பு.

மண் அணுக்கள் பருமனுக்குத்தக்கபடி அவற்றுள் அடைப்படும்காற்று வெவ்வேறு அளவுபடும். அணுக்கள் களிமண்ணில் இருப்பதுபோல் சிறியவையாயிருந்தால் காற்று சந்து சிறுக்கும். அவைகள் நீர்கோர்த்துக்கொள்ளும். காற்று நடமாட மார்க்கம் தப்பும் - காற்று நடமாடாவிடில் பாக்டீரிய (Bacterea) என்னும் சிற்றுயிர் பிழைக்கமாட்டாது - வேர்களும் வளரமாட்டா. அப்போது செடிக்கு ஆகாரம் தப்பிப் போவதுடன் பல கெடுதிகளும் உண்டாகும். களர்நிலத்தில் இருப்பதுபோல் மண் அணுக்கள்



மிகவும் சிறப்பவையாயிருந்தால் பெய்யும் மழை மண் புரைச்சலில் செல்லாமல் மேலேயே வழிந்து ஓடிப்போம். ஆதலால் அப்படிப்பட்ட மண்ணில் பயிர் சீக்கிரத்தில் துவண்டுபோம். பின்னும் காற்று போகாமல் களிமண் புரைச்சலில் நீர் கோர்த்துக்கொண்டால் ரசாயன செயர்க்கையும் சிற்றுயிர் தொழிலும் நடந்தேறமாட்டா. அவ்வாறு தடைப்படுவது அனேக கெடுதல்களுக்குக் காரணம். உணவுக்கு உதவக்கூடிய ஸ்திதியில் உள்ள பொட்லுப்புக்கு வகைராக்கள் பிரிந்து சிகணவாளவாகி உதவாமல்போம். அதிகமாக நீரையே கோர்த்து காற்றுக்கு இடமே இல்லாத மண் குறைந்துபோம். இதனாலும் பல கெடுதிகள் உண்டு. ஆகவே மண் அணுக்கள் தன்மையை அனுசரித்து வளப்பமுண்டாகும். இவ்வளப்பம் காற்று கலந்திருக்கும் பக்குவமே.

ஆகவே காற்றுப்போதுமான கலந்திருப்பதே உழவின் முக்கிய கருத்து. எந்த முகாந்தரங்களினால் இவ்வாறு மண் அணுக்களில் காற்று போதுமானபடி சேருமோ அக்காரணங்களை குடித்தனக்காரர் அனுசரிக்க வேண்டியது. உழவும் எரு வடிகால் முதலிய சாதனங்கள் மண்ணில் காற்றுப் பிரமாணத்தைக் குறிக்கின்றது.

மண்ணில் இருக்கும் அணுக்களின் பருமனுக்குத் தக்கபடி சந்துக்கள் வேறுபட்டிருக்கும் நயமான மண்மணிகள் களிமண்ணில் மண் பருமனுள்ள மண்மணிகளும் மணல் சரளை மண்ணில் உண்டு. இம்மண்மணிகள் தளர்ந்தும் நெருங்கியும் கூட்டம் கூட்டமாக சேர்ந்து மிருக்கும் களிமண் உழப்பக்குவப்பட்ட சமயத்தில் மண் தளர்ச்சிபட்டிருக்கும் - ஒரே சாமான்கள்வெவ்வேறு கூட்டமாக பிரிந்து இருப்பதுமுண்டு - நஞ்சையாக உழுது உலர்த்தினால் மண்மணிகற்கள்போல இறுகிபோம்.

மண் ஒரேமாதிரி மணிகள் இருப்பதில்லை. அவை வெவ்வேறு பருமனுள்ளவை. இவ்வாறு அணுக்களின் பருமனுக்குத் தக்கபடி அமெரிக்கர் பின்கண்டபடி மண்ணைப் பிரிக்கிறார்கள்.

| பெயர் | அங்குலம் | | | |
|---|---|---|---|---|
| கல்சிலம் | இரண்டு அங்குல மேல்பட்ட மணிகள். | | | |
| பெரும் சின்வல் சிலம் | 2 | முதல் | $1\frac{1}{4}$ | அங்குலம் |
| மத்தியம் | $\frac{1}{4}$ | ,, | $\frac{1}{12}$ | ,, |
| நயமான | $\frac{1}{12}$ | ,, | $\frac{1}{25}$ | ,, |
| பெரும் மணல் | $\frac{1}{25}$ | ,, | $\frac{1}{50}$ | ,, |
| மத்திய மணல் | $\frac{1}{50}$ | ,, | $\frac{1}{100}$ | ,, |
| நயமான | $\frac{1}{100}$ | ,, | $\frac{1}{250}$ | ,, |
| நொய்மணல் | $\frac{1}{250}$ | ,, | $\frac{1}{500}$ | ,, |
| வண்டல் | $\frac{1}{500}$ | ,, | $\frac{1}{5000}$ | ,, |
| களிமண் | | | $\frac{1}{5000}$ | கீழ் |

இதில் மணிகள் சிறியவைக்குத் தக்கபடி பிரிவுகள் அதிகப்பட்டு இருக்கின்றன.

மணல் ஒட்டுவதில்லை - வண்டல் வெண்ணெய்போல இருக்கும். களிமண் மாவாக இருக்கும். நனைந்தால் பிசுபிசுப்பு தட்டும், உலர்ந்தால் கல்போலாகும் - நஞ்சை சேருவது களிமண்ணே. மிஸ்ரமமண் தக்கப்படி சேருகாது.

மண்ணிற் மணிகளின் பருமனுக்குத் தக்கபடி காற்று அதனுள் பொருந்தும் பெருமணிகள் உள்ள மணலில் இடைவெளி அதிகமுண்டு. பல அளவுள்ள கோலிகுண்டுகளும் துப்பாக்கி ரவைக்களும் கலந்திருக்கும் பக்ஷத்தில்இடைவெளிகளிலும் அதற்கேற்ற குண்டுகள் பொருந்தியிருக்குமாதலால் இடைவெளி குறைவும். மண்ணிலும் இவ்வாறே இடைவெளிகள் உண்டு.

ஆகவே மணல் நிலமென்றும் களிமண் என்றும் வண்டல் என்றும் இவைகள் பலவிதமாய்க் கலந்த மிஸ்ரம நிலமென்றும் வழங்குவதுண்டு.

பின்னும் மணிகளின் தன்மையாய் அனுசரித்து புகையிலை நிலமென்றும் புல் நிலமென்றும், தோட்டக்கால் நிலமென்றும் சொல்லுவதுண்டு.

## CULTIVATION OF CHILLIES.

BY Mr. K. P. SESHADRI AIYANGAR,
(*Teacher, Muthiyalpet High School, Madras.*)

### மிளகாய் பயிரிடுதல்.

இச்சென்னை ராச்சியத்தில் ஜனங்கள் தங்கள் போசனோபயோகார்த்தம் விருத்தி செய்யும்படியான தோட்டப்பயிர்களில் மிளகாய்ப்பயிர் மிகவும் முக்கியமானது. இந்த ராஜதானியில் சுமார் மூன்றுலக்ஷம் ஏக்கராக்களுக்குக் குறைவில்லாமல் மிளகாய் பயிரிடப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

### எத்தனை விதம்?

மிளகாய்கள் அநேக விதமானவை. அவைகளில் முக்கியமானவை இரண்டு: ஒன்று நீளமானது; மற்றொன்று குட்டையானது. குட்டை மிளகாய் சாதாரணமாகப் பச்சையாகவே உபயோகப்படுத்தப்படுகிறது நீள மிளகாய் செடிகளிலேயே பழுக்கவிடப்பட்டு உலர்ந்தபிறகு கடைகளில் விற்கப்படுகிறது. நீளவகையிலேயே இரண்டு தினுசுகள் இருக்கின்றன: ஒன்று மெல்லிய தோலுடனும், மற்றொன்று தடித்த தோலுடனும் ஆக இரண்டு விதங்கள் இருக்கின்றன. தடித்த தோலுள்ள மிளகாய் காரக் குறைவானது என்று கருதப்படுகிறது. இவைகள் தவிர, மற்றொரு தினுசு இருக்கிறது. அது மிகவும் சிறியது. அதை அதிகமாகப் பயிரிடுவதில்லை அதை பம்பாய் ராச்சியத்தில் "லாவன்ஜி" என்பார்கள். அது மிகவும் காரமுள்ளது. மற்றொரு விதமான "குடைமிளகாய்" என்பது சர்வ சாதாரணமாகத் தஞ்சாவூர் ஜில்லாவில் பயிரிடப்பட்டு வருகிறது. அது எல்லாவற்றிலும் காரம் மட்டாக இருக்கிறது. ஜனங்கள் அதை வெகுவாகக் காய்கறிகளைப்போல உபயோகப்படுத்துகிறார்கள். முன்சொன்ன



161403

மிளகாய் வகைகளெல்லாம் வீசை மணங்காக விற்கப்படுவர, இந்தக் குடைமிளகாய் மாத்திரம் ஆயிரத்திற்கு இவ்வளவு என்று எண்வகையாக விற்கப்படுகிறது.

### நாற்றுநட ஏற்ற நிலம் எது?

மிளகாய்ச்செடி நாற்றுவிடப்பட்டு, பிறகு நடப்படுகிறது. நாற்று விடுவதற்கு ஏற்ற நிலம் நன்றாகக் கொத்தியும் சமப்படுத்தியும் பாத்திகளாகப் பகுத்தும் இருக்கவேண்டும், சாதாரணமாக அந்தப் பாத்திகள் 6-அடி நீளமும், 3-அடி அகலமும் உடையனவாக இருக்கவேண்டும். ஒவ்வொரு பாத்தியிலும் ஒவ்வொரு கூடை குப்பை யெருவையும், ஒவ்வொரு கூடை சாம்பலையும் ஒன்றாய்ச் சேர்த்துப் போடுகிறார்கள்.

### விதைகள் விதைக்கும் விதம்.

ஒன்று அல்லது ஒன்றரை ராத்தல் எடையுள்ள விதைகளின் நாற்றுக்கள் ஒரு ஏகர் நிலத்தில் நடுவதற்குப் போதுமானவை. ஒரு ராத்தல் எடையில் 80,280-விதைகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. விதைகளை நன்றாக நிலம் முழுதும் பரவும்படி விதைத்து, புழுதியில் அவைகளை மறையும்படி செய்து, பாத்திகளைப் பிறகு பகுக்கவேண்டும். காலை மாலை இரண்டு வேளைகளிலும், விதைக்கப்பட்ட பாத்திகளெல்லாம் வைக்கோற் கூளத்தினால் சாதாரணமாக மூடப்படுகின்றன. பாத்திகளிலுள்ள ஈரமும் முளைகளும் சூரிய வெப்பத்தினால் தகிக்கப்படாதிருப்பதற்காக அந்தமாதிரி மூடிவைக்கவேண்டியது அவசியம்.

### நாற்று நடப்படும் விதம்.

நாற்றுக்கள் நடப்படவேண்டிய நிலத்தை ஆழமாகவும், கட்டி உருண்டை இல்லாமல் நன்றாகப் புழுதி கிளம்பும்படியாகவும் அநேக சால்கள் உழுதிருக்கவேண்டும். புன்செய் நிலத்தில் மிளகாய் நாற்றை நடும் சமயத்தில், ஒருகை நன்றாக மட்கின எருவை அடியில் வைத்து, அதன்மேல் நாற்றை நடவேண்டும். நன்செய் நிலத்தில் நடும் மிளகாய்ப் பயிருக்கு எருவு புழுதியிலேயே கலந்துவிடவேண்டும். நிலத்தை உழுவதற்கு முன்னமேயே எருவை அதில் கொட்டவேண்டும். அப்படிச் செய்வதுதான் சிறந்தது; ஏனெனில், உழும்போது நிலம் முழுவதற்தும் எருவு பரவுகிறதல்லாமலும், புழுதியிலும் கலந்துகொள்ளுகிறது. ஒவ்வொரு ஏகருக்கும் 20-வண்டி குப்பை எருவாவது, அல்லது 20-வண்டி நகர் எருவாவது கொட்டவேண்டும். நன்செய் நிலத்தில் பயிரிடுவதற்குப் பாத்திகளாகவாவது, அல்லது வெற்றிலைக்கிடங்கு மாதிரியாகவாவது ஏற்படுத்தினால்தான் நீர் பாய்ச்சுவது மிகவும் சுலபமாக விருக்கும். நாற்றுக்களெல்லாம், விதைத்த 4 வாரமுதல் 6 வாரத்திற்குள் நடுவதற்குத் தகுந்த பக்குவத்தை அடைகின்றன. அவைகள் அப்பொழுது, 6 அங்குலமுதல் 8 அங்குலம் வரையில் நீளமுள்ளவை

யாக இருக்கும். நாற்று நடவுக்கு ஒரு மந்தாரமான நாளாவது, அல்லது குளிர்ந்தநேரமான சாயங்காலமாவது ஏற்ற சமயமாகும்.

ஒரு அடிமுதல் மூன்றடிவரையில் இடம் விட்டுவிட்டு ஒவ்வொரு நாற்றாக நடவேண்டும். அப்படி இடம் விடுவது, நிலத்தையும் எருவையும் பொறுத்தது. நன்செய் நிலத்தில் நீர்பாய்ச்சிப் பயிரிடவேண்டுமானால், பாத்திகளைக் காட்டிலும் கிடங்குகளே சிலாக்கியமானவை. நாற்றுக்களெல்லாம் அந்தக் கிடங்குகளின் வரம்புகளுக்குப் பக்கங்களில் நடப்படவேண்டும். நடவுநட்ட பிற்பாடு களைபிடுங்கவேண்டும். புழுதியை இளகும்படி செய்ய எருப்போடவேண்டும். மழை அடிக்கடி பெய்துகொண்டிருந்தால், புன்செய்ப் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவது அனாவசியம். நன்செய்ப் பயிருக்குக் குப்பை யெருவையாவது, அல்லது கடலைப் பிண்ணாக்கையாவது, பூ அதிகமாக எடுப்பதற்காகப் போடவேண்டும். எவ்வளவு அதிகமாகப் பூவெடுக்கின்றதோ, அவ்வளவு அதிகமாகப் பலன் கிடைக்கும். நீர் கிரமமாகப் பாய்ச்சவேண்டும்: வாரத்திற்கு ஒருமுறையாவது, அல்லது 10-நாளைக்கு ஒரு முறையாவது பாய்ச்சவேண்டும். தென்னாற்காடு, சித்தூர், சேலம் முதலிய ஜில்லாக்களில் நீர் பாய்ச்சும் முறை அடிக்கடி வரும்.

பலன்தரும் சமயம்.

நாற்றுநட்ட மூன்றுமாதமானபிறகு மிளகாய் பறிப்பதற்குப் பக்குவதசையை அடைந்திருக்கும். புன்செய் நிலங்களில் பயிர்செய்த செடிகள் ஐந்துமுறை காய்கள்கொடுக்கும். நன்செய் நிலத்தில் அதைவிட அதிகமான தடவை காய்கள் பறிக்கலாம். இந்த மிளகாய்ச் செடிக்கு ஒரு வியாதி உண்டு. அந்த வியாதிகண்ட செடிகளின் இலைகள் சுருண்டுவிடும். இதற்குப் பரிகாரம் என்னவென்றால், நீர் பாய்ச்சாமலிருப்பதுடன், நன்றாகக் காயவிட்டுவிடுதலேயாம். பிறகு நீர் பாய்ச்சினால், நன்றாகக் கிளைக்கும்.

சேலவின் மதிப்பு.

பம்பாய் வியவசாய டிபார்ட்மெண்டிலிருந்து 1914-ம் வருஷம் வெளிவந்த 7-இலக்கமிட்ட சிறு புத்தகத்தில் மிளகாய் பயிரிடுவதற்குச் செலவாகும் தொகையை மதிப்பிட்டிருக்கிறார்கள்: புன்செய் நிலத்திற்கு 40-ரூபாய் செல்லுமென்றும், நன்செய் நிலத்திற்கு 75-ரூபாய் முதல் 175-ரூபாய் வரையில் செல்லுமென்றும் மதிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், இந்தமதிப்பு நமது ஜில்லாக்களுக்கு அதிகம்தான். இந்த மதிப்பில் 100-க்கு 30-வீதம் குறைத்துப் பார்ப்பதுதான் இந்த ஜில்லாக்களில் மிளகாய்ப் பயிர்செய்வதற்குத் தகுந்த மதிப்பாகும். 2,000 முதல் 2,500 ராத்தல் வரை நன்செய் நிலத்தில் மிளகாய் எடுக்கலாம். ஆனால், புன்செய் நிலத்தில் இதிலும் பாதிதான் எடுக்கலாம். பட்டணம் படியில் மிளகாயை அளந்து பார்த்தால், ஒருபடி மிளகாய் 7-பலம் மிளகாய்க்குச் சமானமென அறியலாம்.

கே. பி. சேஷாத்திரி ஐயங்கார்.



# COMMERCE AND INDUSTRY.

## வர்த்தகமும் கைத்தொழிலும்.

### MADRAS TABLE SALT.

### சென்னை கட்டி உப்பு.

மதிராஸில் வெகு மும்முரமாக இப்போது நடைபெற்றுவரும் தொழிற்பொருட்காட்சிக்குச் செல்லுவோர் நாம் மேற்சொல்லிய கட்டியுப்பைக் கவனித்து வராமலிருக்கமாட்டார்கள். என்ன அதிசயம்! உப்பின் விலை அபரிமிதமாய் ஏறியும் தணிந்தும் திரும்ப ஏறியும் வருகையில் அவ்வவுப்பைப் பற்றிய எவ்விஷயமும் மிகையாகாதென்றே இச்சமயத்தில் இவ்வஸ்துவைக்குறித்து எழுதப்புகுந்தோம். உப்பு மனுஷ்யகோடிகளுக்கு அத்தியாவசியமானது; ஸர்வ சாமான்யனாகவுள்ள கூலியுங்கூட தன் கஞ்சிக்கு உப்பில்லா விடத்துக் குடிக்கமாட்டான்; எனவே நாம் உட்கொள்ளும் பண்டத்தின் ருசி கெட்டுவிடும்; மற்றும் உப்பில்லாப் பண்டம் வயிற்றுக்குள்போன பிறகு சீக்கிரத்தில் ஜீரணமுமாகாது. இதையொட்டியே உப்பு எதற்கும் அவசியமானது. கருப்பு உப்பு என்றும் வெள்ளையுப்பு என்றும், கட்டியுப்பு அல்லது டேபிள் ஸால்ட் (table salt) என்றும் மூன்று வகைளுண்டு. கடைசியிற் சொல்லப்பட்ட டேபிள் ஸால்ட் என்பது வெளிநாடுகளிலிருந்து இங்கு இறக்குமதி செய்யப்படுபவை. இதற்குப் பதிலாக இவ்விடத்து உப்பையே ஏன் முன்னிடலாகாதென்று பலர் பலதடவைகளிற் சொல்லியிருக்கிறார்களாயினும் எவரும் அதைக்குறித்துப் பரிசீலனை செய்யவோ, பரிசீலனை செய்து அவ்விறக்குமதிச் சரக்குகளுடைய ஸ்தானத்தில் இவ்வுப்புக்களைவைத்து நிரப்பவோ முன்வந்தாரிலர். பொதுவாக இங்குள்ள ஐரோபியரும் மேனாட்டவர்களும் பாக்கெட் பாக்கெட்டாக விருக்கும் பொட்டளங்களிலும் புட்டிகளிலும் அடைக்கப்பட்டிருக்கும் உப்பையே பெரிதும் உபயோகித்து வருகிறார்கள். இத்தகைய கட்டி உப்பு இந்தியாவுக்குக் கடல் மார்க்கமாய் இறக்குமதியாவதன் மதிப்பு 3500 மணங்குகளுக்குக் குறைவில்லை. இப்போது கப்பற் போக்கு வரத்துக் கம்மிப்பட்டிருப்பதனாலே கட்டியுப்பு இது பரியந்தம் வந்ததுபோல அதிகமாய் வருவதற்குமியலாது. அனேகமாய் அது நின்றாலும் நின்றுபோகும்; ஆகவே உள் நாட்டு உப்பின் விலையேறி விட்டது. எவ்வளவுதான் உப்பு விலையேறி விற்றபோதிலும், அதை ஜனங்கள் உபயோகப்படுத்துவது நிற்குமா? நிற்கமாட்டாது. இங்கிலாண்டிலுள்ள செஷைர் (Cheshire) மாகாணத்தில் தான் பெரும்பாலும் கட்டியுப்பு செய்யப்படுகிறது. சென்னையிலும் முயற்சித்துப்பார்த்தபோது அந்த செஷையர் உப்பைப் போலவே கட்டியுப்பையிங்கும் செய்வது ஸாத்தியமாகுமென்று தெரியலாயிற்று; ஆனால் இறக்குமதி செய்யப்படும் உப்பின் விலைக்கும் இங்கு செய்யப்படும் உப்பின் விலைக்கு

சிறிது ஏற்றத்தாழ்வு இல்லாமலில்லை; இறக்குமதி யுப்பின் விலை கம்மி; இங்கு செய்யப்படும் உப்பின் விலை சிறிது ஏற்றம். என்றாலும் முயற்சி திருவினையாக்குமல்லவா? ஒருராத்தல் எடையுள்ள கட்டியுப்பு சீமையிலிருந்து வருமாயின் அதன் விலை 3-அணுவாக, இங்கு செய்யப்படும் உப்பு அதே மாதிரியான வகையில் ஒன்றேகால் அணுவாகச் செய்யச் சாத்தியமாகிறது. இது மேனாட்டு உப்பைக் காட்டிலும் புதிதாகவும் சமீபத்தில் வேண்டிய அளவு கிடைக்கக்கூடியதாகவும் இருக்கிறதென்பதை நம் தேசவாசிகள் செம்மையாக அறிவது அவசியமாகும். இதில் இன்னோர் விஷயமும் கவனிக்கப்படவேண்டும். உப்பு சுத்திகரிக்கும் பத்ததியே. கவர்ன்மெண்டார் உப்பை நிறையிற் கொடுக்க, சில்லரை வியாபாரிகள் அளவைகளால் அளந்து கொடுக்கிறார்கள். அளவைக்கும் நிறைக்கும் வித்தியாசமிருக்குமோவென்று யோசித்துப் பார்ப்போமாயின், நிறையின் மீது கட்டணம் விதிக்கப்படும் ஒருவஸ்துவை, அதன் அளவையை யாதாரமாகவைத்துக் கொண்டு சில்லரை வியாபாரி ஒருமணங்குக்கு எத்தனைபடிகளிருக்கின்றன வென்பதை ஒரு தோராயமாகக் கணக்கிட்டும் விற்பனை செய்துவருகிறான். இதைக்கண்டு உப்பு தயாரிப்பவனும் அம்மாதிரியே தயாரிக்கவும் ஏற்படுகிறது. நிறையில் விற்கப்படும் உப்பில் எவ்வளவு சுத்தமாயிருக்குமோ அவ்வளவு சுத்தமாக அளவையிற் கொடுக்கப்படும் உப்பு இருக்கமாட்டாதென்பதற்கு உப்பு வியாபாரிகள் தம் வியாபாரத்தில் லாபத்தையேக் கண்ணாகக் கொண்டிருப்பது போதுமான சாக்ஷியமாகும். இது காரணமாக உப்பைப் பொறுத்தமட்டில் எவ்வித அபிவிருத்தியும் துரிதமாகச் செய்யப்படக் காணோம். உப்பை வாங்கியுபயோகிப்போர்தான் இவ்விஷயத்தில் அக்கரையாயிருக்கவேண்டும். அசுத்தமான லேசாயுள்ள உப்பைக்காட்டிலும் கனமான உப்பே சுத்தமும் கலப்படமில்லாததுமாகும். ஆனதுபற்றி இவ்வுப்பை இப்போது மதிராஸ் பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருக்கும் மாதிரிகளைக்கண்டு நந்தேசவாசிகள் பெரிதும் உபயோகித்துப் பயனடைவாராக.

---

# PART IV.

## HINDU LAW.

## ஹிந்துலா.

(210-ம் பக்கத் தொடர்ச்சி.)

கே.—அந்த தீர்ப்புப் படிக்கும் அவள் நடக்கத்தவறினால் அவளை என்ன செய்கிறது?

ஜ.—ஷை தீர்ப்பின்படி பெண்சாதி நடக்கத்தவறினால் அவளை ஆறு மாதம் வரையில் ஸிவில் சிறைச்சாலையில் வைக்கவாவது அல்லது அவளுடைய



ஸ்திரீதனம் சொத்தை ஜப்தி செய்யவாவது அல்லது இரண்டும் செய்யவாவது கோர்டாருக்கு அதிகாரம் உண்டு. (இ. லா. ரி. 5 க. 500; இ. லா. ரி. 13 அல 126; இ. லா. ரி. 10 பம் 301.)

கே.—புருஷன் பெண்சாதியை விட்டு விலகியிருந்தால் புருஷனைச் சேர்த்துக் கொள்ள பெண்சாதி செய்யவேண்டியதென்ன?

ஜ.—பெண்சாதி புருஷன்பேரில் வியாஜ்ஜியம் செய்து தீர்ப்புப் பெற்றுக் கொள்ளலாம். (13 அல 126.)

கே.—பெண்சாதியை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளுவதற்காகச் செய்யும் வியாச்சியத்திற்கு காலாவதியுண்டா?

ஜ.—புருஷன் பெண்சாதி யென்ற சம்பந்தமானது அவர்கள் உயிருடன் இருக்கும் காலம் வரை விலகமாட்டாதாகையால் ஷை வியாஜ்ஜியங்களுக்கு காலாவதி கிடையாது. எப்பொழுது வேண்டுமோ அப்பொழுது செய்யலாம். (இ. லா. ரி. 13 அல 126.)

கே.—மேல் கண்ட பிறாது எத்தனை ரூபாய்க் காகிதத்தில் செய்யப் படவேண்டும்.

ஜ.—ஐந்து ரூபாய் முத்திரைக் கடுதாசியி (Stamp Paper)ல் பிறாது செய்யவேண்டும்.

கே.—பெண்சாதி வாங்கிய கடன்கள் புருஷனை கட்டுப்படுத்துமா? எந்தெந்த கேசுகளில் கட்டுப்படுத்தும்.

ஜ.—புருஷன் பெண்சாதிகள் ஒன்றாய் வாசம் செய்யும் காலத்தில் அவசியமான குடும்பச் சிலவுகளுக்காக பெண்சாதியால் வாங்கப்படும் கடன்களுக்கு புருஷன் கட்டுப்படவேண்டியது.

நியாயமான காரணமன்றி ஒருவன் தன் பெண்சாதியை விலக்கி வைத்திருந்தால் அவள் தன் காலக்ஷேபத்துக்காக புருஷன் பேரைக் கொண்டு ஏதாவது கடன் வாங்கினால் அந்தக் கடனையும் புருஷன் தீர்க்கக் கடமைப்பட்டவன் ஆவான். (1 ம. ஹை. கோ. ரி. 375.)

கே.—ஸ்திரீகள் எந்தெந்த ஸந்தர்ப்பங்களை வைத்து புனர்விவாகஞ் செய்துகொள்ளலாம்? அப்படி விவாகம் செய்துகொள்ளலாமென்பதற்கு சாஸ்த்ர சம்பந்தமான ஆதாரங்கள் ஏதேனும் உண்டா?

ஜ.—புருஷன் இறந்துபோய்விடுவது (2) தேசாந்திரம் போய் வெகு காலமாய் திரும்பி வராமல் இருப்பது (3) பும்ஸத்வம் இல்லாமல் இருப்பது (4) ஜாதி பிரஷ்டனாய்ப்போய்விடுவது. இப்பேர்ப்பட்ட கேசுகளில் புனர்விவாகம் செய்யலாமென்று நாரதருடைய ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. ப்ரௌடையாவதற்கு முன் புருஷனையிழந்த பால்ய விதவைகள் புனர் விவாகம் செய்துகொள்ளலாமென்று மனுஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறதாக தெரியவருகிறது. ஸ்திரீகள்

புனர்விவாகம் செய்துக்கொள்ளக் கூடாதென்பதற்கு பூர்வகாலகிரந்தங்களில் போதுமான ஆதாரங்களில்லாமலிருந்தாலும் இந்த யுகத்தில் ப்ராம்மணர் முதலிய உயர்ந்த ஜாதியார்கள் ஸ்திரீகளுக்கு புனர்விவாகம் செய்யக்கூடாதென்று செய்திருக்கும் ஏற்பாடு நெடுநாளாய் வழங்கிவருகிறது. சூத்திரர்களில் தாழ்ந்தவகுப்பைச் சேர்ந்த மறவர் தொட்டியர்கள் முதலிய ஜாதியார்களும் இலங்கைத் தீவிலுள்ள தமிழர்களும் விதவைகளுக்கு சாதாரணமாய் புனர் விவாகம் செய்கிறார்கள். (6 ம. ஹை. கோ. ரி. 129 ; 1 ம 226 ; 17 ம 479.)

கே.—எல்லா ஜாதி விதவைகளும் இஷ்டமானால் புனர் விவாகம் செய்து கொள்ளலாமென்று ஏதும் சட்ட திட்டங்களிருக்கின்றனவா ?

ஜ.—விதவை விவாகம் சட்டப்படி செல்லுமென்று இந்தியா கவர்ன்மெண்டு 1856-ம் ௵த்திய 15-வது ஆக்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

கே.—புனர் விவாகம் செய்துகொள்ளும் விதவைக்கு ஜீவனாம்சம், தாய் பாகம் முதலிய பாத்தியதைகள் இருக்குமா போய்விடுமா ?

ஜ.—புனர் விவாகம் செய்துகொண்ட விதவை முதல் புருஷனுடைய குடும்பத்திலிருந்தும் குலத்திலிருந்தும் நீங்கினவளாய் விட்டபடியால் அவனுடைய சொத்தில் அவளுக்கிருந்த சகல பாத்தியதைகளையும் புனர் விவாகத்துக்குப்பின் இழந்து விடுகிறாள்.

ஸந்தானம்.

விவாக சம்பந்தமான சங்கதிகளைச் சொல்லியாய்விட்டது. இனி விவாகத்தினால் உண்டாகக்கூடிய சந்ததி அபிவிருத்திக்குரிய சந்தானம் முதலியனவற்றைப் பற்றிப் பேசுவோம்.

கே.—சந்தானத்தை அபேக்ஷிப்பதின் காரணமென்ன ?

ஜ.—உலகத்தில் பிரஜாவிருத்தி யடைவதற்காகவும் அவரவர்களுடைய வம்சவிருத்திக்கும் அவர்களுக்கு வியாதி வார்த்திக திசை முதலியவை நேரிடுங் காலத்தில் அவரவர்களைப் போஷித்துக் காப்பாற்றவும், ஜீவதிசைக்குப்பின் உத்தரக்கிரியைகள் முதலியவற்றைச் செய்வதற்காகவும் அவரவர்கள் சம்பாதித்து வைத்த சொத்துக்களை அவரவர்களுக்குப் பின்வார்சுக் கிரமமாய் அடைந்து ஆண்டனுபவித்து அவர்கள் பெயரை விளங்கச் செய்யவும் ஆகிய லோகானுஷ்டானங்களைச் செய்யும் பொருட்டு ஒவ்வொருவரும் சந்தானத்தை யடையவேண்டியதாயிருக்கிறது.

கே.—மேல்கண்ட இவ்வுலக வாழ்க்கைக்குறிய அனுபோகங்களைத் தவிர சந்தானத்தினால் பரத்துக்கு ஆகவேண்டிய விஷயங்கள் ஏதேனும் உண்டா ?

ஜ.—சந்தானத்தை யெவன் அடைகிறானில்லையோ அவன் இகத்தில் தன்னை ஆதரிப்பாரின்றி வருந்துவதுடன் இறந்த பின்னும் "புத்" என்னும்



நரகத்தையடைகிறானென்று நமது ஹிந்து தர்ம சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது. அதுகாரணம்பற்றியே உத்பவிக்கும் ஸந்தானத்துக்கு (மகனுக்கு) "புத்திரன்" (புத் என்னும் நரகத்திலிருந்து விடுவிக்கிறவன் என்ற காரணப் பெயரும் கொடுக்கப் பட்டிருக்கிறது.)

(இன்னும் வரும்.)

---

# PART V.

## CO-OPERATION.

## கூட்டுறவு.

### கூட்டுறவு முயற்சியும் கல்வி அபிவிர்த்தியும்.

H. E. லார்ட் பென்ட்லண்டு துரையவர்கள் சென்னை முதல் கோவாபரேடிவ் கான்பரன்ஸை திறக்கும்பொழுது "கூட்டுறவின் அபிவிர்த்தியும், நல்ல நிலைமையும், கல்வியின் வளர்ச்சிக்குத் தகுந்தாற்போலிருக்கிறது. கூட்டுறவு மனிதர்களுடைய இருதயத்திலும் மூளையிலும் வேரூன்றவேண்டும் ********* நீங்கள் எல்லோர்க்கும் கல்வி போதிக்கவேண்டும். கூட்டுறவு இன்னதென்று அவர்கள் அறியும்படி செய்யவேண்டும்" என்று சொல்லியது, கூட்டுறவினர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

கல்வி ஞானம் இல்லாமல், கூட்டுறவு பரவ முடியாதென ஸர். ஹென்றி வுல்ப் துரையவர்கள் சொல்லியுள்ளார். கூட்டுறவு என்னும் பயிர் கல்வி ஞானம் உள்ள பூமியிற்தான் நன்கு வேரூன்றக்கூடும். கல்வியின் வாசனை கிஞ்சித்தேனு மில்லாதவர்களுக்கு கூட்டுறவு போதித்தால் கண்ணைக்கட்டி காட்டில் விடப்பட்டவர்கள்போல் தவிக்கிறார்கள் என்பதிற் சந்தேகமில்லை. கூட்டுறவு இன்னதென்பதை கல்வியில்லாத ஜனங்கள் அறிகிறார்களில்லை. கூட்டுறவை நடத்துவதற்கே சக்தியுமற்றிருக்கிறார்கள். ஐக்கிய சங்கம் விர்த்தியாவதற்கு மட்டுமேயல்லாது, ஐக்கிய சங்கம் ஸ்தாபனமாவதற்கே கல்வியின் ஞானம் ஜனங்களுக்கு வேண்டியிருக்கிறது. கல்வி இல்லாததால் கூட்டுறவு இன்னதென எத்தனையோ ஜனங்கள் அறிந்து கொள்ளவில்லை என்பதாக திவான் பஹதூர் ஆர். இராமசந்திரராவ் அவர்கள் சொல்லியிருக்கிறார்.

கூட்டுறவுச் சங்கம் வேண்டுமென்று ஜனங்கள் கோருவதற்கும், சங்கத்தைப் பரிபாலனம் செய்வதற்கும் ஜனங்களுக்கு கல்விவேண்டும். கல்வியின் ஞானம் ஜனங்கள் பெறப்பெற கூட்டுறவின் பயிர் நன்கு தழைக்கும். கூட்டுறவுச் சங்கத்தில் மெம்பராய்ச் சேர்ந்துள்ளவர்கள் எல்லோரும் படிப்பிக்கப்பட்டால் அல்லது படிப்பவர்களானால் கூட்டுறவு முறை இப்போதிருக்கும் நிலைமையைவிட எவ்வளவோ மடங்கு அதிகமாக உன்னத நிலையி

லிருக்குமென்று யாவரும் மறுக்கவல்லார். கூட்டுறவு இன்னதென்பதை அதிகமாய் அறியாதவர்கள் சங்கங்களில் பிரசிடெண்டாகவும், காரியதரிசியாகவும் இருக்கிறார்கள்.

நீந்தத் தெரியாதவர்கள் ஜலத்தில் தள்ளப்பட்டால் என்ன பாடு படுகிறார்களோ அம்மாதிரியே படிப்பில்லாமல் கூட்டுறவில் இறங்கியவர்கள் தற்போது அடைந்திருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்கள் செவ்வனே நடக்காததற்கு கல்வியில்லாததே காரணமென்று கூட்டுறவினர்கள் கண்டுகொண்டும் இவ்விஷயத்தைச் சற்றும் கவனியாதிருத்தல் மிகவும் பரிதபிக்கத்தக்க விஷயமே. ஐக்கிய சங்கங்கள் ஸ்தாபனமாகி சுமார் 13 வருஷங்களாகியும் கல்வி விஷயம் கொஞ்சமும் மனதிற்படவில்லை. இவ்விஷயத்தைப்பற்றி கூட்டுறவினர்கள் கொஞ்சமும் சிரத்தை எடுத்துக்கொள்ளவில்லை. 1914-15 வருஷத்தில் 115 சங்கங்களும், 1915-16 வருஷத்தில் 63 சங்கங்களும் சென்னை இராஜதானியில் மூடப்பட்டன. இதற்குக் காரணமின்னதென்று தீரவிசாரணை செய்வோமாகில் மெம்பர்களுடைய கல்வியின்மையே காரணமென்று கண்டு கொள்வோம். கல்வி விஷயத்தைப்பற்றி கூட்டுறவினர்கள் தக்க முயற்சி எடுத்துக்கொள்ளாத பட்சத்தில், கூட்டுறவால் எவ்வளவு நன்மை பயக்குமென நினைத்திருக்கிறோமோ அவ்வளவுக்கு நேர் விரோதமானவையே விளையுமென்பதிற் கொஞ்சமேனும் சந்தேகமில்லை.

கூட்டுறவு விஷயத்தை பிரபலப்படுத்தவும், கல்வியூட்டவும் வேண்டுமென்று சென்னை மாகாண முதல் கான்பிரன்ஸிலேயே இவ்விஷயம் கவனிக்கப்பட்டு ஒரு ஸப்கமிட்டி ஏற்படுத்தப்பட்டும் இது பரியந்தம் இவ்விஷயத்தைக் குறித்து யாதொன்றும் திருப்திகரமாய் செய்ததாகத் தெரியவில்லை.

கோதாவரி ஜில்லா இரண்டாவது கோவாபரேடிவ் கான்பிரன்ஸில் அக்கிராசனம் வகித்தபோது "கூட்டுறவில் கல்வி விஷயத்தைக் குறித்து இன்று அதிகமாகப் பிரஸ்தாபமொன்றும் வரவில்லை. அது மிகவும் முக்கியமானதோர் விஷயம். ஏனெனில் கூட்டுறவு இன்னதென்றும் அதனால் இன்ன நன்மைகள் விளையுமென்றும் கிராமவாசிகள் அறியாவிடில் கூட்டுறவு சங்கங்கள் வேண்டுமென்று அவர்களே கோறி முன் வருவார்களென்று நாம் எதிர்பார்க்க முடியாது. சங்கங்களினுடைய போதனைக்காகவென இவ்வருஷம் டிபார்ட்டுமெண்டார் சில துண்டுப்பத்திரிகைகளை பிரசுரஞ்செய்துள்ளார்கள்" என்பதாக ரிவினியூ செட்டில்மெண்டு கமிஷனர் ஆனரபில் L. E. பக்ளி துரையவர்கள் கூறியுள்ளார். டிபார்ட்டுமெண்டார் முன்பு பிரசுரஞ் செய்யப்பட்ட துண்டுப் பத்திரிகையாகிய "ஐக்கிய நாணயத்தின் பத்து விரல்" படிப்பில்லா ஜனங்களால் எப்படி அறியப்பட்டு பிரயோஜனமடைய முடியும். குருடன் முன்னால் எவ்வளவு விநோதமான



வேடிக்கை செய்யினும் அவனுக்கு என்ன பயன் விளைவிக்குமோ அதே பயன்தான் கல்வி ஞானம் சற்றுமே யில்லாதவர்களுக்கு இத்துண்டுப் பத்திரிகைகள் விளைவிக்கும்.

கூட்டுறவின் மூலமாய் கல்வி போதிக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறதே யொழிய பிரத்தியட்சமாய் ஒன்றும் செய்வதாகத் தெரியவில்லை. கொஞ்சமேனும் இவ்விஷயத்தைக் குறித்து சிரத்தை கொண்டிருப்பதாகவும் காணப்படவில்லை.

கோவாபரேடிவ் ரிஜிஸ்தராருடைய 1914-15 வருஷத்திய ரிப்போர்ட்டில் டிபார்ட்மெண்டாராவது அல்லது கௌரவ வேலை செய்பவர்களாவது கல்வி போதனை விஷயத்தில் என்ன செய்துள்ளார்களென்பது சொல்லப்படவில்லையென்றும், இனி அனுப்பப்படும் ரிப்போர்ட்டுகளில் இவ்விஷயத்தைப்பற்றி குறிக்கவேண்டுமென்றும் போர்டார் சொல்லியுள்ளார். 1915-16 வருஷத்தில் இவ்விஷயத்தைக் குறித்து விஸ்தாரமாயாவது விபரமாயாவது ரிஜிஸ்தரார் சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை. கவர்ன்மெண்டாரால் கிராமச் சங்கங்களுக்கு இலவசமாக பட்வாடா செய்யப்படும் ஜில்லா கெஜட்டுகளினால் மெம்பர்கள் கல்வி விர்த்தியாகுமென்று சிலர் கனவு காண்கிறார்கள். கூட்டுறவு வாஸ்தவமாகவே மெம்பர்களுக்கு பயன் விளையவேண்டுமானால் கூட்டுறவு இன்னதென்பதை மெம்பர்கள் அறியவேண்டும். ஐக்கிய சங்கங்களில் காணப்படும் பிழைகளுக்கெல்லாம் காரணம் "கூட்டுறவு இன்னதென்பதை மெம்பர்களுக்கு போதிக்காததே" என்று கோவாப்ரேடிவ் கமிட்டியாரே அபிப்பிராயங் கொண்டிருக்கிறார்கள்.

இங்கிலாந்து தேசத்திலும் மற்ற ஐரோப்பா நாடுகளிலும் கூட்டுறவு செழித்தோங்கியதற்குக் காரணம் "மெம்பர்களுடைய கல்வியும், அதன் மூலமாய் அவர்கள் அடைந்த கூட்டுறவு ஞானமும்," என்று கூட்டுறவு துறையில் இறங்கியுள்ளவர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம்.

கூட்டுறவு மெம்பர்களுக்கு கல்வி அவசியமென்றும், இந்த அவசியத்தைக் கவனிக்க யாதொன்றும் செய்யப்படவில்லையென்றும், ஏதாவது செய்வதாக சொல்லப்படுவதெல்லாம் ஏட்டுச்சுரக்காயே யொழிய கறிக்கு உதவக்கூடியது ஒன்றுமில்லையென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எல்லோர்க்கும் தெரிந்த விஷயம்.

இக்குறையை நீக்க கூட்டுறவு முயற்சிக்காரர்கள் எல்லோரும் கவனிக்க வேண்டியது அவசியமாகையால் கீழே குறிப்பிட்டுள்ள ஸ்கீம் பயன்படுமோவென ஆலோசிக்கத் தகுந்தது. சங்கங்களின் க்ஷேமநிதியில் 100-க்கு $1\frac{1}{2}$ விதம் பொதுநன்மை பண்டுக்கென்று செலவழிக்கப்படுகிறது. இத்தொகையை ஒவ்வொரு சங்கமும் ஒவ்வொரு காரியத்திற்கு உபயோகப்படுத்துகிறது. சில சங்கங்களுக்கு இத்தொகையை எவ்விதமாய் செல

வழிப்படுமென்றே தெரியாது. தவிர, இன்னும் ஐந்து அல்லது ஆறு வருஷங்களுக்கு அநேக சங்கங்களுக்கு லாபமேயின்றி நஷ்டமே வரும். அப்படியிருக்க பொதுநன்மை பண்டுக்கு இவைகள் ஒன்றும் செலவழிக்க முடியாது. தவிரவும் 100-க்கு 1½ வீதம் சேரும் தொகை மிகவும் சொற்பம். இதனால் அதிகப்பயன் விளையுமென்று எதிர்பார்ப்பது தகாது.

---

# PART VI.

## EDUCATION.

## கல்வி.

### MEDICAL INSPECTION OF SCHOOLS.

### பள்ளிக் கூடங்களின் வைத்திய பரிசீலனை.

(275-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸ்கூல்களின் வைத்திய பரிசீலனையின் பிரதான்யம் நன்றாகத்தெரிய வருகையில், அப்பரிசீலனை பணமுடை காரணமாகக் குந்தகப்படுவது சிறிதும் அழகல்ல, இங்கிலாண்டிலுள்ள கல்வி போர்டாரின் பிரதமமெடிகலாபிஸரான ஸர் ஜார்ஜ் நியூமான் சென்றவருஷத்து ரிப்போர்ட்டில் கூறியிருக்கும் இரண்டோரம்சங்கள் இங்கு குறிப்பிடத்தக்கவை; அவையாவன:—"இங்கிலாந்திலும் வேல்ஸிலும் பள்ளிக்கூடத்திற்குச் செல்லும் 60 லட்சம் குழந்தைகளில் நூற்றுக்குப் பத்து வீதம் சரியான ஆகார வசதியில்லாது கல்வியின் பலனையடைய வகையில்லாமலிருக்கிறார்கள். மற்றும் நூற்றுக்கு 10-வீதம் பிள்ளைகள் தம் தலையையும் உடலையும் அசுத்தமாக்கிக் கொண்டிருப்பதனாலே கல்வி நலம்பெற முடியாது தவிக்கிறார்கள். பின்னும் அதே தொகையினர் கண்ணொளி மழுங்கியதால் அவதிப்படுகின்றனர்; வேறு பலர் பல் வியாதியினால் வருந்துகின்றனர். காது, தொண்டை, நெறி வியாதிகளினால் நூற்றுக்கு 4 வீதம் அல்லற்பட்டு வருகிறார்கள். சர்ம வியாதி, தொற்று வியாதி, க்ஷயம் இவைகளால் துன்புறுவோருமிருக்கிறார்கள்" இதைக் கவனிக்கும்போது இந்தியாவில்மட்டும் என்ன அனுகூலமான நிலைமை யேற்பட்டிருக்கிறதென்று சொல்வது? ஆகவே ஸர் ஜார்ஜ் நியூமான் விதித்திருக்கிற பிரகாரம் இந்தியாவிலும் அவலம்பிக்கப்படுவது உத்தமமாகவிருக்கும்; அவ்விதிகள் எவை யெவையெனில்.—

(1) வைத்திய பரிசீலனை நடக்கும்போது ஒவ்வொரு வித்தியார்த்தியும் சரீரக் கூறையும் அவயவக் கூறையும் பற்றிப் பரீக்ஷிக்கப்படுவான்; எதிலேனும் கோளாறு இருப்பதாகத் தென்படுமாயின் அவன் வைத்தியச் சிகிச்சையில் வைக்கப்படுவான்.



(2) எந்தக் குழந்தையாவது சரியான போஷிப்பில்லாமலோ துர்ப்போஷிப்புக்குள்ளிடுபட்டோ இருப்பதாகத் தெரியவருமேயானால், அக்குழந்தைக்கு நல்ல ஆகாரம் கிட்டுமாறு போஷிக்கப்படும்; அசுத்தமாயிருக்கும் குழந்தைகள் சுத்திகரிக்கப்படும்.

(3) எக்குழந்தையாவது அசௌக்கியமாகவோ, வியாதியினாற் பீடிக்கப்பட்டோ, வேறு எக்கோளாறுகளினாலோ அவதிப்படுவதாகக் காணப்படுமேயானால், அக்குழந்தைக்கு உள்ளூர்க்கல்வி அதிகாரிகளாலாவது வேறுவிதமாகவாவது முதல் தரமான வைத்திய சிகிச்சை செய்யப்படும்.

(4) ஒவ்வொரு குழந்தையும் நல்ல காற்றோட்டமாயுள்ள ஸ்கூல் அறையிலாவது திறந்த வெளியாயிருக்கும் வேறிடத்திலாவது கல்வி பயிலுவிக்கப் படவேண்டும்.

(5) தினந்தவறாது ஒவ்வொரு குழந்தைக்கும் ஏதேனும் சரீரப் பயிற்சி இருந்துகொண்டிருக்கவேண்டும்.

(6) பள்ளிக்கூடத்திற்குப்போகும் வயதுள்ள எக்குழந்தையையும் சம்பாத்யமான வேலைகளில் அமர்த்தலாகாது.

(7) வித்தியார்த்தியின் தேகாரோக்கியத்தையும் வளப்பத்தையும் பெருக்கையும் கெடுக்கும்படியான தன்மையோடு ஸ்கூல் கட்டடமும் அதில் பயிலுவிக்கப்படும் போதனாமுறையும் இருக்கலாகாது.

இவை சாதாரண பிரேரணைகள்; என்றாலும் குழந்தைகளின் பராமரிப்பில் இவையனைத்தையும் நாம் கவனிக்கவேண்டும். சடுதியில் இவைகளை அமுலுக்குக் கொண்டுவருவது ஸாத்திய மல்லவாயினும் உள்ளூர் கல்வியிலாகா அதிகாரிகள் இவைகளில் போதிய கவனஞ் செலுத்தவேண்டுமென்பது எனது மனமுவந்த அபிப்பிராயம்."

ஸர் ஜார்ஜ் நியூமான் தீரவாராய்ச்சி செய்த பிறகே மேற்சொன்ன அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார் என்பதற்கு ஆக்ஷேபமில்லை. இங்கு லெப்டினெண்ட் கர்னல் தானவனும் தமது ரிப்போர்ட்டில் பள்ளியிலோதுவோருள் ஐந்தில் ஒரு பாகம் ஸ்கூல்களுக்கு வராது நின்றிருப்பதாகவும், அதற்குக் காரணம் க்ஷயரோகமென்று தாம் சந்தேகிப்பதாகவும் குறித்திருக்கிறாரல்லவா? ஆனதுபற்றி இப்பேர்ப்பட்ட நிலைமையில் ஸ்கூல்களில் வைத்திய பரிசீலனை செய்யப்படுவதைப் பணமுடை காரணமாக நிறுத்திவைப்பது உசிதமாக மாட்டாது. நம்மிந்தியா கவர்ன்மெண்டாரும் கல்வியிலாகா அதிகாரிகளும் ஸ்கூல்களில் வைத்திய பரிசீலனையிருப்பதன் அவசியத்தையும் பிரயோசனத்தையும் நன்றாயுணர்ந்து, அப்பரிசீலனையினால் பலன் உண்டாகும்படி அதை நிறக்கச் செய்வாராக.

ல. அனந்தய்யர்.

# PART VII.

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

### கீழ்தர நிலக்கரி.

உயர்ந்த ரகமான நிலக்கரியில்லாது தாழ்ந்த ரகமான நிலக்கரிவெட்டி எடுக்கப்படும் சுரங்கங்களுக்கு ரயில்வே வாகன்களை சப்ளை செய்வதில் சிறிது பிடித்துச்செய்ய வேண்டுமென்று கோல் கன்ட்ரோலர் ஆபீசர் விளம்பரம் செய்திருக்கிறாராம்.

### $2\frac{1}{2}$ ரூபாய் நோட்டுகள்.

ஒரு ரூபாய் நோட்டுகள் செலாவணிக்கு வந்தபொழுதே இரண்டரை ரூபாய் நோட்டுகளும் கூடிய சீக்கிரத்தில் முன் விடப்படுமென்று சொல்லப்பட்டதற்கிணங்க அடுத்த ஜனிவரிமாதம் 2-ந்தேதி கல்கத்தா, பம்பாய், மதராஸ் ஆகிய இந்த மூன்று நகரங்களிலும் $2\frac{1}{2}$ ரூபாய் நோட்டுகள் செலாவணிக்கு விடப்படும்.

ஒரு ரூபாய் நோட்டுகளுக்கு எவ்விதமான விதிகள் ஏற்பட்டு இருக்கின்றனவோ அவ்விதிகளே இந்த $2\frac{1}{2}$ ரூபாய் நோட்டுகளுக்கும் நடைபெறும்.

### கடற்படை வினிமாகமிடி.

லிவர்பூல் நகரத்து யார்டுமெயர், அட்மெரல் பியாடி என்னும் கடற்படை ஆபீஸருக்கு எழுதியதோர் கடிதத்தில் கடற்படைவினிமாகமிடிக்கு 1790 பவுண்டு நன்கொடை அளித்திருப்பதாக எழுதியிருக்கிறார்.

### ஸைன்ய ஸிக்னல்கள்.

கல்கத்தா ஹைகோர்ட்டு வக்கீலான மிஸ்டர். ஜி. ஸர்க்கார் அவர்கள் வங்காளத்திலிருந்து ஸைன்யஸிக்னலர்களை தயார் செய்து அனுப்பும் முயற்சியை வங்காள கவர்ன்மெண்டார் அங்கீகரித்து விட்டார்கள்.

### பம்பாய் சித்திரப் பொருட்காட்சி.

பம்பாய் ஆர்ட்டு சங்கத்தவரது 27-வது வருஷாந்த பொருட்காட்சி அடுத்த மார்ச்சு மாதம் 13-ந்தேதி பம்பாய் நகரில் திறக்கப்படுமென்று சமாசாரம் எட்டுகிறது.

### அமெரிகரின் தேசாபிமானம்.

அமெரிக்க ஐக்ய மாகாண மந்திராலோசனை சபையைச்சேர்ந்த மெம்பர்களின் 9 குமாரர்கள் அந்நாட்டு தரைப்படையிலும் கடற்படையிலும் சேர்ந்திருக்கிறார்களாம்.

### ஆதரணையிலிருக்கும் பைத்தியக்காரர்.

இங்கிலாந்திலும் வேல்ஸிலுமாக கவர்ன்மெண்டாரது ஆதரணையிலிருக்கும் சித்தஸ்வாதீனமில்லாத (பைத்தியம் பிடித்த) ஜனங்களின் ஸங்கியை 1,34,029. இது சென்ற ஜனவரிமாதம் 1-ந்தேதி எடுத்த கணக்கு.

### ஒரு ரூபாய் நோட்டு.

இது ஐந்து அங்குல நீளமும் $2\frac{3}{4}$ அங்குல அகலமும் கொண்டது. அதனுடைய வாடர்மார்க்கில் ஒன்றரை அங்குலமுள்ள இந்திய நக்ஷத்திரம் போன்ற சதுரக்குறி வலதுப்புற ஓரத்தில் காண்கிறது. இடது புறத்தில் ராஜிய அடையாளமான G. R. I. என்னும் எழுத்துக்கள் வாடர் மார்க்கிலேயே காண்கிறது. இக்குறிப்புக்கிழ் ஐந்து வரிகளோடுகூடின வாடர் மார்க் இடதுகை புறத்திலிருந்து ஆரம்பமாகி வலதுகைபுற நக்ஷத்ரம் அடைபட்டிருக்கும் சதுரம்வரையில் நீட்சித்திருக்கின்றது. நோட்டின் மத்தியில் ஆழ்ந்த சிவப்பிலும் சாதாசிவப்பிலும் க்ரவுண்டு வேலை செய்யப்



பட்டிருப்பதோடு இடதுபுறம் மேல்தலைப்பில் ஒருரூபாயில் காணப்படும் நம் சக்ரவர்த்தியாரது உருவமைப்பும் காண்கிறது. அந்நோட்டின் பின்புறத்தில், ரூபாயின் பின்புறத்தில் காணப்படுவதுபோல பூப்போட்ட உருவமைப்பு காண்பதோடு 8 தேசபாஷைகளில் ஒருரூபாய் என்றும் அதற்கு இடது புறத்தில் ராஜிய அடையாளம் க்ரீடம் சகிதம் அச்சிடப்பட்டிருக்கிறது. நோட்டின் முன்புறத்தில் வலது உச்சி மூலையிலும் இடது அடிப்புற மூலையிலும் ஒருரூபாய் என்று தடித்த எழுத்துக்களில் குறிக்கப்பட்டிருக்கின்றது.

### வேட்டை ஆடுவோரின் தப்பட்டைக் காரர்.

புருஷர்கள் அகப்படுவது அருமையாய் இருத்தலால் பற்பல காரியங்களை இச்சமயம் ஸ்த்ரீகள் செய்யும்படி நேருகின்றது. உதாரணமாக ஸ்கார்பரோ ஜில்லாவில் வேட்டையாடப் போவோருடன் செல்ல வேண்டிய தப்பட்டைக்காரர் புருஷராயிருப்பதற்கு பதிலாக ஸ்த்ரீகள் அவ்வேலையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்களாம்.

### ஒருயோக்கியன்.

அநேகர் யோக்கியராய் இருந்தும் பணத்தை பார்த்த மாத்திரத்தில் அயோக்கியராய் விடுவது உண்டு. எனவே பணத்தினிடத்தில் அவ்வளவு சக்தி இருக்கிறது. ஆக்குவதும் அதுவே. அழிப்பதும் அதுவே. சிற்சில சமயங்களில் பணத்திற்கு "ஆட்கொல்லி" என்று பலர், சொல்லுவதை நமது நண்பர்கள் கேட்டிருப்பார்கள். ஆனால் இக்கலியுகத்தில் யோக்கியர்கள் இல்லாமலிருக்கவில்லை ஹாரன்ஸி என்னும் நகரத்தில் ஒருவன் தெருவழியே போய்க்கொண்டிருந்தபோது 48 பவுன் நோட்டுகள் அடங்கிய பை யொன்றை கண்டெடுத்தான். அப்பையைப் பிரித்துப் பார்த்து அதன் உள்ளிருக்கும் தொகையை கண்டதும் இதை நாம் வைத்துக் கொள்வதா அல்லது அப்பையிற் குறிக்கப்பட்டிருந்த விலாஸத்தாரிடம் சேர்த்து விடுவதா என்றும் சிறிதுநேரம் அவனதுமனம் ஊசலாடியது. கடைசியாக அயோக்கியனாயிருந்து 1000 பவுன் சம்பாதிப்பதைக்காட்டிலும் யோக்கியனாயிருந்து 10 பவுன் சம்பாதிப்பதே மேல் என்ற மனோ நிச்சயத்துடன் அப்பையில் குறிக்கப்பட்டிருந்த விலாஸதாரிடம்நேராக சென்று பையை கொடுத்தான். சொந்தக்காரர் மிகுந்த சந்தோஷங்கொண்டு கொண்டுவந்தவனின் யோக்கியதையை மெச்சி 10 பவுன் இனும் கொடுத்தார்.

### யுத்தகால விலையேற்றம்.

யுத்தகாலத்தில் ஆகாராதி பண்டங்களின் விலை ஏறியிருப்பதை முன்னிட்டு தொழிலாளிகளுக்கு ஏற்கெனவே கொடுபட்டுவந்த வாராந்தக்கூலி விகிதத்தை 5 ஷிலிங்கிலிருந்து 7 ஷில்லிங்குக்கு உயர்த்த இங்கிலாந்திலுள்ள வில்லஸ்டின கௌன்ஸல் அதிகாரிகள் தீர்மானித்தார்கள். அவர்கள் அவ்விதம் தீர்மானித்தது வருஷவாரியில் எவ்வளவு ஆகிறதென்று கணக்கு பார்த்தபோது 7818 பவுன் ஆயிற்றாம்.

### ஒருதர்ம கைங்கர்யம்.

ஐ. வி. பிரிட்ஜைச்சேர்ந்த காலஞ்சென்ற மிஸ்டர். ஜே. ஜே. மெக் ஆண்ட்ரோ என்பவர் தமது ஜீவிய காலத்தில் விதம்விதமான குண்டுகளை சேகரம் செய்து வைத்திருந்தாராம். அவர் இறந்துபோன பிறகு அக்குண்டுகள் எதற்கென்று மதித்த அவரதுமனைவி அவைகளை விற்று அதனால் கிடைத்த 100 பவுனை டெலன்ஷேரிலிருக்கும் செஞ்சிலுவத்தவர்க்கு அற்பணஞ் செய்துவிட்டாளாம். என்னே! இந்த மாதின் பரோபகாரசிந்தை செஞ்சிலுவை சங்கமென்பது போர்க்களத்தில் காயம்கொண்ட ஸோல்ஜர்களுக்கு சைத்யோபசாரம் செய்யும் சங்கமென்க.

# PART VIII.

## MORAL STORIES.

## நீதிக் கதைகள்.

‘சரணமடைந்தவனை ரக்ஷி.’

எவனொருவன் மிகவும் கஷ்டப்பட்டு ஒன்றுந் தோன்றாதவனாகி ஒருவனை அண்டி ஐயா, நீயே தஞ்சம். என்னை இச்சமயம் காப்பாற்று, உன்னையன்றி வேறு துணைகிடையாது என்று காலில் விழுகிறானோ அப்படிப்பட்டவனை தன்னுயிரைக் கொடுத்தாவது ரக்ஷிக்கவேண்டும் என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது. மஹாத்மாக்களான சிபி, முதலிய அரசர்கள் சரணமடைந்தவனை ரக்ஷித்து உத்தமமான நல்ல ஸித்தியையடைந்தார்கள். சரணமடைந்த சத்ருவான வேடனொருவன் புறாவினால் நியாயப்படி பூஜிக்கப்பட்டு அவனது பசியையாற்றத் தானே இரையானது என்ற ஒரு கதையுண்டு. அக்கதையை இங்கு விவரமாக உரைப்போம்.

கெட்ட நடக்கையுள்ளவனும், கர்லன் போன்றவனும், கறுத்த அங்கமுள்ளவனும் தயையென்பது மருந்துக்கேனும் இல்லாதவனும் பெரிய முகமுள்ளவனுமான ஒரு பறவை பிடிக்கும் வேடன் பூமியில் சஞ்சரித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு ஸ்நேஹிதன் ஒருவனுமில்லை. உறவினர்களுமில்லை. அந்த வேடன் வலையை எடுத்துக்கொண்டு அரண்யத்திலுள்ள பக்ஷிகளைக்கொன்று விற்று ஜீவனம் பண்ணிக்கொண்டிருந்தான். ஒரு சமயத்தில் அவன் காட்டிலிருக்கும்பொழுது பெரிய சுழல்காற்று நாற்புறத்திலுமுண்டாயிற்று.. ஆகாயத்தில் மேகக்கூட்டங்கள் தோன்றின. ஏககாலத்தில் ஸப்தமேகங்களும் வருஷிக்கத் தொடங்கின. எங்குப் பார்த்தாலும் ஜல ப்ரவாகமாக விருந்தது. பள்ளமிது மேடு இது என்று அறிய முடியாமல் வேடன் பசியால் மெலிந்து குளிரால் வருந்தி காட்டின் மூலமாய் சென்றுகொண்டிருந்தான். குளிரால் துன்பமடைந்து பூமியில் விழுந்திருக்கும் பெண்புறாவைக் கண்டான். துன்பமுள்ளவனாயிருந்தும் பாப புத்தியுடைய அவ்வேடன், கண்டதும் அந்தப் பெண்புறாவைத் தன் கூட்டில் எடுத்துப் போட்டுக்கொண்டான். தான் துக்கத்தால் பீடிக்கப்பட்டவனாயிருந்தும் பிறனிடத்தில் துக்கத்தையே செய்தான். அவன் ஒரு பெரிய விருக்ஷத்தைக் கண்டான். அதில் அநேகவிதப் பக்ஷிகள் நிழலையும் இடத்தையும் கனிகளையும் விரும்பித் தங்கியிருந்தன. அன்றைய இரவை அம்மரத்தின் கீழேயே கழிக்கத் தீர்மானித்தான். பிறகு அஞ்சலியுடன் நமஸ்காரஞ்செய்து அந்தப்பெரிய மரத்தை நோக்கி ‘இதிலுள்ள தெய்வங்களைச் சரணமடைகிறேன்’ என்றுரைத்துத் துக்கத்துடன் கல்லில் தலைவைத்து உறங்கத் தொடங்கினான்.



அம்மரத்தின் கிளையில் ஒரு புறாவானது இனத்துடன் வெகுகாலமாக வஸித்துக்கொண்டிருந்தது. இரைதேடச்சென்ற தன் மனைவி இரவாகியும் வாராததைக்கண்டு வருத்தமடைந்து “புசலும் மழையுமாயிருக்கிறதே” என் ப்ரியை வரவில்லையே. இன்னும் அவள் திரும்பாதிருப்பதற்கு என்ன காரணமோ; கானகத்திற்குச் சென்ற என்னன்புள்ள மனைவிக்கு க்ஷேமமிருக்குமோ? அவளில்லாத என் வீடு இப்பொழுது சூன்யமாயிருக்கிறதே. க்ருஹஸ்தனாயிருப்பவனுடைய வீடானது புத்ரர்களாலும் பௌத்ரர்களாலும் வேலைக்காரர்களாலும் நிறைந்திருந்தாலும், பாரியையில்லாமலிருந்தால் சூன்யமாகவே யிருக்கும். மனையாளில்லாத வீடானது அரண்யத்திற்கு ஒப்பானதாகச் சொல்லப்படுகிறது. சிவந்த கடைக்கண்களுள்ளவளும் பல வர்ணமான அங்கமுள்ளவளும், இனிமையான குரலுள்ளவளுமான என்னுடைய மனைவி இப்பொழுது வராவிட்டால் எனக்கு உயிரால் பயனில்லை. நல்ல வ்ருத்தமுள்ள அவள் நான் உண்ணாவிட்டால் உண்பதில்லை. நான் ஸ்நானஞ் செய்யாவிட்டால் ஸ்நானஞ் செய்கிறதில்லை; நான் படுத்தபின் அவள் படுப்பாள். நான் ஸந்தோஷமுள்ளவனாயிருந்தால் அவள் ஸந்தோஷமுள்ளவளாயிருப்பாள். நான் துக்கமுள்ளவனானால் அவள் துக்கமுள்ளவளாயிருப்பாள். நான் கோபங்கொண்டால் ப்ரியமாகப் பேசுவாள். பதிவ்ருதைகளின் தர்மமுள்ளவளும் ஸாதுவுமான அவள் எனக்கு உயிரினும் மேலானவள். எந்த மனிதனுக்கு அவ்விதமான பார்யை யிருக்கிறாளோ அந்த மனிதன் உலகில் பாக்யம் பெற்றவன். புருஷனுக்கு அறம் பொருள் இன்பங்களுக்குரிய காலங்களில் பார்யை ஸஹாயமாயிருப்பாள் இவன் வேறு தேசத்துக்குச் செல்லும்போதும் அவள் தான் நம்பிக்கையை உண்டுபண்ணுகிறவள். இவ்வுலகில் புருஷனுக்குப் பார்யையென்பவள் தான் உத்தமமான பொருளென்று கூறப்படுகிறாள். ஸஹாயமில்லாத மனிதனுக்கு இவ்வுலகில் உலகநடைக்கு ஸஹாயமாக விருப்பாள். துன்பத்தையடைந்தவனுக்கும் பிணியால் பீடிக்கப்பட்டவனுக்கும் எப்பொழுதும் ஸஹாயமாக விருப்பாள். துன்பமுள்ள மனிதனுக்குப் பாரியைக்கொப்பான மித்திரனில்லை, பாரியைக்கொப்பான மருந்தில்லை; பாரியைக்கொப்பான பந்துவில்லை; பாரியைக்கொப்பான கதியில்லை. உலகத்தில் தர்மங்களைச் சேர்க்கும் விஷயத்தில் மனைவிக்குச் சமமான ஸஹாயமில்லை. எவன் வீட்டில் ஸாத்வியும் பிரியத்தைப் பேசுகிறவளுமான ஸதியில்லையோ அவன் அரண்ணியஞ் செல்லவேண்டும். அரண்யம் எவ்விதமோ அவ்விதம் அவன் வீடு” என்று புறா புலம்பிற்று. வேடனது கூட்டிலிருக்கும் பெண்புறா இவ்வசனத்தைக் கேட்டு ‘அந்தோ! என் பிரிய பதியானவர் இல்லாதவையோ இருப்பவையோ இவ்விதமான குணங்களைச் சொல்கிறார், ஆதலால் நான் மிகவும் பாக்யவதி. எந்த ஸ்த்ரீயின் பதி ஸந்தோஷமுள்ளவனாயிருக்கிறானோ அவளன்றோ ஸ்த்ரீயென்று அறியத்தக்கவள். பதியன்றோ பெரிய சரணமாகிறான். (துக்கப்படும் ஆண்புறாவைப் பார்த்து). காந்தனே! இப்பொழுது உனக்கு

க்ஷேமத்தை சொல்கிறேன். அதைக்கேட்டு அவ்விதம் செய். விசேஷமாகச் சரணமென்று வந்தவர்களை ரக்ஷி. இதோ வேடன் உன்னிடத்திற்கு வந்து பசியாலும் குளிராலும் துன்பத்துடன் படுத்திருக்கிறான். இவன் பொருட்டுப் பூஜைசெய். பிராமணனைக் கொல்கிறவனுக்கும் உலகத்திற்கு மாதாவான பசுவைக் கொல்கிறவனுக்கும் சரணமென்று வந்தவனைக்கொல்கிறவனுக்கும் பாதகம் ஸமானமாகும். ஜாதியின் தர்மம்படி புறாக்களுக்குள்ள பிழைப்பு விதிக்கப்பட்டிருக்கிறது. உன்னைப்போன்ற புத்தியுள்ளவன் எப்பொழுதும் அதை அனுஸரிக்கவேண்டியது நியாயமாகும். கிருஹஸ்தனாயிருக்கும் எவன் சக்திக்குத்தக்கபடி தர்மத்தை அனுசரித்திருக்கிறானோ அவன் இறந்தபின் அழிவில்லா உலகத்தை யடைகிறானென்று கேள்விப்பட்டிருக்கிறோம். நீ உன் சரீரத்தில் கருணையைத் தள்ளிவிட்டு அறம் பொருள்களைப் பற்றிக்கொண்டு இந்த மனிதனுடைய மனம் எவ்விதம் ஸந்தோஷப்படுமோ அவ்விதம் இவன் பொருட்டுப் பூஜைசெய். என் விஷயமாகத் தாபத்தை யடையாதே. என்று சொல்லித் தன் தலையைத் தூக்கிப் பதியை நன்றாகப் பார்த்தது.

தர்மத்துடனும் யுக்தியுடனும் கூடியதான மனைவியின் வசனத்தைக் கேட்டுப் புறாவானது ஸந்தோஷத்துடன் வேடனைப்பார்த்து 'உன் வரவு நல்வரவாகுக. உனக்கு நான் என்ன செய்யவேண்டும். சொல், நீ தாபத்தை யடையவேண்டாம். நீ உன் வீட்டிலிருக்கிறாய் ஆகையால் சீக்ரம் சொல். நீ எதை விரும்புகிறாய். ஸ்நேகத்துடன் உன்னைக் கேட்கிறேன். நீ எங்களிடம் சரணமென்று வந்தவனன்றோ? ஆகையால் நல்ல நம்பிக்கையுள்ளவனாகி என்னிடஞ் சொல். நீ எதைச் சொல்கிறாயோ அதையெல்லாம் நான் செய்கிறேன். நீ சோகத்தில் மனதைச் செலுத்தாதே' என்று சொல்லிற்று. அதற்கு வேடன் என்னைக் குளிர் வருத்துகிறது. முதலில் குளிரைப்போக்கு என்றான். தக்ஷணமே காய்ந்த இலைகளையும் சருகுகளையும் கொண்டு சேர்த்து கம்மாளன் வீட்டினின்றுத் தீக்கொணர்ந்து இலைகளில் தீயைப் பிரகாசிக்கச் செய்தது. வேடன் அதனருகிற் உட்கார்ந்து குளிர் போக்கினான். வேடனுக்குப் பசி யதிகரித்திருந்தமையால் பசியாயிருக்கிறது ஆகாரத்தை விரும்புகிறேன் என்றான். புறா அதிக நாழிகை சிந்தித்துப்பார்த்து ஒன்றும் தோன்றாது வேடனை நோக்கி 'ஒரு முகூர்த்தம் பொறுத்துக்கொள். உன்னை திருப்தி செய்விக்கிறேன்' என்றது. இவ்விதஞ் சொல்லிவிட்டு அக்னியை நன்றாக ஜ்வலிக்கும்படிச் செய்து மிகச் சந்தோஷத்துடன் 'அதிதி பூஜையில் பெரிய தர்மமுண்டென்று முன்னால் கேட்டிருக்கிறேன். நண்பனே! அனுக்கிரகஞ்செய் அதிதியைப் பூஜிக்கும் விஷயத்தில் என் புத்தி உறுதியுள்ளதாயிருக்கிறது என்றுரைத்து மந்தஹாஸமுகத்துடன் அக்னியை மூன்றுதரம் ப்ரதக்ஷணம் பண்ணி அந்த அக்னியில் பிரவேசித்தது. இதைக் கண்டவுடன் வேடன் அந்தோ! குரூரனும் தன் கர்மத்தால் நிந்திக்கப்பட்டவனுமான எனக்கு மிகப்பெரிதும் கோரமுமான அதர்மம் வருமென்பதில் சந்தேகமில்லை. எப்பொழுதும் ஹிம்ஸிப்பதில் உறுதியுள்ள என்னை நிந்திக்கவேண்டும். சுபமான கர்மத்தைத் தள்ளிவிட்டு பறவைகளைப் பிடிக்கும் வேடனானேன். மஹாத்மாவும், தன்னுடைய மாமிஸத்தை எரிக்கிறதுமான புறாவினால் குரூரனான எனக்கு உபதேசம் செய்யப்பட்டதென்பதில் சந்தேகமில்லை. புத்திரர்களையும் தாரங்களையும் தள்ளிவிட்டு பிரியமான உயிரையும் விடுவேன். என்று சொல்லி தடியையும் சலாகையையும் பெட்டியையும் தள்ளினான். கூட்டிலிருக்கும் பெண்புறாவையும் எடுத்து விட்டுவிட்டான். வேடன் யாத்திரை செய்யப் புறப்பட்டான். பெண் புறா தன் கணவனை நினைத்து சோகத்தால் வாடி அழுதுகொண்டிருந்தது. நாதனே! ஒருபொழுதும் உனக்கு அபிரியத்தை நினைக்கவில்லையே. பல புத்திரர்களுள்ளவர்களானாலும் பதியை யிழந்த ஸ்திரீகள் எல்லோரும் சோகமடைவார்கள். மலைகளின் குகைகளிலும் ஆறுகளிலும் பிரவாகங்களிலும் மரத்தின் நுனிகளிலும் நான் உன்னுடன் கூடி விளையாடிக்கொண்டிருந்தேன். காந்தனே! அஃது இப்பொழுது எனக்கில்லை. தகப்பன் அளவுள்ளதைத் அளிப்பான். உடன் பிறந்தவனும் புத்திரனும் அளவுள்ளதை அளிப்பார்கள். அளவில்லாததை அளிக்கும் பதியை யெவள் பூஜியாமலிருப்பாள். பதிக்குச்சரியான நாதனில்லை. பதிக்குச்சரியான சுகமில்லை. ஸ்திரீக்குப் பொருள் எல்லாவற்றைக் காட்டிலும் பதியே கதியாவான். என்னாதனே நீயில்லாமல் இவ்வுலகில் உயிரால் பயனில்லை. பதிவிருதையான எந்த ஸ்திரீ பதியை யிழந்தபின் உயிரோடிருக்க உத்ஸாகப்படுவாள் என்று சொல்லி கணவன் பிரவேசித்த அக்னியில்தானும் பிரவேசித்துவிட்டது. என்னே கற்பின் தூய்மை. என்ன பதிபக்தி! பிறகு அந்தப் பக்ஷி சிறந்த விமானத்தையடைந்து ஸ்வர்க்கத்துக்சென்று தன் நாதனைச் சேர்ந்து ஸுகித்துக்கொண்டிருந்தது.

ஆகாயத்தில் விமானத்தில் பக்ஷி போவதை வேடன் கண்டான். 'எவ்விதத் தவத்தால் உத்தமமான கதியை யடைவேன்' என்று அவைகளின் கதியை சிந்திக்கலானான். செய்கையற்று காற்றை உணவாகக்கொண்டு யாத்திரை செய்யும் வேடன் ஸ்வர்க்கத்தை விரும்பினான். ஒரு பெரிய வனத்தில் பிரவேசித்தான். பிரவேசிக்கும்போதே முட்களால் பீடிக்கப்பட்டான். தேகமுழுதும் ரத்தவெள்ளமாயிற்று. அவ்வனத்தில் சுற்றினான். மரங்களொன்றோடொன்று உரைந்துகொண்டதனால் பெரிய தீ களம்பிற்று. மரங்கள் கொடிகள் யாவும் தீப்பற்றிக்கொண்டது. அந்த வேடன் சரீரத்தை விடவேண்டி மிகச் சந்தோஷமுள்ள மனத்துடன் அப்பொழுது வளர்ந்த தீயை எதிர்த்து ஓடினான். வேடன் தீயால் எரிக்கப்பட்டு பாபங்கள் நாசமடைந்தவனாகி உடனே பெரிய ஸித்தியைப் பெற்றான். துன்பத்தை விட்டு ஸ்வர்க்கத்திலிருப்பவனும் யக்ஷர்கள், கந்தர்வர்கள் இவர்களின் நடு

வில் இந்திரனைப்போல் விளங்குகிறவனுமாகத் தன்னைக் கண்டான். இவ்விதம் புண்யகர்மத்தால் ஆண்புறுவும், பதிவ்ருதையான பெண் புறுவும், வேடனும் ஸ்வர்க்கமடைந்தார்கள். இவ்விதமே வேறு எந்த ஸ்த்ரீ பதியை அநுசரிக்கிறாளோ அவளும் சீக்கிரமாகப் பெண்புறுவைப்போலத் தேவலோகத்திலிருந்துகொண்டு விளங்குவாள். சரணமடைந்தவரை ரக்ஷி என்பது பெரிய தர்மம். பசுவைக்கொன்றவர்களின் பாபகர்மத்திற்குப் பிராயச்சித்தமுண்டு. எவன் சரண் புகுந்தவனைக் கொல்கிறானோ அவனுக்குப் பிராயச்சித்தமில்லை.

கீ. பி. சேஷாத்ரி ஐயங்கார்.

## REVIEW OF BOOKS.

## புஸ்தக மதிப்புரை.

கதைப் பூங்கொத்து.—இப்புஸ்தகத்தை நமக்கு அனுப்பிய ஸ்ரீமானுக்கு வந்தனம். இதை இயற்றியவர் ஸ்ரீமான் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் புத்ரன் வி. சூ. நடராஜ சாஸ்திரியாராவார். இது சிறுவர்களுக்கென்றே எளிய நடையில் மிகவும் இனிமையாக எழுதப்பட்டிருக்கிறது. இதிலடங்கியிருக்கும் ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு நீதியைப் புகட்டக்கூடியதாயிருக்கிறது. சிறுவர்கள் இதைப் படித்தால் நல்வழியில் திருப்பப்படுவார்களென்பதற்கு ஐயமில்லை. இதன் விலை, அணா இரண்டரைதான். வேண்டுவோர்கள். மதுரை விவேகோதயம் ஆபீஸுக்கு எழுதவும்.


## மேக வியாதிக்கு லேகியம்.

இது பலவித மேகச்சூட்டினாலுண்டான வெள்ளை, நீர்சுருக்கு, நீர்கட்டு, நீர் அடைப்பு, நீர் துவாரத்திலிருந்து சீழ், இரத்தம் விழுதல் இதனாலுண்டாகும் உபத்திரவங்கள் எத்தனை நாள்பட்டதாக யிருந்தபோதிலும் எந்தமருந்து சாப்பிட்டும் குணப்படாமலிருந்தாலும் ஸ்திரீ புருஷாளிருவரும் இந்த லேகியத்தை பரிக்ஷிப்பவர்கள் கண்டிப்பாக 7-நாளையில் இதின் குணத்தை வெகு ஆச்சரிய அற்புதமென்று புகழ்ந்துகொள்ளத் தடையிராது. பத்தியம் மருந்துடன் தெரிவிக்கப்படும்.

டப்பி 1-க்கு கிரையம் ரூபா 1 0 0.

## கண் சாலேஸரத்துக்கு தைலம்.

இந்த மகிமை பொருந்திய தைலத்தால் 6-வாரம் ஸ்நானஞ் செய்ய அடியில் கண்ட வியாதிகள் கண்டிப்பாக தீரும். மேக சூட்டினால் கபாலத்தைச் சேர்ந்த கண்ணெரிச்சல், கண் சிவந்து நீர்வடிதல், மங்கல் மஞ்சள், காமாலை, கண் கூச்சல், கண்ணில் நீர் வடிதல், பார்வை மங்கல் யிவைபோன்ற கண் வியாதிகள் பற்றற நீங்கும். இதை உபயோகிக்கும் விதம் புட்டியின் மேல் ஒட்டி யிருக்கும். இதற்கு பத்தியமில்லை.

புட்டி 1-க்கு கிரையம் ரூபா 1 0 0.

கனவான்கள் இன்னும் சகல வியாதிகட்கும் அவுஷதம் வேண்டியவர்கள் வியாதியின் குணங்களை விபரமாய் தெரிவித்தால் அதற்காக அவுஷதம் வி-பி. மூலமாய் அனுப்பப்படும்.

| | | | |
|---|---|---|---|
| கூந்தல் வளர் தைலம் புட்டி 1-க்கு | 0 | 8 | 0 |
| மேகவியாதி லேகியம் டப்பி 1-க்கு | 1 | 0 | 0 |

ஜீவரட்சணை அவுஷத சாலை,

வைத்தியர் கோவிந்துசாமி நாயுடு,

நெ. 17. ஜனரல் முத்தையா முதலிவீதி, சென்னை.





அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற

50 சாமான்கள்இனும்] ராஜா சுந்தரி ரோஜா [50 சாமான்கள் இனும்

## கூந்தல் வளரும் பரிமளத் தைலம்.

50 இனும் சாமான்களுடன் டின் 1-க்கு ரூபாய் 1—0—0.




தலைமயிரை வளரச் செய்வதோடு மயிர் உதிராமல் செய்யும். அதிக வாசனையுடனிருப்பதோடு, மூளையின் கொதிப்பைத் தணித்து கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல நோய்களையும் நிவர்த்தி செய்து கண்களில் நீர் வடிதல், தலையில் சுண்டு, புண், மயிர் வெடிப்பு, மயக்கம், தலைசுற்றல், தலைவலி, சொரி சிரங்கு, மனோவியாகூலம் ஆகிய இவைகளைப் போக்கடித்து தேக ஆரோக்கியம் தரும் தைலம் இது ஒன்றுதான். 1-புட்டி தருவித்தால் இதன் அருமை தெரியும். அநேக நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றிருக்கிறது. இது தேசமெங்கும் நல்ல பெயர் பெற்றிருப்பதே இதன் புகழ்ச்சிக்கு அத்தாட்சியாகும்.

இனாம் சாமான்களின் விபரம்:—ஸ்திரீகள் தலையில் அணியும் கொண்டைக்கிளி 6, குங்குமச்சிமிழ் 1, மைச்சிமிழ் 1, அழகான முகம் பார்க்கும் கண்ணாடி 1, தாம்பூல மாத்திரைகள் 30, தந்தச்சீப்பு 1, ராஜா ராணி காரனேஷன் பெட்டி 1, ரவிவர்மா படங்களுள்ள போஸ்ட் கார்டுகள் 6, அத்தர் பில்லை 1, சந்தனப்பில்லை 1, ஸ்திரீகள் மார்பில் அணியும் ராஜா ராணி உள்ள சுந்தரமான புரோச் 1.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.


தைரியலட்சுமி அண்டு கோ.,

நெ. 3, இருளப்பன் தெரு, மதராஸ்.

இனாம்! இனாம்!! இனாம்!!!

அதாவது என்ன?

## இன்வெண்டிங் சுவிஸ் வாட்சு ஒன்று ரூபாய் 3.



இங்கி தொடாமல் எழுதத்தகுந்த பவுண்டன் பேனா ஒன்று, கிளிப் ஒன்று, இங்கிபுட்டி ஒன்று இனாம் கொடுக்கப்படும். வாட்சுக்கு ஒரு வருஷம் காரண்டி, நேர்த்தியானது. பொன் கில்ட் போட்ட சங்கிலி 1-க்கு 0 12 0 வெள்ளி கலருடைய சங்கிலி 1-க்கு 0 8 0 செப்புக் கட்டையின்பேரில் இலட்ரிக் கோல்டு கலர்போட்ட ரேக்கினால் செய்யப்பட்ட கைக்காப்பு ஜதை 1-க்கு ரூ. 3 0 0.

விலாசம்:—வி. கே. பென் அண்டு கோ.,

24, விநாயகமேஸ்திரி வீதி, மதராஸ்.

பிங்கள ஹு மார்கழி-தைமீ இங்கிலீஷ்—1918, பசலி—1327,
ஹிஜிரி—1336. தக்ஷிணாயனம்—ஹேமந்தருது. உத்தராயணம்—வஸந்தருது.

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | 1 | கஅ | செ | சது கூசு-௫க, ஆயு கூ-உ௫, பீர் சக-உ௫, பவ உ-கூசு, ரா கO-சகூ, அலபப்யம், |
| 18 | 2 | சக | புத | பஞ் கக-௫௯, மக கஉ-கூக, ஆயு ௫O-நகூ, கௌ எ-உ௫, ரா ௫-௫உ, |
| 19 | 3 | உO | வியா | ஷஷ்ட சடு-கக, பூர கஅ-௫ச, ஸௌ ௫க-சள, கர சஉ-கூக, ரா கO-உ, |
| 20 | 4 | உக | வெ | ஸப் ௫O-உஅ, உத் உ௫-கக, சோப ௫உ-௫O, விஷ கள-௫கூ, ரா சக-கூச, திஸ்ரோஷ்டகை, |
| 21 | 5 | உஉ | சனி | அஷ் ௫௫-கூ, ஹஸ் கூக-கஉ, அதி ௫கூ-ஊ, பா உஉ-ச௫, ரா உச-கூ, |
| 22 | 6 | உகூ | ஞா | நவ ௫அ-சச, சித் கூக-உகூ, ஸுக ௫கூ-உகூ, தை உக-௫கூ, ரா உஉ-கூ௫, |
| 23 | 7 | உச | திங் | தச கூO-O, சுவா சO-கூச, திரு ௫உ-உக, வணி கூO-O, ரா உகூ-உள, திருதினஸ்ப்ருக் |
| 24 | 8 | உ௫ | செ | தச க-கள, விசா சகூ-கூ௫, சூல ௫O-கூள, விஷ் க-கள, ரா உ௫-கூ |
| 25 | 9 | உகூ | புத | ஏகா உ-கூக, அனு சடு-உO, கண் ஈள-சகூ, பா உ-கூக, ரா கூO-கூஅ, ஸர்வத்திரைகாதசி, |
| 26 | 10 | உள | வியா | துவா உ-கூO, கேட் சடு-௫உ, விரு சகூ-௫௫, தை உ-கூO, சேஷம் கூ-ககூ, கர்ப்ப ஙிவர்த்தி-கள, பிரதோஷம், |
| 27 | 11 | உஅ | வெ | திர க-கக, சது ௫ள-கூக, மூல சடு-கச, து௫ கூகூ-கூ, வணி க-கக, விஷ் உஅ-ச௫, திவி ௫-கூகூ, ரா கஉ-உஅ, அவமாமாஸ |
| 28 | 12 | உகூ | சனி | ● ௫௫-கஉ, பூராட சகூ-கூச, வியா கூகூ-கூச, சது உகூ-௫ள, திவி அ-கூச, அமாவாஸ்யை, [சிவராத்திரி, |
| 29 | 13 | கூO | ஞா | பிர ௫O-௫க, உத்திரா சகக-ச, ஹரு உள-ககூ, கிம் உகூ-க, திவி உ-சச, ரா உக-சக, புஷ்ய சுத்தம், மகரரவி கூச கக, அத்தி [யர்க்கம், சாப மகர சுக்கிலப்பிரதமைதிதிகள் |
| 30 | 14 | க | திங் | துதி ச௫-௫உ, திருவோ கூள-௫க, வஜ் உO-உச, பா கஅ-உக, ரா கஅ-உகூ, உத்தராயணபுண்ணியகாலம், மகரசுக்கில துதியா |
| 1 | 15 | உ | செ | திரு சO-உச, அவி கூச-கO, வித் சகூ-உ, தை ககூ-அ, ரா உஉ-அ, வியதீபாதசிராத்தம், கரிநாள், [திதி, கரிநாள். |
| 2 | 16 | கூ | புத | சது கூச-சO, சதய கூO-கஉ, விய ௫-உகூ, வரி ௫உ-கO, வணி எ-கூஉ, ரா ககூ-சகூ, சதுர்த்தி விரதம், கரிநாள். |
| 3 | 17 | ச | வியா | பஞ் உஅ-௫௫, பூரட் உகூ-எ, பரி சகூ-சஅ, பவ க-சள, பா உள-அ, ரா சகூ-கூள, |
| 4 | 18 | ௫ | வெ | ஷஷ்ட உகூ-கூ, உத்திரட் உஉ-௫, சிவ சஉ-அ, தை உகூ-கூ, ரா உக-உக, அன்ஹாந்தம் உகூ-கூ, |
| 5 | 19 | கூ | சனி | ஸப் கள-சகூ, ரேவ கஅ-உஉ, ஸித் கூச-சகூ, வணி கள-சகூ, அன்ஹாதி கள-உO, திதித்துவயம். |
| 6 | 20 | எ | ஞா | அஷ் கஉ-சகூ, அசு க௫-அ, ஸாத் உள-௫கூ, பவ கஉ-சகூ, திவ் ௫-சO, ரா கூ-ககூ |
| 7 | 21 | அ | திங் | நவ அ-கூO, பர கஉ-கூ௫, சுப உக-கூக, கௌ அ-கூO, ரா கஉ-௫O, கும்பாயனம் சஅ-சகூ, கார்த்திகை விரதம் |
| 8 | 22 | கூ | செ | தச ௫-கூ, கார் சO-௫கூ, சுப்ர சடு-௫உ, கர ௫-கூ, ரா உக-கூகூ, சாகூ டிஷ்டமஹ |
| 9 | 23 | கO | புத | ஏகா உ-கூகூ, உரோ கO-சச, பிரா கக-ச, விஷ் உ-கூக, திவி உச-உO, ஸர்வத்திரைகாதசி, |
| 10 | 24 | கக | வியா | துவா க-உக, மிருக கO-சக, மாஹேற எ-அ, பா க-உக, திவி உக-௫கூ, ரா கூ-உஉ, பிரதோஷம், வைதிருதிசிராத்தம், கரிநாள். |
| 11 | 25 | கஉ | வெ | திர க-கூO, திருவா கஉ-உக, வை ச-கக, தை க-கூO, ரா கச-௫௫ |
| 12 | 26 | ககூ | சனி | சது உ-சகூ, புனர் சடு-கள, விஷ் உ-கள, வணி உ-சகூ, ரா எ-சள, பௌர்ணிமை விரதம். |
| 13 | 27 | கச | ஞா | ○ ௫-கூக, பூச ககூ-உஅ, பிரீ க-கக, பவ ௫-கூக, ரா உ௫-கஉ, புஷ்யஸ்நானம், |
| 14 | 28 | க௫ | திங் | பிர கூ-சகூ, ஆயி உச-கஅ, ஆயு க-க௫, கௌ கூ-கக, ரா உஅ-கூச, புஷ்யபகுளம், |
| 15 | 29 | ககூ | செ | துதி ககூ-௫கூ, மக கூO-கூகூ, ஸௌ க-௫உ, கர ககூ-௫கூ, சேஷம் க-உO, ரா உகூ-கூக, |
| 16 | 30 | கள | புத | திரு கக-க, பூர கக-௫கூ, சோப உ-௫௫, விஷ் ககூ-க, ரா உள-சள, ஸங்கடஹரசதுர்த்தி, சூன்னியதிதி, கரிநாள். |
| 17 | 31 | கஅ | வியா | சது உச-உக, உத் சகூ-கஅ, அதி ச-ககூ, பா உச-உக, சேஷம் O-கூகூ, |

மார்கழி மாதம் 1918 ஜனவரி தைமாதம்

ஸ்ரீராமஜயம்.

# கல்பதரு.

KALPA THARU.

அறிவு வளர்ச்சிக்கான ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புஸ்தகம் 1. Vol. I. } பிங்கள ஹு தைமீ -JANUARY, 1918. { ஸஞ்சிகை 11. No. 11.

# PART I.

## ART AND SWADESHI.

(Adapted from the writings and speeches of Dr. ANANDA K. COOMARASWAMY.

அநுபவவித்தையும் சுதேசியமும்.

[டாக்டர் ஆனந்த கே. குமாரஸாமி அளித்த பல்வேறு பிரஸங்கங்களிலிருந்தும் எழுதிய வியாஸங்களிலிருந்தும் சங்கிரஹித் தெடுக்கப்பட்டது.]

'தன் கையே தனக்குதவு' மென்பது பெரியோர் கொண்ட கொள்கை; சிற்சில சமயங்களில் அக்கொள்கையும் பலிதமாவதில்லை. அதற்குக் காரணம் என்னவென்பதைப் பலபேர் ஆராய்வதமில்லை. கையென்பது நவத்துவாரங்களோடு கூடின பொய்ச்சடலத்தின் ஓர் அவயவம். ஆகலின், அச்சடலத்தையும் அதன் மூலமாக அவயவத்தையும் ஆட்டிவைக்கும் ஆத்மாவின் பார்வை யிருந்தாலன்றி அவயவமாகிற கை, அஃதிருக்கும் பூதவுடம்பிக்கு உதவுவது சிரமம்; ஆனதுபற்றி ஆத்மாவின் அருள் அவயவத்திற்கு அவசியமிருத்தல் வேண்டும். அவ்விதமாயின், கொண்ட கோளை எவ்விதத்திலும் நிறைவேற்றிக் கொள்வது ஸாத்தியமாகும். அவயவத்தினாலாகக் கூடியது தொழில்; ஜீவான்மாக்களுக்குத் தொழில் இன்றியமையாத அரும்

பெரும்வஸ்து; எனவே அவயவத்திற்கும் தொழிலுக்கும் காரணபூதமாயிருப்பது ஆன்மா; ஆன்மாவின் உயர்வையும், அது மனுஷ்ய கோடிகளுக்கு எவ்வளவு தூரம் வேலை செய்வதற்கு உபகரணமான சூத்திரக் கயிறுபோல இருக்கிறதென்பதையும் குறிக்க நாம் வேறு உதாரணத்தைத் தேடவேண்டுவதில்லை. தொழிலையும் சுதேசியத்தையும் எடுத்துக் கொள்வோம்.

சுதேசத்தொழில் ஏற்படுவதற்கு அதில் முதன்முதல் ஒருவனுக்கு அபிலாஷை யிருக்கவேண்டும். தேசபக்தியும் தேசக்ஷேமமும் தேச அபிவிருத்தியும் பூவுலகில் மனுஷ்யகோடிகள் அவலம்பிக்க வேண்டிய முழு முதற் கடன்களாதலின், இந்தியனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் அம்மகோன்னத நோக்கத்தில் தன்மனத்தை நாட்டாமலிருப்பது தவறாகும். பிராசீன காலத்தில் தேசம் மிகுந்த நாகரிக ஸ்திதியிலிருந்திருக்க வேண்டுமென்பதற்கு எத்தனையோ உதாரணங்களைக் காட்டலாம். அக்காலத்திற் செய்யப்பட்ட சிற்ப வேலைகளின் அருமை பெருமைகளை நந்தேசக் கோயில்களில் பாருங்கள்; மற்றுமுள்ள பெரிய கட்டடங்களையுங் கவனியுங்கள், சிற்சில கதவு நிலைகளில் செய்யப்பட்டிருக்கும் தச்சு வேலைகளைக் கவனிப்போமாயின், இந்தியர் இவ்வளவு திறமையாகக்கூட மரவேலைவு வேலைகள் (Wood Carving) செய்திருக்கிறார்களா வென்று வெளிதேச சஞ்சாரி திக்பிரமை கொள்ளாமலிருக்கமாட்டான். அப்பேர்ப்பட்ட நிலைகள்கொண்ட கதவுகளைத் தாண்டி உட்புறஞ் செல்லுமிடத்து சொற்ப விலையுள்ளதும் அதிக மலிவானதுமான எனாமல் பாத்திரங்கள் பரப்பப்பட்டிருப்பதைப் பார்க்கலாம்; வெளிதேசங்களிலிருந்து அபரிமிதமாக இந்நாடுகளுக்கு வந்து எங்கும் பரப்பப்பட்டு சலீஸான விலைக்கு விற்கப்படும் பொருள்களுக்கும், இத்தேசத்திலேயே செய்யப்பட்டு உயர்தர விலையோடு விளங்கும் வஸ்துகளுக்கும் என்ன வித்தியாசம் என்பதைக் கவனியுங்கள். வெளி தேசங்களிலிருந்து இங்கு வந்து சேர்ந்து பரப்பப்பட்டிருக்கும் எனாமல் சாமான்களைப்போன்றவை மூவாயிரம் வருஷங்களுக்குமுன் இத்தேசத்திலேயே செய்யப்பட்டு வந்தன வென்பதற்குப் போதிய அத்தாக்ஷிகளுண்டு. அப்போதிருந்த வஸ்துக்கள் காலம் ஆக ஆக மறைந்துபோயின. பண்டைக் கால வஸ்துக்கள் பல மிகவும் திறமையான வேலைப்பாடமைந்திருந்தமை பற்றி அனேக அமெரிக்கப் பிரயாணிகளும் ஜர்மன் பிரயாணிகளும் தாம் சுற்றுப் பிரயாணம் சென்றுவரும் வியாஜத்தை வைத்துக்கொண்டு, தம் ஜன்மதேசத்திலிருந்து புறப்பட்டு இத்தேசத்திற்கு வந்து, பல விடங்களைச் சுற்றி அதிசயமும் அபூர்வமும் நிறைந்த வேலைப்பாடும் அமைந்த பொருள்களை முறையே தம் தேசக் காட்சிச் சாலை (Museums) களுக்குக்கொண்டு போய் விடுகிறார்கள். காட்சிச்சாலை போய்ச்சேர்ந்த பின்னர் ஐரோப்பிய தொழிலாளிகள் சும்மாவிடுவார்களா? அப்பொருள்களின் தன்மையைத் தாமும் உணர்ந்து அதே மாதிரியாக யந்திர விசைக் கருவிகளின் உதவியால் ஏராளமாகச் செய்து மார்க்கெட்டிற் பரப்பி விடுகிறார்கள். பின்பு வர்த்த



மானப் பத்திரிகைகளில் அவ்வேலைப் பாடுகளின் உருவமைப்புப் படங்கள் வியக்தமாக அச்சிடப்படுகின்றன; தொழிற் கல்விக்கூடங்களிலும் சித்திர வேலை கலாசாலைகளிலும் இவைகளைக் குறித்துப் பிரசங்கிக்கவும் படுகின்றது. காலக்கிரமத்தில் பொருள்கள் சீரடைந்து வியாபாரத்தில் பெருக்கெடுத்து விடுகின்றன. இங்ஙனம் கீழ்த்திசையாரது உற்பத்தி ஸாதனம் மேற்றிசையாரது வியாபார ஸாதனத்தினால் பெரிதும் அழிமுகம் கொண்டிருப்பதாகச் சொல்லக்கூடுமானாலும், ஓரோரிடத்தில் அவ்வுற்பத்தி ஸாதனம் இன்னும் மறைந்து மாசுபடாம லிருக்கிறதென்றே யாம் நன்கு கூறுவோம்.

## இந்தியரது பண்டைக்காலதொழில் மேன்மை.

தம்மனோ தர்மத்தினாலேயோ, கண்கண்டது கைசெய்யும் என்னும் பழமொழியை யனுஸரித்த வன்மையினாலேயோ, இந்தியர் நூதனமான குறிப்பு வரைவதில் சிறிதும் பின்வாங்கினவர்களல்லர்; அவர்களது புத்தி, நூதனங்களைக் கண்டுபிடிக்குந் தன்மை வாய்ந்தது. புதிய நூதனங்களுக்குப்போதிய உறைவிடமென்று அவர்களது குறிப்புக்களைச் சொல்லுவதும் பொருந்தும். இத்தனை குறிப்புகளும் இக்காலத்தில் உண்டானவையல்ல; எல்லாம் பண்டைக்கால மகிமையே யல்லாது, புதியனவா யுற்பவித்தனவல்ல. இவ்விஷயத்தைச் சிறிது ஆலோசித்துப் பார்ப்போம். தற்போதைய இந்திய வேலைப்பாட்டிற்கும் புராதன இந்திய வேலைப்பாட்டிற்கும் உள்ள வித்தியாசங்களை ஆழ்ந்து கவனித்துப் பார்த்தால், அப்போதிருந்த வேலைப்பாட்டினழகு இப்போதிருப்பதாகக் காணோமென்று எவருந் திகைப்பார்கள். பிராசீனகாலத்திருந்த இவ்வளவு மேன்மையும் இப்போது அழிந்து போகவேண்டுமாவென்பது நம்மனத்திற் படாமலிராது. ஒரு சுதேசிய ஷாப்புக்குள் செல்லுங்கள். அங்குகூட இந்தியர் கண்டு பிடித்ததாகவுள்ள நூதனங்களைக் காண்பதரிதாயிருக்கிறது. தினசரி வேலைகளுக்கு அத்தியாவசியமா யிருக்கக்கூடிய சர்வசாதாரணமான வஸ்துக்களில் இந்தியக் கைத்தொழிலாளன் செய்துகொழிக்குந்திறமை செப்பத்தரமின்று, நம்மிந்திய மாதர்கள் கட்டுஞ்சேலையில் பட்டுப் பூக்கள்போட்டும், பட்டுச்சேலையில் வர்ணப்பூக்கள் போட்டும் அணியச்செய்வதும், நாம் வேலைப்பாடமைந்த பித்தளைப் பாத்திரங்களில் அருந்துவதும், மேற்சொன்ன பூட்ஸ் செருப்பு முதலான பாதரட்சை யேதுமில்லாது வெறுங் காலோடு கம்பளிப்பாய் கயிற்றுப்பாய் இவைகளில் நடந்து செல்வதும், ராதையின் அன்பு இத்தன்மையதென்று கலாவிலாசத்தில் குறிப்பிட்டுக் காட்டும் சித்திர வேலையின் நயம் இப்படிப்பட்டதென்பதும் தற்போதைய சுதேச ஷாப்புகளில் காணவியலாது. இவைகளுக்குப் பதிலாக கீழ்த்தரமான சாமான்கள் ஐரோப்பிய வியாபாரத்திற் கென்றே ஏற்பட்ட சரக்குகளாக மாறி யிருப்பது தெரியவரும். அழுக்கான (மங்கலான) 'வெண்மை' ஷர்டிங்கு துணிகள் ஒரு புறம், சாசுவதமென்று சொல்ல வியலாத கபிலவர்ணமுள்ள (aniline) சாயந்தோய்த்த

வஸ்திரங்கள் மற்றோர்புறம், வானவில்லில் தோன்றும் வர்ணங்கள் பூசப்பெற்ற பிரயாணத்திற்குரிய டிரங்குப் பெட்டிகள் இன்னுமோர்புறம், பூட்பாலிஷ், மார்க்கிங் இங்க், ஸோப், பௌண்டின் பேனா ஆகிய இவைகள் செவ்வையாக வரிசைக் கிரமத்தில் வைத்து அலங்கரிக்கப் பட்டிருப்பதையும் அவ்வித அலங்கரிப்பு பார்ப்போர் மனதைக் கவருந்தன்மையதாயிருப்பதையும் அவர்களே செம்மையா யறிந்துகொள்வது திண்ணம்.

### ஜனங்கத்திற் கெடுத்தது ஜன ஊழியமே.

இஃதோர் உண்மையான வாக்கியம். தற்போதைய இந்தியக் கல்வி பயிலுவிப்பதென்னை? தற்போதைய வியாபாரத்தைப் பெருக்கடிப்பதைத் தவிர இயற்கையாகவே இந்தியாவில் பொதிந்திருக்கும் புத்தி சாதுர்ய விற்பத்தியை நிதர்சிக்கவல்ல: சித்திரவேலையில் இந்தியா பிராபல்ய மடைந்திருந்ததற் கெத்தனையோ சந்தர்ப்பங்க ளிருந்தன. ஐரோப்பிய சித்திர வேலைக்காரர் எழுதும் உருவங்களும் மற்றைச் சித்திர வேலைகளும் பிராசீன காலத்தில் இங்கிருந்தே அப்பியசிக்கப்பட்டன. ஆசியா கண்டத்தில் இந்தியா விசேஷ பிராதான்யமும் செல்வாக்கு மிகுந்து ஜாவாவிற் குடியேறின போது, சீன தேசததவர்க்கு உண்டான புரோத்ஸாகத்திற்கு அளவில்லை. எனவே இந்தியரது வேலை அவ்வளவு திறமையாயிருந்தது. வேலையின் திறமையை யொப்ப அழகின் திறமையும் அவசிய மிருக்கவேண்டும்; அழகில்லாவிடத்து ஸதாசாரக் கொள்கை ஏற்படமாட்டாது; ஸதாசார முள்ளவனுக்கே அழகேற்படும்; ஆகவே ஸதாசாரத்திற்கும் அழகுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. நமது சிததிரவேலைகள் பிறருடைய வியாபாரத்திற் கிலக்காயிருககின்றன; கெரோஸின் எண்ணெய்த் தகரங்கள் தண்ணீர் ஜாடிகளாகவும் கால்வனேஸ்ட் துத்தநாகத் தகடுகள் மேற் கூரையாகவும் உபயோகமாகி வருகின்றன, இதெல்லாம் போகட்டும்! இன்னுமோர் அம்சத்தைக் கவனியுங்கள்; நம் வீட்டில் நம் வழக்கமான உடையைத் தவிர்த்து ஐரோப்பியவுடை தரிப்பதில் ஆர்வங்கொண்டார் பலருளர். கடற்கரைக் கடுத்தாற்போலிருக்கும் பங்களாக்களை யொப்ப நமது வீடுகளில் கண்ணாடி விளக்குகளும் சீன தேச நாய்ப் பொம்மைகளும் இயற்கையல்லாது செயற்கைப் பூக்களும், இவையெல்லாம் வைத்துக்கொண்டிருப்பது போக நமது முழுப்பொழுதையும் ஹார்மோனிய வாத்தியத்திலும், கிராமோபோன் மெஷினிலும் செலுத்துவதும் ஆக இவைகளைக் கவனிக்கும் போது நமது ஜீவாத்மாவில் தான் ஏதேனுங் கேடு உற்பவித்திருக்கிறதோ வென்று ஊகிக்கும்படியா யிருக்கிறது.

இத்தகைய நம் உணர்வின்மையானது, சித்திரத் தொழிலிலும் கைப்பழக்கத்திலும் நமக்கு அபிருசி யேற்படாததானது, பலஹீனத்தின் அறிகுறி யன்றிப் பலத்தி னறிகுறியல்ல. இந்தியாவின் அபிவிருத்தி அதன் கலையில் (அனுபவ வித்தையில்) தான் பதிந்திருக்கிறது, ராஜகீய விவகாரத்திலும் பொருளாதார விஷயங்களிலுமல்ல; பொதுமையை வகித்தற்குரித்தான ஜனங்கத்தை ஒருமித்து உறுதியாக்கும் பலம் சாதாரணமாயுள்ள கணிகமான நோக்கத்தினாலாவது லட்சியத்தினாலாவது வரமாட்டாது. கலைகளைப் பயின்று முன்னுக்குக் கொண்டுவருவதில் ஆயிரம் பாடு அரும்பாடுபட்ட தியாகிகளுடையவும் வல்லுநர்களுடையவும் மனோ கற்பிதங்களையும் லக்ஷியங்களையுமே பிரதானமாகக் கொள்ளல்வேண்டும்.



### நமக்கிருப்பது பிறர்க் கெப்படித் தெரியும்?

நமது வாணாட்களின் மேன்மை குறைவுபட்டதென்றால் நமக்கு இந்தியாவிடம் அன்பில்லை யென்று மாறுதலாகச் சொல்லலாம். மற்ற ஜனங்கத்தினும் இந்தியா மேன்மையுற்றிருந்த தென்பதை யேற்கெனவே சொல்லி யிருக்கிறோமே. ஜனங்க முயற்சியின் பலஹீனமே நாம் இந்தியாவை நேசியாமலிருக்கச் செய்வது; பூதபவிஷ்யத் ரசாயன சாஸ்திர முறையை இந்தியாவும் நன்கு கற்குமாயின், அது ஐரோப்பிய வியாபாரத்துடன் போட்டி போடச் சாத்தியமாகும். மிஸ்டர் ஹாவல் என்பவர் ஓரிடத்திற் சொல்லி யிருப்பதைப் பார்ப்போமானால் இந்தியாவின் மேன்மை எப்படி யுயருமென்பதை விளக்கலாகும். "உமது கலைகளையும் கைத்தொழில்களையும் ஆரம்பிக்கும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்பதை விடுங்கள். எதெது தேவையோ, எதெது அவசியமோ, அவைகளை நீங்களே செய்துகொள்ளலாம்; நீங்களாகவே செய்து கொள்ளக்கூடிய அம்சங்களைச் செய்து முடித்துக்கொண்டபிறகு நீங்கள் விரும்பும் ராஜகீய வுரிமைகளை யளிக்க எக் கவர்ன்மெண்டாரும் பின் வாங்கமாட்டார்கள். இந்தியவாசிகள் முன்னடைந்திருந்த ஸ்தாபன சக்தியைத் திரும்பவும் விருத்தி செய்துகொள்ளவேண்டும். அப்போதுதான் நீங்கள் கையெடுத்திருக்கும் காரியங்கள் சித்திபெறவும், ஸ்தாபன சக்தி மேம்பாடடையவும் மார்க்க முண்டு."

மற்றெவ்விஷயத்தைக் காட்டிலும் கலாசக்தியைத் திறமையாகவும் மெய்யுணர்வோடும அறியமுடியாததே இந்தியக் கைத்தொழில்கள் க்ஷீணித்துப் போவதற்குக் காரணபூதமாயிருந்தது; மறுபடியும் அத்தொழில்களை யாரம்பிப்பதும் சிரமமாகிவிட்டது. இந்திய சங்கீதங்களை ஆதரிப்போர் நாளுக்கு நாள் மலினமடைந்து விட்டனர். இந்திய வாத்தியக் கருவிகள் செய்யப்படாமைக்கு அதுவே காரணம். பாரம்பரியமாக சங்கீத சாஸ்திரத்தில் இந்தியர்கள் பெயர் பெற்றவர்களென்று பெயரெடுத்திருக்கிறார்கள். அதனாலே இந்திய சங்கீத விற்பன்னர்கள் ஆதரணையில்லாது போகவும், அதன்மூலமாக சங்கீதக் கருவிகளான யாழ், வீணை, தம்பூர் முதலான இசைக்கருவிகள் செய்யப்படாமற் போகவுமாயின; பிரதி வருஷத்திலும் பதினைந்துலக்ஷ ரூபாய் பெறுமானமுள்ள அந்நிய நாட்டு வாத்தியக்கருவிகள் இந்தியாவில் இறக்குமதி செய்யப்படுவதைச் சிறிது கவனியுங்கள். இவ்வளவும் நமக்கு நஷ்டந்தானே. கருவிகள்மூலமாக நாம் நஷ்டமடைவது

ஒருபுறமிருக்க, மற்றோர் புறத்தில் சங்கீத கலா சாஸ்திரத்தை அடியுடனிழக்கும் துர்ப்பாக்கியம் பெற்றவராகின்றோம்; கலா சாஸ்திரஜ்ஞர்களும் அச்சாஸ்திரத்திற்கு அநுகுணமான வாத்தியங்களைச் செய்யுந்திறமையும் ஒருங்கு சேர்ந்திருந்தும் அவைகளை நாம் ஏன் பிரயோகிக்கலாகாது? கிராமோபோன் பெட்டிகளிலும் ஹார்மோனியம் பெட்டிகளிலும் கோடிக்கணக்காகச் செலவழிக்கும்படியான அவ்வளவு சம்பத்து வாய்ந்த தேசமாய் இந்தியா யிருந்தால், ஸங்கீத சாஸ்திரஜ்ஞர்களின் குறைவு இவ்விதமேதானிருந்துகொண்டிருக்கும்.

நெசவுத் தொழிலு மப்படியே.

கிராமாந்தரத்தில் கைத்தறி கொண்டு நெய்யும் ஒருவனை யெடுத்துக்கொள்வோம். அவன் எத்தனையோ விதங்களில் பிரயத்தனப்பட்டு மாதிரிகளும் நூதன ரகங்களும் தயாரித்தபோதிலும், அவைகளின் உயர்வையும் உறுதியையும் பலபேர் அறிவதே கிடையாது. இவைகளெல்லாம் நாட்டுடைகள் தானேயென்று அசட்டைசெய்துவிடுகிறார்கள். அவைகளிலுள்ள மேன்மையைப் பலர் நன்றாக உணரவேயில்லை. இதன் முடிவு என்ன ஆகிறது என்பதைச் சிறிது ஆலோசித்துப் பாருங்கள்; கிராம நெசவுக்காரனுக்குப் போதிய உற்சாகமிருப்பதில்லை. அவனுடைய ஜீவனார்த்தமான நெசவு தொழில் பங்கமடைந்து போகிறது; ஆதரிப்பார் அரிதாகி விடுகின்றனர். அத்தகையோர் தம் கைத்தொழிலைவிட்டு விவசாயத்திலாவது மற்றும் எல்லோருங்கூடிச் செய்யும் (ஏற்கெனவே கூட்டமாயிருக்கிற) பிரவர்த்திகளிலாவது புத்தியைச் செலவிட்டுழைத்துத் தன் ஜீவனார்த்தம் வேலை செய்யவேண்டியவர்களாயிருக்கிறார்கள். இதை இன்னும் கொஞ்சம் தெளிவாகச் சொல்லுவோம். கைத்தறியின் மேன்மையும் உபயோகமும் கிராமத்தொழில் மலினமடையும்போது மலினமடைந்துபோகின்றன. வீட்டிலேயே தறிபோட்டு வேலை செய்வது போய் யந்திரவேலைகளில் சிறு குழந்தைகள் முதல் எல்லோரும் உட்கார்ந்து வேலை செய்யும்படியாகின்றனர். மாஞ்செஸ்டர் நகரிலிருந்து இந்தியாவுக்கு வரும் வஸ்திரங்கள் கைத்தறிகளினுற் செய்யப்பட்டவையல்ல; யந்திர விசைகளாற் செய்யப்பட்டவை. நாட்டுடைக்கும் சீமையுடைக்குமுள்ள வித்தியாஸத்தைப் பார்க்கும்போதே, நாம் சொல்லுவதன் உண்மை நன்கு விளங்கும். இந்தியப் பிரதம நகர ஜனசமூகம் ஆறு நூற்றாண்டுகளுக்கு முன் இங்கிலாண்டிலும் வேல்ஸிலும் வசித்துக்கொண்டிருந்த ஜனசங்கியை யொத்திருக்கிறது. ஆங்கில நாடுகளில் வசிக்கும் ஜனசங்கியையில் 10-ல் ஒரு பாகத்தவர் தொழிற்கூடங்களிலாவது ஜெயிலிலாவது வைத்தியக்கார ஆஸ்பத்திரியிலாவது இறந்து போகிறார்கள். ஆதலால் அசாசுவதமான ராஜகீயப் போராட்டத்தில் கவனம் செலுத்துவதைக் காட்டிலும், ஜனங்கத்தின் ஜீவாதாரமான ஸத்தை நாம் இழக்காமலிருக்கும் வழியைத் தேடிக்கொண்டிருக்கவேண்டும். நசித்துப்போன நமது தொழில்களையும் கலைகளையும் நிச்சயமான பீடத்தில் நிலை நிறுத்தும்படி நாம் முயலவேண்டும். அதுவே நாம் தேசத்திற்குச் செய்யவேண்டிய கடமையாகும். ஜனங்க முற்போக்குக்கும் அதுவே ஸாதனமாகும்.

L. அனந்தய்யர்.



# PART II.

## SANITATION.

## ஆரோக்கிய விமர்சனம்.

### WALKING IN SLEEP.

By K. P. SESHADRI AIYANGER, *Assistant, Muthialpet High School, Madras.*

### தூக்கத்தில் நடை.

நித்திரையில் நினைவு என்பது கனவேயாகும். இராத்திரியில் தூங்கும்போது நமது தேகசக்தியெல்லாமடங்கி ஒடுங்கிக் கிடக்கிறது. அந்த வேளையில் மனோ சக்தியானது விளையாடும் விளையாட்டை நாம் கனவென்று சொல்லலாம். இந்தக் கனவு ஆச்சரியமாயிருக்கும். இதன் உண்மையான காரணங்களை இதுவரையும் ஒருவரும் கண்டுபிடித்தார்களில்லை. அதி அத்புதமாயிருக்கிற விஷயங்களில் கனவும் ஒன்று. கனவென்பது ஈச்வரனால் நமக்குப் பின்வரும் சுகதுக்கங்களைக் காட்ட முன்னதாகவே அனுப்பப்படும் தூது என்று பழையகாலத்துப் பெரியவர்களின் கொள்கை. இதற்கு உதாரணமாக ராமாயணத்தில் பரதன் தம் தகப்பனாரான தசரத சக்கரவர்த்தி சாகும் முன் கண்டகனவு; அநுமான் வருமுன் சீதை கண்ட கனவு; ஹரிச்சந்திரன் கானகத்தில் கண்ட கனவு; இவைகளை நம் சகோதர சகோதரிகள் படித்திருக்கலாம்.

நம்மவர்கள் எல்லாரும் கனவில் பூரண நம்பிக்கை யுடையவர்கள். எவனொருவன் விடியற்காலத்தில் நல்ல கனவோ அல்லது கெட்ட கனவோ காணுகிறானோ அவன் கண்ட கனவின்படி அதன் பலனை அடைவான் என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். அதன் பிரகாரமே நடந்து வருகின்றது. ஞானிகள் இந்த உலகம் எப்படிப் பொய்யோ அதுபோல் கனவென்பதும் தூக்கத்தாலுண்டாகும் பொய்த் தோற்றமென்பார்கள். ஆனால், கனவு என்பது என்னவென்றால், அது நமது விழிப்புக்காலங்களில் நமது புத்தியில் படியும் எண்ணங்களின் பிரதி பிம்பம் என்று ஒருவாறு சொல்லலாம். ஒருவன் விழிப்பில் காணாததைக் கனவில் காண்பதில்லை.

அற்ப எண்ணமும் அற்ப புத்தியுமுடையவன் பெரும்பாலும் பயங்கரமான கனவு காண்பான். ஒருவனைக் கொலை செய்தவன் தூங்கும்போது

அவனை ஜாக்கிரதையாய் கவனித்துப் பார்ப்போமானால் கனவு அவன் மனதிலிருப்பதுடன் கலந்து பயங்கரமாகப் பிதற்றுவான். அவன் தான் ஒளித்து வைத்திருக்கும் சங்கதிகளை வெளியிடுவான். ஒரு குழந்தை தூங்கும்போது கவனிப்போமானால் அது குற்றமற்ற தாகையால் தான் பகலில் சிரித்து விளையாடியதை நினைவில் நினைத்துக்கொண்டு தூக்கத்தில் சிரிக்கும். பின்பு தூக்கப்படும்; நாமிதை நரிமிரட்டு என்று சொல்கிறோம். நாம் விழிப்புக் காலத்தில் கெட்ட காரியங்களைச் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் கனவில் மிகப் பயங்கரமான கனுக்களைக் காணநேரிடும். சில கணித சாஸ்திரிகள் விழிப்புக் காலத்தில் கண்டுபிடிக்க முடியாத உண்மைகளை கனவில் கண்டுபிடித்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

நமது ஆகாரப்பைக்கும் கனவுக்கும் சம்பந்தமிருப்பதாக அநேக வைத்தியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். கனவில் நினைவு என்பது மனதுக்கு மாத்திரமல்ல. தேகம் முழுமையும் கனவு காண்பதாகச் சொல்லலாம். எப்பொழுது தேகமும் கனவு காண்கிறதோ அதற்குக் கனவில் நடை என்று பெயர். கனவில் நடை என்பதை கருமவியாதிக்குச் சமமாகச் சொல்லுகிறார்கள். இதைக் கீழ்வரும் ஸம்பவத்தால் விளக்குவோம்.

ஓர் ஆஸ்பத்திரியில் ஒரு டாக்டர் இருந்தார். அவரிடத்தில் ஒரு ஏழையான பையன் வைத்தியம் கற்றுக்கொண்டிருந்தான். அவன் கெட்டிக்காரப் பையன். ஆகவே, அவனிடத்தில் டாக்டருக்கு அதிக அபிமானம். ஆனால், அவனுக்கு கனவில் நடை என்ற வியாதியிருந்தது. இது டாக்டருக்குத் தெரியவந்தது. அன்று முதல் அவனறியாமல் அவனைப் பரிக்ஷித்து வந்தார். ஒருநாள் அவர் ஒரு பூண்டு விஷயமாய்ப் பாடசாலையில் பிரசங்கம் செய்தார். பிறகு, எல்லாரையும் அந்தப் பூண்டை மறுநாள் சரிவரப் பரிசீலனை செய்து கொண்டுவரும்படிச் சொன்னார். எல்லாரும் அவ்விதமே பரிசோதித்துக் கொண்டுவருவதாக ஒப்புக்கொண்டார்கள். அன்றிரவு சாப்பாடான பிறகு எல்லோரும் நித்திரை செய்ய அவரவர்களிடத்துக்குச் சென்றார்கள். ஆனால், டாக்டர் அந்தப் பையன் தூங்கும் அறைக்குள் வந்தார். மாணாக்கன் நித்திரை செய்துகொண்டிருந்தான். டாக்டர் அவனருகில் உட்கார்ந்து பரிக்ஷிக்கத் தொடங்கினார். திடீரென்று படுத்துறங்கினவன் எழுந்திருந்தான். அவன் உறக்கம் விட்டு எழுந்திருந்தவனல்ல. கனவில் நடையின் உபாதியால் எழுந்திருந்தவன். என்ன செய்கிறான் என்று டாக்டர் பார்த்தார். மாணாக்கன் தன் சட்டையை யெடுத்துப் போட்டுக்கொண்டு கதவைத் திறந்து மெதுவாகத் தன் வீட்டைக் கடந்து இரவு 12-மணி வேளையில் வெளியில் புறப்பட்டான். தூரநின்று எங்கு போகிறாய் என்று டாக்டர் கேட்டார். தோட்டத்திற்கு என்று சரியாய்ப் பதிலளித்தான். இன்னார் கேட்டார் இன்னபதில் சொன்னோம் என்னும் நினைவு அவனுக்குக் கிடையாது. போகும் வழியில் வண்டி



களுக்கு ஒதுங்கிக் கொடுத்து $\frac{1}{2}$ மைல் தூரம் சென்று எந்தப் பூண்டைப் பற்றி உபாத்தியாயர் வகுப்பில் சொன்னாரோ அதைப் பிடுங்கித் தன் பையில் போட்டுக்கொண்டு கொஞ்சமும் வழி பிசகாமல் வீடு வந்து சேர்ந்தான். பிறகு, கதவை மூடித் தன்னறையில் புகுந்து படுக்கையைத் தூக்கி அதன் கீழ் பூண்டைச் சரியாய் வைத்துவிட்டுப் படுத்துக்கொண்டான். இதையெல்லாம் அந்த டாக்டர் பார்த்துப் பரிசோதித்துவிட்டு அந்த மாணாக்கன் மறுபடியும் தூங்கின பிறகு தானும் அங்கேயே சமீபத்தில் படுக்கையைப் போட்டுக்கொண்டு தூங்கினார். பொழுது விடிந்ததும் அவர்கள் தனித்தனியே எழுந்தார்கள். பின்பு, டாக்டர் மாணாக்கனைப் பார்த்து இரவில் என்ன செய்தாய் என்று கேட்க அவனுக்கு ஒன்றும் ஞாபகமில்லை. அப்புறம் அவன் செய்த ஒவ்வொன்றையும் சொல்லிப் பூண்டை தலையணையைப் புரட்டி எடுத்துக் காட்டினார். அப்பொழுது அவனுக்குத் தான் அவஸ்தைப்படும் வியாதி இன்னதென்று தெரியவந்தது.

இந்தக் கனவில் நடை என்ற வியாதியால் வருந்தும் ஸ்த்ரீயையோ புருஷனையோ அதட்டி மிரட்டி சரியான ஸ்திதிக்குக் கொண்டுவர ஒருபொழுதும் முயலக்கூடாது. அப்படிச் செய்தால் அவன் மாண்டான். ஆகையால், வெகு ஜாக்கிரதையாய் அவனை அல்லது அவளைக் காக்கவேண்டும். ஆனால், எப்படி இடைவிடாமல் காக்கமுடியும்? இதற்கு ஒரு சிகித்ஸை இருக்கிறது. அதாவது, ஸ்த்ரீகளாகட்டும் புருஷர்களாகட்டும் பகற்காலங்களில் துன்மார்க்க எண்ணங்களை நினைக்கக்கூடாது. ஸதா கடவுளைத் தியானித்துக்கொண்டிருக்கவேண்டும். பொய் பேசுதல், திருடுதல், வஞ்சகம் செய்தல் முதலிய எண்ணங்களை மனதினின்று விலக்கவேண்டும். வாக்கு மனம் காயம் முதலியவைகள் சுத்தமாயிருத்தல் அவசியம். நல்ல ஸகவாஸத்தில் பழகி தெய்வபக்தி யுடையவர்களாயிருந்தால் காலக்கிரமேண அந்த வியாதி போய்விடும்.

ராவ்சாஹேப் ப. சம்பந்த முதலியார் இயற்றிய "பேயல்ல பெண்மணியே" என்னும் நாடகத்தில் அதன் கதா நாயகியான பங்கஜம் இந்த மாதிரியான கனவில் நடையால் அவஸ்தைப் பட்டாள். இரவில் உறக்கத்தில் எழுந்திருந்து வெளியில் உலாவுவாள். ஜனங்கள் அவளைப் பேயென்று எண்ணி அப்பேயை அகற்ற எவ்வளவோ திரௌபதை யம்மனை வேண்டிக் கொண்டார்கள். தன் காதலனைப்பற்றி நினைத்துக்கொண்டு தன்னை விவாகஞ் செய்துகொள்ளவேண்டுமே என்ற ஏக்கத்தோடு ஓரிரவு தூக்கத்தில் நடக்கலானாள். அப்படிச் செல்லும்போது அயலான் அறையில் புகுந்தாள். தெரிந்து புகவில்லை. அவஸ்தையால் புகுந்தாள். இப்படிச் சென்றதால் காதலன் இவள்மீது அபாண்டமாக நினைக்க நேர்ந்தது. அப்பொழுதும் அவள் தன் காதலனைப்பற்றி பிதற்றுவதைக் கண்ட நாயகன் அவள்மீது குற்றமில்லாதிருக்கக் கண்டு விவாகஞ் செய்துகொண்டான் என்று அந்த

நாடகம் கூறும். ஆகவே, இந்த வியாதியால் மனஸ்தாபமும் அபாண்டமான பழியும் பிராண நஷ்டமும் ஏற்படும். இப்படிப்பட்ட வியாதியும் பகவான் ஜனங்களுக்கு உண்டாகும்படியாகச் செய்திருக்கிறார். இதுவும் அவருக்கு திருவுளச் சம்மதம் போலும்.

---

# PART III.

## KNOWLEDGE ON AGRICULTURE, etc.

BY Mr. G. RAJAGOPAL,
*Late Editor, "South Indian Agriculture."*

## விவஸாய ஞானம்.

## கரும்பு.

நமது இராஜதானியில் கரும்பு விளைவிக்கக்கூடிய நிலங்கள் ஏராளமாயிருந்தபோதிலும், கரும்பை விளைவிக்கும் அநுபோகம் சில இடங்களில் மாத்திரம் இருப்பதால், கரும்பு விஸ்தாரமாய் விளைவிப்பதில்லை. அவ்வாறு விளைவிக்காவிட்டாலும் சர்க்கரை சாப்பிடுவது நாளாவட்டத்தில் அதிகப்பட்டே வருகிறபடியாலும், நாம் பலவிஷயங்களில் விருத்தியடைவது அவசியமாயிருப்பதாலும் நீராதாரமும் வடிகாலும் பொருந்திய இடங்களிலெல்லாம் கரும்பை விளைவிப்பது அவசியம். ஜெர்மனியார் பீட்ரூட் என்னும் செகப்பு முள்ளாங்கிக் கிழங்கிலிருந்தும், ஜப்பானியர் வள்ளிக்கிழங்கிலிருந்தும், அமெரிக்கர் மலாம்பழத்திலிருந்தும் சர்க்கரை எடுக்க பிரயத்தனித்திருப்பதுபோல நாமும் கரும்பை விருத்திசெய்வதுடன் உள்நாட்டில் விளையும் தென்னை, பனை, ஈந்து, கூந்தல்பனை, தாளிப்பனை முதலியவைகளிலிருந்து ஏராளமாய்ச் சர்க்கரை எடுத்து வியாபாரத்தை விருத்தி செய்ய வேண்டும். ஜப்பானியர் வள்ளிக்கிழங்கையும்; ஜர்மானியர் பீட்ரூடையும் அமெரிக்கரின் மேபில் மரத்தையும் நமது சண்டமாகிய இந்தியா நாட்டில் அவைகள் வளரத் தகுந்த இடங்களில் வளர்த்தோமானால் பிரபஞ்சத்தில் சர்க்கரை கொடுக்கும் எல்லாவித செடிகளும் இந்தியாவிலேயே இருக்கும். இவைகளுடன் வெல்லத்தைச் சுத்திசெய்யும் சாதனங்களையும் அநுசரிப்பது மேன்மை. அப்போதுதான் நாம் முன்னுக்குவரலாம்.

இதில் தெரிவித்த விஷயங்களை அவரவர்கள் சிறிது பரிக்ஷை செய்த பின்பு ஏராளமாய் அநுசரிப்பது அவசியம். மண், ஜலம், காலம் முதலியன அங்கங்கே வேறுபட்டிருக்கிறபடியால் இராஜதானி முழுமைக்கும் ஒரே



சட்டத்தை ஏற்படுத்துவது யுக்தமன்று. எப்படியெனில் ஒரு ஏகராவுக்குப் போடவேண்டிய கரும்புக்கரணை 10,000 முதல் 35,000 வரையில் அங்கங்கே வேறுபட்டிருக்கிறது. விதையைத் தெரிந்தெடுத்தும், நிலத்தை தகுந்தபடி செப்பனிட்டும் 5,000 கரணையை நட்டோமானால் ஒன்றும் பழுது போகாமல் முளைத்துவிடும். தகுந்த எருவும் நீர்ப்பாய்ச்சலும் களையெடுப்பும் அநுசரிக்கப்பட்டால் நிலமுழுவதும் இக்கரும்பு படர்ந்துவரும். ஆகையால் இப்பத்திரிகையில் குறிக்கப்பட்ட விஷயங்களைப் பரிக்ஷித்து அவரவர்கள் நிலைமைக்குத் தகுந்தவாறு அநுசரிப்பது அவசியம். பல சந்தர்ப்பங்களில் இப்பத்திரிகையில் குறித்திருக்கும் சாதனங்கள் தகுந்தபடி பரிக்ஷையாகாதிருந்தபோதிலும், கரும்பு சாகுபடி சம்பந்தமாய்த் தமிழ்பாஷையில் கிரந்தம் இல்லாததினால் அவ்வாறாவது குடித்தனக்காரருக்கு இது பிரபோஜப்படுமென்று நம்பி பிரசுரிக்கத் துணிந்தனம். நாளாவட்டத்தில் புதிதாக கண்டுபிடிக்கப்படும் அம்சங்கள் அவ்வப்போது சேர்க்கப்படும்.

இதுவிஷயமாய் உதவிசெய்ய கரும்பைப்பற்றிய புஸ்தகத்தை விவசாய விளக்கமென்னும் சாஸ்திரத்தை எழுதுவதற்கு முன் எழுதியிருந்தும், குடித்தனக்காரருக்கு விவசாய விருத்தி விஷயமாய் இன்னமும் ஊக்கம் பிறக்கவில்லையென்று தெரிந்து அதை வெளிப்படுத்தாமல் இருந்துவிட்டோம். சிரமப்பட்டு எழுதிவைத்த விஷயங்கள் சிலருக்காவது உபயோகப்படுமென்று இப்போது அதை வெளிப்படுத்தத் துணிந்தனம்.

### I. கரும்பின் ஜாதி குணங்கள்.

#### போது.

கரும்பு:—கரும்பு புல் சாதியில் சேர்ந்தது. இது மூங்கில்போலிருப்பதால் இதற்குக் கருப்பங்கோலென்றும், கருப்பங்கழியென்றும், பெயர்கள் வழங்குகின்றன. ஒவ்வொரு செடியின் இரசத்திலும் சர்க்கரை இருந்தாலும் அதன் அளவு வெவ்வேறு செடிகளில் வேறுபட்டிருக்கிறபடியால், எதுபட்ட கஷ்டத்திற்குத் தக்கபடி பயன் தரத்தக்கதோ அதுவே சர்க்கரைக்கென்று பயிரிடப்படுகின்றது. உஷ்ண சீதோஷ்ண பிராந்தியங்களில் கரும்பு, தென்னை, பனை, ஈச்சு, கூந்தற்பனை முதலியனவும், கடுங்குளிர் நாடுகளில் பீட்ரூட் என்னும் கிழங்கும், மேபில் என்னும் மரமும், ஒரு வகைச் சோளமும் சர்க்கரைக்கென்று பயிரிடப்படுகின்றன. இவைகளில் லாபகரமாயும் உயர்ந்ததினுசாயும் சர்க்கரை கொடுக்கக்கூடியது கரும்பேயாகையால் அதற்கு சர்க்கரை ராஜன் என்னும் பெயர் கொடுக்கலாம்.

இந்நாட்டில் வெல்லம் சாப்பிடுவது அதிகம். அடுப்புக்கு விறகு உதவுவதுபோல் இது தேகத்தில் சூடு உண்டாக்க உதவுகிறது. நாம் சாப்பிடும் மாவுபதார்த்தங்கள் சர்க்கரையாக மாறின பின்புதான் இரத்தத்தில் சேர்ந்து

தேசத்திற்கு உதவுகின்றன. சர்க்கரை பசியைத் தணிக்கிறதென்பது இளைத்து வரும் பிரயாணிகளுக்குப் பானகம் கொடுப்பதால் விளங்கும். வயிறு ஒட்டியிருக்கும் கூலியாட்களும் எருதுகளும் ஆலையாடும் மாதங்களில் உருத்துக்கொழுப்பது சர்க்கரையின் குணத்தைத் தெரிவிக்கிறது.

அநாதியாகிய வேதங்களும், அதற்குச் சம்மந்தப்பட்ட புராணங்களும், கரும்பைப்பற்றிச் சொல்லியிருப்பதுடன் அது மன்மதனுடைய வில்லென்று கூறியிருப்பதையும் பார்த்து, இதர தேசத்துப்பழைய புஸ்தகங்களில் இதைக் குறிக்காமல் இருப்பதையும் பார்த்தால், இந்தியாவிலிருந்தே கரும்பு மற்றத் தேசங்களுக்குப் பரவியிருக்கவேண்டுமென்று வெள்ளைக்காரர்கள் சொல்லுகிறார்கள். ஐரோப்பிய புராதன கிரந்தங்களில் கற்கண்டை இந்திய உப்பென்றும், வெல்லப்பாகை மூங்கில் தேனென்றும், தெரிவித்திருக்கிறார்கள். ஸெனிகா (*Seneca*) என்பவர் இத்தேன் இந்தியாவில் விளையும் ஒருவித நாணலிருந்து உண்டானதென்று சொல்லி இருக்கிறார். கரும்பு இந்தியாவிலிருந்து அரேபியாவுக்குப் போய் அங்கிருந்து ஈஜிப்டு நாடு சேர்ந்ததாம். கிறிஸ்து பிறந்த 1500 வருஷங்களுக்கு முன் ஸிரியா நாடு சேர்ந்ததாம். அப்போது போர்த்துகல் தேச ராஜாக்களில் ஒருவர் மெடீரா (*Madeira*) முதலிய தீவுகளில் கரும்பைப் பயிரிடும்படி செய்தார். பிறகு அவ்விடங்களிலிருந்து ஐரோப்பாவுக்கு வேண்டிய சர்க்கரையை இறக்குமதி செய்துவந்தார்கள். பின்பு இது ஸ்பெயின் தேசம் போய் 16-வது நூற்றாண்டில் தென் அமெரிக்காக் கண்டத்தில் ப்ரேஜில் நாடு சேர்ந்தது. அங்கிருந்து வட அமெரிக்காவுக்குப் போனதாகத் தெரிய வருகிறது. கற்கண்டுக்குப் பேரெடுத்த சீனதேசத்தில் சுமார் 3,000 வருஷங்களுக்கு முன் கரும்பு இருந்ததாக சாக்ஷிகளில்லை.

---

## COMMERCE AND INDUSTRY.

BY Mr. M. A NELLIAPPA MUDALIAR.

## வர்த்தகமும் கைத்தொழிலும்.

### வர்த்தகமும் தற்காலமும்.

வர்த்தகம் செய்யப்பிரியமில்லாதவர் எவரேனுமுண்டா? இல்லையென்றே சொல்லவேண்டும் ஏனென்றால் சுயேச்சையாக இருக்கலாமென்பது தான் காரணம். இவ்வுலகில் பிறக்கின்ற ஒவ்வொரு மானிடரும், ஏதாவது ஒரு காரியத்தைச் சாதித்துவிடலாமென்பதே அவர் துணிவு. இப்படி நினைக்கிறார்களே யொழிய அவ்விதம் நடப்பது தானில்லை. கடைசியாக மனம்போல் போவதுதான் தீர்மானமாகிறது. இதனால் அவர்களடை-



யும் பலன் ஒன்றுமில்லை. கடவுள் மனிதர்களுக்குப் பகுத்தறிவைக் கொடுத்திருக்கிறார். இன்னும் கல்வி அறிவால் அபிவிருத்தி செய்து மேலான தன்மையை யடையலாம். கல்வி யறிவாலும், நல்லொழுக்கத்தாலும் நல்லோருடன் பழகுவதாலும் உண்டாகிற மேன்மையை ஒரளவிட்டுச் சொல்ல முடியாது. வர்த்தகத்தை அநேகர், கேவலமாயெண்ணி அலக்ஷியஞ்செய்கிறார்கள். இவ்வுலகில் வர்த்தகத்தால் விருத்தியானவர்கள் கோடானுகோடியே. இப்படிப் பொதுவாய்க் கூறிவிட்டதாக நினைக்காதீர்கள். இதற்கு ஒரு உதாரணம் கூறுவாம். ‘கடைக்காரர்கள்,’ ‘வர்த்தகர்கள்’ என்று அலக்ஷியமாய்ச் சொல்லப்பட்ட ஆங்கிலேயர்கள் விடாமுயற்சியாலும வியாபார விர்த்தியாலும் நம்பரத நாடாகிய இந்தியாவை ஆட்சிபுரிகிறார்கள். இன்னும், உலகத்திலுள்ள எல்லா தேசங்களிலும், அவரவர்களுக்கு வேண்டிய பொருள்களை வெகு சொற்பமான விலைக்கு கிட்டும்படி விற்பனைசெய்து, அந்த வர்த்தக யுக்தியினால் ஒவ்வொருவரையும் தங்கள் வசப்படுத்தியிருக்கிற ஜெர்மானியர்களின் சாமர்த்தியத்தை என்னென்று சொல்லலாம். நம் நாட்டில் ஜெர்மனியிலிருந்து வருபவைகள் வேலை உறுதிப்பாடில்லாமலும், சொற்ப விலையாயிருந்து வந்ததாலும், மிகக்குறைவாகவே எண்ணப்பட்டு வந்தன. இப்பொழுது நடக்கும் யுத்தத்தால், ஜெர்மானியருடைய வியாபாரம் எத்தன்மையுள்ளது என்பது நன்கு விளங்குகிறது.

இந்தியாவிலும் நம்மவர்கள் வியாபாரம் செய்யாமலில்லை. அநேகர் அபிவிருத்தி யடைந்திருக்கிறார்கள். சிலர் தம்முன்னோர் போனவழியையே பின்பற்றிச் செய்து வருகிறார்கள். வியாபாரம் இன்னது தானென்று எவரேனும் அறிந்து செய்கிறார்களா வென்பதுதான் கேள்வி. இவ்வுலகில் நம் நாட்டாரைப்போல் வர்த்தகத்தில் பின்வாங்கியவர் எவருமில்லை. எந்த விஷயத்திற்கும் மனம் தான்காரணம். எவரொருவர் மனதை தன் வசப்படுத்துகிறார்களோ அவர்களுக்கு சர்வசித்தியு முண்டாகிறது. ஒருவர் ஒரு தொழிலை யாரம்பித்தால், அதில் நன்றாய்ப் பாடுபடவேண்டும். முதலில் மிகவும் கஷ்டமாகவே யிருக்கும். மனத்தளர்வின்றி விடாமுயற்சி செய்ய வேண்டும் அவரவர் செய்யுந்தொழிலை உன்னத பதவிக்குக் கொண்டுவர வேலை செய்யவேண்டும். வியாபாரமென்பது கடைவைத்துப் பண்டமாற்றல்செய்வது தானா? அப்படியல்ல. இவ்வுலகில் நடைபெறுவனவெல்லாம் வியாபாரம்தான். பிறப்பதும் இறப்பதும் ஒரு தொழிலாய் ஒப்புக்கொள்வோமாயின், மற்றெதை வியாபாரமென்று சொல்லலாகாது.

### 2. யார் வர்த்தகம் செய்யவேண்டும்?

நமது நாட்டில் கல்வி கற்பதெல்லாம் உத்தியோகத்தை விரும்பியேயன்றி வேறல்ல. இவ்வித நோக்க முடையோரா யிருந்தால் வர்த்தகத்தால் எங்ஙனம் செல்வவந்தர்களாக முடியும்? விசேஷக்கல்வி யறிவில்லாதவர்கள்தான் வியாபாரிகளா யிருக்கிறார்களென்பது நன்றாய் விளங்குகிறது.

ஏனைய நாட்டிலோ கல்வி கற்றவர்கள் தான் வணிகத்தொழில் செய்து வருகிறார்கள். ஜாதித்தொழில் பிரஞ்ந்துள்ள இக்காலத்தில் எவர்தான் வர்த்தகம் செய்யக்கூடாது. மனுவின்காலத்தில் ஏற்பட்டதாகச் சொல்லும் ஜாதி வகுப்பில் வர்த்தகர்களாகிய வைசியர்கள் ஒரு தனி ஜாதியாராக வேற்படுத்தப்பட்டிருந்தார்கள். இப்பொழுது இன்னவர்தான் செய்யலாம் என்று கிடையாது. கல்வி கற்ற நிபுணர்கள் வர்த்தகத்தில் உழைப்பார்களாயின் அதுவே இந்தியாவின் மேன்மைக்கு ஓர் அரிகுறியாகும். கற்றவர் செய்யும் தொழிலுக்கும் கல்லாதார் புரியும் தொழிலுக்குமுள்ள வித்தியாசம் எல்லையற்றிருக்கும்.

### 3. எப்படி வர்த்தகம் செய்கிறது ?

வர்த்தகம் செய்கிறதற்குப் பழக்கம்வேண்டும். அதற்கு வியாபாரிகளிடத்தில் பழகியிருத்தல் நன்று. வர்த்தகத்தொழிலை அறிந்து கொள்வதற்குப் பாடசாலை கிடையாது. அனுபவமே (Practical experience) மேலானது. வர்த்தக விர்த்திக்காக ஏற்பட்ட பத்திரிகைகளையும், வர்த்தகத்தால் விர்த்தியானவர்களின் சரித்திரங்களையும் படிப்பதால், மனோவிசாலம், யுக்தி, சாமர்த்தியம், முதலியன உண்டாகும். கற்றுத் தேர்ந்த தொழிலாளிகளைவிட அதிக அனுபவமுள்ளவர்களே விற்பன்னர்களாயிருக்கிறார்கள்.

---

# PART IV.

## HINDU LAW.

## ஹிந்துலா.

### Maintenance—ஜீவனாம்சம்.

கேழ்வி.—உயில்களைப்பற்றிய விஷயங்களை நன்றாக அறிந்துகொண்டோம். இனி ஜீவனாம்சம் என்ற விஷயத்தைப்பற்றிச் சொல்லக்கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஜவாப்.—அப்படியே செய்வோம். ஜீவனாம்சமென்பது என்ன? அது கொடுக்கும் பொறுப்பு யாரைச்சேர்ந்தது? அது எப்பேர்ப்பட்ட நிலைமையில் கொடுக்கவேண்டும் என்பது எல்லாம் உங்களுக்கு விபரமாகத் தெரியுமா?

கே.—எங்களில் சிலருக்கு ஷை விஷயங்கள் தெரியும். சிலருக்குத்தெரியமாட்டாது. ஷை விஷயங்களை அறிந்தவர்களும்கூட தங்களிடமிருந்து



பூர்ணமாக அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். ஆகையால் ஜீவனாம்சம் என்பது என்னவென்பதிலிருந்தே ஆரம்பித்து விபரமாகச் சொல்லக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஜ.—அப்படியானால் சொல்லுகிறேன், கவனமாகக் கேளுங்கள். ஜீவனாம்சம் என்பது, பொதுக் குடும்பத்தில் சாஸ்திரபடி பாகம் கிடைக்காதவர்களாக யிருக்கிறவர்களுக்கு, போஜனம், வஸ்திரம், கலியாணம், சடங்கு முதலியதுகள் சரிவர நடக்கவேண்டியதற்காக கிடைக்கவேண்டிய பொருள் உதவிதான்.

கே.—பொதுவாக ஒரு குடும்பத்திலுள்ளவர்களைக் காப்பாற்றும் பொறுப்பு யாரைச்சேர்ந்தது. அந்தப் பொறுப்பு எதுவரை யிருக்கும்.

ஜ.—குடும்பம் அவிபக்த நிலைமையி லிருக்கும்பொழுது குடும்பத் தலைவனானவன் குடும்பத்தைச் சேர்ந்த ஆண் பெண் முதலிய எல்லோரையும் குடும்பச் சொத்திலிருந்து ஸம்ரக்ஷிக்கவும், அப்போதைக்கப்போது குடும்பத்தில் நடக்கவேண்டிய விவாகாதி சுபசோபனங்களையும் பல வைதீகச் சடங்குகளையும் நடத்திவரவும் கடமைப்பட்டவனாகயிருக்கிறான்.

கே.—இப்படி குடும்பத் தலைவனுக்குக் கடமை ஏற்பட்டதற்குக் காரணம் என்ன?

ஜ.—ஆண் ஸந்ததியின்றி அவிபக்த நிலைமையிலேயே இறந்துபோகும் பாகஸ்தனுடைய பங்கு பாத்தியமானது அவனுக்குப்பின் மற்றப் பங்காளிகளை ஸர்வைவர்ஷிப் என்னும் பாத்தியப்படி யடைகிறபடியால், அவ்விதம் அடைகிறவர்கள் இறந்தவனுடைய விதவையையும் விவாகமாகாத பெண்களையும் ஸம்ரக்ஷணை செய்யக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். (இ. லா. ரி. 17-பம் 198.)

அல்லாமலும் அந்தப் பெண்களுடைய விவாகாதி சுபசோபனங்கள் யாவும் அப்பங்காளிகளாலேயே நடத்தப்படவேண்டும். இ. லா. ரி. 22-மது 512.

கே.—அப்பேர்ப்பட்ட பெண்களுக்கு கல்யாணத்தை நடத்திக் கொடுத்துவிடுவதோடு ஸர்வை வர்ஷிப் பாத்தியப்படி சொத்தை அடைகிறவர்கள் பொறுப்பு நீங்கிவிடுமா அல்லது அப்பெண்களுக்கு மென்மேலும் செலவழித்துக்கொண்டே யிருக்கவேண்டுமா?

ஜ.—அவர்கள் கல்யாணச் செலவுமின்றி கிரகப்பிரவேசம் சாந்திமுகூர்த்தம் முதலானவைகளும் குடும்ப சொத்திலிருந்து செய்யப்படவேண்டும். இ. லா. ரி. 26-மது 497. பிராம்மணர்களுக்குள்ளும் ப்ரௌடையாவதற்கு முன்னமேயே விவாகம் செய்துவிடுகிற மற்ற ஜாதியார்களுக்

குள்ளும் சாந்திமுகூர்த்தத்துக்குப் பிறகு பெண்களுடைய சம்ரக்ஷணை அவர்களுடைய புருஷனையும் புருஷன் குடும்பத்தாரையுமே சேர்ந்து விடுகிறது. இ. லா. ரி. 28 கல் 279. இ. லா. ரி. 23 பம் 291.

கே.—மேற்சொன்னபடி விதவைகளுக்கும் அவர்களுடைய பெண்குழந்தைகளுக்கும் ஜீவனாம்சம் கொடுக்கவேண்டியது தவிர வேறு யார்யாருக்கு ஜீவனாம்சம் கொடுக்கவேண்டும்?

ஜ.—குடும்பத்திலுள்ள குஷ்டரோகி, பிறவிக்குருடு, செவிடு, பைத்தியம், மொண்டி, முடம், சப்பாணி, நபும்ஸகர், ஊமை முதலானவர்களுக்கும் ஜீவனாம்சம் கொடுக்கவேண்டும்.

கே.—இப்பேர்ப்பட்டவர்களுக்குக் கலியாணமாயிருந்தால் அவர்களுக்கு தாயபாத்தியமுண்டா. அல்லது ஜீவனாம்சமதானா?

ஜ.—இப்பேர்ப்பட்டவர்களுடைய பெண்சாதிகளுக்கு தாயபாத்தியம் கிடைக்கமாட்டாது. ஜீவனாம்சம் தான் கிடைக்கும். அவைகளையும் ஷையார்களுடைய பர்த்தாவுக்கு ஜீவனாம்சம் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள் கொடுப்பார்கள். இவர்களுக்கு தத்துபிள்ளைகளிருந்தாலும் அவர்களுக்கும் ஜீவனாம்சம் ஷையார்களே கொடுப்பார்கள். இ. லா. ரி. 8. மது 325.

கே.—சாதாரணமான குடும்பங்களில் ஜீவனாம்ச பாத்தியதை இப்படியாகில் பாகார்கமில்லாத ஜமீன் முதலியதுகளில் ஜீவனாம்சப் பாத்தியதை எப்படி?

ஜ.—பாகார்த்தமில்லாத ஜமீன் முதலிய சொத்துக்கள் குடும்பத்தில் மூத்தவனாகயிருக்கிறவனுக்கே சேர்ந்ததாகயிருந்தாலும் அவனுடைய தாயாதிகளான மற்றக் குடும்பஸ்தர்களும் அவர்களின் பெண்டுபிள்ளைகளும் அந்த சொத்திலிருந்து ஜீவனாம்சம் பெறத்தக்கவர்களாக யிருக்கிறார்கள் (7-மூ-இ-அ.18; 9 மூ-இ- அ. 66; 12 மூ-இ-அ. 203.)

கே.—விதவைகள் சம்மந்தப்பட்டமட்டில் ஜீவனாம்சத்தைப்பற்றி விபரமாகச் சொல்லவேண்டும்.

ஜ.—பொதுக் குடும்பத்தில் ஒருவன் பிறந்தால் அவன் பெண்சாதி மைனராயிருந்தாலும், பெரியவளாயிருந்தாலும் அவளுக்கு குடும்பத்தலைவன் ஜீவனாம்சம் கொடுக்கவேண்டும்.

கே.—ஜீவனாம்சம் பெற்றுக்கொண்ட விதவை குடும்பத்துடனேயே யிருந்து காலக்ஷேபம் செய்யவேண்டுமா? அல்லது பிரத்தியேகமாக குடியிருக்கலாமா?

ஜ.—ஜீவனாம்சம் பெற்றுக்கொண்ட விதவை தனியாகவும் இருக்கலாம். (12. கல். லா. ரி. 238; 5 மது. ஹை. கோ. ரி. 150; இ. லா. ரி. 3. பம் 372; இ. லா. ரி. 6 மது 85; இ. லா. ரி. 14. பம் 490.)



# PART V.

## CO-OPERATION.

## கூட்டுறவு.

By Mr. O. M. VENKATANATHA AIYANGAR.

### LOANS IN THE CO-OPERATIVE CREDIT SOIECTIES.

### ஐக்கிய நாணயச் சங்கங்களில் கடன்கள்.

ஐக்கிய நாணய சங்கங்களில் சேரப்பட்ட ஒவ்வொருவனும் தனக்கு வேண்டிய பண உதவியை அடைவான் என்பதில் தடையில்லை. சாதாரணமாக நாணயச் சங்கத்தில் சேர்ந்தவர்கள் ஐக்கிய பத்தியத்தின் தத்வம் அறிந்து நடப்பதில்லை என்பது ஒருவாறு ஊகிக்கவேண்டியதிருக்கிறது. ஒருவன் ஒரு சங்கத்தில் கடன் பெறுகிறதாக இருந்தால் முதலில், கடன் வாங்குகிறவனும் கடன் கொடுப்போரும் ஆக இருவரும் சற்று ஆழ்ந்து ஆலோசிக்க வேண்டும். இரண்டாவது, கடனுக்கு பொருப்பு என்னவென்று ஆராய வேண்டும். மூன்றாவது, கடனை, திருப்பி கொடுக்கவேண்டிய வழியை ஸ்திரப்படுத்த வேண்டும். நான்காவது, கடன் பெற்றால் அதை துர்விநியோகம் செய்யாமல் கொண்டகாரியத்திற்கே செலவிடவேண்டும். ஐந்தாவது, அப்படி கடன் கொடுத்த பஞ்சாயத்துதாரர்கள் கடன் பெற்ற மெம்பரின் பேரில் கவனம் வைத்து வாங்கின காரியத்திற்காக உபயோகப்படுத்தி அதன் காரியம் சாதகமாயிற்றா என்று ஆராய்ந்து சற்று கவனிக்கவேண்டும். ஆகிய இந்த 5 விஷயங்களை கவனித்தால் தான் கடன் பெறுகிற மெம்பரும் கடன் கொடுக்கப்பட்ட பஞ்சாயத்தாரும் கூட்டுறவின் தாத்பரியத்தை உணர்ந்தவர்களாவார்கள். இல்லாவிடின் மற்றவர்களிடத்தில் கடன் பெற்று காரிய சாதகமின்றி கடன்காரருக்கு இரையாக வேண்டுமென்பதில் தடையில்லை.

இது விஷயமாய் சற்று விவரமாய் கவனிப்போம். முதல் முதல் சொல்லப்பட்ட கடன் வாங்குபவனும் கடன் கொடுப்பவனும் யோசிக்க வேண்டியதாவது, கடன் வாங்குவதற்கு முக்கியமாய் "காரணம் அல்லது நிமித்தம்" வேண்டும். ஐக்கிய நாணயச் சங்கங்களில் எளிதில் கடன் கிடைப்பது தன் இஷ்டப்படி செலவு செய்வதற்கல்ல முக்கியமாய் கடன் வாங்க "நிமித்தியம்" அல்லது காரணத்தை யோசிப்பதனால், வாங்கிய கடன் தொகையை வீணில் உபயோகப்படுத்த வழி உண்டாகாது. தவிரவும் கடன் வாங்குகிற காரணம் சரியா? என்று யோசிக்கும்பொழுது வாங்குகிறவனுக்கு சரி என்றே தோன்றும். அப்படி ஒருவனுக்கு சரி என்று தோன்றும்விஷயத்திற்கெல்லாம் கடன் கொடுப்பதாக இருந்தால் எவ்வளவு ஏராளமான பணம் இருந்தாலும் நாணய சங்கத்தால் கொடுத்துமுடியாது. அதற்கு என்ன செய்ய வேண்டுமென்றால் கோரிய கடனால் பலன் என்ன கிடைக்கும் என்று

யோசித்துகடனை கொடுக்கவேண்டும். கடன் கொடுப்பதும் வாங்குவதும் Productive Purpose) விருத்திகரமான காரியத்திற்காக இருக்கவேண்டும். எல்லாம் விருத்திகரந்தான், உலகத்தில் கெட்டுப்போவது ஒன்றுமில்லை யென்று வாதிக்கும்படியான விஷயமல்ல இது. உதாரணமாக ஒருவன் கல்லியாணம் செய்வதற்காக கடன் பெறுகிறதாகவும், மற்றொருவன் உழுது பயிர் செய்வதற்காக கடன் பெறுவதாகவும் வைத்துக்கொள்வோம். இந்த இரண்டு விஷயங்களும் யோசிக்குமளவில் முக்கியமான விஷயங்களாக ஏற்படுமேயல்லதுவேறில்லை. இப்பொழுது கூட்டுறவு தொழில் விஷயத்தில் ஆராய்ந்து யோசிக்குமளவில், கல்லியாணத்தைக்காட்டிலும் உழுதுபயிர் செய்ய மாடு வாங்கும் காரணம் மிக முக்கியமாகும். அதாவது மாடுவாங்குவதால் உழுது பயிர் செய்து கடனை அடைக்கவும் அதன் நிமித்தமாக ஜீவனம் செய்யவும் வழி ஏற்படுகிறது. ஆனால் கல்லியாணம் செய்து கொள்வதில் அதிக பலன் உண்டாகும் என்பதற்கு சுகுணமான வாதங்களைச்சொல்லலாம். ஆனால் கல்லியாணத்திற்கு கடன்வாங்குவது பொருள் விருத்தியாகி அதனால் பலன் அடையக்கூடிய விஷயமாககூட்டுறவினர்கள் கருதலாகாது என்று சொல்ல நான் துணிவேன். அதற்குப் போதுமான காரணங்களையும் எடுத்துச்சொல்லலாம். சொல்லுமிடத்து இடம் அதிகம் கொள்ளுமாதலால் இம்மட்டில் நிறுத்துவதே உசிதமாகும். ஆகையால் கடன் வாங்குகிறவரும் கடன் கொடுப்போரும் இருவரும் கடனுக்கு நிமித்தத்தை யோசிக்கவேண்டும். தவிரவும் பணத்திற்குதட்டுதல் உண்டான இக்காலத்தில் மிகசெட்டாக இருக்கவேண்டும்.

இரண்டாவது விஷயமாகிய பொறுப்பை யோசிக்கவேண்டும். பொறுப்பு இல்லாமல் யாரும் கடன் கொடுக்கமாட்டார்கள் என்பது திண்ணம். இதில் நிலம் அல்லது வீடு முதலிய ஸ்தாவர சொத்தின்மேல் கடன் கொடுத்தால் கடனுக்கு அழிவு ஒன்றும் யேற்படாதென்று நினைக்கலாம். அது சரிதான். ஆனால் கூட்டுறவின் உணர்ச்சிக்கும் நாணயத்திற்கும் இந்த விஷயம் அப்படி யல்ல. ஆகையால் ஒரு ஐக்கிய நாணயச் சங்கத்தில் சேர்ந்தவர்களில் இருவர் அல்லது அதற்குமேல்பட்ட மெம்பர்களின் ஜாமீன்பேரில் தான் கடன் கொடுப்பது மிகுந்த உசிதமாகும். பெரிய தொகையான கடன்கள் கொடுக்கும் காலங்களில் அசையாப்பொருள்களின்மேல் கொடுப்பது சரியான காரணமாகலாம். ஆனால் சிறு கடன்களாக பட்டுவாடாச் செய்யும் காலங்களில் நபர் ஜாமீன்பேரில் கொடுத்தால்தான் சுலபமாக வேலைகள் முடியும். அதாவது பெற்றுக்கொள்ளும் கடனை வசூல் செய்வதும் சுலபமாகும். இதன் விஷயமாக பின்னால் விரிவாகச் சொல்வோம். தன்னை நம்பும்படி நடவடிக்கை இல்லாத ஒருவனுக்கு ஒருவரும் ஜாமீனாக நிற்கமாட்டார்கள். அப்பேர்ப்பட்டவனுக்கு கடன் கொடுத்தாலும் திருப்பி வசூலிப்பது கஷ்டமாகும். நபர் ஜாமின்பேரில் கடன் கொடுத்தால் ஜாமீன்தாரருடைய தொந்திரவினாலோ அல்லது அவர்களுடைய நாணயத்தாலோ கடன் வசூ



லாகி விடுவதோடு கூட்டுறவின் தாத்பரியமும் நிறைவேறி விருத்தியடையும் என்பதில் தடையில்லை.

மூன்றாவது விஷயமாகிய கடனை திரும்பச் செலுத்தும் வழியை ஸ்திரப்படுத்தவேண்டும். அதாவது, ஜீவனோபாயத்துக்காக கடன் வாங்கி அந்தக் கடனைக்கொண்டு ஜீவனம் ஏற்படுத்திக்கொள்பவனுக்கும் ஏதோ மற்று உற்பத்தி செய்யும் (Productive) விஷயத்திற்கு கடன் வாங்குகிறவனுக்கும்சற்று வித்தியாசமுண்டு. உதாரணமாக ஜீவனத்திற்கே வழியில்லாத ஒருவனுக்கு ஒரு சுவல்ப முதலில் அதாவது 10 அல்லது 15 ரூபாயில் கடை வைதது வியாபாரம் செய்யவோ அல்லது பயிர்த்தொழில் செய்பவனுக்கு வரப்பட்ட வரும்படியைக்கொண்டுகடனை திருப்பிக்கொடுக்க வழி இருக்கும் என்று சாதாரணமாக யோசித்து கடன் கொடுத்துவிடலாம். ஆனால், சுமார் 25 ரூபாய்க்குமேல் ஒருவனுக்கு கடன் கொடுப்பதாக இருந்தால் ஷை தொகையைத திருப்பி கொடுக்கும் சக்தி இருந்தால்தான் கடன் கொடுக்கலாம் இல்லாவிடில் ஆழ்ந்து யோசிக்க வேண்டிய விஷயமாகும்.

நான்காவது விஷயம் மிக முக்கியமானது. பணம் வாங்கினவுடன் வாங்கினவேலைக்கு உபயோகப்படுத்தாமல் மற்றும் அவசரமான செலவுகளுக்கு உபயோகப்படுததிவிடக்கூடும். எப்பொழுதுமே பணம் சோதனைக்கு உள்பட்ட விஷயம். இது விஷபரிக்ஷையாக நேரிடும். ஆகையால் இது விஷயத்தில் பஞ்சாய்த்து தாரர்கள் கடன் கொடுத்தபிறகு நிதாக்ஷணியமாக கவனித்தால்தான் பிரயோசனப்படும். இல்லாவிட்டால் கஷ்டம் நேரிடும். வாங்கின கடன் எம்மட்டில் எந்த காரியத்திற்காக செலவழிந்ததோ அந்த காரியம் முடிந்தபிறகு ஏதும் பணம் மிகுதி இருந்தால் அதைஇந்த கடனுக்கே மறுபடி செல்லுவைத்து விடவேண்டும். அப்பொழுதுதான் கூட்டுறவின் தாத்பரியம் பலித்ததாகஎண்ணலாம்.

ஐந்தாவது விஷயமாகிய கடன் வாங்கினவன் கடனைத் திருப்பி செலுத்துவதற்காக அவனை பஞ்சாயத்துதாரர்கள் கவலையுடன் பாதுகாத்து அப்போதைக்கப்போது வரப்பட்ட லாபத்தை அவன் வேறுவிதமாக உபயோகப்படுத்திவிடாமல் கடனுக்கே செலலாகி வரும் விதத்தை கவனிக்க வேண்டும். அப்போதைக்கப்போது அவனுக்கு புத்திமதிகளைச் சொல்லி வரும்படியை அதிகப்படுத்தும்படியான முயற்சி செய்யவேண்டும். முதலில் சொன்ன நான்கு விஷயங்களையும் செமமையாக கவனிக்கும் பக்ஷத்தில் 5-வது விஷயம் தானாகவே ஏற்படும்.

ஆகையால் ஐக்கிய நாணயச் சங்கத்தில் கடன் கொடுப்பது வாங்குவது விஷயங்களுக்கு தக்க காரணங்களும் யோசனைகளும் இருக்கவேண்டியது இன்றியமையாததாகும்.

# PART VI.

## EDUCATION.

BY Mr. K. P. SESHADRI AIYANGAR,
*(Teacher, Muthiyalpet High School.)*

## கல்வி.

(244-ம் பக்கத் தொடர்ச்சி.)

இங்கிலாந்து, அமெரிக்கா இந்நாடுகளில் பெரிய கிரந்தங்கள் எழுதுவோர் உபாத்தியாயர்களே யாதலின் அவர்களுடைய கீர்த்திக்கு ஒருநாளும் குறைவில்லை.

மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் இவ்வுலகத்தில் தன் ஜீவ்யதசையில் ஏராளமாகப் பணம் சேர்க்கவேண்டுமென்று ஆவல் கொண்டவராகவேயே யிருக்கிறார். பணமுள்ளவர்கள்தான் இக்காலத்தில் ஒரு மாதிரியாய் கௌரவத்தை யடைகிறார்கள். உபாத்திமைத்தொழிலை மேற்கொண்டவர்களுக்குச் சம்பளம் கொஞ்சம் என்று எண்ணுகிறார்கள். இது உண்மையே. இந்த விஷயத்தில் நமது வைஸ்ராய் டில்லியில் நடந்த கான்பரன்ஸில் உபாத்தியாயர்களின் சம்பளத்தைக் கொஞ்சம் உயர்த்தவேண்டும் என்று பேசியிருக்கிறார்.

உபாத்திமைத் தொழிலில் பிரவேசிக்கிறவர்களின் குணம் சீக்கிரத்தில் மாறிப்போகிறதென்று சிலர் சொல்லலாம். புத்தியற்ற பிள்ளைகளுடன் நாள் முழுவதும் உழைத்தும் என்னசொல்லிக் கொடுத்தாலும் தெரிந்துகொள்ளக்கூடாமை கண்டு கோபதாரிகளாய் விடுவார்களென்பதும், தாம் பள்ளிக்கூடத்தில் ஸ்வயாதிகாரம் செலுத்துவோரானகையால் வெளியில் மற்றவர்களிடத்தில் சம்பாஷிக்கும்போது அலக்ஷ்யத்துடனும் கர்வத்துடனும் நமக்கு மிஞ்சினவர்கள் இல்லையென்றும், வாக்சாதுர்யத்திலும் போதனாமுறையிலும் தனக்கு மிஞ்சினவர்கள் கிடையாது என்ற மனப்பால் குடித்து மமதை யுடனிருப்பார்களென்பதும் சிலர் கருத்து. உபாத்தியாயர் ஒருவருடனும் கலக்காமல் பள்ளிக்கூடம் உண்டு தானுண்டு என்றிருந்தால் அப்படிக்குணம் மாறிப்போகுந்தான். ஆனால் அவர்கள் மேல்மேலும் படித்துக்கொண்டும் தம்மினும் பெரியோர்களுடன் பழகிக்கொண்டும் இதர விஷயங்களில் கலந்துகொண்டும் இருந்து வருவார்களேயாகில் மேற்சொல்லிய கெடுதிகள் நேரிடாது.

### உபாத்திமைத் தொழிலிலுள்ள சில அனுகூலங்கள்.

உபாத்யாயருக்குக் குறிப்பிட்ட காலப்படிதான் வேலை. அதாவது காலை 10-மணிக்கு வேலை ஆரம்பித்து மாலை 5-மணிக்கு வேலை முடிகிறது. இதனடுவில் பகலில் ஒரு மணிநேரம் அவகாசமிருக்கிறது. இந்த வேலை ஆரம்பிப்பதன் முன்பும் முடிந்த பின்பும் உபாத்யாயர் தன்னிஷ்டப்



படி காலத்தைக் கழிக்கலாம். மற்றவர்கள் சங்கதி அப்படியல்ல வர்த்தகர்கள், வக்கீல்கள் இவர்களுக்கு நாள்முழுவதும் வேலையில்லாமற்போனாலும் யாராவது வரக்கூடும் என்ற எண்ணத்தால் சதா காத்துக்கொண்டிருக்க வேண்டுமேயொழிய தமக்கு இஷ்டமான வேறு வேலையில் பிரவேசிக்கமுடியாது. இன்னும் சில சமயங்களில் இவர்களுக்கு அல்லும் பகலும் ஓய்வென்பதே கிடைப்பதில்லை. உபாத்யாயருக்கு மாத்திரம் சௌகர்யமதிகம். அவருக்கிருக்கும் அவகாசத்தைத் தம் தேகப்பயிற்சியிலும் மற்ற விஷயங்களிலும் கழித்துச் சுகமாயிருக்கலாம். ஆனால் தற்காலத்திய உபாத்யாயர்கள் பிள்ளைகளுக்கு "ப்ரைவேட்" சொல்லிக்கொடுத்துப் பணம் சம்பாதிக்க ஆசை கொள்கின்றனர். பிள்ளைகளை மந்தையாக வீட்டில் மடக்கி வைத்துக்கொண்டு பிள்ளை ஒன்றுக்கு இவ்வளவு என்று ஏற்படுத்திக்கொண்டு திரவியம் சம்பாதிப்பதில் கண்ணுடையவர்களாக விருக்கின்றனர். இது விஷயத்தில் அத்தொழிலிலுள்ளவர்களுக்குள் சண்டையும் ஆக்ஷேபங்களும், சமாதானங்களும் அதிகமாக ஏற்படுகின்றன. ஆகக்கூடி இந்தப் பிரைவேட் வைத்துக்கொள்வது எதற்காக? என்று கேள்வி பிறக்குமானால் உபாத்யாயர்களுக்கு சம்பளம் குறைவாயிருப்பதுதான் அதற்குக் காரணம். பட்டணங்களில் எல்லா வஸ்துக்களும் கிராக்கியென்பது யாவரும் அறிந்த விஷயம். முதல் முதலில் கவனிக்கப்படவேண்டிய விஷயம் வசிக்க இடம். அந்த இடத்திற்கு வாடகை அதிகம். தனக்குச் சம்பளம் வருவதில் மூன்றில் ஒருபாகம் வாடகைப் போய்விட்டால் அவன் மற்ற செலவிற்கு என்ன செய்வது? வேறு விதத்தில் பணம் சம்பாதிக்கவேண்டியவனாகிறான். அவனுக்கு வேறு வேலை ஒன்றும் தோன்றாததனால் பிள்ளைகளுக்கு வீட்டில் பாடம் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்து அதனால் வீட்டு வாடகைக்காவது பணம் சம்பாதித்துக் கொள்கிறான். கொஞ்சம் சமர்த்தர்கள் தங்கள் சம்பளத்தைப் பொருட்படுத்தாமலே பிரைவேட்டில் மாத்திரம் 50, 60 ரூபாயும் சம்பாதிக்கிறார்கள். உபாத்திமைத்தொழிலில் இதுவும் ஒரு பெரிய சௌகரியம் என்று சிலர் சொல்லுகிறார்கள்.

கணக்குத் தப்பாய்விட்டதே, பணம் குறைந்திருக்கிறதே, என்ன செய்வது, கணக்கெழுதாதுவிட்டோமா? மேலதிகாரிக்கு என்ன சொல்வது என்ற பணப்பொறுப்பு இந்தத் தொழிலில் கிடையாது. பரிதானம் வாங்குகிறது, முதலிய தப்புக் காரியங்களுக்கு இதில் இடம் கிடையாது. சில துரைத்தன உத்தியோகங்களில் சேவகம் செய்வதில் ஒருநாள் தள்ளுவது நித்தியகண்டம் பூரணாயுசு என்பதைப்போல் வெகு கஷ்டம் என்று சிலர் சொல்லுகிறார்கள். அவ்வளவு கண்டங்களும் கஷ்டங்களும் இந்த உத்யோகத்தில் கொஞ்சமும் கிடையாது. உபாத்யாயர்கள் தமக்குத் தெரிந்ததைத் தம்மால் கூடியமட்டில் சொல்லுவிப்பதைத் தவிர ஒன்றும் பிசகுசெய்ய அவசியமில்லை. சாவகாசம் அதிகமாயிருக்கிறபடியால் மேன்மேலும் படித்து ஞானபிவிருத்தி செய்துகொள்ள இடமுண்டு. மற்ற வேலையி

விருப்பவர்களுக்குத் தங்கள் உத்யோகத்தைப்பற்றிய கவலையே மேலிட்டிருக்குமேயொழிய புதிய சங்கதிகளைப் பார்த்துத் தெரிந்துகொள்ள அவகாசமிராது. அப்படிச்செய்ய உபாத்யாயர்களுக்கு போதுமான அவகாசமிருப்பதுடன், படித்துக்கொண்டேயிருப்பது அவர் வேலைக்கு மிக்க அவசியமாகையால் ஞானபிவிர்த்தி யடைவதற்கு வழியுண்டு.

பிறருக்குச் சொல்லிக்கொடுப்பதால் நமக்குத் தெளிவுண்டாகும். நாம் படித்து அறிந்துகொள்வது சுலபம். அப்படி யறிந்துகொண்டதை மற்றவர்கள் மனதில் பதியவைப்பது மிகவும் கஷ்டம். நாமே வாசித்துக்கொண்டு போகும்போது எல்லாம் தெரிந்துவிட்டாற் போலதோன்றும். பிறருக்குத் தெளிவாக்கும்பொருட்டு நாம் நம்முடைய சந்தேகங்களையெல்லாம் தீர்த்துக்கொள்ளவேண்டும். அதனால்தான் புத்திதெளிவு ஏற்படும்.

உபாத்யாயருடைய வேலை முழுவதும் பிறருக்கு நன்மை செய்வதே. வங்காளபாஷா நிபுணராயும், ஆங்கிலபாஷையில் பள்ளியில் படியாமலே வரத்தினால் கவிஞன் என்ற கியாதிபெற்றவரும் பெரிய இருந்திப்பரிசம் பெற்றரும் நம்தேசத்துக்கே தூண்டாமணியாய் விளங்குபவராயும் உபாத்யாயர்களுக்கே திலகமாயுமுள்ள ஸர். ரபீந்த்ரநாத் டாகூர் என்பவர் சாந்திநிகேதனம் என்னும் பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்திருக்கிறார். அதில் பதினொரு வயதுக்குட்பட்ட பாலர்கள் எந்த ஜாதியைச் சேர்ந்தவரானாலும் சேர்த்துக்கொண்டு அவர்களுக்கு ஆகாரம் உடை வித்யை இம்மூன்றையும் தானே உதவுவதாக ஏற்பாடு செய்திருக்கின்றார். அவருடைய உதாரசிந்தையும் கவித்திறமையும் தேசோபகாரமும் இத்தனையதென்று வரையறுத்துச் சொல்ல ஒருவராலும் முடியவே முடியாது. அவருடைய பெயரைச் சொல்லாதவர்கள் இந்தப் பிரபஞ்சத்தில் எங்கும் கிடையாது.

ஏற்கனவே குறித்தபடி பிள்ளைகளுடைய மனம், தேகம், நடத்தை முதலியவைகளைச் சீர்திருத்தி, லோகத்தில் ஸத்காரியங்களைச் செய்யும்படி அவர்களை ஆளாக்குவதைப்பார்க்கிலும் ஒருவன் செய்யக்கூடிய தேசோபகாரம் வேறு என்ன இருக்கிறது?



# PART VII.

## NEWS AND NOTES.

## ஸமாசாரக் குறிப்புகள்.

### யுத்த நன்கொடை.

இங்கிலாந்திற்கு வெளியிலுள்ள ஓவர் ஸீஸ் கிளப்பின் தலைமை ஸ்தானத்தில் சென்ற நவம்பர் மாதத்தில் மட்டும் யுத்தக் கஷ்ட நிவாரணார்த்தம் சேரப்பெற்ற தொகை 14,509 பவுனும். ஆனால் யுத்தவாரம்பம் முதல் மேற்படி கிளப்பாரது முயற்சி காரணமாக நாளது வரையிற் சேர்ந்திருக்கும் மொத்தம் 5,41,346 பவுனும்.

### ஸ்கூல் பிள்ளைகளின் அனுதாபம்.

ட்விக்கன்ஹாம் என்பது இங்கிலாந்திலுள்ள ஒரு கிராமம். யுத்தவாரம்பம் முதல் பல ஜனங்கள் தத்தம்மாலானவரையில் யுத்தக்கஷ்ட நிவாரணார்த்தம் பொருள் சேகரித்து உதவி செய்வதை ட்விக்கன்ஹாம் ஸ்கூல் மாணவர்கள் உணர்ந்து தாமும் ஏன் உதவி செய்யலாகாதென்று ஒன்றுகூடி ஆலோசித்தார்கள். மற்றெவர்க்கும் மனத்திற்றோன்றாத ஒருபாயம் அக்கிராம பாடசாலை மாணவர்க்கு உதித்தது. அக்கிராம பாடசாலையில் இரண்டு பிரிவுகளுண்டு; பாலர் பகுதி யென்றும் பாலிகை பகுதி யென்றுமாம்; ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வோர் உண்டிப்பெட்டி வைத்துப் பிரதி வாரத்திலும் ஒவ்வொரு பென்னி (ஓரணா) ஆக பாலிகையாகட்டும் பாலராகட்டும் உதவுவதென்று தீர்மானஞ்செய்து கொண்டார்கள்; அவ்விதமே உண்டிப்பெட்டி வைக்கப்பட்டதும், அக்கிராம பாடசாலையிலோதும் மாணவர் மாணவிகள் முதலினோர் யாவரும் தமது தீர்மானப்படி பணம்போடலாயினர். பலதுளி பெரு வெள்ளம்; இன்று காணியாயிருப்பது நாளை கோடியாவது ஸகஜந்தானே. அதுபோல சென்ற வருஷத்துச் சேர்மானங்களை டிவிக்கன்ஹாம் பாடசாலை யதிகாரிகள் கணக்கெடுத்துப் பார்த்த போது 2234 பவுன் 18 ஷில்லிங் 10 பென்சு இருந்ததாம். நமது தேசத்திலுள்ள பாலர் பாடசாலையிலும் பாலிகா பாடசாலையிலும் இங்ஙனம் செய்வது எவ்வளவோ உசிதமாகுமே. பரோபகாரமான இவ்விஷயத்தை ஸ்கூல் தலைவர்கள் தம்மாணவர்க்கு எடுத்துரைப்பது நலம்,

### தபால் ஸ்டாம்புகள் திருட்டுப் போயின.

கல்கத்தாவிலுள்ள ஸ்டாம்பு சூபரிண்டெண்டெண்டா பீசிலிருந்து இம்மாதக் கடைசி வாரத்தில் ஆயிரம் ரூபா பெறுமான ஒரணா ஸ்டாம்புகள் காணமற்போயினவாம். 'க்வாலியர் சமஸ்தான ஸர்விஸ்' என்று அந்த ஸ்டாம்புகளின் மீது ஹிந்தி பாஷையில் அச்சிடுவதன் நிமித்தம் மேற்படியாபீசுக்கு பல்லாயிரம் ரூபாய்க்கணக்காக ஸ்டாம்புகள் அனுப்பப்பட்டிருந்தன; கடைசியிற் கணக்கிடுகையில் ஆயிரம் ரூபா தலைகளைக்காணோம்; அந்த ஸ்டாம்புகள் குவாலியர் சமஸ்தானத்தைச் சேர்ந்தவையாதலால், அந்நஷ்டத்தை அச்சமஸ்தானத்தவரே வகிக்கும்படியாக விருக்கும்.

### திருடினால் தண்டனையுண்டு.

ஸ்காட்லாண்டு தேசத்திற்குக் கிழக்காயுள்ள சமுத்திர மண்டலப் பிரதேசத்தில் பிர்த் ஆவ்போர்த் (Firth of Forth) என்னும் பாகமிருக்கிறது. அதை யணுகிய கூபார் என்னுமிடத்தில் எவரும் மீன் பிடிக்கலாகாதென்று அதிகாரிகள் கண்டிதமான விதி ஏற்படுத்தியிருந்தார்கள். அதை இரண்டு படகுக்காரர்கள் லக்ஷியம்

பண்ணமல் இரவு நேரங்களிற் செல்லுவதும் வலைபோட்டு மீன்பிடித்துக்கொண்டு வருவதும், மறுதினம் மார்க்கெட்டிற்கு அவைகளைக் கொண்டுபோய் விற்பதும், இவ்விதமாகத் தினசரி 300 பவுன் சம்பாதித்து வந்தார்கள். பலநாள் திருடன் ஒரு நாள் அகப்படாமற் போகமாட்டான். ஆகவே இவ்விரு இராத்திருடர்களும் சமீபத்திற் பிடிபட்டு முறையே 80 பவுன் அபராதம் கட்டும்படி ஆக்கியாபிக்கப்பட்டார்கள். பணமுந் தொலைந்து பெயருங் குலைந்து சீருங்கெட்டுக் கௌரவத்தையும் இழக்கச்செய்தது இப்பாழுந்திருட்டேயன்றே? திருட்டுத்தனம் பொல்லாது; அதைத் தவிர்ப்பதே சரி.

---

## ஜனரல் பல்கன்ஹீனின் வெறுப்பு.

ஜர்மனி தேசத்து ராணுவத்திற் பெரிய உத்தியோகங்களாகிற 'ஜனரல்' பதவிகளை வகித்திருப்பவர்களுள் ஜனரல் பல்கன்ஹீனுமொருவர். துருக்கியின் சம்பந்தமான ராணுவத்தைச் சீர்திருத்தியமைப்பதற்காக இவர் ஜர்மனியிலிருந்து துருக்கிக்குப்போய்ச் சேர்ந்தார்: இவர் துருக்கியிலமைத்திருந்த புதிய சைந்நியத்துடன் பாலஸ்தீன் முகப்பிற்குச் சென்றூர்; ஆயினும்பாலஸ்தீனில் பிரிடிஷார் வெற்றிபெற்று வருவதைத் துருக்கிய சைந்நியங்கள் கண்டு தாக்கலின் தீக்ஷண்யம் தாங்கமுடியாது ராணுவத்திலிருந்து ஒருவருக்குப்பின் ஒருவாராக விட்டோடிக்கொண்டிருக்கிறூர்களாம். இம்மாதிரியாக ஜனரல் பால்கன்ஹீனுல் திரும்பவும் சீர்திருத்தியமைக்கப்பட்ட சைந்நியத்திலிருந்து 1,60,000 துருக்கியப் படையாளர், கான்ஸ்டாண்டிநோபிளிலிருந்து, பாலஸ்டீன் போகு மார்க்கத்தில் நழுவிவிட்டார்கள். அதன்பேரில் ஜனரல் பால்கன்ஹீன் பாலஸ்டீன் முகப்பிலிருந்து வெறுப்பு மிகுந்துகான்ஸ்டாண்டிநோபின் நகருக்குத் திரும்பிவிட்டார். இதனுலேயே துருக்கியருக்கு ராணுவவேலை அலுத்துவிட்டதென்பது நன்றுய்த் தெரிகிறதல்லவா?

---

## பெண்களுக்குக் கட்டாயப் படிப்பு.

பெண்களைப் படிப்பிப்பதனுல் பல சௌகரியங்களுண்டு. ஆண்மக்களைப்போலப் பெண்மக்களும் தம் புத்திவிசாலிக்கும்படி பல நூல்களைக் கற்று, பல வாராய்ச்சிகளைச் செய்வாராஞல் ஜனசமூகம் என்னும் சக்கரம் தங்கு தடையின்றி விருத்தியாகச் சுழன்று கொண்டிருக்கும்; அஃதில்லாது போனுல் அச்சக்கரம் சுழலுவது தடைபட்டு நிற்கும். இதை யாரும் லோகானுபவத்திற் பார்த்துக்கொள்ளலாம். இப்போது பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த காத்தியாவார் சமஸ்தானத்திலுள்ள கோண்டால் (Gondal) நாட்டுக் கிராமப் பாடசாலைகளில் பெண்குழந்தைகள் கட்டாயமாகப்படிக்கவேண்டுமென்று அச்சமஸ்தானுதிபதியான தாகூர் ஸாஹிப் சில தினங்களுக்கு முன் உத்தரவு செய்தார். அதையொட்டித் தற்போது பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த பாண்ட்ரா முனிசிபாலிடியிலும் பெண்களாயினும் கட்டாயமாகப் படித்தே தீரவேண்டுமென்றும், 6-வயதுக்கு மேற்பட்டு 11-வயதுக்குட்பட்ட சிறுமிகள் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து படிப்பதற்குரிய சௌகர்யங்கள் செய்து கொடுக்கப்படுமென்றும், அவ்விதம்செய்து கொடுக்கும் பொறுப்பினை அந்நகர முனிசிபாலிடியாரே ஏற்றுக்கொண்டிருக்கிறூர்களென்றும் தெரியவருகிறது. படிப்பினுலுண்டாகக் கூடிய பலன்கள் பலவாதலின் அங்கெல்லாம் அது பெண்கள் விஷயத்தில் கட்டாயமாக்கப்படுவதை யொப்ப நம் சென்னை ராஜதானியிலுள்ள முனிசிபாலிடிகளும் அவ்விதம் பெண்கள் படிப்பைக் கட்டாயமாக்குவார்களாஞல், அதுவே அவர்கள் நம் நாட்டுப் பெண்பாலார்க்குச் செய்த பேருபகாரமாகும். படிப்பின் பலன் படித்த பின்பே தெரியும்.



## சென்னை கலெக்டர் தர்பார்.

நாளது ஜனவரி மாதம் 28-ந்தேதி திங்கட்கிழமைதினம் சாயங்காலம் சென்னை பச்சையப்பன் கலாசாலை ஹாலில் மதிராஸ் கலெக்டர் ஒரு தர்பார் கூட்டினூர்; அச்சமயம் இவ்விராஜதானியில் யுத்தக்கடன் சேகரிப்பு விஷயமாகப் பாடுபட்டு உழைத்தவர்களுக்கு நற்சாக்ஷிப்பத்திரங்கள் அளிக்கப்பட்டன. அவ்விதம் நற்சாக்ஷிபத்திரம் அளிக்கப் பெற்றவர் எவரெவரெனில் மதிராஸ் பாங்க் காரியதரிசியான ஸர் பர்னுட் ஹண்டர், மெஸர்ஸ் ஸ்பென்ஸர் கம்பெனியைச்சேர்ந்த மிஸ்டர் தாங்கர், மிஸ்டர் R. G. பெக்லி, நாஷனல் பாங்க் மானேஜரான மிஸ்டர் பிளாக், இந்நால்வரும் ஆங்க்லோ—இந்தியராவர். யுத்தக்கடன் விஷயத்தைப் பரியாலோசனை செய்வதற்காக அமர்த்தப்பட்டிருந்த கமிட்டியின்கண் இந்தியர்களும் கூடவிருந்து வேலை செய்திருக்க அவர்களை விட்டுத் தனியே இந்நால்வர்க்குய் நற்சாக்ஷிப் பத்திரங்கள் அளிக்கப்பட்டதேனே தெரியவில்லை.

---

## ஜட்ஜு கோச்சு கிருஷ்ணமாரார்.

திருவாங்கூர் சமஸ்தான ஐக்கோர்ட் ஜட்ஜு மிஸ்டர் கொச்சு கிருஷ்ணமாரார் நீரழிவு வியாதியாற் பீடிக்கப்பட்டு இம்மாதம் 25-ந்தேதி இம்மண்ணுலக பந்தத்திலிருந்து விலகி விண்ணுலகேகினுரென்று செய்தி யெட்டுகிறது.

---

## துர்க்கையம்மன் கோயிலில் திருட்டு.

'அரசன் அன்று கேட்பான், தெய்வம் நின்று கேட்கும்' என்பது பழமொழி. அது இக்கலியுகத்திற் பலியாதுபோலும். என்ன ஆச்சர்யம்! திருநெல்வேலி ஜில்லாவில் சிக்கநரஸய்யன் கிராமம் என்னுமூரில் துர்க்கையம்மன் கோவிலொன்றுளது; அம்மன் கழுத்திற் கட்டப்பட்டிருந்த தாலியுள்பட இருநூறு ரூபா பெறுமான ஆபரணுதிகள் களவுபோயினவாம்; செய்தி போலீசாருக்கு எட்டி அவர்கள் மறுநாட் காலையில் பரிசோதித்துப் பார்த்தார்களாம்; அன்றிரவிலேயே கோயிலுக்குள்ளிருந்த இரண்டு விக்கிரஹங்கள் காணமற் போயிருக்கின்றன. இது எந்த நாஸ்திகன் செய்த வேலையோ அது ஈசனுக்கே வெளிச்சம்!

---

## இரண்டு லட்சம் கல்யாணங்கள்.

தற்போதைய ஐரோபிய யுத்தம் ஆரம்பமான மூன்று வருஷகாலத்திற்குள்ளாக இங்கிலாந்திலே இரண்டு லட்சம் விவாகங்களுக்கு அதிகமாகவே நடந்தேறியிருக்கின்றது.

---

## நடப்பதிற் போட்டிப் பந்தயம்.

இம்மாத மூன்றும் ஞாயிற்றுக்கிழமையன்று 'கல்கத்தா இண்டர்கிளப்' என்னும் சங்கத்தாரது வருஷாந்த மீடிங்கு கூட்டப்பட்டபோது நடப்பதிற் போட்டிப்பந்தயம் ஒன்று வைக்கப்பட்டது. ஐந்தரை மைல் தூரம் நடந்து செல்லவேண்டுமென்பது பந்தயமாம். அப்பந்தயத்திற்கு 12 மெம்பர்கள் முன் வந்தார்கள். கிளப் கட்டடத்திலிருந்து காலை ஆறேமுக்கால் மணிக்கு அவர்கள் புறப்பட்டார்களாம். அவர்களில் மிஸ்டர் கௌரி பி. பாஸு என்பவர் 43 நிமிஷங்களில் அவ்வைந்தரை மைல் தூரத்தையும் கடந்துவிட்டார்; அவருக்கு அடுத்த இரண்டாவதாக மிஸ்டர் S. பாக்சி போய்ச் சேர்ந்தார்; இவ்வருஷ ஸன்மானங்கள் அவ்விருவர்க்குமேயாம்.

---

## ஹுக்ளியில் மூழ்குண்டது.

கங்கை, பிரம்மபுத்திரா ஆகிய இவ்விரண்டு ஜீவநதிகளும் ஒன்றுசேர்ந்து பிறகு முகத்துவாரத்தண்டை பிரிந்து வங்காளக் கூடாக்கடலில் சங்கமமாகின்றன; அவ்விதம் பிரிந்த கிளைநதியொன்றுக்கு ஹுக்ளி நதி யென்று அழைக்கப்படு

கிறது. அதன் கரையிலேதான் 'அரண்கள் நிரம்பிய அருநகர்' (City of Palaces) என்று பெயரிட்டழைக்கப்படும் கல்கட்டாவு மிருக்கின்றது. இந்நதியில் சென்ற வாரத்திலொருநாள் சாயங்காலம் தகரப் பலகைகளை யேற்றிவந்த சரக்குப்படகொன்று நதிக்கு எதிர்ப்புறமாகச் சென்றுகொண்டிருந்தபோது நதியினூடே வந்த மற்றோர் சரக்குப்படகு இதில் வந்து மோதவே, ஹௌராபாலத்தண்டை, டின் பிளேட்டுகள் நிரம்பியிருந்த இப்படகு கவிழ்ந்துவிட்டது; அப்படகிலிருந்த சரக்குகளின் மதிப்பு 8100 ரூபாயென்று சொல்லப்படுகிறது. மூழ்குண்ட படகை வெளியிலிழுக்க அதிகாரிகள் முயன்று வருகிறார்களாம்.

---

### ஸிப்பூரில் ஸககமனம்.

ஸககமனம் அல்லது உடன்கட்டையேறல் என்னும் வழக்கம் பூர்வம் இருந்து வந்ததேயல்லாமல் இப்போது இருக்கவில்லை. அதிகாரிகள் அவ்வழக்கத்தை ரத்து செய்து விட்டார்கள். என்றாலும் இரண்டோரிடத்தில் அவ்வழக்கம் மதசாம்பிரதாயப்பற்றுடையோரால் இன்னும் அவலம்பிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. கல்கத்தாவைச் சேர்ந்த ஸிப்பூரில் இம்மாதம் 20-ந்தேதி இரவில் 9-மணி சுமாருக்கு பாபு கோபால சந்த்ர கோஷாலின் 32-வயது புத்திரர் விஷசுரங்கண்டு இறந்துபோனார். அவருடைய இளமனைவியான பார்வதி தேவி, தனது ஆப்த நாயகனும், தனது உடல் உயிர் ஆவி ஆகிய இம்மூன்றினையும் ஆட்கொண்டவனுமான தனது பர்த்தா இப்பூவுலகைவிட்டு விலகியதற்குப் பிறகு தனக்குச் சுகமேதுமில்லையென்று மனோ நிச்சயஞ்செய்துகொண்டு அன்றிரவு இரண்டரை மணிக்குத் தன்னுடைய பர்த்தாவை எந்தச் சுடுகாட்டிற் கொண்டுபோய்க் கொளுத்தித் தகனித்திருக்கிறார்களோ அவ்விடம் சென்று அதே சிதையில் தானும்படுத்து 'ஹரிநாராயண், மதுஸூதன்' என்ற உச்சாரணத்துடன் உயிரை நீத்தனள். நாகரிகமிகுந்துவரும் இக்காலத்திலும் சககமனம் ஒழியவில்லையே. இது அன்பின் முதிர்ச்சியாலும் காதலின் கோளாறினாலும் வருவது போலும். எல்லாம் எமையாளுமீசன் செயல்!

---

### பவுன் விலை.

சென்னை சௌகார்ப்பேட்டையில் ஸவரன் விலை ரூ. 18-2-0 யாக விற்கிறது.

### சிற்சில வயது முதிர்ந்த சேனாதிபர்.

---

சேனாதிபத்தியம் வகிப்பது சாமான்யமான காரியமல்ல; தீர்ந்த அனுபவமும தேர்ந்த திறமையுமிருத்தல் வேண்டும். அவர்களுக்கு சைந்யத்தை இன்னவிதமாக அணிவகுப்பதென்பது நன்கு விளங்கும். ஜர்மானிய சைந்யத்தைச் சேர்ந்த அதிபர்களுள் வயது முதிர்ந்தோராயிருப்பதாகத் தகவல் கிடைக்கிறது. அவ்வளவு வயதாகியும் அவரிடம் ராணுவத்திலுள்ள சிரமஸாத்தியமான பொறுப்பு ஒப்புவிக்கப்படுவதன் காரணமென்னவென்று சிலர் ஆலோசிக்கக்கூடும். அவர்களிடத்துள்ள அனுபவமே போதுமான சாக்ஷியம் போலும். வான்டேர் கோட்ஸ் என்னும் ஜர்மன் சேனாதிபர்க்கு வயது 72. பிரஸித்தியடைந்திருக்கும் ஜர்மன் தளர்த்தரான வான் ஹிண்டன்பர்க்குக்கு வயது 68. ஜர்மன் ஜனரலான வான் மெகென்ஸனுக்கு 66-வது. வான்கிளக் என்னும் மற்றோர் ஜனரலுக்கு வயது 69. பவேரியா இளவரசரான ப்ரின்ஸ் லியபால்டுக்கும் அதே வயதுதான். ஜனரல் பால்கன்ஹீனுக்கு 71-வயதாம். ஜனரல் வான் மால்டக் என்ற சேனாதிபருக்கு 67-வயதுக்கு மேலில்லை. இவ்விதமாக ஒவ்வொரு ஜனரலுக்கும் அறுபது வயதிற்கு மேலாயிருப்பதாகவே தோன்றுவதனாலே, முதிர்ந்த வயதிலும் வேலை பார்ப்பது சிரமமாகாதென்பதை இதனால் தாமறியலாகும்.



### நீர் வீழ்ச்சியால் மின்சார விசை யுற்பத்தி.

மேற்றிசைச் தேசங்களிலுள்ள பற்பல நீர் வீழ்ச்சிகளினின்று மின்சாரவிசையுற்பத்தி செய்து, அதைக்கொண்டு பற்பல தொழிற்சாலைகளை நடத்திவருகிறார்கள். நீர் பிரதானமாயிருக்கு மிடங்களில் இச்சக்தி யுற்பத்திசெய்வது சிரமமாகாது. மைசூர் சமஸ்தானத்திலுள்ள காவிரி ஜலவீழ்ச்சியினின்றும் மைசூர் கவர்ன்மெண்டார் மின்சார விசையுற்பத்தி செய்து மைசூர், பெங்களூர் இந்நகரங்களில் விளக்குகள் போடவும் பங்காக்கள் இயக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பாபவிநாசத்தில் தாம்பரபரணி நதியினின்று உற்பவிக்கும் மின்சார சக்தியைக்கொண்டு ஒரு தொழிற்சாலை நடைபெறுகிறது. மற்றும் இந்தியாவிலே எத்தனையோ ஜீவநதிகள் இருக்கின்றன. கங்கை, யமுனை, சிந்து மஹாநதி காவேரி, பிரம்மாபுரத்தி போன்ற எத்தனையோ ஜீவநதிகள் இருக்கையில் மின்சார விசையை யுற்பத்தியாக்கி வேலை செய்ய என் நாம் சிரமப்படலாகாது? இமயமலையிலிருந்து உற்பத்தியாகி த்ரிவேணிக்குச் சமீபத்தில் சமவெளியில் இறங்கும் கண்டகி நதியில் அனாயாசமாக மின்சாரசக்தி யுற்பவிப்பது ஸாத்தியமாகுமென்று 'இங்கிலீஷ்மான்' பத்திரிகைக்கு ஒரு நிருபர் எழுதுகிறார். ஆம் இவர் சொல்லுவதில் தப்பொன்றுமில்லை. அவ்விதம் உற்பத்தியாகும் மின்சார விசையினால் பீஹார் மாகாணம் முழுவதிலும் தொழிற்சாலைகளுக்கும் விளக்குகளுக்கும் உபயோக மாகும்படி செய்யக்கூடும். நம் நாட்டுத்தனிகர்கள் இவ்விஷயத்திற் கவனஞ்செலுத்துவது நலமாகும். வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவோருமுளரோ வுலகில்? அவ்விதமேதான் யாமும் இருக்கின்றோம்.

---

# PART VIII.

## MORAL STORIES.

## நீதிக் கதைகள்.

### KARPUTHIRUMALI.

### கற்புத்திருமலி.

Mr. S. T. N. சிதம்பரம் பிள்ளையவர்கள் எழுதியது.

(287-ம் பக்கத்தொடர்ச்சி.)

காந்தி:—இதோ புகல்கிறேன். இனிதுடன் கேள். தெய்வபக்தியுடன் நாம் ப்ரஹ்மச்சரிய ஆசிரமத்திலிருந்து படித்தபடி நடந்துகொள்ளுதலேயாம். அதாவது கிரகஸ்தாசிரமமாகிய இல்லறத்திலிருந்து கணவன் படுக்கையை விட்டெழுந்திருக்கு முன் "வைகறைத்துயிலெழு" எனும், ஒளவைபிராட்டியார் திருவாக்கின்படியே அதிகாலையிலெழுந்து கடவுளைச் சிந்தித்துப் பின் நாமிருக்கும் வீட்டுத் தலைவாயில் முன் தெருவில் ஆவின் சாணம் தூய நீரால் கரைத்துத் தெளித்து வாசற்படி, தெருத்திண்ணை, அடுப்பங்கரை முதலிய விடங்களையும் மெழுகிச் சுத்தப்படுத்திப் பச்சரிசிமாவினால் கோலம்போட்டு அலங்கரித்து வீட்டுப்புறமுள்ள கொல்லையிலீசான்யபுற நீங்கி மற்றப் புறமமைக்கப்பட்டிருக்கும் தக்கூஸ்களில் மலஜல விஸர்ஜனஞ்செய்து

களாகிய சமையல் பாத்திரம், பான பாத்திரம் முதலிய விளக்கி ஒன்று சேரவைத்துவிட்டு ஆற்றுக்கேனும் அருகிலிருக்கும் குளத்திற்கேனும், வீட்டினுள்ளிருக்கும் கிணற்றுக்கேனு மடைந்து முறையுடன் ஸ்நானம் செய்துக் கடவுளை தியானித்துச் சமயாசார சின்னங்கள் தரித்துக்குடத்தில் தண்ணீர் எடுத்து வீடுற்று உலர்ந்தவஸ்திர முடுத்தி, கொண்டு வந்த ஜலத்தில் சிறிது தெளித்து சமையல் பாத்திரங்கள் முதலியவைகளைத் தூய்மைசெய்து எடுத்துச் சமையல் வேலைபார்க்க முயலல் வேண்டும்.

கற்பு:—தாங்கள் சொல்லியதெல்லாம் கேட்டு என்மனம் அவ்வாறே இருந்து கடவுள் திருவடியை நாட விருப்புகிறேன். ஆயினும், நமது தாய், தந்தை, சுற்றத்தார் முதலியோர்கள் நம்மை ஒரு மாப்பிள்ளைக்குக் கொடுக்க முயலும்போது அவர்களியல்பில் மாப்பிள்ளையிடத்தில் என்ன விரும்புவார்களம்மா.

காந்தி:—நீ! கேட்பது சரியே, உலகவழக்கங்கேள்.

"பெண்ணுதவுங் காலை பிதாவிரும்பும் வித்தையே
யெண்ணில் தனம் விரும்புமீன்றதாய்—நண்ணிடையில்
கூறியசுற்றங் குலம்விரும்புங் காந்தனது
பேரழகுதான் விரும்பும் பெண்."

என்றார், ஆன்றோர். அதாவது நமது பெண்ணை ப்ரஹ்மச்சரியம் வழுவாதிருந்து கடவுள் பக்தியோடு கல்விகேள்விகளிலுயர்ந்த நல்ல ஓர் ஆடவனுக்கே கொடுக்கவேண்டுமென்று' தந்தையும், ஐசுவரியவானுக்கே கொடுக்கவேண்டுமென்று தாயும், நல்ல குலஸ்தனுக்தக கொடுக்கவேண்டுமென்று சுற்றத்தார்களும் அழகிற் சிறந்த புருஷனையே கல்யாணம் செய்து கொள்ளவேண்டுமென்று நயக்கும் எண்ணமுண்டாகிறதல்லவா? ஆயினும் இப்படி வாய்ப்பதரிது. இவ்வாறு ஒருங்கே வாய்ப்பதற்குப் பூர்வம் நல்வினை செய்திருத்தல் வேண்டும்.

கற்பு:—உலக வழக்கம் இவ்வாறிருக்க நாம் எவ்வாறிருப்பதம்மா?

காந்தி:—அதுதான் பூர்வம் நாம் நற்றவம் செய்திருந்தால் எல்லா நன்மைகளும் இப்போதுண்டென்று முன்னமே சொன்னேனே அதை ஊகித்துக்கொள். நாமிருக்கவேண்டிய முறையோ? "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந் திண்மை யுண்டாகப்பெறின்" என்ற தெய்வப் புலவராகிய திருவள்ளுவர் கூறியதைக் கைக்கொண்டு நான் புகன்றவாறே இருந்து வருதலால் இவ்வுலக இன்பமும் மேலுலக இன்பமும் பெற்று இன்புறவாழ்வோ மென்பதற்குச் சற்றும் ஐயமில்லை. "காவறேனபாவைபற் கழகு" என்றபடி, நம், கற்புக்குச் சின்னம் வராமல் காக்கவே நாம் எண்ணங்கொள்ளவேண்டும்.

கற்பு:—எல்லாம் சரிதான் குழந்தையிருந்தால் என்செய்வதம்மா?

காந்தி:—தூங்கவைத்தாவது, தங்கை, தமக்கை, நாத்தி, மாமியார் முதலியோர்களிடம் அருமையுடன் கொடுத்து ஆதரிக்கவிட்டாவது வீட்டுவேலை செய்துவரல்வேண்டும். பின்தான் தம் குழந்தை தூங்கினாலும் அழுதுகொண்டிருந்தாலும் யாரேனு மெடுத்துவைத்திருந்தாலும் அக்குழந்தையை அன்போடெடுத்து மார்போடணைத்து முத்தமிட்டுப் பால்கொடுத்துப் பல விளையாட்டுச் சாமான்களால் விளையாடும்படி



சௌச சுத்தியுடன் தந்த சுத்திசெய்துக்கொண்டு புழங்கும் பாத்திரஞ்செய்து விட்டு வீட்டுவேலை பார்த்துத் தத்தம் கணவர் எழுந்து மலஜல விசர்க்கம் பல் துலக்கல் முதலிய காலைக்கடன் முடித்து ஆற்றுக்குப் போய் ஸ்நான முதலிய பண்ணி பூஜை செய்ய வந்தவுடன் நல்லன்னம் குழம்பு தொடுகறிகள் பழவர்க்கங்கள் பலகாரவர்க்கங்கள் நெய் தயிர் பாயசம் முதலியதுடன் விக்னேஸ்வரருக்கு விதிப்படி அர்ப்பணம் பண்ண ஆயத்தஞ்செய்து பயபக்தி விசுவாசத்துடன் அவ்வாறே அறுசுவையோடு ஓரதிதிக்கும் தத்தம் அருமைக் கணவருக்கும் சாப்பாடிட்டு அவர்கள் சாப்பிட்டெழுந்திருக்கும் பரியந்தம் பக்கமிருந்து சாதம் கறி முதலிய அவர்கள் கேளாதேயே குறிப்பறிந்து படைத்துச் சாப்பிட்டெழுந்தவுடன் தண்ணீர் முகந்து கை, வாய், கால் சுத்தி செய்யக் கொடுத்துத் தாம்பூல மீந்து அதிதியை யருமை வசனம் புரிந்தனுப்பிக் கணவரனுவலுக்குச் சுகமுடன் போய்வரச் செய்யல் வேண்டும்.

"கற்றதனாலாயபய னென்கொல் வாலறிவன்
நற்றா டொழா அரனின்."

என்றபடி அவர்வேலைக்குச் சென்றவுடன் அவரின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு அவரவர்கள் தமக்கையோடேனும் தம் குழந்தைகளோடேனும், நாத்திகளோடேனும் அல்லது நற்குண நற்செய்கைகளுள்ள தம்மினத்துக்கடுத்த பெண்களோடேனும சிறிதுநேரம் வழிபடு கடவுளைக் குறித்துச் சம்பாஷித்து மகிமையைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதுவும்

"நெருனலுளனொருவன் இன்றில்லையென்னும்
பெருமை யுடைத் திவ்வுலகு."

என்ற இன்புற்றினிக்கு மிளமைப்பருவ முதலே ஏழுபருவங்களிலுமுள்ள ஒவ்வொரு குடும்பப் பெண்களும் அறுபத்துமூன்று நாயன்மார்கள் சரிதம், ஆழ்வாராதியார்கள் சரிதம், திருவாசகம், திருவிளையாடற் புராணம், திருவாய்மொழிப் பிரபந்தம் முதலியவைகளில், சிறிதேனுந் தெரிந்திருப்பது நன்மையானும், நன்மை என்றே சொல்லலாம்.

கற்பு:—தத்தம் கணவர்கள் அலுவலிலிருந்து மாலை வீடுவந்து சேர்ந்தவுடன் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமம்மா?

காந்தி:—"நன்மை கடைப்பிடி" எனும், ஔவைபிராட்டியாரின் அருமை மொழிக்கேற்ப நீ! நன்மையை உறுதியாய்க் கொண்ட மனதினளாய்க் கேட்கத் துணிந்தாய் மகிழ்வுடன் சொல்லுகிறேன். வேலையிலிருந்து தத்தம் கணவர் வருவதைப் பார்த்த உடனே வாசற்படி அருகில் வந்து அருமையுடன் வசனித்து நித்ய கர்மானுஷ்டானங்களை வழுவாது நடத்த உதவிப் பணிகள் ஊக்கத்துடன் விடாது நடத்தித் திருக்கோவில்களுக்குப் போய்ச் சுவாமிகளுக்கு நடக்கும் அலங்காரம், அர்ச்சனை தூபதீப ஆராதனை முதலிய பல வைபவங்களைக் கண் குளிரப்பார்த்து மனங்குளிரச் சிந்தித்து வணங்கிவந்து அன்புடன் சொல்ல வேண்டிக்கொள்ளவேண்டும்,

(இன்னும் வரும்.)

பிங்களஹு தை-மாசிமீ. இங்கிலீஷ்—1918, பசலி—1327,
ஹிஜிரி—1336. உத்தராயணம்—வஸந்தருது. உத்தராயணம்—சிசிரருது.

| ரப்யூஸானிஸ் / ஜமாதிலவ்வல் | 1918௵ பிப்ரவரி | | | |
|---|---|---|---|---|
| 18 | 1 | சக | வெ | பஞ் உக-உச, ஹஸ் சக-உச, ஸூர் ரு-உஉ, தை உக-உச, திவி சு-உக, |
| 19 | 2 | உ0 | சனி | ஷஷ்ட ககு-ரு, சித் ருச-ரு0, திரு சு-கச, கர க-கக, திவி கக-கங |
| 20 | 3 | உக | ஞா | ஸப் கஎ-உச, சுவா ருக-கக, சூல சு-உஎ, விஷ் ரு-கக, திவி க-ருஉ, திஸ்ரோஷ்டகை. |
| 21 | 4 | உஉ | திங் | அஷ் கக-சஎ, விசா சு0-0, கண் ரு-ருஉ, பா அ-கரு, திவி கச-க |
| 22 | 5 | உங | செ | நவ ச0-ருக, விசா உ-கஎ, விரு ச-உரு, தை க0-உக, திவி கஉ-ருஎ |
| 23 | 6 | உச | புத | தச ச0-சசு, அனு ச-உஎ, தாரு க-ருரு, வியா ருசு-கஉ, வணி க0-ருக, திவி கஅ-சக |
| 24 | 7 | உரு | வியா | ஏகா கக-உ0, கேட் ரு-உஎ, ஹரு ருச-க, பவ க0-க, திவி உச-கக, ஸர்வத்திஏகாதசி |
| 25 | 8 | உசு | வெ | துவா கக-சசு, மூல ரு-க, வஜ் சஅ-சஉ, கௌ அ-க, திவி க-ரு, திவி உஅ-உக, |
| 26 | 9 | உஎ | சனி | திர கக-க0, பூராட க-கக, வ்ரித சஉ-கக, கர ச-ருஅ, திவி உஉ-ருஉ, சனிப்பிரதோஷம். |
| 27 | 10 | உஅ | ஞா | சது உஅ-சக, உத்திரா க-கஅ, திருவோ ருசு-ருக, விய கரு-ருஎ, விஷ் 0-ருரு, சகு உஎ-சசு, திவி க0-சஎ, மாஸசிவராத்திரி, [போதாயனமாவாஸ்யை, வியதீபாதசிராத்தம். |
| 28 | 11 | உக | திங் | ● உக-சக, அவி ருச-கஎ, வரி உஅ-சசு, நா உக-சக, திவி எ-கஅ, அமாவாஸ்யை, அமாசோமவாரம், அலப்பியம் மகரகிரு [ஷ்ண அமாதிதி. |
| 29 | 12 | க | செ | பிர கஅ-கக, சதய ரு0-ச0, பரி உக-கசு, பவ கஅ-கக, திவி கக-உசு, மாகசுத்தம், கும்பரவி க-உஎ, ஸமார்க்கம், விஷ்ணுபதி, |
| 1 | 13 | உ | புத | துதி கஉ-உஎ, பூரட் சசு-கச, சிவ கக-கக, கௌ கஉ-உஎ, திவி ரு-கச, [கும்பசுக்கிலதிதியாதிதி, |
| 2 | 14 | க | வியா | திரு சு-கஅ, உத்திரட் சஉ-கக, ஸித் ரு-சக, ஸாத் ருஉ-சஎ, கர சு-கஅ, திவி அ-ருஎ, குந்தசதுர்த்தி, வரதசதுர்த்தி, |
| 3 | 15 | ச | வெ | சது 0-ருக, பூஞ் ருச-கக, ரேவ கஅ-சரு, சுப ரு0-கச, விஷ் 0-ருக, பவ உஎ-கசு, திவி க0-கஅ, அவமா |
| 4 | 16 | ரு | சனி | ஷஷ் ரு0-கக, அசு கரு-உச, சுப்ர சக-கஉ, கௌ உஉ-ருஅ, திவி, உரு-ருஅ, ரா உக-0, |
| 5 | 17 | சு | ஞா | ஸப் சசு-கக, பர கஉ-சஉ, பிரா கஎ-உ, கர சஅ-உரு, சேஷம் உ-ரு, சூர்யஸாவர்ணிமனு, ரதஸப்தமி |
| 6 | 18 | எ | திங் | அஷ் சஉ-ருஅ, * கார் க0-சக, மாஹே கக-கஉ, விஷ் கச-கஅ, திவி க-சசு, பீஷ்மாஷ்டமி பீஷ்மதர்ப்பணம், கார்த்திகை |
| 7 | 19 | அ | செ | நவ ச0-ச0, உரோ உக-ருக, வை உசு-கக, பா கக-சக, திவி கப-கஉ, ரா கச-கஉ, வைதிருதிசிராத்தம் [விரதம். |
| 8 | 20 | க | புத | தச கக-கஉ, மிரு க0-ரு, விஷ்க உஉ-0, தை க0-சு, ரா கக-ருஎ, ரா உஉ-கக, மீனரவி பனம் உ0-கக, |
| 9 | 21 | க0 | வியா | ஏகா கக-கஅ, திருவா கக-கக, பிரீ கஅ-ரு0, வணி க-கரு, பீமைகாதசி, ஸர்வத்திரைகாதசி. |
| 10 | 22 | கக | வெ | துவா சக-க, புனர் கச-ச0, ஆயு கசு-கஅ, பவ க0-உ0, திவி உ-ரு0, ரா உசு-க, |
| 11 | 23 | கஉ | சனி | திர சக-கஅ, பூச கஅ-ச, ஸௌ கரு-உஉ, கௌ கஉ-உ0, வராஹகல்ப்பாதி, சனிப்பிரதோஷம். |
| 12 | 24 | கக | ஞா | சது சஎ-உச, ஆயி சஉ-ருஎ, சோப கரு-ரு, கர கரு-கக, திவி கஉ-கக |
| 13 | 25 | கச | திங் | ○ ருஉ-0 மக சஅ-சச, அதி சரு-க0, விஷ் கக-சஉ, திவி சரு-ரு0, ஆகாமாவை, பௌர்ணிமைவிரதம். |
| 14 | 26 | கரு | செ | பிர ருஎ-க, பூர ருரு-உ, ஸுகர் சசு-கக, பா உச-கச, திவி க0-ரு0, மாகபகுளம், கரிநாள் |
| 15 | 27 | கசு | புத | துதி சு0-0, உத் சு0-0, திரு கஎ-சரு, தை உக-சசு, திவி கச-ருஎ, திருதினஸ்பிருக், கரிநாள் |
| 16 | 28 | கஎ | வியா | துதி உ-உக, உத் க-உஎ, சூல கக-க, கர உ-உக, திவி உச-கஅ, கரிநாள். |




அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற

50 சாமான்கள்இனும்] **ராஜா சுந்தரி ரோஜா** [50 சாமான்கள் இனும்

**கூந்தல் வளரும் பரிமளத் தைலம்.**

50 இனும் சாமான்களுடன் டின் 1-க்கு ரூபாய் 1—0—0.




தலைமயிரை வளரச் செய்வதோடு மயிர் உதிராமல் செய்யும். அதிக வாசனையுடனிருப்பதோடு, மூளையின் கொதிப்பைத் தணித்து கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல நோய்களையும் நிவர்த்தி செய்து கண்களில் நீர் வடிதல், தலையில் சுண்டு, புண், மயிர் வெடிப்பு, மயக்கம், தலைசுற்றல், தலைவலி, சொரி சிரங்கு, மனோவியாகூலம் ஆகிய இவைகளைப் போக்கடித்து தேக ஆரோக்கியம் தரும் தைலம் இது ஒன்றுதான். 1-புட்டி தருவித்தால் இதன் அருமை தெரியும். அநேக நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றிருக்கிறது. இது தேசமெங்கும் நல்ல பெயர் பெற்றிருப்பதே இதன் புகழ்ச்சிக்கு அத்தாட்சியாகும்.

இனும் சாமான்களின் விபரம்:—ஸ்திரீகள் தலையில் அணியும் கொண்டைக்கிளி 6, குங்குமச்சிமிழ் 1, மைச்சிமிழ் 1, அழகான முகம் பார்க்கும் கண்ணாடி 1, தாம்பூல மாத்திரைகள் 30, தந்தச்சீப்பு 1, ராஜா ராணி காரனேஷன் பெட்டி 1, ரவிவர்மா படங்களுள்ள போஸ்ட் கார்டுகள் 6, அத்தர் பில்லை 1, சந்தனப்பில்லை 1, ஸ்திரீகள் மார்பில் அணியும் ராஜா ராணி உள்ள சுந்தரமான புரோச் 1.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**தைரியலட்சுமி அண்டு கோ.,**


நெ. 3, இருளப்பன் தெரு, மதராஸ்.

---

**இனும்!** **இனும்!!** **இனும்!!!**

அதாவது என்ன?

**இன்வெண்டிங் சுவிஸ் வாட்சு ஒன்று ரூபாய் 3.**



இங்கி தொடாமல் எழுதத்தகுந்த பவுண்டன் பேனா ஒன்று, கிளிப் ஒன்று, இங்கிபுட்டி ஒன்று இனும் கொடுக்கப்படும். வாட்சுக்கு ஒரு வருஷம் காரண்டி, நேர்த்தியானது. பொன் கிலிட் போட்ட சங்கிலி 1-க்கு 0 12 0 வெள்ளி கலருடைய சங்கிலி 1-க்கு 0 8 0 செப்புக் கட்டையின்பேரில் இலட்ரிக் கோல்டு கலர்போட்ட ரேக்கினால் செய்யப்பட்ட கைக்காப்பு ஜதை 1-க்கு ரூ. 3 0 0.

விலாசம்:—வி. கே. பென் அண்டு கோ.,

24, விநாயகமேஸ்திரி வீதி, மதராஸ்.

துறைந்த சந்தாவில் நிறைந்த குணங்களை அடங்கிய பத்திரிகை எது? அதுதான்.


# "கல்பதரு"

இப்பத்திரிகை "கல்பதரு" என்னும் பெயருக்கு இசைய, படிப்போர்களுக்கு வேண்டும் விஷயங்களை யெல்லாம் அடக்கி, படிப்பவர்கள் மனதை களிப்புறச் செய்ய வல்லது.

இது, (1) இராஜாங்கம், (2) சுகாதாரம், (3) வியவஸாயம், வர்த்தகம், கைத்தொழில், (4) ஹிந்து லா, (5) கூட்டுறவுச் சங்கங்கள், இவைகளைக்குறித்த வியாஸங்களையும், (6) கல்வி, (7) வர்த்தமானங்கள, (8) ஞானத்தை அபிவிருத்தி செய்யக்கூடியதும் மனதை இன்புறச் செய்யக்கூடியதுமான கதைகள், நாடகங்கள் முதலியவற்றையும் அடக்கியுள்ளது.

இந்தப் பத்திரிகைக்கு தபால் கூலி உள்பட வருஷம் ஒன்றுக்குச் சந்தா

உள்நாட்டுக்கு ரூபா 3—0—0

வெளிநாட்டுக்கு ரூபா 4—0—0

மாதிரிக்காபி வேண்டியவர்கள் ' அரையணு ஸ்டாம்பு அனுப்பினல் மாதிரிக்காபி இனமாக அனுப்பப்படும்.

மானேஜர்—"கல்பதரு" ஆபீஸ்,
1/24, கிருஷ்ணன்கோவில் தெரு, மண்ணடி, சென்னை.

## மேக வியாதிக்கு லேகியம்.

இது பலவித மேகசுருட்டினலுண்டான வெள்ளை, நீர்சுருக்கு, நீர்கட்டு, நீர் அடைப்பு, நீர்துவாரத்திலிருந்து சீழ, இரத்தம விழுதல் இதனலுண்டாகும உபத்திரவங்கள் எத்தனை நாள்பட்டதாக யிருந்தபோதிலும் எந்தமருந்து சாபபிட்டும குணப்படாம லிருந்தாலும் ஸ்திரீ புருஷாளிருவரும் இந்த லேகியததை பரீக்ஷபபவாகள கணடிப்பாக 7-நாளையில் இதின குணததை லெகு ஆசசரிய அறபுதமெனறு புகழ்ந்துகொள்ளத் தடையிராது. பத்தியம் மருநதுடன தொவிக்கபபடும.

டபபி 1-ககு கிரையம ரூபா 1 0 0.

## கண் சாலேவரத்துக்கு தைலம்.

இந்த மகிமை பொருந்திய தைலத்தால் 6-வாரம ஸ்நானஞ் செய்ய அடியில் கண்ட வியாதிகள் கண்டிப்பாக தரும். மேக சூட்டினல் கபாலத்தைச சேர்நத கணஎரிசசல், கண் சிவந்து நீர்வடிதல, மஙகல் மஞ்சள், காமாலை, கண் கூசசல, கண்ணால் நீர வடிதல், பார்வை மஙகல் யிவைபோன்ற கண வியாதிகள் பற்றற நீங்கும். இதை உபயோகிக்கும் விதம் புட்டியின் மேல் ஒட்டி யிருக்கும. இதற்கு பததியமிலலை.

புட்டி 1-க்கு கிரையம் ரூபா 1 0 0.

கனவான்கள் இன்னும் சகல வியாதிகட்கும் அவுஷதம் வேண்டியவர்கள் வியாதியின் குணங்களை விபரமாய தெரிவித்தால அதறகாக அவுஷதம் வி-பி. மூலமாய் அனுப்பப்படும்.

| | | | |
|---|---|---|---|
| கூந்தல் வளர் தைலம் புட்டி 1-க்கு | 0 | 8 | 0 |
| மேகவியாது லேகியம் டப்பி 1-க்கு | 1 | 0 | 0 |

ஜீவரட்சணே அவுஷத சாலை,
வைத்தியர் கோவிந்துசாமி நாயுடு,
நெ. 17. ஜனரல் முத்தையா முதலிவீதி, சென்னை.



ஸ்ரீராமஜயம்.

353

# கல்பதரு.

KALPA THARU.

அறிவு வளர்ச்சிக்கான ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புஸ்தகம் 1. Vol. 1. } பிங்கள ஹூ மாசிமீ -.FEBRUARY, 1918. { ஸஞ்சிகை 12. No. 12.


# PART I.

## THE SEARCH LIGHT.

## சோதனை விளக்கு.

கவ்வியிருக்கும் இருளைப்போக்கிக் கண்கள் கூசுமாறு பிரகாசம் பொருந்திய காந்தியை வீசும் சக்தி வாய்ந்தது சோதனைவிளக்கு. ராணுவத்திலும் கப்பல்களிலும் கோட்டைகளிலும் விளக்குக் கூண்டுகளிலும் இது பெரிதும் உபயோகப்பட்டு வருவதை நாம் பார்க்கிறோம். கல்ல அமாவாசை இரவில் வானங்கறுத்துக் கருமேகங்கள் பரவியிருக்கும் சந்தர்ப்பங்களில் ரணரங்கத்திலுள்ள துருப்பாளர் தமது மறைகுழி யரண்களிலிருந்தோ, பீரங்கி நிறைகளிலிருந்தோ, மற்றுமுள்ள காவற்கூடங்களிலிருந்தோ பகைவரையும் பகைவருடைய நிலைகளையும் அறிந்து குறி வைப்பதற்குச் சோதனை விளக்குகளே விசேஷமாய் உபயோகிக்கப்பட்டு வருகின்றன; அதுவுமல்லாது இருள் வேளைகளில் துருப்புகளை ஓர் அடவியின் மார்க்கமாக நடத்திச் செல்லும்போது, வாய்க்கால், குளம், குட்டை, மரம், செடி, புதர். முதலியவைகளையறிந்து மார்க்கமுணர்ந்து போவதற்குச் சோதனை விளக்குகளின் உதவியே பிரதானமாகும். மப்பும் மந்தாரமுமான இரவில் நீலவானத்தின்கீழ் பரந்து விரிந்திருக்கும் அகண்டாகாரமான சமுத்திரத்தில் கப்பல்கள் போகுங்கால் கரை தட்டாது செல்வதற்கும் இச்சோதனை

விளக்கே அனுகுணமாயிருப்பது. நெடுந்தூரத்திலுள்ள கப்பல்களுக்கு வழிகாட்டிகளாக விளக்குக் கூண்டுகளில் சோதனை விளக்குகள் பொருத்தப் பெற்றிருப்பதைப் பலர் பார்த்திருக்கவுங்கூடும். இருளான சந்தர்ப்பத்தில் வெளிச்சம் வேண்டுமானாலும், அவ்வெளிச்சம் வெகுதூரத்திற்குத் தெரிய வேண்டுமானாலும், அப்பேர்ப்பட்ட சமயங்களில் சோதனை விளக்குகளே மிகவும் உபயோகமாவதனாலே, அதைக்குறித்து இம்மாதச் சஞ்சிகையில் இரண்டொருவார்த்தை சொல்ல முன்வந்தோம். சாஸ்திரீய விற்பன்னர்கள் சோதனைவிளக்குகளைக் குறித்து எவ்வளவோ அத்தியாயங்கள் எழுதக்கூடுமெனினும், இச்சிறு வியாசத்தில் அதைக்குறித்த இரண்டொரு முக்கிய அம்சங்களைமட்டும் குறிப்பிடுவோம்.

1886-ம் ஆண்டில் டைன் நதிக்கரையிற் கட்டப்பட்டிருக்கும் கேகேஸ்ஹெட் (Gakeshead-on-Tyne) ஆன்-டைன் என்னும் நகரத்துப் பிரபல வியாபாரிகளான மெஸர்ஸ் கிளார்க், சாப்மான், பார்ஸன்ஸ் அண்ட் கம்பெனியார் முதன் முதலாகக் குறிப்பிட்ட தூரத்தில் வெளிச்சத்தைப் பிரயோகிக்கும் கருவியொன்றைக் கண்டுபிடிக்கமுயற்சித்து, அதைச் செய்யவும் செய்தார்கள். அப்போது இங்ஙனம் பிரகாசத்தைத் தரக்கூடிய விளக்கின் பிரயோசனத்தால் விசேஷகாரியங்களை ஸித்திக்கச் செய்யலாமென்று அறிவாளிகள் அபிப்பிராயப்படவும், அதேசமயத்தில் ஸூயஸ் கால்வாயின் வழியாகக் கப்பல்களை இரவு நேரத்தில் கடத்திச் செல்லுவதற்கு அனுகூலமாக வெளிச்சம் வேண்டுவது பிரதானமாயிருந்தபடியாலும், சோதனை விளக்குகளின் பிராதான்யம் நிதர்சிக்கப்படலாயிற்று. இங்கு (Suez Canal) ஸூயஸ் கால்வாயினைக்குறித்து இரண்டொருவார்த்தை சொல்லாமலிருக்கமுடியாது. இக்கால்வாய் மத்தியதரைக் கடலிலிருந்து (Mediterranean Sea) செங்கடல் (Red Sea) வரையில் பரவியிருக்கிறது. வெகுகாலத்திற்குமுந்தி ஸூயஸ் என்னும் பெயர் வாய்ந்த ஒடுக்கமான பூசந்தியின் (Isthmus) குறுக்காகப் பிரான்சிய எஞ்சினீர் ஒருவரால் இது மிகுந்த மதியூகத்துடன் வெட்டப்பட்டது. ஐரோபாவிலிருந்து நம்மிந்தியாவுக்கும் மற்றும் ஆசியாவிலுள்ள கீழ்த்திசை நாடுகளுக்கும்போக இவ்வழி மிகவும் சமீபமாகவிருக்குமென்பதை அந்த எஞ்சினீர் உணர்ந்து இந்தக் கால்வாய் விஷயத்தில் விசேஷ சிரமஸாத்தியங்கொண்டு பூர்த்திசெய்தனர். பிரதி வருஷத்திலும் இக்கால்வாயின் மூலமாக நாலாயிரம் கப்பல்களுக்குக் குறைவில்லாமல் போய்க்கொண்டும் வந்துகொண்டு மிருக்கின்றன. பம்பாய் துறைமுகத்திலிருந்து லண்டன் நகருக்கு இக்கால்வாய்வழி இரண்டு வாரங்களிற் செல்லமுடியும். ஸூயஸ் கால்வாயின் இருதலைப்புகளிலும் உள்ள துறைமுகங்களுக்கு முறையே போர்ட்ஸெயிட், ஸூயஸ் என்று பெயர். மத்தியதரைக்கடல் ஓரமாக ஸூயஸ் தலையிலிருப்பது போர்ட்ஸெயிட் துறைமுகம்; செங்கடல் ஓரமாக இருக்கும் துறைமுகத்திற்கு ஸூயஸ் என்று பெயர். மொத்தத்தில் இக்கால்வாயின் நீளம் 87 மைல். இக்கால்வாயின் இருபுறங்களிலுமுள்ள கரைகள் மலைப் பிராந்தியங்களாகவும் மைதானங்களாகவும் வனப் பிராந்தியங்களாகவும் பாலைவனப் பிரதேசங்களாகவும் உள்ளன; குறுகலாயுள்ள இக்கால்வாயின் வழியாக நீராவிக் கப்பல்கள் இராக்காலங்களில் வரும்போது இருள் காரணமாகக் காலதாமதமும் கலங்களுக்குச் சேதமும் நேருவதைத் தடுக்கவேண்டுமென்றே அக்கால்வாயின் இருபுறங்களிலும் முக்கியமான ஸ்தலங்களில் விளக்குக் கூண்டுகள் கட்டுவித்து அவைகளில் சோதனைவிளக்குகள் போட்டுவித்திருக்கிறார்கள். சோதனை விளக்குகள் அமுலுக்குக் கொண்டுவரப் படுவதற்குமுன் கப்பல்களை மேற்படி கால்வாயின் வழியாகக்கடத்திச் செல்லுவது பெரிதும் கஷ்டமாயிருந்ததென்பதற்கு இவ்விளக்குகளின் தற்காலவுபயோகமே போதிய சான்றாகும்.



ஆரம்பத்தில், அதாவது 1886-ம் வருஷத்தில், இவ்விளக்குகள் கண்டுபிடிக்கப்பட்டபோது கப்பற் சொந்தக்காரர்கள் மத்திய தரைக்கடலிலிருந்து போர்ட்ஸெட் துறைமுகத்தில் தங்கி இவ்விளக்குகளை நீராவிக் கலத்திலேற்றிக்கொண்டும் இப்புறத்தில் ஸூயஸ் துறையில் விளக்குகளை யேற்றிக்கொண்டும் நீராவிக்கலங்களை இரவுநேரத்தில் எவ்வித தாமதமுமில்லாமல் கடத்திவரலாயினர். அப்போது அதற்குச்சார்ஜு, அதாவது அந்த ஸூயஸ் கால்வாயின் 87-மைல் தூரத்தைக்கடந்து சோதனை விளக்குகளின் உபயோகத்தை நாடுவதற்குள்ள கட்டணவிகிதம், இருபது பவுனுக்கு அதிகமில்லை. என்றாலும் காலம் ஆக ஆக, சாஸ்திரஜ்ஞர்கள் அவ்விளக்குகளிற் பலதிருத்தங்களைச் செய்து கட்டணத்தையும் பத்துபவுனாகக் குறைத்திருக்கிறார்கள். அல்லாமலும் அனேக கப்பற் கம்பெனிச் சொந்தக்காரர்கள் தாமாகவே சோதனை விளக்குகளை விலைக்கு வாங்கித் தமது கப்பல்களில் பொருத்தி வைத்துமிருக்கிறார்கள். இதனாலேயே அவ்விளக்குகளின் உபயோகமும் பிராதான்யமும் செவ்வனே விளங்குகின்றன. இப்போதுள்ள பிரிடிஷ் நீராவிக் கலக் கம்பெனிகளால் நடத்தப்படும் ஒவ்வொரு கப்பல்களிலும் அனேகமாய்ச் சோதனை விளக்குகள் கொடுக்கப்பட்டிருப்பதாகவே தெரிகிறது. இது நிற்க, 1887-ம் வருஷத்தில் சோதனை விளக்குகளின் உபயோகத்தை நன்குணர்ந்த மாலுமிகள் செங்கடலில் தம் கப்பல்களை நடத்திவந்தபோது செங்குத்தாக நிற்கும் பன்னிருபெருங்கற்பாறைகளடங்கிய பிராந்தியத்தை (Twelve Apostles=12 சுவிசேஷகர்த்தர்கள்)க் கடக்கையில் நீராவிக்கலங்களுக்கு நேரக்கூடிய அபாயங்களையுணர்ந்து சோதனைவிளக்குகளின் ஆவசியகத்தைத் தம் எஜமானர்களுக்குத் தெரிவித்தார்கள். அதே வருஷத்தில் கார்மார்த்தன்ஷைர் என்னும் நீராவிக் கப்பல் மானில்லா துறைமுகத்திற்குள் நள்ளிரவில் இருள் கவ்வியிருந்த தருணம் தனது சொந்த சோதனை விளக்குகளின் பிரகாசத்தினுதவியைக் கொண்டு கம்பீரமாகப் பிரவேசித்ததை அந்நகர ஜனங்கள் பெரிதும் வியந்தார்கள்.

இதற்குப்பின் ஜப்பான்தேசத்திற்குள்ளாக நீட்சித்துச் சென்றிருக்கும் கடலில் இராக்காலத்தில் நீராவிக்கலங்களைச் சோதனை விளக்குகளைக் கொண்டே நடத்தலாயினர்; பேராபத்தை விளைவிக்கக்கூடிய குறுகலான மார்க்கங்கள் அத்தேச உள்நாட்டுக்கடலில் விசேஷமாயிருந்தும், அதுகாரணமாக மாலை ஆறுமணிக்குப் பிறகுக் கப்பல்கள் உட்செல்ல முடியாதவாறு தடஸ்தமாயிருந்தும், சோதனை விளக்குகளின் உபயோகம் தெரிய வந்தவுடனே அக்குறுகலான மார்க்கங்களை யொட்டிய அபாயங்கள் விலகவும், உட்செல்ல முடியாதிருந்த தடஸ்தங்கள் ஒழியவும் இடமேற்படலாயின. இவையனைத்திற்கும் காரணம் சோதனை விளக்குகளின் பிராபல்யமேயாகும். இடமொன்றகப்பட்டால் நுழையவேண்டிய ஆவசியகம் ஏற்படுவது உலக இயல்பு. அதுபோல ஸர்வஜன உபயோகமாயிருக்கும் இச்சோதனை விளக்குகளினால் பிரயோசன முண்டென்பதை யுணர்ந்த பூதபவிஷியத் ரசாயன சாஸ்திரீய விற்பன்னர்கள் (Scientists) தங்கள் தங்களுடைய ஆராய்ச்சிப் புலமையை இவ்வழியிற்செலுத்தி அவ்விளக்குகளில் மற்றுஞ் சில திருத்தங்களைச்செய்து வேலைசெய்ய வாரம்பித்தார்கள். கரியில் வாயுவை (Gas) யுற்பவிக்கச்செய்து அதனில் தீ மூட்டி, அத்தீயினை நேராகக்குறுகிப் பரந்து தீக்ஷண்யத்துடன் வீசும்படி செய்வதற்காக 'ரிப்ளெக்டர்' (Reflector) என்னும் வஸ்துவை விளக்குகளில் பொருத்திவைத்தார்கள்; பிறைச்சந்திரனை அல்லது அர்த்த சந்திரனையொப்ப இருக்கும் ரிப்ளெக்டரின் மத்தியப் பிரதேசம் தடிமனாகவும், வில்லைப்போல் வளைந்து வட்டமாகவிருக்கும் ஓரப்பிரதேசம் மெல்லியதாகவும் இருக்கும். கரிவாயுவினால் ஏற்றப்பட்டிருக்கும் தீயானது இந்த ரிப்ளெக்டரின் மத்தியஸ்தலத்திற்கு எதிராக எரிவதனாலே, அத்தீச்சுடரில் (Flame) அநாகிருதமாயிருக்கும் காந்தியின் பிரபாவக் கிரணங்களை (Rays) மிச்ரமான உலோகங்களாற் செய்யப்பட்டிருக்கும் ரிப்ளெக்டர் ஸ்வீகரித்துக் கொள்ளுகிறது; அவ்விதம் கொண்டாலும் அக்கிரணங்கள் குழிவுடன் வட்ட வடிவமாயிருக்கும் அர்த்த சந்திர ரிப்ளெக்டரின் ஓரங்களில் நில்லாது பருமனாகவிருக்கும் மத்தியஸ்தானத்தில் ஒருமித்துச் சேருகையில் அவை அங்கு தங்க முடியாதவாறு ததும்பித் தத்தளித்துப் பின்னர் அம்மத்தியஸ்தான விட்சண்யத்தினால் தீக்ஷண்யத்துடன் எதிரில் குறுகிப் பின்னர்ப் போகப்போகப் பரந்து ஜ்வலிப்புடன் காந்தியோடுகூடின கிரணங்களை வீசியடிக்கின்றது. அங்ஙனம் வீசுவதையே சோதனை விளக்குகளின் பிரகாசம் என்கிறோம். கரிவாயுவிலிருந்து உற்பவிக்குந் தீயானது எரிந்துகொண்டிருக்குங் காலம் முழுவதும் அதற்கெதிர்ப்புறத்திலுள்ள ரிப்ளெக்டரில் கிரணங்கள் ஓபாதொழியாது சேர்ந்துகுவிந்து கொண்டிருப்பதனாலேயே, அவ்விடமிருந்து வீசும் காந்தியும் தீக்ஷண்யக்குறைவின்றி ஜ்வலித்துக்கொண்டே யிருக்கும். இவ்விதமாக வீசியடிக்கும் காந்தி ஒரேயிடத்தில் நில்லாது திருப்பிப் பலதிக்குகளிற்காட்டவும், அப்படிக்காட்டும்போது காந்தியில் சலனமிருக்கும்படி



செய்யவும், விளக்குகளில் சிற்சில நூதனயந்திரங்கள் அமைத்திருக்கிறார்கள். கெட்டிக் கண்ணாடிகளையும், அரும்பு அரும்பாக நறுக்கியிழைத்துக் கிரணங்களின் லேகன சக்திப்பிரபாவத்திற்கு அனுகிய பிரகாரம் அமைத்து விளக்குகளில் பொருத்தியிருப்பதனாலே தற்போதைய சோதனைவிளக்குகள் முன்னிலும் எத்தனையோ மடங்கு சீர்திருத்தி உபயோகமாகி வருகின்றன. ஆகாயத்தில் வெளிச்சத்தை விஸ்தரிப்பதற்காக ராணுவத்திலும் கடற்படையிலும் அவை உபயோகிக்கப்பட்டு வருகின்றன. பொதுவாய்ச் சோதனைவிளக்குகள் முட்டை வடிவமாக விருக்கும். அதற்குக்காரணம் நாம் மேற்காட்டியபடி கண்ணாடிகளின் அமைப்பேயல்லாது வேறல்ல. யுத்தகாலங்களில் இவ்விளக்குகளின் பிரபாவம் செப்பத்தரமின்று; நமது கடற்கரைகளைக் காப்பதற்கு இவை பெரும்பாலும் உபயோகமாகின்றன. இருளில் வந்து தாக்கலாமென்று அசட்டுத் தைரியத்துடன் வரும் எதிரியின் நிலையை அரை நொடிக்குள் கண்டுபிடித்தறிவிக்கக்கூடிய பிரகாச வீக்ஷண்யத்தை யளிக்கும் சோதனைவிளக்குகளின் மகநீயப் பிரபாவந்தான் என்னே! அருட் பிரஸாதத்தின் அறிகுறியென அதைச் சொல்லுவதும் ஒருவாறு பொருந்தும்.

L. அனந்தய்யர்.

# PART II.

## SANITATION.

## ஆரோக்கிய விமர்சனம்.

### PLAGUE AND ITS PREVENTION.

BY MR. K. P. SESHADRI AIYANGAR, *Teacher, Muthialpet High School, Madras.*

### ப்ளேக்கும் அதைத்தடுக்கும் முறைகளும்.

1

என்ன வென்றியம்புவது ப்ளேக்கின் பயங்கரமான செயல்களை? பெரிய குடும்பங்கள் தங்கள் முதலாளிகளைத் துறந்து விடுகின்றன. இரவில் படுக்கும்போது சீராட்டிப் பாலூட்டித் தாலாட்டி உச்சிமுகந்து முத்தமிட்டுக் கொஞ்சிக் குலாவி படுக்கவைத்த சிறுவ சிறுமிகள், காலை எழுந்து தங்கள் தந்தையை யிழந்து கண்ணுங் கண்ணீருமாய் நின்று அலைந்து பரிதபிக்கின்றனர். எட்டு மிரண்டும் அறியா மணமடைந்த பாலிகைகள் அச்சிறுவயதிலேயே கணவனையிழந்து ஜீவ்ய காலமுழுதும் விதந்துக்களாகி ஸதா துக்க ஸாகரத்தில் மூழ்கிக் கரைதெரியாது துக்கப்படுகின்றனர் ப்ளேக்கின் பராக்ரமத்தால். வாலிபர்கள் யௌவன பிராயத்தினில் தங்கள் இன்னுயிர் மனைவிகளை ப்ளேக் என்னும் எமனுக்குப் பறிகொடுக்கின்றனர். அந்தோ

பரிதாபம்! தலை நரைத்து தேகம் திரைத்து, கண்ணிருளடைந்து மெய் நடுங்கும் ஸ்திதியிலுள்ள பெற்றோர் தங்கள் ஆதாரத்தையும் செல்வாக்கையும் தங்கள் தவப்புதல்வனை ஏகபுத்திரனிடத்தில் வைத்திருந்தவர்கள் திடீரென்று அந்த ஏகபுத்திரன் ப்ளேக்கென்னும் மறலியால் மண்மீது நீட்டப்படின் என்ன பாடுபடுவர்? * ப்ளேக்கின் பயங்கரமான பலன்களை விவரிக்கின் பெருகும். இத்தகைய நோயின் காரணத்தையும், அது பரவும் விதத்தையும் அதை வரவொட்டாது தடுக்கும் வகையைப்பற்றியும் ஒவ்வொருவரும் அறிய வேண்டியது அத்யாவச்யமானது. இந்த ப்ளேக்கென்னும் வியாதி இது தருணம் இந்தியாவில் எல்லா பாகங்களிலும் பரவி அதன் பயங்கரச் செய்கைகளை மும்முரமாக நடத்தி வருகின்றது. இவ்வியாதியால் நிதமும் அநேகர் பிராணனை விடுகின்றனர்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்னமேயே இந்த ப்ளேக் என்னும் கொடியநோய் பரவிவந்ததாகவும் அது முதன் முதலில் எலிகளுக்குக் காண்கிறதென்றும் பழைய புஸ்தகங்களில் வரையப்பட்டிருக்கிறது. ப்ளேக் எலிகளின் வியாதி. எலிகளினிடமிருந்து மனிதர்களுக்கு அது பரவுகின்றது. எலிகள் எந்த கிராமங்களிலும், பட்டணங்களிலும் காணக்கிடைக்காவோ அந்தப் பிரதேசங்களில் ப்ளேக் என்பது அணுகவே அணுகாது.

எலிகளால்தான் ப்ளேக் வியாதி அதிகரிக்கிறது என்பதை விளக்க ஒரு கதை † வழங்கிவருகிறது. அது பின் வருமாறு. வெகுகாலத்துக்கு முன் முகமதியரது ராஜ்யமான ஆப்கானிஸ்தானத்தில் ஒரு சுல்தான் ராஜ்ய பாரம் வகித்துவந்தார். அவரது ராஜ்யத்தில் இக்கொடிய நோய் வந்ததும் கிடையாது; அதைப்பற்றிக் கேள்விப்பட்டதும் கிடையாது. இவ்விதமிருந்து வருங்கால் சிலவாரங்களுக்குள் இப்பெருவாரி வியாதி கிளம்பும் போலிருப்பதை உணர்ந்தான்.

இவ்வியாதி பீடிப்பின் தன் குடிஜனங்கள் யாவரும் மடிய வேண்டி வருமே என்று ஏக்கங்கொண்டு தன் அமைச்சனைக் கூப்பிட்டு ஆலோசிக்கலானான். சீனா, திபேத் முதலிய கீழ்த்தேசங்களில் யாத்திரை செய்துவந்த வைத்யசிகாமணி ஒருவன் அந்த ராஜ்யத்தில் வந்து தங்கியிருப்பதாகவும், அனுமதியளித்தால் அவனை விசாரிக்கலாம் என்றும் மந்திரி அரசனுக்குக் கூறினான். அதி சந்தோஷங்கொண்டவனாய் அரசன் அந்த யாத்திரிகனை வரவழைத்து ஆஸனத்தில் அமரச்செய்து சம்பாஷிக்கத் தொடங்கினான்.

அரசன்:—ஏ! யாத்ரிகா! மற்றதேசங்களில் ப்ளேக் என்ற கொடியநோயைப் பார்த்திருக்கிறீர்களா? இந்த ஊரில் ப்ளேக் அணுகாமலிருக்க ஏதேனும் மார்க்கம் சொல்லி தப்பவைக்க வல்லீரோ?

* இக்குறிப்பிடப்பட்டுள்ளவரை இதனது ஆசிரியர் எழுதி பிரசுரித்துள்ள நளினாக்ஷி என்னும் ஜனசார நாவலிலிருந்து எடுத்து எழுதப்பட்டவை.

† இக்கதை "பிராணன் பிரகாசம் பரிசுத்தம்" என்னும் ஆங்கில புஸ்தகத்தினின்று எடுத்து ஆளப்பட்டது.



யாத்ரீகன்:—மஹாராஜ்! யாத்திரை பண்ணின பிரதேசங்களில் ப்ளேக்வியாதியை அடியேன் அதிகமாகக் கண்டிருக்கிறேன். இச்சிறியேன் சொல்லும் விதம் தங்களது மந்திரி நடக்கும்படித் தாங்கள் கட்டளையிடும்படிப் பிரார்த்திக்கிறேன். இப்பேதையின் சொல் தவறாது மந்திரியார் நடக்கும் பக்ஷத்தில் இந்நகரத்தில் ப்ளேக் தலை காட்டவே காட்டாது என்பதை ப்ரமாணமாகக் கூறுகிறேன்.

அரசன்:—தங்களது வார்த்தையில் நாம் அதிக நம்பிக்கையை வைக்கின்றோம். அவ்விதம் நீர் செய்யவல்லவர் என்பதை அப்பொழுதே உணர்ந்தோம். அமைச்சரும் நீர் சொல்லும் விதமே பிறழாமல் செய்வார். இந்நகரத்தில் அந்தக்கொடிய வியாதி அடிவைக்கவொட்டாமல் மாத்திரம் செய்யும் பக்ஷத்தில் தங்களுக்கு ஸ்வர்ணாபிஷேகம் செய்து வைக்கின்றோம்.

யாத்ரீகன்:—அமைச்சாதிப! இந்நகரின்கண் எத்தனைய ரத்ன வியாபாரிகள் இருக்கின்றனர்.

மந்திரி:—ஏன், அறுநூறு பேருக் கதிகமாகவே இருக்கின்றனர்.

யாத்ரீகன்:—ஆயின் இது தருணம். அவர்களில் பெரிய வியாபாரிகளாகப் பார்த்து இருநூற்றுவரை அழைத்து வருவதுடன், ஒவ்வொருவரும் அரசருக்கு வெகுமதியாக கடலை பிரமாணமும் தணலின் பிரகாசமும் பொருந்திய ஒரு ரத்னத்தையும் கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டும். தாமதிக்கக்கூடாது.

யாத்ரீகன் சொல்லியவிதமே மந்திரிசெய்தான். அவ்விதமே இருநூறு வியாபாரிகள் இருநூறு ஜோதிமிகுந்த மாணிக்கத்துடன் ராஜஸபைக்குவந்து அரசற்கு காணிக்கையாக ரத்னத்தைச்செலுத்தினர். பிறகு யாத்ரீகன் நகரத்தினின்று இருநூறு எலிகளை தனித் தனிகூண்டில் கொண்டுவரும்படிச் சொன்னான். யாத்ரீகன் ஆக்ஞை பிரகாரம் இருநூறு எலிகள் தனித் தனிகூண்டில் உயிருடன் கொண்டுவரப்பட்டன.

பிறகு, ஒவ்வொரு கூண்டிலுள்ள எலியை எடுத்து அந்த யாத்ரீகன் அதனது அடிவயற்றில் தளர்ந்து தொங்கும் சதையை அதி சூக்ஷ்மமாக அறுத்து அதனுள் ஒரு மாணிக்கத்தை வைத்து மூடினான். இவ்விதமே இருநூறு மாணிக்கங்களை இருநூறு எலிகளின் அடிவயிற்றில் மூடிவிட்டான். மந்திரியைக்கூப்பிட்டு ஒவ்வொருகூண்டிலும் கொஞ்சம் தானியமும் ஜலமும் வைக்கும்படிக்கு ஆக்ஞாபித்து கூண்டுகள் எல்லாவற்றினையும் ஒரு அறையில் வைத்துப்பூட்டி வீரர்களை அவ்வறைக்குக் காவலிருக்கும்படித் திட்டம் செய்தான். அதேபிரகாரம் மந்திரிசெய்து கதவைத் தாளிட்டுப் பூட்டி அவ்வறையின் திறவுகோலைத்தானே பத்திரமாக வைத்துக்கொண்டான். யாத்ரீகன் செய்வதைப்பார்த்து மந்திரி அதி ஆச்சர்யமடைந்து விட்டான்.

இரண்டுதினங் கழிந்ததும் பிரயாணி அர்த்தராத்திரியி லெழுந்திருந்து மந்திரியை நித்திரையினின்று நீக்கித் தன்னுடன் வரும்படிச் சொன்னான். 'உங்களுக்கு நம்பிக்கையுள்ள இருபது அடிமைகளை அழைத்துவம்மின். எலிகள் வைத்திருக்கும்படியான அறைபண்டை இருக்கும்படித் திட்டம் செய்மின். மற்றொரு அடிமையை நம்மிருவருக்கும் வழிகாட்ட பிரகாசமுள்ளதோர் விளக்கைக் கொண்டுவரும்படி ஏற்பாடு செய்மின்' என்றான்.

பிரயாணிசொல்லும் ஒவ்வொரு ஆக்ஞையையும் மந்திரி சிரமேற்கொண்டு எள்ளென்பதற்குமுன் எண்ணெயாக நின்றான். இருபது அடிமைகளை எலிவைத்த இடத்திற்கு அழைத்துவந்தான். யாத்ரீகனும் அமைச்சனும் கதவு பூட்டினது பூட்டியபடியே இருந்தமைகண்டு உளமகிழ்ந்து பிறகு கதவைத்திறந்தனர். யாத்ரீகன் உள்நுழைந்து கையில் விளக்கைப் பிடித்து ஒவ்வொரு கூண்டிலுள்ள எலியை உற்று நோக்கியவாறே இருந்தான். எலிகளுக்கு மாணிக்கத்தை பதியவைத்ததால் ஏற்பட்ட காயங்களெல்லாம் முற்றிலும் குணமடைந்திருப்பதைக்கண்டு சந்தோஷமெய்தினான். மாணிக்கங்கள் வெளிக்குத் தோற்றாது சர்மத்தினுள்ளே மறைக்கப்பட்டிருப்பதைக்கண்டான். 'மந்திரி ச்ரேஷ்டனே! ஒவ்வொருவனையும் பத்து கூண்டுகளை எடுத்து என்னுடன்கூட வரும்படிக்கட்டளையிடுங்கள்' என்று உரைத்தான் யாத்ரீகன். அமைச்சனும் இருபது அடிமைகளைக்கொண்டு இருநூறு கூண்டுகளை எடுத்துவரச்சொல்லியாத்ரீகனுடன்நகரத்தின் வீதிகள் தோறும் செல்லலாயினன். வீதிகளினூடே சிறிதுதூரம் செல்கையில் ஒரு அடிமையினிடமிருந்து ஒருகூண்டை யாத்ரீகன்வாங்கி அதனுள்ளிருந்த எலியை வெளியில்விட்டான். எப்போது சிறை வாழ்க்கை ஒழியுமென்றெண்ணியிருந்த எலி வெளியில் விடப்பட்டதும் மாயமாக ஓடி இருளில் மறைந்துவிட்டது. இவ்விதமே கொஞ்சதூரத்துக்குக் கொஞ்சதூரம் எலிகளை ஒவ்வொன்றாய் வெளிவிட்டான். அநேக வீதிகளில் திரிந்து இருநூறு எலிகளையும் நாலாபக்கங்களிலும் பரவ விட்டுவிட்டான். நகரத்தில் எப்பக்கத்திலும் மாணிக்கம் பதித்த எலிகள் பரவின. மந்திரியும் அடிமைகளும் கண்ணைக் கொட்டாது மூக்கின்மீது கைவைத்தபடியே யாத்ரீகன் செய்யும் சாகஸத்தைக் கண்ணுற்றுக் கொண்டிருந்தனர். மறுநாள் காலை மன்னவனிடம் பிரயாணிசென்று "பூபதே! இவ்வடிமை கூறும் வண்ணம் தாங்கள் நகரெங்கும் பறைபறைவித்துப் பிரகடனஞ் செய்யவேண்டும். ஜோதிமிகுந்த, மதிப்பறியா இருநூறு மாணிக்கங்கள் அடிவயிற்றில் பதிக்கப்பட்ட இருநூறு எலிகள் நகரத்தின் வீதிகளில் விடப்பட்டிருக்கின்றனவென்றும் எவனொருவன் அப்படிப்பட்ட எலிகளைக்கொன்று அம்மாணிக்கங்களைக் கொள்கிறானோ அவன் அம்மாணிக்கத்திற் குரியவனாகின்றான். அம்மாணிக்கத்தை விற்கவும் இஷ்டப்பட்டவிதம் செய்து கொள்ளவும் அருகனாகின்றான் என்றும் பறைபறைவித்து பிரகடனஞ் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டான்,



நகரமெங்கும் பறை சாற்றுவிக்கப்பட்டன. இதைக் கேட்டவரெல்லோரும் நகைத்தனர். இவ்விதம் எலிகளின் அடிவயிற்றில் மாணிக்கம் பதிக்க அறியாதவர்களாகையினால் ஒருவரும் நம்பவேயில்லை. ஓர்வேளை அரசனுக்குப் பயித்தியம் பிடித்ததோ என்று பரிகாஸம் செய்தனர். மிகுந்த, தரித்திரத்தை அநுபவித்துக்கொண்டிருந்த பரம ஏழைகள் பிரகடனத்தை நம்பி எலிகளைக்கொன்று மாணிக்கம் பெறலாம் என்று தீர்மானித்துக் கொண்டார்கள். அநேக எலிகள் கொல்லப்பட்டன. ஒரு பிச்சைக்காரன் மாலை வேளைக்குள் ஒரு எலியைக்கொன்று அடிவயிற்றிலிருந்து மாணிக்கத்தை எடுத்தான். அதை கையில் வைத்து ஜ்வலிப்பதைக்கண்டு ஆனந்தம் கொண்டான். ரத்னவியாபாரிகளிடம் அதைவிற்று ஏராளமான பணம்பெற்று அன்றிரவிற்குள் ஓர் பெரிய வீட்டைவாங்கி அதின் பெருமையுடன் வீற்றிருந்தான். இந்த சமாசாரம் ஊரெங்கும் பரவிவிட்டது. தரித்திரனுக்கு இவ்வளவு சம்பத்து வந்துவிட்டதே நமக்குங்கிட்டட்டும் என்று எண்ணி உத்யோகஸ்தர்களெல்லாம் உத்யோகங்களை விட்டனர், வியாபாரிகள் வர்த்தகத்தை விட்டுவிட்டனர், தனவந்தன், தரித்திரன், பெரியவன் சிறியவன், பாலன் விருத்தன், ஆண் பெண் யாவரும் ஒரேமனதாய் எலிகளைக் கொல்லும் தொழிலை மேற்கொண்டார்கள். கூரைகள் மீதும், சுவற்றின் கீழும், வளைகளினின்றும், ஜலதாரைகளிலிருந்தும் எலிகளை வேட்டையாடி தடிகளினாலும், கற்களினாலும், கத்திகளாலும் கொன்றனர்.

நகரத்தில் இன்னாள் வரை வியாபாரமென்பதே கிடையாது. ஒரு தொழிலும் நடந்தபாடில்லை. ஒரு வாரத்திற்குள்ளாக ஆயிரக்கணக்காய் எலிகள் மடிந்தன. ஒவ்வொருநாளும் 'இன்று 4 மாணிக்கங்கள் அகப்பட்டன. இன்று 5 மாணிக்கங்கள் கண்டெடுக்கப்பட்டன' என்று எங்கும் பிரசித்த மடைந்து வந்தது. இரண்டு வாரத்திற்குள்ளாக நகரத்தின் கண் ஒரு எலி கிடைப்பது அருமையினும் அருமையாக முடிந்தது. ஏதாவது தப்பித்தவறி ஒரு எலியைக் காண்பார்களாயின் முதன் முதலில் அதை அடித்துக்கொன்று போட்டுதான் மறுவேலை அவ்வூரார்கள் செய்வது வழக்கம்.

அப்பட்டணத்திலுள்ள எலிகள் யாவும் எமபட்டணத்தை அடைந்துவிட்டபிறகு யாத்ரீகன் வேந்தனிடஞ் சென்று 'நராதிப.' தமது ராஜ்யத்தில் ப்ளேக் வியாதி தலைகாட்டாது என்று தங்களுக்கு பிரமாணிக்கமாகச் சொல்லவில்லையா! இனி கொஞ்சமும் அஞ்சவேண்டிய நிமித்தமேயில்லை. ஊரிலுள்ள எலிகளையெல்லாம் தந்திரவழியால் நான் கொல்லும்படிச் செய்து விட்டேன். ப்ளேக்வியாதி எலிகளின் வியாதி. எலிகளுக்கு எமன். முதன் முதலில் ஒரு ஊரில் இப்பெருவாரி வியாதி எலிகளுக்குத்தான் காண்கிறது. பிறகே மனிதர்களுக்குப் பரவுகிறது. எந்தப் பிரதேசத்தில் எலியென்ற நாமதேயமே கிடைக்காதோ அப்பிரதேசத்தில் ப்ளேக் என்பதே கிடையாது. ஜனங்கள் க்ஷேமமாக வாழ இடமுண்டு! என்று தான் செய்த

காரியத்தையும் சாகஸத்தையும் மறுபடியும் எடுத்து ஒரு தரம் அரசனிடத்தில் சொல்லிக்கொண்டான்.

சில மாதங்கள் கழிந்தன. நகரத்தில் ப்ளேக் வியாதி உண்டாகவில்லை. யாத்ரீகன் உரைத்த வார்த்தைகள் உண்மைதான் என்று நம்பி அவனுக்கு அநேக சிறு கிராமங்களை இனாமாக அளித்து மாளிகைகள் எல்லாம் பரிசாகக்கொடுத்து தன் சமஸ்தானத்தில் ஓர் பெரிய உத்யோகத்தையும் அளித்தான்.

ப்ளேக் என்பது எலியின் வியாதியாயிருக்க அது மனிதருக்குப் பரவிய விதம் எப்படி என்பதைப்பற்றி அடுத்த சஞ்சிகையில் ஆராய்வோம்.

(இன்னும் வரும்.)

கீ. பி. சேஷாத்ரி ஐயங்கார்.

---

# PART III.

## KNOWLEDGE ON AGRICULTURE, etc.

BY Mr. G. RAJAGOPAL,

*Late Editor, "South Indian Agriculture."*

## விவஸாய ஞானம்.

## கரும்பு.

332-ம் பக்கத்தொடர்ச்சி.

பூலோகத்தின் உஷ்ணபாக மெங்கும் கரும்பு விளைகிறது. அதிக மழையும், ஆகாயநமிர்ப்புமுள்ள இடங்க்ள் இதற்கு மிகத்தகுந்தவை. மேற்கு இந்திய தீவுகளும், பிலிப்பைன், பினாங்கு, சிங்கப்பூர் முதலிய தீவுகளும் கரும்புக்குத் தாயிடங்கள்.

சாஸ்திரப்பயிற்சியும் விடாமுயற்சியுமுள்ள பிரெஞ்சுக்காரர் பீட்ரூட் என்னும் ஓர்வித முள்ளங்கியிலிருந்த இனிப்பைச் சுமார் 50 வருஷக்காலமாய் விருத்திசெய்து, அக்கிழங்கிலிருந்து இப்போது ஏராளமாய்ச் சர்க்கரை எடுப்பதால் கரும்புச்சர்க்கரை விலை மிகவும் குறைந்துவிட்டது. இதனால் மேற்கு இந்திய தீவுகளில் (West Indies) கரும்புத்தோட்டங்களை ஏற்படுத்திய அநேக ஐசுவரியவான்கள் நஷ்டமடைந்தார்கள். அவ்வாறு நஷ்டம் நாமும் அடையக்கூடாதென்னும் எண்ணத்தால் மகாகனம் பொருந்திய முன்கவர்னர் ஜெனரலாகிய கர்ஜன் பிரபு இறக்குமதியாகும் அயல் நாட்டுச் சர்க்கரைக்கு சில வருஷங்களுக்கு முன் தீர்வை ஏற்படுத்தினர்.

கரும்பின் விபரங்கள்:—இது புல்லைப்போலொத்த இலையும் சிறு மூங்கிலைப்போலொத்த கோலுமுடையது. சுமார் 10-15 அடி நீளம் வளரக்கூடியது. ஜாதிக்கும் செய்நேர்த்திக்கும் தக்கபடி 2 முதல் 6 அங்குலத்துக்கு ஒரு கணுவாக இருக்கும். சடை கட்டினதுபோன்ற அடர்ந்த வேர் ஒன்றின்மேல் ஒன்று பாய்ந்து 10-15 அங்குலம் பரவியிருக்கும்; நயமான நிலத்தில் கரும்பின் வேர் 4-அடி ஆழம் போயிருப்பதாகவும் சிலர் தெரிவிக்கிறார்கள். ஆகையால்தான் கரும்புக்கு நிலம் ஆழமாகக் கொத்தப்படுகிறது. பின்னும் இவ்வேர் இடவெளியில்லாமல் நெருக்கமாய் படர்வதால் அதனருகில் புல் பூண்டு முதலியனச் செழித்து வளருகிறதில்லை. அழிப்பதற்கு அசாத்தியமான அறுகம்புல்லும் கரும்பின் வேரடியில் நன்றாய் வளருகிறதில்லை. இவ்வாறு வேர் அடர்ந்திருப்பதினால் இப்பயிருக்கு நிலத்தில் அதிக உரம் இருக்கவேண்டுமென்று ஊகிக்கவேண்டியிருக்கிறது. வேரின் நுனியில் ஒரு குல்லாய்போன்ற மூடலுண்டு. இம்மூனையிலிருந்து ஒருவிதமான புளிப்புரசம் உண்டாகிறது. அது பட்டவுடனே மண்ணில் தாதுவர்க்கங்கள் கரைந்து செடிக்கு உணவாகின்றன.



இலை செடிகளின் உயிர் வாழ்தலுக்கு இன்றியமையாதது. வேரினால் உரியப்பட்ட ஆகாரம் தண்டின் மூலமாய் ஏறி இலையில் சேரும். ஆகாயத்திலிருக்கும் கரியமலவாயுவானது இலையில் பிறிக்கப்பட்ட கரியணுக்குள் அவ்வாகாரத்தில் சேர்ந்து செடியின் எல்லாப் பாகங்களுக்கும் உணவாக உதவுகிறது. புதிதாய் வெட்டப்பட்ட கரும்பை ஆலையில் ஆட்டும்போது மறு முனையிலிருந்து சொட்டும் ருசியற்ற ஜலத்துளிகள் நிலத்தினின்று கிரகிக்கப்பட்ட ஆகாரமே. இது கரியணுவுடன் கலக்காத ஸ்திதியிலிருக்கிறது. மிருகங்களுக்கு நுரையீரல் சுவாசத்திற்கு உதவுவதுபோல செடிகளுக்கு இலைகள் உதவுகின்றன. இவ்விலைகளில் மயிர்க்கண்கள்போல் சிறு துவாரங்கள் உண்டு; இவற்றால் பின் வருமாறு ஆகாரம் ஜீரணப்பட்டு உதவுகிறது. ஆகையால் இலை முக்கியமானபாகம். பூச்சி புழுக்களாலும், ஆடு மாடுகளாலும் இலை யழிக்கப்பட்டால் செடி விருத்தியாவதில்லை என்பது ஒவ்வொருவருக்கும் தெரிந்த விஷயம். மேற் சொன்ன மாதிரியாக இலையில்சேரும் தாதுவர்க்கங்கள் செடியின் மற்ற பாகங்களுக்குப் பலன்பட்டது போக மீதியானவை நாளடைவில் அதிகரித்து அதன் பளுவினால் இலை பழுத்து உதிர்ந்துவிடுகிறது. ஆகையால் இச்சருகுகள் நோய் கொண்டிருந்தாலொழிய அவைகளை யெரித்துவிடாமல் எருவாக்குவது உத்தமம். கரும்பின் இளம் சோலை மாட்டுக்கு நல்ல தீவனம்.

இலையிலிருந்து போகும் நரம்பு, கணுக்களில் பாய்ந்து பிரிந்து ஒன்றுடன் ஒன்று பின்னிக்கொண்டு மறுபடியும் கரும்புக்குள் செல்லுவதால், கணுக்கள் நார் அதிகப்பட்டு உறுதியாகின்றன. இந்நரம்பு கரும்பின் கண்களிலும் சேருகிறது. பூதக்கண்ணாடியால் அதைப் பரீக்ஷித்தால் நார் இரும்புக் கம்பியைப்போல் கெட்டியாயிராமல் காற்றடைந்த குழாய்களாக இருப்பதாக தெரியவருகிறது. ஆகையால் கரும்பு நடுவதற்கு முன்னமே மண்

நன்றாய்க் காற்றுறி மட்கவேண்டியதென்பது தெளிவாய் விளங்குகிறது. பின்னும் கரும்பு வளருங்காலத்தில் அடிக்கடி நிலம் கொத்தப்பட்டும் கிளறப்பட்டும் இருப்பது அவசியம். ஓர் கரும்புக்கோலை சதையில் குறுக்கே வெட்டிப்பார்த்தால் நடுவில் நார் கொஞ்சமாகவும் சுற்றுப் புறத்தில் ஓரம் போகப் போக நார் அதிகமாகவும் சேர்ந்திருப்பதைக் காணலாம். நார்களின் இடைவெளியில் சர்க்கரை சேருவதால், அவ்விடைவெளி அதிகமுள்ள கரும்பின் மத்தியில் சர்க்கரை அதிகமாகவும் ஓரத்தில் கொஞ்சமாகவும் இருக்கிறது. ஆகையால்தான் தின்பதற்கு மேல்பட்டை உரித்த கரும்பில் இனிப்பு குறைவதில்லை. கரும்பின் வர்ணம் பட்டையில்தானிருக்கிறது. மரஆலை உபயோகத்திலிருந்தபோது இப்பட்டைவெகுவாய் நசுக்கப்படாமல் இருந்ததால், வெல்லம் ஒருவிதமாய்ச் சுத்தியாயிருந்தது. இரும்பு ஆலை பட்டையை நன்றாய் நசுக்குவதால் நிறத்துக்கு ஆதாரமான வஸ்துக்கள் வெல்லத்தில் சேர்ந்து வெல்ல நிறத்தை ஒருவாறாகக் கெடுக்கின்றன. பின்னும் கணுக்களில் பின்னிக்கொண்டிருக்கும் நரம்புகளில் அநேகவித உப்புக்களும் விதை முளைப்பதற்கு வேண்டிய பதார்த்தங்களும் இருப்பதால் அவை நன்றாய் நசுக்கப்பட வெல்லம் கெடுகிறது. சுண்ணும்பின் உபயோகம் தெரியாத மதனபல்லியில் வெல்லம் புளித்திருப்பது இரும்பு ஆலையே காரணமென்கிறார்கள். நாட்டுச்சர்க்கரை செய்பவர்களுக்கு கரும்பில் அதிக கணுவிருந்தால் வருத்தம். ரசாயன சாஸ்திரத்திலும் மற்றவிஷயங்களிலும் பேரெடுத்த ஐரோப்பியர் கரும்பில் எவ்வளவு கணுவிருந்தபோதிலும், சாற்றில் எவ்வளவு அழுக்கு இருந்தபோதிலும், தக்க பிரயாசத்தினால் அவற்றை நீக்கி வெள்ளைச் சர்க்கரையாக செய்துவிடுகிறார்கள். அவ்வாறு சாதனங்களில்லாத நமக்கு கரும்பு எவ்வளவு சுத்தமாயிருக்கிறதோ அவ்வளவுக்கும் சரக்கு மேன்மையாயிருக்கும். ஆகையால் கணுக்கள் தூரமுள்ள கரும்பே வெண்மையான சரக்குக்கு உத்தமம்.

## COMMERCE AND INDUSTRY.

BY Mr. M. A NELLIAPPA MUDALIAR.

### வர்த்தகமும் கைத்தொழிலும்.

#### ஒரு தொழிலை ஆரம்பிக்கிறதற்குமுன் யோசனை.

ஒரு தொழிலை ஆரம்பிக்கிறதற்கு முன் நன்றாய் ஆலோசனை செய்யவேண்டும். எத்தொழிலை யாரம்பித்தபோதிலும் ஓரளவில்லாவிடில் 'ஆசைக்கோ ரளவில்லை' யென்பதுபோல் மனம் மலைமலையாய் எண்ணிக் குவித்துவிடும். எப்பொழுது ஒரு தொழிலைச் செய்ய உத்தேசிக்கிறோமோ அப்பொழுது தன் ஸ்திதிக்குத் தக்கபடி இன்னது செய்கிறதென்பதைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். இவ்விஷயத்தில் ஒரு மனத்தராயிருக்க



வேண்டும். தனது அபிவிர்த்தியை நாடும் நண்பர் உறவினரிடம் தனதெண்ணத்தை யறிவித்து ஆலோசனை செய்யலாம். பல ஜனங்களிடம் சொல்லி யோசித்தால் பிரதிகூலமாய் முடிந்துவிடும். தனக்குள் நன்றாய் ஆலோசித்துத் தீர்மானிப்பது சிலாக்கியம். உடனே அப்படியே நடக்கமுயலவேண்டும். இல்லையெனில் எண்ணிய எண்ணமெல்லாம் ஒன்றின் பின்னொன்றாய் மறந்துவிடும். இவ்வுலக இயற்கையெப்படி யிருக்கிறதென்றால், தொழிலை ஆரம்பம் செய்வதன்முன் அளவற்ற யோசனை செய்வதும், ஆரம்பித்ததும் எல்லாவற்றையும் மறந்துவிடுவதுமா யிருக்கிறது. சிலருக்குப் பேசுந்திறமை மாத்திரமிருக்கும் சொல்வதுபோல் செய்யும் வாய்மையிருக்கிறதில்லை.

வர்த்தகத்தில் ஆலோசிப்பதை முக்கியமானதென்றே ஒவ்வொருவரும் அறியவேண்டும். ஒரு தொழிலைப் பற்றி நூறுவிதமாகப் பகுத்துப்பேசலாம். இது கஷ்டமான காரியமன்று. ஆனால் மனிதர்கள் செய்யவேண்டியவைகளுள், தனக்குள் சிந்திப்பதொன்றே கடினமான வேலை. ஆகையால் ஒவ்வொரு காரியத்தைச் செய்வதன்முன் பலரிடத்தில் யோசித்திருந்தாலும் தானும் அதை நன்றாய் சிந்தித்து ஓர் தீர்மானம் செய்திருக்கவேண்டும். அப்பொழுது அக்காரியம் தடையின்றி சித்திபெறும்.

#### வாலிபர்களும் வர்த்தகமும்.

வர்த்தகம் செய்ய விரும்பும் வாலிபர்கள் சொற்ப சம்பளத்திலாவது, ஆரம்பத்தில் சம்பளமில்லாமலாவது, தன் மனதுக்கு இசைந்த வியாபாரம் செய்யும் வணிகரிடம் அமர்ந்திருக்க வேண்டும். அப்பொழுது தான் வியாபாரம் இன்னதென்று அறியலாம். லாபநஷ்டம், சுகதுக்கம் முதலியவைகளின் வித்தியாசங்கள் அனுபவத்தில் விளங்கும். இப்படி அனுபவித்தவர்கள்தான் வணிகத்தொழிலுக்கு அருகராவர். 'இளமையிற் கல்' என்பதுபோல, எந்த விஷயத்தையுமறியவும், அனுபவித்து சித்திபெறவும் வாலிபதிசைதான் பொருத்தமானது. வாலிபதிசையில் சரீரம் திடமாகவும் ஊக்கமுள்ளதாயு மிருப்பதால் எவ்வளவு கஷ்ட நஷ்டம் வந்தபோதிலும் பொறுத்துக்கொள்ள முடியும். விடாமுயற்சி செய்வதற்கும் அனுகூலமாயிருக்கும். "சுவற்றை வைத்து சித்திரம் எழுதவேண்டு" மென்பதற்கிணங்க சரீரத்தில் பலமுள்ள போதுதான் வேலை செய்யலாம். வாலிபத்தில் உற்சாகமும், மனோதைரியமும் அதிகரிக்கிறது.

#### வர்த்தகத்தில் பொறுமையும், அதனால்வரும் பெருமையும்.

வர்த்தகர்கள் சாந்தகுணமுள்ளவர்களா யிருக்கவேண்டும். அவர்களின் முகம் சந்தோஷக் குறியோடு, வருபவர்களை வாவென்று முகமலர்ச்சி கூறுவதுபோ லிருக்கவேண்டும். வர்த்தகத்தில் மேன்மையடைய வேண்டுமாயின், அருகிலிருப்போர்களையும், வியாபார விஷயமாய் வருபவர்களையும் நட்பினராகச் செய்ய முயலவேண்டும். தன்னை நாடி வரும்போது இனிய

சொற்களைக்கூறி உதவிசெய்யவேண்டும். வினவிய விஷயத்தை நன்ருய்க் கேட்டு விடையளிக்கவேண்டும். வியாபாரத்திற்கு வருபவர்கள் எல்லோரும் நற்குணமுள்ளோரா யிருக்கமாட்டார்கள். சிலர் விற்கும் பொருள்களை அதிசீக்கிரத்தில் வாங்கிச் செல்வார்கள். இன்னும் சிலரோ, வாங்குவது சொற்பமா யிருந்தாலும் அதிகத் தொந்தரவைக் கொடுப்பார்கள். இவ்விருதரத்தாரையும் ஒரே மாதிரியாகப் பாவிக்கவேண்டும். பேசுவதில் சாமர்த்தியம் வேண்டும். சில வியாபாரிகள் முன் கோபியா யிருக்கிருர்கள். அவர்களிடமுள்ள வேலைக்காரர்களில் சிலருக்கு எஜமானனைவிட அதிக கோபம் உண்டாகிறது. 'வாங்குகிறதாயிருந்தால் இதை வாங்கு, இல்லையெனில் போ' என்றும் 'இதற்குமுன் இப்பொருளை வாங்கினதுண்டா' என்றும், இன்னும் பலமாதிரியாகவும் பேசுகிருர்கள். இப்படிப் பேசுவதால் சில சமயங்களில் சச்சரவும் உண்டாகிறது இது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். வர்த்தகத்தில் கோபத்தை விட்டொழிக்க வேண்டும். விநோதமாகப் பேசி இன்புறச் செய்யவேண்டும். தங்களிடத்தில் நம்பிக்கையுண்டாகும்படி நடந்துகொள்ளவேண்டும். வியாபாரம் செய்யும்போது சந்தோஷமாகவும், இல்லாதபோது சந்தோஷக்குறைவாகவும் யிருக்கக் கூடாது. நஷ்டமின்றி லாபமில்லை கஷ்டமின்றி சுகமில்லை. வர்த்தகத்தில் நஷ்டமும் லாபமும் ஸகஜம். நஷ்டம் ஏற்படுங்கால் பொறுமையுடனிருக்க வேண்டும் அப்பொழுதுதான் லாபத்தையும் பெறலாம். சாந்த குணத்தோடும், முகமலர்ச்சியோடும், அன்போடும், வியாபாரம் செய்வதே ஒரு பெரிய விளம்பரம் போலாகிறது. இதனுலுண்டாகும் புகழ் உலகெலாம் பெருகும்.

### ஒன்றிருக்க ஒன்று செய்தல்.

ஒரு வேலையிலிருக்கும் போது ஒழிந்த நேரங்களில் மற்ருெரு தொழிலுக்கு முயற்சி செய்வது சிலருடைய வழக்கமா யிருக்கிறது. இத்தீய வெண்ணம் அநேக வாலிபர்களின் தொழிலை அழித்து விடுகிறது. ஒரு தொழிலிருக்க மற்ருென்றில் பிரவேசிப்பதால் ஒன்றிலேனும் தேர்ச்சியடைய வழி யில்லாமற் போகிறது. வாலிபர்கள் காலத்தை மதிப்பிட்டு (Value of Time)ப் பார்க்கவேண்டும். ஒரே தொழிலில் பல வருஷம் உழைத்து வருவதால் உன்னத பதவியை யடைவது நிச்சயம். நமது வாழ்நாட்களை ஒரே வழியில் செலுத்தி வந்தால் அதிலுண்டாகும் பயிற்சியும் அனுபவமும் ஆனந்தத்தை யுண்டாக்கும். ஒரு வாலிபர் சில வருஷங்களுக்குமுன் இரண்டு சிறுவர்களுக்கு கல்வி கற்பித்துக்கொண்டு வக்கீல் (Pleader) பரிக்ஷைக்கும் படித்து வந்தார். கடைசியில் தேர்ச்சியடையவில்லை. வக்கீல் (லாயர்) வேலைக்காகப் படிப்பவர் வேறொன்றுக்கு ஆசைப்படாமல் அதிலேயே உழைத்து வந்தால் ஏன் விர்த்தியாக முடியாது? சட்டங்களை யெல்லாம் நன்ருய்ப் படித்து, வக்கீல்களில் முதன்மையா யிருந்து பிரதாபத்தையடைய முடியாதா? லாயர் பரிக்ஷையில் தேறியும் ஆரம்பத்



தில் போதுமான வரும்படியின்றி, பயிர்த்தொழில் தச்சுவேலை முதலியவைகளில் பிரவேசித்து சொற்பத்தை யறிந்து கொள்வதால் ஒரு பயனுமில்லை. வக்கீல் பிரபல லாயர் என்று பெயரெடுக்க முயற்சி செய்யவேண்டும். வருந்தினுல் வாராததுமுண்டோ எத்தொழிலையும் ஆரம்பித்த வுடனே லாபம் வரமாட்டாது. கொஞ்சகாலம் கஷ்டப்பட்டால் தான் சுகம் உண்டாகும். சிந்திக்காத மனம் சோம்பலுக்கே சாதகமா யிருக்கும் மனதை நல்வழியிலும் ஒரு தொழிலிலும் கட்டுப்படுத்த வேண்டும். மனதின் சக்தியைக் காண்பது கடினம்.

அடக்க முடையார் பலவற்றையும் பார்ப்பதுபோல் காணப்படுவார் ஒன்றையும் பாரார். ஒவ்வொருவர் வழியிலும் தோன்றுவார். ஆனுல் எவரையும் தடைபடுத்தமாட்டார். அக்னியில் 50 இரும்புக் கம்பிகளைப் போட்டாலும், சில கம்பிகள்தான் உஷ்ணத்தோடிருக்கும். கடைசியில் கம்பிகளைக் காய்ச்சியவருக்கே கையில் ஹானியை யுண்டுபண்ணுகிறது. இப்பேர்ப்பட்ட மனிதன் தனக்குள்ள கடமைகளையே அலக்ஷியஞ் செய்தவனுகும். இவன் எங்ஙனம் சந்தோஷத்தை யடையமுடியும். 'பலமரத்தைப் பார்த்தவன் ஒரு மரத்தையும் வெட்டுவதில்லை' யென்றும் 'இக்கரைக்கு அக்கரை பச்சை' யென்றும் பழமொழிகளைச் சொல்வதுமுண்டு. இன்னும் இதை விவரித்துச் சொல்லுவாம். இன்று வெற்றிலை பாக்குக்கடை வைக்கிறது. சிலகாலம் நடத்திக்கொண்டு போகும்பொழுது அரிசிக்கடை வைக்க ஆலோசனை செய்கிறது. அதற்குத் தக்க மந்திரிகளும் சேர்வார்களாயின் பின்னும் அனுகூலந்தான். வெற்றிலைக் கடையிலுள்ள ஊக்கமும் முயற்சியும் குறைகிறது. கொஞ்சகாலத்தில் வெற்றிலைப்பாக்குக் கடையையொழித்து அரிசிக்கடை வைக்கிறது. இதையும் முன்போலவே விட்டு மளிகை வியாபாரம் செய்ய ஆரம்பிக்கிறது. இப்படிச்செய்து வந்தால் எங்ஙனம் ஒரு தொழிலில் அனுபவமுண்டாகும்.

உத்தியோகம் செய்வோர்களிலும் சிலர், அந்தக் கம்பெனியிலிருப்பது நல்லது, இந்தக் கம்பெனியிலிருப்பது சுகம் என்று எண்ணுவாருமுண்டு. மனம் சிதறிப் பல விஷயங்களிலும் புகுவதே, பலிதமாகும் ஒரு வேலைக்கு ஒரு பெரிய சத்துருவைப் போலாகும். மனதை ஒரே விஷயத்தில் செல்லவிடுவோமாயின் சித்தியுண்டாகும். பல விஷயங்களிலும் மனதைச் செலுத்தினுல் எண்ணங்கள் அடுக்கடுக்காய் குவிகின்றன. அடிக்கடி கோபதாபமும், பொருமையும் உண்டாகிறது. கடைசியில் ஓட்டைக் குடம் போல் எவ்வித நல்விஷயமும் மனதில் தங்குகிறதில்லை. வஞ்சகம் முதலிய துர்க்குணங்கள் குடிபுகுகின்றன.

வாலிபத்தில் மனதை அடக்காவிடில் மற்றெக் காலத்திலும் அடக்க முடியாது. லோகோபகாரமான எத்தொழிலிலாவது தான் சமர்த்தன் என்ற கீர்த்தி பெறவேண்டும்,

# PART IV.

## HINDU LAW.

## ஹிந்துலா.

### Maintenance—ஜீவனாம்சம்.

(336-ம் பக்கத் தொடர்ச்சி.)

கேழ்வி.—விதவை குடும்பத்துடனேயே வசித்தால்தான் அவளுக்கு ஜீவனாம்சம் கிடைக்கும் என்பதான கேசுகள் உண்டா?

ஜவாப்.—பொதுச்சொத்தின் வரும்படியானது மிகவும் சொல்பமாய், பிரித்துக்கொடுக்கக்கூடாத ஸ்திதியிலிருந்தாலும், புருஷன் இறந்துபோகும்போது ஜீவனாம்சத்துக்காக சொத்து ஏற்படுத்தி பொதுக் குடும்பத்திலேயே வசிக்கவேண்டுமென்று உயில் செய்துவிட்டுப் போயிருந்தாலும் அப்படிப்பட்ட ஸ்திதியில் விதவை குடும்பத்தைவிட்டுத் தனியாகப்போயிருந்தால் அவளுக்கு ஜீவனாம்சம் கிடைக்கமாட்டாது. (இ. லா. ரி. 3 பம் 44 ; இ. லா. ரி. 4 பம் 261 ; 12 கல். ஹை.கோ. ரி. 15 பம் 236.)

கே.—பொதுக் குடும்பத்தில் ஒரு வீட்டுக்கு மேற்பட்ட வீடுகளிருக்கும் பக்ஷத்தில் இன்ன வீட்டில் வாசம் செய்ய எனக்கு இடம் கொடுக்க வேண்டுமென்று கேழ்க்கவாவது ஷை விதவைக்கு பாத்தியதையுண்டா?

ஜ.—அவளுக்காக பொதுக் குடும்பத்தில் யேர்ப்படுத்திவிட்ட இடத்தில் வாசம் செய்யவேண்டியதே தவிர இன்ன இடம் அல்லது இன்னவீடுதான் வேண்டுமென்று கேட்க விதவைக்கு பாத்தியமில்லை. (4. அல. ஹை. கோ. ரி. 103.)

கே.—வேறு எவ்வகையான கேசுகளில் விதவைகளுக்கு ஜீவனாம்சம் கிடையாது?

ஜ.—விதவைகள் விபசாரியாகயிருந்தாலும் ஜீவனாம்சம் கிடையாது. (1 மது. ஹை. கோ. ரி. 373; 2 மது ஹை. கோ, ரி. 337; 5.மதுஹை. கோ. ரி 160; 4 மது. ஹை. கோ. ரி. 185 ; 13 கல். ஹை கோ. ரி. 72; 9 பம் ஹைகோ. ரி. 108.)

கே.—ஒரு விதவை தனக்கு ஜீவனாம்சம் கிடைக்கும்படி கோர்ட்டு மூலமாய் தீர்ப்புப் பெற்றுக்கொள்ளுகிறாள், அந்த ஜீவனாம்சம் எந்தக் காரணத்தாலாவது, நின்றுபோக முடியுமா?



ஜ.—கோர்ட்டு மூலியமாய் ஜீவனாம்சம் கிடைத்த பிறகு விபசாரியாகயிருந்தாலும், அந்த ஜீவனாம்சத்தை ரத்துச் செய்துவிடலாம். (இ. லா. ரி. 9. பம். 108.)

கே.—கோர்ட்டு மூலமாய் யேர்ப்பட்ட ஜீவனாம்சம் விபசாரியாகப் போய்விட்ட கேசுகளில் உறுதியாகவே மாட்டாதா? அல்லது சில கேசுகளில் உறுதியாக நிற்குமா?

ஜ.—மகா அல்பமான ஜீவனாம்சத்தை கோர்ட்டார் ரத்துச் செய்யமாட்டார்கள். இ. லா. ரி. 1. பம். 559 ; இ. லா. ரி. 17. கல். 674.

கே.—எப்பேர்ப்பட்ட கேசுகளில் விதவைக்கு ஜீவனாம்சம் கொடுக்க அவள் புருஷன் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கடமைப்பட்டவர்களில்லாம லிருக்கிறார்கள்?

ஜ.—பிதுரார்ஜிதச் சொத்தாவது, சுபார்ஜிதச் சொத்தாவது கொஞ்சங்கூட இல்லாமலிருந்தால் இறந்து போனவனுடைய விதவைக்கும் பிரித்துக்கொண்டு தனியாயிருந்தவனுடைய விதவைக்கும் ஜீவனாம்சம் கொடுக்க மைத்துனன் மாமனார் முதலியவர்கள் கட்டுப்பட்டவர்களல்ல. இ. லா. ரி. 11. மது. 191 ; 9. பம். ஹைகோ. ரி. 283 ; 24. ஸதர்லாண்ட்ஸ் வீக்லி ரிப்போர்டர் 274 ; இ. லா. ரி. 6. கல். 36 ; இ. லா. ரி. 2. பம். 573 ; இ. லா. ரி. 2. பம். 632 ; இ. லா. ரி. 7. பம். 127 ; இ. லா. ரி. 8. பம். 15 ; இ. லா. ரி. 11. பம். 199.

கே.—பரம்பரைக் குடும்ப சொத்து இல்லாத கேசுகளிலும் எப்பொழுதாவது விதவைக்கு ஜீவனாம்சம் கேழ்க சட்டப்படி பாத்தியதை உண்டா?

ஜ.—அவளுடைய மாமனார் சுவயார்ஜிதச் சொத்திலிருந்து அவர் உயிரோடிருக்கும்போது விதவைக்கு ஜீவனாம்சம் கேழ்கப் பாத்தியதையல்லாமற்போன போதிலும், அவரிறந்த பிறகு அவருடைய மற்ற பிள்ளைகள் அவர் சொத்தை பாகம் செய்து கொள்வதுபோல இவளும் ஜீவனாம்சம் கேழ்கப் பாத்தியமுண்டு. (இ. லா. ரி. 11. அல. 294 ; இ. லா. ரி. 17. கல். 373.)

(இன்னும் வரும்.)

# PART. V.

## CO-OPERATION.

## கூட்டுறவு.

ஒரு கிராம ஐக்கிய நாணயச்சங்க பஞ்சாயத்து மீட்டிங்கு.*

[புதுக்கோட்டை டவுன்பாங்கி காரியதரிசி ம-ா-ா-ஸ்ரீ, G. சுந்தரேச அய்யரவர்களால்.]

இடம்.—காரியதரிசி வீடு.

ஆஜர்.

1. சுப்பய்யர், காரியதரிசி.
2. இராமஸ்வாமிபிள்ளை, பிரஸிடெண்டு.
3. சுப்பன் செட்டியார், கஜான்ஜி.
4. வேம்புவய்யர் } மெம்பர்கள்.
5. அய்யாவய்யர் }

மணி அய்யர்.—கிராம பள்ளிக்கூட உபாத்தியாயரும், சங்கம் கிளர்க்கும்.

காரியதரிசி.—வாருங்கள்—அய்யாவய்யரவாள்—ஏன் இவ்வளவு நாழி?

அய்யாவய்யர்.—படுத்துக்கொண்டிருந்தேன். தூங்கிவிட்டேன், ஏன் மீட்டிங்குக்கு ஒருவரும் வரவில்லை. கூப்பிடவந்தவுடன் தான் விழித்துக்கொண்டேன். அதோ வருகிறார் இராமஸ்வாமிபிள்ளை. அவர் எப்பொழுதும் சரியாய் வருவார்.

காரியதரிசி.—வரவர மீட்டிங்கு கூடுவதற்குப் போதுமான மெம்பர்கள் கிடைப்பது துர்லபமாயிருக்கிறது. வெகுநேரம் காக்கவேண்டியதாயிருக்கிறது. எல்லோரும் சரியாய் வந்தால் மீட்டிங்கில் வேலை 10 நிமிஷத்தில் முடிந்துவிடும். யாரை யார் சொல்லலாம்?

இராமஸ்வாமிபிள்ளை.—கோபித்துக் கொள்ளக்கூடாது. ஜனங்களுக்கு கல்வியபிவிருத்தியாக வேண்டாமா? பட்டணம் முதலிய இடங்களில் கூட அநேக மீட்டிங்குகள் மெம்பர்கள் வாராததினால் கூடுகிறதில்லை. நான் ஏதோ இதுமட்டும் நடக்கிறதேயென்று சந்தோஷப்படுகிறேன். இன்னம் சில ஊரில் பார்த்தால் தெரியும். கல்வி யறிவு வளர வளர நம் உணர்ச்சியும் அதிகப்படும். தேசத்தைப் பிடித்தபாவம், மகான் கோக்கலே இறந்துவிட்டார். இருந்தால் கல்வியை பரவச்செய்ய எவ்வளவோ செய்திருப்பார்.

காரியதரிசி.—ஆமாம் வாஸ்தவந்தான். எனக்கு கூட்டுறவி லிருக்கிற ஆஸக்தை என்னை இவ்வாறு சொல்லும்படி செய்தது. எல்லா இடங்களிலும் இப்படித்தானா?

* சென்ற புதுக்கோட்டை கோவாப்ரேடிவ் கான்பரென்ஸில் வாசிக்கப்பட்டது.



அய்யாவய்யர்.—Sir! அதிருக்கட்டும். என்னமோ கான்பிரென்ஸாமே, என்னமோ அமக்களப்படுகிறதே. நாம் ஒன்றும் சொல்லக்கூடாது. என்னத்திற்கு இந்த ஆடம்பரமெல்லாம்?

இராமஸ்வாமிபிள்ளை—ஆ! இதென்ன! தாங்கள்கூட இப்படிச் சொல்லுகிறீர்கள். கான்பிரென்ஸ் எங்கும் நடக்கிறது. சென்னையில் வருஷத்திற்கு ஒருமுறை இராஜதானி கூட்டுறவுச் சங்கக் கான்பிரென்ஸ் கூடுகிறது. சென்னை கவர்னர் கூட ஒருமுறை அக்கிராசனம் வகித்தார்கள். அங்கே அநேக விஷயங்கள் ஆலோஜிக்கப்படுகின்றன. எப்படி காங்கிரெஸ் மகா ஸபையில், தேசத்திற்கு வேண்டிய பொது விஷயங்களைப்பற்றி யோஜிக்கப்படுகின்றனவோ அதுபோல் கூட்டுறவு கான்பிரென்ஸில் கூட்டுறவு சம்பந்தமான விஷயங்கள் யோஜிக்கப்படும். கான்பிரென்ஸ்கள் அடிக்கடி கூடினால் தான் ஜனங்களுக்கு விஷயங்கள் நன்கு புலப்படும். அநேகர் கூடி தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டு ஆலோஜனைசெய்து ஒரு முடிவிற்கு வரக்கூடும். இதில் சிரத்தையில்லாதவர்களும் அநேகர் வருகிறார்கள். இதில் ஏதோ இருக்கிறது என்று விஷயத்தை கொஞ்சம் கவனிப்பார்கள். தாங்கள் நிர்வாக சபை மெம்பராக இருந்து இப்படிச் சொல்லக் கூடாது.

அய்யாவய்யர்.—இல்லை இல்லை, மன்னிக்கவேண்டும். என்னைக் கேட்டார்கள் நான் ரூ 5 நன்கொடை கொடுத்திருக்கிறேன். எனக்கு என்னமோ படாடோபமாய் தோன்றியது. சொன்னேன், கான்பிரென்ஸில் அவ்வளவு பிரயோசனம் இருக்கிறதா?

(வேம்புவய்யர் வருகிறார்).

காரியதரிசி.—வாருங்கள் உங்களுக்குத்தான் காத்துக்கொண்டிருக்கிறோம். இன்னம் ஒருவர் வந்தால் மீட்டிங்கு கூடலாம்.

வேம்புவய்யர்.—இவ்வளவுதானா நாழியாயிற்றே என்று நினைத்துக்கொண்டிருந்தேன். செட்டியாரைக் கூட்டிக்கொண்டு வருகிறதுதானே?

காரியதரிசி.—மணி, செட்டியாரை கையோடு வரவேண்டுமென்று கூட்டிவா.

(மணி போய் கூப்பிட)

செட்டியார்.—கொஞ்சம் ஜோலியிருக்கிறது. அவசியம் வரவேண்டுமா?

மணி.—அவசியம் வரத்தான் வேண்டும். முக்கிய விஷயங்கள் இருக்கின்றன. பணம் இன்னம் அதிகமாய் கடன் பாங்கியிலிருந்து வாங்கப் போகிறார்கள். கட்டாயம் வரவேண்டும்.

செட்டியார்.—இதேதடா அப்பா தொல்லை. கணக்குப்பிள்ளை! பெட்டியை பார்த்துக்கொள், இதோ போய்விட்டு வருகிறேன். சம்பளமில்லாச் சேவகம், வீண்வம்பு, யார் ஊரிலே பணமில்லை என்று அழுதா, எதற்கு இந்த உபத்திரவம். வேண்டாமென்றால் விடமாட்டேன் என்கிறார்கள்.

(இன்னும் வரும்.)

# PART VI.

## EDUCATION.

BY Mr. K. P. SESHADRI AIYANGAR,
(*Teacher, Muthiyalpet High School, Madras.*)

## கல்வி.

---

### ‘கிண்டர்கார்டன்’
### அல்லது விளையாட்டுப் பள்ளிக்கூடம்.

‘கிண்டர்கார்டன்’ என்பது ஜெர்மன் வார்த்தை. ‘கிண்ட்’ என்பதற்குக் குழந்தை என்பது பொருள். ‘கிண்டர்’ என்பது குழந்தைகள் என்று பன்மைப் பொருள்படும். கார்டன் என்பதற்குத் தோட்டம் என்று அர்த்தம். ஆனால் கிண்டர்கார்டன் என்னும் பதத்திற்குப் பிள்ளைகளுடைய அல்லது பிள்ளைகளுக்காக நிருமிக்கப்பட்ட தோட்டம் என்பது அர்த்தமன்று. பிள்ளைகளாகிய தோட்டம் என்றேபொருள் அறியவேண்டும். குழந்தைகளே மிக்க கவலையுடன் ஆதரிக்கப்படவேண்டிய செடிகளாகவும், உபாத்யாயர்களே அச்செடிகளைக் கண்ணை இமைகாப்பதேபோல் பாதுகாக்கும் தோட்டக்காரர்களாகவும் பாவனை செய்யவேண்டும். ஒரு தோட்டத்திலுள்ள செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிப் பாதுகாத்து வளர்ப்பது எப்படித் தோட்டக்காரனது வேலையோ, அப்படியே பிள்ளைகளின் மனதாகிய தோட்டத்தைப் பயிற்சிசெய்து அபிவிருத்தியடையச் செய்வது உபாத்யாயர்களது கடமை. இந்த அர்த்தம் விளங்கும் பொருட்டும், பிள்ளைகள் ஓடியாடிக் குதூகலத்துடன் குதித்து விளையாடும்படிக்கும் ஒவ்வொரு ‘கிண்டர்கார்டனை’ச் சுற்றிலும் பெரிய தோட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. கிண்டர் கார்டனிலிருக்கும் பிள்ளைகள், தாம் விளையாடிக் கொண்டிருக்கிறதாக எண்ணம் கொண்டிருப்பார்களாகையால் கிண்டர்கார்டனை நாம் தமிழில் ‘விளையாட்டுப் பள்ளிக்கூடம்’ என்று சொல்லலாம்.

அதில் மூன்று வயதுமுதல் ஆறு பிராயம் வரையுள்ள குழந்தைகளைத் தான் சேர்த்துக்கொள்வது. சிறு குழந்தைகளுடன் புருஷர்கள் பழகுவதிலும் ஸ்த்ரீகள் பழகுவது சகஜமாயிருக்கும். சுபாவத்திலேயே பெண்களுக்குக் குழந்தைகளின்மீது அன்பும், ஆசையும் அதிகம். இளகிய மனதும், இன் சொல்லும், கருணைசொரியும் பார்வையும், வசீகரிக்குந் தன்மையும், சாந்தமும், ஆடவர்களைவிட அரிவையர்கட்கு இயற்கையிலேயே அதிகமாக அமைந்துள்ளன. ஆகவே குழந்தைகளை அவர்களுக்குத் தகுந்தவிதமாகப் பழக்குவதில் ஸ்த்ரீகளே ஏற்றவர்கள். இதனால் தான் சாதாரணமாக, கிண்டர் கார்டனுக்கு ஸ்த்ரீகளை உபாத்யாயனிகளாக நியமித்து வருகிறார்கள். அவர்கள் தங்களிடத்தில் ஒப்பிக்கப்பட்ட குழந்தைகளிடத்தில்



ஈன்றெடுத்த அன்னைபோல அன்பு பாராட்டுபவர்களா யிருக்கவேண்டும். பிள்ளைகள் ஸ்வபாவத்திலேயே எப்பொழுதும் குதூகலமும் உத்ஸாகமுமுள்ளவர்களா யிருப்பார்கள். அவர்கள் நடை யென்பதையே இன்னதென்று அறியார்கள். துள்ளித்துள்ளியோடும் சுபாவம் மேலிட்டுள்ளவர்கள். அவர்கள் கொண்டிருக்கும் உத்ஸாகத்தில் கொஞ்சங்கூடக் குறையாமலிருக்க அவர்களுக்கு முக்கியமாய் வேண்டியவை இரண்டு. அவை அன்புள்ளதாயும், தங்களைப்போல் குதித்து விளையாடும் சுபாவமுள்ள பிள்ளைகளின் சகவாசமுமாம். இவையிரண்டும் கிண்டர் கார்டனில் உண்டு. ஆகையினால் தான், எங்கெங்கே கிண்டர்கார்டன் ஏற்படுத்தப் பட்டிருக்கிறதோ, அங்கங்கேயெல்லாம் பிள்ளைகள் அதிகமாகச் சேர்ந்து வருகிறார்கள்.

மூன்று வயது வரையில் பிள்ளைகளை வீட்டில் தாயார் சரிவரப்பார்த்து வரவேண்டும். அந்த வயதுக்குள் தாயைவிட்டுப் பிரிந்திருப்பது குழந்தைகளால் முடியாது. அந்த வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளை நல்வழிக்குக் கொண்டுவரவேண்டிய முறை எல்லா ஸ்த்ரீகளுக்கும் தெரியாதாகையால், தெரிந்தவர்களைக் கிண்டர்கார்டன் உபாத்தினிகளாக நியமித்து, அவர்களிடத்தில் குழந்தைகளை ஒப்பித்து வருகிறார்கள்.

கிண்டர்கார்டன், வீட்டுக்கும் பள்ளிக்கூடத்திற்கும் நடுத்தரம். வீட்டிலுள்ள தாயின் அன்பும், சாதாரணமாய்ப் பள்ளிக்கூடங்களிலுள்ள சட்டதிட்டங்களில் சிலவும், கிண்டர்கார்டனில் இருக்கின்றன. ஆயின் வீட்டில் குழந்தையின் படிப்புக்கு அடிக்கடி நேரிடும் விகாதங்களும், பள்ளிக்கூடத்திலுள்ள கடுமையான கிரமசிக்ஷையும் இதில் இல்லை. வீட்டைவிட்டு கிண்டர் கார்டனிலிருப்பதும் பிறகு அதைவிட்டுச் சாதாரணப் பாடசாலைக்குப் போய் அதன் நிபந்தனைகளுக்கு உட்படுவதும் சகஜமாயிருக்கும்.

### இம்முறையை யுண்டாக்கினவர் யார்?

இந்தக் கிண்டர்கார்டன் முறையை முதன் முதலில் ‘ பிரடரிக் பிரோபல்’ என்னும் ஜெர்மானியர் ஏற்படுத்தினார். அவர் தம் வாணாளெல்லாம் குழந்தைகளுக்குப் போதிக்கும் முறையைக் கண்டுபிடிப்பதிலேயே கழித்தார்; இயற்கைப் பொருளை நுட்பமாகக் கவனிப்பார்; அவைகளைப்பற்றிக் கொஞ்சம் ஐயம் ஏற்பட்டால், கற்றறிந்த நிபுணர்களைக்கொண்டு சந்தேகங்களை நீக்கிக்கொள்வார். ‘உலகமென்பதே ஒரு புஸ்தகம்; அதிலடங்கிய ஒவ்வொரு ஊரும் அப்புஸ்தகத்தின் ஒவ்வோர் ஏடு. ஒவ்வொருபொருளும் அவ்வேட்டின் ஒவ்வொரு வரியாகும்; ஒவ்வொரு பொருளும் உணர்த்து மறிவு ஒவ்வொரு விஷயம். அந்த விஷயத்தைத் தெரிந்து கொள்வதே மனிதனுக்குரிய நோக்கம்; உலகத்தில் தோன்றும் ஒவ்வொரு மனிதனும் அப்புத்தகத்தைப் படித்துணர்வதற்குத் தோன்றும் மாணவன்’. இது உலகத்துக்கெல்லாம் பொதுவான சித்தாந்தம்! இந்த சித்தாந்தத்தை ஐரோப்பாக் கண்டத்தில் பிரபலமாக்கினவன் இந்த பிரோபல் என்னும் ஜர்மானியப் புலவனே.

இயற்கையையே புத்தகமாகக்கொண்டு, வேறு புத்தகங்களின் உதவியின்றி, இயற்கையைப் பார்த்து நேரே பாடம்படித்து அறிவை வளர்ப்பதே உத்தமமான மார்க்கமென்பது பிரோபலின் கொள்கை. அவரது கொள்கைகளையெல்லாம் ஒருங்கே திரட்டி 'மனிதனைப் படிப்பிக்குமுறை' (The Education of Man) என்பதாக எழுதி வெளியிட்டிருக்கிறார்.

தற்காலத்தில் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய கண்டங்களில் அநேக தேசங்களில் அந்தந்தத் தேசத் துரைத்தனத்தார்கள் பாலசிக்ஷை விஷயத்தில் பிரோபல், மான்டிஸோரி என்னும் இருவர்களின் கொள்கைகளையும், முறைகளையுமே முக்கியமாகக் கையாடி வருகின்றார்கள். நமது துரைத்தனத்தாரும், வித்யா நிபுணர்களும் அதே முறையை நமது சிறுவர்களைப் படிப்பிக்கும் விஷயத்தில் அநுஷ்டித்து வருகின்றார்கள்.

பிரோபல் என்பவர், பிள்ளைகளுடைய மனப்பயிற்சிக்கு "அநுகூலமாகச் சில ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றார். பிள்ளைகளுக்கு இந்திரிய ஞானம் விருத்தியாகும்படி, சில சாமான்களைக்கொண்டு செய்யக்கூடிய விளையாட்டுக்களை ஏற்படுத்தியிருக்கிறார். இந்தச் சாமான்களுக்கு (Gifts) 'கொடைகள்' என்றும், அவைகளைக்கொண்டு பிள்ளைகள் ஆடுகிற விளையாட்டுக்களுக்கு (Occupations) 'ஆகுபேஷன்ஸ்' என்றும் பெயர். இவைதவிர, பிள்ளைகளுக்கு அர்த்தமாகக்கூடிய நடையில் சில விளையாட்டுப் பாட்டுக்கள் உண்டு. "நடப்போம், நடப்போம், நாமெல்லாரும் நடப்போம்" என்றிம்மாதிரி பொருள் படும்படியான பாட்டுக்களை உபாத்தியாயர் சொல்லி, அவற்றிலடங்கிய விஷயங்களைத் தெளிவாய்ப் பிள்ளைகளுக்குத் தெரியும்படி அபிநயித்துக்காட்டவேண்டும். இந்தப்பாட்டுக்களுக்கு 'அபிநயப்பட்டுக்கள்'' என்று பெயர். நம்முடைய பெண் குழந்தைகள் பாடிக்கொண்டு போடுகிற கோலாட்டம், அடிக்கிற கும்மி, ஆடுகிற அம்மானை, அடிக்கும்பந்து இவையெல்லாம் ஒருமாதிரியான அபிநயப் பாட்டுக்கள்தான். நம்மவர்களுக்கு இவ்விதமான அபிநயப்பாட்டுக்கள் (Action Songs) புதியவையே அல்ல. தொன்றுதொட்டு நம் பெண்பாலர் கையாடிவரும் புராதனப் பழக்கமேயாகும். மலர் கொய்யும்போது பாடும் பாடல்களும் ஒருவித அபிநயப்பாட்டுதான்.

(இன்னும் வரும்.)

---

A diploma of merits has been awarded to the Kaminia Perfumery Co., of Bombay, in the recent Industrial Exhibition held at Madras, for their world-wide reputed preparations, *viz.*,

**KAMINIA HAIR OIL** (Registered)

AND

**OTTO DILBAHAR PERFUME** (Registered).



# PART VII.

## NEWS AND NOTES.

## ஸமாசாரக் குறிப்புகள்.

### திருச்சுழியலில் மஹா கும்பாபிஷேகம்.

திருச்சுழியல் என்பது நீர்வளம், நிலவளம் பொருந்திய பாண்டியநாட்டில் இராமநாதபுரம் ஜில்லா அறுப்புக்கோட்டை தாலூகாவில் கௌண்டின்யநதிக் கரையிலுள்ள புராதன சிவஸ்தலம். மஹாபிரளய காலத்தில் சிவபெருமான் அப்பிரளயத்தைச் சுழித்து வற்றச்செய்த ஸ்தலமிதுவாம். இந்த ஸ்தலத்தில் இந்த்ரத்யும்னன் முதலிய பாண்டிய சக்ரவர்த்திகள் வழிபட்டு சர்வாபீஷ்டங்களையும் பெற்றதாக ஸ்தலபுராண மியம்புகிறது. இத்தலம் இராமநாதபுரம் சமஸ்தானம் ராஜா ஸ்ரீமது ஹிரண்ய கெர்ப்பயாஜி ரவிகுலமுத்து விஜய ரெகுநாதராஜா சேதுபதி மஹாராஜா அவர்கள் ஆதீனத்துக்குட்பட்ட தேவஸ்தானங்களிலொன்று. இதிலுள்ள ஸ்ரீ ஸகாயவல்லி ஸமேத ஸ்ரீ தநுநாதேஸ்வரர் ஆலயம் சிலமாயிருந்ததுபற்றி இராமநாதபுரம் சமஸ்தானம் த்ரவ்ய ஸஹாயமும், திருக்கோவில் திருப்பணிகளையே தமது முக்ய கைங்கர்யமாக மேற்கொண்டொழுகிவரும் தேவகோட்டை நகரத்தார்களிற் சிலர்களின் த்ரவிய சகாயமும் சேர்ந்து திருப்பணி செய்யப்பெற்று நிறைவேறின.

புத்தி சாதுர்யமும் விசால நோக்கமுமுள்ள மாக்ஷிமைதங்கியமஹா ராஜராஜஸ்ரீ பா. முத்து ராமலிங்கசேதுபதி மஹாராஜா அவர்களால் வைதீக விஷயமாகிய இம் மஹா கும்பாபிஷேக கைங்கர்யம் லௌகீக விஷயங்களிலும் அணுத்துணையும் பிசகாதபடி நடத்திவைத்ததை மெச்சாதார்யாரே.

கும்பாபிஷேக தினத்திற்கு பல நாட்களுக்கு முன்னமே வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவந்தன. திருச்சுழியல் சாமான்யமாகிய சிறு "சானிடேரி அஸோஸியேஷன்'' கிராமம். இதில் சுமார் லெட்சக்கணக்கான ஜனங்கள் ஏககாலத்தில் கூடுவதென்றால் நினைத்தற்கும் பிரமாதமாயிருக்கின்றது. ஒருவாரத்திற்கு முன்னமே நாலாதிக்குகளிலுமிருந்து வைதீக விப்ரரும், யாசகரும், பாடகரும், வித்வான்களும், மதப்பிரசாரகர்களும், கதாப்பிரசங்கிகளும், நட்னமாடுவோரும், வேடிக்கை பார்ப்போரும், கடைசியாக 23—1—18 காலை நடைபெறும் மஹா கும்பாபிஷேக தரிசனம் செய்யவேண்டுமென்னும் அவாவுடன் வந்து சேர ஆரம்பித்தனர். செட்டிநாட்டினின்றும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்திருந்தார்கள். இப்பெரிய கூட்டத்தை எதிர்பார்த்தே போதுமான இடங்களில் சௌகர்யமான கொட்டகைகள் முன்னாடியே தயார் செய்யப்பட்டிருந்தன. இவ்வாறு வந்துசேரும் ஜனங்களின் பாதுகாப்புக்காக போலீஸ் படை தருவிக்கப்பட்டிருந்தது. இராக்காலங்களில் வேண்டிய இடங்களில் காந்த விளக்குகள் போடப்பட்டிருந்தன. இராமநாதபுரத்திலிருந்து சமஸ்தானம் திவான் மிஸ்டர், ராவ் ஸாகேப். S. திருமலை ஐயங்கார், B. A., B. L. அவர்கள், ஸமஸ்தானம் ஜெனரல் சூப்ரண்டெண்டு மிஸ்டர். ஜெ. வ. செல்லச்சாமிப் பிரபு அவர்கள், அருப்புக்கோட்டையிலிருந்து ஸப் மாஜிஸ்திரேட்டார் மிஸ்டர் ராமலிங்கமுதலியார், B. A. அவர்கள், தேவாங்கு செட்டியச்சிறுவர்கள் கூடிய சிவநாமாவளி கோஷ்டிகள், கமுதி ஸப் ரிஜிஸ்தராரவர்கள், மதுரையிலிருந்து திருஞானசம்மந்த தேசிகபண்டார சந்நிதி அவர்கள், தேவகோட்டையிலிருந்து மிஸ்டர் தி. அண்ணாமலைசெட்டியாரவர்கள் முதலானவர்களும் வந்து அவரவர்களுக்கமைக்கப்பட்டிருந்தவிடுதிகளில் தங்கி இம்

மஹா கும்பாபிஷேகவைபவத்தைக் கண்குளிரப் பார்த்தானந்தித்தார்கள். கும்பாபிஷேகத்தன்றிரவு ஸமஸ்த பரிவார ஸமேதராக ஸ்ரீ தநுநாதேச்வர சுவாமியும், ஸ்ரீ ஸஹாயவல்லியம்மையும் விருஷபாரூடராய் வீதியுலா எழுந்தருளும் மஹோத்ஸவமும் வெகு விமரிசையுடன் நடந்தேரியது. அதில் ஸமஸ்தானம் ஜெனரல் சூப்ரண்டெண்டு ஸ்ரீமாந் ஜெ. வ. செல்லச்சாமிப்பிரபு அவர்கள் விசேஷ ஊக்கத்துடன் ஒவ்வோரமைப்பையும் ஜீலபிசகாதவர ஏற்பாடு செய்து வீதிமுழுவதும் கூடவே வந்தது ஸ்ரீ நந்திதேவரின் காக்ஷியை ஒத்திருந்தது.

---

## க்ரிஸ்மஸ் வாரத்தில் ஜர்மானியர் செய்த அக்கிரமம்.

சென்ற டிஸம்பர் மாதக் கடைசி வாரத்தில் உலகிலுள்ள கிறிஸ்தவ மதஸ்தர் அனைவரும் பண்டிகை வாரமாகக் கொண்டாடியபோது ஜர்மானிய ராணுவஸ்தர் மட்டும் அவ்வாரத்தைத் தமது கடின சித்தத்தோடு கழிக்கலாயினர். ஏனென்றால், அவ்வாரத்தில் ஜர்மானிய ராணுவ அதிகாரிகள் மியூனிக், பிராங்க்போர்ட், லீப்ஸிக், டஸல்டார்ப், மான்ஹீம் முதலான பட்டணங்களில் வசித்துவந்த அபேதவாதிகளில் (Socialists) சுமார் 300 பேர்களைப் பிடித்துப் பந்தோபஸ்தில் வைக்கும்படி உத்தரவு செய்தார்களாம். இது நாகரிகமிருந்ததாகச் சொல்லப்படும் தேசஸ்தருக்கழகோ?

---

## பேசுவதுபோல் எழுதுவது.

பேசுவதற்கும் எழுதுவதற்கும் வெகு வித்தியாசமுண்டு; பேசும்போது வழக்கச் சொல்லாக வழங்குவதை நாம் உபயோகிக்கிறோம்; எழுதும்போது அப்படிச் செய்வது தவறாகும். இலக்கண சுத்தமாகவும் பகுதிவிகுதிகள் அமையப்பெற்ற சொற்றொடர்களை எழுவாய் பயனிலை செயப்படுபொருள் ஸஹிதம் கேட்பதற்கினிமையும் படிப்பதற்கு ரம்மியமும் உண்டாகும்படி பொருத்தி எழுதுவது அழகு; எழுதுகையில் எழுத்துப் பிழைகளில்லாது அந்தந்த இனத்தையொட்டி உயிரெழுத்து வரும்போது அதையும், மெய்யெழுத்துப் போடவேண்டுகையில் அதையும் குறித்து எழுதுவது நலம். அதை விட்டு இலக்கணமென்பதையே சிறிதுங் கருதாது கேவலம் பாஷையைக் குறுக்குவதும் முறிப்பதும் சிறிதும் பிரயோசனத்தைத் தருவதல்ல; அப்படியதனை யப்பியசிப்பதுந்தவறு. இப்போது, இம்மாதம் 14-ந்தேதி முதல் ருஷ்யாவில் ஒரு புதிய விதி யேற்பாடாயிருக்கிறதாம்; ருஷியப் பாஷையிலுள்ள 56 எழுத்துக்களில் உயிரெழுத்துக்களான மூன்றையும் தனி மெய்யெழுத்துக்களையுந் தள்ளிப் பேசும் ஒலிப்பைக் கேட்டுச் சுருக்கெழுத்து ஆங்கிலத்தில் எழுதப்படுவதை யொப்ப எழுதுமாறு அக்கவர்ன்மெண்டுத்தரவு பிறந்திருப்பதாகத் தெரிகிறது. ஈதென்ன உபயோகமோ யாமறியோம்!

---

## ஆகாரக் களஞ்சியம்.

நமது கிராமாந்தரங்களில் மிராசுதாரர்கள் நெல்லாகவோ தானியமாகவோ களஞ்சியங்களிற் கொட்டிப் பத்திரப்படுத்தித் தம் குடும்ப வருஷாந்திர பண்டங்களாக வைப்பதை நாம் பார்த்திருக்கிறோமல்லவா? குடும்ப ஸம்ரக்ஷணார்த்தம் செய்யப்படும் அவ்வேற்பாடு எவ்வளவோ அனுகூலத்தைத் தருவதாயினும், இப்போது இங்கிலாண்டில் அளவுக்கு மிஞ்சி ஆகாராதி பண்டங்களைச் சேமித்து வைத்துக் கொள்ளலாகாதென்று ஒருத்தரவு பிறந்திருக்கிறது. அதற்கெதிராகப் பர்மிங்ஹாம் நகருக்கருகிலுள்ள வால்ஷல் என்னுமிடத்தில் ஒரு கனவான் தமது களஞ்சியத்தில் ஆகாராதி தான்யங்களைச் சேர்த்து வைத்திருந்ததை ஆங்கிலப் போலீஸார் உணர்ந்து, அக்கனவானைப் பிராஸிக்யூட் செய்ததுடன் அவரது களஞ்சியத்திலிருந்த தானியங்களை 500 எளியோர்க்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டார்கள்.



---

## தபாலாபீசு ரொக்க ஸர்டிபிகேட்டுகள்.

தபாலாபீசுகளில் இப்போது விற்கப்பட்டு வரும் ரொக்க ஸர்டிபிகேட்டுகள் 1918-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ந் தேதிக்கு மேற்பட்டுக் கொடுபட மாட்டாவென்று சிற்சில விடங்களில் வதந்தி பரவிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அம்மாதிரியாக ரொக்க ஸர்டிபிகேட்டுகள் கொடுப்பதை நிறுத்துவதாகக் கவர்ன்மெண்டாருக்கு உத்தேசமில்லை; எப்போதும் போலவே அது நடைபெற்றுக்கொண்டிருக்கும்; சாசுவதமாகத் தேச நன்மையைக் கோரிச் செய்யப்பட்டிருக்கும் அம்சங்களில் இந்த ரொக்க ஸர்டிபிகேட்டுகளைப் பற்றியதும் ஒன்று.

---

## புலியைக் கொல்பவருக்குப் பரிசு.

வட இந்தியாவிலுள்ள பின்பூர் அடவிகளில் ஒரு வேங்கைப் புலி பதுங்கிப் பதுங்கி இரவு காலங்களில் அக்காட்டை யடுத்திருக்கும் ஊர்களுக்கு வந்து நரமாமிச பக்ஷணஞ்செய்து போகிறதாம். கால்நடைகளும் அத்துஷ்ட மிருகத்தின் வாய்ப்பட்டு வருந்துகின்றன. இத்தியாதி சந்தர்ப்பத்தில் அதைத் தொலைத்துவிட வேண்டுமென்று அவ்வூரார் வேண்டுவதற்கிணங்க மிட்னாபூர் ஜில்லா மாஜிஸ்டிரேட்டாரும் ஒரு நோட்டீஸ் எழுதிவிடுத்து, அதில் எவரேனும் பின்பூர் அடவிகளில் பதுங்கியிருக்கும் வேங்கைப் புலியைச் சுட்டுக் கொண்டு வருமிடத்து அவருக்குத் தாம் நூறு ரூபா பரிசு கொடுப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். பரிசுக் காசைப்படும் 'ஷிகாரி'கள் நம் நாட்டில் எத்தனையோ பேருளர்.

---

## இந்தியாவிற் பிளேக்கின் மும்முரம்.

பிளேக் ஏன்னும் விஷசுரம் இந்தியாவில் ஊன்றி இன்றைக்குப் பன்னிரண்டு வருஷங்களுக்கு மேலாகிறது; ஜனங்களும் ஸர்க்காரும் அவ்வியாதியை வெருட்டுவதற்குத் தம்மாலான வரையில் பிரயத்தனம் செய்யாமலிருக்கவில்லை; என்றாலும் அவ்வியாதி தேசத்திலிருந்து அப்புறப்பட்டதாகத் தெரியக்காணோம்; நானது ஜனவரி மாதம் 26-ந்தேதியோடு முடிந்த ஒருவார காலத்துக் கணக்கை மட்டும் பார்ப்போம்; ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறே பதம்; ஆகவே ஒரு மாத முழுமையும் கணக்கெடுப்பதினும் ஒரு வாரக் கணக்கே போதுமாதலால் மேற்குறித்த வாராந்தக் கணக்கை மட்டுங் கவனிப்போம். அவ்வாரத்திலே இந்தியா முழுவதிலுமாக 33,000 பேர்களுக்குப் பிளேக் வியாதி கண்டதில் 26,000 பேர்கள் இறந்தே போனார்கள். ஐக்கிய மாகாணங்களில் மட்டும் அவ்வியாதி காரணமாக இறந்தவர்களின் சங்கியை 7,532, பம்பாயிலோ 6,667, ராஜபுதனத்தில் 5,355, இங்ஙனம் பல்லாயிரக் கணக்காக மரித்தது இந்தியாவின் சாபமோ அல்லது இந்திய மாதா ஈன்றெடுத்த புதல்வரது பாபமோ அறியோம்!



---

## கயக்வாரின் மகனீய நன்கொடை.

இம்மாதம் பரோடா சமஸ்தானாதிபதியான ஸ்ரீ ஸயாஜி ராவ் கயக்வாடவர்கள், இதுவரைக்கும் கொடுத்திருக்கும் நன்கொடைகளல்லாது, யுத்தகாரிய செலவு சம்பந்தமாக எவ்விதமாவது உபயோகப்படட்டுமென்னும் உத்தேசத்துடன் ஐந்து லட்சம் ரூபாயை யுத்த நன்கொடையாக ராஜப்பிரதிநிதியாருக்கு அனுப்பியிருப்பதாக நாம் அறிகிறோம்.

---

## ஸ்ரீ வில்லிப்புத்தூர் ஹிந்து ஹைஸ்கூல்.

ராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த ஸ்ரீ வில்லிப்புத்தூர் ஹிந்து ஹைஸ்கூலில் ஒரு பாகத்து மேல் தளவரிசை போட்டு

மாடி வைத்துக் கட்டுவதற்காக மதிராஸ் கவர்ன்மெண்டார் 6,200 ரூபா கட்டட கிராண்டாகக் கொடுத்திருக்கிறார்கள்.

---

### "நான்" (I)

பூவுலகத்தில் உதித்தவர்கள் எல்லாரும் செய்து வருகின்ற தினசரி நடவடிக்கைகளில் ஒருநாளில் "நான்" என்னும் பதத்தையாவது, "எனக்கு, என்னுடைய," என்னும் பதங்களையாவது மொழிவதை கவனிக்கிறோம். இந்தப் பதம் அனுசரணையில் வரும் நடை முதற்சொல்லேயாயினும், அதன் உள் அர்த்தம் அநேகர்க்கு விளங்குவதில்லை. அதை ஊன்றிப் பார்க்கவும் ஜனங்கள் முயற்சிப்பதுமில்லை.

கற்சாந்து போட்டுக் கட்டி விசாலமாகவும் மனோகரமாகவும் ரமணீயமாயுமுள்ள நந்தவனத்தோடு கூடின மாளிகையின் சொந்தக்காரர் க்ரகப்ரவேசம் செய்யும் காலத்து "என் வீட்டு க்ரகப்ரவேசம் வாருங்கள்" என்று சொல்லுகிறார். காலை போஜனமுண்டு உடைதரித்து இளைஞன் பள்ளிக்கூடத்திற்குப் போகுங்கால் அவன் அன்னையை நோக்கி, "அம்மா நான் பள்ளிக்கூடத்திற்குப் போகிறேன்" என்று சொல்லிப் போகிறான். பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர்களோ, உபாத்தியாயினிகளோ, அப்பியசிக்கும்படி கொடுத்த பாடங்கள் எழுதப்பட்டிருக்கும் கோட்டுப் புஸ்தகங்களைக் கேட்கும்போது "இது என் புஸ்தகம், இது என்னுடைய ஸ்லேட்டு" என்று சொல்வது ஸகஜமாயிருக்கிறது. இவைகளைப்போன்ற உதாரணங்கள் எவ்வளவோ கொடுக்கலாம் என்றாலும் முதலிற்சொன்ன 'நான்' என்பதை மட்டும் எடுத்துக்கொள்வோம். "இது என் வீடு" என்று சொல்லும்போது சொல்பவன் வேறு, வீடு வேறு என்று அர்த்தமாகிறதல்லவா? 'நான்' என்பது சொல்பவனைவே வைத்துக்கொள்ளுவோம். அதுவும் சரியல்ல. "எனக்கு தலை வலிக்கிறது, என் காலைப் பிடி" என்னும் வாக்யங்களில் குறிக்கப்பட்டிருக்கும் 'எனக்கு, என்,' என்னும் இருபதங்களும் அம்மனுஷனையே சுட்டிக்காட்டுவது உண்மையே என வெளிப்படையாகத் தோன்றினும், சிறிது தீர்க்கமாய் உள்ளாராய்ந்து பார்ப்போமானால் நான் தனியென்பதும் உடம்பு தனி யென்பதும் நன்கு புலப்படக்கூடும். பூதாகாரமாயிருக்கும் வெளிப்புற தோற்றமான வீடு எவ்விதம் தனியாயிருக்கிறதோ அவ்விதமே இப்பூத உடலும், 'நான்' என்னும் உயிர்க்கு உபகரணமாயிருப்பதை நன்கறியலாம். அவ்வுயிரே ஜீவாத்மா எனப்படுவது. அது அழிவில்லா வஸ்து. கண்ணிற் புலப்படாதது. அது ஓர் உடலில் இருக்கும்போது அவ்வுடலை தன்னிஷ்டம் போல் ஆட்டிவைக்கும் ஓர் அகாக்ருதமான வஸ்து. சுருக்கிச் சொல்லின் 'ஜீவாத்மா' எனப்படும் 'நான்' சூக்ஷ்மம். அந்த 'நான்' புகுந்திருக்கும் உடல் அல்லது உடம்பு ஸ்தூலம்; ஸ்தூலத்திற்கு அழிவுண்டு; சூக்ஷ்மத்திற்கு அழிவில்லை. இதுவே 'நான்' என்பதன் தத்வார்த்தமாகும்.

---

### அமிதமாகாது.

'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமாம்' என்பது மூத்தோர் மொழி. எதையும் நாம் மிதமாகவே செய்யவேண்டும். மிதத்திற்கு மிஞ்சினால் செய்யுங் காரியம் சீர்குலைந்து துக்கத்திற்கோ தொந்தரவிற்கோ இடமேற்படும். முக்கியமாக நமது ஆரோக்யானுகூலங்களை எடுத்துக் கொள்ளுவோம். நாம் வசிக்கும் வீடு, தரிக்கும் உடை, உண்ணும் உணவு ஆகிய இவைகளிலும் இவை போன்றவைகளிலும் கண்ணுங் கருத்துமாய் இருந்து மிதத்தையே நாடவேண்டும். தேன் ருசிகரமாயிருக்கிறதென்று மிதத்திற்கு மிஞ்சிக் குடிக்கலாமா? அன்னம் இனிப்பாயிருக்கிறதென்று மிதமிஞ்சி இருவிலாப்புடைக்க உண்



ணலாமா? மாங்கனி மதுரமென மனங் கொண்டவாறு தின்னலாமா; ஆகவே எதனிலும் மிதமாயிருக்கவேண்டும். முக்யமாக ஆரோக்ய விஷயத்தில் அதி ஜாக்ரதையா யிருக்கவேண்டும். அப்போதே நோய் நொடி வரா. அதுவே மனுஷருடைய பெரும் பாக்கியம். அதை அநுசரித்து நம் தென்னிந்தியாவில் வழங்கி வருகிற இரண்டு பழமொழிகள் உண்டு அவையாவன:—

'ஆரோக்யமே பாக்யம்,' 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.' மற்றும் நம் 'கல்ப தரு' வை ஓதும் பாலர்களும் பாலிகைகளும் அடியிற் குறித்தவற்றை மனனம் பண்ணுவார்களாக:—

"அன்ன பானாதிகளில் அளவறிந்திருக்கவேண்டும்: ஒருவேளை உண்பவன் யோகி: இருவேளை உண்பவன் போகி: முவ்வேளை உண்பவன் ரோகி: நால்வேளை உண்பவன் நாறல்: பேசத் தெரிந்தவனுக்கு பகையில்லை: புசிக்கத் தெரிந்தவனுக்கு நோயில்லை: அளவறிந்து அருந்தினால் ஆயுளும் ஆரோக்கியமும் வளரும்."

---

### கமினியா பர்ப்யூமெரி கம்பெனி.

சென்னையில் சமீபத்தில் விமர்சையாக நடைபெற்ற கைத்தொழிற் பொருட்காட்சியில், பம்பாய் நகரிலுள்ள காமினியா பர்ப்யூ மெரி கம்பெனியாரால் (Kaminia Perfumery Co.) விதர்சிக்கப்பட்ட முதல் தரமான வாசனைத்திரவியங்களில் பெயரும் புகழும் வாய்ந்த காமினியா கூந்தல் தைலம் (ரிஜிஸ்டர்ட்) ஆட்டோ தில்பஹார் வாசனை (ரிஜிஸ்டர்ட்) ஆகிய இவ்விரண்டிற்கும் நற்சாக்ஷிப் பத்திரமளிக்கப்பட்டதைக் கேட்க நாம் மிக்க சந்தோஷிக்கிறோம்.

---

# PART VIII.

## MORAL STORIES.

## நீதிக் கதைகள்.

---

## ஹரிஹரன்.

### ஓர் இனிய நாடகம்.

கீ. பி. சேஷாத்ரி ஐயங்கார் எழுதியது.

### முதல் அங்கம்.

நான்காம் களம்.

இடம்:—மாளவநாட்டு ஆஸ்தானமண்டபம்.
காலம்:—நண்பகல்.

(காஞ்சேயன் சிம்மாஸனத்தில் அமர்ந்தவண்ணம் பாலநேசன், பிரதாபன், மகபதி, விசித்திரன், பிரவேசம்.)

காஞ்:—உஜ்ஜனீகாவல! வருக! இவ்வாசனத்தில் அமர்க. எம்மால் உம்மை எவ்வளவு திருப்திசெய்ய இயலுமோ அவ்வளவும் செய்கின்றோம். ஏனையோர் யாவரும் அவரவர் ஆஸனத்தில் அமரட்டும். இது தருணம் தூதுவனாக வந்திருக்கும், ஆதித்தருக்குத் தகுந்த மரியாதை செய்து, தக்க ஆஸனமளித்து கௌரவப்படுத்துங்கள். என்னருங் கண்மணி ஸரோஜனியும் இவ்வவையில் வரட்டும், வம்மின் ஆதித்தரே!

(ஓர்புறம் ஆதித்தனும், லாரேந்திரனும், மற்றோர்புறம் ஸரோஜனியும் லலிதாவும் ப்ரவேசம்.)

வம்மின். வீற்றிரும் இவ்வாஸனமதில். ஆதித்தரே! யாது விசேஷம் நீர் தூதுவராக வர. (உட்கார்ந்தவண்ணம் ஓர் ஆஸனத்தை சுட்டிக்காட்டல்.)

ஆதி:—மன்னாதிமன்னா! விதர்ப்ப நாட்டிறைவன், ராஜமார்த்தாண்ட, வீரதீர, பராக்கிரம ஜெயசிங்க, ராஜேந்திரவர்மர் என்னை, இம்மாளவநாட்டுப் பதியாய, ஜெயப்பிரதாப, வீரசிம்ம, காஞ்சேய வர்மாராகிய உம்மிடம் ஓர் அவசரநிமித்தம் தூதாக அனுப்பியிருக்கிறார். என் மூலமாய் அவர் உமக்கு வந்தனம் புரிகின்றார். அவரிடும் கட்டளையை ஒத்துக்கொள்ளல் உமக்கு நீதி. ஒவ்வாவிடில், விகற்பமாயும், மனஸ்தாபத்திற் கிடமாகவும், விஷயம் போய்முடியும். ஸாதாரண மனிதர்கட்குப் பேராசையும், பொறாமையும் இருந்தால் பாவமாம். நராதிபர்களுக்கு அந்த அசூயை முதலியனவே ப்ரதானமாம்.

காஞ்:—என்ன ஆதித்தரே! என்னென்னமோ பேசுகின்றீர்! வீண் வார்த்தை ஏதுக்கு. விள்ளும் மனதிலிருப்பதை. கொள்ளும் இது ராஜசபை என்பதை. தள்ளும் வீண்வார்த்தைகளை. பகரும் சீக்கிரம் விஷயத்தை.

ஆதி:—ராஜ ச்ரேஷ்டா! முனியாதிரும் என்மீது. பகருவேன் என் உள்ளத்திருப்பதை. உமது திவ்விய சுந்தரவதன வநிதாசிரோமணியான ஸரோஜனியின் எழிலைக்கேட்டு எம்மிறைவன் ராஜேந்திரன் அப்பொன்னங்கையையே மணக்க எண்ணங்கொண்டுள்ளார். அம்மங்கையர்க்கரசியை தன் உயிரினும் மேலானதாகக் கொண்டு, இவ்வவனியில் அவளைவிட அவருக்கு அடையவேறு ஒன்றும் இல்லையென மனங்கொண்டிருக்கின்றார். ஸரோஜனியையே ஸதா ஸர்வகாலமும் ஸ்துதி செய்து வருகிறார். அவளையே தன் நாயகியாக அடைய தீர்மானித்திருக்கிறார்.

காஞ்:—அவர் கேட்பதை மறுதளிக்காது ஒத்துக்கொண்டாலோ?

மக:—அல்லது மறுத்து உத்தரமளித்தால் வருவது என்னோபின்.

ஆதி:—அமாத்ய ச்ரேஷ்டா! மும்முரமான யுத்தமே பின்வருவது. ஜெயித்தவன் அபஜெயமடைந்தவனை என்ன வேண்டுமானாலும் செய்யலாமல்லவா?

மக:—ராஜாதிராஜா! இப்பிரச்னத்திற்கு நான் உத்தரமளிக்கின்றேன். ஆதித்தரே! என்னதான் கொஞ்சம் படைகளின் பலம் இருந்தால் என்ன? ஜெயம் உமது அரசரது என்பது எவ்விதம் திடமாகக் கொள்ளலாம். எதற்கும் ஸ்ரீராமசந்திர மூர்த்தியினது துணை அவசியம் அல்லவா? அதர்ம யுத்தத்திற்கும் பகவான் சகாயம் புரிவரோ? பெண்ணின் நிமித்தம் அழிந்தோர் பலர். அவர்களில் ஒருவராக இவரும் ஆகப் போகின்றனர்போலும்.



பிரதாபன்:—(எழுந்து) தூதனே! என்னைவிட உன் அரசன் பலவானா? தீரனா? அல்லது சண்டையில் தேர்ந்தவனா? என் தேகத்திலிருக்கும் உதிரத்தைப்போலவே அவன் சரீரத்தில் ஓடும் ரத்தமும் இருக்கின்றது. எனது கட்கமும் ராஜேந்திரனது வாள்போன்ற கூருடன் இருக்கின்றது. என்னிதயம் நின்மன்னனின் இருதயத்தைவிட மாசின்றி, மாட்சிமையுடன் விளங்குகின்றது. நானும் உமது அரசருடன் யுத்தம் செய்ய தைர்யமாகவே இருக்கின்றேன். என்மனம் தூண்டுகின்றது. இதுவே சமயம். தோள்களும் சலித்துக்கிடக்கின்றன. கைகளும் ஓய்ந்து இருக்கின்றன. பார்ப்போம் நின் அரசன் சாமர்த்தியத்தை. நான் அஞ்சாத வெஞ்சினமுடையவனாகவே இருக்கின்றேன். (உட்காருகிறான்.)

விசி:—நானும் அப்படியே சண்டைக்குத் தயாராய் இருக்கிறேன்.

பால:—என்னமோ யாவரினும் மேம்பாடுற்றிருப்பதாக நீரும் உமது அரசரும் மட எண்ணங்கொண்டு மனப்பால் குடித்திருக்கின்றீர்கள். தர்மம் என்னும் நங்கூரத்தை நடுக்கடலில் பாய்ச்சி, ராஜ்யபாரம் என்னும் கப்பலிற்கு அதையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறோம் நாங்கள். யுத்தம் என்னும் பெரும் புசல் கர்ஜித்து அடித்த காலத்தும், அந்த தர்ம ஆதாரத்தைக் கைவிடோம். அதுவே எங்களுக்குப் பெரும் துணை அதைக் கடைப்பிடிப்பதில் எத்துணைய கஷ்டங்கள் நேர்ந்த காலத்தும் கடைசியில் தர்மமே ஜெயமடையும். அதர்மமே அடியோடு அழிவுறும். ஆதித்தரே! இது நிச்சயம்.

காஞ்:—ஆதித்த! இதுவரை இவர்கள் சொன்னவைகளைக் கேட்ட நீர், நான் விளம்புவதையும் சற்றுகேளும். என்னை வாட்டும் விஷயங்கள் இரண்டே. என் தாய் நாட்டுக்குச் செய்யவேண்டிய கடமையும், எனதரும் புத்திரியின் வாத்ஸல்யமுமே. முதல் கடமையை நிறைவேற்றாமல் போனால், வேற்றரசர் யாவரும் என்னை நிந்திக்கவும், அந்நிந்தனைகளுக்கு நான் பாத்திரனாகவும், மனிதரில் நான் கடையவன் எனப்பெயர் வகிக்கவும் என்மனம் இசையவில்லை. நான் தந்தை என்பதை மறந்து, பயப்பட்டோ அல்லது லாபத்தைக் கருதியோ, கண்டவனுக்கு என்னரும் மகளைக் கொடுத்து, அவளது வாழ்வை விணாக்க என்மனம் பூரணமாக ஆக்ஷேபிக்கின்றது. ஆதித்த! அவள் ஒருவளே எனக்கு சந்ததி. புத்திர பாக்யம் இல்லாமற்போயினும் புத்ரியையாவது எனக்குப் பகவான் கிருபை கூர்ந்து அளித்தாரே. அதுவும் பூர்வ ஜென்மத்தில் நான் செய்த மாதவப்பயனே. இதுவே பண்டைக் காலமாயிருப்பின் மங்கையர்களி னிமித்தம் வேந்தர்கள் பலர் முன்வந்து யுத்தம் புரிவர். அவளது எழிலைக்காக்க இது தருணம் கட்கங்களும், வீரர்களும் தேவையாக இருக்கின்றன. (இன்னும் வரும்)

பிங்களஞூ மாசி-பங்குனிமீ. இங்கிலீஷ்—1918, பசலி—1327,
ஹிஜிரி—1336. உத்தராயணம்—சிசிரருது.

| ஜமாதிலவ்வல் / ஜமாதிலாகிர் | 1918ஞ் மார்ச்சு | | | |
|---|---|---|---|---|
| 17 | 1 | கஅ | வெ | திரு எ-உஉ, ஹஸ் எ-சO, கண் உO-ரு, விஷ் எ-உஉ, ரா ங-க, ஸங்கடஹரசதுர்த்தி |
| 18 | 2 | சக | சனி | சது கக-சஉ, சித் கங-ஙரு, விரு உO-ஙரு, பா கக-சஉ, திவி உஅ-உக |
| 19 | 3 | உO | ஞா | பஞ் கரு-உ, சுவா கஎ-ருசு, திரு உO-கக, தை கரு-உ, ரா ஙு-அ |
| 20 | 4 | உக | திங் | ஷஷ் கஎ-கஎ, விசா உக-உஎ, வியா கக-கஉ, வணி கஎ-கஎ, ரா உ-கங, திஸ்ரோஷ்டகை, ஸப்தமிதிதி, |
| 21 | 5 | உஉ | செ | ஸப் கஅ-கச, அனு உங-சஎ, ஹரு கஎ-க, பவ கஅ-கச, ரா அ-உசு, அஷ்டமிதிதி, |
| 22 | 6 | உங | புத | அஷ் கஎ-ருசு, கேட் உச-ருச, வஜ் சச-உ, கௌ கஎ-ருசு, ரா கரு-கரு, அலப்பியம், |
| 23 | 7 | உச | வியா | நவ கசு-உங, மூல உச-சஎ, விதி கூ-ருஅ, கர கசு-உங, திவி உO-சஎ, ரா கஅ-ஙரு, வியதீபாதசிராத்தம், |
| 24 | 8 | உரு | வெ | தச கங-சக, பூராட உங-ஙஅ, விய ரு-ங, வரி ருச-கச, விஷ் கங-சக, ரா கங-கக, |
| 25 | 9 | உசு | சனி | ஏகா சO-உ, உத்திரா உக-உக, பரி ருஉ-சஅ, பா சO-உ, ரா க-கசு, ஸர்வத்திரைகாதசி, |
| 26 | 10 | உஎ | ஞா | துவா ரு-ஙஉ, திருவோ கஅ-ஙரு, சிவ சரு-சஅ, தை ரு-ஙஉ, திவி உஅ-O, பிரதோஷம், சிரவணதுவாதசி, |
| 27 | 11 | உஅ | திங் | திர O-உஎ, சது ருச-உO, அவி கரு-சு, விதி ஙஅ-உச, வணி O-உஎ, விஷ் உஎ-சO, ரா உ-கஉ, மஹாசிவராத்திரி, மாஸசிவராத்திரி. |
| 28 | 12 | உசு | செ | ● சஅ-ருரு, சதய கக-கச, ஸாத் ஙO-சசு, சது உக-ருக, திவி உசு-கு, துவாபரயுகாதி, அலப்பியம், |
| 29 | 13 | ஙO | புத | பிர சஙு-க, பூரட், எ-கஉ, சுப உங-ச, சிம் சரு-ருஅ, திவி உக-ஙச, பால்குணசுத்தம், மீனரவி சசு-ருக, அத்தியர்க்கம், கும்ப |
| 30 | 14 | க | வியா | துதி ஙஎ-கரு, உத்திரட் ங-எ, ரேவ ருசு-ச, சுடா சரு-உO, பா சO-அ, ரா க-கஅ, ஷடச்சி, அதிகதிதி, சுக்கில பிரதமைதிதி. |
| 1 | 15 | உ | வெ | திரு ஙக-சஅ, அசு ருரு சச, பிரா எ-ருக, தை ச-ஙக, கா உஎ-கஎ, ரா கசு-உஅ, மினசுக்கிலதிருதியாதிதி, |
| 2 | 16 | ங | சனி | சது உசு-ருச, பர ருஉ-ருஉ, மாஹே O-ஙக, வை ருங-உச, விஷ் உசு-ருச, திவி கஅ-ஙரு, சதுர்த்திவிரதம், வைதிருதிசிராத்தம் |
| 3 | 17 | ச | ஞா | பஞ் உஉ-ஙஅ, கார் ருO-சஎ, விஷ்க சஅ-ச, பா உஉ-ஙஅ, திவி உக-ருO, கார்த்திகை விரதம், திதித்துவயம், |
| 4 | 18 | ரு | திங் | ஷஷ் சக-கசு, உரோ சக-ஙஅ, பிரீ சஉ-ருO, தை கக-சசு, ரா O-ரு, |
| 5 | 19 | சு | செ | ஸப் கசு-ருக, மிரு சக-ஙரு, ஆயு ஙஅ-ஙக, வணி கசு-ருக, திவி ங-ஙஎ, கரிநாள், |
| 6 | 20 | எ | புத | அஷ் கரு-சஎ, திருவா ருO-சங, சௌ ஙரு-எ, பவ கரு-சஎ, திவி O-சஎ, திவி சO-ருக, அலப்பியம், |
| 7 | 21 | அ | வியா | நவ கரு-சஅ, புனர் ருங-சு, சோப ஙஉ-சங, கௌ சரு-சஅ, திவி உக-ருச, |
| 8 | 22 | கூ | வெ | தச கஎ-கக, பூச ருசு-சஉ, அதி ஙக-கக, கர கஎ-கசு, திவி கச-கஅ, மேஷாயனம் கஎ-சங, |
| 9 | 23 | கO | சனி | ஏகா கசு-ருங, ஆயி சுO-O, ஸுகர் ஙO-சக, விஷ் கசு-ருங, ரா க-கஉ, ஸர்வத்திரைகாதசி, அன்ஹாந்தம் உச-O, சூன்னியதிதி, |
| 10 | 24 | கக | ஞா | துவா உங-ஙங, ஆயி க-உசு, திரு ஙக-எ, பா உங-ஙங, ரா ச-கங, பிரதோஷம், அன்ஹாதி கஅ-O, |
| 11 | 25 | கஉ | திங் | திர உஅ-சு, மக எ-ங, சூல ஙஉ-ச, தை உஅ-சு, திவி உக-அ, |
| 12 | 26 | கங | செ | சது ஙங-கக, பூர கங-கஅ, கண் ஙங-உக, வணி O-ஙஅ, ரா ங-கச, |
| 13 | 27 | கச | புத | ○ ஙஅ-கஎ, உத் கசு-சஎ, விரு ஙச-சச, விஷ் ரு-சச, ரா சஉ-ருக, ருத்திரஸாவர்ணிமனு, பௌர்ணிமை, விரதம், |
| 14 | 28 | கரு | வியா | பிர சங-கக, ஹஸ் உசு-ச, திரு ஙரு-ருஎ, பா சO-சச, ரா கஎ-ருக, பால்குனபகுளம், கரிநாள், |
| 15 | 29 | கசு | வெ | துதி சஎ-உரு, சித் ஙக-சஅ, வியா ஙசு-சO, தை கரு-கஅ, ரா கசு-சக, |
| 16 | 30 | கஎ | சனி | திரு ருO-சஉ, சுவா ஙசு-சஉ, ஹிரு ஙசு-சங, வணி கசு-ங, ரா உக-உஅ, பிரம்ஹகல்பாதி, |
| 17 | 31 | கஅ | ஞா | சது ருஉ-சக, விசா சO-ஙஉ, வஜ் ஙரு-ருஎ, பவ உக-சரு, ரா உO-ருO, ஸங்கடஹரசதுர்த்தி, |




அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற

50 சாமான்கள்இனும்] **ராஜா சுந்தரி ரோஜா** [50 சாமான்கள் இனும்

**கூந்தல் வளரும் பரிமளத் தைலம்.**

**50 இனும் சாமான்களுடன் டின் 1-க்கு ரூபாய் 1—0—0.**




தலைமயிரை வளரச் செய்வதோடு மயிர் உதிராமல் செய்யும். அதிக வாசனையுடனிருப்பதோடு, மூளையின் கொதிப்பைத் தணித்து கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல நோய்களையும் நிவர்த்தி செய்து கண்களில் நீர் வடிதல், தலையில் சுண்டு, புண், மயிர் வெடிப்பு, மயக்கம், தலைசுற்றல், தலைவலி, சொரி சிரங்கு, மனோவியாகூலம் ஆகிய இவைகளைப் போக்கடித்து தேக ஆரோக்கியம் தரும் தைலம் இது ஒன்றுதான். 1-புட்டி தருவித்தால் இதன் அருமை தெரியும். அநேக நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றிருக்கிறது. இது தேசமெங்கும் நல்ல பெயர் பெற்றிருப்பதே இதன் புகழ்ச்சிக்கு அத்தாட்சியாகும்.

இனும் சாமான்களின் விபரம்:—ஸ்திரீகள் தலையில் அணியும் கொண்டைக்கிளி 6, குங்குமச்சிமிழ் 1, மைச்சிமிழ் 1, அழகான முகம் பார்க்கும் கண்ணாடி 1, தாம்பூல மாத்திரைகள் 30, தந்தச்சீப்பு 1, ராஜா ராணி காரனேஷன் பெட்டி 1, ரவிவர்மா படங்களுள்ள போஸ்ட் கார்டுகள் 6, அத்தர் பில்லை 1, சந்தனப்பில்லை 1, ஸ்திரீகள் மார்பில் அணியும் ராஜா ராணி உள்ள சுந்தரமான புரோச் 1.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**தைரியலட்சுமி அண்டு கோ.,**

நெ. 3, இருளப்பன் தெரு, மதராஸ்.

இனும்! இனும்!! இனும்!!!

அதாவது என்ன?

**இன்வெண்டிங் சுவிஸ் வாட்சு ஒன்று ரூபாய் 3.**



இங்கி தொடாமல் எழுதத்தகுந்த பவுனுடன் பேனா ஒன்று, கிளிப் ஒன்று, இக்கிபுட்டி ஒன்று இனும் கொடுக்கப்படும். வாட்சுக்கு ஒரு வருஷம் காரண்டி, நேர்த்தியானது. பொன் கிலிட் போட்ட சங்கிலி 1-க்கு 0 12 0 வெள்ளி கலருடைய சங்கிலி 1-க்கு 0 8 0 செப்புக் கட்டையின்பேரில் இலட்ரிக் கோல்டு கலர்போட்ட ரேக்கினால் செய்யப்பட்ட கைக்காப்பு ஜதை 1-க்கு ரூ. 3 0 0.

விலாசம்:—வி. கே. பென் அண்டு கோ.,
24, விநாயகமேஸ்திரி வீதி, மதராஸ்.

குறைந்த சந்தாவில் நிறைந்த குணங்களை அடங்கிய பத்திரிகை எது? அதுதான்,

# "கல்பதரு"

இப்பத்திரிகை "கல்பதரு" என்னும் பெயருக்கு இசைய, படிப்போர்களுக்கு வேண்டும் விஷயங்களை யெல்லாம் அடக்கி, படிப்பவர்கள் மனதை களிப்புறச் செய்ய வல்லது.

இது, (1) இராஜாங்கம், (2) சுகாதாரம், (3) வியவஸாயம், வர்த்தகம், கைத்தொழில், (4) ஹிந்து லா, (5) கூட்டுறவுச் சங்கங்கள், இவைகளைக்குறித்த வியாஸங்களையும், (6) கல்வி, (7) வர்த்தமானங்கள், (8) ஞானத்தை அபிவிருத்தி செய்யக்கூடியதும் மனதை இன்புறச் செய்யக்கூடியதுமான கதைகள், நாடகங்கள் முதலியவற்றையும் அடங்கியுள்ளது.

இந்தப் பத்திரிகைக்கு தபால் கூலி உள்பட வருஷம் ஒன்றுக்குச் சந்தா

உள்நாட்டுக்கு ரூபா 3—0—0
வெளிநாட்டுக்கு ரூபா . 4—0—0

மாதிரிக்காபி வேண்டியவர்கள் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் மாதிரிக்காபி இனமாக அனுப்பப்படும்.

மானேஜர்—"கல்பதரு" ஆபீஸ்,
1/24, கிருஷ்ணன்கோவில் தெரு, மண்ணடி, சென்னை.

## மேக வியாதிக்கு லேகியம்.

இது பலவித மேகச்சூட்டினாலுண்டான வெள்ளை, நீர்சுருக்கு, நீர்கட்டு, நீர் அடைப்பு, நீர்துவாரத்திலிருந்து சீழ், இரத்தம் விழுதல் இதனாலுண்டாகும் உபத்திரவங்கள் எத்தனை நாள்பட்டதாக யிருந்தபோதிலும் எந்தமருந்து சாப்பிட்டும் குணப்படாமலிருந்தாலும் ஸ்திரீ புருஷாளிருவரும் இந்த லேகியத்தை பரிக்ஷிப்பவர்கள் கண்டிப்பாக 7-நாளையில் இதின் குணத்தை வெகு ஆச்சரிய அற்புதமென்று புகழ்ந்துகொள்ளத் தடையிராது. பத்தியம் மருந்துடன் தெரிவிக்கப்படும்.

டப்பி 1-க்கு கிரையம் ரூபா 1 0 0.

## கண் சாலேஸரத்துக்கு தைலம்.

இந்த மகிமை பொருந்திய தைலத்தால் 6-வாரம் ஸ்நானஞ் செய்ய அடியில் கண்ட வியாதிகள் கண்டிப்பாக தீரும். மேக சூட்டினால் கபாலத்தைச் சேர்ந்த கண்ணெரிச்சல், கண் சிவந்து நீர்வடிதல், மங்கல் மஞ்சள், காமாலை, கண் கூச்சல், கண்ணில் நீர் வடிதல், பார்வை மங்கல் யிவைபோன்ற கண் வியாதிகள் பற்றற நீங்கும். இதை உபயோகிக்கும் விதம் புட்டியின் மேல் ஒட்டி யிருக்கும். இதற்கு பத்தியமில்லை.

புட்டி 1-க்கு கிரையம் ரூபா 1 0 0.

கனவான்கள் இன்னும் சகல வியாதிகட்கும் அவுஷதம் வேண்டியவர்கள் வியாதியின் குணங்களை விபரமாய் தெரிவித்தால் அதற்காக அவுஷதம் வி-பி. மூலமாய் அனுப்பப்படும்.

கூந்தல் வளர் தைலம் புட்டி 1-க்கு 0 8 0
மேகவியாதி லேகியம் டப்பி 1-க்கு 1 0 0

ஜீவரட்சணை அவுஷத சாலை,
வைத்தியர் கோவிந்துசாமி நாயுடு,
நெ. 17. ஜனரல் முத்தையா முதலிவீதி, சென்னை

161403